
பாலைப்புறா
சு.சமுத்திரம்

பாலைப்புறா

சு.சமுத்திரம்

ஏகலைவன் பதிப்பகம்
9 - இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். ராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை-600 041.
☎ : 4917594

TITLE : PALAI PURA (TAMIL NOVEL)

EDITION : FIRST EDITION, APRIL,1998.

COPY RIGHT : SU. SAMUTHIRAM- AUTHOR

PRICE : RS.75

PAGES : 352

PUBLISHED BY : EKALAIVAN PATHIPAKAM,
No. 9,II nd CROSS ST.,
Dr.RADHA KRISHNAN NAGAR,
CHENNAI- 600 041.

WRAPPER DESIGN : K.PUGAZHENTHI

TYPE SETTING : THAMARAI GRAPHICS,
CHENNAI-17.

PRINTERS : PARI OFFSET PRINTERS
CHENNAI - 600 013.

தலைப்பு : பாலைப்புறா [தமிழ் நாவல்]

பதிப்பு : முதல் பதிப்பு, ஏப்ரல் 1998

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ.75

பக்கங்கள் : 352

வெளியீடு : ஏகலைவன் பதிப்பகம்,
9, இரண்டாவது
குறுக்குத் தெரு,
டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர்,
சென்னை- 600 041.

முகப்பு-
வடிவமைப்பு : ஓவியர் புகழேந்தி

ஒளி அச்சு : தாமரை கிராபிக்ஸ்,
சென்னை- 17

அச்சு : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை – 600 013.

பதிப்புரை

சு.சமுத்திரத்தின் துணிச்சலான படைப்புகளை வெளியிடுவதற்காக தோன்றிய பதிப்பகம்தான் ஏகலைவன்.

தமிழகத்தின் அரசியல், சமூக கலாச்சார சீரழிவுகளையும், அதற்கு காரணமானவர்களையும், போலிப் பெயர்களால் படைக்காமல், நிசமான பெயர்களில், உலவ விடுவதை இன்றைய தமிழ் இலக்கிய உலகமோ, பதிப்புலகமோ ஏற்றுக் கொள்வ தில்லை. இது ஒரு அபத்தமான நிலைமை... நிசமான மனிதர்களை பிடிப்பதற்கு, அவர்களின் நிழல்களைப் பிடித்தால் போதும்; இலக்கியத்தில் அரசியல் கூடாது என்ற தற்காப்பு பேச்சுகளே, இன்றைய நிலைமையில் உலா வருகின்றன.

ஆய்வுரையில் விஜய திருவேங்கடம் குறிப்பிட்டதுபோல, சாராயத்தில் அல்லது சினிமாவில் மூழ்கி இருக்கும் இன்றைய சராசரி தமிழனின் சீரழிவுக்கு காரணமான பின்புலத்தை சுட்டிக் காட்டாத இலக்கியம் என்ன இலக்கியம்?

எனவே, இத்தகைய படைப்புக்களை ஏகலைவன் பதிப்பகம் வெளியிடுவதற்கு துணிந்துள்ளது. ஏற்கெனவே 'ஒரு மாமரமும், மரங்கொத்தி பறவைகளும்', 'மூட்டம்', 'எனது கதைகளின் கதைகள்', இப்போது 'பாலைப்புறா' ஆகிய நான்கு படைப்புக்களை வெளியிட்டு உள்ளது. இவை முழுக்க, முழுக்க துணிச்சலான படைப் க்கள் என்று சொல்ல முடியாது. விரைவில் 'மேய்ச்சல் நிலம்', என்ற நாவல் வரப் போகிறது. சொந்த முறையில் ஏற்படக் கூடிய பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் நாடகமாடிகளை மையமாக வைத்து எழுதப்படுகிற நாவல். இது ஆரம்பம தவிர, முடிவல்ல.

எங்களது முயற்சிக்கு, சு.சமுத்திரத்தின் வாசகப் பெருமக்கள், ஆதரவு கொடுப்பார்கள்; கொடுக்க வேண்டும்.

- ஏகலைவன் பதிப்பகம்

ஞாநியின் பார்வையில் சு.சமுத்திரம்

தமிழில் பல வகைப்பட்ட எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். பொதுவாக ஒவ்வொரு வகை, எழுத்தாளரும், தமக்கென்று வகுத்துக் கொண்டபாணியிலிருந்து மாறி எழுதுவது, அபூர்வமானது. அப்படியே தங்கள் எழுத்து பாணியை மாற்றிக் கொண்டாலும் பழைய வகைக்குத் திரும்பிச் செல்வது இல்லை. நானும் எழுதுகிறவன்; என்றாலும், அடிப்படையில், நான் ஒரு வாசகனென்கிற விதத்தில், எனக்குப் பலவகைப்பட்ட எழுத்தாளர்களின் எழுத்துக்களைப்பிடிக்கும். எனக்குப் பிடித்த பல எழுத்துக்களின் சொந்தக்காரர்களான அந்த எழுத்தாளர்களில் பலருக்கும் ஒருவருக்கு மற்றவரின் பாணி எழுத்துக்களைப் பிடிக்காது என்பதையும் நான் அறிவேன்.

ஆனால், வாசகன் என்ற விதத்தில் எனக்கு, பல தரப்பட்ட கதைகளையும் படிக்கப் பிடிக்கும். புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அசோகமித்திரன், சுந்தர ராமசாமி, தி.ஜானகிராமன், ஆதவன், சம்பத், இந்திரா பார்த்தசாரதி, அம்பை, சூடாமணி, காவேரி, இந்துமதி, வாசந்தி, வண்ணநிலவன், வண்ணதாசன், பிரபஞ் சன், ஜெயந்தன், சா.கந்தசாமி, விட்டல்ராவ், கி.ராஜநாராயணன், விமலாதித்த மாமல்லன் மேலாண்மை பொன்னுச்சாமி, தமிழ்ச்செல்வன், ராஜேந்திரசோழன், ஜெயமோகன் பாஸ்கர் சக்தி, கல்கி, தேவன், சுஜாதா, தாமரைமணாளன், கிருஷ்ணா, பி.வி.ஆர்., ரா.கி.ரங்கராஜன், பாக்கியம் ராமசாமி, புனிதன், சாவி, என்று பல எழுத்தாளர்களின் பல கதைகள் எனக்குப் பிடித்தமானவையாக இருந்து வந்திருக்கின்றன. சமுத்திரமும் அவர்களில் ஒருவர். இவர்கள் அத்தனை பேரும் பல விதங்களில் தமக்குள் மாறுபட்டவர்களானபோதும், இவர்களிடம் எனக்குக் கிடைத்த ஒவ்வொரு பிடித்தமான கதையும், ஏதோ ஒரு விதத்தில் வாழ்க்கை பற்றிய என் புரிதலை இன்னும் சற்று செழுமைப்படுத்திக் கொள்ள எனக்கு உதவியிருக்கின்றன என்பது மட்டுமே, எனக்கு, இங்கு குறிப்பிட முக்கியமான விஷயம். மற்றவர்களைப் போலவே, சமுத்திரத்திடமும், எனக்குப் பிடித்த கதைகள் கிடைத்தது போல, எனக்கு ரசிக்க முடியாத கதைகளும் கிடைத்தது உண்டு. என் ரசனையும் தேர்வும், எனக்கே பிரத்யேகமானவை. சமயங்களில்,

சிலர் வைரங்கள் என்று சுட்டிக்காட்டியவற்றை விட, என் மனநிலைக்கியைந்த கூழாங்கற்களையே நான் விரும்பி சேகரித்து வந்திருக்கிறேன். அவரவர் கூழாங்கற்கள் அவரவர் வைரங்கள்; இதற்காக என் கூழாங்கற்களை, அசுத்தம் தோய்ந்தவை என்று தப்புக் கணக்கு போட்டுவிடக் கூடாது. அவை, தொடர்ந்து ஓடும் வாழ்க்கை ஆற்றின் இடையறாத சலனத்தால், மென்மையும் தூய்மையும் அடைந்தவை.

நாம் படிக்கக் கிடைக்கிற எல்லா எழுத்தாளரையும் நேரிலும் அறிந்திருக்கும் வாய்ப்பு கிட்ட முடியாது. அப்படி அறிய நேர்ந்த சிலரில் சமுத்திரமும் ஒருவர். நேரில் அவர் எப்படிப்பட்ட மனிதரோ, அதே இயல்புகள், அவரது எழுத்திலும் அப்படியே காணக் கிடைக்கின்றன. உரத்துப் பேசுவது போலவே, எதையும் உரத்துச் சொல்வது அவரது இயல்பு. சபை நாகரீகம் கருதி பலரும் பேச்சில் தவிர்ப்பதை, குறிப்பாக மட்டுமே சொல்ல முற்படுவதை எல்லாம், அப்பட்டமாகப் போட்டு உடைப்பது சமுத்திரத்தின் பேச்சு பாணி மட்டுமல்ல; எழுத்து பாணியும் கூட. சமூக அவலங்கள் பற்றிய எரிச்சலையும், கோபத்தையும், சமயத்தில் ஆற்றாமையையும் வெளிப்படுத்த இந்த சிதறு தேங்காய் பாணி சமுத்திரத்துக்கு எப்போதும் கை கொடுத்து வந்திருக்கிறது. எனினும், மென்மையான உணர்வுகளில் சஞ்சரிக்க வேண்டிய தருணங்களிலும், சமுத்திரத்தின் எழுத்து இளநீரை நினைவுபடுத்துவதைவிட, காயின் மேல் விழுகிற வீச்சரிவாள் வெட்டையே நினைவுபடுத்த முற்படுவதைப் பார்க்கலாம்.

பாலைப்புறா நாவல், சமுத்திரத்தின் அணுகுமுறையில் வெளிவரும் மற்றொரு படைப்பு. நானறிந்த அளவில், எய்ட்ஸ் தொடர்பான முதல் தொடர்கதை இதுதான். எய்ட்ஸ், இன்று நமது சமூகத்தில், அரசாங்கத்தாலும், தனியார் அமைப்புகளாலும் பெரும் பணச் செலவில் மக்களிடையே பரப்பப்படுகிற ஒரு செய்தியாக விளங்குகிறது. நோய் பற்றிய ஆய்வுக்காகவும், சிகிச்சைக்காகவும் செலவிடப் படுவதை விட அதிகத் தொகை, விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்படுகிறதோ என்ற சந்தேககம் எழும் அளவுக்கு இந்தப் பிரச்சாரம் நடக்கிறது.

கள விளம்பரத்துறை அதிகாரி என்ற முறையில், நண்பர் சமுத்திரம், எய்ட்ஸ் பற்றிய பல விழிப்புணர்வு கூட்டங்களை, முகாம்களை, பட்டறைகளை நடத்தும் பொறுப்பில் ஈடுபட வேண்டியிருந்தது. தனியாரும் அரசும் கூட்டாக செய்து வரும் விளம்பரங்களைப் பற்றி விமர்சிக்கும் வாய்ப்பை அப்போது அவர் எனக்குக்

கொடுத்தார். அரசாங்கம் உபதேசிக்கும், ஒழுக்கம், எய்ட்ஸ் பற்றிய விளம்பரங்கள், விழிப்புணர்வு இயக்கங்கள்- ஆகியவை குறித்த எனது கருத்துக்களை, எல்லா அரசு மேடைகளிலும் பேசவும், விவாதிக்கவும், முழு சுதந்திரத்தோடு சொல்வதற்கும், காரணமாக இருந்தவர் சு.சமுத்திரம். இறுதி நோக்கம், சாதாரண மக்களின் வாழ்க்கையை ஒரு துளியாவது மேம்படுத்துவதற்கு உதவுவதாக இருக்குமானால், யாரும் மனதுக்குப் பட்டதை சொல்லலாம் என்பது சமுத்திரத்தின் ஆழமான நம்பிக்கை என்று எனக்குப்படுகிறது. இந்த அணுகுமுறை தான் அவரது எழுத்திலும் வெளிப்படுகிறது.

எய்ட்ஸ் நோயாளிகளின் வலிகளை, வேதனைகளை வெளிப்படுத்துவதை விடவும், இந்த தொடர்கதையில், சமுத்திரம் அதிக வெற்றி பெறுவது எய்ட்ஸின் பெயரால் மோசடிகளில் ஈடுபடுகிற சில மருத்துவர்களையும், 'தொண்டு' நிறுவனங்களையும் அம்பலப்படுத்துவதிலேயேயாகும். கலைவாணி பாத்திரம், சமுத்திரத்தின் வேதனைகளுக்கும், தார்மீகக் கோபத்துக்கும் வடிகாலாய் விளங்கு கிறது; குடும்பக் கட்டுப்பாடு திட்டம் எப்படி முறைகேடாகவும், அராஜகமாகவும் நடைமுறையில் ஒரு காலகட்டத்தில் இருந்ததோ, அதே திசையில் எய்ட்ஸ் திட்டம் போய்க் கொண்டிருப்பது பற்றி மருத்துவத் துறையிலும், சமூக நலப்பணித் துறையிலும், பலர் கவலையோடு இருக்கிறார்கள். அவர்களின் பிரதிநிதியாக சமுத்திரம், இந்த நாவலில் செயல்பட்டிருக்கிறார். அதே சமயம், வெவ்வேறு தளங் களில், மனித இயல்புகள், எப்படி செயல்படுகின்றன என்பதில் ஆர்வம் காட்டும் எழுத்தாளனாக, எய்ட்ஸ் நோயாளி மனோகருடன், விதவிதமான முறைகளில் உறவாடும் பல்வேறு மனிதர்களை நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

இந்த நாவலின் இலக்கியத் தரம், நயம் பற்றியெல்லாம் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கத்தான் செய்யும். எது இலக்கியம், எது அழகியல் என்பது பற்றிய விவாதங்கள் தொடர்ந்து நடப்பதால்தான், இலக்கியம் வளர்ச்சிப் போக்கில் இருப்பதே சாத்தியப்பட்டிருக்கிறது. சமுத்திரத்தின் மற்ற படைப்புகளைப் போல, இதுவும் அத்தகைய விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படத்தான் வேண்டும். என்னளவில், சமுத்திரத்தின் நாவல் தருகிற சுவை, பச்சை மிளகாயை திடீரென்று கடிக்க நேருவது போன்றது. தயிர் சோற்றின் சுவையை மேலும் அனுபவிக்க, அவ்வப்போது பச்சை மிளகாய் தேவைப்படுகிறது.

தினமணியில் இதழாசிரியராக 1996ல் நான் இருந்தபோது, சமுத்திரத்தின் இந்த

விவாதங்கள் தொடர்ந்து நடப்பதால்தான், இலக்கியம் வளர்ச்சிப் போக்கில் இருப்பதே சாத்தியப்பட்டிருக்கிறது. *சமுத்திரத்தின் மற்ற* படைப்புகளைப் போல, இதுவும் அத்தகைய விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படத்தான் வேண்டும். என்னளவில், சமுத்திரத்தின் நாவல் தருகிற சுவை, பச்சை மிளகாயை திடீரென்று கடிக்க நேருவது போன்றது, தயிர் சோற்றின் சுவையை மேலும் அனுபவிக்க, அவ்வப்போது பச்சை மிளகாய் தேவைப்படுகிறது.

தினமணியில் இதழாசிரியராக 1996ல் நான் இருந்தபோது, சமுத்திரத்தின் இந்த தொடர்கதை ஆசிரியர் குழுவால் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கும் நிமித்தம், அவர் எனக்க இந்த முன்னுரை எழுதும் வாய்ப்பை அளித்திருக்கிறார். மேடையானாலும், புத்தகமானாலும், அவர் தரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, எனக்கு மனதில் பட்டதை சொல்லிக் கொள்ள முடிவதற்காக, அவருக்கு எனது நன்றி.

எய்ட்ஸ் பற்றியும், அது தொடர்பாக நமது சமூகப் பார்வை பற்றியும், இன்னும் கொஞ்சம் அதிகமானப் புரிதலுக்கு ஒரு துளி உதவியனாலும், இந்த நாவலின் நோக்கம் நிறைவேறிவிட்டதாக சமுத்திரம் மகிழ்ச்சி அடைவார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

சென்னை - 41,
ஏப்ரல் 1998.

-ஞாநி

விஜய திருவேங்கடம் பார்வையில் பாலைப்புறா

சமகால நடப்புக்களை கலைக் கண்ணோடு மட்டும் பார்க்காமல் தேவைப்பட்ட இடங்களில், நேரங்களில் கவலையோடும், தீர்வு கிடைக்குமா என்ற தேடலோடும் பார்க்கிற எந்த எழுத்தாளனுக்கும், 'எய்ட்ஸ்' ஒரு கதைப் பொருளாகலாம். ஆனால், மனிதகுலத்துக்கெதிரான அந்தப் பேராபத்து குறித்துச் சிந்திக்கிற போது,- ஏதோ பாலியல் வக்கிரங்களின் வெளிப்பாடு என்ற கிட்டப் பார்வையில்லாமல், அது ஒரு பெரிய சமூகச் சிக்கலின் வெடிப்பு என்று கருதுவதிலேயும், அதன் சகல ஆயுதங்களையும் செயலிழக்கச் செய்வதிலேயும், சு.சமுத்திரம், தனித்து ஜொலிக்கிறார்.

போதை மருந்துகளின் பேயாட்டம்- அதை மறைந்திருந்து பொம்மலாட்டமாய் இயக்கும் சமூக விரோத சக்திகள் ஒரு புறம்.

கந்தல், குடிசை, கூழ், கூடப் பிறந்த வியாதி இவற்றைத் தந்ததோடு உழைப்புக்கும் 'பெப்பே' காட்டும் வறுமை மறுபுறம்.

ஆணாதிக்கப் போக்கின் அவலம் மூன்றாவது பரிமாணத்தில்.

இந்தப் பின்னணியில், பதுங்கிப் பாயும் ஆட்கொல்லியின் பிடர் பிடிக்க வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறார் ஆசிரியர்.

இங்கே கிராமம், நகரம் என்ற பூகோள வரையறைகள் பொசுங்கிப் போகின்றன. மெத்தப் படித்தவர்களின் சாதுர்யமும், சாமானியர்களின் பிள்ளை மனமும், துல்லியமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

எப்போதும் சரசரக்கும் பட்டுப்புடவையில் சரள ஆங்கிலத்தில் சாமர்த்தியம் காட்டும் டாக்டர் சுமதியை, ஒரு சமூக விரோதியென கலைவாணி அடையாளம் காட்டுகிற போது 'இனியேது எனக்கு வாழ்வு' என்று ஒதுங்கி, ஒடுங்கிவிடாமல், மற்றவர் வாழ்வை மதித்துக் காரிய மாற்றும் அவளது துணிச்சல் தெரிகிறது. கிராமத்து புஷ்பமான 'கலை'கசங்கி வீழ்வதைக் காண்கையில் நெஞ்சம் கலங்குகிறது.

'அந்த மூன்று போலீஸ்காரர்களுக்கும் எய்ட்ஸைக் கொடுத்துட்டேன்' என்று எக்களிக்கிற எஸ்தரை, ஏதோ ஏதேச்சையாக இல்லாமல் எதேச்சாதி காரத்துக்கு எதிராக ஏவப்பட்ட கணையாக அடையாளம் காண்கிறோம். எஸ்தரின் கொச்சைப் பேச்சும் 'வாடா போடா'வும் ஆண்-பெண் உறவுகளின் நளினத்தை ஏளனப்படுத்துகிற விஷயம் அல்ல. சமூக அவலங்களுக்குச் சவால் விடுகிற மொழியாகத் தான், சமுத்திரம், அந்தப் பாத்திரத்தைக் கையாளுகிறார்.

'உடம்பை எவ்வளவு தூரம் கெடுக்க முடியுமோ, அவ்வளவு தூரம் கெடுக்க வேண்டும், எவ்வளவு சீக்கிரம் சாக வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் சாக வேண்டும்' என்று மெழுகுவர்த்தியாய் உருகும் மனோகரும் நம்மை உருக்கும் ஒரு பாத்திரம்.

கலை, எஸ்தர், மனோகர் இவர்கள் சோகச் சித்திரங்கள் என்று சொல்வது கூட வழக்கமான வருணனை. அதைவிட... அதைவிட.... ஆமாம், அழுகைதான் வருகிறது.

'பாலைப் புறா'வைத் தொடராக்கி 'தினமணி', தனது நீண்டகால சமூக சேவைக்கு இன்னுமொரு சான்றினை நிறுவியுள்ளது.

'தினமணி' மூலம் லட்சக் கணக்கான வாசகர்களுக்கு ஒரு சமூகப் பயணம் தரப்பட்டுள்ளது. சினிமா, இப்படிப்பட்ட புதினங்களைப் பார்க்க வைப்பது நல்லது. சாராயத்திற்கும், சினிமாவுக்கும், சமஅளவிலும் கணிசமாகவும் நிதி ஒதுக்கீடு செய்யும் என் சகோதரத் தமிழனை சினிமாவைத் தவிர வேறெந்த வழியில் சென்றடைவது?

சு.சமுத்திரம் ஒரு வெகுஜன சமுத்திரம். 'பாலைப்புறா' அவரது சமூக விஞ்ஞான சாத்திரம்.

சென்னை,
10.4.1998.

-விஜயதிருவேங்கடம்

அரசுப் பணியிலிருந்து, அண்மையில் நான் ஓய்வு பெற்ற போது, எனது செய்தித் துறை ஆசானும், பிரபலமான செய்தியாளரும், அகில இந்திய வானொலியில் பெரும் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவருமான திரு.கே.ராமநாதன் அவர்கள், நான் நன்னடத்தையுடன் கூடிய சிறை வாழ்க்கைக்குப் பிறகு, வெற்றிகரமாய் விடுதலை ஆனதற்கு வாழ்த்து தெரிவித்தார். இருபதாண்டுகளுக்கு முன்பு, செய்திக்கு இலக்கணமாக அவர் என்னிடம் தெரிவித்த கருத்தை, இப்போது நினைவுபடுத்தினேன். ''வருவதைப் படி... படித்ததை எறி... எது மனதில் நிற்கிறதோ, அதுதான் செய்தி...'' என்றார். நான், நினைவுபடுத்திய போது, 'இது இலக்கியத்துக்கும் பொருந்துண்டா... இதைத்தான் நீ செய்யுறே' என்றார். உண்மையும் இதுதான். வாழ்க்கையில் கண்ட, கேட்ட, விசாரித்த நிகழ்ச்சிகளில் ஒரு சில என் மனதை வாட்டிக் கொண்டிருக்கும்; உள்ளம் முழுதும் அதுவே சிந்தனையாக இருக்கும்... இதற்கு வடிகாலாகத் தான் எழுதுகிறேன். இதில் வாசிப்பு சுகம் நோக்கமல்ல... என்னுடைய வாசகர்கள் அறிவு ஜீவிகளும் அல்ல. மாறாக, சமூக சிந்தனையாளர்கள், தமிழாசிரியர்கள், முற்போக்குத் தோழர்கள் தொழிலாளர்கள், சாதாரண பொது மக்களில் அசாதாரணமானவர்கள்- இவர்களே என் வாசகப் பரப்பு... இதைப் புரிந்து கொள்பவர்களால் மட்டுமே, என் இலக்கிய நேர்த்தியைப் புரிந்து கொள்ள முடியும்...

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் களவிளம்பரத் துறையில், நான்காண்டுகளுக்கு முன்பு இணை இயக்குநராகச் சேர்ந்தேன்... அப்போது ஊரக வளர்ச்சித் திட்டங்கள், எய்ட்ஸ் விழிப்புணர்வு முதலியவை சம்பந்தமாக பல புத்தகங்களைப் படிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது... எய்ட்ஸ் சம்பந்தமாக டாக்டர் ஜெயா ஸ்ரீதரின் ''எய்ட்ஸ் எரிமலை'', ஐ.நா. உலக சுகாதார நிறுவனத்தின் வெளியீடுகள் முதலியவற்றை கரைத்துக் குடித்தேன்...

பெரிதும் பயன்படும் தகவல்களைக் கொடுக்கும் எய்ட்ஸ் எரிமலையில்', என்னைத் தூக்கி வாரிப் போடும்படியான கருத்தை, அதில் வெளியான ஒரு பேட்டியில் படிக்க நேரிட்டது. எய்ட்ஸ் கிருமிகளால் தாக்குண்ட ஒரு இளைஞன், திருமணம் செய்து கொள்வது அவனது விருப்பம் என்றும் இதில் தலையிட முடியாதென்றும், தேவைப்பட்டால், அவன் மனைவிக்கும் ஆலோசனை வழங்கலாம் என்றும், கூறப்பட்டுள்ளது. நான் கொதித்துப் போனேன். இந்த அணுகுமுறை, ஒரு இளம்பெண் சிறுகச் சிறுக சித்ரவதையாவதையாவதற்கு உடன்படுவதற்கு ஒப்பானது என்று கருதுகிறேன்... எய்ட்ஸ் திருமணங்கள் நடப்பது தெரிந்தும், அதைத் தடுக்க முடியாதவர்களை, சமூக நேயர்களாக என்னால் கருத இயலவில்லை... இந்த இலக்கணப் பிழையை, பல்வேறு விழிப்புணர்வு அமைப்புக்களிடமும், அரசு அதிகாரிகளிடமும் சுட்டிக்காட்டி இருக்கிறேன. பல்வேறு விதமான சல்சாப்புக்கள்... திருமணம் ஒருவரது சொந்த விவகாரம் என்ற மழுப்பல்கள்... சட்டத்தில் இடமில்லை என்ற சாக்குப் போக்குகள்....

என் கொதிப்பு, இத்தகைய வேஷங்களால் ஆவேசமானது... இதன் விளைவுதான் பாலைப்புறா... பாலைவனத்தில் உள்ள மெலிந்த புறா என்றும், பாலியலால் பாதிக்கப்பட்ட புறா என்றும் எடுத்துக் கொள்ளலாம்... எனது ஆவேசத்திற்கு வடிகாலாக, நானே நடத்திய விழிப்புணர்வு இயக்கங்கள் இருந்ததால், இதனை படைப்பாக்கும் எண்ணம் உடனடியாக எழவில்லை... எழுத்தாளர் கோவி.மணிசேகரன் அவர்களிடம், இந்த எய்ட்ஸ் திருமண அநியாயத்தை பேச்சுவாக்கில் குறிப்பிட்டபோது, இதை ஒரு விழிப்புணர்வு நாவலாக எழுது என்றார்... என்னால் மட்டுமே முடியும் என்றார்... எனக்கும் சரியாகப் பட்டது... தமிழகத்திலும், புதுவையிலும் கிட்டத்தட்ட அங்குலம், அங்குலமாக சுற்றுப்பயணம் செய்த எனக்கு, நிறையத் தகவல்களும், நேர்முக அனுபவங்களும் கிடைத்தன. இந்த நாவலில் வரும் முக்கால்வாசி அத்தியாயங்கள் நடந்த நிகழ்ச்சிகளே... என்றாலும் இந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து எழுத பல தரப்பினரை சந்தித்து உரையாடினேன்... எய்ட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டாலும் அந்த நோயை புறந்தள்ளி... தொலைக் காட்சிகளிலும், கூட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் சென்னைவாழ் சேகர் அவரைக் கட்டிக் காத்த, விழிப்புணர்வு அமைப்பான சாப் - அதன் மூலம் எனக்கு பரிச்சயமான ஓரினச் சேர்க்கை இளைஞர்கள், இந்த நாவலின் பாத்திரங்களில் நடமாடுகிறார்கள்.

விழிப்புணர்வு கூட்டங்களில் விலாவாரியான தகவல்களைத் தந்த டாக்டர். கிருஷ்ணமூர்த்தி, டாக்டர். காந்தராஜ், டாக்டர். ராதாகிருஷ்ணன், டாக்டர். ராஜலட்சுமி, டாக்டர். ஜெயா ஸ்ரீதர்- ஆகியோர், இந்த நாவலின் உருவாக்கத்திற்கு தங்களை அறியாமலேயே உதவி இருக்கிறார்கள்... இது சம்பந்தமாக, நான் நடத்திய பட்டிமண்டபங்களில் கலந்து கொண்ட சென்னை தொலைக்காட்சி இயக்குநரும், சிறந்த எழுத்தாளருமான திரு.ஏ.நடராசன், பேராசிரியர் தி.ராசகோபாலன், வழக்கறிஞர் த.ராமலிங்கம், டாக்டர் அப்துல் காதர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் ச.செந்தில்நாதன், சுருக்கமாகப் பேசினாலும் சுருக்கென்று பேசும் வாலண்ட்ரி ஹெல்த் சர்வீஸ் அமைப்பின் செயலாளர் டாக்டர். முரளி, எனது களவிளம்பரத்துறை அதிகாரிகள், நேரு இளைஞர் மையங்கள், அறிவொளி இயக்கங்கள் போன்ற நிபுணர்களிடமிருந்தும் அமைப்புக்களிடமிருந்தும், மருத்துவ கருத்துக்களையும், மக்கள் விவகாரங்களையும் கற்றுக் கொண்டேன். இந்த வகையில், என் மனோ பூமியில் இவர்கள் ஒட்டு மொத்தமான வித்து; இதன் விளைச்சல் தான் பாலைப்புறா.

மூன்றாண்டுகளுக்கு முன்பு, இந்த நாவலை எழுதி, பல்வேறு பிரதிகளை எடுத்து, பெரியவர் வல்லிக்கண்ணன், அப்போது தமிழக அரசின் சுகாதாரத்துறையிலும், இப்போது உள்துறையிலும் பணியாற்றும், ஆங்கில கலப்பில்லா தமிழ் உரையாடலுக்குப் புகழ் பெற்ற பூரணலிங்கம் அவர்கள், கேட்போரை தங்கள் வசமாக்கும் டாக்டர். காந்தராஜ், டாக்டர். கிருஷ்ணமூர்த்தி, சென்னை வானொலி நிலையத்தின் முன்னாள் இயக்குநரும், கரடு முரடு இல்லாத தனித்தமிழில் உரையாடுகிறவரும், மிகச் சிறந்த இலக்கியவாதியுமான திரு.விஜய திருவேங்கடம் ஆகியோரிடம் படிக்கக் கொடுத்தேன்... 'உங்களுக்கு இந்த நாவல் நல்ல பெயரைக் கொடுக்கும்'' என்றார் பெரியவர் வல்லிக்கண்ணன்; இதை, நான் தமிழில் வெளியிடாமல், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட நினைத்த போது, உங்கள் படைப்பு முதலில் தமிழுக்கு கிடைக்கட்டும் என்றார் பூரணலிங்கம் அவர்கள்... டாக்டர் காந்தராஜும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தியும் இந்த நாவல் சிறப்பாக வந்திருப்பதாக தெரிவித்து மருத்துவச் செய்திகளை சரிபார்த்தார்கள். ஆலோனைகளையும் வழங்கினார்கள். இன்னொரு பிரதியைப் படித்த, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு முன் மாதிரியாக விளங்கும் வாலண்டரி ஹெல்த் சர்வீஸில் உள்ள எய்ட்ஸ் விழிப்புணர்வு

மையத்தின் தகவல் நிபுணர் திரு.சிவன் அவர்கள், பெரிதும் பாராட்டினார், இந்த படைப்பை, தான் சார்ந்த அமைப்பும், தமிழக அரசின் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு அமைப்பும் வாங்குவதற்கு, நான் விண்ணப்பிக்கலாம் என்று ஒரு அரிய யோசனையை வழங்கினார். இதன் அடிப்படையில், நான் மேற்கொண்ட முயற்சிக்கு இந்த இரு அமைப்புக்களும் உறுதுணையாக நின்று, மொத்தம் மூவாயிரம் பிரதிகளை வாங்க முன் வந்துள்ளன. இதற்கு காரணமான தமிழக அரசின் உயர் அதிகாரி திரு.பூர்ணலிங்கம், எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு அமைப்பின் முன்னாள் இயக்குநரான திருமிகு. ராமசுந்தரம் - அந்த அமைப்பின் தகவல் நிபுணரான திரு.பழனிச்சாமி, வி.ஹெச்.எஸ். அமைப்பின் செயலாளரான டாக்டர். முரளி,· இதன் எய்ட்ஸ் பிரிவின் இயக்குனர் டாக்டர். கிருஷ்ணமூர்த்தி, தகவல் நிபுணர் திரு.சிவன் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகும்... தமிழக அரசின் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு அமைப்பின் முன்னாள் இயக்குநர் திரு.ராமசுந்தரம் அவர்களைப் போல், என் படைப்புக்களில் ஆர்வம் காட்டி ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கும் இந்த அமைப்பின் இப்போதைய இயக்குநரும், தமிழக அரசின் சுகாதாரத் துறையில் சிறப்புச் செயலாளரும், வெளிப்படையான நேர்மையாளருமான திரு.அலாவுதீன் அவர்களுக்கும், நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

இதை நேரடியாக வெளியிடுவதா அல்லது பத்திரிகையில் தொடர் கதையாக வெளியிடுவதா என்று ஆரம்பத்தில் யோசித்தேன். இறுதியாக, தினமணி ஆசிரியர் திரு.சம்பந்தம் அவர்களிடம், இதைக் கொடுத்தபோது, இருகரம் கொண்டு அதை வாங்கி, அப்போதைய இதழ் ஆசிரியரான ஞாநியிடம் ஒப்படைத்தார்... இதை வெளியிடப் போவதாக கொள்கை அளவில் முடிவெடுத்திருப்பதாக ஞாநி தெரிவித்தார். ஆனாலும் தினமணிக் கதிரின் பக்க நெருக்கடியால், இது கிடப்பில் போடப்பட்டது. மக்கள் இலக்கியத்தில் மகத்தான தாக்கம் ஏற்படுத்தி வரும் என் தோழமை எழுத்தாளரான கு.சின்னப்ப பாரதி அவர்களுடன், தினமணி அலுவலகம் சென்று, ஆசிரியர் சம்பந்தம் அவர்களிடம், 'நாளாகும் என்றால் திருப்பிக் கொடுத்து விடுங்கள்', என்றேன். இது, குளத்திடம் கோபித்துக் கொண்டு போனகதை மாதிரி என்பது எனக்குத் தெரியும்... ''சரி எடுத்துட்டுப் போங்கள்'' என்று சம்பந்தம் அவர்கள், ஒரு நிமிடத்தில் சொல்லிவிட்டு, இதர வேலைகளை பார்த்திருக்க முடியும்... இப்படித்தான் சராசரி ஆசிரியர்கள் நடந்து

கொள்வார்கள்... ஆனாலும் சிறியன சிந்தியாத பெரியவரான சம்பந்தம், நாவலைத் தர மறுத்ததுடன், விரைவில் வெளியிடப் போவதாகவும் வாக்களித்தார்...

தினமணிக் கதிரில், பிற்பகுதி அத்தியாயங்கள் வெளியிடப்பட்ட முறை குறித்து, என் ஆதங்கத்தை இதழ் ஆசிரியர் இளைய பெருமாளிடமும், உதவி ஆசிரியர் ராஜமார்த்தாண்டனிடமும் தெரிவித்ததுண்டு... அப்போதெல்லாம், இவர்கள் பொறுப்பாகவும், இனிமையாகவும், பதிலளித்தார்கள்... இதனால் சொல்லப் போன கருத்தை இடையில் விட்டுவிட்டு, அவர்களுடன் நான் உடன்பட்டேன்...

இந்த படைப்பிற்கு முன்னுரை வழங்கியுள்ள பிரபல பத்திரிகையாள ரான ஞாநி, என்னுடைய நீண்ட காலத் தோழர்... இலக்கிய தளத்தில், எதிரும் புதிருமாக நின்றிருக்கிறோம்... நேர் கோடுகள்... எப்படியோ, நேர்மையான கோடுகள், ஒரு கட்டத்தில் சந்தித்தாக வேண்டும் என்பதற்கு நாங்கள் இருவரும் எடுத்துக் காட்டு... ஆனாலும், அவரது முன்னுரையில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் பெரும்பாலும் எனக்கு உடன்பாடானவை அல்ல... எனது இடதுசாரி படைப்புக்களை மனதில் வைத்து, அந்த வகை படைப்புக்கள் பற்றிய தனது கருத்தை அவர் வெளியிட்டிருப்பதாகவே கருதுகிறேன்... ஆனால் வாடாமல்லியும், இந்தப் பாலைப்புறாவும் வித்தியாசமானவை... இதில் வரும், தவசிமுத்து, சங்கரன், எஸ்தர் ஆகிய பாத்திரங்கள், யதார்த்த தளத்தில் எழுத்தெழுத்தாய் செதுக்கப்பட்டவை. இதே போல், கிராமத்து முற்போக்கு பெண்கள் பேசிக் கொள்ளும் பாணி, இன்றைய கிராமிய யதார்த்தம்... அறிவொளி இயக்கம், நேரு இளைஞர் மையம், களவிளம்பரத்துறை போன்ற அரசு அமைப்புக்களின், தாக்கங்களை கணக்கில் எடுக்கும், ஒரே ஒரு எழுத்தாளர் நான்தான் என்று நினைக்கிறேன்... என்றாலும், ஞாநியின் கருத்துக்கள் ஆத்மார்த்தமானவை. நட்புக்காகவோ, தாட்சண்யத்திற்காகவோ, எழுதாதவர், எழுதத் தெரியாதவர்... பல்வேறு வேலைப் பளுவுக்கு இடையே இந்த முன்னுரையை எழுதிக் கொடுத்த அவருக்கு நன்றி; அவரது கருத்துக்கள் அவர் குறிப்பிட்டிருக்கும், அனைத்து எழுத்தாளர்களையும் சிந்திக்க வைப்பவை...

இந்த நூலுக்கு அருமையான ஆய்வுரை வழங்கியிருக்கும் திரு விஜய திரு.விஜயதிருவேங்கடம் அவர்கள், என்னுடைய நீண்ட கால அலுவலகத்

பதிவு செய்ய விரும்புகிறேன். தினந்தந்தியின் தலைமைச் செய்தியாளர் சுகுமாரன் அவர்கள் ஒவ்வொரு அத்தியாயத்தையும் படித்துவிட்டு, என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அடுத்த அத்தியாயம் என்ன என்று என்னை கேட்பார். எத்தனையோ தலைவர்களை இனிமை யோடு குறுக்கு விசாரணை செய்து, அற்புதமான செய்திகளை தினத்தந்திக்கு அள்ளித்தரும் அவர், அத்தனை வேலைப்பளுவிலும் ஞாயிற்றுக்கிழமை நான் முதலில் படிப்பது பாலைப்புறாவைத்தான் என்று நெகிழ்ந்து சொல்வார். இப்படி தமிழகமெங்கும் பல வாசகப்பெருமக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பாலைப்புறா நூலை படித்துவிட்டு இதனை பக்கத்திற்கு பக்கம் வண்ண ஓவியங்களை இணைத்து வெளியிட வேண்டும் என்று என்னை ஊக்கப் படுத்தியவரும், தனித்துவம் மிக்க சிந்தனையாளருமான மீடியா ஆர்ட்டிஸ் உரிமையாளர் அருண் வீரப்பன் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும்.

பாலைப் புறாவை முழுமையாகப் படிக்கும், வாசக பெருமக்கள், இது குறித்த தங்கள் கருத்தை எனக்கு, எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்... இந்த எனது எதிர்பார்ப்பு இனிதாய் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

-சு.சமுத்திரம்

பாலைப்புறா

உலகில்
எய்ட்ஸ் நோயால்
வாழ்விழந்த
அத்தனை பேருக்கும்...
பா. 2

1

அந்த வீட்டு தொலைக்காட்சிப் பெட்டி, பிரதமர் வி.பி.சிங்கின் தமிழக சுற்றுப்பயண நிகழ்ச்சிகளைக் காட்டிக் கொண்டிருந்தது. 'டுயாங்... டுயாங்' பின்னணி இசை. செய்தி வாசிப்பல்ல; தொகுப்புரை. இசைஒலிக்காத போது, காதைச் சுற்றி சுற்றி மூக்கைத் தொடும் தமிழில் ஒரு வர்ணனை.

இந்த வெள்ளையன்பட்டிக்கு என்று ஒரு கின்னஸ் புத்தகம் எழுதப் பட்டால், இந்த வீட்டுத் தலைவர் சுப்பையாவும், அவரைத் தூண்டிவிட்ட மகள் கலைவாணியும், முதல் பக்கத்தை நிரப்புவார்கள். அட்டைப் படமாகக் கூட ஆகலாம். ஒரு வருடத்திற்கு முன்பு இந்த ஊருக்குள் முதலாவதாக நுழைந்த தொலைக்காட்சிப் பெட்டி இதுதான். அதற்குப் பிறகு இந்த அரண்மனை வீடே, கிட்டத்தட்ட சினிமா தியேட்டராகி விட்டது. அவரவர் அந்தஸ்துகளுக்கு ஏற்ப வெறுந்தரையான முற்றம், பெஞ்சுகளைக் கொண்ட உள் திண்ணை, சில நாற்காலிகளைக் கொண்ட உள்ளறை என்று ரசிகர்கள் தரம் பிரிக்கப்பட்டாலும், இதுவரை கட்டணம் வசூலிக்கப்படாத வீடியோ வீடுதான்.

இந்த பெருமைமிக்க பெட்டிக்கு தொலைவில், பத்துப் பதினைந்து பெண்கள், வட்டமடித்து உட்கார்ந்து இருந்தார்கள். வாடிக் கொண்டிருக்கும் செடி ஒன்று, காலத்தின் கனிவால், தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டிருப் பது போன்ற தோற்றம். ஒரே ஒரு பாம்படக்காரி.... மூன்று அச்சடி சேலைகள்; ஐந்தாறு உல்லி உல்லிகள்; இரண்டு சல்வார் கமிஷ் மொட்டுக்கள்; பல்வேறு வண்ணங்களிலான இதழ்களையும், அதே சமயம் அடிவாரத்தில் வாடிப் போன இலைகளையும் கொண்ட ஒரு அதிசயப் பூ கண்டுபிடிக்கப்பட்டது போன்ற பெண் வட்டம்.

வாடாப்பூவும், தேனம்மாவும், கலைவாணி ஏதோ கேட்டதற்கு பதில் சொல்லாமல், அந்த சின்னத் திரையை வாயகல பார்த்தபோது, ஆனந்தி எழுந்தாள். தொலைக்காட்சி பெட்டியில் குமிழை இடதுபக்கமாய்த் திருப்பினாள். உடனே அது, மீண்டும் கண்ணாடிபோல் ஆனது. பேச்சில் இனித் 'தடங்கல்' இருக்காது என்ற திருப்தியோடு, அவள் கீழே உட்கார்ந்த போது, வாடாப்பூ, செல்லமாகவும், குத்தலாகவும் கேட்டாள்.

''ஒங்க வீட்டை மாதிரி - காசு கொடுத்துட்டுப் பார்க்கணும் எங்கிறியா?''

''நீ... குழுக் கூட்டத்துக்கு வந்தியா... இல்ல அந்தச் சாக்கிலே இதைப் பார்க்க வந்தியா.... நாம் பேசறதை அது கேட்க விடுதா...''

''நீ பேசிட்டாலும்... எப்பாடி!''

கலைவாணி, இருவரையும், இரு கரங்களால் சமாதானப்படுத்தி விட்டு, எழுந்தாள். அந்தப் பெட்டிப் பக்கம் போனாள். அப்போது பிரதமர் வி.பி.சிங் சென்னை விமான நிலையத்தில், விடாக் கண்டர்களான அரசியல்வாதிகளின் அமர்க்களப் பின்னணியில், ஏ.கே.-47 பிடித்த காவலர்களின் முன்னிலையில், விமானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அப்போது பார்த்து, கலைவாணி கீழே ஒன்றை அழுத்தினாள். விமான நிலையத்தில் கைகளைத் தூக்கி 'வாழ்க' போட்டவர்கள், கடைசி நிமிட முயற்சியாய், சால்வையோடு நின்றவர்கள் உட்பட அத்தனை பேரையும் பார்க்க முடிந்தது. கேட்க முடியவில்லை. அத்தனை பேரும் ஊமை ஆனார்கள்... ஒரே அழுத்தில் ஊமையாக்கப்பட்டார்கள்.

கலைவாணி, சிரித்தபடியே கீழே உட்கார்ந்தாள். எல்லோருக்கும் திருப்தி. ஆனால் வாடாப்பூவுக்கு பாதிதான்.

''சீக்கிரமாய் பைசல் பண்ணிடுவோம்... ஒலியும் ஒளியும் வரப் போற நேரம். பாட்டு இல்லாமல் ஆடுறதைப் பார்த்தால், அசிங்கமாய் இருக்கும்''

இப்போது கலைவாணியே சீறினாள். ஒரு அடுக்கில் இருந்த ஒரு செவ்வகக் காகிதத்தை எடுத்துக் கொண்டே, வாடாப்பூவின் முகம் பார்க்காமலே பேசினாள்.

''ஒனக்கு கால நேரமே தெரியாதாக்கா? இந்த முக்கியமான சங்கதிக்கு கெடு போட்டால், அப்புறம் அந்த சங்கதிதான் கெட்டுப் போகும். சரி... சரி... ஆனந்தி! இந்த நோட்டீசைப் படிச்சுப்பாரு. எழுத்துப் பிழை இலக்கணப் பிழை... இருந்தாக் கூட பரவாயில்லை.... முன்னிலை வைக்கிறவங்க பெயர்ல பிழை வந்துடப் படாது... உலகமே கெட்டுப் போயிட்டதாய் கூச்சல்

போடுவாங்க. நம்ம ஊர்க்காரங்களைப் பற்றி ஒனக்குத் தெரியாதா... சீக்கிரமாய் படி... என் கண்ணுக்கு எதுவும் தெரியல்லே''

''நீ வேற... என் பேரை பின்னால போட்டுட்டு.. அவன் பேரை எப்படி முன்னால போடலாமுன்னு சண்டைக்கு வரப் போறாங்க. இதனால்தான் படித்துப் படித்து சொன்னேன்''.

''போகட்டும்... இப்போ படித்துப் பாரு...''

உள்ளூர் அறிவொளி இயக்க ஆசிரியையான ஆனந்தி, அந்தக் காகித அழைப்பிதழில் கண்களை விட்டபோது, 'பீடிக்காரி' தேனம்மா, இன்னொரு அழைப்பிதழை எடுத்தாள். அவள் எடுத்ததைப் பார்ப்பதற்காக, உள்ளே மூக்கை விட்ட பாம்படம் போட்ட கனகம்மா, அதிசயித்துப் பேசுவதுபோல் பேசினாள்.

''எப்பாடி... முந்தா நாள் கார்டு... லெட்டர் மாதிரி இருந்துது. இப்போ என்னடான்னா முத்து முத்தா... ரெண்டுமே என் கல்யாண நோட்டீஸ் மாதிரி இல்லியே... பொறேன் வாடாப்பூ... கிழிச்சிடுவே போலுக்கே''

''நீங்க கிழடு பாட்டி... அதனால உங்க நோட்டீஸும் கிழடாயிட்டு... அந்தக் காலத்த இந்தக் காலத்தில கொண்டு வரப்படாது''

''பழுப்பு ஓலை விழுதுன்னு பச்சோலை சிரிச்சுதாம்... நீயும் கிழவி ஆவேடி...''

''அதுவரைக்கும் சிரிச்சிட்டுப் போறேன்''

''கனகத்தே! சும்மாயிருங்க; ஒங்களுக்கு மட்டும் இந்த பாம்படக் காதை அறுத்து கம்மல் வச்சால், மாமா... அவரு காத பிடிச்சிட்டு... தோப்புக்கரணம் போடுவாரு...''

''இப்ப மட்டும் என்னவாம்...?''

வாடாப்பூவும், தேனம்மாவும், 'பாம்படப் பாட்டி' கனகம்மாவோடு சேர்ந்து சிரித்தார்கள். கலைவாணி முகம் சுழித்தாள். உடனே வாடாப்பூ 'வேலைக்கு' வந்தாள்.

''ஆனந்தி! படிச்சுக் காட்டேன்... எப்படி எழுதி இருக்குதுன்னு என்னை மாதிரி கைநாட்டுக்குத் தெரியட்டும்''.

''இதுக்குத்தான்... ஒன்னை அறிவொளி இயக்கத்தில சேரச் சொன்னேன். வந்திருந்தால், எனக்கே படித்துக் காட்டுவே...''

''நான் என்ன தாயி பண்ணுவேன்? நீ சொல்லி நானுந்தான் வந்தேன் ஆனால் அந்த பேதில போவான்... அப்படி வந்த சமயத்தில என் கொண்டைய பிடிச்சு இழுத்துட்டுப் போனான். நீகூட தட்டிக் கேக்கல''

வாடாப்பூவின் முகம் சுருங்கியபோது, தேனம்மாவும், தனது நினைவுகளை அழிப்பதற்காக, அந்த அழைப்பிதழை எடுத்து, சத்தம் போட்டு படித்தாள்.

''வெள்ளையன்பட்டி... எம்மாடி பேரப்பாரு! ஊர்ல முக்கால் வாசிப் பேரு... நனைஞ்ச பன தூரு... காக்காவே கேலி பண்ணும். ஏன்னா அதுக்காவது கொண்ட வெள்ளை''

அடுத்த அறைக்குள், அவித்த அகத்திக் கீரையை, சோளக் கஞ்சியோடு பினைந்து பினைந்து, பக்கத்தில் மகன் இருப்பதையும் மறந்து, உப்பு மிளகாயோடு உள்ளே தள்ளிக் கொண்டிருந்த சுப்பையா, வாயும் சோறுமாய் கத்தினார்.

''ஏழா தேனு... வாய் என்ன ரொம்ப நீளுது... ஒங்க ஊர்க்காரன் கலப்படமுன்னா... நாங்களும் அப்படி ஆகணுமா...?''

அப்பா பக்கத்தில் அரிசி சோற்றை சாப்பிட்ட கமலநாதன், தான், அப்படிப்பட்ட பனைக் கருப்பு அல்ல என்பதால், ஆரம்பத்தில் சிரித்தான். அப்புறமாய் திடுக்கிட்டு, அசல் சிவப்பான அம்மாவைப் பார்த்தான். இதனாலதான், அப்பா, அம்மாக்கிட்டே தகராறு வரும் போது எல்லாம் 'ஒன் பரம்பரையைப் பற்றி எனக்குத் தெரியாதா' என்கிறாரா!

தேனம்மா, உள்ளே உண்டு முடித்த சுப்பையாவை கள்ளச் சிரிப்பாய்ப் பார்த்தபோது, கலைவாணி, உள்ளறையைப் பார்த்து குரலிட்டாள்.

''எண்ணி... இங்க வந்து படித்துக்காட்டுங்க''

''நீ படிச்சுக்காட்டுனால் என்ன?''

''இதை எழுதுனது நான். திருத்துனது ஆனந்தி... அதனால எங்க கண்ணுக்கு தப்பு தெரியாது... வாங்கண்ணி!''

''எப்படி வர முடியும்? உங்கண்ணன் புத்தி ஒனக்குத் தெரியாதா... எதுலே விட்டுட்டுப் போனாலும், இப்டி சாப்பிடும் போது விட்டுட்டுப் போனால்... கூத்தடிச்சுடுவாரே; சும்மா துள்ளாதீங்க... சாப்பிடுங்க... சோறு விக்கிடும்!''

வெளியறையில், ஆனந்தி, வாடாப்பூவிடம் ரகசியமாய் கேட்டாள். அது என்ன 'எதுல'... என்னது இந்த எதுல?''

''கல்யாணமானால்... ஒனக்கும் தானாப் புரியும். ஏன் அப்படி சிரிக்கே! அப்படி ஆகணுமுன்னு அவசியம் இல்லியா? இதோ மீராவே வந்துட்டாள். என்னடி ரெண்டு நாளா ஆளு அகப்படல''

பாவாடை - தாவாணி மீரா, வாடாப்பூவை, அலட்சியமாகப் பார்த்தாள். இடது கை தங்க வளையல்களை, வலது கையால் உருட்டியபடியே ''இந்த மாதிரி 'டி' போடுற வேலைய என்கிட்ட வச்சுக்காதே'' என்றாள்.

வாடாப்பூவின் முகம் வாடியது. தேனம்மாவுக்கு மனம் கேட்க வில்லை. மீராவை, சூடாகப் பார்த்துவிட்டு, பிறகு வாடாப்பூவைப் பார்த்துப் பேசினாள்.

''ஒனக்கு மூளையே கிடையாது. ஒருத்தர் நம்ம கிட்ட எந்த அளவுக்கு பழகிறாங்களோ அந்த அளவுக்குத்தான் நாமும் பழகணும்''

பாம்படங்கள் காதாட, கனகம்மா, ஒரு சந்தேகம் கேட்டாள்.

''தேனு! நீ சொல்றது ஆம்புளைக்கும், ஆம்புளைக்கும் சரி; பொம் பளைக்கும் பொம்பளைக்கும் சரி... ஆம்பளைக்கும், பொம் பளைக்கும் எப்படி சரியாகும்? ஒரு ஆம்புள, நம்ம கிட்ட பழக நினைக்கிறது மாதிரி நாமும் பழகுனால்... அது வேற இதுல தான் கொண்டு விடும்... இல்லியா மயினி...''

இதற்குள் 'மயினி' சீனியம்மா வெளிப்பட்டாள். ''என்னடி ஒனக்கு வயசு திரும்புதா'' என்று கனகம்மாள் தலையில் கை ஊன்றியபடியே உட்கார்ந்தாள். பிறகு எல்லோரையும் பார்த்துவிட்டு, கலைவாணியை குறிப்பாக நோக்கி விட்டு, கேட்டாள்.

''என் மகள்... கலைக்குத்தான் புத்தியில்ல... இன்னும் இருபது நாளையில கல்யாணம். சாஸ்திரப்படி அங்குமிங்குமாய் அலையப் படாது. இவள் மாமியாரு வேற என்கிட்ட கரடி மாதிரி கத்துறாவ.. நீங்களாவது இவளுக்கு புத்தி சொல்லப்படாதா?''

கலைவாணி, பேச்சை மாற்றவோ அல்லது அவசரத்திலோ ஆணை யிட்டாள். மீராவின் கையில் அழைப்பிதழை திணித்து, அதை சத்தமாய்ப் படித்துக் காட்டும்படிச் சொன்னாள். மீரா பேசாமல் நின்றாள். பிறகு கலைவாணியின் தம்பி பலராமன், தன்னை ஏறிட்டுப் பார்க்காமலே முதுகு காட்டிப் போகும் வெங்கொடுமை சாக்காட்டில் தவித்தாள். ஆனாலும், அவன் முதுகை, முகமாக்கும் ஒரே ஒரு லட்சியத்துடனேயே படித்தாள். சத்தம் போட்டு படித்தாள்.

''வெள்ளையன்பட்டி பிரசவ மருத்துவமனை.. அடிக்கல் நாட்டு விழா; நாள் - இன்றைக்கு; நேரம் - மாலை மணி ஆறு; தலைமை - மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் சுகுமார்; அடிக்கல் நாட்டுபவர் - எம்எஸ்.நிச்சில், எம்முக்கும் எஸ்ஸுக்கும் இடையே புள்ளியோ கோடோ கிடையாது. பிராக்கட்டுல உலக வங்கி திட்ட மேற்பார்வையாளர், வரவேற்பு; எஸ்.கலைவாணி, ~~முன்~~னிலை - திருவாளர்கள் ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், சாமிநாத பாண்டியன், முன்னாள் கர்ணம், பால்பாண்டி, முன்னாள் மணியம், தமிழ்த்துரை- பள்ளி நிர்வாகி, சின்னத்துரை, டாக்டர் அம்பேத்கர் மன்றச் செயலர், சீமைச்சாமி, வர்த்தகர், வெள்ளைச்சாமி, ஒப்பந்தர், பிராக்கட்ல காண்டிராக்டர். நன்றியுரை ஆனந்தி... இன்ஷியல் இல்ல. இப்படிக்கு மகளிர் சுயவேலைக் குழு, மகளிர் நல மன்றம், நேரு இளைஞர் மையம் மற்றும் அறிவொளி இயக்கத்தின் கூட்டுச்செயற்குழு... அய்யோ முன்னிலையில் மூன்று பெயரை விட்டுட்டே; படிக்கட்டுமா?''

மீரா, படித்து முடித்து விட்டு, எல்லோரையும் பார்த்தாள்.

ஆனந்தி, ஒப்பாரி மாதிரி பேசினாள்.

''வேணுமுன்னா பாருங்க.. பெயருக்கு முன்னால சாதிப்பேர ஏன் போடலன்னு பாதிப்பேர் சண்டைக்கு வருவாங்க. முந்தா நாளே, கலை கிட்டே கத்துனேன். கேட்கல... இந்த முன்னிலை பட்டியல் வாக்காளர் பட்டியல் மாதிரி நீண்டிருக்கும் போது, என் பெயரை எப்படி விடலாமுன்னு ஒவ்வொருத்தனும் குதிக்கப் போறான்... விழா நடந்தாப்போலதான்... ஆஸ்பத்திரி வந்தாப் போலதான்''

வாடாப்பூ குறுக்கிட்டாள்.

''சும்மா இருக்கறவங்களையும், நீயே தூண்டிவிடுவே, போலுக்கே.. இவங்க மேல ஆசயிலயா போட்டோம்? அத்தனையும் அற்பம்.. இடக்கு மடக்குவாய் எதாவது செய்திடப்படாதேன்னு பயம். அதனாலதான் பெயரை போட்டோம். கலைவாணி மேலே என்ன தப்பு?''

கலைவாணிக்கு, ஆனந்தியின் சந்தேகமோ, தேனம்மாவின் குறுக்குக் கேள்வியோ காதுகளில் விழவில்லை. மீரா, படிக்கப் படிக்கப் பூரித்து, படித்து முடித்த பிறகு, அந்த பூரிப்பிலேயே மூழ்கிக் கிடந்தாள். நினைவுகள் பின்னோக்கியும், எதிர் பார்ப்புக்கள் முன்னோக்கியும் போயின. போனவருடம் கல்லூரி படிப்பு முடிந்ததும், ஊருக்கு வந்து, நேரு இளைஞர் மன்றத்தின் சுற்றுப்புறக் கிராமங்களுக்கு அமைப்பாளராகி, பல்வேறு

கூட்டங்களை நடத்தியும், கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் காட்டியது நினைவுக்கு வந்தது. உலக வங்கி கொடுத்த கடன்கள் உருப்படியாய் மாறுகின்றனவா என்பதை, அதிகாரிகளை நம்பி பார்வையிட வந்த உலக வங்கி திட்ட மேற்பார்வையாளர் மேடம் நிச்சிலை குளிப்பாட்ட நினைத்த ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள், நேரு மையத்தை அணுக, அந்த மையம் தன்னை அணுக, கோலம், கும்மி, கரகம், காவடி என்று கலை நிகழ்ச்சி நடத்தி, அதில் மேடம் நிச்சிலும் முதன்மை விருந்தினராய்க் கலந்து, தன்னைப் பாராட்ட, அப்போது பார்த்து, தான் வெள்ளையன்பட்டி பெண்கள் பிரசவத்துலேயே செத்துப் போவதைப் பெயர் பெயராய்ச் சொல்லிவிட்டு, பிரசவ மருத்துவமனை கேட்க, மேடம், நிச்சில், கலெக்டர் காதைக் கடிக்க, அவர் ஏதோ சொல்ல, இந்த நிச்சில் இன்னும் பேச, கலெக்டர் அதே இடத்துலேயே பத்து லட்சம் ரூபாய் சாங்ஷன் ஆகும் என்று அறிவிக்க, ஒரே கைதட்டல். அப்புறம் பின்னால்... தன்னைஅவர் கோபித்துக் கொண்டாலும், சாங்ஷன் என்னமோ சாங்ஷன்தான்... இந்த கோபம், இன்னும் அவருக்குப் போகவில்லை. இந்த விழாவிற்கு தலைமை வகிக்கக் கூப்பிட்டால், "பி.ஏ." மூலம் பேசி, துரத்தி விட்டார். அநேகமாய் ஒரு வருடத்திற்குள் மருத்துவ மனைக் கட்டிடம் ரெடியாகிவிடும். இந்த ஏப்ரலில் துவங்கி விட்டதால், அடுத்த மார்ச்சுக்குள் முடிந்துவிடும். அப்போதுதான் உலக வங்கி, மீண்டும் உதவிக்கு வரும். இந்த மருத்துவமனையில், குடிசைக்குள் துடித்த வாடாப்பூ, குறைப் பிரசவமான பூவம்மா... எல்லோரும் இன்னொரு குழந்தை பெறலாம்... 'நானே கூட இங்கே வந்து பிள்ளை பெறலாம்.'

கலைவாணி, தன்னைக் கட்டிக்கப் போகும் மனோகரின் தங்கை மீராவை நாணத்தோடு பார்த்தாள். அந்த மீராவோ, உள்ளே நின்று கொண்டிருக்கும் பலராமனை குரலால் இழுக்க முயற்சித்தாள்;

"மிஸ்ஸுன்னா செல்வி, மிஸ்ஸஸ் என்றால் திருமதி", எம்எஸ். என்றால் புரியலியே, கலைவாணி அண்ணி! கொஞ்சம் சொல் லுங்களேன்!"

'ஒரு பெண் கல்யாணம் செய்யாவிட்டால் மிஸ்; செய்தால் மிஸ்ஸஸ்; செய்தாலும் செய்யாவிட்டாலும் எம்எஸ்.; கல்யாணம் ஒருத்தியோட சொந்த விவகாரம். இதுல தலையிட எவருக்கும் உரிமை இல்லை என்கிறதை, சொல்லாமல் சொல்லிக் காட்டும் பெண் விடுதலையின் முதல் கட்டம்"

சீனியம்மாவுக்கு, மகளின் பேச்சு பெருமையாகவும் இருந்தது. அதே சமயம் பயமாகவும் இருந்தது.

"ஏ... பொண்ணுங்களா! இவளை விட்டுடுங்கடி..., ஒரு மாதத்தில மெட்ராஸ் போறவள். மாப்பிள்ளை பையன் தப்பா நினைக்கப்படாது பாரு"

சாப்பிட்டு முடித்து விட்டு, போகும் போது கூட ஏறிட்டுப் பார்க்காமல், சுவரில் சாய்ந்த அடையாள முத்திரைகளோடு முதுகைக் காட்டி வெளியேறும் பலராமனின் கன்னத்தில் இரண்டு அடி போடுவது போல் மானசீகமாய் அனுமானித்துக் கொண்டே மீரா, கலைவாணியின் அம்மாவுக்கும், பதிலளித்தாள்.

''எங்கண்ணா ஒண்ணும் காட்டான் இல்லை. ஒரு பெண்ணோட மனசை புரிஞ்சுக்காத மண்டு இல்ல. எங்கண்ணா ரசிகர், கலையண்ணி எது செய்தாலும் ரசிப்பார்''

வாடாப்பூவிற்கே சிரிப்பு வந்து விட்டது.

''அது என்னடி.... தப்பு தப்பு... அதென்னம்மா எது செய்தாலும்...., என்னது அந்த எது...?''

எல்லாப் பெண்களும் சிரித்து விட்டார்கள். மீரா அழப்போனாள். அனைவரும் அவள் கேலி தாங்க முடியாமல் அழப் போவதாய் அனுமானித்து, அடக்கிச்சிரித்தார்கள். சீனியம்மா எழுந்து, கதவோடு கதவாக நின்ற மீராவை இழுத்து, தன் பக்கம் உட்கார வைத்தாள். அவள் விபரம் தெரியாமல் விழித்தபோது, சீனியம்மாவே விளக்கம் சொன்னாள்.

'பேசுறதுக்கு முன்னால யோசித்துட்டுப் பேசணும். அவளுக எதுக்கு சிரிக்காளுக தெரியுதா?''

மீராவுக்கு பாதிதான் புரிந்தது. பலராமனிடம் போன உள்ளத்தை இழுத்துப் பிடித்த படியே தலையைத் தட்டி யோசித்தாள். இதற்குள், இவளைவிட ஒரு வயசு குறைந்த சல்வார் கமிஸ் மஞ்சுளாவுக்கு ஒரு ஆசை. தனக்கும் பேசத் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்வதில் அலாதி ஆசை.

''இந்த மருத்துவமனை பெண்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால மகளிர் பிரசவ மருத்துவமனைன்னு பேர் வச்சிருக்கணும்''

''ஒன் மண்டையிலே மசாலா இருக்குதா? பிரசவ ஆஸ்பத்திரியில் ஒன் அப்பனா வந்து பிள்ளப் பெறுவான்''

''அப்படி இருந்தால், ஊர்க்காரனுக இந்நேரம் நாலடுக்கு ஆஸ்பத்திரியே கட்டி இருப்பாங்க.''

இதற்குள், இதுவரை வாய் திறக்காத 'மேலத் தெரு' தர்மராசாவின் புதுப் பெண்டாட்டிக்கு ஒரு ஆவல்; கேட்டே விட்டாள். வாடாப்பூவும் பதில் சொல்லிவிட்டாள்.

''ஆஸ்பத்திரி... எப்போ ரெடியாகும்...?''

''ஒரு வருஷத்துக்கு மேலாகும். கொஞ்ச நாளைக்கு சும்மா கிட... ஆஸ்பத்திரில பிறக்கிற முதல் பிள்ளை ஒன் பிள்ளையாத்தான் இருக்கணும்''

''ஆமாண்டி... கல்யாணமானவள்க எல்லார்க்கிட்டயும் சொல் லுங்க... ஒரு வருஷம் வரைக்கும் 'தம்' பிடிக்கச் சொல்லுங்க''

''ஏய்... கனகம்... என்ன பேச்சு பேசறே? பாம்படம் அறுந்து விழப் போவுது''

''சீனியம்மா மயினி!... நீங்க ஒண்ணும் 'தம்' பிடிக்க வேண்டாம்!''

வீடெல்லாம் சிரிப்பு.. ஒரே சிரிப்பு. கலைவாணியின் அண்ணி குழல்வாய் மொழியும், சமையல் கட்டில் இருந்து, முகத்தைத் துடைத்தபடியே அங்கே வந்தாள். அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டு, மாமியாரிடம் இருந்து மரியாதைக்குரிய இடைவெளி போட்டு உட்கார்ந்தாள். குறுக்கே பேசப் போன வாடாப்பூவை, கலைவாணி கையைத் தடுத்துவிட்டு, கண்டிப்பாய்ப் பேசினாள்.

''இனிமேல் யாரும் சிரிக்கப்படாது. சிரிக்கிறது மாதிரி பேசப் படாது, விழா நடக்க பாதிநாள் தான் இருக்குது. அந்தம்மா வெளி நாட்டுக்காரி... 'கன்' டைமுக்கு வந்துடுவாங்க. மொதல்ல தேனம்மா!, நீயும், மீராவும் இந்த அழைப்பிதழ்களை வீடு வீடாய் கொடுத்துட்டு வாங்க. முன்னிலை வகிக்கிறவர்களுக்கு அவங்க பெயரை இந்த கவர்லே எழுதிக் கொடுங்க. சீக்கிரம்... ஒலியும் ஒளியும் அப்புறம்.. இந்தாங்க''

''தேனம்மா, கலைவாணி நீட்டிய காகிதக் கட்டை, வேண்டா வெறுப்போடு வாங்கிக் கொண்டாள். மீரா எழுந்தாள், சிரிப்போடு எழுந்தாள்... இந்த பலராமன் வீட்ல சைட் அடிக்காட்டாலும், தெருவுலயாவது அடிக்கரானான்னு பார்ப்போம். தேறாத ஜென்மம்''

தேனம்மாவும், மீராவும் தெருவுக்குப் போவதை உறுதிபடுத்திய பின்னர், கலைவாணி காரியத்திற்கு வந்தாள்.

''இந்தம்மாவுக்கு யார் சால்வை போத்துறது...?''

''நீ எதுக்கு இருக்கே!''

''நான் வரவேற்புரை ஆற்றப் போறேன். ஒருத்தருக்கு ஒரு பொறுப்பு.. ஒருகௌரவம் தான் கொடுக்கணும்; கனகம் அத்தை - அந்தம்மாவுக்கு

சால்வை போர்த்தட்டும். வாடாப்பூவும், மீராவும் வரவேற்பு தட்டுல கற்கண்டை ஏந்திகிட்டு, பன்னீர் தெளிக்கணும், இதுல ஒரு ஆணும் இருக்கணும்''.

''அதான் முன்னிலைக்குன்னு ஏகப்பட்ட பேரு இருக்காங்களே?''

''இவங்களுக்கும், மாவட்ட சுகாதார அதிகாரிக்கும் நம் கூட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் மாலை போடுவாங்க. ஒரு ஆண் பேச்சாளர் உள்ளூர் ஆசாமி வேணும்''

''மனோகர் பேசட்டும்''

''அவரு சரிப்படாது.. அவருக்கு பதிலாய் நான் பேசறேனே... எந்த விழாவும் ஒரு குடும்ப விழாவா ஆகிடப்படாது''

'அடேயப்பா...! மனசுக்குள்ளேயே குடும்பம் நடத்துற போலுக்கே... நீ இல்லாமல் நம்ம குழு எப்படித்தான் நடக்கப் போகுதோ?''

'ஆரம்பத்தில் நாணிக் கோணிய கலைவாணி, பிறகு எதிர்காலப் பிரிவுத் துயரில் இப்போதே சிக்கிக் கொண்டவள் போல் வாயகல இருந்தாள். பின்னர் ''எந்த அமைப்பும் ஒரு ஆளை மட்டுமே நம்பி இருக்கப்படாது. இதனால் தான் அமெரிக்கால யாரும் இரண்டு தடவைக்கு மேலே ஜனாதிபதி பதவியில இருக்க முடியாது. இங்கே என்னடான்னா நம் தலைவர்களோ இன்னும் பிறக்காத பேரன், பேத்திக்குக் கூட எம்.எல்.ஏ. சீட்டை ரிசர்வ் செய்கிறாங்க. பேச்சு எங்கேயோ போகுது; ஆக வேண்டியதைப் பார்ப்போம்'' என்றாள்.

இதற்குள் ஒரு சத்தம்... டெம்போ சத்தம்.. சாமியானாவையும், பிளாஸ்டிக் நாற்காலிகளையும், கோணச் சத்திரத்தில் ஏற்றி, விழா நடக்கப் போற இடத்துல போட வேண்டிய டெம்போ, இங்கே ஏன் வருது? அங்கே நிற்கிற பூமாரியும், பொன்னம்மாவும் என்ன செய்கிறாளுக? இந்நேரம் பாதிப் பந்தல் போட்டிருக்கணுமே!

எல்லோரும், வெளியே வந்தார்கள். டெம்போ டிரைவரே, கேட்காமல் பதில் சொன்னார்.

''நீங்க சொன்ன இடத்துக்கு போனோம். அங்கே ஒரு கொட்டகை போடுறாங்க. உள்ளே எருமை மாடுகளை கட்டிப் போட்டிருக்காங்க. அடிக்கல்களை பிடுங்கிட்டாங்க; எங்கள வேற அரிவாளோட வெட்ட வந்துட்டாங்க. ஒங்க பட்டி மோசமுன்னு தெரியும், ஆனால் இந்த அளவுக்கு மகா மோசமுன்னு தெரியாது... உயிர் பிழைச்சதே தெய்வாதீனம்...''

2

அந்த டெம்போ, குண்டு குழிச்சாலையில், துள்ளித் துள்ளிக் குதித்து குதித்து ஓடியது. வேலையாட்களோடு, கனகம்மா, சல்வார் கமிஷ் மஞ்சுளா, வாடாப்பூ, மேலத்தெரு பூவம்மா, கீழத்தெரு சொர்ணம் ஆகியோர் பின்பக்கம் இருந்தார்கள். தலைமேல் விழுந்த பிளாஸ்டிக் நாற்காலிகளைச் சுமந்து கொண்டே, செம்மண் புழுதி படலத்திற்குள், டெம்போவை துரத்துவது போல் தலைவிரிகோலமாய் ஓடி வந்த பெண்களைப் பார்த்துக் கையாட்டினார்கள். ஆங்காங்கே ஆட்கள், அதிசயமாய்ப் பார்த்துப் பார்த்துப் பேசிக் கொண்டார்கள். பீடித் தட்டோடு வந்தவர்கள் வாயில், கை வைத்தார்கள். நான்கைந்து பட்டதாரிகள் உடம்பை நெளிக்க அவர்களுக்கு மத்தியில் நின்ற, கலைவாணியின் எதிர்காலக் கணவன் மனோகர், முகத்தை கேள்விக் குறியாக்கிப் பார்த்தான். அவனுக்கு கைகாட்டிய கலைவாணி, டிரைவரை ஆற்றுப்படுத்தினாள். ஒங்களுக்கு ஒன்றும் ஆகாது. வேணுமுன்னால் பாருங்க''

''எண்ணத்த வேணுமுன்னு பார்க்கம்மா, - பார்க்கறதுக்கு உயிரு இருக்கணுமே! நீங்க உயிர விடலாம்... நியாயம். ஒங்க நியாயத்துக்காக நான் ஏம்மா அநியாயமாய் உயிர விடணும்''

கலைவாணி, டிரைவரிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டாள். அந்த வண்டி கிட்டத்தட்ட கடத்தப்பட்டது மாதிரிதான். டிரைவர், டெம்போவை எடுக்கத் தயங்கியபோது, பாம்படக்காரி கனகம்மா, 'காத்தை பிடுங்கி விடுவோம்' என்றாள். சக்கர டயர்களை எப்படி பஞ்சராக்க வேண்டும் என்பது தெரியாமல், சல்வார் கமிஸிடம் யோசனை கேட்டாள். உடனே டெம்போ கர்ஜித்தது - பயந்து போய் உறுமியது.

அந்த டெம்போ, அந்த தெருவில் முனைக்குப் போய், வலது பக்கமாய்த் திரும்பி, தொகுப்பு வீடுகளைத் தாண்டி, தனித்திருக்கும் முருகன் கோவிலுக்கு அப்பால் சென்று, அந்த கம்பிச்சாலையை எல்லையாகக் கொண்ட, ஒரு விசாலமான இடத்திற்கு முன்னால் நின்று, நொண்டியடித்தது. கலைவாணி மீண்டும் அதட்ட, அந்த இடத்தில் மத்தியப் பகுதியில் நின்றது. இரண்டு ஏக்கர் சதுரளவு இடம். குண்டு குழி அடைபட்டு, அந்த நிலத்திற்கு முடி வெட்டியது போன்ற புல் தளிர்களால் அலங்காரமாய்த் தோன்றியது.

டெம்போவில் இருந்து முன்னாலும், பின்னாலுமாய் குதித்தவர்கள், ஒரு நிமிடம், மூக்கில் விரல் வைத்து அப்படியே நின்றார்கள். எந்த இடத்தில் சாமியானா பந்தல் போடப்பட்டிருக்க வேண்டுமோ - அந்த இடத்தில் ஒரு கொட்டகை எலும்புக் கூடு - அதற்கு மாமிசத் தோல் போர்த்த பனையோலைகள். தென்னந்தட்டிகள்... இந்த கூட்டிற்குள், அதன் ஆன்மா போல், கம்பு முளைகளில் கட்டப்பட்ட நான்கைந்து எருமை மாடுகள்.. ஏழெட்டு வேலையாட்கள்; மூங்கில் கம்புகளைக் கட்டுவதும், பச்சைத் தென்னை ஓலைகளைப் பின்னுவதுமாக இயங்கினார்கள். மிராசுதார் ராமசுப்பு, வேலையாட்களை மேற்பார்வையிட்டார். உருளை உடம்பு... ஐம்பது வயதிருக்கலாம். பின் பக்கம் முதுகு வளைந்திருந்ததால், முகம் மட்டும் ஓணாண் மாதிரி.

கலைவாணிக்கும், அந்தப் பெண்களுக்கும் இன்னொரு அதிர்சி. ஒரு பட்டுத்துணி மறைவோடு உள்ள அடிக்கல், சரளைக் கற்களோடு, அநாதையாய்க் கிடந்தது. அச்சடித்தது போன்ற முத்து முத்தான எழுத்துக்களில் சாணக் கறைகள்... அந்தக் கல் பொருத்தப்பட்ட இடம், அரையடி ஆழத்தில் வெள்ளை மண்ணைக் காட்டி, இதுதான் வெள்ளையன் பட்டி என்று சிரித்தது.

கலைவாணியும், அவள் தோழிகளும் கொட்டகை போடப்பட்ட இடத்திற்கு ஓடினார்கள். எதுவுமே நடக்காததுபோல், ஒரு பனையோலை மட்டையை, அரிவாளால் ஒரே துண்டாக வெட்டிய ராமசுப்புவை, அதிர்ந்து பார்த்தார்கள். அவருக்கு சிறிது தொலைவில் 'உள்ளூர் விவேகிகள்' ஐந்தே ஐந்து பேர் தற்செயலாக வருவதுபோல் அந்தப் பக்கமாய் வந்தார்கள். சாணத்தில் புரளும் எருமை மாடுகள், 'விட்டுடு' என்பது போல் 'இம்மா' போட்டன.

கலைவாணிக்கு அழுகையே வந்தது. முறையிட்டாள்.

''மாமா... நீங்க செய்யுறது முறையில்ல மாமா. நம்ம ஊர்ல சரியான வைத்திய வசதி இல்லாமல், ரெண்டு பேரு பிரசவத்திலேயே இறந்து போனது ஒமக்கு தெரியாதா மாமா? 'தெக்குத்தெரு' காளிமுத்து அத்தை ஆஸ்பத்திரிக்கு

போகுற வழியிலேயே குறைப் பிரசவமானது தெரியாதா? ஒம்ம மகள்கள் - மருமகள்கள் மாதிரி - தென்காசி நர்ஸிங் ஹோமுல பிரசவிக்க முடியாத ஏழை பாளைகளுக்காக வருகிற பிரசவ ஆஸ்பத்திரி மாமா''

ராமசுப்பு காதில் வாங்காதது மாதிரி ஒரு மூங்கில் தட்டியை எடுத்து, சணல் கயிறால், கொட்டகை கம்புச் சரத்தில் கட்டினார். 'வெயில் வரப் போவுது சீக்கிரமாய் முடியுங்களேப்பா' என்று வேலையாட்களை விரட்டினார். இதற்குள், கலைவாணியின் வருங்கால மாமனார் தவசிமுத்து, அந்தப் பக்கமாய் வந்தார். நடந்ததை யூகித்துக் கொண்டு, 'இந்தா பாருப்பா... சுப்பு... நீ செய்யுறது ஒனக்கு நல்லா இருக்குதா' என்று கேட்டார். உடனே ராமசுப்பு, தவசிமுத்தைப் பார்க்காமலே, பச்சை தென்னை ஒலைகளை அடுக்கியபடியே ''இது ஒரு காலத்துல களத்து மேடாய் இருந்தது. ஒனக்கு தெரியாதா? இதுல நீயும் களம் போடலாம்... மாடு கட்டலாம்.. அவ்வளவு ஏன்... இந்த கொட்டகை போட ஐநூறு ரூபாய் ஆகும். பாதி ரூபாய் கொடுத்துட்டு இந்த கொட்டகையில் பாதியை எடுத்துக்க. நான் வேண்டாங்கல'' என்றார்.

தவசிமுத்துவுக்கு, குற்றாலத்தில் குளித்தது போலிருந்தது. இங்கேயே ஒரு கட்டிலைப் போட்டு, ஒரு தென்னந்தட்டிக் கதவையும் வைத்து தூங்கினால்... அடேயப்பா எப்படி காத்து வரும்? பக்கத்து வாழைத் தோப்பும் வாய்க்கு உதவும்.

தவசிமுத்து, தான் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்பது போல், சொன்னார். மருமகளாய் ஆகப் போகிற கலைவாணியிடம், வாழைப்பழ ஊசியாய் பேசினார்.

'ராமசுப்பு சொல்றதுல ஒரு முழு நியாயம் இல்லாவிட்டாலும், முக்கால் நியாயம் இருக்குது. நாளைக்கு நீங்க ஆஸ்பத்திரி கட்டி, இவனோ இல்ல எவனோ கோர்ட்டுக்குப் போய் கட்டுனதை இடிக்கப்படாது பாரு... ஆற அமர யோசிப்போம்''

ஆனந்தி, அழாக் குறையாய் வாதிட்டாள்.

'என்ன தாத்தா இப்படிப் பேசுறீங்க? அந்த வெளிநாட்டம்மா சரியா ஆறு மணிக்கு வரப் போறாங்க. நேத்தே இவரு இப்படி அட்டூழியம் செய்திருந்தால், அவங்க கையிலே காதுல விழுந்து, நிகழ்ச்சிய தள்ளி வச்சிருப்போம். இங்கே வாரவங்களுக்கு என்ன பதில் சொல்ல...? ஊர்மானம் பறக்கும் தாத்தா''

''எப்படி பறக்கும்.... கல்லுதானே நடணும். அதோ அந்த சௌக்கு

தோப்புப் பக்கம் ஒரு பொட்டல் காடு இருக்குதே. அங்கே நடச் சொல்லுங்க''

''பிறக்கிற பிள்ளைங்கள நரி தூக்கிட்டுப் போகவா?''

''அப்டி இல்ல... முட்டாப்பய மகளே. நில விவகாரம் ஒங்களுக்கு சாதகமாய் ஆயிட்டால், அங்கே நடுறதை இங்கே நட்டுட்டால் போச்சு. சீக்கிரம் பஞ்சாயத்து வைச்சுக்குவோம்''

அந்தப் பெண்களுக்கு, அழுகை வரப் போன வேளை; இதற்குள், உள்ளூர் விவேகிகள், பேச்சு வார்த்தைகளை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டு, ஒருத்தருக்கு ஒருத்தர் கண்ணைச் சிமிட்டினார்கள். பிறகு, ஒருத்தர் கேட்டார்.

'ஆம்புளைகள மதிக்காமல் பொட்டச்சிகளாய் சேர்ந்து இப்படி ஆடாத ஆட்டம் 'ஆடினால்' பாடாத பாடுதான் படணும்''

'அப்டி என்னத்த ஆடிட்டோம் தாத்தா'

'இந்தக் கூட்டத்தை எப்படி நடத்தனுமுன்னு ஒரு வார்த்தை, கேட்டியளா... எங்க பேரக்கூட போடாண்டாம். ஆனால் ஒரு பேருக்காவது கேட்கணும் இல்லையா?''

''தப்புத்தான் தாத்தா! ஆனாலும் இதைப் படித்துப் பாருங்க தாத்தா!'

அந்தச் சமயம் பார்த்து கையில் காகிதக் கட்டோடு மூச்சிறைக்க ஓடிவந்து நின்ற வாடாப்பூவிடம் இருந்த நான்கைந்து காகிதங்களை, அந்த விவேகிகள் சிண்டிகேட்டின் தலைவரான ஆறுமுகக் கிழவரிடம், கலைவாணி நீட்டினாள். அதைப் படித்ததும் அவருக்குப் பரமானந்தம். அவரும், இவர்களும் முன்னிலை; இந்த பக்கத்துப் பழனியாண்டி பெயர்தான் விடுபட்டுட்டு - விடுபட வேண்டியவன்தான்.

வெள்ளையன்பட்டி விவேகிகள், பழனியாண்டி நீங்கலாக, இப்போது ராமசுப்புவை முகம் சுழித்துப் பார்த்தார்கள். இவர்கள், தங்களை மதிக்கவில்லை என்பதற்காக, 'வரப்பு வெட்டி' திலகமான ராமசுப்பை, சும்மா, ரெண்டு கம்பு கழிகளைப் போடச் சொன்னது இவர்கள்தான். பொட்டப் பிள்ளைகளை ஒரு அதட்டுப் போட்டுட்டு, அப்புறமாய் விட்டுக் கொடுக்கணும் என்கிறது நோக்கம். ஆனால் இந்தப் பயல்.. இதுதான் சாக்குன்னு இடத்தை அமுக்குகிறான். விடப்படாது. அதுவும் நாம் முன்னிலை வகிக்கும் போது...

''எடே ராமசுப்பு! நம்ம பிள்ளையடா.. கொட்டகய பிரிச்சிடுடா''

ராமசுப்பு, கம்பு முளையை கழட்டிக் கொண்டு ஓடிய ஒரு எருமை மாட்டை இழுத்தபடியே, 'தலைக்குமேல தண்ணீர் போன பிறகா' என்றார். அந்தப் பேச்சோடு பேச்சாய், 'ஏடா.. மந்திரம் - அந்த டெம்போக்காறனுக ஏன் நிற்கான்னு அரிவாளோடு போய்க் கேட்டுட்டு வா' என்றார்.

'லூசனான' மந்திரம், அரிவாளைத் தூக்கியபடியே ஓடியபோது, அந்த டெம்போவும் ஓடியது. திரும்பிப் பாராமல் ஓடியது. அத்தனை பெண்களும், கலைவாணியை அங்கேயே விட்டு விட்டு, டெம்போ பின்னால் ஓடி, கருப்பிகள் கூட சிவப்பானார்கள். கலைவாணிக்கு என்ன செய்கிறோம் என்பது புரியவில்லை. ஆவேசமாய் ஓடி, ஓலையும், அரிவாளுமாய் நின்ற ராமசுப்புவின் கையைப் பிடித்துக் கொண்டாள். அழுகை அழுகையாய் வந்ததை ஆத்திரம் ஆத்திரமாய் மாற்றிக் கொண்டாள். ராமசுப்பு, தவசிமுத்துவிடம் முறையிட்டார்.

''தவசி... ஒன் மருமகள விடச் சொல்லு. இல்லன்னா பொம்புளைய அடிச்சேன்னு எனக்கு கெட்டப் பேர் வரப்டாது''

''எனக்கும் சின்னப்பையன், பெரிய மனுஷனை கை வச்சுட்டான்னு பேர் வரப்படாது''

எல்லோரும் திரும்பிப் பார்த்தால், கலைவாணியின் தம்பி பலராமன்; பதினெட்டு வயதிருக்கும். பிளஸ் டு பெயிலு. 'பார்' விளையாடுறதும், பஸ்கி எடுக்கிறதும் அவன் தொழில். இப்போது கோணச் சத்திரத்தில், கராத்தே கற்றுக் கொள்வதாக கேள்வி. டியூட்டோரியல் காலேஜுக்கும் போகிறான் என்பது பேரு, போவதோ கராத்தே கூடத்துக்குத்தான், என்பதாக செய்தி.

ராமசுப்புவும் விடவில்லை. கலைவாணி இறுக்கிப் பிடித்த கையாலயே, வேட்டியைத் தார் பாய்த்து, பலராமனை, பகைப் பார்வையாய்ப் பார்த்தார். அதற்குள், ஊரில் இருந்தும், அந்தக்கப் பிச்சாலைக்கு வடகிழக்கே உள்ள சேரியில் இருந்தும் ஒரே கூட்டம். ஆண்கள், அந்தக் கூட்டத்திலேயே காணாமல் போனது போன்ற பெண்கள் கூட்டம். சிலர் கைகளில், துடைப்பக் கட்டைகள் கூட இருந்தன.

கொட்டகை கம்புகள் கீழே விழுந்தன. மூங்கில் தட்டிகள் பாதிப் பாதியாய் சுருண்டன. ஓலைத் தட்டிகள், நொறுங்கின. அங்கும், இங்கும் கைகளும், கால்களும் அசைந்தன. அசைந்து அசைந்து அத்தனையும் நகர்ந்தன. வெறுமையாய் நின்ற இரண்டு பனை மரத் தூண்களை, நான்குபேர் ஆட்டி ஆட்டி, மேலே கொண்டு வந்து கீழே போட்டு 'தூ' என்று துப்பினார்கள். கூட்ட மிரட்டலில் எருமை மாடுகள், அங்குமிங்குமாய்த் துள்ளின;சில கயிறோடு ஓடின.. சில முளையோடு ஆடின.

''மூடப்பயலே! கட்டையில போறவனே... இன்னும் நாங்க சாகணுமா? இதுவரைக்கும் செத்தவளுக போதாதா?''

சில பெண்கள், கையில் மண்ணை அள்ளிக் கொண்டு ராமசுப்பு பக்கம் ஓடினார்கள். அவர் அரண்டு போனார். இதுவரை காணாத எதிர்ப்பு. ஊரில் தனக்கு செல்வாக்கு இருப்பதாய் அனுமானித்த எண்ணத்தில் மண் விழுந்தது போல், தலையில் செம்மண் துகள்கள், எவளோ ஒருத்தியின் கையில் இருந்து, கொஞ்சம் கொஞ்சமாய் விழுந்தன. அடிபடப் போனவரை, தவசிமுத்துதான் இழுத்துக் கொண்டு ஓடினார். ஓடும் போதே ஒரு உபதேசம் 'ஒரேயடியாய் தன்னந்தனியாய் அமுக்கப்படாதுப்பா'. பலாப்பழத்தை முழுசா சாப்பிடலாம். ஆனால் அப்படியே முழுங்க முடியுமா? இனிமேல் எதையும் அமுக்கணும். அபகரிக்கணுமுன்னு வந்தால் என்னையும் சேர்த்துக்கோ.. சீக்கிரமா ஓடு...''

கலைவாணியோ, அவளது தோழிகளோ இப்படிப்பட்ட ஆதரவை எதிர்பார்க்கவில்லை. பிரமித்து நின்றார்கள். சுற்று முற்றும் தத்தம் சொந்தக்காரர்கள், பெருமிதமாய் பார்ப்பதைப் பார்க்காமலே நின்றார்கள். பலராமன் வந்தபோது மட்டும், அவனை உள்ளூர் ரஜினிகாந்த்தாக நினைத்து, மீரா, உற்சாகமாக கைதட்டினாள். மீரா மட்டுமே.

கலைவாணிக்கு பிரக்ஞை வந்தது. டெம்போக்காரன் போயிட்டான். ''என்ன செய்யுறது... எப்படி மேடை போடுறது, கையும், காலும் ஓடலியே''

கலைவாணி, உள்ளூர் விவேகிகளிடம் ஓடினாள். நிலைமையை எடுத்துச் சொன்னாள். அவ்வளவுதான்... அவர்கள் உரக்கவே சத்தம் போட்டார்கள்.

''கூட்டத்தை நடத்தியே ஆகணும். இந்த வெள்ளையன்பட்டி, பக்கத்து பட்டிகளுக்கு இளக்காரமாயிடப் படாது. டேய் மாரி... பனங் கம்புகளை நடுடா. சீமைச்சாமி... இந்தக் கம்பியை எடுத்து குழிதோண்டு.. அடே பெருமாள்! ஏமுல பிள்ளைத்தாச்சி மாதிரி வயித்த நெளிக்கே. என் வீட்டுலே போய் டிரக் வண்டியை இழுத்துட்டுவா... அதுதான் மேடை.... இந்தப் பாரு மொள்ளமாரி அருணாசலம், ராமசுப்பு சௌக்குத் தோப்புல போய், பத்துப் பதினைஞ்சு மரத்தை வெட்டிட்டு வா. கூடமாட வாரவன்ல ரெண்டு பேரை ராமசுப்பு வாழைத் தோப்புல ரெண்டு தலைவாழையை வெட்டிட்டு வரச் சொல்லு. உப்பத் தின்னவன் தான் தண்ணி குடிக்கணும். 'ஏல குடிகாரா'! கோணச் சத்திரத்தில் போயி பட்டாசு வெடி வாங்கிட்டு வா. என் வீட்ல தொழுவம் அடைக்க தென்னந்தட்டிக வச்சிருக்கேன்... மயினிக்கு தெரியாம ஓசப்படாமல் தூக்கிட்டு வா''

அந்தக் கூட்டுச் செயற்குழு பெண்கள், ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடாமலே, அத்தனை பேரும் இயங்கினார்கள். இரண்டு மணி நேரத்தில் எல்லாமே தயார். டயர் சக்கர வண்டி மேல் தார்ப்பாய் போடப்பட்டு, அது மேடையானது. அதற்குமேல் எழுந்த தென்னை ஓலை பந்தலின் அடிவாரத்தில், சலவைத் தொழிலாளி அருணாசலம், அழகழகான சேலைகளை நீள வாக்கில் கட்டிவிட்டார். எவளெல்லாம் அவருக்குப் பிடிக்காதோ, அவள்களுடைய சேலைகள், இப்போது பந்தல் அம்மணத்தை மறைத்தன. ராமசுப்புவின் சௌக்குக் கட்டைகளில், ராமசுப்புவின் குலைவாழைகள் கட்டப்பட்டன. உள்ளூர் மேளக்காரர்கள் கூப்பிடாமலேயே வந்து விட்டார்கள்.

வாடாப்பூ, கலைவாணிக்கும், ஆனந்திக்கும் மத்தியில் நின்றாள். மீரா, பலராமன் போகும் இடமெல்லாம் போக்கு காட்டி நடந்தாள். பக்கத்தில் உள்ள பனந்தோப்பில், சுண்ணாம்பு கலக்காத பதநீரைக் குடித்துவிட்டு, லேசாய் தடுமாறுவது போல் வந்த 'லாரிக்கார' மாரியப்பன், 'இங்க என்னடி ஒனக்கு வேலை' என்று வாடாப்பூ தலைமுடியை பிடிக்கப் போனான்... கலைவாணி கர்ஜித்தாள்.

''வாடாப்பூவ.. தொடு பார்க்கலாம்''

கனகம்மாள் மிரட்டினாள்.

''தொட்டால்.. கை துண்டா விழும். ஒன்னத்தான் மாரியப்பன்! இனிமேல் அவள எப்போவாவது, நீ அடித்தால், அது எங்கள அடித்தது மாதிரி. ஒன்னை மொட்டையடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி... கழுதையிலே ஏத்திடுவோம்; பொட்டப் பயல்தான் பொம்புளைய அடிப்பான்''

கலைவாணியும், சீனம்மாவும் மிரட்டிய மிரட்டலில், கண்களை உருட்டிப் பார்த்த மாரியப்பன், அப்படியே குன்றி நின்றான். தடுமாறாத போதை... தன்னை மறக்காத போதை... வாடாப்பூவை முறைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை... என்ன கொடுமை இது?''

மாரியப்பன் போனதும், வாடாப்பூ, கலைவாணியின் கையையும், தேனம்மாவின் தோளையும் பிடித்துக் கொண்டு விம்மினாள். உள்ளே அழுது இப்போது வெளிப்படையாகவும் அழுதாள். கலைவாணி ஆறுதல் சொன்னாள். 'சரி எப்போவாவது அடித்தா முன்னால், நாங்க இருக்கோம். சாத்து சாத்துன்னு சாத்திடுவோம். இப்போ பல கிராமங்களில் பெண்கள் இயக்கம் பெண்டாட்டிய அடிக்கிற பயல்களை உண்டு இல்லன்னு ஆக்குது''

சிறிது நேரத்தில், ஒரு கண்டசா கார் வந்தது. அதற்குப் பின்னால் ஒரு கார்.. இன்னும் ஒரு ஜீப்.

கலைவாணியை முந்தி, ஆனந்தி கதவைத் திறந்தாள். சுருட்டைத் தலைமுடி கொண்ட நாற்பது வயது பெண்... பாறைகளில் ஈரப் பசும்புல் படர்ந்தது மாதிரியாக வளவளப்பான தலை. முழங்கால் வரை நீண்ட ஸ்கர்ட்... காக்கா பொன்போன்று மின்னும் கறுப்பு. திருஷ்டி பரிகாரமாய் தடித்த உதடுகள்; பாம்படம் போட்ட கனகம்மா, சந்தன மாலையைப் போட்ட போது, அந்தம்மா, அவள் கையைப் பிடித்துக் கொண்டு, விடவே இல்லை. பாம்படங்களை தொட்டுத் தொட்டுப் பார்த்துவிட்டு, சொந்த ஊருக்கு வந்திருப்பது போல், முகம் மலர்ந்தாள். அதே கண்டசா காரில் இருந்து மறுபக்கமாய் இறங்கிய ஒரு டை கட்டி ஜென்டில்மேன், ஏதோ சொல்ல, மேடம், மேடையைப் பார்த்து நடந்தாள். கலைவாணி, ஆனந்தி வகையறாக்கள் இருபக்கமும் நடந்தார்கள்.. காமா சோமாவாய் மேடை போட்டிருப்பதற்கு கலைவாணி வருத்தம் தெரிவிக்கப் போன போது, அந்த மேடையை அதிசயித்துப் பார்த்த மேடம், டைகாரனிடம் எதையோ சொல்லும்படி சொல்ல, அவரும் வாய் கொள்ளாச் சிரிப்போடு நின்ற மேடத்தைச் சுட்டிக்காட்டி, இப்படிச் சொன்னார்.

'போகிற இடத்துல எல்லாம், ஏஸி மண்டபங்களையும், சாமியானா பந்தல்களையும் பார்த்து, ஒரு செயற்கைத் தனத்தால் வருத்தப்படும் அம்மாவுக்கு, இந்த மேடையைப் பார்த்ததும் சந்தோஷமாம். இங்கேதான் மண்வாசனை தெரியுதாம். அதோடு பந்தலின் அடிவாரத்தில் உள்ள, நாட்டுப் புறக்கலை வேலைப்பாடு காணக் கிடைக்காத அதிசயமாம். இந்த மாதிரியான கிராம ஒற்றுமையை வேறு எங்கேயும் பார்க்க முடியாதாம்...''

ஒரே கைதட்டல்; பந்தலுக்கு, தத்தம் அருமையான சேலைகளை பறிகொடுத்தவர்கள் தவிர்த்து, அனைவருமே தட்டினார்கள். டைக்கார இந்தியனுக்கு சந்தோஷம். ஃபாரின் போஸ்டிங் நிச்சயம்...

மேடம், மேடை ஏறப் போன போது, லாரிக்கார மாரியப்பன், பக்கத்தில் போய் பனங்கள்ளாய்க் குழைந்து கேட்டான்.

'எம்மா எம்மா... ! பொம்புளை பிள்ளை பெறுறதுக்கு மட்டும் ஆஸ்பத்திரி கட்டினால் எப்படிம்மா.. நாங்க ஆம்புளைங்க எங்கம்மா போவோம்? குழந்தை பெறுறதுக்கு மட்டுமா.... வயித்த வலி வருது? பிள்ளை உண்டானால்தான் வாந்தி வருமா? எங்களுக்கும் வரும்மா. நாங்க எங்கேம்மா போவோம்? எங்களுக்கும் ஒரு சின்ன ஆஸ்பத்திரியா... அம்மா அம்ம்மா''

வாடாப்பூ, கூட்டத்தின் முகப்புக்கு வந்தாள். 'அந்த பேதில போவானை, யாராவது இழுத்துட்டுப் போங்க' என்றாள். டை கட்டி இந்தியர், மாரியப்பனை மானசீகமாக உதைத்தார். ஃபாரீன் போஸ்டிங் கிடக்கட்டும். இப்போ, லோக்கல் நீடிப்பதே கஷ்டம்...

மேடம், மாரியப்பனை, அதிசயித்துப் பார்த்தாள். பிறகு அந்த டை கட்டியைக் கூப்பிட்டு, அவன் பேசியதை, ஆங்கிலத்தில் அர்த்தப்படுத்தச் சொன்னாள். அவரும் ஆங்கிலம் தெரிந்த கலைவாணியையும், ஆனந்தியையும் கணக்கில் கொண்டு, உள்ளபடியே மொழி பெயர்த்தார். மேடம் நிச்சிலோ 'ரியலி ரியலி.. குட் வெரிகுட்' என்றாள். பிறகு, தனது உதவியாளரிடம், மீண்டும் பேச, அவர் மீண்டும் தமிழ்ப் படுத்தினார்.

''இதோ இவர் சொன்னது மாதிரி கட்டப் போகிற பிரசவ ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலேயே... ஒரு அனேக்ஷர் கட்டப்படும் என்று மேடம் சொல்லச் சொன்னாங்க. இதுல எல்லோருக்கும் எல்லா நோய்க்கும் எல்லா மருந்தும் கிடைக்கும் என்றும் சொல்லச் சொன்னாங்க. இதுக்கு முன்னோடியாய் அடுத்த வாரம் இலவச மருத்துவ முகாம் நடத்தும்படி கலெக்டர்கிட்ட வேண்டுகோள் விடுப்பாங்களாம். தமிழக அரசிடம், வெள்ளையன்பட்டியில், மருத்துவமனை கட்ட வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டதையும மேடம் ஞாபகப்படுத்தினாங்க''

ஒரே கைதட்டல்; அதைப் பார்த்துவிட்டு, மேடமே கைதட்டினார். பிறகு மீண்டும் உதவியாளரிடம் ஒரு உரையாடல்; அவர் வாய் ஒலிப் பெருக்கியானது - தமிழ் மொழி பெயர்ப்போடு.

'இதோ இவரை மாதிரி எல்லோரும் இருக்கணுமாம். இவரை மாதிரி ஒவ்வொருத்தரும் ஊர் தேவைகளை சொல்லி இருந்தால், இந்தியா, இதைவிட நல்லாவே முன்னேறி இருக்குமாம்''

பயங்கரமான கைதட்டல்; இப்போது மேடம் நிச்சிலே சுற்றி நின்றவர்களைப் பார்த்துப் பேசினாள்.

'வெள்ளையன்பட்டி.. கீப் இட் அப்! கீப் இட் அப்''

''வெள்ளையன் பட்டியே! இப்படியே இரு...இப்படியே இரு''

டைகட்டியவர், அப்படிக் கத்தினாலும், களைத்துப் போகவில்லை. சக்ஸஸ்.. ஃபாரின் போஸ்டில் வெற்றி... ஆனாலும்,கலைவாணியிடம் கிசுகிசுத்தார். 'குட்டு உடையும் முன்னே, அவனை யாரையாவது விட்டு தூக்கிட்டுப் போகச் சொல்லுங்க.''

வாடாப்பூவுக்கும், கணவன், அசல் அர்ச்சுனன் மாதிரியே தெரிந்தது. ஊருக்குள்ள மட்டுமா, இருக்குது.. லாரில இந்தியா முழுசும் சுத்துற மனுஷராச்சே, படுவா மனுஷன்''

மேடம் நிச்சில், மேடை ஏறி, அலங்கார நாற்காலியில் உட்கார்ந்தாள். வெளிநாட்டுக்காரி என்றதும், வெள்ளைக்காரியை எதிர்பார்த்த கூட்டம், ஆரம்பத்தில், இந்த கறுப்புக்காரியை கேலியாகப் பார்த்தது நிசந்தான், ஆனால் இப்போதோ, அவளோடு ஒன்றிவிட்டது.

இதற்குள், மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் சுகுமார், ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர்கள் சந்திரா, முஸ்தபா சகிதமாய் கோபுர முத்திரை போட்ட காரில் வந்தார். லேட்டாக வந்ததற்கு கூச்சப்பட்டு, மேடைப் பக்கமே நின்றார். அவரை வரவேற்பதற்காக கீழே இறங்கிய கலைவாணி, அவரை மேடைக்கு அனுப்பி வைத்துவிட்டு, அங்குமிங்குமாய் அலைந்தாள். குத்து விளக்கு கொண்டு வரப் போன மீராவைக் காணவில்லை. இந்த அமர்க்களத்தில் விளக்கு மறந்து விட்டது.

சிறிது தூரம், மீராவைத் தேடி அலைந்தவள் கண்ணில், எதிர்காலக் கணவன் மனோகர் எதிர்ப்பட்டான்.

''எப்போ வந்தீங்க.. வாங்க! முன்னால வந்து உட்காருங்க''

''நோ தேங்க்ஸ் எங்க நிற்கணுமுன்னு எனக்குத் தெரியும். நீங்க பிஸி ஒங்க வேலையைப் பாருங்க...''

ஒரு தேவதையாய் துள்ளிய கலைவாணி, பேயறைந்தவள் போல் ஆகிவிட்டாள்.

3

அந்த 'டானா' வளைவு பள்ளிக்கூடம், அன்று மட்டும் இலவச மருத்துவ முகாமாகிவிட்டது. ஒரு நாள் கூத்துக்கு, மீசையை எடுத்தது போல், துணைக் கட்டிடத்தில் வகுப்புக்களை எல்லைப் பிரித்துக் காட்டும், பலகைத் தட்டிகள் அகற்றப்பட்டு, அந்த கட்டிட உள் வளாகம், பொதுக் கூடமானது. வரிசை வரிசையாய் பெஞ்சுகள் போடப்பட்டு, அதன் முன் பக்கம் வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட நீளவாக்கில் இரண்டு மேஜைகள். அந்த துணியை எவரும் எடுத்து, மேஜைகளின் அழுக்கை தெரியப்படுத்தக் கூடாது என்பது போல், இலைமறைவு காய்மறைவாய் பொருத்தப்பட்ட கிளிப்புகள். மேஜை மத்தியில் ஒரு மைக். அருகே ஒரு போடியம். அதன் முன்னால், இன்னொரு மைக்.

பள்ளி வளாகத்தில் ஆகாய காகித தோரணங்கள்; இடையிடையே, துணிப் பேனர்கள்... 'வெள்ளையன் பட்டியாம் வீரபூமிக்கு... மகளிர் மருத்துவமனை கொண்டு வந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களே! வருக! வருக!' 'மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களே வருக! வருக!' 'ஏற்றமுள்ள மக்களுக்கு இரக்கமுள்ள அண்ணனே வருக! வருக!'

சட்டமன்ற உறுப்பினர் பற்றிய பேனரை, கலை வாணி, தாள முடியாத வெப்பமாகப் பார்த்தாள். இனிமேல் அதை எடுக்க முடியாது. அதைப் பார்த்துக் கொண்டே நின்றால், கோபம்தான் மிஞ்சும். கலைவாணி, கண்களைச் சுழலவிட்டாள். வெள்ளையன்பட்டி மக்கள், உறவின் அடிப்படையில் கும்பல் கும்பலாய் நின்றார்கள். சிறுவர் சிறுமியர், நடமாடும் மருத்துவ முகாம் வேனையும், அதற்குள் இருந்த விதவிதமான கருவிகளையும், லயித்துப் பார்த்தார்கள். இவர்களில் ஒரு சிலர்,

கலைவாணியின் பக்கம் வந்து 'வெள்ளையன்பட்டி கீப் இட் அப்!' என்று மேடம் போலவே, கண்களை அகல விரித்து நடித்துக் காட்டினார்கள். இவர்களைத் துரத்திப் போன வாடாப்பூவையும், தேனம்மாவையும், கலை பிடித்துக் கொண்டாள்.

சிறிது தொலைவில், மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் சுகுமார், ஐந்தாறு டாக்டர்களோடும், இதர நான்கைந்து பேருடனும் 'வெள்ளையும் சொள்ளையுமாய்' நின்றார். அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். இன்னும் இரண்டு மணி நேரத்தில், மாவட்டத் தலைநகர் போயாக வேண்டும். வளர்ச்சி மன்றக் கூட்டம்; அங்கே போகா விட்டால், கலெக்டர் தாளிப்பார். இங்கே நிற்காவிட்டால், எம்.எல்.ஏ. தாளிப்பார். எல்லாம் ரெடி. இந்த எம்.எல்.ஏ. தான் ரெடியாகல.

இதற்குள் ஆளுயர பூப்பிணைத்தைத் தூக்கிக் கொண்டு வந்த கட்சிக்காரர்களை பார்த்து சல்யூட் அடித்தபடியே சுகுமார் ஓடினார். அவர் ஓட, அவர் பின்னால், அத்தனை டாக்டர்களும் ஓட, ஒரே அமர்க்களம். டாக்டர் சந்திரா மட்டும் நின்ற இடத்தில் நின்றாள்.

கலைவாணி, தோழிகளோடு பேசிக் கொண்டிருந்தாலும், அவள் கண்கள், சிறிது தொலைவில் வேலையில்லாப் பட்டதாரிகளின் முற்றுகையில் நின்ற மனோகர் மீதே மொய்த்தன. வந்தவுடனேயே வணக்கம் போட்டாள். அவனோ முகத்தை மட்டும் ஆட்டினான். அதுவும் லேசாய்; பழைய சிரிப்போ குழைவோ இல்லை. இவ்வளவுக் கும் அவன் புதியவன் அல்ல. பள்ளிக்கூடத்தில், மூன்று வகுப்புகளுக்கு மேல் படித்தவன். கல்லூரி விடுமுறையில் இருந்து ஊருக்கு வரும் போதெல்லாம், இருவரும் மனம் விட்டுப் பேசவில்லையானாலும், வாய்விட்டுப் பேசி இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர், சந்திக்க முயற்சி செய்யவில்லையானாலும், தற்செயலாய் சந்தித்த போதெல்லாம், ஐந்தாறு நிமிடம் நின்று பேசுவதுண்டு. மனோகரை, கலைவாணிக்குப் பிடிக்கும். அவனோடு பேசிய பேச்சு, அறிவுப் பூர்வமான பேச்சு. நல்லவர்களைக் கணக்கிட அவனையே அளவுகோலாய் வைத்துக் கொள்ளலாம் என்பது போன்ற கற்பிதம்; உடம்பை ஆட்டாமல், முகத்தைச் சுட்ட செங்கல்லாய் ஆக்காமல், மண்ணாய்க் குழைந்து காட்டும் பரிவும், பாசமும், அவளைக் காதலியாய் ஆக்கவில்லையானாலும், அவன் மீது கவனம் செலுத்துகிறவளாய், ஆக்கிவிட்டது. ஆறடிக்கு சிறிதே குறைந்த உயரம்; அந்த உயரம், அவனை ஒட்டகச் சிவிங்கியாக்காமல், மத யானை போன்ற மதர்ப்பை கொடுத்தது. அவன் சதைத் திரட்சி, இவளை காமுகியாய் ஆக்கவில்லையானாலும், ஒரு ரசிகையாய் ஆக்கியதுண்டு. மனோகருக்கு சிறப்பு, நடத்தையா அல்லது அழகா என்று ஒரு பட்டிமன்றம் போட்டால்

சாலமன் பாப்பையா பிச்சு உதறுவார். 'இப்படிப்பட்ட இவர், ஏன், இன்று ஏருக்கு மாறாய் நிற்கிறார்? அன்றைக்கும் சரி இல்லை... இன்றைக்கும் சரி இல்லை. ஒரு துரும்பைத் தூக்கிப் போட்டு 'நீதான் மாப்பிள்ளை' என்று சொல்லி விட்டால் போதும். அது துள்ளுமாமே... அப்படி ஆகிட்டாரோ...

கலைவாணி, ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டாள். அவனையே நேருக்கு நேராய்க் கேட்டுவிடுவது... கல்யாணம் என்பது நூறாண்டு பயிர். இந்தப் பயிர் முளைக்கும் முன்பே வித்தைப் பார்க்க வேண்டும். அவள், தோழிகளிடம் இருந்து விடுபட்டு, அவன் நின்ற பக்கமாய் போனாள். ஒரு சுவரில் ஒட்டப்பட்ட, இலவச மருத்துவ முகாமை சின்னதாய்ப் போட்டு, இதைத் துவக்கி வைக்கப் போகும் எம்.எல்.ஏ. படத்தை பெரிதாகப் போட்ட போஸ்டரைப் படிப்பது போல் பாசாங்கு காட்டினாள். மனோகர், அந்த பட்டதாரிகளிடம் இருந்து விடுபடுவது வரைக்கும் நிற்கப் போவது போல் நின்றாள். ஆனால் இந்த மனோகரோ, அவளைப் பார்க்காமலே, சுற்றி வளைத்து பட்டதாரி களுக்கு, இப்போது உபதேசித்துக் கொண்டு நின்றான்.

''எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்'சிலே பதிவு செய்து, அப்படி பதிவு செய்தவர்களோட கார்டு அவனோட பட்டதாரி பிள்ளைக்கும் பொருந்து முன்னு சட்டம் வந்தால் கூட, நமக்கு இன்னும் பிறக்காத பிள்ளைகளுக்கு கூட கார்டு வராது என்பதை ஒத்துக்கிறேன். ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட ஒருவனுக்கு வேலை கொடுக்கத்தான், ஒங்கள மாதிரி அப்பாவி இளைஞர்களோட பணத்தையும், காலத்தையும் பகல் கொள்ளை போடுறாங்க என்கிறதையும் ஒத்துக்கிறேன். ஆனால் இதுவே நாம் முயற்சி எடுக்காமல் இருக்கிறதுக்கு ஒரு சாக்காயிடப் படாது. பக்கத்து வாடாப்பட்டியில் பிறந்து, ஒரு தகர டப்பா காலேஜில் படித்த முத்துக்குமார், இப்போது ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில அசிஸ்டென்ட் புரபஸரா இருக்கார். என் கூடப் படித்த ஏழைப் பையன் ராமையா, பெர்லினில் சூப்பர் என்ஜினியராய் இருக்கான். தப்பா நினைக்காதீங்க. குறைந்த பட்சம் பத்திரிகை படிக்கும் பழக்கம் ஒங்களுக்கு உண்டா? சினிமா மலர்களை விட்டுட்டு, இந்து, இந்துஸ்தான் டைம்ஸ், எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் சப்ளிமெண்டை படிக்கிறது உண்டா... ஏன் ஊமையா நிற்கறீங்க...'

சுற்றி நிற்பவர்கள் சப்புக் கொட்டியபோது, பட்டைதாரியும், பட்டதாரியுமான சுப்பிரமணியன் சூடாய்க் கேட்டான்.

'அப்போ எவ்வளவு நாளைக்குத்தான் இழுத்தடிக்கப் போறீங்க?''

மனோகர், அவனை ஒன்றும் புரியாமல் பார்த்தான். பக்கத்தில் நின்ற பயல்களும், அவனைத் தட்டிக் கேட்கவில்லை. இது என்ன அதிகாரப் பிச்சை?

இவன்களிடம் பேசுவது காலவிரயம். சுய மரியாதைக்கு இழுக்கு.

மனோகர்,அவர்களை விட்டு வேகமாய் நடந்தான். விறுவிறுப்பாய் நடந்தான். அந்த அவசரத்தில், கலைவாணி நிற்பதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

''ஒன்மினிட்''

மனோகர் நின்றான். கலைவாணி, அவன், தன்னை உதாசீனம் செய்வதாக நினைத்து 'ரப்பாவே' கேட்டான்.

''ஒங்க கிட்டே தனியாப் பேசணும். லெட்டஸ் பி ஃப்ராங்க்...''

''நான் இங்கே வந்ததே ஒங்க கிட்டே பேசத்தான். இன்னும் குடி முழுகிடல''

இருவரும் நடந்து, பள்ளிக்கூடத்திற்குப் பின்புறமாய் வந்தார்கள். அங்கே சுவருக்கும், ஒரு புளிய மரத்திற்கும், இடையே நின்று கொண்டார்கள். யார் முதலில் பேசுவது என்ற தயக்கம் அல்லது கர்வம்... கலைவாணியே வெட்கம் விட்டுக் கேட்டுவிட்டாள்.

''எதுக்காக... என்னை அலட்சியப்படுத்தறீங்க? இன்னிக்கே நம்ம கல்யாணம் நடக்கணுமா, வேண்டாமான்னு தீர்மானம் எடுத்துடலாம். நான் மிரட்டுறதாய் நினைக்காதீங்க. என்னால தாங்க முடியல''

''நானும் அதே முடிவுதான். . மாப்பிள்ளை பிடிக்கல்லன்னு அழுகிறவளை கட்டிக்கிற அளவுக்கு நான் ரோஷம் கெட்டவன் இல்லே''

''யார் அழுதது?''

''நீங்க ஒரு நாள் முழுக்க அழுதீங்களாம். என் தங்கை- ஒங்க பிரண்ட் மீராவே சொன்னாள்!''

''கொஞ்சம் பேக்கிரவுண்டோடு சொல்ல முடியுமா?''

''சொல்றேன்.. மீரா... முகம் போன போக்கைப் பார்த்துட்டு டிவியைப் பார்த்தேன். மேல் நாடுகளில் மேடை போட்டு ஒரு ஆணையும் பெண்ணையும் பகிரங்கமாய் அந்தரங்க உறவுல ஈடுபடுத்தி, டிக்கட் வாங்குனவங்களுக்கு காட்டுறாங்களே லைஃப் செக்ஸ்... அந்த மாதிரியான ஒலியும், ஒளியும். உடனே நான் டி.வியை ஆப் செய்தேன். ஆன் செய்ய வந்தவளை கீழே தள்ளினேன். உடனே 'ஒன் புத்திக்குத் தான் மாப்பிள்ளை பிடிக்கல்லன்னு கலைவாணி ஒரு நாள் முழுக்க அழுதான்,னு சொன்னாள்.

நான் பிடிக்கல்லன்னா, நீங்க எனக்கே லட்டர் போட்டிருக்கலாம்''

''அடிப்பாவி... குடியைக் கெடுக்கப் பார்த்தாளே''

''அப்போ... நீ அழலியா?''

''அழுதது நிசம். ஆனால் கல்யாணம் வேண்டாமுன்னுதான் அழுதனே தவிர, மாப்பிள்ளை பிடிக்கல்லன்னு அழல்ல. ஏனோ இந்த ஊரைவிட்டும், எங்க வீட்டை விட்டும், இந்த அமைப்புகளை விட்டும் போக மனம் வரல. அப்புறம் அப்பாம்மா புத்தி சொன்னாங்க. நானும் யோசித்துப் பார்த்தேன். கல்யாணம் செய்யாமல் இருக்கப் போறதில்லை. எப்பவோ வரப் போற தேவனைவிட, எனக்கு தெரிந்த ராட்சசனே மேலுன்னு நினைத்தேன். அப்புறம் பாருங்க ஒங்க நெனைப்பு வந்து, இந்த ஊரு சின்னதாப் போயிட்டு, நீங்க பெரிசா ஆகிட்டீங்க...''

''மாப்பிள்ளை மனோகர்ன்னு சொன்னவுடனேயே உங்களுக்கு ஆசை வந்திருக்க வேண்டாமா...?''

''அந்த மாதிரி பிடிப்பாய் நீங்க பேசலியே! பேச்சுல்லாம் கம்ப்யூட்டர், இல்லாவிட்டால் விண்வெளி ஆராய்ச்சி''

''சரி... இப்போ மேல்நாட்டு லைஃப் செக்ஸப் பத்தி பேசட்டுமா?''

கலைவாணி, இதுவரை அவனைப் பாராத பார்வையாய்ப் பார்த்தாள். இயல்பாய்ப் பார்த்த அந்தக் கண்களை, இப்போது பார்க்கும் போதே ஒரு போதை. அவன் உதடுகளை நோக்கும் போதே, தனது உதடுகளில் ஈரக்கசிவு. அவன் நீட்டிய கையைப் பிடிக்கப் போனாள். அப்படிப் போன கையைப் பின் வாங்கினாள். அப்புறம் மெள்ள மெள்ள, பையப் பைய விரல்கள் விரல்களோடு, பின்னிப் பிணைந்து, ஒரு சின்னப் பாலமாய் ஆனது. வாய்கள், தன் பாட்டுக்கு பேசிக் கொண்டன. ஆண்டாண்டு காலமாய் ஊர் கருதியோ, கௌரவம் கருதியோ, கர்வத்தாலோ உள்ளடைக்கப்பட்ட உணர்வுகள்,... பீறிட்டுப் பின்னிக் கொண்டன.

''இப்போதான், என் மனசே... மனசா இருக்குது''

''எனக்கும்தான்''

''இந்த ஊரை விட்டு நீ பிரியணும் என்கிறது தற்காலிகந்தான். இன்னும் மூன்று மாதத்தில எங்க கம்பனி பிராஞ்ச் திருநெல்வேலியில் ஓப்பன் ஆகப் போகுது. அநேகமாய் என்னைத்தான் பிராஞ்ச் மானேஜராய் போடுவாங்க. வேணுமானால் இந்த மூன்று மாதமும் நீ இங்கேயே இருக்கலாம்.. அதுவரைக்கும் பல்லைக் கடிச்சிட்டு பொறுத்துக் கிறேன்''

''ஆனால்... நான் பொறுக்கமாட்டேன். நீங்கதான் என்னோட நேரு இளைஞர் மையம்... நீங்கதான் என்னோட அறிவொளி இயக்கம்... நீங்கதான் என்னோட பிரசவ ஆஸ்பத்திரி''

''ஏய்...''

கலைவாணி, புளியமரத்தில் சாய்ந்து நின்றவன் மேல், அப்படியே சாய்ந்தாள். இதற்குள் அந்தப் பக்கம் சத்தம். வேலை இல்லா பட்டதாரிகள்.

''அந்த சுப்பிரமணியன் இருக்கான் பாரு, என்கிட்ட அவன் பேசுற விதமே சரியில்ல''

கலைவாணி, தான் கேள்விப்பட்டதைச் சொல்லப் போனாள். அந்த சுப்பிரமணியத்தின் அப்பாவிடம், இந்த மனோகரின் அப்பாவான தவசிமுத்து மாமா, மகன் மூலம் வேலை வாங்கித் தருவதாய் வாக்களித்து, ஐயாயிரம் ரூபாய் முன் பணமாய் வாங்கியிருப்பதாக ஊரில் அடிபடும் செய்தியை கூறப்போனாள். வேண்டாம். 'இந்த மூடை கெடுக்கப்படாது. மாமனாரைப் பற்றி கோள் மூட்டுவதாக வரப்படாது. சமயம் வரும் பேசிக்கலாம்'

கலைவாணியும், மனோகரும் கைகோர்க்காத குறையாக நடந்தார்கள். அவளுக்கு, அந்தப் பழையவன், புதியவன் போல் தோன்றினான். கனிவான கண்டிப்போடு பேசும் அவன், பெரிய மனிதத் தனமும், குழந்தைத்தனம் ஊடகமாய் குழைந்தும், இழைந்தும் இப்படி இதமாகப் பேசுவது இதுவே முதல் தடவை; முதல் அனுபவம்; ஏறிட்டுப் பார்த்தால் கண்களை எடுக்க முடியாத, அதே சமயம் இன்னதென்று விளக்க முடியாத ஏதோ ஒரு வசீகரம். திடீரென்று குலவைச் சத்தம்; திரும்பிப் பார்த்தால், கனகம்மா, பாம்படக் காதுகள் ஆட ஆட, வாய்க்குள் நாக்கை சுழற்றுகிறாள். பிறகு ''இப்போது மாதிரியே எப்பவும் இருக்கக் கடவது'' என்கிறாள். கூட நிற்கும் பெண்களில், ஆனந்தி தவிர்த்து, அத்தனை பெண்களும் கை தட்டுகிறார்கள்.

கலைவாணியும், மனோகரும், நாணிப் போய் நிற்கிறார்கள். நிமிர்ந்து பார்த்தால், மாவட்ட சுகாதார அதிகாரிக் கிழவர் டாக்டர் சுகுமார், கையாட்டி கூப்பிடுகிறார். போனால், கலைவாணியைப் பார்த்து, ''கன்கிராஜுலேஷன் கலைவாணி.. அந்த அடிக்கல் நாட்டு விழாவில் வெளுத்து வாங்கிட்டிங்க'' என்கிறார். அவளைக் கனிவோடு பார்க்கிறார். கோணச்சத்திர ஆரமப சுகாதார நிலைய டாக்டர் சந்திரா, கலைவாணியின் கரம் பிடித்துக் குலுக்குகிறாள். அந்த நிலையத்தின் இன்சார்ஜ் டாக்டர் முஸ்தபா மட்டும் ஆகாயத்தைப் பார்க்கிறார்.

கலைவாணி, மனோகரை வெட்கத்தோடு அறிமுகம் செய்கிறாள்.

'இவரு... இவரு என் உட்பி கணவர்... மெட்ராஸ்ல கம்ப்யூட்டர் என்ஜினியர்''

''குட்.. கல்யாணச்சாப்பாடு எப்போ...?''

கலைவாணி பதில் சொல்ல நாக்கை நீட்டியபோது, ஒரு குறுந்தாடி இளைஞன் வந்தான். ஒல்லியான உடம்பில் அழுத்தமான பார்வை. மாவட்ட சுகாதாரம், அவனை செல்லமாய்க் கண்டித்தது

''ஏம்பா...! ஒப்பா ஒன்னை டாக்டருக்கு படிக்க வச்சது. உழைக்கிற காசை கரியாக்கவா... ஹெச்.ஐ.வி. டெஸ்டுக்குன்னு எதுக்காக அந்த எய்ட்ஸ் டெஸ்ட் இன்ஸ்ட்ருமென்டை வாங்குனே? மூன்று லட்சம் ரூபாயை இப்படியா பாழ் பண்றது?''

டாக்டர் அசோகன், அவருக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. உயிர் கொல்லி எய்ட்ஸ் கிருமிகள் பிடித்த அப்பாவிகளையும், பாவிகளையும், கண்ணாடி அறையில் போட்டு, அவர்களுக்கு ரொட்டி, சப்பாத்தியை நாய்களுக்கு வீசுறது மாதிரி வீசுறாங்களே அரசாங்க டாக்டர்கள்... அந்த சாதி இவரு; எய்ட்ஸ் நோயாளிக்கிட்ட முகமூடி போட்டு பேசுற சுயபய சாதி, பேசிப் பிரயோசனமில்லாத வர்க்கம்...

டாக்டர் அசோகன், கண்டிப்பாய்க் கேட்டான்.

''இந்த எம்.எஸ்.ஏ.வுக்காக எவ்வளவு நேரம் யார் காத்து நிற்கிறது? இந்திய ஸ்டான்டர்ட்படி ஒரு மணி நேரம் காத்திருக்கலாம். அதுக்கும் மேலேயும் மணியாயிட்டே''

''இந்த மருத்துவ முகாம் துவக்க விழாவில் எய்ட்ஸ் பற்றி மக்கள் கிட்டே நீயே எடுத்துச் சொல்லேன்...''

'காத்திருக்கிறதுக்கு போனஸா?''

''என்ன டாக்டர்.. இப்போதான் ஒங்களை கேட்கிறது மாதிரி பேசுறீங்க. ஒங்களை நான் கூட்டி வந்ததே, எய்ட்ஸ்ல அதாரிட்டியான நீங்க, இந்த முகாமுல பேசணுமுன்னுதானே''

இப்படிச் சொன்ன டாக்டர் சந்திராவை, மாவட்டம் முறைத்தது. 'என்கிட்ட கேளாமல் நீ எப்படிடி கூப்புடலாம்... லவ்வா...?'

டாக்டர், அசோகன் கோபமாகப் பேசினான்.

''இதுக்கு மேலேயும் காத்திருக்கிறதில அர்த்தமில்ல டாக்டர். ஊர்க்காரங்க புறப்படுறாங்க பாருங்க. மேடைப் பேச்சு எப்போ எங்கே வேணுமுன்னாலும் நடக்கட்டும். ஆனால் மெடிக்கல் செக்கப்பை

துவக்கிடலாம். சரிதானே டாக்டர் சந்திரா''

''இதுதான் என்னோட அபிப்ராயமும் டாக்டர்!''

மாவட்ட சுகாதார அதிகாரி, அங்குமிங்குமாய் சுற்றிய டாக்டர்களையும், லேப் நிபுணர்களையும், காக்கி ஆசாமிகளையும் கைத்தட்டிக் கூப்பிட்டார். பிறகு கலைவாணியையும், மனோகரையும் பார்த்து, 'இதோ ஆரம்பிக்கப் போறோம். ஒங்க ஆட்களை வரிசையாய் இந்த முதல் ரூம் பக்கமாய் நிற்க சொல்லுங்க!' என்று துரத்தினார். அவர்கள் போனதும், எல்லோருக்கும் ரகசியமாய்ப் பேசுவது போல், அதே சமயம் சத்தம் போட்டே பேசினார்;

''நம் தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஹெச்.ஐ.வி. இன்ஃபெக்ஷன் பற்றி ஒரு ரிப்போர்ட் அனுப்பணுமாம். இப்போ அங்குமிங்குமாய் இருக்கிற இந்த நோய், எதிர் காலத்தில் எல்லோரையும் ஆட்டி வைக்கப் போகிற நோயாம். எப்படியோ போகட்டும்... இதனால், இந்த முகாமிலேயே எய்ட்ஸ் கிருமி இருக்குதான்னு கண்டு பிடிக்கணும். இப்படி சுகாதாரத்துறை செயலாளர் சொல்லிட்டார். ஓசப்படாமல், கண்டு பிடிக்கணும். நாம் ரேண்டம் சாம்பிள் கொடுத்தால், சென்னையில் இருக்கிற கோட்டைக்காரன் அதை நூறால பெருக்குவான்''

''இங்கே எப்படி ஹெச்.ஐ.வி. டெஸ்ட் செய்ய முடியும்''

''நான் அப்படி செய்யச் சொன்னேனா? இப்படி ஒங்களை மாதிரி டாக்டருங்க, முட்டாள்தனமாய் பேசுறதாலதான், ஐ.ஏ.எஸ்.காரன் நம்ம மேல குதிரை ஏறுறான். பிளட்சுகர் டெஸ்ட்டுக்கு எடுக்கிற ரத்தத்தை வீணாக்காமல் வை. அதில் ஒரு துளியை ரொட்டேட்டர்லயோ, அது கொண்டு வராட்டால் ரசாயன முறையிலேயோ, டபிள்யூ பிஸு அதுதான் வெள்ளை அணுக்களாவும், சிவப்பு அணுக்களாவும் பிரி; வெள்ளை அணுக்கள், கனசெண்டி மீட்டருக்கு எவ்வளவு இருக்குதுன்னு கணக்குப்பார்; கவுண்ட் எட்டாயிரமாய் இருந்தால்... எந்த டியூப்லே எடுத்தியோ அந்த டியூப் ரத்தத்தைக் கொட்டு. கவுண்ட் ஆறாயிரத்துக்கு குறைந்தாலோ, ஒன்பதாயிரத்துக்கு உயர்ந்தாலோ முகாம் முடிஞ்சதும் சம்பந்தப்பட்ட டியூப் ரத்தத்தை மாவட்ட மருத்துவ மனைக்கு கொண்டு வா. அங்கே மைக்ரோ பயாலஜிஸ்ட் பார்த்துக்குவார். ஒ.கே. இதையே மீண்டும் ஒலிபரப்பணுமா... சரி... சரி.. உள்ளே ஒண்ணுக்கு இருக்க இடம் இருக்குதா''

''இல்ல...''

''அப்போ யூரின் டெஸ்ட்டை விடு. ஓ.கே., மை டாக்டர்ஸ்... கோ கோ நோயாளி இருக்கானோ, இல்லியோ... அந்த நோயாளிகள் எண்ணிக்கைய கூட்டுங்க. அப்போது தான், உலக சுகாதார நிறுவனக்காரன்கிட்ட காசு

கறக்கலாம்''

இதற்குள், வெள்ளை யூனிபார டாக்டர்களும், மற்ற ஊழியர்களும், அந்த நீளவாகு கட்டிடத்தில், அறை அறையாய் உட்கார்ந்தார்கள். கலைவாணியும், இதர இயக்க, மன்றப் பெண்களும், ஊராரை ஒவ்வொருவராய் ஒழுங்குபடுத்தினார்கள். ஓடிப்போன சிறுவர் சிறுமியரை இழுத்து வந்தார்கள். ஆனாலும் எல்லோருக்கும் பயம். எதாவது ஒன்று கிடக்க ஒன்று சொல்லிடுவான் என்கிற பயம்.. இதனால் கலைவாணி முன் வந்தாள். 'நானும் மனோகரும் மொதல்ல போறோம்' என்றாள்.

மனோகரும், கலைவாணியும் உள்ளே போனார்கள். கூடவே கனகம்மா, வாடாப்பூ; மற்றபடி கப்சிப்; அந்த நால்வரின் பெயரையும், வருகைப் பதிவேட்டில் ஒரு நோஞ்சான் பெண் எழுத, டாக்டர் சந்திரா, அவர்களை ஸ்டெதாஸ்கோப்பால் தடவிவிட்டு, அவர்கள் பெயர் எழுதிய காகிதங்களையும் ஒன்று இரண்டு என்று நம்பரிட்ட சதுரக் காகிங்களையும் நீட்டினாள். இவளை விட்டு இன்னும் பலரைத் தாண்டி, அவர்கள் உள்ளே ஒரு அறைக்குள் போய் ஊசி வழியாய் ரத்தம் கொடுத்துவிட்டு, வெளியே வந்தார்கள்.

கலைவாணி... வரிசையாய் நின்றவர்களிடம் சொன்னாள்.

'இனிமேல் இவரு ஒண்ணாம் நம்பர்... நான் ரெண்டாம் நம்பர்...'

'ஒண்ணுக்கும் ரெண்டுக்கும் காதலா. மூணும் நாலும் சாட்சியா வெள்ளையன்பட்டி... கீப் இட் அப்...''

கிட்டே வந்து கிண்டல் செய்த ஒரு 'எட்டாப்பு' மாமா மகனை, கலைவாணி சிரித்துக் கொண்டு துரத்தினாள்.

இதற்குள், மருத்துவ முகாம் துவக்க விழாவும் துவங்கிவிட்டது. எம்.எல்.ஏ. அண்ணன் வராமலே, டாக்டர் அசோகன், டாக்டர்களின் ஊசி குத்தலுக்குப் பயந்து, அங்கே உட்கார்ந்தவர்களிடம் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டு இருந்தான். அவன் வாயில் ஹெச்.ஐ.வி. கிருமிகள், எய்ட்ஸ் நோய், ஒருத்தன்- ஒருத்தி, காண்டோம் போன்ற வார்த்தைகள் துள்ளித் துள்ளி விழுந்தன. ஆரம்பத்தில் அவனைப் பார்த்தும், அப்புறம் அவன் பேச்சைப் பார்த்தும், சிரித்த வெள்ளையன்பட்டி பின்னர் பேய றைந்து போனது. அடேயப்பா.. ஒனக்கும் வரும், எனக்கும் வருமா...?

இதற்குள், துவக்கி வைக்க வந்த எம்.எல்.ஏ. அவர்கள், கூட்டம், தான் வருவதை கைதட்டாய் அங்கீகரிக்காததைக் கண்டு கோபமாய் வெளியேற, கூட வந்த, மா.சு. அதிகாரி டாக்டர் சுகுமார், அவர் பின்னால் தொங்கித்

தொங்கி ஓட, எம்.எல்.ஏ. அவரை 'டா' போட்டுத் திட்ட, கடைசியாய், போன மச்சான், விழா மேடைக்கு திரும்பி வந்தார். 'இது, கையல்ல... ஒங்க காலு' என்று டாக்டர், சுகுமார் அழப் போனதும், எம்.எல்.ஏ. சிரித்துவிட்டார். அவரைத் தட்டிக் கொடுத்தார். ''ஒவ்வொரு அதிகாரியும் இப்படித்தான் இருக்கணும்''

வெளியே நடந்த, இந்த அமர்க்களத்தைப் பற்றி சட்டை செய் யாமல், அந்த தாற்காலிக சோதனைக் கூடத்தில் கிருமி சோதனை நிபுணியான பேத்தாலஜிஸ்ட் என்று அழைக்கப்படும் ஒரு நடுத்த ர வயது அம்மா, ரத்தம் உள்ள நம்பரிட்ட பாட்டில்களில் முதலாவதை எடுத்தாள். ஒரு ஸ்லைடில், ஒரு துளி ரத்தம் போட்டாள். இன்னொரு செவ்வக ஸ்லைடால், ரத்த ஸ்லைட் முழுக்க, அந்த ஒரு துளியையும் பரப்பினாள். பிறகு ஒரு நீண்ட பாட்டிலில் உள்ள லிச்மென்ட் ஸ்டிரெயின் என்ற வயலட் நிற திரவத்தை ஊற்றினாள். உடனே இன்னொரு நம்பரிட்ட பாட்டில்; பத்து நிமிடம் கழித்து, மீண்டும் ஒண்ணாம் நம்பர், இரண்டாம் நம்பர் ஸ்லைடுகளை, உதவியாள் நீரில் கழுவிக் கொடுத்தார். இந்த அம்மா, அந்த ஒண்ணாம் நம்பர் ஸ்லைடை, கேள்விக்குறியாய் வளைந்த மைக்ரோஸ் கோப்பில் வைத்தாள். கூடவே பொருத்தப்பட்ட உருளை மாதிரியான கருவியின் பொத்தானை அமுக்கிய படியே, தனிப்படுத்தப்பட்ட வெள்ளை அணுக்களை உற்றுப் பார்த்தாள். பிறகு உதவியாளரிடம் சொல்லப் போனதை, தனக்குள்ளேயே முனங்கிச் சொன்னாள்.

''என்னது... எடுத்த எடுப்பிலேயே இன்பெக்ஷன்; ஒண்ணாம் நம்பருக்கு வெள்ளை அணுக்கள் ஆறாயிரமா குறைந்திருக்கு. டைபாய்டா, மலேரியாவா.. கேன்சரா? ஒரு வேளை எய்ட்ஸ் நோயைக் கொடுக்கும் ஹெச்.ஐ.வி.யா...?''

4

டாக்டர் சந்திராவுக்கு, காத்திருப்பதோ அல்லது காக்க வைப்பதோ, அறவே பிடிக்காது. இதனால்தான், அவள் சினிமாவுக்குக் கூட போவதில்லை. ஆனாலும் மனோகருக்காக அவள் காத்திருந்தாள். நல்ல வேளையாய், இந்தக் கோணச்சத்திர, அச்சகக் கூடத்திற்கு அருகேயே, அவனைப் பாத்துவிட்டாள். திருமண அழைப்பிதழை, 'புரூப்' பார்க்க வந்தானாம்... எவனை, ஆளனுப்பி, வெள்ளையன்பட்டியில் இருந்து கூப்பிட நினைத்தாளோ, அவன், தானாய் கிடைத்ததில், அந்த அதிருப்தியிலும் ஒரு திருப்தி.

சந்திராவின் கண் முன்னாலயே, மனோகரும் கலைவாணியும் ஒன்றாய் சோடி சேர்ந்து இன்னமும் நிற்கிறார்கள். ராமபிரான் சீதாப்பிராட்டி சோடி மாதிரி; போன வாரம் அந்த மருத்துவ முகாம் முடிந்ததும், கலைவாணி, தன்னையும், சக டாக்டர்களையும், வலுக்கட்டாயமாக வீட்டிற்குக் கூட்டிப் போய் உபசரித்த விதத்தை, மறக்க முடியவில்லை... ஒரே குடும்பத்தில் எல்லோருமே நல்லவர்களாக இருக்க முடியுமா... இந்த மனோகர் மட்டும் என்ன.. கலைவாணி வீட்டில், பசுமாடு சத்தியாக்கிரகம் செய்ததால், இவன் தன் வீட்டிற்கோ அல்லது எங்கேயோ போய், ஒரு செம்பு நிறைய பால் கொண்டு வந்தவன்; அந்தத் தெருவிலேயே, அந்த பாடிபில்டர் மைத்துனரிடம் பாற்செம்பை நீட்டியவன்... அந்தத் தெருவிலேயே, தங்களுக்காகக் காத்திருந்து, வழியனுப்பியவன்; கல்யாண மாப்பிள்ளை, நிச்சய தாம்பூலத்திற்கும், திருமணத்திற்கும் இடையே, பெண் வீட்டுக்குள் நுழையக் கூடாது என்ற பத்தாம்பசலி உருப்படாத வழக்கத்தை, இந்த மனோகருக்காவது விட்டுக் கொடுத்திருக்கலாம். ஒருவேளை அப்படி தெருவில் நின்றதே ஒரு அபசகுனம் மாதிரியோ...

டாக்டர் சந்திரா, இருக்கையில் எழுந்து, மனம் கனக்க, அங்குமிங்குமாய் சுற்றினாள். அவன் அழைப்பிதழை சரி பார்த்து, மோட்டார் பைக்கில் ஏறி, கோணச்சத்திரம் பிரதான சாலையில் ஓடி, ரயில் நிலையப் பாதைக்குத் திரும்பி, வடக்குப் பக்க மண்சாலையில் தாவி, சுடுகாட்டுக்குப் பக்கமாய் உள்ள, இந்த சுகாதார நிலைய வளாகத்திற்குள் வருவதை, சின்னச் சின்ன கால அவகாசத்துடன் கணக்குப் போட்டாள். அவள் தலைக்குள் அந்த மோட்டார் பைக், சுடுகாட்டை நெருங்குவதுபோல ஓடியது.

கிளிப்பச்சை சேலையும், வெள்ளைக் கோட்டுமாக, வீணைக்குப் பதிலாக ஸ்டெதாஸ்கோப் பிடித்த சரஸ்வதி தேவிபோல் தோன்றிய சந்திரா, கடிகாரத்தை, படபடப்பாய் பார்த்தாள், இந்த இன்சார்ஜ் டாக்டர். முஸ்தபா, அசல் முசுடு. லீவ் லட்டரை எழுதி வைத்துவிட்டு, எங்காவது தொலைந்து போகும். போய்விட்டு, திரும்பி வந்ததும், அந்த லீவு லட்டரைக் கிழித்துப் போடும். போகும் போது மட்டுமே பல்லை இளிக்கும். மற்ற சமயங்களில், பல்லைக் கடிக்கும் ஆசாமி. 'எழுதுவதே கிழிப்பதற்கு' என்பது மாதிரி, ஒரு விடுமுறை விண்ணப்பத்தை, இன்றைய தேதியோடு நேற்றே எழுதி வைத்துவிட்டது. இன்று காலையிலே இவளை டூட்டிக்கு வரச் சொன்னது. இவ்வளவுக்கும், இவளுக்கு இன்று 'ஆப்'. ஆனாலும் அதுக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. இவள்தான் மெட்ராஸ் அத்தான் சங்கரன் வரப் போவதைக் கணக்கில் வைத்து 'காலையில் லேட்டாகும் பத்துமணி வரைக்குமாவது இருங்க டாக்டர்' என்று சொல்லிவிட்டாள். இப்போதே பத்தே கால். இப்போது இவளும் அவசரமாய் போய், மனோகரும், இங்கே வந்துவிட்டு, கல்யாண அவசரத்தில் ஊருக்குப் போய்விட்டால், ஒரேடியாய்க் கதை முடிந்திடும்... அம்மாவிடம் சொல்லி, அவரை சுகாதார நிலையத்திற்கும் வரச் சொல்ல முடியாது. தனித்துப் பேசவேண்டிய விவகாரம். இந்நேரம் இந்த முஸ்தபா, நோயாளிகளுக்கு வலிக்கும் படியாக ஊசி போடும். என்ன சுகாதார நிலையமோ, ஆரம்பக் கட்டத்திலேயே நிற்கிறது.

டாக்டர் சந்திரா, எந்த நேரத்தில் தற்காலிகமாக அந்த மனோகரை மறந்தாளோ, அந்த நேரத்தில் மோட்டார் பைக் சத்தம். டாக்டர் முஸ்தபா மீதுள்ள எரிச்சலையும் மறந்தவளாய் வெளிக் கதவைத் திறந்தாள்... மனோகர்தான்.

'வணக்கம் டாக்டர்''

''அங்கேயே வணக்கம் போட்டுட்டமே... உள்ளே வாங்க''

டாக்டர் சந்திரா, ''வருகிறாரா'' என்பது போல் திரும்பத் திரும்பப் பார்த்து விட்டு, அவனை உள்ளறைக்குள் கூட்டிப் போனாள்.

குண்டுங்குழியுமான தரையையும், பாச்சான், பல்லி வகையறாக்களையும் பார்த்த மனோகர் ஆச்சரியமாய்க் கேட்டான்.

'என்ன டாக்டர்... இந்த குவார்ட்டர்ஸ் இப்படி மாட்டுத் தொழுவம் மாதிரி இருக்குது''?

''ஆயிரம் ரூபாய் கொடுத்து குதிரை வாங்குவாங்க. அதைக் கட்டிப் போட ஐந்து ரூபாய்க்கு கயிறு வாங்க மாட்டாங்க. இதுதான் கவர்ன்மெண்ட்''.

''அப்போ நம்ம வீட்டுக்கு அறுத்துட்டு வந்திடுங்க. இல்லன்னா கலைவாணி வீட்டில் அவள் அறையில் இருங்க. அவள் மெட்ராஸ் காரியாய் ஆகப் போறவள் பாருங்க. இந்த குவார்ட்டர்ஸ் பார்க்கவே சகிக்கல''

''எதைவிட முடியாதோ... அதை சகித்துத்தானே ஆகணும். எப்படி நம்ம உடம்புக்குள்ளே நமக்குத் தெரியாமல், நல்லதும், கெட்டதும் நடக்கிற மாதிரி, ஒரு குடியிருப்புக்குள்ளயும், பல்லி, பாச்சான், பாம்புகூட வந்துடுது. நாம்தான் அதோட சேர்ந்து வாழப்பழகிக்கணும். எம்மா ஹார்லிக்ஸ் கொண்டுவாங்க''

''காபி இல்லியா டாக்டர்?''

''இனிமேல்... நீங்க காபி குடிக்கக் கூடாது. உடம்பிலே நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கிற... இல்லாவிட்டால், குறைகிற அந்த சக்தியை ஓரளவுக்கு தடுக்கிற வேர்க்கடலை, முட்டை போன்ற சத்துணவு பொருட்களையும், சக்தித் தரக்கூடிய வாழைப்பழம், கோதுமையையும், கிருமிகளைத் தடுக்கிற மொச்சைக் கொட்டை, பாசிப்பருப்பு வகையறாக்களையும், நீங்க அதிகமாய் சாப்பிடணும்''

மனோகர், அவளைக் கண் நிறுத்திப் பார்த்தான். ஒரு கப் காபி கேட்டதுக்கு, இவ்வளவு பெரிய பாட்டி உபதேசமா...? ஆனாலும் சிரித்துக் கொண்டான். வேலைச் சுமையை நினைத்ததும், உடல், அந்த நாற்காலியில் உட்கார்ந்தபடியே, மானசீகமாய் பறந்தது. இந்த கோணச் சத்திரத்திலேயே, ஒரு மியூசிக் பார்ட்டி இருக்குதாம். கண்டுபிடித்து, அட்வான்ஸ் கொடுக்க வேண்டும். தென்காசியில் போய் வீடியோக்காரனுக்கு முன் பணம் நீட்ட வேண்டும். அப்புறம் சாமியானா பந்தல்... அப்பா, அம்மா வழியாய்ச் சொன்னதை நிராகரிக்க வேண்டும். மாலையில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தாக வேண்டும். அப்பா கிடக்கார். ஊர்க்காரன் நம்மையும் சேர்த்துச் சாப்பிடுவான். ஒரு வேளை சோறு போட்டால் போதும், என்றாராம்... அசல் காட்டுமிராண்டி... ஏதோ பிறந்த கடனுக்கு பிள்ளையாய் இருக்க வேண்டியதாய்தான் உள்ளது. இன்னும் ஹார்லிக்சைக் காணுமே...

வீடியோக்காரன், வேறு எதுக்காவது 'புக்' ஆகிடப் போறான். கலைவாணிக்கு வாக்கு கொடுத்தாகி விட்டது. முதலிரவிலேயே திருமணக் காட்சிகளைப் போட்டுக் காட்டுவதாக; முன்னாலா.. பின்னாலா என்பது அவள் மூடைப் பொறுத்த விஷயம்.

மனோகர்... தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். பிறகுதான் டாக்டரம்மா சந்திரா என்பவள் இருப்பதைக் கண்டுபிடித்தான்.

''என்ன டாக்டர்.. இன்னும் ஹார்லிக்ஸைக் காணோம்?''

''இப்படியெல்லாம் எமோஷனலாய் ஆகப்படாது. எதையும் தாங்கிக்கணும். எது வந்தாலும் ஏத்துக்கணும்''

அவளை ஏறிட்டுப் பார்த்த மனோகர், தன்னைப் பார்க்காமலேயே மேஜையைப் பார்த்தவளை சந்தேகமாய் நோக்கினான். இவள் என்ன மென்டலா.. ஊரில் பார்த்தப்போ அப்படி தெரியலியே?

இதற்குள், ஒரு வயதான அம்மா, முக்காடு போடாத குறையாக உள்ளே வந்து ஒரு தட்டில் ஆவி பறக்கும் காபியையும், ஆடை படர்ந்த ஹார்லிக்சையும் கொண்டு வந்து மேஜையில் வைத்தாள். வந்த கையோடு 'சங்கரைக் காணோமே' என்றாள்; அவனை சந்திராவின் மனதுக்குள் திணிப்பது போல். ''வந்தால் வரட்டும்.. வராட்டால் போகட்டும்... நீங்க போங்கம்மா. யாருடனாவது பேசிட்டு இருக்கும் போது நிற்கப்படாதுன்னு எத்தனை தடவ சொல்றது'', என்றாள் சந்திரா. அந்த அம்மா, மனோகரை, கடித்துக் குதறப் போவது போல் பார்த்தாள். இது என்ன புது சிநேகம்...

டாக்டர் சந்திரா, ஹார்லிக்ஸ் தம்ளரை, அவன் பக்கமாகத் தள்ளிவிட்டு யோசித்தாள். எப்படிச் சொல்வது? இந்த டாக்டர், தாடிக்கார அசோகன் மட்டும் இருந்திருந்தால், அவரிடம் பொறுப்பை விட்டிருக்கலாம். 'கன்வின்சிங்காய்' சொல்வார்.. மனிதர், இந்நேரம் டில்லியில் இருப்பார். அப்புறம் நியூயார்க், எய்ட்ஸ் சிகிச்சை பற்றி ஒரு கருத்தரங்கு. ஒரு உலக மாநாடு. எவரையும் எதுக்கும் அணுகாத, இந்த கோணங்கி டாக்டருக்கு எப்படித்தான் சான்ஸ் கிடைத்ததோ!

டாக்டர், சந்திரா, பேச்சை லைட்டாக ஆரம்பித்து, படிப்படியாய் சீரியஸாக கொண்டு போக நினைத்தாள். எங்கேயோ படித்ததுபோல்...

''நீங்க பேச்சுலரா... அன் மேரீடா?''

''என்னம்மா என்கிட்ட போய்

''நான் அம்மா இல்ல... டாக்டர்; சொல்லுங்க... நீங்க கல்யாணம் ஆகாதவரா... பிரம்மச்சாரியா? ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்கு''

''சொல்லமாட்டேன்''

''கலைவாணி ரொம்ப ரொம்ப நல்ல பொண்ணு. அவளை கண்கலங்காமல் வைக்கிறதுதானே ஒங்க லட்சியம்''

''இது ஒரு நெகட்டிவ் அணுகுமுறை. அவளை கண்கலங்காமல் மட்டுமல்ல, எப்போதுமே, அவளை சிரிப்பும் கும்மாளமுமாய் வைக்கணும். இதுதான்.... என்னோட லட்சியம்''

''அதுக்காக ஒரு சின்ன தியாகம் செய்வீங்களா?''

''சொல்லுங்க''

''கல்யாணத்த மூன்று மாதம் ஒத்தி வைக்க முடியுமா?''

மனோகர் நிமிர்ந்து உட்கார்ந்தான். இவள் மென்டல் மட்டுமில்ல. மென்டல் ஆக்குகிறவள்;

''அது எப்படி முடியும்?''

''எப்படியோ முடியணும்!''

''இப்படி... உத்தரவு போடுறது மாதிரி பேசினால் எப்படி டாக்டர்? எங்க ஊர் முழுக்கும், எங்க கல்யாணப் பேச்சுத்தான் அடிபடுது. இந்த சுபகாரியம், வேற மாதிரி அடிபடுறதை, கலையே விரும்ப மாட்டாள்''

''இப்போ அவள் விரும்புறாளா விரும்பலியா என்கிறது இல்ல பிரச்சினை. அவளுக்கு எது தேவை என்கிறதுதான் முக்கியம். விருப்பத்தை தேவையாக்கினால், அது விவகாரத்தில கொண்டு போய் விடும். மூணே மூணு மாசம்... அப்புறம் யோசிக்கலாம்''

''அவளுக்கு ஏதும் நோய் இருக்குதா டாக்டர்''

''நோ... நோ... நல்ல ஆரோக்கியம். அதனாலதான் சொல்றேன்''

''மூணு மாதத்திற்கு யோசிக்கலாம்னு சொன்னீங்க. இப்போ வேற மாதிரி பூடகமாய் சொல்றீங்க. பச்சையாவே கேட்கிறேன் டாக்டர். இதுக்கும், ஒங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''பாத்தீங்களா! இப்பவே இப்படி உணர்ச்சி வசப்பட்டால், அப்புறம்

எப்படி? ஒங்க ஹெல்த் கண்டிஷன் அப்படி இருக்குது''

''என்னோட ஆரோக்கியத்தைப் பற்றி எனக்குத் தெரியாதா டாக்டர்? போன வாராம், சோளிங்கருக்கு பிக்னிக் போனோம். பலர் மலை ஏற முடியாமல் தவித்தபோது, ஒரே மூச்சிலே உச்சிக்குப் போனவன் நான்!''

''ஒங்க ரத்தம் அப்படிச் சொல்லலியே?''

''ஓஹோ, மருத்துவ முகாம் சமாச்சாரமா? என் ஹார்ட் நல்லாயிருக்குதுன்னு நீங்கதானே சொன்னீங்க...!''

''ஆனால் ரத்தத்தை சோதித்ததில் ஒரு இன்பெக்ஷன்''

''சரி அதையாவது சொல்லுங்க''

''இப்போ சொல்லப்படாது; இன்னொரு டெஸ்ட் எடுத்துத்தான் உறுதி செய்யணும்''

''ஓ.கே. நீங்க பாட்டுக்கு உங்க வேலையைப் பாருங்க... நானும் என் வேலைய பார்க்கேன். ஒரு டாக்டரோட கடமை டென்ஷன் கொடுக்கிறது இல்ல... சரியான மெண்டல்''

மனோகர், அப்படிச் சொல்லிட்டு எழுந்தான். பிறகு உதட்டைக் கடித்தான். கல்யாண டென்ஷனில், அவனது ஜென்டில்மேன் பேச்சும், பறிபோய்விட்டது. ஆனாலும் இந்தம்மா அறுக்கிற அறுவைக்கு அதுதான் பதில்.

மனோகர் எழுந்தான். சந்திராவை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, பிறகு முதுகு காட்டி நடந்தான். பிறகு திரும்பி, ''கல்யாணத்துக்கு கண்டிப்பாய் வாங்க'' என்று சொல்லிவிட்டு மீண்டும் நடந்தான்.

டாக்டர் சந்திரா தடுமாறிப் போனாள். கூடவே கலைவாணியின் பளப்பளப்பான முகத்தின் கலகலப்பு, நெஞ்சைக் குத்தியது. அன்று, அவள் வீட்டு விருந்தோம்பலில் ஒரு லட்டுத்துண்டை எடுத்து இவள் வாயில், கலைவாணியே போட்டாள். பிறகு 'அய்யோ கையக் கடிச்சட்டிங்களே' என்று கையை உதறி, பாசாங்கு பயம் காட்டினாள். அவள் வாழ்க்கையை இவர் கடிக்கப்படாது. தங்க ஊசி என்பதற்காக, அதைக் கண்ணில் குத்த முடியாது. போய்க் கொண்டிருந்தவனை நிறுத்துவதற்காகக் கத்தினாள்.

''மிஸ்டர்! நீங்க கல்யாணம் செய்யப்படாதுன்னா... செய்யப்படாது. ஏன்னா ஒங்களுக்கு ஹெச்.ஐ.வி. இன்பெக்ஷன் இருக்கிறது மாதிரி தெரியுது.

அதுதான் எய்ட்ஸ் கிருமிகள்... ஓங்க ரத்தத்தில் ஊடுருவி இருக்குது...''

மனோகர், நின்ற இடத்திலே நின்றான். அவளுக்கு முதுகு காட்டி நின்றான். கீரிக்குப் பயந்து போய், பாம்பு காட்டுமாமே... பின் தலையை- அப்படி, நின்ற இடத்திலேயே உறைந்து போனான். கால்கள், தரையில் பதியம் போட்டது போல், அசைவற்று நின்றன. தரையில் காலே வேரானது போன்ற மனித மரமாய் நின்றான். ஆலமரமாய், அரச மரமாய் அல்ல. கள்ளி மரமாய்... கருவேல மரமாய்... எனக்கா? எய்ட்ஸ் எனக்கா? இருக்காது.... இருக்கவே இருக்காது''.

மனோகர், மெள்ள மெள்ள, உடல் திருப்பினான். அவளைப் பார்க்க சங்கடப்பட்டு, வேறு பக்கமாய் முகம் திரும்பியவளை ஒட்டு மொத்தமாய்ப் பார்த்தான். எய்ட்ஸைப் பற்றி பொத்தாம் பொதுவாய், அரைகுறையாய் தெரிந்து வைத்திருந்தவன், எல்லோரையும் போல் அதை எள்ளி நகையாடியவன்தான். ஆனால், டாக்டர் அசோகன், வெள்ளையன்பட்டி மருத்துவ முகாமில், படம் படமாய் போட்டுப் பேசியதில் இருந்து, ஒரு நாள் வரை தூக்கமற்றுப் போனவன்... தனக்கு வரும் என்று அல்ல... எத்தனைபேர் தவியாய் தவித்து, துடியாய்த் துடிக்கிறார்களோ என்ற மனித நேயத்தில்... ஆனால், இன்று, இந்தக் கணத்தில், கண்களை மூடிக் கொண்டான். கற்பனையும் கற்பிதமும், தானாய் அவன் மனதை வரித்துக் கொள்கின்றன.

டாக்டர் அசோகன் விளக்கியதுபோல், உடலின் ஒரு அணுவின் லட்சக் கணக்கான மடங்கு சிறிய இந்த அற்ப ஹெச்.ஐ.வி. கிருமிகள், அற்புதமான உடல் கட்டமைப்புக்குள் ஓடும் ரத்தத்திற்குள் ஊடுருவி, வெள்ளை அணுக்களின் தளபதி அணுக்களில் குடிகொண்டு பல்லாயிரத்து பல்லாயிரமாய்ப் பல்கிப் பரவுகின்றன. இதோ யுத்தம் நடக்கிறது. இதில் எறும்பு ஊர, இரும்பும் தேயும் கதையாக, சிற்றுளி மலையை உடைக்கும் யதார்த்தமாக, இந்தக் கிருமிகள், மத யானைகள் போன்ற காவல் வீரர்களான வெள்ளை டி.நான்கு தளபதி அணுக்களை சிறுகச் சிறுகக் கொல்கின்றன. இதிலும் திருப்தி அடையாமல், இதோ அவன் உடம்புக்குள் ஊடுருவல்... பாரசைட் கிருமிகளைத் திறந்துவிட்டதால் அவனுக்கு மனிதக்கால், யானைக்காலாகியது. பங்கஸ் கிருமிகளை ஆடவிட்டு, அவனை தொழு நோயாளியாக ஆக்கிக் காட்டுகின்றது. பாக்டீரியா கிருமிகளை படரவிட்டு, நிமோனியாவில் எரிய வைக்கின்றன. மூளைக்குள்ளும், இந்த புத்திசாலிகள் ஊடுருவி, அவனுக்கு ஒரு கையும், காலும் விழுகின்றன. கக்குவான் பிடிக்கிறது. தொண்டை எங்கும், வாய் எங்கும், வெள்ளை வெள்ளையாய், ஏதோ ஒன்று ஆக்கிரமித்து, எச்சிலைக் கூட விழுங்க முடியாத கொடுமை. டாக்டர் அசோகன் குறிப்பிட்டதுபோல், இல்லாதவனின் ஏழைப்

பெண்டாட்டி எல்லோருக்கும் பெண்டாட்டி என்பது மாதிரி, வெள்ளை அணுக்கள் இல்லாத அவன் உடம்பை, நான்கு வகைக்குள் அடங்கும் ஆயிரக் கணக்கான ரகரகமான கிருமிகள் ஆக்கிரமிக்கின்றன. ஆக மொத்தத்தில் யானைக்கால் குஷ்டரோகியாய், ஒரு கை ஒரு கால் விழுந்தவனாய், பெரியம்மை பட்டு பார்வை அற்றவனாய், உப்பளம் போன்ற கொப்பளக்காரனாய், மலேரியா தூக்கிப் போட, சயரோகம் ரத்தம் ரத்தமாய் வெளிப்பட, குடலைப் புற்றுநோய் தின்று தீர்க்க, உற்றார் பெற்றோர் விலக, மருந்தற்றுப் போனதால் , மரணம் நிச்சயமாகி, சிறுகச் சிறுக, பல்லி கவ்விய பாச்சானை, அந்த பல்லியைக் கௌவிய பாம்பாய், பாம்பைத் தூக்கிய கழுகாய், ஒரு உறுப்பை இன்னொரு உறுப்பு தின்ன, அப்படியே கிடக்கிறான். அநாதையாய்க் கிடக்கிறான். பறவைகள் கொத்த வருகின்றன. நாய்கள் மோப்பம் பிடித்து கிட்டே வருகின்றன.

''நோ... நோ... நோ...''

மனோகர் வீறிட்டுக் கத்துகிறான். கண்களைத் திறக்கிறான். மெள்ள மெள்ள பார்வை வருகிறது. காலை ஆட்டுகிறான். நடக்க முடிகிறது. எச்சிலை விழுங்குகிறான். உள்ளே போகிறது. உடம்பைப் பார்க்கிறான். ஒரு மரு கூட இல்லை. இல்லவே இல்லை.. ஒரு நிமிடத்தில், ஏழாண்டு கால உச்சக் கட்டத்தைத் தாண்டி, மறு நிமிடம் பிழைத்துக் கொள்கிறான். டாக்டர் சந்திராவை, அச்சுறுத்துவதுபோல் பார்க்கிறான். அதே சமயம், முற்றிய எய்ட்ஸ் நோயாளிகள் எப்படி இருப்பார்கள் என்று டாக்டர் அசோகன் போட்டுக் காட்டிய விதவிதமான ஸ்லைட் படங்கள், அவனைப் பேயாய்ப் பிடித்துக் கொள்கின்றன.

டாக்டர் சந்திரா, அவனருகே வருகிறாள். அவன் முதுகைத் தட்டிக் கொடுக்கிறாள். உபதேசிக்கிறாள்.

''ரமண ரிஷிக்கும் புற்று நோய் வந்தது. ராமகிருஷ்ண பரமஹம்சருக்கும் அதே நோய்; விவேகானந்தருக்கு பிளவை; இந்த மகான்கள், தங்களுக்கு வந்த நோய்களை ஏளனமாய் பார்த்தார்கள். போனால் போகிறது என்பதுபோல், எமனுக்கே அடைக்கலம் கொடுத்தார்கள்''

மனோகர்...பைத்தியமாய்க் கத்தினான்.

''எனக்கு எய்ட்ஸ்.... எல்லா நோயையும் விடக் கொடிய நோய்.... அப்போது நான் மனோகர் அல்ல, மகான் நல்லாயிருக்குது டாக்டர்''.

டாக்டர் சந்திரா பயந்து விட்டாள். இதுதான், அவள் முதல் தடவையாக கையாளும் எய்ட்ஸ் கவுன்சலிங். ஆழந்தெரியாமல் காலைவிட்ட கதை...

''இப்போ கூட குடி முழுகிடல மனோகர்... உறுதிப்படல. வெறும் சந்தேகந்தான். இரண்டாவது டெஸ்டுதான் இறுதியானது; ஒங்களுக்கு ஹெச்.ஐ.வி. இல்லாமல் கூட இருக்கலாம்.''

''அப்... அப்போ மூன்று மாதத்திற்குப் பிறகு சொல்லி இருக்கலாமே!''

''அதுதான் சரியானது... ஒங்களுக்கு, அடுத்தவாரம் கல்யாணம் நடத்த நிச்சயம் செய்யாமல் இருந்தால், இதைப் பற்றி மூச்சு விட்டிருக்கக் கூட மாட்டேன். இதுல கலைவாணியோட வாழ்க்கையும் அடங்கியிருப்பதால், நான் சொல்லும்படியாய் ஆயிற்று... பெண் என்கிற முறையில், இன்னொரு பெண் - அதுவும் ஒரு அப்பாவிப் பெண், பாழாகிடப்படாதேன்னு பயந்து சொன்னேன். ஒங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டதுக்கு எனக்குக் கூட மனசு கேட்கல. பாவம் கலைவாணி''

பொறி கலங்கி நின்ற மனோகரின் மூளையில் ஒரு பொறி - எதற்கு எடுத்தாலும் கலைவாணி தானா? என்னைப் பார்க்க, இவளுக்குப் பாவமாய் இல்லியா? இருக்காது. ஏன்னா இதில் ஒரு சூழ்ச்சி தெரியுது. பக்குவமாய் கேட்போம்.

''டாக்டர், எனக்கு எய்ட்ஸ் கிருமிகள் இருக்கிறதை காட்டும் டெஸ்ட் ரிசல்ட் ரிப்போர்ட் இருக்குதா? பாதிக் காகிதத்தில் என் பெயரை கருப்பு மையிலும், ஹெச்.ஐ.வி. ஆன்டிபாடி பாஸிட்டிவ் என்று சிவப்பு மையிலும் எழுதின ரிப்போர்ட்; இது எப்படித் தெரியும் என்கிறீங்களா? அன்றையக் கூட்டத்தில் டாக்டர் அசோகன் பேசுனதை ஒரு வார்த்தைக்கூட விடாமல் கேட்டேன். ரிப்போர்ட்ட காட்டுறீங்களா டாக்டர்...?''

''இன்னும் அதிகாரபூர்வமாய் அனுப்பல சார். எனக்கு அனுப்புவாங்களான்னும் தெரியாது. மாவட்ட மருத்துவ மனைக்கு, வேற ஒரு விஷயமாய் போயிருந்தப்போ, தற்செயலாய் ஒங்க ரிப்போர்ட்டைப் பார்த்தேன்''

மனோகருக்கு லேசாய் தெம்பு; மனதில் தெளிவு; மூச்சு சீரானது; இவள் ஏமாற்றுகிறாள். சர்டிபிகேட் இல்லாமலே சாகஸம் செய்கிறாள். இது ஒரு சூழ்ச்சி. பயங்கரமான சூழ்ச்சி; அந்தக் கேடு கெட்ட கலைவாணியும், இந்த சந்திராவும் விரித்த வலை. கல்யாணப் பேச்சு வந்த போது அழுததாய், அதுவும் ஒரு நாள் முழுக்க அழுததாய், அவளே ஒப்புக் கொண்டாள். கல்யாணம் பிடிக்கவில்லை என்பதும், கல்யாண மாப்பிள்ளை பிடிக்கவில்லை என்பதும் ஒன்றுதான். ஊர் சுற்றவும், கண்டவர்களோடு பல்லைக் காட்டவும், படிப்படியாய் தலைவியாக வும், இந்தத் திருமணம் தடையாய் இருப்பதாய் அவள் நினைத்து, இந்த சூழ்ச்சியில் இறங்கிவிட்டாள். 'இடித்த புளி

கணவனாய் இருக்க மாட்டேன், என்பதால், இந்த சந்திராவோடு சேர்ந்து வலை பின்னி விட்டாள். பெற்றவர்களிடம் அழுகை பலிக்காமல் போனதால், இப்படி ஒரு சூழ்ச்சி; இப்போதுதான் புரிகிறது. நல்லாவே புரிகிறது. இவளும் அவளும், சுப்பையா மாமா வீட்டில் இருந்து வெளியேறும் போது, என்னைப் பார்த்தே ரகசியம் பேசினார்கள். ஜீப்புக்குள் ஏறிய இவள், மீண்டும் என்னை நோட்டம் போட்டுவிட்டு, கலைவாணியிடம், 'நின்னுடும் நின்னுடும்' என்றாள். 'எது நின்னுடும்?' என்றாள்.

டாக்டர் சந்திரா, அவன் பித்துப்பிடித்து நிற்பதாக அனுமானித்து, 'ஐ அம்ஸாரி வேற எந்த வழியும் தெரியல... அதனாலதான் கல்யாணக் கட்டாயத்தால்தான் சொல்லிட்டேன். ஒங்க மனதை சிதைத்துட்டேன்' என்றாள். அவனைப் பார்த்தால் அழுகை வரும் போல இருந்தது. அவனைப் போலவே, அவளும் வியர்வையில் வெம்பினாள்.

மனோகர், டாக்டர் சந்திராவை, மூர்க்கமாய்ப் பார்த்தான். அடிக்கப் போவது போல பார்த்தான். பிறகு, தனது உடல் முழுவதையும், பெருமிதமாய் 'பாதாதி கேசமாய்ப்' பார்த்துக் கொண்டான். தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'எனக்கு எய்ட்ஸ் எப்படி வரும்? இதுவரை மனதால் கூட எவருக்கும் கெடுதல் நினைக்காதவன்... கம்பெனியில் எனக்குப் பெயரே ஜென்டில்மேன் எஞ்சினியர்... அதே கம்பெனியில், என் பேச்சுக்கு மதிப்பளித்து, ஊர்க்காரன் இரண்டு பேருக்கு நிர்வாகம் வேலை கொடுத்திருக்கிறது. இவர்களிடம் ஒரு பைசா எதிர் பாராதவன், கம்பெனி டிரைவர், பியூன் எல்லோருமே என்னிடம்தான் கடன் கேட்பார்கள். அவர்கள் கொடுத்தால் வாங்கிக் கொள்வேன். வாயால் திருப்பிக்கேட்டதில்லை. ஊரில் கூட வயதான அநாதைக்கிழவர் பாண்டித்துரை தாத்தாவுக்கு நூறு ரூபாய் கொடுத்தேன்... மனிதர் அழுதழுது கும்பிட்டுக் கும்பிட்டு என்னை ஆசிர்வதித்தார். தொழுநோயில் அவதிப்படும் ராமக்கா பாட்டியை, மருத்துவமனையில் சேர்க்க ஏற்பாடு செய்தவனே நான்தான், எந்த தாசியையும் ஏறெடுத்துப் பார்க்காதவன் நான்... அப்படிப்பட்ட எல்லோருக்கும் நல்லவனான எனக்கா வரும்? வரவே வராது. இது சூழ்ச்சி, ஆழமான சூழ்ச்சி. இந்த சூழ்ச்சிக்காரிகளான மேனாமினுக்கி கலைவாணிக்கும், சேடிஸ்டான இந்த சந்திராவுக்கும் எய்ட்ஸ் வரும். இவர்களை விட்டுவிட்டு எப்படி எனக்கு வரும். ஐயாம் ஆல் ரைட் ஆரோக்கியமானவன் நான்...''

மனோகர், சொல்லாமல் கொள்ளாமல் வெளியே வந்தான். வந்ததும் வராததுமாய், மோட்டார் பைக்கில் ஏறினான். ஆச்சரியப்பட் டுப் போன சந்திரா, பின்னால் ஓடினாள். நம்பிக்கையோடு விடை கொடுத்தாள்.

'ஐ அம் ஸாரி... மனோகர் ஒங்களுக்கு வந்தது, கலைவாணிக்கும் வந்துடப்படாது பாருங்க. அதனாலதான் சொன்னேன். ஊருக்குப் போன உடனேயே கல்யாணத்தை நிறுத்திடுங்க...''

''பார்க்கலாம்''

''இப்படி பட்டும் படாமலும் சொன்னால் எப்படி? உங்க காலுல விழுந்து கேட்கிறதாய் நினைத்து, ஒரு அப்பாவிப் பெண்ணுக்கு வாழ்க்கை கொடுங்க''

''என்ன வாழ்க்கை... ஊர் ஊராய்ச் சுற்றுகிற வாழ்க்கையா...? தானைத் தலைவியாய் ஆகிற வாழ்க்கையா?''

டாக்டர் சந்திராவுக்கும், இப்போது கோபம் வந்து விட்டது. பேச்சின் போக்கே சரி இல்லையே... எச்சரித்தாள்.

'லுக் மிஸ்டர் மனோகர்! நீங்களா, இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால், ஒங்க கௌரவத்துக்கு நல்லது. இல்லாவிட்டால், நானே அதை நிறுத்திக் காட்டுவேன். எதிர்கால எய்ட்ஸ் நோயாளிக்கு, ஒரு அப்பாவிப் பெண் கழுத்தில் தாலிகட்ட உரிமை இல்லை''

மனோகருக்குப் பதிலாய், அவன் மோட்டார் பைக் தான் பதில் சொன்னது - காட்டுக் கத்தலாய் ஆவேசப் பாய்ச்சலாய்...

5

அந்த மாதிரி வேகத்தில், அவனும் போனதில்லை. அந்த மோட்டார் பைக்கும் கண்டதில்லை. இந்த வேகத்தை விட, பாதி வேகத்தில் போகும் பேருந்துகளில், சிலவற்றிற்கு குழி பறித்த, அந்த கோணச் சத்திர-வெள்ளை யன்பட்டி வழியான அம்பாசமுத்திர குறுஞ்சாலைக்கும், இது புது அனுபவம். நீண்டு படுத்து முதுகில் சுமக்கும் அந்த வாகனத்தை, அப்பப்போ மல்லாந்து பார்த்து, அவனையும், அந்த வாகனத்தையும் விழுங்கப் பார்த்தாலும், அந்தச் சாலையால் முடியவில்லை. பனைமரங்களும், இடையிடையே எட்டிப் பார்க்கும் ஈச்சம் பனைகளும், சுமைதாங்கிக் கற்களும், வேறு திசையில் நகர்வது போன்ற மாயை...

அந்த வேகத்திலும், மனோகர், அந்தப் பெண் கும்பலை தொலைவிலேயே பார்த்து விட்டான். அதே அந்த அடிக்கல் இடத்திற்கு அருகே, ஒரு சின்னக் கொட்டகையாய் மாறிய முன்னாள் பந்தலில், குத்து மதிப்பாக முப்பது பெண்கள், ஓலைப் பாய்களிலோ அல்லது பனைத் தட்டிகளிலோ உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் முன்னால், நாற்காலிகளில் மூன்று ஆண்கள்; கலைவாணி, நின்றபடியே கைகளை ஆட்டி, ஆட்டிப் பேசிக் கொண்டிருப்பதையே பார்க்கிறார்கள். அந்த இடத்தை வேலியாக்கும் சாலைப் பக்கம் பாய்ந்த போது 'எத்தான்... ஏய் அத்தான்!' என்ற கலைவாணியின் குரல்... கூட்டத்துக்கு முதுகு காட்டி, இவனுக்கு முகம் காட்டி, கையாட்டுவதையும் பார்த்துவிட்டான்... ஆனாலும் அவளைப் பாராததுபோல் ஒரு பாசாங்கு காட்டி, வெள்ளையன்பட்டியை நடமாட வைக்கும் ஒரே ஒரு வசதியான இந்தச்சாலை, மண் சாலையாய் மாறும் இடது பக்கம் திரும்பி, பின்னர், கல்முள், அதிகமாய் உள்ள வண்டித் தடத்தில், ஓடி, 'பரும்புக் காட்டிற்கு' வந்த பிறகே, வண்டியை நிறுத்தினான். வந்த வேகமோ,

நொந்த வேகமோ, உடலெல்லாம் ஒரே வலி... தலைக்கு வெளியே மட்டும் அல்லாது உள்ளுக்குள்ளும் ஒரே சுற்றல்.

அந்த மோட்டார் பைக் இருக்கையில், முகம் போட்டபடி மனோகர் குப்புறக் கிடந்தான். அவன் முகத்தில் வியர்வைப் பெருக்கத்தை, அந்த இருக்கை உறிஞ்சியது. அப்படியே சாய்ந்து கிடந்தவன், கற்குவியல்களுக்குள் நடந்து ஒரு பாறையில் மல்லாக்க சாய்ந்தான். உச்சி சூரியன் அவனைச் சுடவில்லை. பாறை வெப்பம், அவனைப் பாதிக்கவில்லை. அங்குமிங்குமாய் அலைக்கழிந்து பார்த்தான். மொட்டைத் தலையான பாறைகள். கற்கள் கூட கருகிப் போய் கிடந்தன. உருளைக் கிழங்கு போன்ற சரளைக் கற்கள். செடிகளாக மட்டுமே வளரும் கற்றாழை, அங்கே மரமாக நின்றன. அதன் கிளைகள் எங்கும் முட்செருப்புகள் போன்ற காய்கள். அவற்றின் பார்வை பயங்கரமாய் பயமுறுத்துவது போல் இருந்தது. தரை, அவன் காலின் ஈரத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது.

சிந்தித்து, சிந்தித்து மனம், மரத்தது. கண்கள் எரிந்தன. தொண்டைக்குள் அடைப்பு. நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று தன்னந்தனியாய் தானாய்ப் புலம்புகிறது. நெஞ்செலும்பை, அடித்துக் கொள்கிறது. இதயத்தில் முட்டி மோதுகிறது.

'இனிமேல் கலைவாணியோடு வாழ்வது என்பது முடிந்து போன சமாச்சாரம்... ஆனாலும், இந்த திருமணத்தை அவளே நிறுத்திக் காட்டட்டும். இரண்டு முயற்சிகளில் தோல்வி அடைந்தவள், கடைசி முயற்சியாய் என்ன செய்கிறாள் என்பதைப் பார்த்துவிடலாம். அவனைப் பொறுத்த அளவில் கல்யாணத்தை நிறுத்துவதற்கு, எந்த முயற்சியும் செய்யப் போவது இல்லை. மூன்றாவது முயற்சியிலும் அவள் குப்புற விழுந்து, கல்யாண மேடை வழியாய் படுக்கை அறையில் மல்லாந்து விழுந்தாலும், ஒரு வகையில் நன்மைக்கே... பிடிக்காத ஒன்றை முறைப்படி தடுப்பதற்குப் பதிலாக, ஒரு இளைஞனை, எதிர்கால எய்ட்ஸ் நோயாளியாய் சித்தரித்து, அவன் மனோபாவத்தையே மாற்றிவிட்டவள், கொலையை விட கொடூரமான காரியத்தைச் செய்தவள்; மனைவியாய் வந்தாலும் தொடுவதாக இல்லை... வேறு வழி இல்லாமல் தொடுவதாக இருந்தாலும், அது தாக்குவதாகவே இருக்கும்... சண்டாளி... ராட்சசி... ஊர் சுற்றி... என்னை சாக வைக்கவே வாழ்கிறவள்''

''எத்தான்... ஒங்களுக்கு காது செவிடா?''

மனோகர், தலையைத் தூக்காமலேயே பார்த்தபோது, கலைவாணி சைக்கிளை அவன் மோட்டார் பைக் மேல், சாய்த்துப் போட்டுவிட்டு, அவனைப் பார்த்து ஓடிவந்தாள். அவன் கைகளை எடுத்து தன் தோள்களில்

போட்டுக் கொண்டாள். பிறகு அவனை லேசாய் உருட்டிவிட்டு, கிடைத்த இடத்தில் , அவனைப் பார்த்து ஒருக்களித்து சாய்ந்தபடியே ஒப்புவித்தாள்.

''நம்ம ஊர்ல... பெண்கள் சுயவேலைக்குழு இருக்குதா... ஆரம்பத்தில் பாங்கில் பணம் சேமித்து, ஒவ்வொருத்திக்கும் 500 ரூபாய் சேமிப்பும் இருக்குதா..., இப்போ பேங்க் காரங்களும், பிளாக் அதிகாரி ஒருவரும் வந்திருக்காங்க. 'என்ன தொழில் செய்யப் போறீங்க...? எவ்வளவு கடன் வேணுமுன்'னு கேட்க வந்திருக்காங்க. இந்த பாய் பின்னுதல், கூடை முடைதல், சூளை போடுதல் இது மாதிரி இல்லாமல், எல்லோரும் செய்றது மாதிரி ஒரு நவீன தொழிலை செய்யனுமுன்னு நினைக்கேன். எனக்கென்னமோ செயற்கை வைரம் செய்யுறது சரியாப்பட்டது. எதுக்கும் ஒங்க கிட்டே யோசனை கேட்கலாமுன்னு கூப்பிட்டேன். நீங்க எஞ்சினியராச்சே... வந்தவங்க, ஒரு 'இண்டரஸ்டிங்' செய்தியை சொன்னாங்க. தர்மபுரி மாவட்டத்தில் டெங்கனிக் கோட்டை என்கிற இடத்துல வண்ணாரப் பெண்களை ஒன்று திரட்டி, டோக்ரா குரூப்பாக்கி, அதுதான்... டி.டபிள்யூ சி.ஆர்.ஏ. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் நல வளர்ச்சித் திட்டம்... இதன்படி அறுபது பெண்களை, நான்கு குழுவாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் தொழிற் பயிற்சி கொடுத்து, அவங்க கூட்டாய் தொழில் துவங்க - சுழல் நிதியாய் பதினையாயிரம் ரூபாய் வழங்குற திட்டம்... இதன்படி கழுதைகளில் அழுக்கு துணி எடுத்த பெண்களுக்கு வங்கிக் கடனுல ஒரு வேன் வாங்கி கொடுத்திருக்காங்களாம். இந்தப் பெண்கள், இப்போ பக்கத்து பேக்டரிக்கு போய், அங்கே யூனிபாரங்களையும் எடுத்துட்டு வந்து, துவைத்து, தேய்த்து திருப்பி வேனுலயே கொண்டு போய் கொடுக்காங்களாம். கழுதைகள், வேனாய் மாறிட்டு; இந்த மாதிரி திட்டங் கள், சில இடங்கள்லதான்... உருப்படியாய் நடக்குதாம்... ஆனாலும், இந்த கூட்டம்தான் என் கடைசி கூட்டம். அப்புறம் உங்க கூடத்தான். கூடத்தான் என்கிறதில ரெண்டு அர்த்தம் இருக்கிறது என் ஹீரோவுக்கு தெரியுமா?''

கலைவாணி, தனது உணர்வுகளை, அனுபவங்களோடு கலந்து, அவன் காதுகளில் கொட்டிக் கொண்டிருந்தாள். அவனை, அவள் முழுமையாய் பார்க்கவில்லை. ஆனால், அவன் பார்த்தான். பார்த்த படியே நோட்டமிட் டான். தனக்குள் சொன்னான். 'என்னுடைய ரியாக்ஷனை பார்க்க வந் திருக்கே... நல்லா பாரு... இனிமேல் நீ என்ன செய்யப்போறே என்கிறது கூட எனக்கு அநாவசியம்... இதுக்கு மேலே நீ என்னதான் செய்துடுவே... நானும் இன்டலிஜெட்தான்.'

கலைவாணி, அவனைச் சேர்த்துப்பிடித்து, தன்னைப் போல், தன் பக்கமாக ஒருக்களித்து சாய்த்தாள். அவன் நெற்றியில் முத்தமிட்டாள். பிறகு தன் கண்களை ஒரு கையால் மூடிக் கொண்டே பேசினாள்.

''போனவாரம், அந்த டாக்டரம்மாவும், நானும் உங்களை கண்ணால சீண்டிக்கிட்டே ரகசியமாய் பேசுனோம், பாருங்க... நீங்க கூட கண்ணடித்து கேட்டீங்களே. அது என்னன்னு தெரியுமா?''

மனோகர், பாறையிலிருந்து எழுந்து நின்ற, அவளைப் பார்த்தான். அவளும் இப்போது, கை கால்களை பாறையில் பரப்பியபடியே அவனை ஆசையோடு பார்த்தாள். பிறகு கண்களை மூடிக்கொண்டே விளக்கினாள்.

''நம் கல்யாணச்சமயத்திலே பார்த்து எனக்கு 'பீரியடு'... அதுதான் அந்த மூணு நாள்... நினைக்கவே சங்கடமா இருந்தது. டாக்டர் சந்திரா கிட்டே சொன்னேன். ஒரு வாரத்துக்கு நிறுத்தி வைக்கறதுக்கு மாத்திரை எழுதி கொடுத்தாங்க; வேற மாத்திரையாய் இருந்தால், அப்பா கிட்டயோ... அண்ணன் கிட்டயோ கொடுத்திடலாம். கோணச் சத்திரத்தில வாங்கிட்டு வருவாங்க. ஆனால் இதைக் கொடுக்க முடியுமா? நீங்கதான் வாங்கிட்டு வரணும்... மருந்து கடையிலே ஆள் இல்லாத சமயமா பார்த்து பக்குவமாய்... வாங்குங்க... இந்தாங்க!''

கலைவாணி, ஜாக்கெட்டுக்குள் கையிட்டு, இரண்டாய் மடிக்கப் பட்ட ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டாள். மூடிய கண்களைத் திறக்காமலே, முகம், முக்கோணமாய் நாணிக்கோண, காகிதம் பிடித்த கையை, இந்த இடத்தில்தான் அவன் நிற்பான் என அனுமானத்தோடு, பார்வை இழந்த பெண்போல், ஆடி ஆடி ஆகாயத்தில் துழாவினாள்.

இன்னும் கண் விழித்துப் பார்க்காத கலைவாணியை, மனோகர் கையைப் பிடித்துத் தூக்கினான். அப்படியே அவளை தன் மீது சாய்த்துக் கொண்டு ஆரத்தழுவினான். அவளை 'சிக்கென' பிடித்தபடி, அவள் தோள்வழியாய், தலையைத் தொங்கப்போட்டான். ஆறாய்ப் பெருகிய கண்ணீர், அவள் முதுகை, அவளுக்கு தெரியாமலே நனைத்தது. 'அய்யோ... என்ன இப்படி'' என்று அவள் சிணுங்கி, தோளில் கிடந்த அவன் தலையைத் தூக்கி நிமிர்த்தினாள். தெப்பமாக நனைந்த அவன் முகத்தை, வேர்வை துளிகளாய் அனுமானித்து, முந்தானையால் துடைத்து விட்டாள். கையில் உள்ள காகிதத்தை, அவன் பைக்குள் திணித்த படியே, அவன் மார்பில் சாய்ந்தாள். பிறகு அவனை நிமிர்ந்து பார்த்து, அவன் உதட்டில் முத்தமிட்டாள். முதல் தடவையான வாய் முத்தம்.

மனோகருக்கு அழுகை வந்தது. அந்தக் கிருமிகள் தன்னைப் பிடித்திருக்கலாம் என்ற பயமும் வந்தது. இந்தக் கள்ளம் கபடம் இல்லாத இவளை, ஒரு சூழ்ச்சிக்காரியாய் நினைத்தோமே என்ற சுய வெறுப்பு; இவளைவிட ஒரு நட்பு எதுவும் இல்லை... இவளிடமே 'அதை' சொல்லிவிடலாமா... நான், நானாய் இல்லை என்று சொல்லி விடலாமா...

விலகிக் கொள் என்று விலகலாமா... வேண்டாம்.... இது ஒருவேளை விஷப்பரீட்சை... 'அப்படியா' என்று அவள், வெறுப்பாய்க் கேட்டிடக் கூடாது. இதுவும் ஒரு தப்புக் கணக்காய் ஆகலாம். கணக்கு போட்டால்தானே, அந்தத் தப்பு வரும்? இவள் இப்படி மெய் சிலிர்த்து இருக்கட்டும். இந்தக் காட்சியே கடைசி காட்சியாக இருக்கட்டும்...

மனோகர், ஒரு முடிவுக்கு வந்தான். கல்யாணத்தை நிறுத்தியாக வேண்டும்... கௌரவமாக நிறுத்தியாக வேண்டும்... அப்பாவிடம் சொன்னால், வைத்திய செலவுக்கு நிறைய பணம் ஆகுமோ என்று கேட்கக் கூடியவர்.... அம்மாவிடம் சொன்னால் ஊருக்கே சொன்னது மாதிரி... இந்தக் கல்யாணத்தை ''பாம்பும் சாகாமல் பாம்படித்த கம்பும் நோகாமல்' நிறுத்தக் கூடியவர், தாய் மாமா மகனும், அக்காவின் கணவருமான மோகன் ராம்தான்... அக்காள் ஒரு மாதிரி... 'வாங்குவதில்' மட்டுமே குறியானவள்... ஆனால் இந்த அத்தான், இவனுக்கு தந்தை மாதிரி... 'பிளஸ்டு' முடித்ததும், திருட்டு அரிசி ஓசியில் கிடைக்கும் என்ற ஒரே காரணத்திற்காக, அப்பா தவசிமுத்து, இவனை ஒரு நியாயவிலைக் கடையில் சேரச் சொன்னபோது, இந்த அத்தான்தான், மாமனாரை ஒரு அதட்டு போட்டு, இவன் பொறியியல் கல்லூரியில் சேரக் காரணமானவர். சேர்த்தது மட்டுமல்லாமல், அவ்வப்போது வந்து கைநிறைய பணம் தந்தார். சொந்த அப்பன் பணத்தில், கொத்தனாராய்க் கூட ஆக முடியாது. அப்படிப்பட்ட அத்தான். ஆசாமி அடாவடிதான்.... சாமி பலமும், அரசியல் பலமும், சுயபலமும் உள்ளவர். 'வெட்டிட்டேன்னு வா' 'வெட்டிட்டான்னு வராதே' என்று வேண்டப்பட்டவர்கள் கிட்டே சொல்வார். தப்புத்தான்,... ஆனால் அதுவும் இந்தக் காலத்தில் தேவைப்படுதே...

மனோகர், கலைவாணியை அணைத்தபடியே, மோட்டார் பைக்கிற்கு முத்தமிட்ட சைக்கிள் பக்கமாய்க் கொண்டு போனான். 'கூட்டத்திற்கு வாங்கத்தான்' என்று கெஞ்சுனது போல் கொஞ்சியவளிடம், தலைக்கு மேல் இருக்கிற கல்யாண வேலைகளை எடுத்துரைத்தான். அதே சமயம் செயற்கை வைரம் செய்வது சிறப்பானது என்று சொன்னான். வைரப்பட்டதாய் நினைத்த தன் உடலும், ஒரு செயற்கை வைரம் தானே என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

நீண்ட நேர இடைவெளிக்குப் பிறகு, கலைவாணி சைக்கிளிலும், இவன் மோட்டார் சைக்கிளிலும், எதிரெதிர் திசைகளில் புறப்பட்டார்கள். 'இந்த சைக்கிளில் முன்னால் உட்காருறேன். ஒரு ரவுண்ட் அடிங்களே' என்று வெட்கத்தோடும், வெட்கத்தை விட்டும் கேட்டவளின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டே பிரிந்தான். இவளைப் பிரிந்து விட்டு இருக்க முடியுமா என்ற கேள்வி; பிரிவே அவளுக்குத் துணை என்ற பதில்.

௬

வெட்டாம்பட்டி முனையிலேயே, அத்தான் வயலுக்குப் போயிருப்பதை தெரிந்து கொண்டு, மனோகர், குளத்துக்கரை மேல் வண்டியை விட்டான். லாரி, டிராக்டர் போகிற கம்மாக்கரை... ஆனால் குளத்தின் கிழக்குப் பக்கத்து அடிவாரத்தை, அண்டை வயல் பேர்வழிகள் 'மண் கொன்று நிலமாக்கி' வருகிறார்கள். இதனால் குளமே ஒரு நாள், குடை சாயப் போகிற நிலைமை... மனோகர் நினைத்துக் கொண்டான். 'என்னைப் போல் என்னைப் போல்'..

மனோகர், பைக்கை, ஒரு களத்து மேட்டுக்குக் குடை பிடித்த ஆலமரத்தடிப் பக்கம் நிறுத்திவிட்டு, புல் மெத்தை சரிவு வழியாய் கீழே இறங்கினான். ஈரக்கசிவான வரப்புகளில் தாவினான். அந்த வயக்காடு முழுவதும், பச்சைத் தளிர்களாகவும், மஞ்சள் பயிர்களாகவும், வியாபித்து இருந்தது. வயல் மடந்தை, பச்சைப் படவை கட்டி, மஞ்சள் மேலாடையுடன் மல்லாந்து கிடப்பது போன்ற தோற்றம். தென்னை மரக்கரங்களை, கோணல்மாணலாய் ஆக்கி, பனைமரக் கால்களை தூக்கி வைத்து, பிரசவத்திற்கு, தன்னை தயார் படுத்திக் கொள்வது போன்ற தோரணை.

மோகன்ராம், வேட்டியை மடித்துக்கட்டி, டவுசர் பட்டை தெரியும்படி நின்றார். ஒரு கையில் குடையைத் தூக்கிப்பிடித்த வண்ணம், கீழே கதிர் அரிவாள்களோடு இயங்கிக் கொண்டிருந்த வேலையாட்கள் நிமிரும் போதெல்லாம் அதட்டினார். மேகம் கறுக்கிறது. அந்தக் கருப்பு முகம் வெள்ளை பல் காட்டி, எச்சில் துப்பினால் விதை நெல் கூட தேறாது. நிலத்தில் முகம் போட்ட நெல்மணிகள், அங்கேயே முளைத்து, குறைப்பிரசவமாகி விடும். எல்லோரும் புதிதாய் விதைக்கும் போது, இவர் அறுக்கிறார். ஊர்

ஊராய், கட்டைப் பஞ்சாயத்துக்களுக்குப் போனதால், காலுக்கும் வலி, நிலத்துக்கும் சுகப்பிரசவம் இல்லாத வலி.

கம்மாக்கரையில், கட்டை வண்டி வருகிறதா என்று எட்டிப் பார்த்த மோகன்ராம், மனோகர், கிணற்றடி பக்கம் வருவதைப் பார்த்துவிட்டு குரலிட்டார். அவனை அங்கேயே நிற்கும்படி சைகை செய்து விட்டு, இவர் நடந்தார். படித்த மைத்துனன் மேல், நெல் மணிகள் பட்டு, அவனை அரிக்கக் கூடாதே என்ற முன் யோசனை. சேறும் சகதியும் அவன் பேண்டை அப்பிவிடக் கூடாதே என்கிற அக்கறை. அதோடு அறுவடை பூமிக்குள் அவன் செருப்புக் காலோடு வரக்கூடாது என்கிற வயல் பக்தி.

மச்சானும், மாப்பிள்ளையும், கிணற்று சரல்மேட்டில் சந்தித்துக் கொண்டனர்.

''என்ன மாப்பிள்ளை... அப்புறமாய் ஆளைக்காணோம்? கல்யாண நோட்டீஸ் இன்னும் ரெடியாகல்லியா? இதுக்குத்தான் தென்காசியிலே கொடுக்கச் சொன்னேன். கோணச்சத்திரம் பயல், நீத்தார் நினைவுக்குத்தான் லாயக்கு...''

மோகன்ராம், அப்படி அபசகுனமாய் சொல்லிட்டோமே என்று வாயைக் கடித்தபோது, மனோகர் அவர் மார்பில் சாய்ந்தான். அவர் தோளில் ஒரு பக்கமாய் தலை போட்டு விம்மினான். வார்த்தைகள் வர்மமாய் தொண்டைக்குள் விக்கிக் கொள்ள, கண்ணீர், மேட்டுக்கு வந்ததுபோல் அவன் மூக்குக்குள் ஊடுருவ, அவன் மாங்கு மாங்கென்று அழுதான். அர்த்தப்படுத்த முடியாத ஒலிகள்... அப்போதுதான் ஓடியது போன்ற, மேல் மூச்சு... கீழ் மூச்சு...

அத்தான், ஆடிப் போனார். அவருக்கும் கண் கலங்கியது. ஆனாலும் சுதாரித்தார். மைத்துனனை நேராய் நிமிர்த்தினார். அவன் முகத்தை துண்டால் துடைத்து விட்டார். பிறகு, தனது தோளை தட்டிக் கொண்டே ஆறுதல் சொன்னார்.

'நாம அழ வைக்கணுமே தவிர... அழப்படாது... உயிருக்கு மேல என்னடா வந்துடும்? ஒன் உயிரைச் சொல்லலே. ஒன்னை பெருமை பிடி படாமல் பார்க்கிற என் உயிர சொன்னேன். என்ன நடந்தது?''

மனோகர், அத்தானையே பார்த்தான். நீள, அகல, உயரம் என்ற முப்பரிமாணமும் உருண்டு திரண்ட உருவம்... உடம்பின் அழுத்தத்தில், ஒரு காண்டாமிருகத்தின் அலட்சியம்... எல்லாருடைய தலைகளுக்கும் மேலே போன கழுத்து. நாற்பது வயதிலும், வாலிபம் போகாத முறுக்கு... பாளை அரிவாள் மீசை.

மனோகர், டாக்டர் சந்திரா தெரிவித்த நோயைச் சொன்னான்... அவர் புரியாமல் விழித்த போது, டாக்டர், அசோகன் எய்ட்ஸ் கிருமிகள் ஒருத்தரை என்ன பாடுபடுத்தும் என்பதை, அப்படி எதிர் காலத்தில் படப் போகிறவன் போலச் சொன்னான். தொடர்பற்ற வார்த்தைகள்,... முன்னாலும், பின்னாலும், தாவும் சம்பவக் கோர்வையற்ற சித்திரிப்புக் கள். இடையிடையே விம்மல்கள். அப்போதே உயிர்வாதை... அத்தான் மடியில் உயிர்விட வந்திருப்பது போன்ற தொய்வு... எப்படியோ சொல்லி முடித்தான். பேசிவிட்டு, அத்தானையே பார்த்தான். அத்தான்... தொங்கப் போன அவன் முகத்தை நிமிர்த்தினார். அவன் எதிர் பார்த்ததுபோல் கண் கலங்கி, வாயடைத்துப் போகாமல் 'பூ இவ்வளவுதானா?' என்று சொல்லிச் சிரித்தார். அது, அவருக்கே மிகை என்று தெரியும். ஆனாலும் 'அது' இருக்காது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை... மைத்துனனை, கமலைக் கல்லில் உட்கார வைத்து, இவரும் உட்கார்ந்து கொண்டு, டாக்டர்களைப் பற்றிய தனது பட்டறிவை எடுத்துரைத்தார்.

''எமன் கிட்டே போனாலும்... இந்த டாக்டர் கிட்ட மட்டும் போகப்படாது... மாப்பிள்ளை.. இப்படித்தான்... ஒக்கா தலைப் பிரசவத்துக்கு, ஒங்க வீட்டுக்கு வந்திருந்த சமயத்தில், எனக்கு ஒரே இருமல்,... துப்பினால் கட்டி கட்டியாய் ரத்தம். பயந்து போய் டவுன்லே டாக்டர் கிட்டே காட்டினேன்... எக்ஸ்ரே எடுத்தான், சளியை பார்த்தான், அப்புறம் சயரோக முன்னான். முப்பது ஊசி போட்டான். ஆனாலும் துளித் துளியாய் விழுந்த ரத்தம் கட்டி கட்டியாய் விழுந்துது. உடனே 'கடவுள நெனைச்சிக்கிட்டே' டி.பி. ஆஸ்பத்திரிக்கு போனான்; அங்கேயும் சயரோகம் முற்றிட்டுன்னான்... ஆனால் உடம்புல எந்த சேதாரமும் இல்ல... கடைசி முயற்சியாய், எங்க நாட்டு வைத்தியர் பேச்சிமுத்து மாமாக்கிட்டே கையக் காட்டினேன்... 'ஒனக்கு நிச்சயமாய் சயரோகம் கிடையாது. சத்தியமாய் கிடையாது. ஆனால் சூடு ஜாஸ்தி... சூட்டுலயும் ரத்தம் வரும்... என்ன சாப்பிடறேன்,னு கேட்டார். தினமும் பப்பாளிப் பழத்தை கிலோ கிலோவாய் சாப்பிட்டதைச் சொன்னேன். சமைச்சுசாப்பிட சோம்பல் பட்டு, தோட்டத்து பப்பாளியை இரண்டு வேளை சாப்பிடுறதை சொன்னேன்... அவர், என்கைய ஒரு உதறு உதறிட்டு 'கள்ள பிள்ள கழிக்கிறதுக்கு கொடுக்கிற... பப்பாளியையா சாப்பிட்டே... பயங்கரமான சூடுடான்னார்... பப்பாளியை நிறுத்தச் சொன்னார். ரத்தமும் நின்னுட்டு... மெத்தப் படிச்சவன் சுத்தப் பைத்தியம். அதுலயும் பொம்புள படிச்சு பூலோகமே கெட்டு வருது. இப்படியா சொல்லிட்டாள்னு சிரிக்கணும்... அழப்படாது.... இப்ப கூட எவனும் கத்தியோட குத்த வந்தாலும், என்னால வெறுங்கையோட எதிர்க்க முடியும். ஆனால் பப்பாளி பழத்தோட வந்தால் பயந்திடுவேன்''

மனோகர், அத்தானை வியந்து பார்த்தான், அவனிடம், எப்போதும் உண்மை பேசும் அத்தான், இப்போதும் உண்மை பேசுகிறார் என்பதில் ஆனந்தம்... அப்படிப்பட்ட நோய் தனக்கு இல்லை என்பதை அத்தான் சொல்லிக் கேட்டதில் ஒரு தெம்பு... கலைவாணியோடு கல்யாணம் நடக்கும் என்பதை நினைப்பதிலேயே ஒரு இனிமை... ஆனாலும் மனதை கல்லாக்கிக் கொண்டே கேட்டான்... சந்தேகத்தின் பலனை, கலைவாணிக்குக் கொடுக்கப் போனான்...

''ஆனாலும் கல்யாணத்தை நிறுத்தணும் அத்தான்''

''குளத்துக்கு கோவிச்சுட்டு... குண்டி கழுவாமல் போனானாம் ஒருத்தன் ஒனக்கு என்னமோ சொன்னியே அந்த இழவு பூச்சி... அது இருக்குமுன்னால், நீ சொல்லாமலே... நானே கல்யாணத்தை நிறுத்துவேன்... கலைவாணி... எனக்கு கூடப் பிறந்த சித்திமகள் என்கிறதை மறந்துட்டே.... நீ எனக்கு ஒரு கண்ணுன்னா... அவள் மறுகண்ணு... எதுக்கும் ஒனக்கு சந்தேகம் வந்தால்... அதோ அந்த வயலுல நிற்கார் பாரு... கூன் போட்ட கிழவன்.... அவர்தான் நாட்டு வைத்தியர்... பேச்சி முத்து... புறப்படு... நாடி பார்ப்போம்''

மனோகருக்கு, மனம் லேசானது, ஓடிப் போன மகிழ்ச்சி, அலைய லையாய் புதுவேகத்துடன், வட்டியும் முதலுமாய் திரும்பி வந்தது... இந்த அத்தான், ஒரு வேளை, வேறு எந்தப் பெண்ணாய் இருந்தாலும் கவலைப்பட மாட்டார்னு சொல்லலாம்... சொந்த சித்தி மகளை, கிணற்றில் தள்ளுவாரா... எனக்கு அது கிடையாது... இந்த சந்திரா.... நல்லவள் ஆனால் கிராக்கு...

மோகன்ராம், மனோகரின் கையைப் பிடித்துக் கொண்டு, அவனோடு வயல்விட்டு வயல் தாண்டி, நாட்டு வைத்தியர் பக்கமாய் போனார்... அவர் வரப்போரம் உள்ள, யானை நெருஞ்சி இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தார். ஏற்கெனவே உள்ள கூனோடு அவர் குனிந்ததால், செம்மறியாடு, புல்மேய்வது போல் இருந்தது...

''என்ன மாமா இந்தப் பக்கம்...''

''இந்த யானை நெருஞ்சி இலய... தண்ணீர்ல போட்டுட்டு... ஒரு மணி நேரம் ஊறவச்சி குடித்தால் தாது விருத்தியாகும்... சூடு தணியும்... கண் எரிச்சல் போகும்... எந்தப் பயலுக்கு இது தெரியுது...''

''மாமா, இவனுக்கும் இது தேவைப்படும்... கல்யாண மாப்பிள்ளை பாரும்... ஏதாவது லேகியமாய்...''

''நாடி பார்க்காமல்... நான் மருந்து... லேகியம் கொடுக்கிறது இல்ல''

''சரி நாடி பாருங்க...''

''என்னடா இது... சுக்கு கண்ட இடத்தில பிள்ளை பெறுறது. சுப்பிரமணிசுவாமி கோவிலை பார்த்தா மட்டும் சாமி கும்புடுறவன் மாதிரி, நேரம் காலம் இல்லையா?''

''இப்படிச் சொல்லிச் சொல்லியே எம்.பி.பி.எஸ். காரங்களை செழிக்க வச்சிட்டீங்க மாமா... நாடி பாருங்க மாமா''

''இவனுக்கா... கூடாதுடா... இவன் அப்பன்' அந்த இரப்பாளி தவசிமுத்து இங்கே வந்து... இவனுக்கும், சுப்பையா மகளுக்கும் ஜாதகப் பொருத்தம் பார்க்க வந்தான். பார்த்து முடிச்சதும் ரெண்டு ரூபாய் தந்தான் இரப்பாளிப்பயல். அங்கேயே கிழிச்சுப்போட்டேன்.''

''என்கிட்ட சொல்ல வேண்டியதுதானே''

''நீ அப்பவே... வெள்ளையன்பட்டிக்கு அரிவாள தூக்கிட்டுப் போவியே''

''ஏய் மாப்பிள்ளை' மாமா கிட்ட கைய நீட்டு... அப்படியே வேற எதுவும் இருக்குதான்னும் பாரும் மாமா''

பேச்சிமுத்து... மனோகரின் கை கால்களை உதறச் சொன்னார். இடுப்பிலோ, தரையிலோ கை ஊன்றாமல் இருக்கச் சொன்னார். பிறகு நாடி பார்த்தார். ஒரு நிமிடத்தில் பிடித்த கையை உதறிப் போட்டார். மனோகரும், மோகன்ராமும் பயந்து விட்டார்கள். பேச்சிமுத்து தாத்தா சிரித்தார்.

''நல்லா இருக்கிறவனுக்கு நாடிப் பார்க்கப்படாதடா... வாத, பித்த சிலேத்தம் மூணு நாடியுமே நல்லா பேசுது... ஒரு நோய் நொடி இல்ல... பித்தம் ஜாஸ்தி''

''பீர் குடிச்சால் சரியாயிடும்.. அப்புறம், தாது புஷ்டிக்கு' லேகியம்''

'இப்பவே... இவனை தாக்குப் பிடிக்கிறது அவளுக்கு கஷ்டம்...''

''அப்புறம் கல்யாண பொருத்தம்... எப்படி மாமா இருக்குது''

''ரெண்டு பேருக்குமே... களஸ்திர ஸ்தானம் நல்லாயிருக்குதுடா. எண்பது வயசு வரைக்கும் தீர்க்காயுசு. லூப்போ, கீப்போ போட்டாலும் ஐந்து பிள்ளைங்க பிறக்கும். நான் சொன்னது மாதிரியே... ராமக்கா பிழைச்சிட்டாள் பார்த்தியா... டாக்டர் பயலுவ, அவள சவக்கிடங்குக்கு தூக்கிட்டுப் போனாங்க.''

'ஏன் மாப்பிள்ளை வாயைப் பிளக்கிற? எங்க மாமா சொன்னால்

சொன்னதுதான். ஒரு அங்குலம், அந்த பக்கமோ, இந்தப் பக்கமோ நகராது... வாறோம் மாமா...''

மனோகர், பேச்சிமுத்து தாத்தாவை பிரமிப்பாய் பார்த்தான். பார்க்கப் பார்க்கப் பரவசம்... அசாத்தியமான பேரமைதி... அவர் சொன்னதையே திருப்பிச் சொல்ல வேண்டும் என்ற ஆசை... சட்டைப்பையில் இருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து, அவரிடம், குருதட்சணையாய் நீட்டினான். அவருக்கு வந்ததே கோபம்...

''ஏன்டா... மருமகனே.. ஒன் மச்சினன் என்னை பிச்சைக்காரன்னு நினைச்சானா? எனக்கும் வயல் வரப்பு இருக்குதுன்னு சொல்லுடா. இந்தாடா ஒன் நோட்டு''

''சின்னப்பயல்... தெரியாம செய்துட்டான்''

மச்சானும், மைத்துனனும் மீண்டும் வயல் பக்கம் வந்தார்கள். மனோகர் அத்தானிடம் ஒரு சந்தேகம் கேட்டான்.

''எங்கப்பா... ரெண்டு ரூபாய் கொடுத்தார்னு இளக்காரமாய் சொன்னாரு. இப்போ 100 ரூபாயை தூக்கி வீசுராரு.''

''இதுக்குப் பேர்தான் சித்தன் போக்கு... சிவன் போக்கு என்கிறது. ஆனால் கிழவன் எது சொன்னாலும், அது பலிக்கும். இனிமேல் நீ அது இருக்கு இது இருக்குன்னு புலம்பப்படாது. ''

''எத்தான்... கல்யாணத்தை நான் நிறுத்தாட்டால், அந்த சந்திரா நிறுத்துவாளாம். என்னை மிரட்டுறாள்''

நீண்ட நாளாய் எதிரி கிடைக்காமல் போரடித்துப் போன மோகன்ராம், வெட்டரிவாள் மீசை குலுங்க நின்றார். தோள் துடிக்க சூளுரைத்தார்.

''யார் வீட்டு கல்யாணத்தை யார் நிறுத்தறது? அவளுக்கு கெட்ட காலம்... இல்லாட்டால் இப்படிப் பேசமாட்டாள். சரி நீ பாட்டுக்கு ஒன் வேலைய பாரு. நான் அவளை பார்த்துக்கறேன். கவலைப்படாதே... நான் பிளான் போட்டுதான் சொல்றேன். கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டியது என் பொறுப்பு. கல்யாணத்துக்கு முன்னாடி எலுமிச்ச பழத்தை அறுத்து தலையைச் சுத்துவோமே அந்தப்பழம் மாதிரி அந்த பொம்புள டாக்டர் ஆக விரும்புனால்... ஆகிட்டுப் போறாள் ஒனக்கென்ன''

7

அது வெறும் ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல. இந்த 'ஆரம்பம்' என்ற வார்த்தைக்கு முன்னால், 'மேம்படுத்தப்பட்ட' என்ற வார்த்தையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மற்ற சுகாதார நிலையங்களைப் போல் அல்லாமல், இதில் ஒரு பிரசவ வார்டும் பொதுப்படையான வார்டும் உண்டு. மொத்தம் இருபது படுக்கைகள் இருக்கலாம். 'கூடுதலான ஊழியர்களையும், இரண்டு டாக்டர்களுக்குப் பதிலாக, மூன்று டாக்டர்களையும் கொண்ட மையம்... வெளிநாட்டு உதவியோடு 'மேம்படுத்தப்பட்ட' ஒரு சில மையங்களில் இந்தக் கோணச் சத்திர மையமும் ஒன்று... ஆனால் இதன் பெயர்ப் பலகையைப் பார்த்தால், அந்த நிலையத்திலேயே சுகாதாரம் இனிமேல் தான் ஆரம்பமாக வேண்டும் என்ற சந்தேகம் வரலாம்... வெளியே உளுத்துப் போன பலகையில், புழுத்துப் போன எழுத்துக்கள்... வண்டிச்சக்கர மேல்பட்டை மாதிரி வளைத்து வைக்கப்பட்ட இந்தப் பெயர் பலகைக்கு கீழே உள்ள வாசலில், நடந்தால் மைதானம் மாதிரியான வளாகம், பல கட்டிடச் சிதறல்கள்... நடுப்பகுதியில் உள்ள ஒரு பெரிய கட்டிடத்திற்கு முன்னால், ஏழெட்டுப் பெண்கள். இவர்களின் மத்தியில் ஒரு கதாநாயகி மாதிரி அழகான பெண்... சுற்றி நின்ற எக்ஸ்டிரா பெண்கள் ஒவ்வொருத்தியின் கையிலும் ஒரு ரிஜிஸ்டர்...

இவர்களைத் தாண்டி, அந்தக் கட்டிடத்தில் படியேறினால், அதன் முன் பக்கத்தில் ஒரு சுமாரான அறை... அதில் அதிகாரத் தோரணையில் உள்ள ஒரு வெட வெடத்தான். சுற்றி நின்ற நான்கைந்து பிள்ளைத்தாய்ச்சிகளையும், மூன்று கிழவர்களையும், இரண்டு மூதாட்டிகளையும், மற்ற நோயாளிக் கூட்டத்தில் இருந்து ஆட்டு மந்தை போல் தனிப்படுத்தி, அவர்களுக்கு, எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட அரசு முத்திரையிட்ட செவ்வக்

காகிதங்களைக் கொடுக்காமல், விரட்டிக் கொண்டிருக்கிறான்.

“ஒங்க சென்டர்... இங்கே கிடையாது. துட்டாம்பட்டியில் இருக்குதே அது, அங்கே போங்க”

“எங்களுக்கு என்ன இழவு தெரியும்... ஏதோ வந்துட்டோம்”

“வந்தால் பார்த்துடணுமா... போப்போ...”

“அதெப்படி... இங்கே இருந்து மூணு கிலோ மீட்டர் தூரத்தில இருக்கிற எங்களுக்கு.... இது கிடையாதுன்னா... பதினைஞ்சி கிலோ மீட்டர்ல இருக்கிற தட்டாம்பட்டி ஆஸ்பத்திரி எப்படி பொருத்தம்...?”

“இந்த சட்டமெல்லாம் வேண்டாம். செங்கோட்டை கேரளாவுக்கு பக்கத்தில இருக்குது. அதனால புளியரை சென்டருக்கு போக முடியுமா? கல்கத்தா, பங்களாதேசத்துக்கு பக்கத்தில் இருக்குது. அதுக்காக கல்கத்தாக்காரன், பங்களாதேச ஆஸ்பத்திரிக்கு போக முடியுமா...? அப்படித்தான் இதுவும். இடத்தை காலி பண்ணுங்க. இன்றைக்கு நோய் தடுப்புநாள்... ஒங்க கிட்ட பதில் சொல்ல நேரமில்லை”

தனிப்படுத்தப்பட்ட அந்த மனிதக் கூட்டம், என்ன செய்யலாம் என்பது போல் யோசித்தது. எதாவது சத்தம் போட்டால், பக்கத்திலேயே ஒரு போலீஸ் ஸ்டேஷன்.... அங்கிருந்து வந்த சிவப்புத் தொப்பிகள், இங்குள்ள இவனிடம் ஏதோ பேசிவிட்டு உள்ளே போனதை, இவர்களே பார்த்தவர்கள்... துட்டாம்பட்டி மையத்துக்கும் போய்ப் பார்த்தவர்கள். அங்கேயும் இதே மாதிரி ஒரு லொள் லொள்... கோணச்சத்திரம் கோணச்சத்திரம் என்று குலைத்தது.

உடம்பு முழுவதையும் கும்பிடு போடுவது போல் குழைந்து நின்ற இந்தக் கூட்டத்தைத் தண்டிப்போனால், ஒரு இடது பக்கம் நீண்ட நெடிய கூடம்; இரு பக்கமும், ஒன்றுக்குப் பின் ஒன்றாக பெஞ்சுகள்; இதனால் நடுப்பக்கம்... தானாகவே வழியானது. பெஞ்சுகளில் சீக்காளிகள்... தாய்க்காரிகள்... பிள்ளைத்தாச்சிகள், இவர்கள் எட்டிப் பார்க்கும் உள்ளறை விசாலமானது... மூன்று மேசைகள்; அவற்றிற்கு பின்னாலும் மூன்று நாற்காலிகள்... முன்னாள் முக்காலிகள்... நாற்காலிகளில் நடுவில் உள்ளதில் டாக்டர் முஸ்தபா.... இடது பக்கம் டாக்டர் சந்திரா... மூன்றாவது நாற்காலி காலி... கைனக்காலஜிஸ்ட் எனப்படும் பிரசவ டாக்டர், வேலையில் சேர்ந்த ஒரு மாதத்திற்குள், ‘மெட்டர்னிடி’ விடுமுறைக்கு போய்விட்டதாகக் கேள்வி. ஆங்காங்கே சுவர்களில் அரசுப் போஸ்டர்கள்; தடுப்பு ஊசி போட்டீங்களா... தட்டம்மை வராமல் பார்த்தீங்களா... என்பது மாதிரியான வண்ணக்

கலவைகள்.

முஸ்தபாவும், சந்திராவும், ஒருவருக்கு ஒருவர், இன்று வணக்கம் கூட போட்டுக் கொள்ளவில்லை. நேற்று டாக்டர் சந்திரா வாக்களித்தது போல் பத்து மணிக்கு வராமல் பதினொரு மணிக்கு வந்ததால், முஸ்தபாவின் நெல்லை நிகழ்ச்சி தாமதப்பட்டது. இவ்வளவுக்கும் ஒரு 'ஸாரி' கூட அவள் போடவில்லை. ஒரு இன்சார்ஜ் டாக்டரிடம் நடந்து கொள்ளும் முறையா இது? அதே சமயம் டாக்டர் சந்திராவுக்கு முஸ்தபாவின் கடுகடுப்பு பெரிதாகத் தெரியவில்லை. அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மனம் முழுதும் கலைவாணியும் மனோகருமே. மனோகர் பேசிய தோரணையைப் பார்த்தால், கலைவாணி கழுத்தில் தாலி கட்டி விடுவது நிச்சயம். ஆனாலும் இந்தக் கல்யாணத்தை தடுத்தாக வேண்டும். மூளை வைத்திருக்கும் இடத்தில், மூர்க்கத்தனத்தை வைத்திருக்கும் இந்த முஸ்தபாவிடம் பேசிப் பலன் இல்லை. வினையே இவர்தான். நேற்று மட்டும், இவர், தனக்குரிய ஒய்வு நாளான 'ஆப் டேயில்' வந்துதான் ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தாவிட்டால், மனோகரிடம், விஷயத்தை ஆற அமரச் சொல்லி, அவரை சமாதானப்படுத்தி இருக்கலாம். ஆனால் இங்கே வர வேண்டிய அவசரத்தில், மனோகரிடம், கடுமையாய் பேச வேண்டியது ஏற்பட்டது. இந்த முஸ்தபா, தன்னுடைய வேலையை ஒழுங்காய்ப் பார்த்தால், நான் என் சமுகப் பணியை ஒழுங்காய் பார்த்திருக்க முடியும். பல சில்லறைத் தொல்லைகள் - சொன்னால் சிரிக்கக் கூடிய சின்னச் சின்ன ஒழுங்கீனங்கள், பிறத்தியார் கண்ணுக்குத் தெரியாத கிருமிகளாய் ஆகின்றன. அதுவும் விஷக் கிருமிகளாய் ஆகி விடுகின்றன. இதனால்தான், ஒரு பூவைப் பறித்தாலும், அது நட்சத்திர மண்டலத்தில் எதிரொலிக்கும் என்கிறார்களோ - பல்வேறு பிரச்சினைகளின், தலைமறைவான வேர்கள் அறியப்படாது போவதால் தான், பிரச்சினைகளின் அறிகுறிகளை நீக்கப் பார்க்கிறோமே தவிர, அந்த நிசங்களை அல்ல.

டாக்டர். சந்திராவின் சிந்தனை சிறகடித்து பறந்து கொண்டிருந்தது...

டாக்டர் சந்திரா, முஸ்தபாவை உஷ்ணமாகப் பார்த்தாள். அவரோ எதிரே கைக்குழந்தைகளோடு நின்றவர்களை எரிச்சலாய்ப் பார்த்தார். முதலாவதாய் நின்ற பெண்ணிடம் காகிதத்தை வாங்கினார், அப்போதுதான் வந்த அட்டெண்டர் பையனிடம் ஆணையிட்டார்.

''ஹெல்த் விசிட்டரை வரச் சொல்லப்பா!''

அந்த விசிட்டர் வருவது வரைக்கும், வேறு எந்த நோயாளியையும் பார்க்கப் போவதில்லை என்பதுபோல், டாக்டர் முஸ்தபா, காலி நாற்காலி பக்கம் திரும்பினார். சந்திரா, தன் பக்கத்து முக்காலியில் ஒரு பெரியவரை

உட்காரச் சொல்லி, ஸ்டெதாஸ்கோப்பை எடுத்தாள். இதற்குள், சுகாதாரப் பார்வையாளர், சர்வ சாதாரணமாய் வந்தாள். வெளியே கதாநாயகித் தோரணையில் நின்றாளே அவள்தான். முஸ்தபா, சந்திரா மீதிருந்த கோபத்தை விசிட்டரிடம் காட்டினார். ஆனால் அவள் முகத்தைப் பார்க்க பார்க்க கோபம், தாபமானது.

''இப்படி மெள்ளமாய் வந்தால் எப்படி சுலேகா? இதோ இந்த ரெண்டு உமனும் வேட்டையன் பட்டிக்காரங்க... அந்த ஏரியா ஹெல்த் ஒர்க்கர் யாரு''

''அதுவா... அது...''

''இப்படி யோசித்து சொல்ற அளவுக்கு வேலை பார்க்கிறே? உருப்படும்...''

''ஒவ்வொருத்தியும்... மாறி மாறி... போயிட்டு இருக்காங்க... சார். வந்து... வந்து... பேர் சட்டுன்னு வர மாட்டங்கு... குதிரை மாதிரி குதித்து குதித்து நடப்பாள்...!'

''உஷாவா... வேலையில் கழுதையா!''

''கழுதை நல்லா... வேலை பார்க்கும் சார்!''

''தமாஷான விஷயமில்லம்மா! இந்த உஷாவோட ஏரியா கேஸெல்லாம் இங்கே எதுக்கு வரணும்?''

ஒரு நோயாளியின் வாய்க்குள் விளக்கடித்துப் பார்த்த டாக்டர் சந்திரா, சாடினாள்.

''ஒவ்வொரு கிராமத்திலேயும் சம்பந்தப்பட்ட ஹெல்த் ஒர்க்கர் வீடு வீடாய்ப் போய்... குழந்தை பிறப்பை கண்டு பிடித்து, மூன்று நாளைக்குள் ஒரு டோஸ் சொட்டு மருந்து கொடுத்து... அடுத்த மாதமும் அதையே கொடுத்து... ஒன்றரை மாதத்தில் டிபிடி போட்டால்... இந்த அப்பாவிங்க எதுக்காக இங்கே வருவாங்க? ஏம்மா ஒங்களத்தான். ஒங்க குழந்தைக்கு மூணு மாதத்தில மூணு தடவை சொட்டு மருந்து கொடுக்கணும் கொடுத்தாங்களா''

''இல்லியே... யாரு கொடுக்கணும்?''

சுகாதாரப் பார்வையாளர், 'நீ என்ன கேட்கிறது' என்பது மாதிரி, சந்திராவைப் பார்த்துவிட்டு, முஸ்தபாவை பொருட்பட பார்த்த போது, அவர் தனது கடமையை ஒரு உரிமைபோல் காட்டினார்.

''நான் இன்சார்ஜ் டாக்டர்... நான் பேசிக்கிறேன்... சுலேகா! இது சீரியசான விஷயம்...''

''இப்போதான் சார் ஞாபகம் வருது... போனவாரம் உஷாக்கிட்டே கேட்டேன்... அந்த ஊரு என்னென்னு சொன்னீங்க...?''

''வேட்டையன்பட்டி...''

''வேட்டையன் பட்டிக்குப் போனாளாம்... எல்லா வீடும் டிஎல்லாம், மறுநாள் போனாளாம். அப்பவும் டிஎல்லாம்...''

'டிஎல்' என்ற மந்திரச் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர் போல் டாக்டர் முஸ்தபா, எதிரில் நின்ற பெண்களை விரட்டினார்.

''டி.எல். அதுதான் மருந்து கொடுக்கிறவள் வந்த போது... ஒங்க வீட்டு டோர் குளோசாம்... அதான் வீட்டுக்கதவு பூட்டிக்கிடந்ததாம். ஊருக்குப் போங்க. ஹெல்த் ஒர்க்கர் வருவாள்!''

அந்த முன்னாள் வாய் வயிற்றுக்காரிகளில் ஒருத்தி முறையிட்டாள்.

''நாங்கல்லாம் கூலிக்காரிங்க சாமி... எப்போ வருவாங்கன்னு தெரிஞ்சால் காத்திருப்போம்''

''எனக்கு என்ன ஜோசியமா தெரியும்? போங்க வருவாங்க''

அந்தப் பெண்கள், பிள்ளையும் கையுமாய் தடுமாறித் தவித்துக் கொண்டிருந்த போது, டாக்டர் சந்திராவால் தாள முடியவில்லை....

''கொஞ்சம் நேரம் நேரம் உக்காருங்க.... நான் செக்கப் செய்யறேன்''

''அந்தப் பெண்கள் குழந்தைகளோடு சேர்ந்து, அவளைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். டாக்டர் முஸ்தபாவும், சந்திராவை வாங்கு வாங்கு என்று வாங்குவதற்காக, ஸ்டெதாஸ்கோப்பை தூக்கி, வீசிப் போட்ட போது-

யானை, குட்டியை உரசியபடி நடப்பது போல், மோகன்ராம், மனோகரின் கழுத்தில் தோள் உரச வந்து கொண்டிருந்தார். டாக்டர் முஸ்தபா எழுந்து விட்டார். சுலேகா, ஒரு கும்பிடு போட்டுச் சிரித்தாள்.

கரை போட்ட எட்டு முழவேட்டி, அடிவாரத்தில் இரண்டாய்ப் பிரியும்படி சொந்த வீட்டுக்குள் வருவது போல் வந்தவருக்கு, அட்டெண்டர் அவசர அவசரமாய் ஒரு நாற்காலியை இழுத்துக் கொண்டு வந்தார். மோகன்ராம், உட்காருவது வரைக்கும் முஸ்தபா உட்காரவில்லை. சந்திரா... மனோகரை அதிர்ந்து பார்த்தாள். முஸ்தபா அவசரத்தோடு கேட்டார்.

''யாருக்கும் எதுவா? சொல்லுங்க... ஜீப் ரெடியா இருக்குது...''

'இந்த டாக்டர் வேலையே இப்படித்தானோ... எப்போ பார்த்தாலும் ஆபத்து... இல்லன்னா... விபத்து... இது பற்றிதான் ஞாபகம் வரும் போலிருக்கு. சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுக்கிறது மாதிரி; நான் சுபகாரியமாய்த்தான் வந்தேன்... இவன் என் மச்சினன்... மெட்ராஸ் என்ஜினியர்... இவனுக்கும் என் சித்தி மகளுக்கும் கல்யாணம்...!'

'இவரையும்... கலைவாணியையும் நல்லாவே தெரியும்...'

மோகன்ராம், நீட்டிய அழைப்பிதழை, டாக்டர் முஸ்தபா வாங்கிக் கொண்டார். டாக்டர் சந்திராவுக்கும் ஒன்று கொடுக்கும்படி சைகை செய்தார். உடனே மோகன்ராம் சத்தம் போட்டே பேசினார்.

''இவர்களுக்கு இல்லாத நோட்டிஸா? பேரு சந்திராதானே?... அம்மா கூட, வீட்டில் தனியா இருக்கிறவங்கதானே... அளவுக்கு மேலேயே கேள்விப்பட்டிருக்கேன்.... மனோகர்! டாக்டரம்மாவுக்கு ஒன் கையாலயே கொடு... நீங்களும் கண்டிப்பா வந்துடுங்கம்மா... கல்யாணம் நல்லபடியா முடிந்தால், சுடலைமாடனுக்கு கிடா வெட்டுறதாய் நேர்த்திக் கடன். அதனால... நீங்க கல்யாணம் முடிஞ்சதும் வந்துடப்படாது. மறுநாள் பிரியாணி சாப்பிட்டுத்தான் வரணும், சுடலைமாடன் எங்க குலதெய்வம். சக்தி உள்ள மாடன். ஆனானப்பட்ட மலையாள மந்திரவாதி மகளை ராத்திரியோடு ராத்திரியாய் கற்பழிச்சவன்... நிறைமாத கர்ப்பிணியை 'ஊட்டு' வாங்குனவன்... ஏய் மனோகர்! டாக்டரம்மா கிட்ட இன்னுமா கொடுக்கல?''

மனோகர், சந்திராவிடம், ஒரு முறைப்போடு, அந்த அழைப்பிதழை நீட்டினான். அப்போதும் அவள், அவன் முகத்தைப் பார்த்து, வேண்டாம் என்பதுபோல் தலையாட்டிக் காட்டிவிட்டு, வாங்கிக் கொண்டாள். மோகன்ராம், 'டாக்டர்... கொஞ்சம் வெளிய வாறீங்களா!' என்று முஸ்தபாவை கேட்க, அவர் 'பார்த்தியா என் செல்வாக்கை' என்பது மாதிரி டாக்டர் சந்திராவைப் பார்த்துக் கொண்டே வெளியேறினார்.

முன்னால் போனவர்களின் முதுகுகளையே பார்த்த சந்திரா, கையில் திணிக்கப்பட்ட அந்த கவரைப் பார்த்தாள். அதை அங்குமிங்குமாய் கோபத்தோடு கிழித்துவிட்டு, அழைப்பிதழைப் பார்த்தாள். பொன் முலாம் பூசப்பட்டது போன்ற இரட்டைக் கார்டுகள். முதல் பக்கம், இரண்டு கரங்கள் ஒன்றை ஒன்று கோர்த்திருந்தன. இடம், பொருள், தேதி வகையறாக்கள்... இரண்டாவது பக்கம் தமிழ் அழைப்பு... மூன்றாவது பக்கம், தவசிமுத்து மிஸ்டராகவும், அவர் மனைவி மிஸ்ஸஸ் சீதாலட்சுமி தவசிமுத்துவாகவும் மாறிய ஆங்கில அழைப்பிதழ்... நான்காவது பக்கம், நல்வரவை விரும்பும் நாற்பதுக்கும் அதிகமான பெயர்கள்; இந்த மோகன்ராம், அவர் மனைவி

சகுந்தலா பெயர்கள், இரண்டாவது பக்கத்தில், இரண்டு கோடுகளுக்கு இடையே பிரசுரிக்கப்பட்டு இருந்தன...

சந்திராவுக்கு, கண்ணீர் வந்தது. முக்காலியில் உட்காரப் போன ஒரு நோயாளிப் பெண் கூட, உட்காராமல் மருண்டு நின்றாள். அவள், அப்படி மருள்வது தெரியாமல், சந்திரா மருண்டு நின்றாள். கண் முன்னால், ஒரு அப்பாவிப் பெண் சிதையப் போகிறாள். சிதைத் தீயான அக்னியை வலம் வரப் போகிறாள். அவளை எந்தக் கரம் பற்றிக் கொள்ளப் போகிறதோ... அது ஒரு ஹெச்.ஐ.வி. கரம்... கரம்... கரத்தைப் பிடிக்கவில்லை. எய்ட்ஸ் கிருமிகள், ஒரு நல்ல கரத்தைக் கௌவுகின்றன... கெட்டிமேளத்தோடு...

டாக்டர் சந்திரா, தன் முன்னால் கோபமாய் வந்து நிற்கும் டாக்டர் முஸ்தபாவைப் பார்த்துப் பயந்து போனாள். சில்லரைச் சண்டைகள் வந்ததுண்டு. ஆனாலும் இப்படி பல்லைக்கடித்து, அவரைப் பார்த்ததில்லை.

''ஒங்க கிட்டே தனியா பேசணும்... இப்பவே பேசணும்... அந்த பக்கம் வாங்க!''

இருவரும், பின் பக்கமாய் உள்ள அறைக்குள் போனார்கள். டாக்டர் முஸ்தபா, அறையை தாளிடாமலே கதவைச் சாத்தினார்... அந்த ஆவேசத்திலும், யாரும் தப்பாக நினைக்கப்படாது என்று நினைத்தவர் போல், ஜன்னல்களை திறந்து வைத்தார். சந்திராவின் முகத்துக்கு முன்னால் விரலாட விட்டு, எதிரி வக்கீல் போல் கேட்டார்.

''ஒங்க மனசுலே என்ன நெனைப்பு... மதர் தெரேஸான்னா... இல்ல டாக்டர் முத்துலட்சுமி ரெட்டின்னா...?''

''என் நெனப்ப பற்றி யார் கவலைப்பட்டாங்க? உங்க நெனைப்பு என்ன டாக்டர்?''

''செய்யறதையும், செய்துட்டு குத்தல் பேச்சா? மனோகர் கிட்டயே அவருக்கு ஹெச்.ஐ.வி. இருக்குறதா... யாரைக் கேட்டு சொன்னீங்க?''

''என் மனசாட்சிய!''

''மோகன்ராம்... ஒங்களை ராத்திரியோட ராத்திரியாய் தூக்கிட்டுப் போகப் போறாராம். அப்படித்தான் அவர் மனசாட்சி சொல்லுதாம்''

'போலீஸ் எதுக்கு இருக்குது...?'

'அதுக்கும் மனசாட்சி இருக்குமுன்னு நீங்க நம்புறதே தப்பு... ஏன்னா அவங்க கைதிகளோட வந்து சர்பிகேட் கேட்கும் போது, நீங்க

உண்மையைத்தான் எழுதுவேன்னு வீம்பு பிடித்தீங்க. குடிக்காதவனை குடிபோதையில் இருந்ததாய் சர்டிபிகேட் கொடுக்க மாட்டேன்னு கத்துவீங்க. எத்தனை போலீஸ்காரங்களை மூஞ்சில அடிச்சது மாதிரி திருப்பி அனுப்பி இருக்கீங்க? இப்போது அதுதான் அவங்களுக்கு மனசாட்சி. மோகன்ராமிடம்... இன்ன இடத்துக்கு தூக்கிட்டுப் போங்கன்னு இடம் பார்த்துக் கூட கொடுப்பாங்க''

டாக்டர் சந்திரா, அரண்டு போனாள். அர்த்த ராத்திரி கற்பழிப்புக் காட்சியை நினைத்துப் பார்க்கவே பயமாய் இருந்தது. கண்களை மூடிக் கொண்டாள். உப்பு நீர்தான் கொட்டியது. முஸ்தபா இன்னும் எகிறினார்.

''மாவட்ட அலுவலகமே... இன்னும் முறைப்படி ரிப்போர்ட் அனுப்பல. நமக்கு அனுப்ப வேண்டியதும் இல்ல. ஒரு நோயாளி கேட்காமல் எய்ட்ஸ் கிருமி பற்றி நாம் மூச்சு விடப்படாது... என்பது வாய்மொழி உத்தரவு. ஹெச்.ஐ.வி.க்கு ஒருத்தரை டெஸ்ட் செய்யுறதுக்கு முன்னாலயே, அவரைக் கலந்து ஆலோசிக்கணும் என்கிறது பொதுவிதி. எல்லாவற்றிற்கும் மேலே எய்ட்ஸ் கிருமி ஊடுருவி இருக்கிறது... உறுதிப்படுத்தப்படும் முன்னால், அதுபற்றி பேசப்படாது என்பது மெடிக்கல் தர்மம். இப்படி இருக்கையில் நீங்க எதுக்காக அதிகப் பிரசங்கித்தனமாய்...''

டாக்டர் சந்திரா, அழப் போனாள். வார்த்தைகளை மென்று மென்று விழுங்கி விழுங்கிப் பேசினாள்.

''சொல்லி இருக்க மாட்டேன்தான். சொல்லி இருக்கக் கூடாதுதான். ஆனால் மனோகருக்கு கல்யாணம் நடக்கப் போறதால...''

''அவனுக்கு கல்யாணம் நடக்குதா... இல்ல கருமாந்திரம் நடக்குதா என்கிறது நமக்கு அப்பால் பட்ட விஷயம். நாம்தான் புத்திசாலி, மேல் அதிகாரிங்க முட்டாளுங்கன்னு முட்டாள்தனமா... நினைக்காதீங்க டாக்டர். இப்படித்தான், ஒங்களை மாதிரி ஒரு அவசரக் குடுக்கை டாக்டர், ஆர்வக் கோளாறினால் ஒரு இளைஞன் கிட்டே, ஹெச்.ஐ.வி. இருக்குறதாய் சொல்லி, இரண்டாவது டெஸ்டுக்கும் ரத்தம் எடுத்திருக்கு... அந்த டெஸ்டுலே, அந்த இளைஞனுக்கு ஹெச்.ஐ.வி. இல்லன்னு தெரியவந்தது. ஆனால், அதுக்குள்ளே அந்த இளைஞன் தற்கொலை செய்துவிட்டான். அவசர குடுக்கை டாக்டர் சஸ்பென்டாயிட்டார். ஏற்கெனவே நம்ம 'பாஸ்' டாக்டர் சுகுமாருக்கு, ஒங்க மேல நல்ல அபிப்ராயம் இல்ல... நீங்க வெள்ளையன் பட்டி மருத்துவ முகாமுல டாக்டர் அசோகனை தூண்டிவிட்டதாய் நினைக்கிறார். இந்தப் பின்னணியில், நான் மட்டும் ஒரு வரி எழுதிப் போட்டால், சஸ்பென்ட் ஆக மாட்டிங்க... கைதாவீங்க.'

டாக்டர் முஸ்தபா, மேலும் அவளை அழ வைத்தார்.

"அந்த இளைஞனாவது தற்கொலை பண்ணிக்கிட்டான். ஆனால் இந்த மனோகரோட மச்சான்.... ஒங்களை ஒரே சீவாய் சீவப் போறதாய் குதிக்கிறார். எதிரிக்கு, நேரம், இடத்தைச் சொல்லிட்டு, அரிவாளை தூக்குகிற மனிதர். ஒ.கே. ஒ.கே. அழாதிங்க... நீங்க என்னோட சக டாக்டர். ஒரு டாக்டர், இன்னொரு டாக்டரை, அவர் நோயாளியை கொலை செய்தாலும், விட்டுக் கொடுக்கப்படாது என்பது நமது எழுதப்படாத மெடிக்கல் தர்மம்... இப்பக் கூட குடி முழுகிடல... விஷயத்தை இதோட விட்டால்... ஒங்களை விட்டு வைக்கிறதாய் மோகன்ராம்... எனக்கு வாக்கு கொடுத்திருக்கார். ஒங்ககிட்டே, ரெண்டுல ஒன்று கேட்டுட்டு வரச் சொன்னார். நீங்க இனிமேல் மனோகர் கல்யாண விஷயத்தில் தலையிட மாட்டிங்கன்னு சொன்னதாய் சொல்லட்டுமா? நான் வற்புறுத்தல... ஒங்க இஷ்டம்... நீங்க கல்யாணத்திலயும் நாலு பேரைப் போல கலந்துக்குவீங்கன்னும் சொல்லட்டுமா...!"

டாக்டர் சந்திரா, யந்திரமாய் தலையாட்டினாள்... பக்கவாட்டில்; அல்ல முன்னாலும்... பின்னாலுமாய்!

டாக்டர் முஸ்தபா, அவளை இளக்காரமாகப் பார்த்துவிட்டு, கதவைத் திறந்தார்... டாக்டர் சந்திராவுக்காக, குழந்தைகளோடு காத்திருந்த வேட்டையன் பட்டி பெண்களைவிரட்டியடித்தபடியே பீடு நடைபோட்டார்.

8

பொன் வைக்க வேண்டிய இடத்தில் பூ வைக்காமல், பூ வைக்க வேண்டிய இடத்தில் கூட பொன் வைக்கப்பட்டிருந்தது.

மணமேடையில் மனோகரோடு, நாற்காலியில் உட்கார்ந்திருந்த கலைவாணியும், அவளது நகை நட்டுக்களும் ஒன்றை ஒன்று பிரகாசப் படுத்தின. கழுத்தில் எலும்பு முக்கோணத்தை மறைக்கும் வைர நெக்லஸ்... அதற்குக் கீழேயும், பக்க வாட்டிலும், படர்ந்த காசுமாலை... ஒரு ஜோசியர் அவள் ராசிப்படி தேர்ந்தெடுத்த ஊதாக்கல்... இந்த தோட்டோடு தலைமுடியில் ஏறிய 'நோட்டலு'... உச்சிமுதல் பிடறிவரை எடுக்கப்பட்ட வகிட்டை மறைக்கும் கங்கு... கவுண் கம்பு போன்ற கைவளை... மூக்கை அடைக்கும் வைர மூக்குத்தி... மார்பகம் மறைக்கும் ஆரம்... அகலப்பட்ட சங்கிலிகள்... ஆக மொத்தத்தில் அத்தனையும் அரை கிலோவிற்கு மேலே போகலாம்... மாமனார் தவசிமுத்தை அழ வைத்த மாப்பிள்ளை வீட்டாரின் பதினைந்தாயிரம் ரூபாய்க்கும் அதிகமான அகலப்பட்டை ஜரிகைப்பட்டு... ஒவ்வொரு இழையிலும் ஊடுருவிய ஜரிகை... மனோகரையும் சும்மா சொல்லப் படாது. பெரிய இடத்து வழக்கப்படி சூட்டும் கோட்டுமாய் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். பெண்ணின் அண்ணன் கமலநாதன் எதிர்மாலையாய் போட்ட எட்டு பவுன் சங்கிலி டாலடித்தது. அத்தான் மோகன்ராம் போட்ட தங்கக்கடிகாரச் செயின்... ஒளியடித்தது.

கலைவாணியை, வாடாப்பூ, தேனம்மா வகையறாக்கள் மொய்த்து நின்றன. ஆனந்தியைத் தான் காணவில்லை. ஏழைப் புடவையாலும், எவளும் போடாத பாம்படத்தாலும் சங்கட[illegible] வெளியேறப் போன கனகம்மாவை, கலைவாணி, கையோடு [illegible] துக் கொண்டா

கலைவாணியின் பக்கத்தில் பெண்ணுக்குத் தோழியாய் குழலாமொழி என்று அழைக்கப்படும் அவளது அண்ணி குழல்வாய் மொழி... சந்தடிச் சாக்கில் பலராமனிடம் வலிய வலியப் பேசும் மீரா...

இந்த மேடைவாசிகளின் எதிர்ப்புறம் முன் வரிசையில் போடப் பட்ட மெத்தையிட்ட நாற்காலிகளில், போலீஸ் இன்ஸ்பெக்டர்.. தாசில்தார்... வட்டார வளர்ச்சி அதிகாரி... நேரு மைய ஒருங்கிணைப்பாளர்... மத்திய அரசின் செய்தி விளம்பர அதிகாரி முதலியோர் இவர்களுக்கு அடுத்த வரிசையில் டாக்டர் முஸ்தபா, டாக்டர் சந்திரா, சுகாதாரப் பார்வையாளர் சுலேகா... போலீஸ் இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும், டாக்டர்களும், மோகன்ராம் உபயம்... எஞ்சிய வி.ஐ.பி.க்கள் கலைவாணிக்காக வந்தவர்கள்; இதற்கு பக்கத்து வரிசையில் சென்னையில் இருந்து, மெனக்கட்டு 'சார்ட்டட்' பேருந்தில் வந்த மனோகரின் சகாக்கள்... கண்ணைக் கூசும் பெல் பாட்டங்களாகவும் ஸ்போர்ட் பேண்டுகளாகவும் இருந்தார்கள்.

கலைவாணியின் பெற்றோரான சுப்பையாவும், சீனியம்மாவும், மகளை அள்ளிப் பருகிக் கொண்டிருந்தார்கள். 'சுகந்தானே' என்பது போல் நேயம் காட்டும் கண்கள்; சிரிக்கப் போவதுபோல், ஒரு இழையின் இடைவெளி கொண்ட உதடுகள்... தங்கத் தகட்டை உருட்டியது போன்ற மேனி... பூவரசுப் பூவின் உட்காம்பின் நிறம் - இவர்கள், இப்படி மகளை விழுங்கிக் கொண்டிருந்த போது, மாப்பிள்ளையின் பெற்றோரான தவசிமுத்துவுக்கும், மனைவி சீதாலட்சுமிக்கும் அங்கேயும் சண்டை.... கல்யாண வீட்டிலேயே, சாப்பாடு போடுவதால் மணமக்களோடு மாப்பிள்ளை வீட்டுக்கு வரும் ஊராருக்கு ஒரு காபி மட்டும் கொடுத்தால் போதும் என்பதில் இருவருக்கும் சம்மதமே... ஆனால் அதில் சர்க்கரை போட வேண்டும் என்கிறாள் சீதாலட்சுமி... கருப்பட்டி போதும் என்கிறார் தவசிமுத்து.

மனோகரின் மச்சான் மோகன்ராம், மாமனார் தவசிமுத்து வாங்கிக் கொடுத்த நரைத்த வேட்டியையும், 'ரெடிமேட்' சட்டையையும், பெண்டாட்டி மேல் எறிந்துவிட்டு, ஒரு மாறுதலுக்காக, பட்டு ஜிப்பாவோடும், ஜரிகை வேட்டியோடும் அங்கும் இங்குமாய் சுற்றினார்... அவரது கண்கள் அவ்வப்போது டாக்டர் சந்திராவை நோட்டமிட்டன. சில சமயம் நேருக்கு நேராய்ப் பார்த்து எச்சரிப்பது போல் உருண்டன. சினிமாக்களில் தாலி கட்டும் நேரத்தில், தலைகால் புரியாமல் நடக்குதே, அப்படி அவள், 'வீரவசனம்' பேசி கல்யாணத்தை நிறுத்திவிடக் கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை...

கலைவாணியும், மனோகரும், முகம் தெரிந்த முதல் மூன்று வரிசைக்காரர்களையும், அடிக்கடி பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

சந்திராவின் முகம் படும் போது மட்டும், மனோகரின் முகத்திற்கு வலிப்பு வந்தது.

அதே சமயம், முன்னால் இடம் கிடைக்காமலும், பின்னால் போய் உட்கார மனமில்லாமலும் நின்ற நாட்டு வைத்தியர் பேச்சிமுத்துவைச் சுட்டிக்காட்டி, மனோகர், பலராமனிடம் சொல்ல, அவன் கீழே இறங்கி, அவரை கைக்குட்டை கிடந்த நாற்காலியில் உட்காரவைத்தான்; இந்தப் பிரிவினை கூட ஊழ்வினையாக நினைத்து, மேடையில் நின்ற மீரா துடிதுடித்துப் போனாள்.

கிட்டத்தட்ட அனைவருமே, மணமக்களை, அரைகுறை நிர்வாணமாக்கி ஜோடி சேர்த்தபோது, கடைக்கோடி வரிசையில் ஒரு தத்துவ விசாரம்... வி.ஐ.பி.யாகக் கருதி கொண்டு முன் வரிசைக்குப் போன வெளியூர் சொந்தம் ஒன்றை, பின்னுக்கு அனுப்பி விட்டார்கள். இதனால் 'ஐபி' கொடுத்தவர் போலான அந்த வெளியூர் வி.ஐ.பி. பக்கத்து இருக்கைக்காரரிடம், தனக்கு நேர்ந்ததை, அவருக்கு வந்ததுபோல் சொன்னார்.

''ஒருத்தருக்கு... இன்னொருத்தர் எவ்வளவு மரியாதை வச்சிருக்காங்க என்கிறது, இந்த மாதிரி பொது இடத்துலதான் துலங்குமுன்னு ஒமக்குத் தெரியுமா...? நம்ம வீட்டுக்கு, கல்யாண நோட்டீஸ் கொண்டு வரும் போது நாம கலந்துக்காட்டால், கல்யாணமே நடக்காது என்பது மாதிரி பேசுவாங்க. ஆனால், வந்த பிறகுதான் தெரியும்; ஒம்மப் பார்த்துட்டு தலையக் கூட ஒப்புக்கு ஆட்டமாட்டாங்க. இதனால்தான் தராசும் படியும் ஊர்லன்னான்... இதுதான் உலக நடப்பு... புரியுதாவே!''

''எப்படி புரியாம இருக்கும்? ஒம்மைப் பார்த்துட்டு, உடனடியாய் கையப்பிடிச்சு கூட்டிட்டுப் போன கலைவாணியின் அண்ணன் - கமலநாதன், இன்ஸ்பெக்டரை ... பார்த்ததும் ஒம்ம அப்படியே விட்டுட்டு, போலீஸ் அதிகாரியைப் பார்த்து ஓட மட்டுமா செய்தாரு.. முன் நாற்காலியில் உட்கார்ந்த ஒம்மை எழுந்திருக்கச் சொல்லி, இன்ஸ்பெக்டரை உட்காரச் சொன்னாரே... நானும் பார்த்தேன்!''

''இவ்வளவுக்கும் கமலநாதன்... என் அண்ணன் மருமகன்!''

''அண்ணன் ஏதடா... தம்பி ஏதடா.. அவசரமான உலகத்திலே... கண்ணதாசன் வாயில் சர்க்கரை போடணும்... அப்போக் கூட, தவசிமுத்து உப்பு போதும்பார்.''

எல்லாமே, அவசர அவசரமாய் இயங்கிக் கொண்டிருந்தன. முக்கனிகளில் மூன்றாவது கனியான பலாவிற்குப் பதிலாக ஆப்பிளையும்,

மத்தியில் தேங்காயையும், அதற்கு மேல், பூக்குவியலில் வைக்கப்பட்ட பதினைந்து பவுன் தாலிக் கொடியையும் சுமந்த தாம்பாளம் கூட்டத்தினரிடம் சுற்றுலாவாய்ப் போனபோது, எல்லோருமே அதை தொட்டு, கண்களில் ஒற்றி மனமார வாழ்த்தினார்கள். ஆனாலும் இளவட்டங்களிடம் ஒரு கருத்துப் பரிமாற்றம். சைட் அடிக்க முடியாத சமயத்தில்தான்...

''வீடியோக்காரங்களை காணோமே!''

''வராம இருக்கிறதே மேலு... நம்ம பொண்ணுகளை மறைப்பான். முடியுமுன்னால் முறைப்பான்.... தாலி கட்டுன பிறகும் ஒன்ஸ்மோர் கேட்பான்''

கலைவாணி, மீண்டும் ஒரு தடவை, டாக்டர் சந்திராவைப் பார்த்து, சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும் என்பது போல், வலது கையை வாய் வரைக்கும் கொண்டு போய், தனக்குத் தானே ஊட்டிக் கொள்வது போல் சமிக்ஞை செய்தாள். டாக்டர் சந்திரா மறுபுறமாய்த் திரும்பி, முகத்தை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். அந்த ஈரத்துணியால் முகம் கழுவி தேய்த்தாள். எல்லோரும்... அந்த மணமக்களை, சினிமா பார்ப்பது போல், பார்த்த போது, இவள் மட்டும், அவர்களை சதை நீக்கி, எலும்புக் கூடுகளாகப் பார்த்தாள். அவள் தலைக்கு மேல் கத்தி... கலைவாணியின் தலைக்கு மேல் வெள்ளம்... இனிமேல் அவளால் ஆகக் கூடியது ஏதுமில்லை.

திடீரென்று 'புரோகிதரான' நாவிதர் கையாட்ட, மேளம் உச்சக் குரலில் ஒலிக்க, கனகம்மாவின் தலைமையில் பழைய தாய்க்குலம் குலவையிட, புதிய மகளிர் கைதட்ட, மனோகர், அந்தத் தங்கத்தாலியை கலைவாணியின் தலைவழியாக, கழுத்தில் போடப் போனான். கடைசி நேர உச்சக்கட்டமாக டாக்டர் சந்திரா கத்திவிடக் கடாதே என்ற பயத்தோடு, கலைவாணியைப் பார்ப்பதற்குப் பதிலாய், சந்திராவையே கிலி பிடித்துப் பார்த்தான். அந்தத் தங்கத்தாலி, அவள் மூக்குத்தியை இழுத்து, இழுத்து தோட்டலைச்சாடி, கழுத்திற்குப் போனது. லிங்க உருவம் பொறித்த அந்த டாலர் செயின், கழுத்தைச் சுற்றியபோது, கலைவாணியின் மூக்கிலும், உதட்டிலும், காதுகளிலும் ரத்தத் துளிகள்; ஆனாலும் மணமகள், அதையும் மீறி மேடை கீழே விழப்போவது போல் நின்ற இயக்கப் பெண்களைப் பார்த்து நாணத்தோடு சிரித்தாள். அவள் மூக்கைத் துடைக்கப் போன குழல்வாய்மொழி, நீட்டிய கையை எடுத்துக் கொண்டாள். ரத்தம் தானாக உறையட்டும்... துடைத்தால் பொலபொலன்னு கொட்டும்...கூட்டத்தினர் வரிசையாக எழுந்து நின்றனர். சிறுவர் சிறுமியர் மாடியில் போடப்பட்ட வாழை இலைகளுக்கு முண்டியடித்தனர். இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட

அத்தனை புள்ளிகளும், பரிசு கொடுக்காமலே, மேடைக்குப் போய், மணமக்களை வாழ்த்திவிட்டு இறங்கினார்கள். ஆனால், டாக்டர் சந்திரா மட்டும்... கையோடு கொண்டு வந்த ஒரு பார்சலை, அவர்களிடம் பொதுப் படையாய் நீட்டினாள், பேசியபடியே கொடுத்தாள்.

''இதைப் பெட்ரூம்ல, போய் பிரிச்சுப்பாருங்க... அங்கேதான் பிரிக்கணும். ஒரு பரிகாரம்''

மேடை ஏறிவிட்டு, கீழே நின்ற டாக்டர் முஸ்தபா, சந்திராவைக் கையாட்டிக் கூப்பிட்டார். அவளும், அவருக்குக் கட்டுப்பட்டவள் போல் பெட்டிப்பாம்பாய்க் கீழே இறங்கினாள். இதற்குள் சுற்றமும் நட்பும் பரிசுகளோடும், பணச் கவர்களோடும் மேடை ஏறினார்கள். பொதுவாக கிராமத்துக் கல்யாணங்களில், பெண்ணுக்குக் கொடுக்கப்படும் பணக்கவர்கள், அவளுடைய பிறந்த வீட்டிற்கும், மாப்பிள்ளைக்குக் கொடுக்கப்படுபவை அவன் வீட்டுக்கும் போகும். இந்த ஊர்விதிக்கு விலக்காய், தவசிமுத்து, மருமகள் பக்கமாய் முண்டியடித்துப் போய், கலைவாணியிடம் நீட்டிய பார்சல்களையும், கவர்களையும், வெடுக் வெடுக்கென்று பிடுங்கினார். மனைவி சீதாலட்சுமி, மகன் பக்கம் நின்று கொண்டு, அவனிடம் நீட்டப்பட்டதை வாங்கி வாங்கி, மனதுக்குள்ளே எண்ணி எண்ணி, மோகன்ராம் மனைவியும் பெரிய மகளுமான 'ஆந்தைக் கண்ணி' சகுந்தலாவிடம் 'பத்திரம் பத்திரம்' என்றபடியே கொடுத்தாள். இதைப் பார்த்துவிட்டு, கணவரிடம், சீனியம்மா கிசு கிசுத்தபோது, அவரோ 'ஆசைக்கு வெட்கமில்ல' என்கிற பழமொழி சும்மாவா வந்திருக்கும்... விட்டுத் தள்ளு.. மாப்பிள்ளை முகத்துக்காக கொடுத்தோம்... கையில் எட்டாயிரம் ரூபாய்... இந்தியா முழுசும் ஏரோப்பிளேன்ல சுத்துறது....இதை மாதிரி வேலை... இந்த வயசுல யாருக்கும் கிடைக்காது' என்றார் உடனே சீனியம்மா ''அப்போ நம்ம ஆசைக்கும் வெட்கமில்லாமப் போயிட்டு, தராததரம் தெரியாதவங்களை... சம்பந்தி ஆக்கிட்டோம்... இங்க பாருங்க... ஊர் ஜனமே சிரிக்கு' என்றாள்; சுப்பையா, மனைவியின் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

௯

அந்த மாடியின் ஒற்றை அறையில், மனோகர், கட்டிலில் கம்பீரமாகவோ அல்லது குழைந்து போயோ கிடக்காமல், அருகே உள்ள சாய்வு நாற்காலியில் சோர்ந்து கிடந்தான். கல்யாண அலைச்சல்; சென்னையில் இருந்து வந்த சகாக்களை, குற்றாலத்துக்கு அனுப்பி வைத்தது போன்ற வேலைப் பளு மட்டும் காரணம் அல்ல... அவன் மனதுள், கலைவாணியைத் தள்ளிவிட்டு, டாக்டர். சந்திரா குஸ்தி போட்டாள். ஊசியும், கையுமாய் நெருங்கிக் கொண்டிருந்தாள். ஒரு தனிப்பட்ட சண்டையிலோ அல்லது நாடுகளுக்கிடையே நடக்கும் போரிலோ வெற்றி என்பது இறுதியில் வெறுமையே என்று எப்போதோ படித்தது, அப்போது அவனைப் பாடாய்படுத்தியது. 'அடாவடி' சந்திராவின் கண்முன்னால் கல்யாணத்தை நடத்திக் காட்ட வேண்டும் என்ற பழைய வேகம், புதிய பயமாக உருவெடுத்தது... கலைவாணிக்கு 'அது' தெரியாது என்பது நிச்சயமாகிவிட்டது. அப்படி இருக்கையில் இந்த சந்திரா, வேண்டுமென்றே சொல்லியிருக்க மாட்டாள்... அப்படிப் பட்டவளாக அவள் தெரியவில்லை... சொன்னது தப்பாக இருக்கலாம்... ஆனால் அதில் உள்நோக்கம் கிடையாது... ஒருவேளை... அவள் சொன்னது மாதிரி...

மனோகர், மேற்கொண்டு நினைக்கப் பயந்தான்... டாக்டர் சந்திராவை மனதில் இருந்து, வலுக்கட்டாயமாய், ரணத்தோடு பிய்த்துப் போட்டுவிட்டு, அந்த இடத்தில் நாட்டு வைத்தியமும், நல்வாக்கு தந்தவருமான பேச்சிமுத்துவை பொருத்திப் பார்த்தான்... சரியாக பொருந்தவில்லை... கீழே விழப் போவதுபோல் ஆடிக் கொண்டிருந்தார் பேச்சிமுத்து...

வளையல் சத்தம் கேட்டு, மனோகர் திரும்பிப் பார்த்தான்... கலைவாணி,

வெறுங்கையோடு நின்றாள்... (அந்த சுற்றுப்புறக் கிரா மங்களில் மணப் பெண்கள் பால் பழத்தோடு, முதலிரவு அறைக்குள் நுழைவதில்லை). மனோகர், அவளை மலங்க மலங்க பார்த்தபோது, அவள் கீழே குனிந்து, அவனை சாய்வு நாற்காலியில் இருந்து தூக்கப் போனாள். முடியாது போகவே, அவன் மீது நாணிக் கோணிய கொடியாய்ப் படர்ந்தாள்... படர்ந்து படர்ந்து, செல்லமாகச் சிணுங்கினாள்...

'இப்படியா... தாலிய திணிக்கறது? கழுத்திலே ஒரே எரிச்சல்''...

மனோகர், அவள் கழுத்தை வருடிவிட்டான். ரத்தக் கோடுகளை, கை உணர்ந்தது. ஆனாலும், அவள், அந்த வலியை அடக்கிக் கொண்டே, அவனை ஏறிட்டுப் பார்ப்பதும், பிறகு கண்களை கைகளால் மூடிக் கொள்வதுமாக இருந்தாள். அவனோ, பேச வேண்டும் என்பதற்காகப் பேசினான்.

''ஆயிரம் பேர் இருக்கிற கூட்டத்திலயும், அந்தப் போடு போடுவே... அப்படி அசத்துவே... இங்கே ஏன் இப்படி...?''

''அந்த ஆயிரம் பேரும், நீங்களும் சரியாயிடுமா? ஆனாலும், நான் பெரிதா நினைத்த அளவுக்கு நீங்க இல்ல...''

''அய்யய்யோ...''

''பின்ன என்ன? இந்த ராத்திரியிலே நம் கல்யாண நிகழ்ச்சியை வீடியோவுல போட்டுக் காட்டுறேன்னு 'பிராமிஸ்' செய்தீங்க. ஆனால், வீடியோக்காரங்க வரவே இல்லை... முடியாதுன்னு தெரிஞ்சிருந்தால், எங்கப்பா ஏற்பாடு செய்திருப்பார்''

''அதை ஏன் கேட்கிற... வீடியோக்காரங்க, முன்னாலயே ஊருக்கு வந்துட்டாங்களாம்... எங்கப்பன், 'எங்க சாஸ்திரப்படி கல்யாணத்தை படம் பிடிக்கப்படாதுன்னு, அவங்களைதுரத்திட்டாராம். வரதட்சிணை பணத்தில வீடியோவுக்கு அவரே பணம் கொடுக்கனுமுன்னு சொன்னேன்... அதனால வந்த வினை''

''ஒருத்திக்கு, பிறக்கிறது, கல்யாணம், முதலிரவு, முதல் குழந்தைபெறுவது, இறக்கிறது- இந்த ஐந்துதான் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள். பிறக்கிறதையும் இறக்கிறதையும் படம் எடுக்க முடியாது... முதலிரவையும், குழந்தை பெறுவதையும் வீடியோ எடுக்க முடியாது... மிஞ்சுறது கல்யாண நிகழ்ச்சிதான். அதையும் கோட்டை விட்டுட்டிங்களே''

''எல்லாம்... அந்த பாவியால வந்தது; கல்யாண வரவேற்பையும் ரத்து பண்ணிட்டான். ஊர் முழுக்க பட்டதாரிப் பையன்கிட்ட என் மூலம் வேலை

வாங்கித் தரப் போறதாய் கிட்டத்தட்ட... ஐம்பதாயிரம் ரூபாய் வசூலிச்சிருக்கான். அவங்க கிட்ட வட்டியோட பணம் கட்டுறதா வாக்கு கொடுத்திருக்கேன். இவன் ஒரு அப்பன், இவன் ஒரு மனுஷன்''

கலைவாணி, அவன் வாயைப் பொத்தினாள். ''ஆயிரம் இருந்தா லும் பெற்றவர்... 'இன்' போட்டுப் பேசப்படாது'' என்றாள். பிறகு மேஜையில் உள்ள ஒன்றை ஆவலோடு பார்த்தாள். மனோகர்... விளக்கினான்.

'அது ஆப்டிக்கல் லைட்... பனியன் மாதிரி சட்டை போட்டு ஜோக் அடித்தான் பாரு ஒரு தடியன்... என்னோட கலீக்... சிங்கப்பூர் போயிருந்தப்போ நமக்காக வாங்கிட்டு வந்தானாம்'

மனோகர்... எழுந்தான் அந்த விளக்கோடு பொருத்தப்பட்ட ஒயர் பிளக்கை பொருத்திவிட்டு, ஸ்விட்சைதட்டிவிட்டான். உடனே ஒரு ஜோதி மயம்... செம்பருத்திப் பூவும்... ஊமத்தம் பூவும் செக்கர்வான் சிவப்போடும், சுண்ணாம்பு ஜொலிப்போடும் பச்சை நிற இலை தழைகளோடும் கூற்றி வந்தது... அப்புறம் செம்பருத்தி, பூவரசுப் பூவாகவும், ஊமத்தம் பூ, பூசணிப் பூவாகவும் உருமாறின... ஒரே மாதிரியான உருவப் பொலிவு கொண்ட, வேறு வேறு வண்ணங்களைக் காட்டும் விதவிதமான பூக்கள்... இந்த எலெக்டிரிக்கல் பூக்களுக்கு மேல், பிரபஞ்ச பிம்பமாய் வியாபித்த நட்சத்திரப் பொறிகள்... மனோகர், டியூப் லைட்டையும் அணைத்தான். சிறிது நேரத்திற்கு முன்பு பிளாக் அண்ட் ஒயிட்டாக இருந்த அந்த அறை, இப்போது வண்ணக் கூடமானது.

''கிப்ட் எப்படி இருக்குது கலை!''

''நீங்களே... எனக்கு கிப்டா கிடைத்ததால்... அது பெரிசா தெரியல. ஆனாலும் நல்லா இருக்குது. நல்லவேளை, இந்த கிப்ட் பார்த்ததும் டாக்டரம்மாவோட கிப்ட் ஞாபகம் வருது. அதுதான் பெட் ரூம்ல பார்க்கச் சொன்ன பரிசுப் பொருள்; எடுங்க!''

மனோகருக்கு, மனதில் மீண்டும் அந்த எய்ட்ஸ் பூதம்; கால்மணி நேரம் வரை தன்னை மறந்தவனுக்கு, அந்த கிப்ட் தன்னை நினைவூட்டியது.. இன்னும் அவன் பிரித்துப் பார்க்கவில்லை.

மனோகர்... வேண்டா வெறுப்பாய் பீரோவைத் திறந்து, அந்த பார்சலை எடுத்துக் கொண்டு, கலைவாணி அருகே உட்கார்ந்தான். பிரித்துப் பார்த்தால் நிரோத் உறைகள்... கலைவாணி, அறுவெறுப்பாய்ப் பார்த்து விட்டுக் கேட்டாள்.

'பார்ஸல... நீங்க பிரிக்கும் முன்னயே பிய்த்து இருக்குது'..

'எங்கப்பனோட வேலையா இருக்கும். சாயங்காலம் திருட்டுத்தனமா

அவரு இங்கிருந்து போனதை பார்த்தேன். இந்த பார்ஸல் திருடுறதுக்கு வந்திருப்பார். திறந்து பார்த்ததும் விட்டுட்டார்...'

''அவரு கிட்டயே கொடுங்க.. ஒங்களுக்கு தம்பி... தங்கை பிறக்கமாட்டாங்க''

''நான், யூஸ் பண்ணப் போறேன்''

''வேண்டாம், உடலுறவு என்கிறது குழந்தை பெறுவதுக்காக மட்டும் கடவுளாய் கொடுத்த வசதின்னு மகாத்மா காந்தி சொன்னதுல எனக்கு நம்பிக்கை; நமக்கும் கழுதை வயசாயிட்டுது... சீக்கிரமாய்... சீக்கிரமாய்...''

கலைவாணி, மனோகரின் கழுத்தில் கைகளை கோர்த்துக் கொண்டாள். பிறகு எழுந்து, அவன் கையைப் பிடித்து 'எழுந்திருங்க' என்று இழுத்தாள்... எழுந்தவனை இறுகத் தழுவி கொண்டாள். உடனே அவன், எல்லாம் மறந்த ஆளாகிவிட்டான். அவளைச் சேர்த்துப் பிடித்து, அவள் முதுகை மார்பில் சாய்த்து, வாயை கன்னத்தில் வைத்தபடி, அவளை நகர்த்தி, நகர்த்தி, அவள் கையைத் தூக்கி டியூப் லைட் ஸ்விட்சில் வைத்து அழுத்திவிட்டான். இருவரும், வண்ண ஒலிக் கதிரில், கட்டிலில் தொப்பென்று விழுந்தார்கள். ஒருத்தரோடு ஒருத்தர் பின்னிக் கொண்டார்கள். இருவரும் எல்லைகள் அற்று போன போது...

தலைக்கு மேலே, ஒரு டக்... டக்... சத்தம்... கலைவாணி, ஆடை களைய கட்டிலில் உட்கார்ந்தாள்... தலைப்பக்கத்துச் சுவரில் தொட்டால் பிடிக்கக் கூடிய தொலைவில், எலி மாதிரி உப்பிப் போன ஒரு பெரிய பல்லி, வண்ண விளக்கு கூச்சத்தில் சுவர் ஏறி இருக்கக் கூடிய ஒரு கரப்பான் பூச்சியை, பின் பக்கமாய் பிடித்து தின்று கொண்டிருந்தது. அதன் வாயில் குற்றுயிரும், குலையுயிருமாய் துடித்த அந்தப் பூச்சியை, அந்தப் பல்லி, ஆட்டி, ஆட்டி, அதன் தலையை சுவரில் மோத வைத்தது.

எலியை மறிக்கும் பூனையையும், பூனையை மறிக்கும் நாயையும், நாயை மறிக்கும் சிறுவர்களையும் துரத்தும் கலைவாணிக்கு, என்னவோ போல் இருந்தது. ஒரு தடவை, மரத்தில் இருந்து கீழே விழுந்த ஒரு காக்கைக் குஞ்சுக்காக, கையில் ஒரு கல்லோடு, காவல் பார்த்தாள். இதனால், காக்கையிடம், தலையில் கொத்துப்பட்டவள். இந்தக் கோரக் காட்சியைத் தாள முடியாமல் கேட்டாள்.

''இந்த கரப்பான் பூச்சியைக் காப்பாற்ற முடியாதா?''

''எப்படி முடியும்... இப்போ தலைதானே மிச்சம்!''

கலைவாணி, பல்லியையும் அடிக்க முடியாமல், பாச்சனையும் காப்பாற்ற முடியாமல், அல்லாடினாள்.

10

அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஒன்றான கலைவாணியின் வீட்டில், அன்று ஒரே பெண்கள் கூட்டம். ஆனாலும், வெள்ளையன் பட்டி மகளிரை விட வித்தியாசமான கூட்டம். தரையில் உட்காருவது தகுதிக்கு குறைந்த காரியம் என்பதால், சோபா செட்டில் இருந்த கூட்டம். அதில் இடம் கிடைக்காதவர்கள், தத்தத்தமது வீடுகளில் இருந்து நாற்காலிகளைக் கொண்டு வந்து போட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். கண் வெட்டும் அளவுக்கு நகை நட்டு இல்லாதவர்கள்... ஆனால், ஒவ்வொருத்தியின் கையிலும் ஒரு கடிகாரம்... கண்களில் மை... உதடுகளில், லேசான சாயம்... முதுகை முழுமையாக, மூடிய மாமிகள்... தோள் திரட்சியைக் காட்டும் கட்சோளிகள்...

சமையலறையில், வேலைக்காரப் பெண் மீனாட்சியுடன், பம்பரமாய் இயங்கிய கலைவாணி, பெரிய எவர்சில்வர் தட்டில், தொட்டால் கடும் பக்கோடாக்களை கொண்டு வந்து, டிரேயில் வைத்தாள். அந்தப் பெண்கள் தின்று முடித்தால், டீ கொண்டு வரலாம் என்பதற்காக அவர்களின் தின்னும் வேகத்தையும், பக்கோடாக்கள் தீர்த்து கொண்டிருக்கும் வேகத்தையும், பெருக்கல் போட்டு, ஒரு குத்துமதிப்பான நேரத்தை அனுமானித்தவள் போல், மீனாட்சி தேநீர் தயாரிக்க ஆயத்தமானாள். பக்கோடா தீரும் நேரமும், தேநீர் ரெடியாகும் நேரமும் ஒன்றாக அமைவதற்குரிய வகையில், அவள் தனக்குத்தானே தேநீர் தயாரிப்பு வேலையின் வேகத்தை நிச்சயித்துக் கொண்டாள்.

சமையலறைக்குள், தண்ணீர் கொண்டு வரப் போன கலை வாணியை, திருமதி.பாலா நாராயணசாமி, கையைப் பிடித்திழுத்து, பக்கத்தில் உட்கார

வைத்தாள். பிறகு அவளைப் பாராட்டுவதற்காக வாயைத் திறந்தாள்.

''மிஸஸ்... மனோகர்!''

''என்னைக் கலைவாணியின்னே... கூப்பிடுங்க ஆன்டி!''

''நோ... நோ... இனிமேலும் நீ பட்டிக்காடு இல்லே; சொந்தப் பேரால் கூப்பிட... இப்போ நீ ஒரு ஹவுஸ் ஒய்ப்.. மிஸ்ஸஸ் மனோகர்ன்னு கூப்பிட்டால் தான் ஒனக்கே கௌரவம்''...

''எப்படிக் கூப்பிட்டாலும் பரவாயில்லை... சொல்லுங்க ஆன்டி...''

'ஒன்னை நாங்க பாராட்டித்தான் ஆகணும்... இந்த அடுக்குமாடி கட்டிடம் எழும்புன காலத்திலேயே இருக்கிறவங்க நாங்க... ஆம்புடையான் தோளுல கையைப் போட்டு அவனோட ஸ்கூட்டர் பின்னால உட்கார்ந்து போற சமயம் தவிர, மற்ற சமயத்தில... ஒன்று அடுப்படில இருப்போம்... இல்லன்னா டிவி பெட்டி முன்னால இருப்போம். டிவி பெட்டியிலே வர்ற நிழல்கள் பேர் அத்துபடி... ஆனால் அக்கம் பக்கத்து ஆத்துக்காரிங்க ஆருன்னே தெரியாது. அப்பேர்ப்பட்ட எங்களை ஒண்ணா சேர்த்த பெருமை ஒனக்குத்தான்... முத்துக்களை கோர்க்கிற நூல் மாதிரி'

திருமதி பாலா நாராயணசாமியின் உதாரணத்தை, அவளை அறவே வெறுக்கும் திருமதி சியாமளா நாகராஜன் ஆட்சேபித்து, ஒரு திருத்தம் கொண்டு வந்தாள். வெறும் திருத்தம் அல்ல... குறும்புத்தனமான, அப்பட்டமான சூழ்ச்சி மாதிரியான திருத்தமாய்தான், அது, திருமதி நாராயணசாமிக்குப் பட்டது.

'மிஸ்ஸஸ் மனோகர்... நீங்க சொல்றது மாதிரி வெறும் மாஞ்சா நூல் இல்லே மேடம்... இந்த உதாரணம் அவங்களை இன்சல்ட் செய்யுறது மாதிரி. உண்மையான உதாரணம் என்னென்னால்... மிஸ்ஸஸ் மனோகர், பொன் காசுகளை மாலையாய் காட்டும் தங்கச்சரடு... இப்படிச் சொல்றதுதான் சரியான ரெகக்னைசன்...!'

திருமதி நாராயணசாமிக்கும், திருமதி நாகராஜனுக்கும், அங்கேயே வாய்ச்சண்டை வந்திருக்கக் கூடும். அதற்குள், அந்த வீட்டின் வெளியே உள்ள தாழ்வாரம் வழியாய், பட்டும் படாமலும் பார்த்தபடியே நடந்த திருமதி மஞ்சுளா கண்ணனை, கலைவாணி வீட்டில் இருந்தபடியே, சிவப்பழகி திருமதி எட்வர்ட் சாமுவேல் கைத்தட்டிக் கூப்பிட்டாள்.

''மாமி... இங்கே வாங்கோ. இன்னிக்கி இந்த பூஞ்சோலை குடியிருப்பு பெண்கள் சங்கத்தை இங்கே துவங்கப் போறதாய்... எத்தனை தடவை

சொல்லி இருக்கேன் வரப்படாதா...''

திருமதி மஞ்சுளா கண்ணன், வரப்படாது என்பது மாதிரியே நடந்த போது, கலைவாணி ஓடிப்போய், அந்த மாமியை உரிமையோடு மடக்கி, உள்ளே கொண்டு வந்தாள். ஆனாலும் திருமதி கண்ணன், உட்காராமலேயே பேசினாள்.

''என்னை விட்டுடு... கலைவாணி... எனக்கு இந்த சங்கமும் வாணாம் அசிங்கமும் வாணாம்''

''மாமி... இப்படி சலிச்சிக்கிட்டா எப்படி?''

''போன வருஷம், அடுத்த மாடில இருக்கிற என் வீட்டில, என்னோட ஒரே மகன் கௌதம்... வீட்டுல இருந்து ஆஜானுபாகுவாய் போனவன்... கடலுள் நீந்தி பிணமா... வந்து சேர்ந்தான். அப்போ உதவிக்கு ஒருத்தி தலையை நீட்டல. இதைவிடக் கொடுமை, என்னன்னா எதிர் வீட்டுலே டிவி பெட்டி ஆடுது... பக்கத்து வீட்ல ரேடியோ பெட்டி பாடுது. இப்போ சொல்லு கலைவாணி... என் மனசு என்ன பாடுபட்டிருக்கும். அதனாலதான் சொல்றேன்... இந்தச் சங்கம் எனக்கு அனாவசியம்''

அங்கே உட்கார்ந்திருந்த பெண்கள் உம்மணா மூஞ்சியானபோது, கலைவாணி, திருமதி கண்ணனை, தான் இருந்த நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு சொன்னாள்.

''நீங்க சொல்றது நியாயமாத்தான் படுது. நீங்க சங்க உறுப்பினரா ஆகணுமுன்னு அவசியமில்ல. ஆனால், பக்கடா சாப்பிட்டுட்டே போகலாம். டீ குடிச்சிட்டு போகலாம்...'

''கலைவாணி... ஒன்னோட முகத்துக்காக உக்காருறேன். ஆனால் சங்கத்தில மட்டும் சேரமாட்டேன்''

திருமதி பாலா நாராயணசாமி விளக்கமளித்தாள்.

''இப்படில்லாம் இனிமேலும் இருக்கப்படாதுன்னுதான், இந்த சங்கத்தை துவக்கப் போறோம். இனிமேல் மட்டும் பாருங்கோ... யார் ஆத்துலயாவது இப்படி ஏடாகோடமாய் நடந்தால், நாம அத்தனை பேரும் அந்த வீட்டு முன்னால போய் நிற்போம்''

திருமதி நாராயணசாமி எப்படியும் அந்தச் சங்கதத்திற்கு தலைவியாய் ஆகிவிடக் கூடாது என்பது போல், அதே வயதான ஐம்பதும், அதே கலரான ஊமத்தம்பூ நிறமும் கொண்ட திருமதி சியாமளா நாகராஜன் கண்டிப்பது

போல் கண்டிப்பாய்ப் பேசினாள். ''மேடம்... ஒரு வீட்ல கெட்டது நடந்தாத்தான் போகணுமா? நல்லது நடந்தால் பொறாமை வந்திருமா...? ப்ளீஸ்... பீ... பாஸிட்டிவ்''

''தெரியாமத்தான் கேட்கேன்... மிஸ்ஸஸ் நாகராஜன்! நீங்க... சங்கத்தைப் பற்றி டிஸ்கஸ் செய்ய வந்தீங்களா... இல்ல என்னோட வம்பு வழக்கடி செய்யறதுக்கு வந்தீங்களா...''

''பாஸிட்டிவ்வா... பேசுங்கன்னு சொல்றது வம்பா? மிஸ்ஸஸ் மனோகரை நாகரீகமான உதாரணத்தால பாராட்டுங்கோன்னு சொன்னது வழக்கடியா? வாட் இஸ் திஸ் ஆல் எபவுட்...''

அங்கே கூடியிருந்த முப்பது பெண்களில் இன்னும் உருவாகாத அந்த சங்கத்தின் தலைவியாய், 'தொண்டாற்ற' ஆசைப்பட்ட பத்துப் பேரில் எட்டு பேருக்கு கொண்டாட்டம். முதல் சுற்றில் நின்ற திருமதிகள் நாராயணசாமியும், நாகராஜனும் ஒருவரை ஒருவர் கேன்சல் செய்து கொண்டதில், உள்ளபடியே, மகிழ்ச்சி, இதற்குள் மீனாட்சி கொண்டு வந்த தேநீர் கோப்பைகளை எல்லோருக்கும் கொடுத்து முடித்த கலைவாணி, விருந்தோம்பல் செய்த உரிமையோடு பார்த்தாள். அந்தப் பார்வையில் வெள்ளையன் பட்டியில், அவளுக்குள் இருந்த தன் பேச்சைக் கேட்பார்கள் என்ற தன்னம்பிக்கைக்குப் பதிலாக, 'சரியாய் இருக்குமா' என்று நினைக்கும் ஒரு மாணவத் தன்மையே அதிகமாய் இருந்தது...

''இருநூறு பெண்கள் இருக்கிற இந்தக் குடியிருப்புல வந்திருந்ததே முப்பது பேரு!''

'என்னை கணக்குலே சேர்க்காதே... நான் ஒன் முகத்துக்காக ஒன்னைப் பார்க்கத்தான் வந்தேன். எப்போ என் பிள்ளையாண்டான்... பிணமா வந்தானோ'

''சரி... இருபத்தொன்பது பேரு. இந்த சின்னக் கூட்டத்திலேயே நாம் இப்படி சமாத்காரமாய் பேசினால், அப்புறம், பின்னால் சேரணுமுன்னு நினைக்கறவங்களும் சேரமாட்டாங்க.''

உறுப்பினராகப் போவதில்லை என்று உறுதி மொழி எடுத்திருக் கும் திருமதி கண்ணன் ஜோஸ்யம் சொன்னாள்.

''இந்த இருபத்தொன்பது கூட.... நீ வீடு வீடாய்... போய் கதவு கதவாய், காலிங் பெல்லை அழுத்தி, கெஞ்சிக் கூத்தாடுனதால.. வந்திருக்காங்க. வேணுமுன்னாப்பாரு... அடுத்த கூட்டத்தில, லட்டர் பேட்ல பெயர் இருக்கறவங்க மட்டுந்தான் வருவாங்க...''

பின் வரிசையில் உள்ள 'கட்சோளி' மோனிகா வாதிட்டாள்.

''ஒரு கூட்டம் முக்கியம் இல்ல... அதைக் கூட்டுறது யார் என்கிறது தான் முக்கியம். நம் கலைவாணி இங்கே இருக்கிறவரைக்கும்...''

''அது என்ன நீ பெர்மனன்ட் மாதிரியும்... மிஸ்ஸஸ் மனோகர் என்னமோ டெம்பரரி மாதிரியும்...''

''இதுக்குப் பேர்தான் மாமி... ஜெனரேஷன் கேப் என்கிறது... ஒங்ககிட்ட சொல்லாததை எல்லாம்... மிஸ்ஸஸ் மனோகர் என்கிட்டே சொல்லி இருக்காள். அவளோட ஆசை எல்லாம், ஹஸ்பென்டை ஊருக்கு இழுத்துட்டுப் போய், ஒரு இன்டஸ்டிரியல் யூனிட்டை போட வச்சு, அரசோட மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை...''

கலைவாணி, மோனிகாவின் ஒற்றை நபர் கருத்துக் கணிப்பை அங்கேயே மறுத்தாள்.

''நோ நோ... அப்படில்லாம் கிடையாது. ஊருக்கு போகனுமுன்னு ஒரு ஆசை இங்கே வந்த ஒரு மாதம் வரைக்கும் இருந்தது. இப்போ அப்படில்ல... இங்கேயே அதுவும் ஒங்களோடயே இருக்கணும் என்கிறதுதான் என் விருப்பம். இந்தச் சங்கத்தை இடையில விட்டுட்டுப் போக மாட்டேன்''

எல்லாப் பெண்களின் கண்களும், ஒட்டு மொத்தமாய் கலைவாணியை மொய்த்தன. கௌரவம்... பார்க்காமல், வலியப் பேசிய இவளை, இந்த நல்லவளை ஆரம்பத்தில் பாவம்... 'பட்டிக்காடு' என்று நினைத்தது, பிறகு இந்த நாராயணசாமிகளின் ஒரே மகளான மேகலாவை, நான்கைந்து படித்த பொறுக்கிகள், கேட் வரைக்கும் கிண்டலடித்து வந்த போது, இதோ இந்த கலைவாணி, சீறிப் பாய்ந்து 'செருப்படி படுவீங்கடா' என்று சூளுரைத்தது நினைவுக்கு வந்தன. இன்னொருத்தி, சந்தேகத்தோடும், சந்தோஷமாகவும் கேட்டாள்.

'அப்போ ஊர்லே செட்டில் ஆகிற எண்ணத்தை விட்டுட்டியா'

கலைவாணி, ஆமாம்... என்பதுபோல் தலையாட்டி விட்டு, பின்னர் தன்னைத் தானே நம்ப முடியாதவளாகப் பார்த்தாள். மனோகருடன் குடித்தனம் நடத்த சென்னைக்கு வந்த ஒரு மாதம் வரை, கணவனுடன் தூங்கிக் கொண்டிருக்கும் போது கூட, தூக்கமும், கனவும், கலைந்து, 'ஏய் வாடாப்பூ,' தேனம்மா...' என்று வாய்விட்டுக் கத்தியபடியே படுக்கையில் இருந்து அவ்வப்போது எழுவதும், விழுவதும் நினைவுக்கு வந்தன. மனோகர் இல்லாத பகல் நேரங்களில், ஊர் நினைவும், அம்மாவின் கரிசனமும், அப்பாவின் மௌனப் பாசமும், அக்காவாகிப் போன அண்ணியின்

பெருந்தன்மையும், நினைவுக்குமேல் நினைவுகளாய் அல்லாட, அவள் துடியாய் துடித்துப் போவதுண்டு. கம்மாக்கரையிலும், வயல் வெளியிலும், சுற்றோசுற்று என்று சுற்றினாலும், இங்கே காய்கறிகாரப் பையன், மூன்று சக்கர சைக்கிள் மணியை அடிக்கும் போது மட்டுமே தெருவுக்குப் போவதும், அவளைத் தனிமைத் துயராய் வாட்டியதுண்டு... இதனாலேயே இந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் எந்தப் பெண் முகமாவது தெரிந்துவிட்டால், இவளே அவள் வீட்டுக்குப் போவதும், தனது ஊர் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு பெருமூச்சு விடுவதும், 'நீங்க சொல்வதைப் பார்த்தால், எனக்கு ஒங்க ஊருக்குப் போகணும் போல தோணுது' என்று இந்த கட்சோளி மோனிகா, சொன்ன போது, அழப் போனதும், நினைவுக்கு வந்தன. ஊர்க்காரத் தோழிகளிடம் இருந்து, பத்துப் பன்னிரண்டு கடிதங்கள் வந்தன. இவளும், உடனடியாய், வரிந்து கட்டி பதில் கடிதங்கள் எழுதி, இங்கிருந்தபடியே மகளிர் மன்றங்களை நடத்துவதுபோல் திருப்தி பட்டுக் கொண்டதும், இப்போது சிறிது அபத்தமாகவே தெரிந்தது. இப்போதும், கடிதங்கள் எழுதுகிறாள். ஆனால் ஒரு கடிதத்திலேயே, எல்லோரையும் கேட்டதாகச் சொல்லும்படிக் கேட்டுக் கொள்கிறாள். ஊரில் திருமணமான ஒரு வாரத்திற்குள், ஊரைவிட்டு அழுதழுது புறப்பட்டபோது, ஒரு பெரிய பெண் பட்டாளமே பின்னால் வந்ததும், அவளைச் சுற்றி நின்ற கூட்டத்தைப் பார்த்துவிட்டு, ரயில் நிலைய அதிகாரிகளே, மாண்புமிகு பெண் அமைச்சர் செக்யூரிட்டி இல்லாமல் திடீர் வருகையை முடித்துவிட்டு திரும்புவதாக அவசரமாய் அனுமானித்து, ரயில்வே போலீசாரை அனுப்பியதும், சிரிப்பாய்ப் பொங்குகிறது. ஊர்க்காரிகளை, நன்றியோடுதான் நினைத்துப் பார்க்கிறாள், அதற்காக அந்த நன்றி பாராட்ட, ஊரில் 'செட்டில்' ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லையே...

இதற்குள், திருமதி பாலா நாராயணசாமி எங்கே பேசி விடுவாளோ என்று சந்தேகப்பட்டு, திருமதி நாகராஜன், "கலவாளி! நீங்களே நம் மீட்டிங்கோட பர்பஸை சொல்லுங்க" என்றாள். திருமதி நாகராஜன், தன்னை திருடி ஆக்கியதால் சங்கடப்பட்ட கலைவாணி, என்னை நீங்க மிஸ்ஸஸ் மனோகர்ன்னு கூப்பிடுங்க என்று எப்போதாவது சொல்ல வேண்டும் என்று தீர்மானித்து, இப்போது கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைக்கப் போனாள்... இதற்குள் ஒரு இடைச்செறுகல்...

"காமாட்சி மாமி... ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?"

"அதை ஏன் கேட்கிறே...? என் சின்ன பிள்ளையாண்டான் ரவிக்கு ஒரு கம்பெனியோட கம்ப்யூட்டர் கன்சல்டன்சி பிரிவிலே... வேலை கிடைச்சிருக்கு... கேம்பஸ் இன்டர்வியூவில இவன்தான் பர்ஸ்டு... சம்பளம்

மாதம் பதினாலாயிரம் ரூபாய்''

''கன்கிராஜுலேஷன்ஸ்''

''சும்மாக்கிட... போகமாட்டேன்னு சொல்றானே... பாவிப்பயல் அமெரிக்காவிலே எம்.எஸ். பண்ணப் போறேன்னு குதிக்கானே!''

''இந்தக் காலத்து பிள்ளிங்களே அப்படித்தான் மாமி... என் மகன் வில்ஸன்... அவன் என்ன காரியம் செய்திருக்கான் பாருங்க... முதல் மாத சம்பளத்தை வீட்டுக்கு கொண்டு வந்து என்கிட்ட கொடுப்பான்... நான் கன்னிமேரி முன்னால வைக்கணுமுன்னு நினைத்தால், ஏஸி மிசினை வாங்கிட்டு வாரான். கேட்டால் இரண்டு மாதச் சம்பளந்தானேன்னு சொல்லிட்டு சிரிக்கான்''

மாதம், நாலாயிரம் ரூபாய்க்கு உட்பட்ட சம்பளம் வாங்கும் கணவன்மாரைக் கை பிடித்தவர்கள், அங்கேயே முணுமுணுத்தார்கள். வீட்டுப் பெருமைகளை மானசீகமாய் கொண்டு வந்து அங்கதம் பேசிய 'பெரிசுகளை' முறைத்தார்கள். இன்னும் சிலதுகள், தத்தம் கணவன்மார் அல்லது பிள்ளைமார் 'அடாவடி' செலவுகளைப் பேசப் போனார்கள். அதற்குள் நகரத்துக் கலைவாணி, கிராமத்துக்காரியாகி கூட்டத்தை ஒரு அதட்டலோடு பார்த்து, சங்கத்தின் நோக்கத்தை எடுத்துரைக்கப் போனாள்.

''இப்போதெல்லாம், சென்னையில் நமக்கு... குறிப்பாய், எங்களை மாதிரி இளம் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கு... அடுக்கு மாடிக்காரிகளை கிண்டலடித்தால், அவளுக கணவர்கள் கண்டுக்கமாட்டாங்க என்கிற மாதிரி ஒரு எண்ணம் வந்திருக்கு. இதனால நம் கேர்ல்ஸ்க்கு கராத்தே கற்றுக் கொடுக்கணும். அடுத்த தெருவிலயே ஒரு கராத்தே மாஸ்டர் இருக்கார். இது... நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்... இரண்டாவதாக...''

கலைவாணியின் பேச்சிற்குத் தடங்கலாய் ஒரு மின்சாரச் சத்தம். கிளி, பூனையிடம் அகப்பட்டால், எப்படிக் கத்துமோ, அப்படிப்பட்ட காலிங்பெல் ஓசை. வேலைக்காரப் பெண் மீனாட்சி, சமையல் அறையில் இருந்து தாவிப் போய்க் கதவைத் திறந்தாள். மனோகர், டையும் கோட்டுமாய் நின்றான்.

கலைவாணி, கணவனை முகம் சுழித்துப் பார்த்தாள் 'கூட்டம் நடக்கப் போறதாய்' காலையிலேயே சொன்னனே' என்பது மாதிரி; இதற்குள் சியாமளா 'இதுக்குத்தான் புதுசா கல்யாணம் ஆனவங்க வீட்டுக்கு பகலுலயும், வரப்படாதுன்னு நான் சொன்னது.!' என்றபோது, வாசலைத்

தாண்டி உள்ளே வரப் போன மனோகர், வெளியிலேயே நின்றபடி கலைவாணி மீது கால்வாசிப் பார்வையை வீசியபடியே பேசினான்.

''ஐ... அம் ஸாரி... என்னால முடியல. அதனாலதான் வந்திட்டேன்'

எல்லோரும் அவனை குறுஞ்சிரிப்பாய் பார்த்துவிட்டு, கலைவாணியை நோக்கிக் கண்ணடித்த போது, மனோகர், மனைவியிடம் முத்தமிட்டு, முத்தம் பெற்றுச் சொல்ல வேண்டிய ஒரு தகவலை, வாசலில் நின்றபடியே சொன்னான்.

''எனக்கு நியூயார்க்லே மூன்று மாதம் போஸ்டிங் கொடுத்திருக்கிறாங்க. எங்க கம்பெனி, அங்கே ஒரு மல்டி நேஷனல் கம்பெனிக்கு... கன்ஸல்டென்ட் கான்ட்ராக்ட் வாங்கி இருக்குது... அதை நிறைவேற்ற போற ஐந்து பேர் டீம்ல மெட்ராஸ்லே இருந்து என்னை செலக்ட் செய்திருக்காங்க. இந்த நல்ல செய்தியை இவள்கிட்டே சொல்றதுக்காக ஓடிவந்தேன்... வாறேன்''

கலைவாணி, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவனைக் கூப்பிடுவதற்காக நீண்ட கையை, இழுத்துப் பிடித்தாள். இதற்குள் இந்தக் கூட்டத்திலேயே வயதான திருமதி கல்யாணராமன், எழுந்து போய், மனோகரின் கையைப் பற்றி வீட்டுக்குள் கொண்டு வந்து, கூட்டத்தில் மத்தியில் நிறுத்தி விட்டு, அவன் நெற்றியின் இரு பக்கமும், தனது கைவிரல்களை ஊன்றி ஊன்றி, அவனுக்குத் திருஷ்டிப் பரிகாரம் செய்தாள். நியூயார்க்கில், மசக்கையில் இருக்கும் பேத்திக்கு, மாங்கா வடு, தேங்காய் மிட்டாய், தேன்குழல், ஊறுகாய், புளிச்சாதம் வகையறாக்களை கொடுத்து அனுப்பணுமே...

எல்லாப் பெண்களும் கைத் தட்டினார்கள். அது முடிந்ததும் மோனிகா கருத்துரைத்தாள்.

''எல்லாம்... எங்க கலைவாணி வந்த நேரம்... இதை மறந்திடாதீங்க மிஸ்டர் மனோகர்...''

''அதுமட்டுமில்ல மோனி... நாம் எப்போ கும்பலாய் இந்த வீட்டுக்குள்ளே கூடினமோ... அப்போதான் இந்த குட் நியூஸ் வந்திருக்குது''

''இவளைக் கூட்டிட்டுப் போகாதீங்க சார்! இப்போதான் இந்த குடியிருப்பே களை கட்டுது''

''அபசகுனமாய் பேசப்படாது... கலைவாணி இவரைத் தனியா விடாதே!''

ஒரு வருடத்திற்கு முன்பு, தன் கழுத்தில் மஞ்சள் சரடை போட்டுவிட்டுப் போனஒரு அமெரிக்கத் தமிழன், இன்னும் தன்னை பிறந்த வீட்டுலயே விட்டுவைத்திருப்பதை நினைத்துப் பேசிய நிர்மலாவை, எல்லோருமே அனுதாபமாகத் தான் பார்த்தார்கள். அதற்குள் திருமதி பாலாநாராயணசாமி, ஒரு யோசனை சொன்னாள்.

''எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லி... இங்கே இருக்கிற பூஞ்சோலை குடியிருப்போர் சங்கத்தின் சார்பில், மிஸ்டர்... மனோகருக்கு ஒரு பாராட்டு... கம் வழியனுப்பு விழா வைக்க ஏற்பாடு செய்யுறேன்...''

திருமதி விஸ்வநாதன், பாலா மாமியை எரித்துப் பார்த்தாள். இவளே செயற்குழுவா? விடப்படாது!

''நோ... நோ... நம் பெண்கள் சங்கம் மூலமாகவே பாராட்டு விழா நடத்திடலாம்!''

எல்லாப் பெண்களும், திருமதி விஸ்வநாதனின் யோசனைக்கு, சந்தா கொடுக்கற எண்ணம் இல்லாமலே கை தட்டினார்கள். கம்ப்யூட்டர் படிக்கும் தன் பேரனை, மனோகரின் அமெரிக்கத் தலையில் திணிப்பதற்கு திட்டம் போட்ட பாலா மாமிக்கு சிறிது வருத்தந்தான். ஆனாலும், சமாளித்தாள்.

''சரி... அவாள கொஞ்ச நேரம் தனியா விடுவோம்... நாளைக்கு என் வீட்ல கூடி பாராட்டு விழாவ பைசல் செய்வோம்''

திருமதி நாகராஜன், பாலா மாமி தேர்ந்தெடுத்த இடத்தை ஆட்சேபிப்பதற்கு முன்பே, எல்லாரும் எழுந்து ஒருவருக்கொருவர் பேசியபடியே வெளியேறினார்கள். வேலை முடிந்து, கைகளை பாவாடையில் துடைத்துக் கொண்ட மீனாட்சியை, கண்ணடித்து கூட்டிப் போனார்கள்...

தனித்து விடப்பட்ட மனோகரும், கலைவாணியும், 'எவர் முந்தி' என்று கண்டு பிடிக்க முடியாத வேகத்தில் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டார்கள். 'ஒங்கள விட்டுட்டு எப்படித்தான் இருக்கப் போறேனோ' என்று புலம்பியவளின் அடி வயிறைத் தொட்டபடியே மனோகர், ஆற்றுப்படுத்தினான்.

''நம்ம குழந்தை அமெரிக்காவுலதான் பிறக்கப் போகுது!''

''எப்படியாம்...?''

''கம்பெனி சார்பில் வேலை பார்த்துட்டே எதாவது ஒரு அமெரிக்க

நிறுவனத்தில் சேர்ந்திடுவேன். ஒன்னையும் கூட்டிக்கிட்டுப் போயிடுவேன். நம் குழந்தைகளோடு, நாம்... அமெரிக்காவிலேயே செட்டில் ஆகிடலாம்''

கலைவாணி, அவன் மார்பில் சாய்த்த தலையைத் தூக்கி, அவனை நேருக்கு நேராய் பார்த்துக் கேட்டாள்.

''எந்தக் கம்பெனி...ஒங்களை நம்பி அனுப்புதோ... அந்தக் கம்பெனி சார்பிலே போயிட்டு... அப்புறம் ஏணியையே இடறி விடுவது நம்பிக்கைத் துரோகம் இல்லையா''

''விசுவாசமாய் இருக்கிறதுக்கு... கம்பெனி என்ன கட்டுன பெண்டாட்டியா''

''விசுவாசத்தை துண்டாட முடியாது. ஒரு விசுவாசி என்பவர், எந்த விஷயத்திலும் தனக்குத்தானேயும், பிறத்தியார் எல்லோரிடமும் விசுவாசமாய் இருப்பவர்...''

மனோகர், நிரடு தட்ட அவளைப் பார்த்தான். அந்த சங்கடத்தை புரிந்து கொண்டவளைப் போல், கலைவாணி பேச்சை மாற்றினாள்.

''சரி... நாளைக்கு எல்லாவற்றையும், விலாவரியாய் பேசலாம். நீங்க நியூயார்க்குலயே செட்டில் ஆனாலும், அதுதான் என்னோட அயோத்தி; மத்ததுல்லாம் அசோகவனம்; இப்படியே நின்னா எப்படியாம்? இதைக் கொண்டாட வேண்டாமா...? எங்கேயாவது கூட்டிக்கிட்டுப் போங்க!''

''சாயங்காலம் போகலாம்... இப்போ மெடிக்கல் கிளியரன்சுக்கு ஜெனரல் ஆஸ்பத்திரி போறேன். சென்ட்ரல் ரயில்வே நிலையம் பக்கத்தில இருக்குதே அங்கேதான்... அப்போதான் விசா கிடைக்கும்''

மனோகருக்கு, அப்படிச் சொல்லும் போது, நாக்கே நடுங்கியது. உடம்பும் ஆடியது. அதை மறைப்பதற்கோ என்னமோ, கலைவாணியைக் கட்டி அணைத்தான். முகத்திற்கு முகம் காட்டாமல், அவள் முதுகில் முகம் போட்டான்.

11

மனோகர், கிட்டத்தட்ட ஒரு வட்டச் செயலாளர் மாதிரி அந்தக் குடியிருப்பில் ஆக்கப்பட்டு விட்டான்.

அந்தப் பூஞ்சோலை அடுக்குமாடிக் குடியிருப்புகளின், தோரண வாயிலின் முன் பக்கம், ஒரு கண்டசா கார்... கம்பெனி அனுப்பி வைத்திருந்தது. வெள்ளை வெளேர் என்று தங்க நிற விளிம்போடு, அமெரிக்க பாணியில் அசல் சண்டித்தனமாய் நின்றது... உள்ளே யூனிபாரம் போட்ட டிரைவர்... முன்னாலும், பின்னாலும் சில கார்கள்.

மனோகர், அந்த குடியிருப்பு வாசிகளில் முக்கால்வாசிப் பேர் புடைசூழ, கழுத்தில் ஒரு ரோஜாப்பூ மாலையோடும், கையில் ஒரு மலர்ச் செண்டோடும், கலைவாணிக்கு இணையாய் நடந்தான். குடியிருப்போர் சங்கம், ஒரு சாமியானா பந்தலுக்குக் கீழே, அவனுக்கு வழியனுப்பு விழா நடத்திவிட்டு, அங்கிருந்தே அவனை நடத்திக் கொண்டு வந்தது. குடியிருப்பு பெண்கள் சங்கம், ஏற்கெனவே ஒரு பாராட்டு விழாவை, 'கட் அவுட்' வைக்காத குறையாக, தடபுடலாய் நடத்திவிட்டது. இந்தப் பெருமையில் திருமதிகள் பாலா நாராயணசாமி, நாகராஜன் உள்ளிட்ட அனைத்து திருமதிகளும், முண்டியடித்து எதிரே நகர்ந்து கொண்டே போன வீடியோக்காரர்களை விரட்டியடித்துப் பிடிக்கப் போவது போல அங்குமிங்குமாய் முன்னேறினார்கள்.

காரின் டிக்கியில் ஏற்றப்படும் சூட்கேஸ்களை, கையில் பிரம்புக் கூடையை பிடித்தபடியே, கலைவாணி மேற்பார்வை செய்தபோது, மனோகர், எல்லோருக்கும் தனித்தனியாய் கை கொடுத்து, அலுத்துப் போய்,

அடுத்தபடியாய் எல்லோரையும் பார்த்து விட்டு ஒட்டு மொத்தமாய்க் கும்பிட்டான். ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்ற வேலைக்காரச்சிறுமி மீனாட்சியின் அருகில் போய், அவள் கையைப் பிடித்தபடியே ''மீனாக்குட்டி... ஒனக்கு அமெரிக்காவில் இருந்து, இந்த அண்ணா... என்ன வாங்கிட்டு வரணும்... சொல்லு' என்றான். மீனாட்சி மேலாடையை கையால் கசக்கி, கண்களை கூச்சப்பட்டதுபோல் இயக்கிய போது, 'ஒரு நல்ல துடைப்பக் கட்டையா வாங்கிட்டு வரச் சொல்லுவாள்' என்று நிர்மலா சொன்னபோது ஒரே சிரிப்பு...

இதற்குள், குடியிருப்போர் சங்கத் தலைவர் நாராயணசாமியும், இதே மாதிரியான பெண்பால் பதவிக்கு ஒரு கண் போட்டிருக்கும் திருமதி பாலாநாராயணசாமியும், மனோகரின் கரங்களை ஆளுக்கு ஒருவராக பிடித்து கார் அருகே கொண்டு வந்தனர். பாலம்மா... கார்க்கதவைத் திறக்க, நாராயணசாமிகள் ஏறிக் கொண்டு, மனோகரை உள்ளே கூப்பிட்டார்கள். மோனிகாவால் பொறுக்க முடியவில்லை. கலைவாணியைப் பற்றிக் கவலைப்படாமல்... என்ன இது... வயதுக்கும், அறிவுக்கும் சம்பந்தம் இல்லை என்கிறது எவ்வளவு உண்மை...

''மாமி நீங்களும், மாமாவும் இறங்குங்கோ... கலைவாணி ஏறிக்கட்டும்...''

''இடமிருக்கே... வா... கலைவாணி''

''அவங்க சின்னஞ்சிறிசுங்க... மூன்று மாதத்துக்கு... ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் இருக்கப் போறவங்க... கடைசி நேரத்தில... கார்லே 'ஃப்ரியா' போகட்டும்... நீங்க இறங்கி, ஒங்க கார்ல போங்கோ மாமி... நானும் வேணுமுன்னால் துணையாய் வாறேன்!''

கலைவாணி, வேறு சந்தர்ப்பமாக இருந்தால், நயத்தகு நாகரீகம் கருதி, மோனிகாவை செல்லமாய் அதட்டி இருப்பாள். ஆனால் இப்போது, அப்படி அவளைத் தட்டி கேட்க மனமில்லை... நாராயணசாமிகளுக்கே இது தெரிந்திருக்க வேண்டும்.

திருமதி பாலாநாராயணசாமியும், அவள் பெயருக்கு பின் பெயர் கொண்டவரும், காரின் அடுத்த கதவைத் திறந்து, மறுபக்கமாகத் துள்ளியபோது, மோனிகா, ஒரு புன்னகையோடு, மனோகரைப் பார்த்தாள். பிறகு, கலைவாணியை காருக்குள் தள்ளி விட்டாள். மனோகர், காருக்குள் நுழையப் போனபோது, திருமதி கல்யாணராமன் தன் பேரனை நியூயார்க்கில் பப்பல்லோ பல்கலைக்கழகத்தில், 'எம்.எஸ்.' படிக்க வைக்க திட்டமிட்டிருப்பதை நினைத்தபடியே, அந்தப் பேரன் பிரியாராமனை,

மனோகர் முன்னால், பூனைமாதிரி நடக்கவிட்டு 'மாமாவுக்கு, 'பிளசன்ட் ஜர்னி விஷ் பண்ணுடா' என்றாள். அந்தப் பிரியா ராமனோ, அப்போதும் மனோகரின் தலைக்கு அப்புறமாய் கண்களை ஏவிவிட்டு, குதிகாலில் நின்றபடி, ஒருத்தியை சைட் அடித்தான். அதற்குள், சியாமளா, இடுப்புக்குள் வைத்திருந்த ஒரு எலுமிச்சம் பழத்தின்மேல் கற்பூரம் ஏற்றி, மனோகர் முகத்துக்கு முன்னால் மூன்று தடவை சுற்றி, இந்த மூன்று சுற்றுக்களிலும், தனது யூஸ்லஸ் கணவனின் அமெரிக்க எதிர்காலத்தை அடக்கி வைத்திருப்பதுபோல், கரங்களை, ஏரோப்பிளேன் மாதிரி சுற்றவிட்டாள். பிறகு 'திருஷ்டியை நீக்கிடும்' என்று கையில் இருந்த ஒற்றை எலுமிச்சைப் பழத்தை தரையில் போட்டு மிதித்தாள். அக்கம் பக்கத்து பெண்களைப் பார்த்தபடியே, அந்தப் பழத்தை பீஸ் பீஸாக்கினாள்; இதனால், ஆண்கள் சந்தோஷப்படவில்லையானாலும், வருத்தப்படவில்லை... ஆனால் பெண்கள், ஆவேசப்பட்டார்கள். இந்த சியாமளா, திருஷ்டி கழித்து, தங்கள் கண்களுக்கு மாசு கற்பிக்கிறாளே என்றல்ல... இவளே, முண்டியடித்து, முக்கியத்துவம் பெற்று மனோகர் உபயத்தில், அமெரிக்கா போவதற்கு முன்னுரிமை பெறுகிறாளே என்ற ஆவேசம்

மனோகரை, அந்தக் கூட்டத்தில் அப்படியே விட்டால், அவனை ஏற்றிச் செல்லப் போகும் விமானம், அவன் இல்லாமலே, இரண்டு தடவை அமெரிக்கா போய்விட்டு வந்துவிடும் என்பதைப் புரிந்து கொண்ட கம்பெனிக்கார் டிரைவர், அந்த கண்டசா காரை கத்தவிட்டார். மனோகர், காரில் ஏறிக் கொள்ள, அந்தக் காரும், உருமி உருமி ஓடப் போனது. பதிலுக்கு பின்னாலும், முன்னாலும் நிறுத்தி வைக்கப்பட்ட கார்களும் உருமி காட்டின. ஒரு நாய் குரைத்தால், எல்லா நாய்களும் குரைக்குமே, அப்படி...

காரின் பின்னிருக்கையில், மனோகரின் தோளில், கலைவாணி சாய்ந்து கிடந்தாள். மயில் இறகில் செய்யப்பட்டது போன்ற அந்த இருக்கை சுகத்தைவிட, மனோகர் போட்டிருந்த கோட்டில், கரடுமுரடான தோள்பட்டை முடிச்சு, அவளுக்கு பெரும் சுகத்தைக் கொடுத்தது. அந்தக் கார், கிண்டி போகும் வரை, அவனோடு சிரித்துப் பேசியவள், கிண்டி திருப்பத்தில், தேசிய சாலையில் போனதுபோது, விசும்பத் துவங்கிவிட்டாள். கண்ணீர் தாரை தாரையாய் வெளிப்பட்டது. மனோகர், அவள் தோளைத் தட்டிக் கொடுத்தான். அவள் முகத்தை நிமிர்த்தி, கண்களை, தனது கைக்குட்டையால் துடைத்து விட்டான். ஆனால், அவளோ, விசும்பலை அழுகையாக்கப் போனாள். மனோகரின் தோளிலேயே, தலையை லேசாய் முட்டிமுட்டி அழுதாள். இந்த மாதிரி சமாச்சாரங்களை கண்டு கொள்ளாத டிரைவர்கூட திரும்பி பார்த்தார்.

மனோகர்... டிரைவர் பார்த்ததை, கலைவாணிக்கு, கண்களால் குத்திக் காட்டியதும், அவள், முந்தானையை சரி செய்தபடியே நிமிர்ந்து உட்கார்ந்தாள். ஒரு சின்னச் சிரிப்பை படரவிட்டாள். அந்தச் சிரிப்பு, கண்ணாடியில் பார்த்த டிரைவர் முகத்தில் ஒரு புன்னகையாய்த் தொற்றியது. ஆனாலும், கலைவாணி, மீண்டும் சத்தம் போடாமலேயே கண்ணீர் விட்டாள். மனோகர், மீண்டும் கைக்குட்டையால், அவள் முகம் முழுவதையும் துடைத்து, அதை ஈரத்தில் பளபளக்க வைத்தான். அதன் காரணத்தையும் குறிப்பிட்டான்.

''இந்தக் கைக்குட்டையை, என் முகத்தை துடைக்காமல், கசக்காமல், அப்படியே, அமெரிக்க மேஜையில் வைக்கப் போறேன்... ஏன்னா... இது என் காதல் ராசாத்தியோட பாசமழை. இன்னும் கொஞ்சம் அழேன்...''

''நீங்களும் எனக்கு நினைவா ஏதாவது கொடுக்கணும்''

''ஒன் வயிற்றத் தொட்டுப் பாத்துக்கோ!''

''சீ... வெக்கமாயில்லே...?''

டிரைவருக்கு, வண்டி 'ஓடிப்பது' சிரமமாய் இருந்தது. சாலையில் புற்றீசல் போல் பறக்கும் வாகனங்களுக்கு இடையே, இப்படியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தால், விவகாரம் விபத்தில் போய்விடும். முன் கண்ணாடியை கைக்குட்டை போட்டு மறைத்தால், பின்னால் வரும் வாகனங்களைப் பார்க்க முடியாது. என்ன செய்யலாம்... சூடு சூட்டை தணிக்கும் என்பதுபோல், பேச்சுதான் பேச்சைத் தணிக்கும்.

''அம்மாவையும், கூட்டிக்கிட்டுப் போகலாமே... அழமாட்டாங்கல்ல?''

''ஏங்க... ஒங்களத்தான்... ஏன் நாட்டுச்சிரிப்பாய் சிரிக்கறீங்க. டிரைவர்... சார்! நான் அமெரிக்கா போகமுடியல்லியேன்னு அழல... மூன்று மாதம் இவரைவிட்டுட்டு எப்படி... எப்படி...''

கலைவாணி, வெட்கம் விட்டு அழுதாள். மனோகர், தோழமையோடு அவள் தலையை தன் தோளில் சாய்த்தான். டிரைவருக்கு என்னவோ, ஏதோ போலிருந்தது. இப்படி வெளிநாட்டுக்கு போகும் கணவன்மாரை, வழியனுப்ப வரும் 'மறுபாதிகள்' செக்கு, பேங்கு போன்ற விவகாரங்களைத்தான் பேசக் கேட்டிருக்கிறார். இப்படி உள்ளன்பாய் பேசுவது, ஒரு விதி விலக்கே; இப்போது அவருக்கே தான் எங்கே சாலை விதிகளை மீறிடுவோமோ என்கிற பயம்; அந்தப் பயம் கார் வேகத்தை நிதானப்படுத்தியது.

மனோகர்... முகத்தை ஆடாமல் வைத்திருந்த கலைவாணிக்கு, ஆறுதல் சொன்னான்.

''மூன்று மாசமும், மூன்று நாளாய் ஓடிடும்... அதோட... நீ ஊருக்குப் போகப் போறே... அங்கே போனதும், நாமா இப்படி அழுதோமுன்னு சிரிக்கப் போறே...'''

''பொய்... நான் ஊருக்குப் போறதாய் இல்ல...''

''ஏன் இங்கேயும் மகளிர் சங்கம் வந்துட்டதாலயா?''

''ஒங்க புத்தி அப்படி... இங்கே இருந்தால், உங்களோட அடிக்கடி போன் பேசலாம்... தினமும் பேச முடியாவிட்டாலும், ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது பேசுங்க''

''அவ்வளவுதான்... கையிலே இருக்கிற டாலர் கரைஞ்சிடும்...''

''அப்போ நானே பேசுறேன்... நைட்ல கரெக்டா பத்து மணிக்கு ரூம்ல இருக்கணும். டெலிபோன் பேசற அளவுக்கு எங்கிட்ட பணம் இருக்குது. அப்பாம்மா கொடுத்த பணம், டெலிபோன்லே எப்படித்தான் பேசப் போறேனோ.. ஒரே அழுகையா வரும். ஏங்க... அதை டேலிபோன் கோளாறுன்னு 'கட்' பண்ணிடாதீங்க''

''இதுக்குத் தான் ஊருக்குப் போன்னு சொல்றேன்...!''

''மாட்டேன்... மாட்டவே மாட்டேன். என் ஸ்ரீராமனுக்கும், எனக்கும் பாலமாய் டெலிபோன் என்கிற அனுமார் கிடைக்கிற இடமே... என்னோட இடம்!''

இதுவரை, அமைதியாக இருந்த மனோகரும், உணர்வுமயமானான். அவளை, இறுகத் தழுவி, முத்தமிட்டான். கண்களை, அவள் நெற்றியில் துடைத்து, குங்குமத்தைக் கலையவிட்டான். சிறிது... நேர மௌனப் பார்வைகளுக்குப் பிறகு, உற்சாகமாக சொன்னான்.

''கலைவாணி... ஒரு குட் நியூஸ் மெடிக்கல் டெஸ்ட்டுலே நான் அவுட் ஸ்டாண்டிங்... ஹெச்.ஐ.வி. இல்லவே இல்லே...''

''ஏன் இப்படி... அபத்தமா பேசுறீங்க... இது ஏன் ஒங்களுக்கு வரப் போவுது''

மனோகர், மௌனம் சாதித்தான்... அவனைப் பாடாய்படுத்தி, பரிசோதித்த டாக்டர்கள், 'ஓகே' சொல்லிட்டார்கள். 'அது' இருந்திருந்தால், எழுதாமலா இருப்பார்கள்? ஆனாலும் இவளிடம் 'எங்கப்பன் குதிருக்குள்ள

இல்லை' என்கிற மாதிரி பேசி இருக்கப்படாது''

மனோகர், கலைவாணியின் முகத்தை, அவளுக்குத் தெரியாமலே பார்த்தான். அவளோ, பின்புறமாய் கை திருப்பி, அவன் பிடரியை வருடி விட்டாள். அவனுக்கும் அளப்பரிய மகிழ்ச்சி... அவனைப் பரிசோதித்த வர்கள், ''கொம்பன் டாக்டர்கள்''. மூன்று மணி நேரம் சோதனை செய்தார்கள். ஒரு சின்ன இன்பெக்ஷனைக் கூட அவர்களால் சுட்டிக்காட்ட முடியவில்லை... இருந்தால்தானே எடுத்துக்காட்ட? சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?''

மனோகரும், கலைவாணியும், கார்களில் வந்திறங்கிய அடுக்குமாடி வாசிகள் அத்தனை பேரும் மொய்க்க, விமான நிலையத்திற்குள் நுழைகிறார்கள். அங்கேயும், அவன் ஒரு விஐபி ஆனான். கம்பெனியின் உதவிப் பொது மேலாளர் சூரிய நாராயணன் தலைமையில் ஒரு கம்பெனிப் பட்டாளமே காத்து நின்றது... பைஜாமா... சல்வார் கமிஸ் பெண்கள், சபாரிக்காரர்கள்... சூட்டு, கோட்டு ஜென்டில்மேன்கள்... உதடு பிரியாமல் பேசி, தோளை மட்டும் லாவகமாய் குலுக்கும் நவீனக்காரர்கள், காரிகள்...

சூரியநாராயணன், மனோகருக்கு பூச்செண்டு கொடுத்தார். நீட்டிய கையை, மனோகரின் கையோடு இணைக்கப் போனவர், திடீரென்று, அவனை தனது தோள்களில் குப்புறச் சாய்த்து, அவன் முதுகை தட்டிக் கொடுத்தார். அப்போது பலத்த கைத்தட்டல்; சுற்றி நின்றவர்களை சுண்டி இழுக்கும்... ''ஹாய் ஹாய்''... ஒலிப்புகள். அப்போது பார்த்து ரத கஜ துரக பதாதிகளோடு உள்ளே நுழைந்த ஒரு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே, அவன் மீது பொறாமை ஏற்பட்டது. அவனையும், அந்தக் கூட்டத்தையும் உஷ்ணமாகப் பார்த்துவிட்டு, சிறிது தொலைவில் தலைமறைவாய் உள்ள வி.ஐ.பி. லவுஞ்சை நோக்கி மிடுக்காய் நடந்தார்.

பகல் நேரத்திலும், இரவு போல் ஜொலித்த விமான நிலையத்தை, கலைவாணி பராக்குப் பார்த்தாள். வெளியே வெயில் சுட்டெரிக்க, இங்கே அதற்கு எதிர் விகிதாச்சாரத்தில் ஒரு கிளுகிளுப்பு... இந்தியை ஆங்கிலமாகவும், ஆங்கிலத்தை இந்தி மாதிரியும் உச்சரிக்கும் அறிவிப்புகள்; சிவப்பு விளக்கும், பச்சை விளக்குமாய் பாளம் பாளமாய் ஜொலிக்கும் மேல்கூரை. கறுப்பும் வெள்ளையுமாய் கலந்து நின்ற பயணிகள்; 'ஆகாய' மனிதர்களை நின்ற இடத்திலேயே நிற்க வைத்து, அவர்களை, மேலேயும் கீழேயும் போக்குவரத்து செய்யும் எலிவேட்டர்கள்... இரும்புக் கம்பியில் பொருத்தப்பட்ட பிளாஸ்டிக் நாற்காலிகளில், கால் மேல் கால் போட்டுக் கிடந்த லேடீஸ் அன்ட் ஜென்டில்மேன்... பிள்ளைகளை குவாய்த்துக்கோ... சவூதி அரேபியாவுக்கோ வழியனுப்ப வந்து பிரிவுத் துயர் தாங்காமல் அழுத

ஏழை பாழைகள்... ஒருத்தருக்கு 'பாப்' இசையாகவும், இன்னொருத்தருக்கு ஒப்பாரியாகவும், கேட்கக் கூடிய விமானச்சத்தங்கள்; இத்தனை அமளியிலும், வாளிப்பான மேனிகளில், சீருடை சிக்கெனப் பற்றிக் கொள்ள, துடைப்பங்களை, செங்கோல் போல் நிமிர்த்தி பிடித்து நடந்த துப்புரவுத் தொழிலாளப் பெண்கள்...

சிறிது நேரம், அங்குமிங்குமாய் கண்களைச் சுழலவிட்ட கலைவாணி மனோகரை பெருமிதமாய் பார்த்தாள். கூட்டத்தில் சிக்கியவனை, தன் பக்கமாய் வரும்படி, கண்ணடித்துக் கூப்பிட்டாள். அவனும் தன்னை பிராண்டி எடுத்த அடுக்குமாடி வாசிகளையும், 'ஜோக்' அடித்த சகாக்களையும் விட்டு விலகுவது தெரியாமல் விலகி, அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசும் சமயம் பார்த்து, கழட்டிக் கொண்டான்; கலைவாணியின் மூச்சு படும் நெருக்கத்தில் நின்று கொண்டான்; கலைவாணி... கேட்டாள்.

"அதோ...பூப் போட்ட டை கட்டுன ஆசாமி... கேன்டீன் பக்கமாய் நிற்கார் பாருங்க... மாநிறமாய், அவரு யாரு... ஏன் அப்படி கப்பல் மூழ்குவது மாதிரி இருக்காரு!"

"அப்படி மூழ்கினால் அவன் சந்தோஷப்படுவான். பொல்லாதவன்... என்னோட சகா... பேரு சங்கரன்... எனக்கும் சீனியர்... மொதல்ல அவனைத்தான் கம்பெனி அனுப்புறதாய் இருந்தது. கடைசி நேரத்தில் அவனுக்குப் பதிலாய் என்னை செலக்ட் செய்திட்டாங்க."

"எதுக்காம்?"

"நீ சொன்னியே விசுவாசம்... அந்தக்காரணம்தான். ஆசாமி, கம்பெனி செலவில் போய்... போட்டிக் கம்பெனி வச்சுடுவானோன்னு மேனேஜ்மெண்டுக்கு பயம் வந்துட்டாம்"

'விசுவாசம் பற்றி நான் சொன்னது எவ்வளவு சரியாயிட்டு பாருங்க. ஆனால் வெறும் யூகத்தை காரணமாய் சொல்ல முடியாதே'

"கரெக்டா சொன்னே... டைபாய்டுன்னு சொல்லி ஒரு மாதம் லீவ் எடுத்திருந்தான். அந்த நோயையே காரணமாய் காட்டிட்டாங்க. அதுல இருந்து என்னை எதிரியைப் பார்க்கிறது மாதிரி பார்க்கான். நான் என்ன செய்ய முடியும்...? நான் போக முடியாதுன்னு சொன்னாலும், அவனை அனுப்ப மாட்டாங்க. வேறு எவரையாவது அனுப்புவாங்க. இது கூட அவனுக்குப் புரியமாட்டேங்குது"

"எப்படியோ... போகட்டும்... பார்க்க பாவமாய் இருக்குது.. அவர் கிட்ட

போய் ரெண்டு வார்த்தை பேசிட்டு வாங்க... ஒரு வயிறு எரிந்து... அதுல நம் வயிறு குளிர வேண்டாம்... போங்க''

மனோகர்... வேண்டா வெறுப்பாய் போனான்.... முகத்தைத் திருப்பிக் கொண்ட சங்கரனின் மடக்கி வைத்த கையை வலுக்கட்டாயமாய்ப் பிடித்து குலுக்கினான். அவனிடம் இவன் ஏதோ பேச, அவன் ஏதோ பேச, மூன்று நிமிடத்தில் முடிந்துவிட்டது. மனோகர் மீண்டும், ஆங்காங்கே நின்றவர்களிடம் பேசியபடியே தற்செயலாய் நகர்வது போல் நகர்ந்து கலைவாணியின் பக்கம் வந்தான். 'ஒன் காட்ல மழை பெய்துடா' என்று வெறுப்பாய்ப் பேசிய சங்கரனை, மனைவியிடம் விமர்சிக்கப் போகும் போது, ஒரு அறிவிப்பு ஆங்கிலத்திலும், இந்தியிலும் ஒலித்தது. பாம்பே பிளைட்டுக்கு, செக்யூரிட்டி செக்கப் துவங்கிவிட்டதாம்... பயணிகள், உடனடியாய் உள்ளே போக வேண்டுமாம். பம்பாய் போய், அங்கிருந்து ஏர் இந்தியாவை பிடித்து... அப்புறம் அமெரிக்கா...

மனோகர், கடைசி முயற்சியாக, கலைவாணியிடம், அவசர அவசரமாய் பேசிக் கொண்டு இருந்தபோதே, உதவிப் பொது மேலாளர் சூரியநாராயணன், ஜூனியர்களோடு அங்கேயே வந்தார். அடுக்குமாடிக்காரர்களும் கூடிவிட்டார்கள். செக்யூரிட்டி செக்கப் மீண்டும் அறிவிக்கப்பட்டது. சூரிய நாராயணன், அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார். சகாக்கள் கை கொடுத்தார்கள். சங்கரன், பக்கத்தில் வந்து பட்டும் படாமலும் நினறான். மனோகர், கைகளைக் குலுக்கக் கொடுத்தாலும், அவனை எதிர்பார்த்து தனித்து நின்ற கலைவாணியின் பக்கம் கண்கள் தாவின. இதை புரிந்து கொண்ட சூரியநாராயணன், ''போர்டிங், கார்ட்தான்... வாங்கியாச்சே... ஒய்ப்புக்கிட்ட கொஞ்சம் பேசிட்டு வா...'' என்று அவனிடம் பேசினார்.

மனோகர், கலைவாணி பக்கம் போனான். அவள் கணவனின் கரங்களைப் பற்றிக் கொண்டாள். அவள், கன்னங்கள் உப்பின... பின் உதடு நீண்டது. மூச்சு சத்தமானது... கஷ்டப்பட்டு, அழுகையை அவள் அடக்கிக் கொள்வது, தொலைவில் நின்ற சூரி உள்ளிட்ட அத்தனை பேருக்குமே புரிந்தது. மனோகர், அவசர அவசரமாய் ஆலோசனை சொன்னான். அடிக்கடி டாக்டர் கிட்டே செக்கப் செய்துக்கோ... வேளா வேளைக்கு சாப்பிடு... நான் ஊட்டி விட்டால்தான் சாப்பிடுவேன்னு அடம் பிடிக்காமல்...

மனோகர், மனதை நிதானப்படுத்த, வேறு பக்கமாய் முகம் திருப்பினான். கலைவாணியும், அவனுக்கு, கடைசிநேர, கட்டளைகளை விடப் போனாள். சிகரெட்டுக்களை தனக்காக விட்டவன், தொடர்ந்து அப்படியே இருக்க வேண்டும் என்று சொல்லப் போனாள். பேசப் ப்போன வாய்க்குள் நீர்க்குளம்... கண்ணீரோ... உமிழ்நீரோ... அவன் கைகளைப்

பிடித்துக் கொண்டு விம்மினாள். உடனே, மனோகர் பிடிபட்ட தன் கரங்களாலேயே அவள் கரங்களை எடுத்து தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

இதற்குள் விமானம் ஆயத்த நிலையில் இருப்பதாக ஒரு அறிவிப்பு... சூரிய நாராயணனே, அங்கே வந்து, மனோகரை கூட்டிக் கொண்டு போய், செக்யூரிட்டி ஜோன் வரைக்கும் சென்றார். கலைவாணி, உள்ளே போன கணவனை கண்டுபிடிக்க முடியாமல், அங்கேயும், இங்கேயுமாய் கணகளைச் சுழற்றியபோது, சியாமளாதான், 'அதோ பார்' என்று இவள் மோவாயை மேலே நிமிர்த்தினாள். கலைவாணி, எக்கி எக்கிப் பார்த்தாள். அன்புக்குரியவன், மூன்று மாதம் முகம் காட்டாமல் இருக்கப் போகிறவன், முட்படிகளில் நின்றபடியே, மேலே மேலே போகிறான். பரலோகத்திற்கு போவது போல் போகிறான். அவளுக்கு... அவளுக்கு மட்டுமே கையாட்டி, கையாட்டி, ஒரு அசுரக் கோட்டைக்குள் மறைகிறான்.

கலைவாணியை, மோனிகாவும், சியாமளாவும் தாங்கிக் கொள்கிறார்கள். பாலா மாமியும், திருமதி கல்யாணராமனும் பக்கத்தில் வந்து நிற்கிறார்கள். பிறகு, அவளை ஆளுக்கொரு கையாகப் பிடித்தபடி, அங்கிருந்து நடந்து, விமான நிலையத்திற்கு வெளியே வரும் போது -

டாக்டர் சந்திரா கையில் ஒரு சூட்கேஸோடு உள்ளே நுழைகிறாள். கலைவாணியைப் பார்த்துவிட்டு ஆச்சரியம் தாங்காமல், 'கலை... கலைவாணி' என்று அவள் கையைப் பற்றுகிறாள். கலைவாணிக்கும், சோகம் பின்னுக்குப் போகிறது. பெருமிதம் முன்னுக்கு வருகிறது.

''என் ஹப்பி... நியூயார்க் போறார் டாக்டர்...!''

''சுகமா இருக்கியாம்மா...''

''என்னைப் பார்த்தாலே, தெரியலியா டாக்டர்... எப்படி குண்டாயிட்டேன் பாருங்க... நீங்க எங்கே இப்படி டாக்டர்...''

''டில்லிக்கு.. போறேன்... எய்ட்ஸ் சம்பந்தமா ஒரு கான்பரன்ஸ்' என்னை செலக்ட் செய்திருக்காங்க...''

''கன்குராஜுலேஷன்... டாக்டர்''

''எனக்கும், கண் கெட்ட பிறகுதான்... சூரியநமஸ்காரத்தை சொல்லிக் கொடுக்காங்க... வாறேம்மா... உடம்பை நல்லா பார்த்துக்கம்மா... சத்துணவா சாப்பிடு...''

''வீட்டுக்கு வாங்களேன் டாக்டர்... இந்தாங்க விசிட்டிங் கார்ட்...''

டாக்டர் சந்திரா, கலைவாணியை மருவி மருவிப் பார்த்தபடியே உள்ளே வந்தாள்... அவளுக்காக, காத்து நின்ற மாமா மகன் சங்கரை, அக்கம் பக்கம் பார்த்து தலையில் குட்டினாள். அவன் வழக்கம் போல் சிரிக்காமல், வாடிப் போய் நின்றான்.

''என்னத்தான்... ஒரு மாதிரி இருக்கீங்க... ஒங்க பாரின் டிரிப் என்னாச்சு...''

''கடைசி நேரத்துல கால வாரிட்டாங்க... எனக்குப் பதிலாய்... நீ வாசல் பக்கமாய் பேசிட்டு நின்னியே... கலைவாணியோ... கொலைவாணியோ அவளோட ஹஸ்பன்ட் போறான்... எனக்கு ஜூனியர் பயல்...''

''அட கடவுளே... என்ன காரணமாம்...''

''காரணமாவது... கத்திரிக்காயாவது... டெப்டி ஜெனரல் மானேஜருக்கும், எனக்கும் பிடிக்காது... அதுதான் உள் காரணம். ஒன்னைப் பார்க்க வாரதுக்காக டைபாய்டுன்னு சும்மா ஒப்புக்கு ஒரு சர்டிபிகேட் வச்சு மெடிக்கல் லீவ் போட்டேன். அந்த இல்லாத டைபாய்டையே அவங்க எனக்கு எதிராய் திருப்பிட்டாங்க.''

''அப்போ... எய்ட்ஸ் கிருமிகள்.. இருக்கிறவரை மட்டும் அனுப்பலாமா...?''

'நீ என்ன சொல்றே?'

'ஒண்ணும் இல்ல... மாமா... அத்தை எப்படி இருக்காங்க!'

டாக்டர் சந்திரா, நாக்கை கடித்தாள். பேச்சை வேறு பக்கமாய் மாற்றப் போனாள். சங்கருக்கு ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அவள், மனோகர் சம்பந்தப்பட்ட ஒன்றை மறைக்கப் பார்ப்பது புரிந்தது. இல்லையானால், எந்த மாமா - அத்தை வீட்டில் இருந்து இப்போது இங்கே வந்தாளோ, எவரிடம் நேற்று ராத்திரி முழுக்க அரட்டை அடித்தாளோ, அந்த மாமா - அத்தை பற்றி கேட்டிருக்க மாட்டாள். சங்கரன், அவளை, கேன்டீன் பக்கமாய் கூட்டிப் போனான்.

'என்ன பராக்கு பாக்கே...?'

'என்னோட வரவேண்டிய அசோகனை இன்னும் காணலையே...'

சங்கரன் சங்கடப்பட்டான். மனதிற்குள்ளே மனோகரைப் போல் அசோகனைக் கொன்று போட்டான்.

12

சங்கரன், பேசாமல் இருப்பதில், டாக்டர் சந்திராவுக்கு எந்த ஆச்சரியமும், ஏற்படவில்லை. கார் ஒட்டும் போது, அந்த பக்கமோ, இந்தப் பக்கமோ பார்க்க மாட்டான். உடம்பில் நமைச்சல் ஏற்பட்டால் கூட, அதை வெளிப்படையாய்க் காட்டிக் கொள்ள மாட்டான். ஏதோ தன்னந்தனியாய், பேடி வேடத்தில் இருந்த அர்ச்சுனன், துரியோதனன் படைகளை எதிர் கொண்டது மாதிரி, எதிரே வரும் கௌரவ வாகனங்களை எதிர்த்து, பயங்கரமான ஒரு பெரும் போரை நடத்துவது போல், காரை ஓட்டுகிறவன். இது பயமா அல்லது, கருமமே கண்ணான ஒன்றிப்பா என்பது அவளுக்குத் தெரியாது. சென்னை விமான நிலையத்திற்கு பத்து மணிக்கு வர வேண்டிய டில்லி விமானம், பன்னிரண்டு மணிக்குத் தான் வந்தது. விமான நிலையத்தில், அவளை எதிர் கொண்டழைத்த சங்கரன் பேசிய முதல் பேச்சே 'அந்த கிராதகன் அசோகன் வரலையா...' என்ற கேள்விதான். அதற்குப் பதிலாய், சந்திரா சிரித்தாள். அவன் புருவங்களை, காவடியாய் வளைத்த போது 'அவரும் ஒங்களை இப்படித்தான் நினைக்கார்' என்றாள். உடனே 'நான் ஆபீஸ்க்கு வேற போகணும்... சீக்கிரம்... குயிக்' என்று சங்கரன் சொன்னதோடு சரி.

சந்திரா, தாய் மாமா மகனான இந்தச் சங்கரனிடம், டில்லி அனுபவங் களைப் பற்றிப் பேச துடித்துக் கொண்டிருந்தாள். புது டில்லியில், தமிழக அரசின் தமிழ்நாடு இல்லத்தில், தனி அறையில், இவனை நினைத்துக் கொண்டதால், தூக்கம் கெட்டதை, அவன் தலையில் குட்டிக் குட்டிச் சொல்ல வேண்டும். திரும்பி வரும் போது விமானத்தில், பக்கத்தில் உட்கார்ந்த ஒரு பாடாவதி கிழவிக்குப் பதிலாக, இவன் இருந்திருந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்ததைச் சொல்ல வேண்டும்... இப்போது சொன்னால்

கேட்கமாட்டான். வரட்டும்... வரட்டும்... வீட்டுக்கு வரட்டும்...

சென்னை நரகத்தின் நகரமான அண்ணா நகரில், ஒரு மூலையில், பெரிதாகவோ, சிறிதாகவே, இல்லாத சராசரி வீட்டின் முன்னால் கார் நின்றதும், சந்திரா துள்ளிக் குதித்து கீழே இறங்கினாள். வாசலுக்கு வந்துவிட்ட அத்தையைப் பற்றிக் கொண்டாள். அந்த முத்தமும் இந்தப் பற்றுதலும், குடும்பத்தை நண்டும் சிண்டுமாய் விட்டுட்டு, மாரடைப்பால் தந்தை மரணமானபோது, குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்த தாய் மாமாவுக்கு நன்றி சொல்வது போல் இருந்தது. மாமாவின் பேருதவியை, முணுமுணுக்காத - இன்னும் சொல்லப் போனால், உறுதுணையாக நின்ற இந்த அத்தைக்கு, தான் மனமுவந்து மருமகளாய் ஆகப் போகிற பழைய உறவின் புதிய பதிப்பை, சமிக்ஞையாக்குவது போல் இருந்தது. மாமா... மௌனச் சுகத்தோடு, தங்கை மகளைப் பார்த்தபோது, அத்தை கேட்டாள். ஜாக்கெட்டுக்கு மேல் உல்லன் ஸ்வட்டரை தொட்டுப் பார்த்துக் கேட்டாள்.

''இந்த வெயிலுல... எப்படித்தான் இதை போட்டிருக்கியோ''

''இங்கதான் வெயிலு... டில்லியில் ஒரே குளிரு... எல்லாரும் கம்பளிப் போட்டு போட்டு உயரமான எஸ்கிமோக்கள் மாதிரி அலையறாங்க. நான் கூட, உடம்பிலே பேண்டேஜ் போட்டது மாதிரி... கம்பளி ரஜாய் இதுங்கள இரவிலே சுத்திக்கிட்டேன்...''

'ஒனக்கு வேற உதாரணமே கிடைக்காதே... சரி... சரி... உள்ளே வா. உடனே போகனுமுன்னு காலுல ஊசியை குத்திட்டு நிற்காதே'

சந்திரா, மாமாவை சிரிப்போடு பார்த்துவிட்டு, உள்ளே போனபோது, சங்கரன் சூட்கேசோடு உள்ளே வந்தான். சந்திரா, சமையலறைக்குள் போன அத்தையிடம் 'எத்தே பிளைட்டுலேயே டிபன் கொடுத்துட்டாங்க. ஒரு கப் காபி மட்டும் போதும்' என்றாள்.

மாமா, ஒரு படிப்பாளி... கண்டதைப் படிப்பவன் பண்டிதன் என்பதைக் கண்டிப்பாகப் பின்பற்றுகிறவர். கண்டது என்பது அவரது அகராதிப்படி கவர்ன்மென்ட் சர்வன்ட் காண்டக்ட் ரூல்ஸ், கவர்மென்ட் சர்வென்ட் லீவ் ரூல்ஸ் போன்றவைகளே... இவை சம்பந்தப்பட்ட நீதி மன்றத் தீர்ப்புக்களும் அவருக்கு அத்துபடி. அதனாலயே ஒய்வு பெற்ற இந்த டெப்டி செகரட்டரியிடம 'ஐடியா' வாங்க பல அதிகாரிகளும் ஊழியர்களும் வருவதுண்டு... இப்போது கூட, மெடிக்கல் லீவில் இருப்பவனை சஸ்பென்ட் செய்ய முடியுமா என்று கேட்க, ஒரு செக்ஷன் ஆபீசர் பயபக்தியோடு நிற்கிறார். ஊழல் விசாரணையிலோ அல்லது வேறு

விசாரணையிலோ சஸ்பெண்டான தனக்கு, டிபன்ஸ் அசிஸ்டெண்டாக வர வேண்டும் என்று காலில் விழுந்து கும்பிட்டுக் கேட்க, ஒரு தாடி மீசைக்காரர் வந்திருக்கிறார். அவர் தாடியைப் பார்த்தால், அவர் சஸ்பெண்டாகி மூன்று மாதம் ஆகியிருக்கலாம்.

மாமா... கவர்ன்மென்ட் செர்வன்ட்ஸ் உலகிற்குள்ளும், அத்தை சமையல் லோகத்திற்குள்ளும் ஒன்றிப் போன போது, சங்கரன், அவசர அவசரமாய் டையை சரி செய்து கொண்டே, 'நேரமாயிட்டு நான் வாறேன்' என்று வரவேற்பு அறையையே சுற்றிச் சுற்றி வந்தான்... உடனே... சமையலறையில் இருந்து ஒரு அதட்டல்.

''இன்னைக்கு ஒரு நாள் லீவ் போடேண்டா... நீதான் கம்பெனியை தலையில் தூக்கிட்டு ஆடுறது மாதிரி... நீ கோணச் சத்திரம் போகும் போது, சந்திரா ஆஸ்பத்திரிக்குப் போனால், உனக்கு எப்படி இருக்கும்...''

''அப்படியும் இவருக்கு உறைக்காது... அத்தே... என்னையா பார்க்க வரார். அவரு அத்தையத்தான் பார்க்க வரார். இன்றைக்காவது தாய் சொல்லைத் தட்டாத தடியனாய் இருங்களேன்...''

சந்திரா, உள்ளே நிற்கும் அத்தையிடம் சத்தம் போட்டுப் பேசிவிட்டு, இங்கே நிற்கும் மாமா மகனிடம் ரகசியம் பேசுவது போல் பேசினாள். பிறகு, அவனை, தனது அறைக்குள் வரும்படி கண்ணடித்துவிட்டு, உள்ளே போனாள். அவன் வருவது வரைக்கும் போவதில்லை என்பது போல், அந்த அறையில் வாசலிலேயே நின்றாள். அப்படியும் வராமல் டெலிபோனைக் குடைந்து கொண்டிருந்தவனை ஓடிப் போய் பிடித்து, அறைக்குள் இழுத்துக் கொண்டு போனாள். அவள் கட்டிலிலும், அவன் ஒரு நாற்காலியிலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

சந்திரா, ஒரு குழந்தைக் குதூகலத்தோடு, டில்லி அனுபவத்திற்கு ஒரு முன்னுரை வழங்கினாள்.

'விமானத்தில போனது இதுதான் முதல் தடவையா... உயிரை கையில பிடிச்சிக்கிட்டு இருக்கையிலே இருந்தேன். பிளேன் ஓடிட்டு... அப்புறம் தூக்கலாய் போய் பிறகு நேரா ஆகாயத்தில தாவும் போது தல சுற்றிட்டு, காதுகளில் ஒரே வலி, அதோட அடைப்பு... நல்லவேளை டாக்டர் அசோகன், பக்கத்தில இருந்ததால், தப்பிச்சேன்''

''அந்த கிராக்கனை விடு... ஆனாலும் நீ கொடுத்து வச்சவள். எத்தனையோ பெரிய டாக்டருங்க இருக்கும் போது, ஒன்னை செலக்ட் செய்திருக்காங்க பாரு...''

''கண்ணு போட்டுடாதீங்க. நாங்க டாக்டருங்க பாவப்பட்ட பிறவிங்க. இருபது வருஷமா அசிஸ்டென்ட் சர்ஜன், அப்புறந்தான் சிவில் சர்ஜன். அதோட செக்குமாடு மாதிரி சுற்றுன இடத்தையே சுற்றி சுற்றி வரணும்... நீங்க என்ஜினியருங்கதான், கொடுத்து வச்சவங்க. எங்களைப் போல எம்.பி.பி.எஸ். செலக்ஷன்லே இடம் கிடைக்காமல், என்ஜியரிங் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பு முடிஞ்சதும், நீங்க பிளைன்லே போறதும், நட்சத்திர ஹோட்டல்ல தூங்கிறதும், மாருதி கார்லே போறதும்... அடேயப்பா... நீங்கதான் கொடுத்து வச்சவங்க...'''

''யார் கொடுத்து வைத்தாலும்... நான் கொடுத்து வைக்காதவன்...''

''என்னை கட்டிக்கப் போறீங்களே... அது போதாதா!''

''அதனாலதான் அப்படிச் சொன்னேன்''

''இந்தா பாருங்க''

''தமாஷ்க்கே... இப்படி தடாலடியாய் கோபப்பட்டால் எப்படி? போகட்டும்... கான்பரன்ஸ்... எப்படி நடந்தது?''

'விஞ்ஞன்பவன்னு ஒரு பெரிய கட்டிடம்... நான்கு பக்கமும் வாசல். கொள்ளை கலையழகு... பத்து மணிக்கு துவங்க வேண்டிய கான்பரன்ஸ்... சுகாதாரத்துறை செக்கரட்டரி லேட்டாய் வந்ததால... பதினோரு மணிக்கு துவக்கம்... பாதி டாக்டர்கள் 'ஷாப்பிங்' போயிட்டாங்க... அதோடு எய்ட்ஸ் நோயோட தாக்கத்தைப் பற்றியும், அந்த நோயாளிகளை எப்படி அணுகனும் என்றும் ஒரு திட்டவட்டமான கொள்கை இல்லை... கத்துக்குட்டியான எனக்கே தாங்க முடியலே. கேள்வி பதில் நேரத்தின் போது, ஒரு கேள்வி கேட்டேன். 'ஒருத்தருக்கு... ஹெச்.ஐ.வி. இருப்பதாய் ஒரு டாக்டருக்கு தெரிய வந்து... அந்த நோயாளிக்கு திருமணம் நடக்கிறதும் தெரிய வந்தால், சம்பந்தப்பட்ட டாக்டர், அந்த திருமணத்தை தடுக்க முயற்சிப்பது தப்பா'ன்னு கேட்டேன். பாருங்கத்தான்... அநியாயத்தை... கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்த ஜாயின்ட் செகரட்டரி என்னைக் கண்டுக்கல... நான் சொல்றதை கேட்டுட்டு, கால் நிமிடம் மௌனமாய் இருந்துட்டு, அப்புறம் நெக்ஸ்ட் கொஸ்டின்னு சொல்லிட்டார். உடனே டாக்டர் அசோகன், எழுந்து அவரை உலுக்கு உலுக்குன்னு உலுக்கிட்டார். அப்படியும் அந்த ஜாயின்டு, அடுத்த கேள்வின்னு அலட்சியமாய் கேட்டார். உடனே அசோகன் வெளிநடப்பு செய்திட்டார்!''

''அந்த கிராக்கனோட.... பழகுறதை விடு... இல்லன்னா... ஒன்னையும் ஒரு வழி பண்ணிடப் போறான்''

''அவரு ரொம்ப ரொம்ப நல்லவரு... அத்தான்''

''எப்படியும் இருந்துட்டுப் போறான். அவன் பேச்சை என்கிட்ட எடுக்காதே. அப்புறம் எனக்கு ஒரே குழப்பம்... சந்திரா... ஹெச்.ஐ.வி. என்கிறாங்க. எய்ட்ஸ் என்கிறாங்க... என்ன இதெல்லாம்?''

''ஹெச்.ஐ.வி. என்கிறது... ஒரு வகை கிருமியோட பெயர்... எய்ட்ஸ் என்கிறது, அது கொடுக்கிற நோயோட பெயர்... ஹெச்.ஐ.வி. என்கிறது ஹ்யூமன் இம்யூனோ டிபிசியன்சி வைரஸ்... அதாவது மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை முறியடிக்கும் கிருமின்னு பெயர்... இந்த கிருமியா நோய் கொடுக்காது. ஆனால் நம்ம உடம்பிலே இருக்கிற எதிர்ப்பு சக்தியை தகர்த்து, எல்லா கிருமிகளும் உடம்புக்குள்ள வரதுக்கு வாசலை திறந்து விடும்... இந்த கிருமிகள், பல்கி பரவி, நம்மோட எதிர்ப்பு சக்தியை தகர்த்துட்டால் எந்த நோயும் வரும்... ஆனால், வந்த நோய் உயிரோடுதான் போகும். இதனால்தான் இந்த கிருமி கிரியா ஊக்கியா இருந்து பல நோய்களுக்கு ஒரு கூடாரமாகுது... அதனால் தான்... இதுக்கு அகொயர்டு இமினோ டிபெஸியன்ஸி சின்ரோம் என்று பெயர்; இதோட சுருக்கம்தான்... எய்ட்ஸ்; அகொயர்டு என்றால் நாமாக தருவித்துக் கொள்கிற கிருமின்னு எடுத்துக்கலாம்...''

''அய்யோ... எனக்கு கர்ப்பம் தரிக்காமலே மசக்கை வருது...தலை சுற்றுது''

''இது கேலிக்குரிய நோயும் இல்ல. கிருமியும் இல்ல...நம்ம உடம்பு ஒரு அற்புதமான கட்டுமானம்...இதனால்தான் பல மகான்கள் இந்த உடம்பைத் தந்த கடவுளை 'பொறியாளரின் பொறியாளர்' என்று சொல்வாங்க...''

''நம்ம உடம்புக்குள்ள இருதயம் ஒரே நாளில் 13 லட்சம் தடவை துடிக்குது... உடல் முழுக்க ரத்தம் தினமும் 14 கோடி மைல் தூரம் வரை பாயுது...நுரையீரல் ஒரு நாளைக்கு 23 லட்சம் தடவை மூச்சுவிடுது. நம்ம ரத்தத்தில் இருக்கிற வெள்ளை அணுக்கள், சமயம் பார்த்து, உடம்புக்குள் வரத் துடிக்கிற லட்சக்கணக்கான எந்தவகை கிருமிகளையும், உள்ளே வந்தா கொத்தி குதறிக்கொன்னுடும்...இதுக்கு நோய் எதிர்ப்பு சக்தின்னு பேர்''...

'பொதுவாக, கிருமிகள் நாலுவகை; மலேரியா, யானைக்கால் நோய்களை கொடுக்கிற பாரசைட் கிருமி; வெள்ளைப் போக்கை தருகிற பங்கஸ்; காச நோயும் தொழு நோயும் கொடுக்கிற பாக்டீரியா; அம்மை வார்க்கிற வைரஸ். ஹெச்.ஐ.வி. என்கிறதும் ஒருவித வைரஸ்தான்... வெயில் பட்டாலே செத்துப்போகிற அற்ப கிருமி. நம்மோட உடம்பு செல்லுலே ஆயிரக்கணக்கான மடங்கு சின்னது.. ஆனால், எல்லா கிருமிகளையும்

கொல்லக்கூடிய வெள்ளை அணுக்களை, குறிப்பாய் இந்த அணுக்களோட டி.4 என்கிற தளபதி வெள்ளையணுக்களை கொன்னுடுது. தளபதி தோற்றால் சரணாகதிதானே... போரில் தோற்றுப்போற நாட்டுக்குள்ள நுழையற வெற்றி பெற்ற நாட்டோட படை வீரர்கள், எப்படி பெண்களை கற்பழித்து, வீடுகளை தீக்கரையாக்கி, சொத்துக்களை சூறையாடுகிறார்களோ, அப்படி சந்தர்ப்பம் தேடி நிற்கும் எல்லா கிருமிகளும் எதிர்ப்பு சக்தி இல்லாத இந்த உடம்புக்குள் புகுந்து, என்னென்ன நோயெல்லாம் கொடுக்க முடியுமோ அத்தனையையும் கொடுத்துடும்...''

சங்கரன் படபடப்பாய் கேட்டான்

''நீ சொல்றது முன்னுக்குப் பின் முரணாய் இருக்கே சந்திரா. உடம்புக்குள்ளே நுழைகிற கிருமிகளை தாக்கி கொல்கிற வெள்ளை அணுக்கள் இதுங்கள எப்படி விட்டு வைக்குதுங்க...''

''இங்கேதான் சூட்சுமம் இருக்குது... இந்த போக்கிரிக் கிருமிகள், வெள்ளை அணுக்கள் மாதிரியே வேடம் போட்டு நுழையுதுங்க... அப்பாவி வெள்ளை அணுக்கள்.... இதுகள... நம்மாளுன்னு நம்பி... உள்ளே அனுமதிக்குதுங்க. இப்படி இருக்க இடம் கொடுத்த அணுக்களை... இவை படுக்க வைக்குதுங்க... பகையாளிக் குடியை உறவாடிக் கெடுக்கிற கதைதான்... சரியான சகுனிக் கிருமிகள்... சகுனியைக் கொல்ல, ஒரு சகாதேவன் இருந்தான். ஆனால் இந்தக் கிருமிகளைக் கொல்ல, இதுவரைக்கும் யாரும் இல்லை... எதுவும் இல்லை.''

''பொல்லாத கிருமி தான்...இது புதுசா... பழசா...?''

'நாட்டு வைத்தியத்தில ஒருவித மேக நோயின்னு சொல்றாங்க. சரியா தெரியல... புதுசோ, பழசோ, 1981ம் ஆண்டு அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோவில், ஓரினச்சேர்க்கை சமூகத்திடம் இதன் பாதிப்பு தெரிந்தது. ஆனால், 1983ம் ஆண்டு பாரீசில் உள்ள பாஸ்டர் ஆய்வு மையத்தில் லுக்மான்டேஜ்னியர் என்கிற விஞ்ஞானி, இந்தக் கிருமியைக் கண்டுபிடித்தார். தமிழ்நாட்டுலே 1987 ஆம் ஆண்டு எய்ட்ஸ் நோயாளி கண்டு பிடிக்கப்பட்டார்... இதுதான் இந்தியாவிலேயே முதலாவது கண்டு பிடிப்பு... அதுவும் பிறத்தியாருடைய ரத்தம் பெற்ற, ஒருத்தருக்கு இந்த நோய் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது...''

''பல அரசியல் வாதிகளுக்கும் இருக்கிறதாய்''

''உண்மைதான்... நம் தலைவர்களில் சிலர்.. .இதுலதான் பாசிட்டிவாய் இருக்காங்க. இந்த நோய் பிரபலமானதே...அது பிரபலஸ்தர்களை பிடிச்சதால்தான்... பிரபல அமெரிக்க திரைப்பட நடிகர் ராக்ஹட்ஸன், பாப்

மியூசிக் பாடகர் மெர்குரி, முன்னாள் டென்னிஸ் விம்பிள்டன் சேம்பியன் ஆர்தர் ஆஷ்- இவங்கல்லாம், எய்ட்ஸ் நோய்க்கு பலியானங்க. இவர்களுக்காக கண்ணீர் வடிக்கும் உலகம், இவர்களோடு பழகி எய்ட்ஸ் நோயை வாங்கி கட்டிக்கொண்ட அப்பாவிப் பெண்களைப்பற்றி ஏன் மூச்சு விடுவதில்லை.. என்று டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினோ நவரத்திலோ மட்டுமே கேட்டார். உண்மை தான். பெண்களாகிய எங்கள் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி... ஆண்களின் தகாத உறவுகளில் அகப்பட்டு சாவது தெரியாமலேயே சாவது அப்பவிப் பெண்கள்தான்.''

''புலம்பாதே..அந்த ஆணுக்கு நோயைக் கொடுத்ததே ஒரு பெண்தானே? இந்த நோய் புதுசுன்னா...எப்படி வந்திருக்கும்?''

''புராணக்கதை மாதிரி நீளும், இதுலயும் ஒரு அரசியல் சமூக உள்நோக்கம் இருக்குது. மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒருவித பச்சைக் குரங்குகளுக்கும் இந்த நோய் இருந்ததாயும், இந்த குரங்குகளுக்கு முத்தம் கொடுத்த, ஆப்பிரிக்கா பெண்கள் இதை... தங்கள் மூலமாய், உலகம் முழுவதும் பரவவிட்டதாகவும் ஒரு கதை. ஏற்கனவே நொந்து போன ஆப்பிரிக்க மக்களை கொச்சைப்படுத்த வெள்ளையர் விடுத்த கட்டுக்கதை... இன்னொன்று, அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்க மக்களை, மேம்பட விடாமல் செய்வதுக்காக உருவாக்கப்பட்ட பயலாஜுக்கல் ஆயுதமுன்னு ஒரு கதை. அணு ஆயுத பரிசோதனைகளால் ஆகாயத்தில் ஏற்பட்ட காற்று மண்டல மாற்றத்தால் ஏற்பட்டதுன்னு வேறு ஒரு கதை... கதை கதையாகவே இருக்கலாம்...ஆனால் இந்தக் கிருமிகள் மட்டும் நிசம்...''

''கடைசியாய் ஒன்று சந்திரா.. இந்த நோய் இருந்தால் என்னென்ன அறிகுறிகள் இருக்குருமாம்''

''ஆரம்பக் கட்டத்தில சிலருக்கு விடாமல் காய்ச்சல், வயிற்றுப்போக்கு இருக்கும்..ராத்திரி வேளையில் வியர்வை கொட்டும்; உடம்பில் சிவப்புப் சிவப்பாய் சில தடிப்புகள் வரலாம்.''

சங்கரன், அவளைப் பயந்து பார்த்தான்.. அவள் குறிப்பிட்ட இந்த அறிகுறிகள், ஒரு வாரகாலமாய் அவனிடமும் உள்ளன. ஆனாலும் யாரிடமும் எந்த உறவையும் வைத்துக் கொள்ளாததை நினைத்து, தன்னைத்தானே தேற்றிக் கொண்டான். கூடவே, முடிவெட்டும் போதோ, முகச்சவரம் செய்யும் போதோ.. வந்திருக்கலாமோ என்ற சந்தேகம், இப்போதும் வியர்வை கொட்டப் போனது. வயிற்றுக்குள் ஏதோ உருண்டது. முதுகில் உள்ள சிவப்பு தடிப்பில் வலியெடுத்தது.

இதை வேறு விதமான அர்த்தப்படுத்திக் கொண்டே, சந்திரா சிரிப்பும்

குறும்புமாய் கேட்டாள்.

''என்னடா இந்த மக்குப்பெண்ணுக்கு இவ்வளவு விலாவாரியாய் விஷயம் தெரியுதேன்னு நினைச்சிங்களா...? மூன்று நாள் கான்பரன்ஸ் சாச்சே..அவங்க எய்ட்ஸ் சம்பந்தமாக கொடுத்த எல்லா லிட்டரேச்சரையும் கரைச்சுக் குடிச்சிட்டேன். எதுலயும், விசுவாசம் இருந்தால், ஒரு முட்டாள் கூட அறிவாளி ஆகலாம். அது இல்லாட்டால் அறிவாளி கூட முட்டாளாக லாம், நீங்க எதுலே சேர்த்தி''

சங்கரன், அவளை பார்க்காமல், அந்த டெலிபோனை பார்த்தான். அலுவலகத்திற்கு விடுமுறை என்று சொல்ல வேண்டும்.. விறைப்பாய் எழுந்து, டெலிபோன் எண்களைச்சுழற்றினான். 'இன்றைக்கு மட்டும்' என்று சொன்னான், பிறகு 'அப்படியா! ஐ.ஸி.!ஓகோ! கம்பெனிக்கு நல்ல மூக்கறுப்பு, வேணும்'' என்று சொல்லிவிட்டு, விடுமுறையைப் பற்றிச் சொல்லாமலே, டெலிபோனை வைத்துவிட்டு, சந்திராவிடம் வந்து ஆனந்தப்பள்ளு பாடினான்

''கடைசியிலே கெடுவான் கேடு நினைப்பான் என்பது சரியாப் போச்சு. நியூயார்க் விமான நிலையத்திலேயே, மனோகர் பயலை செக்கப் செய்திருக்காங்க.அவனுக்கு ஹெச்.ஐ.வி. - அது தான் எய்ட்ஸ் இருக்கிறதை கணடு பிடித்தாங்களாம். உடனடியா பிளைட்ல திருப்பி அனுப்பு றாங்களாம்.''

டாக்டர் சந்திரா முகம் கறுத்தது. விமான நிலையத்தில், மஞ்சளும், குங்குமமாய் பார்த்த கலைவாணியின் முகம், தனது முகத்தோடு முகமாய் முட்டியது. இது தெரியாமல், சங்கரன் மேலும் கடுப்படித்தான்.

''நீ ஏர்போர்ட்ல சொல்லும் போதே எனக்கு சந்தேகம். கடைசில கம்பெனிக்கு சரியான செருப்படி...என்னை ஓரம் கட்ட நினைத்த எங்க கம்பெனிய, எல்லாரும் ஓரம் கட்டுவாங்க. நியாயம், லேட்டானாலும், ஜெயிக்கத்தான் செய்யுது...''

''சட்-அப்... வாயை மூடுங்க.. நீங்கல்லாம் ஒரு மனுஷனா?''

சந்திரா, கத்திய கத்திலில், அவள் மாமாவும், அத்தையும் அங்கே வந்து விட்டார்கள்.

13

அந்த அடுக்கு மாடிக் குடியிருப்பில், ஏதோ ஒரு வீட்டில் திருமிகு சந்திரசேகர், தொலைக்காட்சிப் பெட்டியில், தாடியும் மீசையுமாய் பிரதமராய் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட அரசியல் நிகழ்வுகளை ஓரம் கட்டாமல் ரசித்துப் பார்க்கும் கலைவாணியோ...

முகம் வீங்கிக் கிடந்தாள். செங்குத்தாய் உயர்ந்த குத்துக் கால்களில் முகம் போட்டு அந்தக் கால்களுக்கும், கையால் கட்டுப் போட்டுக் கிடந்தாள். முந்தானை, கால்களுக்குத் திரையானது. முடிக்கற்றைகள் நெற்றியில் இருந்து மூக்குவரை பரவி, அவள் முகம், சன்னமான இரும்புக் கம்பிகளுக்குள் சிறைப்பட்டது போன்ற தோரணை... அவள் உடம்புக்குள்ளேயே, ஒரு வித பம்பரச் சுற்று; உள்ளுறுப்புகள் கழன்று போனது போன்ற பிராணவாதை; எலும்பிலும், சதையிலும் இவற்றைக் கட்டிப்பிடிக்கும் நரம்பிலும், எங்கும் பல்கிப் பரவி ஓடும் குருதியிலும் உள்ள அத்தனை அணுக்களும் ஒன்றை ஒன்று பிய்த்துக் கொண்டு, வெளியேறத் துடிப்பது போன்ற இயக்கம். இணைந்து நின்றவை, எதிரிகளாய் ஆனது போன்ற எதிர் இயக்கம்... ஆனாலும் நேரம் ஆக ஆக, மனோவலி, உடல் வலியை வெல்ல, கலைவாணி மரத்துப் போய்க் கிடந்தாள். அவள் காலடியில் கிடந்த பத்திரிகைகள், பக்கம் பக்கமாகச், சிதறி, மின்சார விசிறியில் அவளைக் கேலிச் செய்வது போல், துள்ளித் துள்ளிக் குதித்தன. 'எங்களைப் பார் எங்களைப் படித்துப் பார்,' என்று சலசலப்பாய் சத்தமிட்டன. தமிழ்ப் பத்திரிகைகளோ கட்டம் போட்ட செய்தியை காட்டிக் காட்டி காற்றில் அடக்கமாய் ஆடின... இந்த மனோகரை அகில உலக கவனத்திற்கு கொண்டு போன செய்தி... நியூயார்க் விமான நிலையத்தில், அவனுக்கு நடத்தப்பட்ட எய்ட்ஸ் சோதனையை, ராய்ட்டரோ அல்லது வேறு ஏஜென்சியோ சுற்றுக்குவிட, அதை இந்திய ஏஜென்சி

நிறுவனங்கள், எடுத்தாள, இந்தியப் பத்திரிகைகளும், மனோகரைப் பந்தாடி விட்டன. எய்ட்சின் பெயரால், இந்தியாவைப் பந்தாட நினைத்த மேற்கு நாட்டினருக்கு, இந்தப் பத்திரிகைகளே, அறிந்தோ அறியாமலோ அறி விப்பாளராகிவிட்டன. எய்ட்ஸ் நோயைப் பற்றியோ அல்லது அதைத் தரும் கிருமிகளைப் பற்றியோ இலக்கணம் வகுக்கப்படாத சமயம் என்பதாலோ என்னவோ, இந்தச் செய்தியே, எய்ட்ஸை விடக் கொடூரமாகி விட்டது.

'அமெரிக்கா என்ன இந்தியாவா... பொறியாளர் மனோகர், எய்ட்ஸ் பொறிக்குள் சிக்கிய கதை'.

'எஞ்சினியர் மனோகருக்கு எய்ட்ஸ் நோய்; கண்டபடி சல்லாபம் செய்தவர்க்கு நேர்ந்த கதி...''

''தமிழ்நாட்டு எஞ்சினியருக்கு எய்ட்ஸ்... அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்படுகிறார்!'

'ஹெச்.ஐ.வி. எஞ்சினியர் அமெரிக்காவில் இருந்து திரும்பி அனுப்பப்படுகிறார்'

'ஹெச்.ஐ.வி. இன்பெக்டட் இன்டியன் சென்ட்பேக் ஹோம்'

இந்தப் பத்திரிகை செய்திகளின் ஒவ்வொரு எழுத்தும், ஒரு எய்ட்ஸ் கிருமி போலவே, பீதியை எழுப்பியது. இந்த நோயைப் பற்றி தெரிந்த உண்மைகளைவிட, தெரியாத கைச்சரக்கே, அந்த செய்திக்குப் பின்னணியாக எழுதப்பட்டிருந்தது. ''எய்ட்ஸ் நோயாளியைத் தொட்டாலே, நோய் தொற்றிக் கொள்ளும். அவர்கள் எச்சில் பட்டாலே, பட்டவர்கள் எச்சமாவார்கள்.... எய்ட்ஸ் நோயாளியைத் தனியாய் வைக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையிலும், அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியதுதான். அதே சமயம், அவர்களுக்கு நாமே உணவாகி விடக் கூடாது. உணவு கொடு.. ஆனால் தொலைவில் நின்று தூக்கி எறி... இருக்க இடம் கொடு... ஆனால் பக்கத்தில் வைக்காதே. ஆறுதல் சொல்... அதற்காக முதுகைக் கூட தட்டிக் கொடுக்காதே... எய்ட்ஸ் உனக்கும் வந்திடும்...''

அந்தச் செய்தி, இப்படிப் பச்சையாக சொல்லவில்லையானாலும், படிப்பவர் மனதில் இப்படிப்பட்ட கொச்சைத் தனந்தான் எஞ்சி நிற்கும்படி வெளியிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி தாங்கியப் பத்திரிகைகளை, கலைவாணி வருவித்துக் கொண்ட விதமே தனிச்செய்தி. மனோகர் வேலை பார்க்கும் அந்த நிறுவனம், நியூயார்க்கில் உள்ள, ஒரு பன்முக பன்னாட்டுக் கம்பெனிக்கு, கணிப்பொறித்

துறையில் ஆலோசனை வழங்கும் கான்டிராக்டைப் பெற்றுக் கொண்ட சாதனையை சுட்டிக்காட்டி, அதை அங்கே சென்று நிறைவேற்றுவதற்காக ஐந்து பொறியாளர் கொண்ட குழுவை அனுப்பி இருப்பதாகவும், 'தடபுடலாக' ஒரு செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டி அறிவித்தது. இந்த ஐந்து உறுப்பினர்களின் புகைப்படங்களையும், செய்தியாளர்களிடம் கொடுத் திருந்தது. மேகங்கள் ஒரு சதுர மீட்டருக்கு ஆறு வாட்ஸ் பெறுமான சூரிய வெளிச்சத்தை உள் வாங்கிக் கொள்கின்றன என்ற பழைய அடிப்படையில், வானிலை, கணிக்கப்பட்ட காலம் போய், இந்த மேகங்கள் இருபத்தைந்து வாட்ஸுக்கும், அதிகமாக சூரிய வெப்பக் கதிர்வீச்சை உள்வாங்குகின்றன... என்ற புதிய கண்டுபிடிப்பிற்கு ஏற்ப, அந்த பன்னாட்டுக் கம்பெனிக்கு, வானிலையை, புதிய முறையில் கணிக்கும் கம்ப்யூட்டர் மாடல்கள் தேவைப் படுவதைச் சுட்டிக் காட்டியும், இதற்காக இந்த இந்தியக் கம்பெனியை, அந்த நிறுவனம், ஆலோசனை நிறுவனமாய் நியமித்திருப்பதையும் விளக்கும் இரண்டு பக்கக் குறிப்பு ஒன்றும், செய்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்டது... இதை நியூயார்க்கில் இருந்து 'கால்' போட்ட மனோகர் மூலமே தெரிந்து கொண்ட கலைவாணி, அன்றும், அதற்கு முந்தின தினமும், வீட்டிற்கு வழக்கமாக வரும் 'இந்து' பத்திரிகை தவிர, இதர பத்திரிக்கைகளையும் மீனாட்சி மூலம் வரவழைத்தாள். நேற்று எந்தச் செய்தியும் வரவில்லை. இன்றைக்காவது வந்திருக்கும் என்றுதான் மீனாட்சியை அனுப்பினாள். கணவனின், புகைப்படத்தைப் பத்திரிகைகளில் பார்க்க அப்படி ஒரு துடிப்பு... ஐவரில் அர்ச்சுனனாகக் கருதப்படும் கணவனை, அவன் வாழ்க்கைக் குறிப்போடு பார்ப்பதற்காக, மீனாட்சி கடையில் இருந்து வருவதற்கு முன்பே, வீட்டுக்கு வெளிப்பக்கமாய் உள்ள 'சிட் அவுட்டில்' நின்று கீழே எட்டிப் பார்த்தாள். அந்த வேலைக்காரச் சிறுமியை, கீழே பார்த்ததுமே, அங்கிருந்தபடியே அவளை பெயர் சொல்லிக் கூப்பிட்டு, 'சீக்கிரம் சீக்கிரம்' என்று கையாட்டினாள். லிப்ட் பக்கமாய் ஓடிப் போனாள். அதிலிருந்து இறங்கிய மீனாட்சியின் கைப்பிடித்த பத்திரிகை மொந்தையை, வழிப்பறி செய்வது போல் பறித்துக் கொண்டு, அங்கு நின்றபடியே புரட்டினாள். புரட்டப் புரட்ட... அந்த கம்பெனியின் சாதனையை, எய்ட்ஸ் கலவையோடு படிக்கப்... படிக்க... அவளைத்தான் யாரோ... எதுவோ புரட்டுவது போல் இருந்தது.

கலைவாணி, எப்படித்தான் வீட்டுக்கு வந்தாளோ... இருண்டு போன கண்கள் எப்படித்தான் வீட்டைக் கண்டு பிடித்தனவோ,... துவண்டு போன கால்கள் எப்படித்தான் நடந்தனவோ, இதுதான் நம் வீடு என்று 'பெருச்சாளி' பிடித்த மூளை எப்படித்தான் கண்டுபிடித்ததோ... பார்வை அற்றோர் வைத்திருக்கும் ஊன்றுகோல் போல, அங்கும் இங்கும் ஒருகை ஆட, மறுகை

தலைக்கு மேல் போக, கால்கள் பழக்கதோஷத்தில் தள்ளாடி, அல்லாடி அவளை சுமந்து செல்ல, கலைவாணி, கட்டிலில் போய் தொப்பென்று விழுந்தாள். அதை இறுகப் பிடித்து, அவள் குப்புறக் கிடந்தாள். வேலைக் காரச் சிறுமிக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை... 'எக்கா... எக்கா' என்று அந்தக் கட்டிலையே சுற்றிச் சுற்றி வந்தாள்... கிராமங்களில், கட்டிலில் போட்ட பிணத்தைச் சுற்றி வருவார்களே, அப்படி; கலைவாணி, அடிக்கடி எழுவதும், அந்தப் பத்திரிகைச் செய்தியைப் படித்துப் பார்த்து, கசக்கிப் போட்டுவிட்டு, படுக்கையிலேயே மீண்டும் விழுவதுமாக இருந்தாள். மீனாட்சி, பயந்து போனாள். அக்கம் பக்கத்துப் பெண்களை வரவழைப்பதற்காக, வாசலுக்கு வந்தாள். ஆனாலும், அவள் படிதாண்ட வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. சியாமளா... மோனிகா... பாலா நாராயணசாமி, வேதாப் பாட்டி... திருமதி. கல்யாணராமன், திருமதி எட்வர்ட் சாமுவேல் எல்லோருமே வந்து விட்டார்கள். எவரெல்லாம், இந்தக் கலைவாணியின் வீட்டில் பக்கடாவைச் சுவைத்துக் கொண்டே, பெண்கள் சங்கம் அமைப்பது பற்றி ஆலோசிக்க வந்தார்களோ, அவர்களில் திருமதி நாகராஜன் தவிர அத்தனை பெண்களும் வந்துவிட்டார்கள். முகத்தில் பௌடரை அப்புவது போல், அனுதாபம் அப்ப, கவலையோடுதான் காணப்பட்டார்கள். சியாமளா 'அய்யய்யோ' வென்று கூட கையை நெறித்தாள். 'பாவம்... பரிதாபம்' என்று சொன்னபடியே, சியாமளா அங்குமிங்கும் சுழன்றாள்; அத்தனைபேரும், ஆகாயத்தைக் கூடப் பார்த்து, ஆண்டவனைத் தேடினார்கள். ஜன்னல் வழியாகவும், வாசல் வழியாகவும், இப்போது மல்லாந்து கிடந்தவளை மனம் நொந்து பார்த்தார்கள். ஆனால் ஒருத்திகூட உள்ளே போகவில்லை. வாசலுக்கு அப்பால் கழுத்தை நீட்டிக் கூடப் பார்க்கவில்லை... கணவனுக்கு இருந்தால், கட்டியவளுக்கும் நிச்சயம் என்பதை தெரிந்து வைத்திருக்கும் பெண்களாயிற்றே... தொட்டாலே ஒட்டிக் கொள்ளும் எமநோய் என்பதைச் செய்தியாய் - அதுவும் பத்தி பத்தியாய் படித்த பெண்களாயிற்றே... வெளியிலேயும் நிற்க முடியாமல் - உள்ளேயும் போக முடியாமல் அல்லாடினார்கள்.

ஆனால், கைநாட்டான மீனாட்சி சிறுமிக்கு - இது புரியவில்லை. கட்டிலில் மல்லாக்கக் கிடந்த கலைவாணி அக்கா, கண்விழிக்க வேண்டும் என்பதே அவளுடைய விருப்பம்- ஆசை... ஆனால் எப்படி என்பது தெரியாமல் போனதால், 'திருதிரு' வென்று விழித்தாள். இறுதியில், வெளியில் நின்றவள்களில், அவளுக்குப் பிடித்த சியாமளாவைக் கையைப் பிடித்து 'வாங்கக்கா... அக்காவை பாருக்கா' என்று முனங்கியபடியே உள்ளே இழுத்தாள். ஆனால், சியாமளா பயந்து போய் கையை பயங்கரமாக உதறியதால், மீனாட்சிதான் வெளியே வந்து விழுந்தாள். முட்டிக்கால்களில்

ரத்தக் கசிவோடு, அவள், சியாமளாவை குரோதமாகப் பார்த்தபடி எழுந்தாள். திருமதி கல்யாணராமன்தான், மீனாட்சியை, மென்மையாய் மீண்டும் அந்த வீட்டிற்குள் தள்ளிவிட்டு, உபதேசம் செய்தாள்.

‘செம்பு நிறைய தண்ணீர் எடுத்து... அவள் முகத்துல தெளிடி... மூக்குல கை வச்சு பாரு... மொதல்ல மூக்கு... அப்புறம் தண்ணீரு...’

மீனாட்சி, கலைவாணியின் மூக்கைத் தொட வேண்டியதில்லை... அந்த அளவுக்கு, இப்போது அவள் ‘எம்மோ... எய்யோ... எத்தான்... எத்தான்...’ என்று மூச்சே பேசுவதுபோல் முனங்கினாள்... அப்படியும் மீனாட்சி அவள் மூக்கில் கை வைத்துவிட்டு, சமையலறைக்குள் போய், ஒரு செம்பு நிறைய தண்ணீர் கொண்டு வந்தாள். கலைவாணியக்காவின் முகமெங்கும், நீரை உள்ளங் கையில் வாங்கி வாங்கி, வாரி வாரி அடித்தாள். ‘எக்கா... எக்கா... எழுந்திருங்க அக்கா...’ என்று அவளைத் தோளைப் பிடித்துக் குலுக்கினாள்.

மெள்ளக் கண்விழித்த கலைவாணி, வெளியே திரண்டு நின்ற சிநேகிதிகளை, அரண்டு பார்த்தாள். அப்படி பார்த்த கண்களில் நீர் கொட்டின... அவள் கரங்களோ, பார்வைக்குத் திரையிட்ட அந்தக் கண்களைத் துடைப்பதற்குப் பதிலாக, தலையை அடித்தன. தங்க வளையல்கள் தலை முடியில் சிக்கி, வலி கொடுக்கும் உணர்வு அற்றுப்போய், தலையில் இருந்து முடிமுடியாய்ப் பிய்த்த கலைவாணியின் கரங்களை, மீனாட்சி பிடிக்கப் போனாள். முடியவில்லை. கீழே தான் விழுந்தாள். விழுந்தவள் மீண்டும் எழுந்து, அக்காவின் அருகே போகப் போனாள். கட்டில் சட்டத்தில் தலையை மோதியவளைப் பிடிக்க முயற்சித்தாள். அந்த முயற்சிக்கு இடையிலேயே, ‘அக்காவைப் பிடிங்கம்மா... அக்காவைப் பிடிங்கம்மா...’ என்று கலைவாணியைப் பிடித்தபடியே, வெளியே நின்றவள்களுக்கு விண்ணப்பம் வேறு செய்தாள். அவர்கள், உடம்பைத்தான் ஆட்டினார்களே தவிர, உள்ளே வரவில்லை. ஆனாலும் வேதாப் பாட்டிக்கு மனம் கேட்கவில்லை; யானைச் சரீரத்தை ஆட்டியபடியே உள்ளே வந்தாள். ‘எம்மா... கலைவாணி’ என்று சொல்லப் போனாள். அதற்குள், வெளிக் கூட்டத்தில் நின்ற அவள் பேத்தி உமா, உள்ளே வந்து, பாட்டியின் சேலையைப் பிடித்து இழுத்தாள். உடனே வேதாப் பாட்டி, அம்மணமாகாமல் இருப்பதற்காக பேத்தியோடு வெளியே வந்தாள். ‘மனோகர் மாமாவுக்கு.. வந்த எய்ட்ஸ் கலைவாணி மாமிக்கும் வந்திருக்கும்... தொட்டால் ஒட்டிக்கும்... இனிமே உள்ளே போனே... எங்க வீட்டுக்கு வெளிலதான் நீ நிக்கணும்’ என்று ஒரு போடு போட்டாள். ‘எங்க’ என்ற அந்த ஒற்றைச் சொல்லில் தன்னை ஒதுக்கப்பட்டவளாகக் காட்டிய, கல்லூரிப் பேத்தியை, சிறிது நேரம் வெறித்துப் பார்த்த வேதாப் பாட்டி, ஒதுங்கிக் கொண்டாள்.

சைதாப்பேட்டையில் குடியிருக்கும் சின்னமகன் ஈன்ற பேரனாவது 'நம்ம'... என்ற சொல்லை உச்சரிக்க மாட்டானா என்ற ஆதங்கத்தோடும், ஆசையான எதிர் பார்ப்போடும் புறப்பட்டாள் சைதாப்பேட்டைக்கு, அப்போதே...

கலைவாணிக்கு, இன்னும் யதார்த்தம் உறைக்கவில்லை. அந்தப் பெண்கள் ஏன் வெளியே நிற்கிறார்கள் என்ற உண்மை புரியவில்லை... இன்னும் சொல்லப் போனால், அவர்கள் அப்படி நிற்பது கூட நிழல் உருவங்களாகவே தோன்றின. அடிக்கடி இவளைக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டோமே என்று கதிகலங்கி நிற்கும் திருமதி பாலா நாராயணசாமி, ஊரில் இருந்து அம்மா கொடுத்தனுப்பிய எள்ளுருண்டையை, இவளோடு சேர்ந்து கடித்ததற்காக வருந்தும் மோனிகா, யாருமே கலைவாணியின் பார்வையில் பழகியவர்களாய் பதியவில்லை. அவை ஆவி உருவங்களோ, அசல் உருவங்களோ.. அதுவும் மனதில் படவில்லை...

இதற்குள், ஆங்காங்கே ஜன்னல்களில் இருந்து கோபக் குரல்களும், குற்றேவல் குரல்களும், கெஞ்சும் குரல்களும் ஒலித்தன... அத்தனை பேரும் - அதுதான் சாக்கென்று தத்தம் வீடுகளுக்குள் ஓடினார்கள்... அலுவலகத்திற்கு கணவன்மாரை ஆயத்தப்படுத்த வேண்டுமே... காலநேரம் பார்க்காமல், கலைவாணிக்கு இரங்க முடியுமா...

ஆயிற்று... எல்லாமே சூன்யமாயிற்று...

எப்படியோ, ஒரு வழியாய் விஷயத்தை அரைகுறையாய்க் கேள்விப் பட்ட மீனாட்சி, மோனிகாவின் யோசனைப்படி, சமையலறைக்குப் போய், இரண்டு இட்லிகளைப் பிய்த்து விள்ளல்களாக்கி, சிறிது சட்னியையும் ஊற்றி, இப்போது மூலையோடு மூலையாய் முடங்கிக் கிடந்த கலைவாணியின் அருகே உட்கார்ந்து, ஒரு இட்லித் துண்டை எடுத்து வாயில் ஊட்டினாள். அவளோ, வாய்க்குள் அந்த உணவுத் துண்டு போகிற உணர்வற்று, கண்கள் திறந்திருக்கக் குருடானாள். எங்கேயோ அந்தரத்தில், வேர்களான கால்கள் அற்று, பார்வை தரும் கண்களற்று, உடலற்றும் உயிரற்றும் போனதுபோல் கிடந்தாள். மீனாட்சி ஒரேயடியாய் உலுக்கிய போது, அந்த இட்லித் துண்டு அவள் வாயில் இருந்து தானாக வெளியே விழுந்தது. ஆனாலும், மீனாட்சி 'எக்கா எக்கா' என்று அவள் காதுகளையும், உடலையும் உலுக்கிய போது, கலைவாணி உலகுக்கு வந்தாள். தன்னையே திடுக்கிட்டுப் பார்த்தாள். அவள், மனோகர் என்கிற எய்ட்ஸ் நோயாளியின் மனைவி. அவள் சென்னையில் இருக்கிறாள். கொட்டு மேளத்தோடு போன மனோகர், இன்றோ, நாளைக்கோ, வரப் போகிறான்.

மீனாட்சி, மலங்கமலங்கப், பார்த்த போது, கலைவாணி திடீரென்று

அவளைக் கட்டிப்பிடித்து அழுதாள். அந்தச் சிறுமியின் தலையில் முகம் போட்டு தன் சுமையைக் கொடுப்பது போல், அதை அழுத்தி அழுத்தி அழுதாள். உடனே மீனாட்சியும், உடம்பை மேல் நோக்காய் திருப்பி, 'எக்கா எக்கா' என்று அரற்றியபோது, கண்ணீர்கள் கலந்தன. கன்னங்களை மாற்றிக் கொண்டன.

சிறிது நேரத்தில், கலைவாணிக்கு ஒரு சின்னத் தெளிவு... ஒரு நப்பாசை... பத்திரிகைச் செய்தி பொய்யாக இருக்கலாம். வேறு எவரின் பெயருக்கோ, மனோகர் பெயர் இடம் மாறி இருக்கலாம். அந்த ஐவர் குழுவில், வேறு ஒருத்தருக்கு டெஸ்ட் நடத்தி இருக்கலாம். உதவிக்குப் போன மனோகர், டாக்டரோ, எவரோ பெயரைக் கேட்ட போது, தெரியாத்தனமாய், தன் பெயரைச் சொல்லி இருக்கலாம்...

கலைவாணி,... தலையை நிமிர்த்தப் போனாள். முடியவில்லை. பிணக்கனமாய் கனத்தது. கால்களைச் சுருக்கப் போனாள்; விறகுக் கட்டையாய் விறைத்தன. ஆனாலும் மீனாட்சியின் உதவியோடு, சுவரோடு சுவராய்ச்சாய்ந்து, கரங்களைப் பற்றி எப்படியோ எழுந்து, கம்பெனி அதிகாரி சூரிய நாராயணனிடம், தன் சந்தேகத்தை உண்மையாக்க நினைத்து, டெலி போனைத் தொட்ட போது...

பொத்துப் பொத்தென்ற சத்தம்... இரண்டு சூட்கேஸ்கள் தானாய் விழுவது போல் விழுகின்றன... எவரோ... ஒருத்தரின் பூட்ஸ் காலடிச் சத்தம் சன்னம் சன்னமாய்க் குறைந்து கொண்டே போகிறது. மனோகர்... ஒருவாரத் தாடியோடும் மீசையோடும் உள்ளே வந்து நிற்கிறான்... பிடிபட்ட ஒரு குருவி இறுதியில்... இனி செய்வதற்கு ஏதுமில்லை. என்பது போல் பார்க்குமே ஒரு பார்வை..., அப்படிப்பட்டபார்வையாய், பார்க்கிறான். கசங்கிப் போன உடம்பில் கலங்கிப் போன கண்கள். படுகுழியான கன்னங்கள்... அன்றைய மனோகரின் இன்றைய எலும்புக் கூடு; கலைவாணியை, அடிக்கடி முகம் நிமிர்த்திப் பார்ப்பதும்... தலையைக் கவிழ்ப்பதுமாக நின்றான். அவளருகே நடந்து போவதும், அப்புறம் பின் வாங்குவதுமாக அலைக்கழிந்தான்.

கலைவாணி, கையில் ரிசீவரைப் பிடித்தபடியே, அவனை, அண்ணாந்து பார்த்தாள். பிறகு ரிசீவரை, குமிழில் வைக்காமல், தரையில் வீசிப் போட்டபடியே, ஒரே தாவாய்த் தாவி, அவன் மீது முட்டுக்கம்பு மாதிரி சாய்ந்தாள். இதனால் ஒருவரை மேல் ஒருவர் சாய்த்து கீழே விழாமல், அசைவற்று நின்றனர். இறுதியில் சுதாரித்துக் கொண்ட கலைவாணி, வார்த்தைகளை விழுங்கிய ஒலிகளை ஓலமாக எழுப்பியவனை, ஏதோ ஒரு அசுர பலத்தில் குண்டுக்கட்டாய் தூக்கிக், கட்டிலில் போட்டாள். ஒரு தலையணையைக் குறுக்காய்ப் போட்டு, அவன் தலையை அதில் சாய்த்தாள்.

பிறகு அவன் உடலோடு உடல் போட்டு, அவன் தலையைக் கோதிவிட்ட படியே சபதமிட்டாள்.

''கவலைப்படாதீங்க... அத்தான்.. ஊர் உலகம் கைவிட்டாலும், நான் ஒங்க பக்கமே இருப்பேன். நீங்க எவளோடேயும் உறவாடி, உங்களுக்கு இந்த நோய் வந்ததாய் நான் நினைக்கல. சொல்லுங்க அத்தான்! அப்படி எதாவது உண்டா... எனக்கு தெரியாதா... என் மனோகரைப் பற்றி? இந்த ஆறு மாதத்தில இதைக் கூட தெரிஞ்சுக்காட்டால், நான்... என்ன மனுஷி? ஏதோ விதிவசமா வந்துட்டு. அழாதீங்க அத்தான். அழாதீங்க... அய்யோ இது என்ன கொடுமை... கையெடுத்துக் கும்பிடதீங்க. கும்பிடாதீங்க. அத்தான் ஒங்களை கைவிடமாட்டேன்''

எல்லாவற்றையும், ஓசைப்படாமல் கவனித்துக் கொண்டிருந்த மீனாட்சி, 'எக்கா... எக்கா... இங்கே பாருங்க...' என்றபோது திரும்பிப் பார்த்த கலை வாணியின் கண்களில், டாக்டர் சந்திராவும், சங்கரனும் அகப்பட்டார்கள்.

கலைவாணி, குலுங்கி குலுங்கி அழுதாள். கட்டிலில் இருந்து குதித்து, டாக்டர் சந்திராவைக் கட்டிப்பிடித்து விம்மி விம்மி, வெடி வெடியாய்ப் பேசினாள். 'பார்த்தீங்களா டாக்டரம்மா.. உங்க கண்ணு முன்னாலயே மானும் மயிலுமாய் சுற்றித் திரிந்த நாங்க, எப்படி ஓநாயும், பல்லியுமாய் ஆயிட்டோம்... பாத்தீங்களா... பாத்தீங்களா டாக்டரம்மா...!''

கலைவாணியை, சந்திரா, பார்க்க முடியாமல் பார்த்தாள்.

சூரியப் பிரகாச முகம், இவளை நெருப்பாய் சுட்டது. அவளது கண்ணீரும் கம்பலையும், இவள் உடம்பில் பூகம்பத்தையும், தலையில் எரிமலையையும் ஏற்படுத்தின. கட்டிலில் பிணமாய்க் கிடந்தவனை கோபமாய்ப் பார்த்தாள். பார்க்கப் பார்க்க ஏனோ ஒரு பச்சாதாபம்... இதற்குள் சங்கரன், சத்தம் போட்டே கேட்டான்.

''ஏன் மிஸ்டர் மனோகர்... ஒங்களுக்கு எய்ட்ஸ் கிருமிகள் இருக்கிறதாய் எங்க சந்திரா... கல்யாணத்துக்கு முன்னாலயே படித்து படித்து சொல்லி இருக்காள். இந்த அப்பாவி கலைவாணியை காவு கொடுக்காதீங்கன்னு காலுல விழாத குறையா கெஞ்சி இருக்காள். அப்படியும் இந்த பெண்ணை சீரழிச்சிட்டிங்களே... இது அடுக்குமா... உங்களை மாதிரியே இந்தப் பெண்ணும் எய்ட்ஸ்ல கருகப் போறாள். இப்போதாவது ஒங்களுக்கு திருப்தியா மனோகர்...?''

கலைவாணி, திகைத்துப் போனாள். திக்குமுக்காடினாள். சிறிது நேரம்,

பேச்சற்று மூச்சற்றுப் போனது போல் நின்றாள். கரங்களை கோர்த்தும், சேர்த்தும், நெறித்தும் ஆகாய மேட்டையும், அப்புறம் தன்னையும் வெறித்துப் பார்த்தாள். தரைவிலகி, கால்கள் ஆகாயத்தில் தொங்குகின்றன. உதடுகளை பற்கள் கோபம் கோபமாய் கடிக்கின்றன. ஒரு கண் எரிகிறது. மறுகண் உறைகிறது. வாயகல, தலையில் கைபோட்டு நிற்கிறாள். பிறகு கல்யாணத் துக்குப் பரிசோடு வந்த டாக்டர் சந்திராவை உற்றுப் பார்த்தாள். அவளோ தலைகவிழ்ந்து நின்றாள். கட்டிலில் கிடந்தவனை, எட்டிப் பார்த்தாள். அவன் குப்புறப் புரண்டான். குப்புறத்தள்ளி... குழியையும் பறித்துவிட்டு, இப்போது முகம் காட்டவே நடுங்குகிறான்.

'என்ன இது..? அநியாயம்... இப்படி ஒரு நோய் இருப்பது.. இவனுக்குத் தெரியும். அவளுக்கும் தெரியும்... அப்போ இவன் கட்டியது தாலியா... தூக்குக் கயிறா.. இந்த இவன் கொடுத்தது பரிசா... அல்லது பரிகாசமா... ஏமாந்துட்டேனே... ஏமாந்தால் கூட பரவாயில்லை. ஏமாற்றப்பட்டனே... அவனுக்கும், இவளுக்கும் என்ன சம்பந்தம்? எப்படியான உறவு...'

மலைமகளாய் நின்ற கலைவாணி, துர்க்கையாய், மகிஷாகரமர்த்தினி யாய் மாறிக் கொண்டிருந்தாள்.

சங்கரன், மனோகரைச் சாடியதை, அட்சரம் பிசகாமல், வாயகலக் கேட்டுக் கொண்டிருந்த அவளின் பார்வை கூர்மைப்பட்டது. வாய் கோணல்மானலானது... மெள்ள மெள்ள முயல் குட்டியாய்த் தோன்றிய அவள் முகபாவம், மோவாய் நீண்ட புலிக்குட்டியானது... கை விரல்கள், இரும்புக் கம்பிகள் போல் கூர்மைப்பட்டன. துவண்ட கால்கள் நிமிர்ந்து நீண்டன. அவளால், டாக்டரம்மா என்று அழைக்கப்பட்ட சந்திராவும், பாசத்தின் உச்சமாகத் தோன்றிய மனோகரும், இப்போது மானிடத்தின் எச்சங்களாக, அடுத்துக்கெடுத்த துரோகிகளாகத் தோன்றினார்கள். கல்யாணப் பரிசாக, சந்திரா கொடுத்த நிரோத்துக்களும், மனோகர் விமான நிலையத்திற்கு, போகும் போது தன்னை அறியாமலே 'எனக்கு ஹெச்.ஐ.வி. இல்லை''என்று சொன்னதும், அவர்களை அடுத்துக் கெடுக்கும் துரோகிகளாய் காட்டும் ஆதாரங்களாயின. சங்கரன் சொல்லச்சொல்ல, அதை நம்ப முடியாதது போல், காதுகளுக்குமேல், இரண்டு கரங்களையும் தலையோடு சேர்த்து உயர்த்தி, அசல் மான்குட்டி மாதிரி காதுகள் சிலிர்க்க, கண்களை வெட்டியவள், இப்போது அவர்களை வெட்டப் போவதுபோல் விறைத்துப் பார்த்தாள். ஒரு அநியாயக்காரியும், ஒரு அக்கிரமக்காரனும், பாதுகாப்பான கூட்டில் இருந்து, தன்னை தள்ளிவிட்டதாய் நினைத்துத் தவித்தாள். கால் இடறிய ஒரு பந்து போலத் துடித்தாள்.

கலைவாணி, தானும் ஒரு ஹெச்.ஐ.வி.க்காரி என்பதையும், எதிர்கால

எய்ட்ஸ் பாடையில், அவனோடு சேராமலே, அதே சமயம் அவனாலேயே உடன்கட்டை ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதையும் மெள்ள, மெள்ளப் புரிந்து கொண்டாள். உடலுறவால் இது ஏற்படும் என்பதைத் தெரிந்து வைத்தவள்தான். ஆனால் அளப்பரிய கணவ பக்தியால், அவனை மட்டுமே முன்னிலைப்படுத்தியதால், தன்னைப் பற்றி அவள் நினைத்தா ளில்லை. முகம் தெரியா யந்திர நாட்டில், கணவன் எப்படிக் கலங்குகிறானோ என்று மட்டுமே துடித்துப் போனவள், இப்போதுதான், தனக்காகத் துடித்தாள். தனக்காக கழிவிரக்கம் கொண்டாள். சுயபயம் ஏற்பட ஏற்பட, அவள் ஒரு பயங்கரியாய் மாறிக் கொண்டிருந்தாள். 'டாக்டரம்மா...! நீயுமா...?' என்பது போல் சந்திராவைப் பார்த்தாள். பார்த்துக் கொண்டே நின்றாள்.

இந்தக் கொடூரமான அமைதியில் தலை தாழ்ந்து நின்ற சந்திரா, சங்கரனை எரிச்சலோடு பார்த்தாள். மாமா வீட்டில், இவள் கத்திய கத்தலில், உள்ளே வந்த மாமாவுக்கும், அத்தைக்கும், தலைக்குமேல் வெள்ளம் போன விரக்தியில், நடந்ததை எல்லாம் எடுத்துரைத்தாள். டாக்டர் வேலையில் சேர்த்து விட்டதால், தங்கை மகள், தன்னையோ, தான் பெற்ற மகனையோ மதிக்கவில்லை என்று மாமாவிற்கு ஒரு தவறான அபிப்ராயம் வரக் கூடாது என்பதற்காகவே, அவள், மோகன்ராம் விரட்டியது உட்பட எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். இதைக் கேட்க கேட்க ஆத்திரப்பட்ட மாமா, கிட்டத்தட்ட சங்கரனைப் பார்த்து கையை ஓங்கிவிட்டார். மகனை, ஒரு நாளும் திட்டாத அத்தை கூட அவனை 'நாயே... பேயே' என்பது மாதிரி திட்டி விட்டாள். ஒருவர் துக்கத்தில், சந்தோஷப்படுவது, ஒரு மனிதன் செய்கிற காரியமில்லை என்று அத்தை படபடத்துப் பேசினாள். சங்கர், சித்தம் தெளிந்து, தவறுக்கு வருந்துகிறவன்போல் தலை தாழ்த்தி நின்றான். அன்று மாலையிலேயே, கலைவாணியை உடனடியாகப் பார்க்க புறப்பட்ட சந்திராவை, அவர்கள்தான், மறுநாள், காலையில் போகலாம் என்று சொல்லி விட்டார்கள். இந்தச் சங்கரையும் பாவப்பரிகாரமாய், இவளுக்கு உறுதுணையாய் அனுப்பி வைத்தார்கள். இவளும், இவனை கட்டிக்கப் போகிறவனாய்க், கூட்டி வராமல், மாமா.. அத்தைக்கு ஒரு நல்ல மருமகளாய் தன்னைக் காட்டிக் கொள்ளவே கூட்டி வந்தாள். ஆயிரம் கத்தினாலும், இந்த சங்கரனை, தான் கழித்து விடவில்லை என்று, அவன் பெற்றோரிடம் காட்டிக் கொள்ள, இங்கே கூட்டி வந்தாள். இவரோ, சொல்லக் கூடாததைச் சொல்லி, நடக்கக் கூடாதது நடப்பதற்கு, நடைபாதை போட்டு விட்டாரே!

டாக்டர் சந்திரா, சங்கரனை கோபமாகவும், கலைவாணியை தாபமாகவும் ஒரே சமயத்தில், வேறு வேறு பார்வையாகப் பார்த்தாள். சங்கரன், எதுவும் நடக்காதது போல் மதர்ப்பாய் நின்றபோது, கலைவாணியின்

பார்வை, கட்டிலில் இப்போது மல்லாக்கக் கிடந்த மனோகர் மேல் பட்டது. சொல்லிக் கொடுத்தும் கேளாத துரோகி... அடுத்துக் கெடுத்த பாவி... அவனையே வெறித்துப் பார்த்த கலைவாணி, சந்திரா பக்கம் திரும்பினாள்.

''சொல்லு.. டாக்டர்... இந்த துரோகிக்கு ஹெச்.ஐ.வி. இருக்குதுன்னு, ஒனக்கு முன் கூட்டியே தெரியுமா...? இது தெரிந்தும்தான் என் கருமாந்தி ரத்துக்கு வாழ்த்த வந்தியா... சொல்லு... சொல்லுடி...''

சந்திராவால், கலைவாணியை ஆச்சரியமாகக் கூடப் பார்க்க முடியவில்லை. ஏறிட்டுப் பார்க்கப் போனால், முகத்தை எதுவோ கீழே பிடித்து இழுக்கிறது... தன்னிலை விளக்கம் சொல்லப் போனால், தானே அங்கே இல்லாமல் போனதுபோன்ற இருள்நிலை.. இதற்குள், மனோகர்... அரைகுறையாய் முனங்கினான்.

''கலை... கலைவாணி, அவங்க நிரபராதி... நான் நான்தான்...''

''பாவ மன்னிப்பாடா கேட்கிறே? செய்யுறதையும் செய்திட்டு... இன்னுமாடா ஒனக்கு பேச்சு வருது...''

மனோகர், போர்வையை இழுத்து தலையோடு சேர்த்து, முகத்திற்கு முக்காடு போட்டுக் கொண்டான். சந்திரா, குன்றிப் போய் நின்றாள். சங்கரன் 'டா' போட்டு பேசிய கலைவாணியைப் பார்த்தபடியே, அங்குமிங்குமாய் நடைபோட்டான். பிறகு 'போகலாம்' என்பது போல் சந்திராவைப் பார்த்து கண்ணடிக்கப் போனான். வேலைக்காரச் சிறுமி மீனாட்சி, ஒவ்வொருவர் முகமாய் பார்த்து, ஒன்றும் புரியாமல் நின்றாள்... மௌனத்தின் கொடுங்கோல்... உலகமே அஸ்தமித்தது போன்ற அருவ நிலை... வெளிச்சமே இருளாகி, அப்போதே அமாவாசை ஏற்பட்ட இருண்மை நிலை.. வார்த்தைகள், தொண்டைகளுக்குள் சிக்கிக் கொண்டன. வெளியே உள்ள இரைச்சல்,... வானொலிப் பாட்டு, தெருக் கூச்சல் அத்தனையும் அற்றுப் போன காதுகள், மரத்துப் போன நிலை...

முந்தானை சரிய விரல் கடித்து நின்ற கலைவாணி, ஆங்காரியாய், ஓங்காரியாய்க் கூச்சலிட்டாள்... மனோகரை நோக்கிப் பாய்ந்தாள்... அவன் தலைமாட்டுப் பக்கம் போய், அவன் முகத்தைக் கடித்துத் தின்னப் போவது போல் பற்களைக் கடித்தாள். அவன் கழுத்தைத் திருகப் போவதுபோல், கரங்களை மார்புக்கு முன்னால் கொண்டு போய், வளைவாகக் குவித்தாள். பிறகு என்ன நினைத்தாளோ... ஏது நினைத்தாளோ... 'என்னை என்ன செய்தாலும் தகும்' என்பது போல மல்லாந்து கிடந்த மனோகரின் முகத்தைப் பார்த்த மாற்றமோ... அவளுக்கே தெரியாது... கணவனின் கழுத்தை நெரிப்பதற்குப் பதிலாக, நெரிக்கப் போன தன் கரங்களையே, ஒன்றோ

டொன்று நெரிக்க விட்டாள். அவன் தலையில் அடிப்பதற்குப் பதிலாக, தன் தலையிலே அடித்துக் கொண்டாள்; அப்புறம் அவன் தலைமாட்டில் நின்றபடியே, சத்தம் போடாமலே ஏங்கினாள். அவள் அழுகைக்குக், குரல் கிடைக்கவில்லை. வடிவற்ற உணர்வுகளின் தாக்குதல்... வடிகால் கிடைக்காத அநாதை நிலை.. ஆத்திரம் உருவாக்கப் போன வன்முறையை, துக்கம், மென்மையான அழுகையாய் மாற்றிய ரசவாதம்.. இடியற்ற மழை... இணையற்ற தவிப்பு...

கலைவாணி, அப்படியே குன்றிப் போனாள்... நேராய் நின்றவள், சிறுகச் சிறுகக் குறுகி, குறுகிக் குறுகி குமைந்து, சன்னஞ் சன்னமாய் சரிந்து, அப்படியே தரையில் சாய்ந்தாள்... கால்களை மடித்துப் போட்டு, இடுப்பின் மேல் பகுதியை அதில் இழுத்துப் போட்டு, அப்படியே கிடந்தாள். உருவம் கலைத்து, அருவமாய் ஆனவள்போல் இருந்தாள்; சிறிது நேரத்தில் மீண்டும் அழுகைச் சத்தம்... பிறகு மனோகரை தாக்கப் போவதுபோல் தலை நிமிர்கிறது. அப்புறம் தனக்கு வந்ததை, தானே தாங்கியாக வேண்டும் என்று நினைத்ததுபோல் தலை தானாய்க் கவிழ்கிறது... மனம்.. தானாய்க் கேட்டது. இப்படியும் ஒருத்தன் இருப்பானா... இப்படியும் ஒரு மூர்க்கன்... இப்படியும் ஒரு கொலைகாரன் இருப்பானா... இருப்பானா... இப்படியும் ஒரு டாக்டர்... இப்படியும் ஒரு பெண்... இருப்பாளா... இருப்பாளா... இருக்கின்றானே... இருக்கின்றாளே...'

சந்திராவைப் பார்த்து, சங்கரன் மீண்டும் கண்ணடித்தான். அவளோ, திகைத்துப் போனவளாய் கைபிசைந்து நின்றாள். அவளுக்கு பூமி குலுங்கியது. ஆகாயம் சுருண்டு போய் அங்கேயே வந்தது... அந்த வீடு சுற்றுகிறது... அத்தனையும் சுற்றுகின்றன.

மீனாட்சிதான், கட்டில் பக்கம் போய் 'எண்ணா... எண்ணா' என்றாள். கீழே குனிந்து 'எக்கா... எக்கா' என்றாள்... 'என்ன செய்யலாம்' என்ற கேள்விப் பாவனையோடு சங்கரனைப் பார்த்தாள். 'ஏதாவது செய்யுங்கள்' என்பது போல் சந்திராவை, கெஞ்சல் பார்வையாய் பார்த்தான்.

இதற்குள், கலைவாணி எழுந்தாள்... உள் பாடியும், பாவாடை விளிம்பும் பளிச்சென்று தெரிய எழுந்தாள். மனோகரின், கால் மாட்டில் போய் நின்று கொண்டாள். ஒப்பாரியே ஓங்காரமானது. இதயத்துடிப்பே, வார்த்தை களானது... மனமே வாயானது...

'ஒன்னை கெடுத்து.. என்னையும் கெடுத்திட்டியே பாவி... ஒன்னை நீ கெடுக்கலாம்... ஆனால் என்னை எப்படிப்பா கெடுக்கலாம்? என்கையப் பிடித்து அக்கினியைச் சுற்றி வந்து, என்னை அக்கினியில் தள்ளிட்டியேடா... இதைவிட தாலிச் செயினாலயே... என் கழுத்தை இறுக்கிக் கொன்னுருக்

கலாமே பாவி... படுபாவி... என்னை... இந்த பாடுபடுத்தின நீ...என்ன பாடு படப்போறியோ... உயிரோட கொன்னுட்டியே... என்னை பிணமா பேச வச்சுட்டியே... என்னை இந்த நிலைக்கு ஆளாக்குன... ஒன்னை விடமாட் டேன்... விடவே மாட்டேன்..'

கலைவாணி, குறுக்கே வந்த மீனாட்சியை உதறிப் போட்டுவிட்டு, இடைமறித்த சந்திராவை எட்டித் தள்ளிவிட்டு, மனோகர் மேல் பாயப் போகிறவள் போல், கைகளை மீண்டும் வளைத்தபடி, கட்டில் சட்டத்தில் வயிற்றை அழுத்தி, அவனை நோக்கி, அப்படியே குனியப் போனாள். பிறகு, அப்படியே நிமிர்ந்து, மேல் நோக்காய் வந்து, செங்குத்தாய் நின்றபடிக் கேட்டாள். குரல் மாற்றிக் கேட்டாள். ஆங்காரக் குரல் அழுகையாக, பழிபோட்ட பார்வை விழிபிதுங்கிப் போக, வாதாடுவதுபோல் கேட்டாள்...

''மனோகர்... ஒனக்கு... நான் எப்போவாவது இம்சை கொடுத்திருக் கேனா... பள்ளிக் கூடத்துல படிக்கும் போதோ... அம்மன் கொடை... ஆத்தாள் கொடைன்னு ஊர்ல விசேஷம் நடக்கும் போதோ... ஒன் வீட்டுக்கு நான் வரும்போதோ, என் வீட்டுக்கு நீ வரும்போதோ, ஒன்னை, நோகடித்தேனா.. அவமானப்படுத்துனேனா.. அலட்சியப்படுத்துனேனா சொல்லுப்பா... இந்த பாவிகிட்ட சொல்லுப்பா.''

மனோகர், லேசாய் தலையைத் தூக்கினான். வாய் ''இல்லல்ல''... என்று இழுத்தது. தலை, அங்குமிங்குமாய் ஆடியது. கைகள், சமிக்ஞையிட்டன... கலைவாணி, சிறிது இடைவெளிக்குப் பிறகு தொடர்ந்தாள்.

''அப்போ... எதுவுமே செய்யாத என்னை... ஒனக்கு மனசாலயும் கெடுதல் நினைக்காத என்னை... எதுக்குப்பா இப்படி ஆக்கிட்டே...? நீ மெட்ராஸ்லே இருந்து வரும் போதெல்லாம், வாய் நிறைய சிரிப்பேனே... நீ... கம்ப்யூட்டரைப் பற்றியும், டார்வின் தியேரி பற்றியும் பேசுறதை மாணவியாய் நின்று கேட்டேனே! ஒன்னை மாதிரி அறிவாளி கிடைக்கிறது... அபூர்வமுன்னு போகிற ஊரெல்லாம் பேசுனனே... பேசுன வாயை பூட்டிட்டியே... என்னை ஒரு புழுப் பூச்சாய் ஆக்கிட்டியே! மனோகர், இது அடுக்குமா? அப்போ நீ பேசுன பேச்சும், சிரித்த சிரிப்பும், வெறும் நடிப்புத்தானா... பரவாயில்ல... மனோகர், உனக்கு ஆஸ்கார் பரிசே கிடைக் கும்பா... அய்யோ... அய்யய்யோ... அம்மோ... யார்கிட்ட சொல்லுவேன்... என்கிட்டயே சொல்ல முடியாததை, எப்படிச் சொல்வேன்...?''

மனோகர், மீண்டும் குப்புறப்படுத்தான். மீனாட்சி... 'எக்கா... எண்ணா'' என்று அரற்றியபடியே, பூனைக்குட்டி மாதிரி சுற்றி வந்தாள். அதே சமயம், டாக்டர் சந்திரா, மெள்ள மெள்ள விழிப்புற்றாள். தட்டுத்தடு மாறி நடந்தாள்; ஆடி அடங்கியது போல் நின்ற கலைவாணியின் தோளைத் தொட்டாள்.

கலைவாணி, அந்த வீடே கத்துவது போல் கத்தினாள்.

''என்னைத் தொடாதடி.. தொடாதே! ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லு. நான்... ஒன் தங்கையாய் இருந்தால், இப்படி மறைப்பியா... நாம் இரண்டு பேரும் இடம் மாறி நின்னு... என்னால ஒனக்கு இப்படி ஏற்பட்டிருந்தால்... ஏத்துக்குவியா... அடியே பாவி... டாக்டரம்மா... டாக்டரம்மான்னு வாய் நிறையக் கூப்பிட்டேனே.. அம்மா என்கிற வார்த்தையை அழுத்தி உச்சரித்தேனே... ஒரே ஒரு சொல்லு... உண்மையான சொல்லு... அதை என்கிட்ட சொல்லி இருந்தால், இப்படிச் சொல்லத் தகாதது நடந்திருக்காதே... உண்மையைக் கொன்னு என்னை ஒரேயடியாய்க், கொன்னுட்டியே... உனக்கு எதாவது நான் கெடுதல் செய்தால்... அதையாவது சொல்லுடியம்மா... என் மனசை சமாதானப் படுத்திக்கிறேன்...''

டாக்டர் சந்திரா, கலைவாணியைக் கட்டிப் பிடிக்கப் போனாள். பிறகு, தன்னை எப்படியோ கட்டுப்படுத்திக் கொண்டு, நடுங்கும் விரல்களால் கலைவாணியின் கண்களை முந்தானையால் துடைக்கப் போனாள். கலைவாணி, அந்தக் கையை ஒருதட்டு தட்டினாள். ''எப்படி இருக்கேன்னு என்னை வேடிக்கையாடி... பார்க்க வந்தே... போடி... வெளியிலே போடி'' என்று அவளை வாசலைப் பார்த்து தள்ளினாள். அந்த வேகத்தில், தள்ளியவளும், தள்ளப்பட்டவளும் கீழே விழுந்தார்கள். ஒருவரோடொரு வர் பின்னிக் கிடந்தார்கள். இதில் கலைவாணியை குற்றவாளியாய்க் கருதி, அவளிடம் இருந்து சந்திராவை மீட்க வேண்டும் என்று நினைத்து, சங்கரன், கீழே குனிந்தான். கலைவாணியின் தலைமுடியை கைக்கு அடக்கமாக்கி னான். அதை முறுக்கி முறுக்கி, சுற்றிச் சுற்றி, அவளை அப்புறப்படுத்தப் போனான். கலைவாணிக்கு, பிராணனையே பிடுங்குவதுபோல் இருந்தது. மண்டை ஓடு கழன்று, அவன் கைக்குப் போகப் போவதுபோல் இருந்தது. மனோகரும் கீழே குதித்து, சங்கரை கோபமாகத் தள்ளினான். மீனாட்சி தீமூட்டிக் குழலால், சங்கரனின் முட்டிகளில் இரண்டு தட்டுதட்டினாள். இந்த அமளியில், சங்கரனின் பெருவிரல் கலைவாணியின் வாய்க்குள் போனது... கலைவாணி, கடித்தாளா அல்லது அவள் கடி படும்படி வைத் தானா என்பது தெரியவில்லை... சங்கரன், பெருவிரலை வெளியே எடுத்தபோது அதில் ரத்தம் சொட்டியது... அவன், அந்த விரலை உதறிய போது, ரத்தத்துளிகள், கலைவாணியின் நெற்றியிலும் சந்திராவின் வாயிலும் தெறித்தன.

''நீங்கல்லாம் ஒரு மனுஷனா...?'' என்று சங்கரனைப் பார்த்து கத்திய படியே, சந்திரா எழுந்தாள். விறைப்பாக நின்ற கலைவாணியின் முன்னால் ஆஜரானபடியே அரற்றினாள்...

''நீ என் தங்கையா இருந்தால், இப்படிச் செய்திருக்கமாட்டேம்மா. நான்

கொலைகாரிதாம்மா... இதோ நிராயுதபாணியாய் நிற்கேம்மா... நீ எனக்கு, என்ன தண்டனை தந்தாலும் வாங்கிக்கிறேம்மா... இந்த குற்ற உணர்வோடு, என்னால நிம்மதியாய் வாழ முடியாதும்மா... ஒன் கையாலயே என்னைக் கொன்னுடும்மா...''

கலைவாணி, இப்போது, சந்திராவை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. ஏனென்று கேட்கவில்லை. தடாரென்று தரையில் விழுந்தாள். மூச்சற்றுப் பேச்சற்றுக் கிடந்தாள். அவள் வாய் கோணியது. கண்கள், சாய்ந்து பார்த்தன; உடல், தாறுமாறாய்க் கிடந்தது... 'எம்மோ... எம்மா...'' என்ற மெல்லிய ஓலம் மட்டுமே... அப்புறம் வாயடக்கம்; கண்ணடக்கம்; உடலடக்கம்...

மீனாட்சி, சத்தம் போட்டே அழுதாள். மனோகர், எதாவது செய்யுங்கள் என்பதுபோல், சந்திராவின் முன்னால் போய் நின்று, அவளைக் கையெடுத்துக் கெஞ்சினான். உடனே, அவளும் டாக்டரானாள்... கலைவாணியின் மூக்கில் கை வைத்தாள். அவள், உடையைத் தளர்த்தினாள்... நாடி பிடித்துப் பார்த்தாள். குறிப்பறிந்து மீனாட்சி கொண்டு வந்த டம்ளரை வாங்கி, தண்ணீரை அவள் முகத்தில் மென்மையாய் தெளித்தாள். அப்போது, சங்கரன் சந்திராவை எச்சரித்தான்...

'வந்துரு சந்திரா... வந்துரு.. ஏதாவது செய்திடப் போறாள்...'

சந்திரா, கட்டிக்கப் போகிறவனைப் பார்க்காமலும், பதில் பேசாமலும் கலைவாணியின் கழுத்தை நீவிவிட்டாள். கண்களில் திரையிட்ட முடிக்கற்றைகளை ஒதுக்கிவிட்டாள். வெளியே வேடிக்கை பார்ப்பது போல் திரண்ட கூட்டத்தை எரிச்சலோடு பார்வை இட்டாள். இதற்குள், சங்கரன் ரத்தப் பெருவிரலை உதறிக் கொண்டே பேசினான்.

''ஆனாலும், ஒரு பெண்ணுக்கு... இவ்வளவு ஆங்காரம் கூடாது.. புருஷனுக்கு வந்ததைவிட.... இவளுக்கு வந்தது பெரிசா போயிட்டாம்...''

வெளியே நின்ற கூட்டத்திற்காக, பல்லைக் கடித்து கோபத்தையும் கடித்த சந்திரா, பொறுமை இழந்து, சங்கரைச் சாடினாள்.

''மூளை இல்லாமல் பேசாதீங்க சங்கர். கலைவாணி இடத்தில வேற யாராவது இருந்திருந்தால் கொலை கூட செய்திருப்பாங்க. அவளுக்கு இப்போ சுயமே அற்றுப் போச்சு.. ஹிஸ்டிரியா மாதிரி வந்துட்டு. ஒன் பேரு என்னம்மா...? மீனாட்சியா... நான் எழுதிக் கொடுக்கிறதை மருந்துக் கடையில காட்டு... பிளாஸ்டிக் பேப்பருக்குள்ள இருக்கிற ஊசியையும் ஒரு சின்ன பாட்டிலையும் தருவாங்க. சீக்கிரமா வாங்கிட்டு வா. உங்களத்தான்... அந்தப் பெண்கிட்டே இருபது ரூபாய் கொடுங்க..'

''என் பெரு விரலுக்கும் அப்படியே...?''

''உங்களுக்கு உயிர் போகாது. கொஞ்சம் பொறுங்க''

சந்திரா, ஒரு மூலையில் குப்புறக் கிடந்த கைப்பையைத் தூக்கி, ஒரு காகிதக் கொத்தை எடுத்து நாலு வரி எழுதிவிட்டு, எழுதியதையும், கசங்கிப் போன இருபது ரூபாய் நோட்டையும் மீனாட்சியிடம் கொடுக்க, அவள் ஒரே ஓட்டமாய் வெளியே ஓடினாள். வெளியே திரண்ட கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு ஓடினாள்.

கலைவாணி, தரையோடு தரையாய்க் கிடந்தாள். சிறிது நேரத்தில், பித்துப் பிடித்து, எல்லோரையும், மலங்க மலங்க பார்த்தபடியே கிடந்தாள். மேற் கூரையை வெறுமையாய் பார்த்தாள். பக்கத்தில் நின்ற சந்திராவைப் பாராதது போல் பார்த்தாள். பிறகு, அவளை பார்க்க விரும்பாததுபோல் குப்புறப் படுத்தாள். பின்னர், மோவாயைத் தூக்கித் தூக்கித் தரையில் இடித்தாள். ''யாராவது விஷம் தாங்களேன்'' என்று பேசிய வாய், பல்லோடு சேர்ந்து, தரையில் இடிபட்டது. அந்தத் தரையைச் சிவப்பாக்கியது. கால்கள் வெட்டிக் கொண்டன. கரங்கள், தலையில் முட்டிக் கொண்டன.

நல்ல வேளையாக, மீனாட்சி, ஊசி மருந்தோடு வந்துவிட்டாள். டாக்டர் சந்திராவுக்கு புரிந்துவிட்டது. தன்னந்தனியாய் அவளுக்கு ஊசி போட முடியாது. ஆகையால், வாசலுக்கு வெளியே தலையை நீட்டி, கும்பலாய் நின்ற கூட்டத்தைப் பார்த்து ''கலைக்கு ஊசி போடணும்... கொஞ்சம் ஹிஸ்டிரியா மாதிரிதெரியுது... யாராவது ரெண்டு பேரு வாங்க... கையையும் காலையும் பிடிச்சுக்கணும்'' என்றாள்.

சந்திரா, ஏதோ கையில் சோடா பாட்டிலை வைத்து எறியப் போவது போல் கூட்டம் சிதறியது. இதையும் மீறி, உள்ளே போகப் போன சியாமளாவை, மோனிகா பிடித்துக் கொண்டாள். நாராயணசாமி, தனது மனைவி பாலாவின் காதில் எதையோ கிசுகிசுத்தார். எவரும் வருவது மாதிரி தெரியவில்லை. உள்ளே நின்ற மீனாட்சிதான் வெளியேவந்து, ''நான் பிடிச்சிக்கறேன்'' என்றாள். சந்திராவால், அவள் முதுகைத் தட்டிக் கொடுக்கத்தான் முடிந்தது. இதோ... இங்கே கூடியிருக்கிறவர்களில் இரண்டு மூன்று பேர் இல்லாமல், கலைவாணிக்கு பலவந்தமாக ஊசி போட முடியாது. அந்த இரண்டு மூன்று பேரை, சந்திரா, அந்த படித்த கும்பலில் தேடிக் கொண் டிருந்தாள். பலனில்லை. திடீரென்று கூட்டம் சிதறி ஓடியது. பெண்கள், பிள்ளைகளை இழுத்துக் கொண்டு ஓடினார்கள். கணவன்மார், மனைவிக ளையும், மனைவிகள் கணவன்மாரையும், பேத்திகளை, பாட்டிகளும், பாட்டி களைப் பேத்திகளும் இழுத்தபடியே ஓடி ஓடி... சிதறிச் சிதறி, சிறிது

தொலை வில் நின்று உற்றுப் பார்த்தார்கள். அவர்களின் பார்வை பதிந்த திசையை திரும்பிப் பார்த்த சந்திரா, அழுதுவிட்டாள். கலைவாணி, ஒரு கையை நீட்டிய படி, வெளியே நின்றாள். சந்திராவின் முகத்தைப் பார்த்ததும் கேவினாள்.

''என்னால... தாங்க முடியல... போடு போடு... எழுந்திருக்க முடியாமல் போடு...''

டாக்டர் சந்திரா, கலைவாணியை உள்ளே கூட்டிப் போனாள். ஒரு நாற்காலியில் உட்கார வைத்தாள். பாட்டில் மருந்தை, ஊசி வழியாய் உறிஞ்சி, கலைவாணியின் தோள் பகுதியில் குத்தினாள். அவளோ... முகத்தில் ஒரு சின்னச் சுழிப்பு கூட இல்லாமல், கையை யாரோ மயில் இறகால் வருடிக் கொடுப்பது போல், தனக்குத்தானே சிரித்தபடிக் கிடந்தாள். தனக்குத்தானே பேசியபடி... இருந்தாள்.

ஐந்தே ஐந்து நிமிடத்தில், கலைவாணிக்கு கிறக்கம் ஏற்பட்டது. அதுவே மயக்கமானது. வீடு வெளியாகி, வெளியே வீடானது போன்ற மயக்கம். மனம் சுருங்கிச் சுருங்கி, உள்ளுக்குள்ளேயே ஒடுங்கிப் போனது. அவளைப் பொறுத்த அளவில், தானோடு தானாய் அத்தனையும் செத்துப் போயின.

சந்திரா, கலைவாணியைக் கட்டிலுக்கு நகர்த்தினாள். அவளும் அடம் பிடிக்காமல், அப்படியே சாய்ந்தாள். மனோகர், அங்குமிங்குமாய் ஓடினான்; நடந்தான்; நின்றான். சந்திரா, அவனைக் கடுமையாகவும் கொடுமையாகவும் பார்த்தாள். சிறிது நேரத்தில், அனுதாபமாகவும் நோக்கினாள். அந்த அனுதாபம் கோபமாகவும், இந்தக் கோபம் அனுதாபமாகவும் மாறிக் கொண்டும், அவளை மாற்றிக் கொண்டும் இருந்தன. இறுதியில், தனக்குத் தானே சொல்வதுபோல், மனோகரைப் பார்க்காமல், மனோகருக்காகவே, சந்திரா பேசினாள்.

''நான் எவ்வளவோ சொல்லியும்...''

சங்கரன், ரத்தம் உறைந்த பெருவிரலை ஆட்டியபடியே குறுக்கிட்டு பேசினான்.

''சந்திரா, நீ வெறும் டாக்டர்... ஒரு டாக்டர் என்ன சொல்லணுமோ, அதை மட்டுமே சொல்லு...'

சந்திரா, சங்கரனை ஒரு பார்வை பார்த்தாள். அது ஒப்புதலா, நிராகரிப்பா என்பது அவளுக்கே தெரியாது. ஆனாலும் தெளிவாகவே பேசினாள். மனோகருக்கு உபதேசமாய்ச் சொன்னாள்.

''கலைவாணி... இதே மாதிரிதான் பிஹேவ் பண்ணுவாள்ன்னு பயப்பட வேண்டாம். எடுத்த எடுப்பிலேயே, யாராய் இருந்தாலும், இப்படித்தான் நடப்பாங்க. கலை விவரமானவள்; எப்படியோ அனுசரித்துப் போக பழகிடுவாள். இந்தாங்க... இந்த சீட்டுலே ஒங்களுக்கும், கலைவாணிக்கும் மாத்திரை எழுதியிருக்கேன். வேளா வேளைக்கு சாப்பிடுங்க. சத்துணவா சாப்பிடுங்க. மாத்திரையை கலைவாணிக்கிட்டே, நீங்க கொடுக்க வேண்டாம். இந்தப் பொண்ணையே கொடுக்கச் சொல்லுங்க. நீ யாரும்மா...?''

''வேலைக்காரி... மீனாட்சி!''

''நான்... ஒன்னை மாதிரி வேலைக்காரியாகவும், நீ என்னை மாதிரி டாக்டராகவும் ஆயிருக்கணும்...''

சங்கரன், பல்லைக் கடிப்பதைப் பார்க்காமல், சந்திரா, மூச்சு விட்டபடியே செத்துக் கிடந்த கலைவாணிக்கு, ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவது போல், தலைதாழ்த்தி நின்றுவிட்டு, வாசலுக்கு வெளியே வந்தாள். அங்கே இன்னமும் கலையாமல் நின்ற கூட்டம், அவளைச் சூழ்ந்து கொண்டது. அந்தக் கூட்டத்தின் குரலாக, திருமதி பாலா நாராயணசாமி பகர்ந்தாள். அவள் பேசப்பேச, அப்போதுதான் வந்த பழைய பகையாளி திருமதி மஞ்சுளா கண்ணன், அவளுக்கு ஒப்புக் கொடுத்து தலை ஆட்டினாள்.

''நீங்கதான் எங்களுக்கும் ஒரு சின்ன உதவி செய்யணும்; இங்கே எல்லாருமே குடும்பத்தோடு இருக்கிறவங்க... நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்; கலைவாணின்னா எங்களுக்கு உயிர்; அதுக்காக எங்க உயிரை நாங்க கொடுக்க முடியாது. நீங்க அவங்களுக்கு சொந்தக்காரங்க மாதிரி தெரியுது... அவங்க ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டுப் போயிட்டால், கோடி புண்ணியம்; இப்பவே வேண்டாம்; பாவம் குழந்தைங்க... இங்கேயே இருக்கட்டும்; சாயங்காலமாய் ஒரு டெம்போவோட வந்து கூட்டிக்கிட்டுப் போனால் போதும்... ஒனருக்கு நாங்க வாடகை கொடுத்துடுவோம். பாவம் நல்ல குழந்தைங்க'

''இவங்களை கூட்டிக்கிட்டு போறேன். அதுக்கு நீங்க, நான் சொல்றதைக் கேட்கணும்...!'

''நீங்க என்ன சொன்னாலும், கட்டுப்படுறோம். நீங்க டக்டரா... நர்சா?''

''டாக்டர்தான்... அதுவும் எய்ட்ஸ்லே ட்ரெயினிங் எடுத்த டாக்டர்... இவங்களால் ஒங்களுக்கு எந்த ஆபத்தும் வராது''

''வருமோ வராதோ... அவங்க இங்கே இருக்கப்படாது...''

''சரி... நாளைக்கு ஒரு ஆம்புலன்ஸ் கொண்டு வாரேன். நீங்க எல்லோரும் அந்த வண்டில ஏறி... ஆஸ்பத்திரிக்கு வரணும்... ஒங்க ரத்தத்தை டெஸ்ட் செய்றோம். ஒங்களுல ஒருத்தருக்குக் கூட எய்ட்ஸ் கிருமி இல்லன்னா, மனோகரையும் கலைவாணியையும் நான் ஒரேயடியாய்க் கூட்டிக்கிட்டுப் போறேன்... சரியா...''

கூட்டம், சரியில்லை என்பதுபோல், சந்திராவைப் பார்த்தது. எதிரியாய் மிரட்டிப் பார்த்தது. இதுவரை, அவளோடு கண்ணியமாகப் பழகும் சங்கரன், அவள் பிடரியில் கைவைத்து கிட்டத்தட்ட தள்ளிக் கொண்டே போனான். அடிக்கடி திரும்பிப் பார்க்கப் போனவளை, வலுக்கட்டாயமாக திசைதிருப்பி விட்டான். இதற்குள்ள பேயறைந்த கூட்டத்தில், ஒரு பிசாசு சத்தம்...

''அவள் கிடக்காள்... மனோகர்கிட்ட சொல்ற விதமா சொல்லுவோம். கேட்காவிட்டால், கட்டில், பேன், பீரோ, தட்டுமுட்டுச்சாமான்கள நாமே தூக்கி எறியலாம்''

''ஆமாம்... இப்பவே நம் மாதர் சங்கத்தை கூட்டி... மேற்கொண்டு என்ன செய்யலாமுன்னு ஆலோசிப்போம்...''.

14

அந்தக் கம்பெனியில் கார்ப்பரேட் அலுவலகம்; அரசு அலுவலகங்களுக்கு சலாம் போடும் கம்பெனியாக இருந்தாலும், அவற்றைவிட தோற்றத்திலும், ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதிலும் பல மடங்கு மேலான கட்டிடம். அண்ணாசாலையில் உள்ள இந்தக் கட்டிடத்தை அப்படியே தூக்கி அமெரிக்காவில் வைத்தாலும், அங்குள்ளவர்கள் முகம் சுழிக்க மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட கட்டிடம்... நடையை சுகமாக்கும் தரைவிரிப்பு... வெள்ளைக்காளான் நிறத்தில் பஞ்சு மெத்தை இருக்கைகள்; இந்த இருக்கைகளில் இருப்பவர்களின் தலைகளை மட்டும் காட்டும், நான்கடி உயரத்தில் பல்வேறு இடங்களை எல்லை பிரித்துக் காட்டும் அலுமினிய உருளைக்ளுக்குள் பொருத்தப்பட்ட நோவா பலகைகள்... ஆங்காங்கே ஒரு சில பெரிய இடத்து அறைகள்... அத்தனையும் கதவுகளால் மூடப்பட்டு, அந்தக் கதவுகளில் தங்க முலாம் எழுத்துக்கள். மனிதர்கள் இயங்கினாலும், கம்ப்யூட்டர்கள் இயக்கப்பட்டாலும், சூன்யமயமான தோரணை... இதற்கு ஈடு கட்டுவது போல் வெளிவளாகத்தில், வட்டமாய் சுற்றிய மேசைக்குப் பின்னால், வரவேற்புக் கன்னிகளின் மென்மையான சத்தங்கள்... கீழே பரந்து விரிந்த பகுதிகளில் ஒரு மூலையில், மனோகரை விமான நிலையத்தில் இருந்து வீட்டுக்குக் கொண்ட போய் விட்ட அந்த கண்டசா காரின் உள்ளும் புறமும் முழுவதும் சோப் போடப்பட்டு, பினாயில் தெளிக்கப்பட்டு, நீர்க் குழாயில் ஏற்பட்ட சின்ன நீர் வீழ்ச்சி அந்தக்காருக்கு உள்ளயும் வெளியேயும் கொட்டியது. எய்ட்ஸ் கிருமிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் அந்தக் காரின் சந்து பொந்துகளை, டிரைவர் ஒரு கூரிய இரும்புக் கம்பியால் குத்திக் கொண்டு இருந்தார். அப்போது, அவர் தன் முகத்தை, காதுவழியாய்க் கைக்குட்டையைத் திணித்து மூடியிருந்தார்.

உதவிப் பொதுமேலாளர் சூரிய நாராயணன், முப்பதாயிரம் ரூபாய் சுழல் நாற்காலியில் உட்கார்ந்தபடியே, ஒரு லட்சம் ரூபாய் மேஜையில் உள்ள இண்டர்காமை அழுத்தி, இரண்டே இரண்டு வார்த்தைகள் பேசியிருபபார். ஐந்து நிமிடத்தில், சங்கர் வந்துவிட்டான். வெள்ளை டையை ஒரு இழுப்பு இழுத்து, கழுத்தை இறுக்கியபடியே உள்ளே வந்தான். எதிரே உள்ள தேக்கு நாற்காலியில் உட்காரப் போனவனை 'லெட் அஸ் சிட் இன் ஸோபா செட்' என்றார் சூரி; பிளாஸ்டர் போட்ட வலது பெருவிரலை தூக்கி வைத்தபடியே நின்ற சங்கரனுக்கு பாதிப்பயம். மீதி சந்தோஷம். இந்த சூரிய நாராயணன் எவரையாவது ஒரு ஊழியரை சோபா செட்டில் உட்காரச் சொன்னால், ஒன்று அவரை கணக்கு தீர்ப்பதாக இருக்கும் அல்லது கண்ணுக்குள் ஒற்றுவது போலவும் இருக்கும்.

சங்கரன், உள்ளூர உதறலோடும், பயபக்தியோடும், ஒரு சின்ன சோபா துண்டில் உட்கார்ந்தான்; நீளவாக்கிலான சோபாவில், கைகளை விரித்துப் போட்டு உட்கார்ந்த சூரிய நாராயணன், சிரித்தபடியே அவனைப் பாராட்டினார்.

'கன்கிராட்ஸ் மை டியர் சங்கர்!'

'தேங்க்யூ சார்'

செய்தியைச் சொல்லும் முன்னால் நன்றி சொன்ன சங்கரனை, சூரி முகம் சுழித்துப் பார்த்தார். அந்தரங்கமான அந்த முடிவு இவனுக்கு எப்படித் தெரியும் என்பது மாதிரி...

''நான் எதுக்காக ஒங்களை கூப்பிட்டேன்னு தெரியுமா மிஸ்டர் சங்கர்''

''இல்ல சார்... இல்லல்ல சார்''

''ஓ... கே... மை டியர் சங்கர்... மனோகர், இடத்தில ஒங்களை நியூயார்க் அனுப்புவதுன்னு... நிர்வாகம் தீர்மானித்திருக்கு... மனோகரால், நம் கம்பெனிக்கு ஏற்பட்ட தலைக்குனிவை, எப்படி நிமிர்த்தலாமுன்னு நாங்க மண்டையை குழப்பினபோது... அந்த உலகக் கம்பெனியே டோன்ட் ஒர்ரின்னு டெலக்ஸ் மெசேஜ் கொடுத்தது... டெலிபோன்லயும், சொல் லிட்டு... எய்ட்ஸ் பரவுனாலும் பரவாட்டாலும், அதனுடைய புதிய வானிலை கம்ப்யூட்டர் மாடல்கள் நம் கம்பெனி மூலம் கம்பெனி கம்பெனியாய் பரவணும்... என்கிற ஆசை... அதோட இந்த மாதிரி எய்ட்ஸ் கேஸ்கள் அமெரிக்காவில் சகஜமாம்... அதே சமயம்... மனோகருக்கு பதிலாய் அனுப்புகிறவரை ஹெச்.ஐ.வி. இல்லை என்கிற வெளிப்படையான மெடிக்கல் சர்டிபிகேட்டோடு, அனுப்பி வைக்கச் சொன்னாங்க... அதனால

நாளைக்கே மெடிக்கல் டெஸ்டுக்கு போங்க... விசா வாங்குறதில பிராப்ளம் இருக்காது... ஒகே. யூ கேன் கோ... பி.ஆர்.ஓ. காத்திருக்கிறார். அவர் மட்டும்... உள்ளூர் செய்தியாளர்களை 'மகிழ்ச்சியாய்' வைத்திருந்தால், நம் கம்பெனியும், மனோகரும் இப்படி நாறி இருக்காது. அதனால பப்ளிக் ரிலேஷன் ஆபீசரை வீட்டுக்கு அனுப்பப் போறோம். நீங்க சீனியர் என்கிறதால... இதைச் சொல்றேன்... ஒகே..சங்கர்... நியூயார்க் புறப்படுறதுக்கு முன்னால என்னைப் பார்த்துட்டுப் போங்க''

சங்கரனுக்கு, உடம்பெல்லாம் ஆடியது. நேற்றுமுதல், அவன் படும்பாடு அவனுக்குத்தான் தெரியும். டாக்டர் சந்திரா, ஹெச்.ஐ.வி. ஊடுருவலின் ஆரம்ப கால அறிகுறிகள் பற்றித் தெரிவித்த போது, ஆடிப்போனவன்; வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போல், கலைவாணி வேறு அவன் பெருவிரலைக் கடித்துவிட்டாள். ரத்தம் சொட்டச் சொட்டக் கடித்துவிட் டாள். டாக்டர் சந்திரா, என்னதான் அவனுக்கு ஆறுதல் சொன்னாலும், அவன் சமாதானப்படவில்லை. ஒரு ஹெச்.ஐ.வி. நோயாளி ரத்தம் வரும் அளவுக்குக் கடித்தாலும், அந்தக் கடிவாயில், அந்தக் கிருமிகள் 'எழுச்சிப் பயணங்களை' மேற்கொள்ள முடியாது என்று சந்திரா, அடித்துச் சொன்னாள். எச்சிலிலோ, பற்களிலோ அந்தக் கிருமிகள் 'சொல்லும்படியாய்' இருக்காது என்றாள். சங்கரனுக்கு சந்தேகம்... அது என்ன 'சொல்லும்படியாய்'. ஒரு வேளை, கலைவாணியின் பற்களில் ரத்தம் இருந்திருக்கலாமே... எத்தனை பேர் பற்களில் தொட்டாலே ரத்தம் கொட் டுது... கலைவாணியின் வாய் ரத்தம்... இந்தக் கை ரத்தத்துடன் கலந்து இருக் கலாமே... இந்த லட்சணத்தில் எப்படி ஹெச்.ஐ.வி. டெஸ்டுக்கு போவது... ஒன்று கிடக்க ஒன்று சொல்லி விட்டால், 'உள்ளதும் போச்சே நொள்ளைக் கண்ணா' கதைதானே... அந்த மனோகரைப் போல்தானே ஆக வேண்டும்... இந்த சந்திரா கூட ஏறெடுத்துப் பார்க்க மாட்டாளே. இவள் பார்க்க நினைத் தாலும், அந்த டாக்டர் அசோகன் பயல், இவளை அப்படிப் பார்க்க விட மாட்டானே... அடேய்... மனோகரா... அப்போதும் என்னை போகவிடல. இப்போதும் என்னை போகவிடல... என்னடா இதெல்லாம்?'

சங்கரன், டையை இழுத்துவிட்டபடியே, நாக்கையும் இழுத்துவிட்டான்;

''சார்... சார்... எனக்கு''

''என்ன வேணும் சொல்லுங்க... நியூயார்க்லே அக்காமடேஷனப் பற்றி கவலப்படவேண்டாம். அந்தக் கம்பெனியோட கெஸ்ட் அவுஸ்லயே தங்கிக்கலாம்.''

''வந்து... வந்து...''

''என்னைப் பார்க்காமல்... கையை ஏன் பார்க்கிங்க மிஸ்டர்... அது என்ன பிளாஸ்டர்...''

''ஒண்ணுமில்ல... சார்... எய்ட்ஸ்! நோ நோ... ஒரு சின்ன பிராக்சர் இல்லல்ல... பாத்ரூம்ல... வழுக்கி விழுந்துட்டேன். அதனாலதான் இந்த அசைன்மென்ட் வேண்டா'முன்னு''.

''வழுக்கி விழுகிறதுக்கும், நியூயார்க் போகாமல் இருக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இல்ல... ஆனால் அக்காவுக்கு கல்யாணம்''

''இந்த வயசுலேயா? அக்காவுக்கா, அக்கா பொண்ணுக்கா''

''இரண்டு பேருக்குமே... மனோகருக்கும்... எனக்கும். சாரி...சாரி... சாரி, சந்திராவுக்கும்... எனக்கும்...''

''என்ன சங்கர், ஒரே உளறலாய் இருக்குது... நியூயார்க்கிலயும், இப்படி உளறுனா எப்படி?''

''எனக்கு... எனக்கு இப்போதைக்கு வேண்... வேண்டாம்... சார்''

''லுக் மிஸ்டர் சங்கர்! நீங்க சீனியராச்சேன்னுதான் ஒங்களை அனுப்பத் தீர்மானித்தோம்... ஒங்களைவிட, ரொம்ப... ரொம்ப... பிரில்லியண்டான ஜூனியர்ஸ் இருக்காங்க... நீங்க போகலாம்''

''ஏ.ஜி.எம். என்னை தப்பாய்..''

''உண்மையைச் சொல்லப் போனால், நீங்க போக விரும்பாததில் எனக்கு சந்தோஷம். நீங்க போகலாம்... ஏன் போகாமல் நிற்கிறீங்க...? போங்க மிஸ்டர்... மனோகருக்கு எய்ட்ஸ் கிருமி இருக்குதுன்னு இங்கே உள்ள நம் கம்பெனி ஆளு ஒருத்தன்தான்... நியூயார்க் ஏர்போர்ட்டுக்கு 'கால்' போட்டு பேசியிருக்கான். அவன் யாராய் இருக்குமுன்னு தெரிஞ்சிக்கிறதுக்காக தலையை, இப்போ பிச்சுட்டு இருக்கேன். நீங்களும் சேர்ந்து பிய்க்காதீங்க... யு கேன் கோ''

''கால் போட்டது சத்தியமாய் நான் இல்ல சார்''

''ஐஸி... இப்படி ஒரு ஆங்கிள் இருக்குதோ.. ஓகே ஓகே... ஏன் பித்து பிடித்து நிக்கறீங்க... போறீங்களா? போக வைக்கணுமா? மிஸ்டர்... உங்களைத்தான்''

சங்கரன், காலைத் தேய்த்து தேய்த்து, சூரிய நாராயணனைப் பார்த்து பார்த்து, மாயமாய் மறைந்து போனான். உடனே, மின்சார மணி பித்தானை

அழுத்தி விட்டு, சூரி, 'மனோகர்' என்று ஒற்றைச் சொல்லை சொல்லிவிட்டு, இண்டர்காமை வைத்தார். உள்ளே வந்த பி.ஆர்.ஓ. உட்காரக் கூடாது என்பதற்காகவே எழுந்து நின்றார்.

அந்தக் கம்பெனியின் பொது மக்கள் தொடர்பில்லாத அதிகாரி வெளியேறுவதற்கும், மனோகர் உள்ளே நுழைவதற்கும் மூன்று நிமிட இடைவெளி நேரமே இருந்தது. சூரியநாராயணன், மனோகரையே உற்றுப் பார்த்தார். தாடி, மீசை இல்லை; அவன் கண்கள் கூட மெலிந்து இருப்பது போல் அவருக்குப் பட்டது. ஆனாலும், அந்த முகத்தில் ஜீவ களை இன்னும் போகவில்லை என்பதையும், அவர் புரிந்து கொண்டார். லேசர் ஒளிக் கற்றைகள், பொதுவாக, தன்னிடம் வரும் மின்சக்தியில் கால்வாசியைத்தான் ஒளியாக மாற்றக் கூடியவை... அதே மின் சக்தியின் பாதியை ஒளிக் கூறுகளாக மாற்றும் உத்தியை கண்டு பிடித்துச் சொன்னவன் இந்த மனோகர்; இந்த உத்தி, கம்பெனியின் ஆய்வு மற்றும் வளர்ச்சித் துறையில் உள்ளது. இவனது உத்திக்கு உருவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது, இவனுக்கே தெரியாது. தெரிந்தால், ராயல்டி கேட்டுவிடுவான் என்ற சந்தேகம். கம்பெனி இயக்குனர்களில் ஒருவரது மகன் பெயரிலோ அல்லது மருமகள் பெயரிலோ இந்தக் கண்டுபிடிப்பு வெளியாகலாம்...

மனோகர், நீட்டாகவே வந்திருந்தான்; ஆனாலும் அவன் மனதில் எதிரே உள்ள உதவிப் பொதுமேலாளருக்குப் பதிலாக, கலைவாணியே வியாபித்திருந்தாள். டாக்டர் சந்திரா எழுதிக் கொடுத்த மாத்திரையை... காலையிலேயே, அவள் அரை மயக்க நிலையில் இருந்த போதே, மீனாட்சி கொடுத்துவிட்டாள். இன்று மாலையில் போய்த்தான், மனம் விட்டுப் பேச வேண்டும். அவள் என்ன சொன்னாலும், அதற்குக் கட்டுப்பட வேண்டும்.

''உட்காருங்க மிஸ்டர்... மனோகர்!''

''பரவாயில்லை சார்''

''ஐஸே யூ சிட்டவுன்... கண்ட கண்ட பயல்க எல்லாம் உக்காரும் போது, நீங்க உட்காரப்படாதா...?''

மனோகர், சங்கரன் உட்கார்ந்த ஒற்றைச் சோபா துண்டிலேயே உட்கார்ந்தான். சூரியநாராயணன்தான், சோபாவில் கை பரப்பியோ அல்லது கால் மேல் கால் போட்டோ உட்காராமல், அதன் மூலையில் உட்கார்ந்தார். மனோகர் ஆற்றொண்ணா துயரத்தோடு பேசினான்.

''நடந்தது எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பு சார்... என்ன.. ஒங்க கிட்ட ஒப்படைக்கேன் சார்... என்னால... என்னால...''

''அழாதீங்க... மிஸ்டர் மனோகர்... சுய இரக்கம் கூடாது; நீங்க எனக்கு உடன்பிறவா தம்பி மாதிரி''

மனோகருக்கும், சிறிது தெம்பு வந்தது; சூரிய நாராயணனுக்குத்தான் அவனைப் பார்க்க, பார்க்கப், அந்த தெம்பு போய்க் கொண்டிருந்தது. ஆனாலும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, அவர் பேசினார். எய்ட்ஸ் துறையில் தனக்குள்ள ஞானத்தை நன்றாகவே விளக்கினார்.

''ஒரு ஹெச்.ஐ.வி. நோயாளி, முன்னெச்சரிக்கையோடு இருந்தால், பத்து வருடத்திற்கும் அதிகமாகவே, தனக்கும், பிறருக்கும் பயன்படலாம் என்பது எனக்குத் தெரியும் மனோகர். இந்தக் கிருமிக்காரரை கட்டிப் பிடிப்பதாலோ, ஒரே தட்டில் சாப்பிடுவதாலோ, ஒன்றாகப் படுப்பதாலோ, இந்த நோய் தொற்றாது என்பதும் தெரியும் மனோகர். இந்த நோயாளியோட இருமலும், தும்மலும், எச்சிலும் இந்த நோயைப் பரப்பாது என்பதும் எனக்குத் தெரியும் தம்பி. எய்ட்ஸ் நோயாளியோடு.. கொஞ்சம், கொஞ்சமாய் எச்சரிக்கையோடு பழகினால், அந்த நோய் அடுத்தவருக்கு வராது. இன்றைய டென்ஷன் பிடித்த வாழ்க்கையில்... எல்லாவற்றிலும், எப்போதும் ரிஸ்க் எடுக்கிறோம். உதாரணமாய், நம்மை எமலோகத்துக்கு அனுப்பக் கூடிய லாரிக்கு இரண்டடி பக்கத்திலேயே நடக்கோம். ஒரு சைக்கிள்காரன் கூட, தனக்குத்தானே ஒரு கணக்குப் போட்டு, எதிரே ஓடிவருகிற பஸ்ஸுக்கு குறுக்கே இரண்டடி இடைவெளியில், உயிருக்கு ரிஸ்க் எடுத்து ஓட்டுறான்; ஆக வாழ்க்கையே... இரண்டடி மரண இடைவெளியில் தான் ஓடுது. மரணத்துக்குப் பக்கமாகவே நடக்கோம். மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமலே பறக்கோம். பிறப்போடு பிறந்தது மரணம்... அதனால ஒரு எய்ட்ஸ் நோயாளியோடு பழகுவதோ, பகிர்வதோ, எல்லா... ரிஸ்கையும் மாதிரி சாதாரண ரிஸ்க்குத்தான். இதுக்கு ரொம்ப அலட்டிக்க வேண்டியதில்லை.''

மனோகருக்கு, மகிழ்ச்சி ஏற்படவில்லைதான். ஆனால் துக்கம் குறைந்தது. நல்ல வேளையாக, அவன் நினைத்ததுபோல் அவர் பேசவில்லை. இன்னும், தன் மீது கம்பெனிக்கு அன்பு இருக்கிறது, அனுதாபம் இருக்கிறது. இந்த இரண்டிற்கும் மேலாய் நம்பிக்கை இருக்கிறது. இப்போது இந்த மனோகரனே, அவரிடம் குழந்தையானான்.

''ஒங்களுக்கு... எப்படி நன்றி சொல்லறதுன்னே புரியல சார். வீட்டுக்கு அனுப்பிடுவீங்களோன்னு பயந்தேன் சார். இன்றைக்கு பாருங்க சார். என் செக்ஷன்ல போய் உட்கார்ந்தேன். ஒருத்தர் கூட அனுதாபமா கேட்கல. என்னைப் பார்த்ததும், எல்லோரும் சொல்லி வைத்தது மாதிரி புறப்பட்டாங்க சார். இன்னும் திரும்பி வரல்ல சார். நீங்க இப்படி பேசுன பிறகுதான், என் வயித்தில பால் வார்த்தது மாதிரி இருக்குது. ஒங்க அரவணைப்புல,

கம்பெனிக்கு இன்னும் திறமையாய் உழைப்பேன் சார்... எதுக்கும் தனி ரூம்தாங்க சார்''

''வெயிட்... மை எங்க்மேன் வெயிட்... ஒங்க கிட்டே எப்படிச் சொல்றதுன்னே புரியல. நான் கம்பெனி அல்ல... கம்பெனியோட கருத்தும்... என் கருத்தல்ல... ஒங்களைப் பார்த்ததும், வெளியேறுன சகாக்கள் வேற... எங்கயும் போகல... என்கிட்டதான் வந்தாங்க. உங்களை இனிமேலும் இருக்க வைக்கக் கூடாதுன்னாங்க. நான் , எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். எதுல ரிஸ்க் எடுத்தாலும், உயிருல ரிஸ்க் எடுக்க முடியுமான்னு திருப்பி கேட்டாங்க. நோய் தொத்துற மலேரியா நோயாளியோடு பழகுறோம். அம்மை போட்ட நோயாளியோட பழகுறோம். ஆனால்... ரத்தம் தவிர வேற எந்த வழியிலும் பரவாத எய்ட்ஸ்காரனைப் பார்த்தால் பயந்து ஓடுறோம். பாருங்களேன், அநியாயத்தை... நீங்க செக்‌ஷனுக்குள்ள இருக்கிறவரைக்கும் அவங்க அங்கே போகமாட்டாங்களாம்... அதனால...''

''நான்... அக்கௌண்டன்டை போய் பார்க்கணும்... எய்ட்ஸ் என் கணக்கை முடிக்கும் முன்பே... நீங்க என் கணக்கை முடிச்சிட்டிங்க... அவ்வளவுதானே சார்?''

சூரியநாராயணன், தலை கவிழ்ந்தார். தோளைக் குலுக்கினார்; புறப்பட்ட மனோகரை பார்க்க முடியாமல் கண்களை மூடினார். அவன் வாசல் வழியாய் மறையப் போனபோது, 'அடிக்கடி வாங்கோ மனோகர்' என்று வாய்க்குள் புரளப் போன நாக்கிற்கு, வாய்க்குள்ளேயே சிறையிட்டு, அதை உதடுகளால் மூடிக் கொண்டார்.

15

அந்தக் கம்பெனியில் இருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபாயோடு, மனோகர் வெளியேறினான்... கம்பெனியை சும்மா சொல்லக் கூடாது. அவனுக்கு சிரமம் இருக்கக் கூடாது என்பதற்காக, இருபத்தையாயிரம் ரூபாயை நோட்டுக்களாகவும், எஞ்சிய தொகையை செக்காகவும் கொடுத்தார்கள். இந்தப் பணத்தை கொடுக்கும்போது, அக்கௌண்டன்ட் பெண், கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாலும், அந்தப் பணத்தை, கோவில் குருக்கள் பிரசாதத்தை தூக்கிப் போடுவது போலவே போட்டாள்.

அந்தப் பணத்தை பார்த்ததாலோ அல்லது ஒரு நாள் இடைவெளியாலோ, மனோகருக்கு, அத்தனைக் குழப்பத்திலும் ஒரு தெளிவு ஏற்பட்டது. நாட்டு வைத்தியரை நம்பி மோசம் போனதை, கலைவாணியிடம் சொன்னால், அவள், தன்னையும், தன் பேச்சையும் ஏற்றுக் கொள்வாள். இந்த இரண்டு லட்சம் ரூபாயையும், கலைவாணியின் பெயரிலேயே பேங்கில் டிபாசிட்டாக போட வேண்டும். வட்டி மட்டுமே வாழ்க்கைக்குப் போதும்... லாக்கரில் வைக்கப்பட்டிருக்கும் அவள் நகைகளை, அவள் இஷ்டப்பட்டால் விற்று, அந்தப் பணத்தோடு, தான் சேமித்த பணத்தையும் சேர்த்து, சொந்தமாக ஒரு வீடு வாங்க வேண்டும். அதுவும் கலைவாணி பெயரிலேயே... வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்... ஏதாவது ஒரு கம்பெனியில் சேர்ந்து விடலாம். தமிழ் பத்திரிகைகளை படிக்காதவர்கள் வேலை பார்க்கும் எந்தக் கம்பெனியிலாவது கம்ப்யூட்டர், இருக்கத்தான் செய்யும். ஆனாலும் ஆறப் போட்டு செய்ய வேண்டிய காரியம்; கலைவாணி... இப்போ எப்படி இருக்காளோ... கண் விழித்தாளோ இல்லையோ; நல்ல வேளையாய் மீனாட்சி கிடைத்தாள், அசல் மதுரை மீனாட்சிதான்''

சூரியநாராயணனின் பாசப்பரிவாய் பக்கத்தில் உராய்ந்து வந்த கம்பெனிக்காரரை பார்த்த மனோகர், ஒரு ஆட்டோவை கைதட்டிக் கூப்பிட்டான். கம்பெனி டிரைவருடைய பார்வை சரியில்லை... அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே, 'அது' வந்துவிட்டது... மாதிரியான பயப்பார்வை.

இந்த ஆட்டோ, அடுக்குமாடி கட்டிடத்தின் முன்னால் வந்து நின்றபோது, மனோகர் மீட்டரைப் பார்க்காமலே, டிரைவர் கையில் மூன்று பத்துரூபாய் நோட்டுக்களைத் திணித்துவிட்டு, லிப்ட் பக்கம் வந்தான். அந்த லிப்டிற்குள் கும்பலோடு நின்ற குடியிருப்போர் சங்கத் தலைவர் நாராயணசாமி அவர்களுக்கு, ஒரு வணக்கம் போட்டான். லிப்டுக்குள் ஏறப் போனான். உடனே, நாராயணசாமி வெளியே குதித்தார். உள்ளே நின்றவர்களைப் பார்த்து, கண்களைக்குதிக்க விட்டு, அவர்களையும் குதிக்க வைத்தார்.

''நீங்க மொதல்ல போங்க மனோகர். நாங்கபின்னாலயே வாறோம் எப்பா... முதல்ல அவரை விட்டுட்டு வா... போங்கோ மனோகர்''

மனோகர், அவர்களை ஏற இறங்கப் பார்த்தான். மேற்கொண்டும் பார்க்க முடியாமல் பாம்பு போல் சுற்றி வளைந்த மாடிப்படிகளில் ஏறினான். நிதானமாய் நடப்பதற்குப் பதிலாக ஓடினான். நுரையீரல் வாய்க்கு வரப் போவது போல் தோன்றினாலும், இருதயம் உள்ளுக்குள்ளேயே ஊழி நடனம் போட்டாலும், அவன் மூச்சடக்கி ஓடினான். ஆங்காங்கே நின்ற பெண்கள் 'ஒங்களுக்கு விஷயம் தெரியாதா' என்பது மாதிரி அவனைப் பார்த்தார்கள். எட்டநின்று பார்த்தார்கள்.

அவன், இரண்டாவது மாடி தளத்திற்கு வந்ததும், காமாட்சி பாட்டிதான் எச்சரிக்கையான இடைவெளியில் நின்றபடி கேட்டாள்.

''என் பேத்தி ஆம்புடையான்... ஏர் போர்ட்டுக்கு வந்தாரப்பா?''

''நான் யாரையும் பார்க்கல மாமி''

காமாட்சி அம்மாவுக்குக் கொண்டாட்டம்; ஒருவேளை, பேத்தியும், அவள் வீட்டுக்காரனும் இவனை விமான நிலையத்தில் சந்தித்து, வீட்டுக்குக் கூட்டிப் போய், பார்சலை பிரித்து... காக்கா கடியாய் கடித்து... இவனுக்கு வந்தது அதுகளுக்கும் வந்து... நல்ல வேளை இவன் போகல... அவங்க வர்ல 'காமாட்சி தாயே நீ தெய்வம்டி'! என்பிள்ளைகளை இவனோட சேரவிடல.. இதுக்காக இப்பவே வந்து உனக்கு ஒரு சேலை சாத்துறேன்... தாயே... பவர் கட்டு... படியில் இறங்க முடியாது. அப்புறமா வாறேன் தாயே''

பாட்டி, மனோகரின் முதுகை மகிழ்ச்சியோடு பார்த்தபோது, திருமதி எட்வர்ட் சாமுவேல்... சத்தம் போட்டே அவனைத் திட்டினாள். ''இவன்

எத்தனைபேரை தீர்த்துக் கட்டப் போறானோ, இந்த வீட்ட விட்டு எப்போ ஒழியப் போறானோ...''

மிஸஸ். எட்வர்ட் சாமுவேலின் கோபத்திற்கும் ஒரு 'நியாயம்' உண்டு. இவளிடம் இருந்து மகனைப் பறித்துக் கொண்ட பழிகாரி ரோஸ்லின், அண்ணா நகரில் குடித்தனம் செய்கிறாள். புருஷன் டூர் போகும் போது மட்டும் இங்கே டேரா போடுவாள். அப்போது, பிரம்மச்சாரியா இருந்த இந்த மனோகர் பயலோடு மணிக்கணக்கில் பேசுவாள். ஒட்டி நிக்கிற மாதிரி பேசுவாங்க. ராத்திரியிலே என்ன நடந்துதோ... எவ்வளவு நேரந்தான் கண் விழித்து காவல் காக்க முடியும்...? ஏசுவே...! மருமகள் ரோஸ்லினுக்கு வந்திருந்தால் நியாயம்... அவள் மூலம், என் 'சன்னுக்கும்' வந்து இருந்தால் என்ன நியாயம்?''

வீட்டுக்குள் வேக வேகமாக நுழைந்த மனோகர் திடுக்கிட்டான். கலைவாணியைக் காணவில்லை. ஒருவேளை பாத்ரூமுக்கு... அக்கம் பக்கமாய்...

முட்டிக் காலிட்டுக் கிடந்த மீனாட்சி, அவனைப் பார்த்ததும், எழுந்திருக்கக் கூட திராணியற்று, இருந்தபடியே கேவிக் கேவிச் சொன்னாள்.

''அக்கா... மத்தியானமே ஒரு சூட்கேசோடு போயிட்டாங்க. நான் காலக்கட்டிக்கிட்டு அழுதேன். அப்புறம், அந்தச்சமயம் பார்த்து, பாலா மாமி வீட்ல போயி கெஞ்சுனேன். அவங்களும் கேட்கல... அக்காவும் இருக்கல... மாயமாய் மறைஞ்சிட்டாங்க. அழாதீங்க அண்ணா... அய்யய்யோ அழாதீங்கண்ணா...''

16

அதே பாதைதான்... அதே வெள்ளையன்பட்டிதான். ஆனாலும் கலைவாணியின் கண்ணுக்கும், கருத்துக்கும் அதலபாதாள வித்தியாசம்.

போனவள், வந்தவள் ஆனாள்... 'சூரியன் உதிக்கும் கிழக்குதிசை' அது அஸ்தமிக்கும் மேற்கு திசையானது. கார், வில் வண்டியானது. ஆனந்த அழுகை, துக்கித்த சிரிப்பானது. ஆயிரங்கால் மண்டபமாய் தோன்றிய வாழைத் தோப்பு, குலையிழந்த வெறுமைப் பூமியானது. மயில்போல் தோகை விரித்த கல்வாழை, எவருக்கும் பயன்படாத இலை கிழிந்த மரமாக காற்றில் அல்லாடியது. அதோ, அவள் முன்னின்று அடிக்கல் நாட்டிய இடத்தில் தென்னங் கீற்றுக் கொட்டகையில், ஒரு தற்காலிக மருத்துவமனை இருப்பதுபோல் தோன்றியது. அங்கே நிர்வாகப் பொறுப்பை ஏற்க வேண்டியவள், முதல் எய்ட்ஸ் நோயாளி என்று சேர வேண்டிய நிலைமை... எல்லோருக்கும் முழு முகத்தை காட்டியவள், முக்காடு போட்டிருக்கிறாள்...

அந்த வில்வண்டி குலுங்கிக் குலுங்கி, அவளையும், குலுக்கி எடுத்தது. ஆங்காங்கே தெரிந்தவர்களைப் பார்த்ததும், இவள், தன்னை தெரியப்படுத்திக் கொள்ள விரும்பாமல், முக்காட்டை இழுத்துப் போட்டு, முகம் மறைத்து, முகம் திரும்பினாள். ஆனாலும், பலர் அவளை அடையாளம் கண்டு கொண்டார்கள். அந்த வில்வண்டி ஓடிக் கொண்டே இருந்தது. ஊருக்குள், சுற்றமும், நட்பும் போல விழுது விட்டு, கிளை பரப்பிய ஆலமரத்தைச் சுற்றிவட்டமாகக் கட்டப்பட்ட திண்ணையில் உட்கார்ந்து, உள்ளூர் விவேகிகளுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள், திடுக்கிட்டு எழுந்தார்கள். அவளைப் பச்சாதாபமாக பார்த்தார்கள். பத்திரிகைகளைப், பிறர் படித்துக் கேட்டவர்கள், மனோகருக்கு வந்ததை அரைகுறையாகக்

கேள்விப்பட்டவர்கள்... இப்போது அந்த உள்ளூர் விவேகிகளிடம், முழுமையாகக் கேட்கப் போனார்கள்; உடனே அவர்களில் ஒருவர், வெற்றிலை எச்சிலையை இரண்டு விரல் இடுக்கு வழியாய் துப்பியபடியே, விவரம் சொல்லப் போனார்.

அந்த வண்டி மேற்கொண்டு ஊர்ந்தபோது, பீடிக்கடைக்குப் போவதற்காக தட்டுக்களோடு எதிர்ப்பட்ட பெண்கள், ஒருவருக்கொருவர் பேசிய வார்த்தைகளை விழுங்கினபடியே அப்படியே நின்றார்கள். அவளை, அதிசயமாய்ந் பார்த்தபடியே நின்றார்கள். இவர்களையும் கடந்து அந்த வண்டி பள்ளிக்கூட மைதானத்திற்கு வந்த போது, கூடிக்குலவி பேசிக் கொண்டு நின்ற வாடாப்பூவின் கணவன் மாரியப்பனும், மருத்துவமனை இடத்தில் எருமை மாட்டு கொட்டகையை போட்ட அதே ராமசுப்புவும், தங்கள் தோள்களை தட்டிக் கொண்டார்கள். என்றாலும், வாடாப்பூ, எங்கிருந்தோ ஓடி வந்தாள். செருப்பு போடாத கால்கள் கல்லையும், முள்ளையும் குத்த, அந்த குத்தல் உணர்வற்று, ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவள் போல் ஓடி, அந்த வண்டியை நோக்கி ஓடினாள். ஓடியாடி வண்டியின் பின் பக்க அடைப்புக் கம்பியை பிடித்தபடியே, 'கலை' 'கலைம்மா என் ராசாத்தி! 'ஒனக்கா... ஒனக்கா...' என்று சொல்லி முடிக்கும் முன்பே அழுதுவிட்டாள். கலைவாணி, பழக்கப்பட்ட பாசக் குரல் கேட்டு நிமிர்ந்தாள். அந்த ஊரில், இந்த ஆறுமாத கால இடை வெளியில், முதல் முதலாய், நேருக்கு நேராய்ப் பார்க்கப்படும் முதல் தோழி இந்த வாடாப்பூதான்; இரண்டு பேரின் பார்வை பரிமாற்றத்தில் கண்கள் நீர் கொட்டின. கலைவாணி வண்டிக்கு வெளியேயும், வாடாப்பூ வண்டிக்கு உள் ளேயும் போகப் போவது மாதிரியான பாசத்தின் ஆவேசத் தாவல்... அதற்குள்-

மாரியப்பன், வேக வேகமாக ஓடி வந்தான். ஒரு துள்ளலாகத் துள்ளி வந்தான். வாடாப்பூவின் கொண்டையைப் பிடித்தான். ஒரே இழுப்பாய் இழுத்து, அவள் தலையை தன் காலடியில் தூக்கிப் போட்டான். பிறகு அவளது நீண்ட நெடிய தலைமுடியை கைக்குள், கயிறுபோல் சுருட்டிப் பிடித்து, அவளை தரதரவென்று இழுத்துக் கொண்டு போனான். கலை வாணியின் கண்முன்னாலயே...

கலைவாணி, அலைமோதினாள். வண்டியில் இருந்து கீழே குதிக்கப் போவதுபோல் உடலை நகர்த்தினாள். அப்புறம் அடங்கிப் போனாள். இப்போது, தான் பழைய கலைவாணி இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். இதற்குள், எவர் மாரியப்பனை தூண்டிவிட்டிருப்பாரோ, அந்த ராமசுப்புவே, மாரியப்பன் தலையில் ஒரு தட்டுத்தட்டி, வாடாப்பூவை மீட்டார். தலைகலைந்து, ஜாக்கெட் கிழிந்து, ஆடை நழுவி, அலங்கோலமாய்

நின்ற அந்த நிலையிலும், வாடாப்பூ, கலைவாணி போகும் திசையைப் பார்த்து முண்டியடித்தபோது, அதே ராமசுப்பு, மாரியப்பனை அவள் பக்கமாக தள்ளிவிட்டார். அதற்குள் வண்டியும் திரும்பிவிட்டது.

வீட்டு முன்னால், திடுதிப்பென்று வில் வண்டி நிற்பதைப் பார்த்து விட்டு, யாராக இருக்கும் என்ற தோரணையில், சிமெண்ட் தொட்டி டேப் வழியாக ஒழுகிய நீரில், சாம்பல் பூசிய பாத்திரங்களைக் கழுவிக் கொண் டிருந்த குழல்வாய் மொழி, இன்னும் அந்த வண்டிக்குள் இருந்து எவரும் இறங்காமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, ஒரு கையில் பாத்திரத்தை தூக்கிய படியே குனிந்தபடி, தலையை மட்டும் தூக்கினாள். அப்படியும் வண்டிதான் அங்குமிங்குமாய் நகர்ந்தது. குழல்வாய் மொழி முழுமையாய் நிமிர்ந்த சமயம் பார்த்து, வண்டியில் இருந்து, கலைவாணி கீழே குதித்தாள். வீட்டுக்கு வெளியே உள்ள திண்ணைக்கு வகிடான படிக்கட்டுக்களில் ஏறி, வாசல் படியைத்தாண்டி, முற்றத்தில் நின்று, நிதானிக்காமலே உள்திண்ணைப் படிகளில் தாவி, வலதுபுறமாக இருந்த தனது பழைய அறைக்குள் போய், தட்டுமுட்டுச் சாமான்களோடு கிடந்த கட்டிலில் போய் குப்புறப் படுத்துக் கொண்டாள். அக்காள் வருவதைக் கேள்விப்பட்டு, வெளியே இருந்து ஒரே ஓட்டமாய் ஓடி, முற்றத்திற்கு வந்த தம்பி பலராமன், அக்காவை அந்த நிலையில் பார்க்க மனங் கொள்ளாமல், அங்கேயே நின்றான். மண்வெட்டி யில் தேங்காய் உறித்துக் கொண்டிருந்த அண்ணன் கமலநாதன், பாதி நார்க்குவியலோடு தேங்காயைப் போட்டு விட்டு, தங்கை இருந்த அறைக்குள் ஓடினான். எதுவுமே தெரியாமல், சமையலறைக்குள், வெந்து போன மரச்சீனிக் கிழங்கின் தோலை உரித்துக் கொண்டிருந்த சீனியம்மா, குழல்வாய் மொழி காதில் கிசுகிசுத்ததை உள்வாங்கிக் கொண்டே ஓடினாள். திண்ணையில் சுவரோடு ஒட்டிப் போட்டிருந்த நார்க் கட்டிலில் ஒருச் சாய்த்துப் படுத்துக் கிடந்த சுப்பையா, படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந் தாரே தவிர, இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ அசையவில்லை. தன்னைத் தானே பார்த்தபடி, தனக்குத்தானே மருவியபடி, கண்கள் நிலைகுத்த, அப்படியே இருந்தார்.

கட்டிலில் குப்புறக் கிடந்தவளை, அவளது அம்மா சீனியம்மா தோளைப் பிடித்து உலுக்கினாள். மகளின் கழுத்துக்குள் கையை விட்டு பின்புறமாய்த் தூக்கி, அவள் முதுகை தன் மார்பிலே போட்டுக் கொண்டு, புலம்பினாள்.

"என் செண்பகப்பூவே... என் செவந்தி மலரே... ஒனக்காடி இந்தக் கதி? ஒனக்காடி... அய்யய்யோ... அய்யய்யோ! கிளியை வளர்த்துப் பூனை கையிலே கொடுத்துட்டேனே. என் வாடா மலரே... நான் தவம் இருந்து பெத்த செல்

வத்தை பாழும் கிணத்தில தள்ளிட்டோமே... எம்மா... நான் பெத்த மவளே!'

கலைவாணி, அசைந்து கொடுக்கவில்லை; அம்மாவிடம் இருந்து திமிறி மீண்டும் குப்புறப்படுத்தாள். கண்களில் ஒரு சொட்டு நீர்கூட தேங்கி நிற்காமல், முகம் விறைக்க வாய் பூட்டிக் கொள்ள, தரையைத்தவிர எவரையும் பார்க்க விரும்பாததுபோல் கிடந்தாள். கமலநாதன், அவள் தலையை தொட்டபடியே 'கலை... கலை' என்று சொன்னபோதே அழுது விட்டான். அவன் கண்ணீர், கலைவாணியின் பின் கழுத்தில் சொட்டுச் சொட்டாய் விழுந்து தெறித்தது. குழல்வாய்மொழி, கட்டிலில் ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டு..., 'கலை, கலை' என்று கீச்சிட்டாள். பலராமன், கண்கள் சிவந்து விட்டன. அழுகையாக ஒரு கண்... ஆத்திரமாய் மறு கண். சீனியம்மா, ஒரேயடியாய் இப்போது மகள் மேல் புரண்டாள். அவள் முதுகிலேயே, தன் தலையைப் போட்டுப் போட்டு மோதினாள். மகளைப் புரட்டி எடுக்கப் போனாள். ஆனால், அந்த மகளோ, இப்போது லேசாய் விம்மினாள். விம்மி, விம்மி கட்டில் துவாரங்கள் வழியாய்க் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள். அவள் முதுகு குலுங்கியது. பின் தலை ஆடியது.

இதற்குள், கூட்டம் கூடிவிட்டது. ஒரு சிலரைத் தவிர, பெரும் பாலானோர் முற்றத்தில் நின்றார்கள். திண்ணையை அடைத்தார்கள். இதில் அதிகமானபேர் பங்காளிகள்; நெருங்கிய உறவினர்கள். அத்தனை பேரும் வாயடைத்துப் போய் நின்றார்கள். அவளுக்கு நடந்தது போல், கார் காராய், எந்த திருமணமும் நடந்ததும் இல்லை; நடந்த வேகத்திலேயே இப்படி முடிந்ததும் இல்லை... எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமுன்னு தெரி யலியே... உள்ளூர்க்காரன் என்று நம்பிக் கொடுக்க முடியாது போலிருக்கே...

இதற்குள், கலைவாணி இருந்த அறைக்குள் தாவிப் போன தேனம்மா வும், கனகம்மாவும் கலைவாணியைத் திருப்பினார்கள். அவள் தலை கனகம்மாவின் மடியிலும், கால்கள் தேனம்மாவின் முழங்கால்களிலும் கிடந்தன. கனகம்மா, தான் போட்டிருக்கும் பாம்படங்களே உணர்வுகளின் வெளிப்பாடாக, கலைவாணியின் முகத்தைத் துடைத்தபடியே, கூக் குரலாய்ப் பேசினாள்.

''ஊருக்கெல்லாம், புத்தி சொன்ன நீயே... இப்படி கலங்குனால் நாங்க யார் கிட்டம்மா போவோம்?... மாரியாத்தா மூதேவி, ஒனக்கு, வழிகாட்டு வாம்மா... ஆண்டிப்பயல் முருகன், ஒனக்கு அடைக்கலம் கொடுப்பாம்மா..''

வெளியே ஒரு சத்தம்... உள்ளூர் விவேகிகளில் ஒருவரும், ராமசுப்புவும் கலந்து போட்ட சத்தம்.

''ஏழா... முட்டாப்பய மவளுகளா... கலைவாணிக்கு ஆறுதல்

சொல்லுங்க.. வேண்டாங்கல... ஆனால் தூர நின்னே பேசுங்க.. ஒட்டுவாரொட்டி நோயாளி. பாவம் அவள் குணத்துக்கு இப்படி வரப்படாது. ஆனால் வந்திட்டே....''

''என்னம்மா அநியாயம் இது... புருஷனுக்கு வந்துட்டா பெண்டாட்டிக்கு வந்திடுமாமே. ஜாதகப் பொருத்தத்தைவிட சரியான பொருத்தமாய் இருக்கே..''

''கலி முத்திட்டுனு அர்த்தம். ஏய் இந்திரா... வெளியிலே வா...பாவிப்பய நோயி படாத பாடு படுத்துமாமே... பேப்பர்ல எவ்வளவு விவரமா போட்டிருக்கான் பாரும்... இந்த மாதிரி ஒரு ஒட்டுவாரொட்டி நோய் எதுவுமே கிடையாதாம்...''

''ஏழா குழலாமொழி... ஒன் நாத்தனார... தனி ரூம்ல வையுங்க. தனித்தட்டுல தனிச் சாப்பாடாய் போடுங்க... பாவம் இந்தக் கலைவாணிய மாதிரி இனிமேதான் ஒருத்தி பிறக்கணும்''

வெளியில் அடிப்பட்டப் பேச்சு, கலைவாணி காதிலும் விழுந்திருக்க வேண்டும். கனகம்மாவையும், தேனம்மாவையும் விட்டு சிறிது விலகி உட்கார்ந்தாள். சொந்த வீட்டு முற்றத்திலேயே இப்படி ஊர் பேச்சு அடிபட்டால், இன்னும் என்னவெல்லாம் பேசப்படுமோ என்ற அச்சம். இப்படிப்பட்ட ஊரில் எப்படி இருக்கப் போகிறோமோ என்ற கவலை. பேசாமல், மெட்ராசில் இருந்திருக்கலாமோ... அய்யய்யோ... புறப்படும் போது நடந்ததை நினைக்கவே வெறுப்பா இருக்கே. எந்த மாதர் சங்கத்தை அவள் துவக்கினாளோ, அந்த மாதர் சங்கமே அவளை எப்படி வெளியேற்றுவது என்று கூட்டம் கூட்டி ஆலோசித்த கொடுமை... கூட்டம் நடந்த இடத்திற்கு முன்னால் இவள் நின்றபோது, ஒருத்தி வாயில் கூட 'ஏன் போகிறே' என்ற வார்த்தை வரவில்லை. தீர்மானம் போடாமலே நோக்கம் நிறைவேறிய பூரிப்பு கூட இருக்கலாம். இல்லையானால், அவள்களிடம் முறையிட்ட மீனாட்சியை, அப்படி பாமா மாமி விரட்டியிருக்க மாட்டாள்... உன் வேலைய பாரேண்டி... உனக்கு என்ன தெரியும்...? தாய் வீட்டுக்குத் தானே போறாள். ஒனக்கு என்ன வந்துட்டு...'

கலைவாணி, உதட்டைக் கடித்தாள். சாவதற்காக கடலைத் தேடியோ, ரயிலைத் தேடியோ போனாலும், அவற்றையும் தாய் வீடாக கருதுகிறவள்கள். இவர்கள் இருக்கும் இடம், எய்ட்ஸ் இருக்கும் இடத்தை விடக் கொடிய இடம். வாடாப்பூ, கனகம்மா, தேனம்மா கால் தூசிக்குக் கூட பெறாதவள்கள். இவள்கள் இருக்கும் திசையில் கோவில் இருந்தால் கூட போகக் கூடாது...

ஊர்க்காரர்கள், சன்னஞ்சன்மாயாய் குறைந்துவிட்டார்கள். தேனம்மா

வும், கனகம்மாவும், கலைவாணி போகச் சொல்லியும், போகாமல் கிடந் தார்கள். இவர்களுடைய வீட்டுக்காரர்களும், மாரியப்பனாக மாறி வீடு வரை வந்துவிடக் கூடாது என்று கலைவாணிக்குப் பயம். இதற்குள், மனோகரின் தந்தை தவசிமுத்து உள்ளே வந்தார். எட்டுமுழ வேட்டியும், அரைக்கை பாப்ளேன் சட்டையுமாய், தோளில் ஜரிகை துண்டோடு கல்யாண வீட்டிற்கு வருவதுபோல் வந்தார். அவரைப் பார்த்ததும், 'வாங்கண்ணாச்சி' என்ற வாய் நிறைய கேட்கும் சம்பந்தி சீனியம்மா, பல்லைக் கடித்தபடி, முகத்தைத் திருப்பிக் கொண்டாள். குழல்வாய் மொழி, வழக்கம் போல் எழுந்திருந்து அவருக்கு மரியாதை கொடுக்கவில்லை. பலராமன், அவரை அடிக்கப் போவது போல் பார்த்தான். ஆனால் தவசிமுத்து, இதைக் கண்டாரோ... காணவில்லையோ, குப்புறப்படுத்த மருமகளிடம் நேரிடையாகப் பேசினார்.

''நம்ம வீட்டுக்கு வரவேண்டியது தானேம்மா... அப்புறமா இங்கே வந்திருக்கலாமே... ஊர் முறையும் அதுதானே''

சீனியம்மா, உருமினாள்; கமலநாதன் தற்செயலாய் காறித்துப்புவது போல் வெளியே போய் துப்பினான். ஆனாலும் தவசிமுத்து அசரவில்லை.

''அந்தப்பயல் எப்படிம்மா இருக்கான்? அவனையும் கூட்டிட்டு வந்தி ருக்கலாமே! பய நோய் நேரம் பார்த்து வந்திருக்கு பாரு... இன்னும் கல்யாணக் கடனே அடைபடல. மாதா மாதம் கடன அடைப்பான்னு பார்த்தால்...''

கலைவாணி, வாரிச்சுருட்டி எழுந்தாள். கட்டில் சுவரில் முதுகைச்சாத்தி, சுவரில் தலை போட்டபடியே கத்தினாள்.

''எம்மா... யாரும் என்கிட்டப் பேசப்படாதுன்னு சொல்லு. உறவு சொல்லி யாரும் இந்த வீட்டுக்குள்ளே வரப்படாதுன்னு சொல்லு''

தவசிமுத்து விடவில்லை... பதிலுக்குப் பதில் சொன்னார்.

''என்னம்மா... நீ... மாமனார் என்கிற மட்டு மரியாத இல்லாமப் பேசுறே. ஒன் புருஷனப் பெத்து வளத்து பேரிட்டவன் நான்''

சீனியம்மாவால், இப்போது பொறுக்க முடியவில்லை.

''புருஷன்... எப்பேர்பட்ட புருஷன்! பாவிப்பயல்... என் செல்ல மகள... கெடுக்கணுமுன்னே வந்திருக்கான். நான் இந்தப் பாவி மனுஷன்கிட்ட படிச்சுப் படிச்சு சொன்னேன். தராதரம் தெரியாதவன் வீட்டுலே சம்பந்தம் வேண்டாமுன்னு; பாவிப்பயல்; பன்னாடைப்பயல் கண்ட பொம்பளைக் கிட்டல்லாம் போயி, கடைசியிலே என் பொண்ணையும் அப்படிப் பண்ணிட்டான்; பண்ணாத அலங்கோலமாய் பண்ணிட்டான். பாவிப்

பயலுக்கு நான் பெத்த பொண்ணுதானா கிடைச்சாள்?''

தவசிமுத்து, எதுவும் பேசாமல் கால்களைத் தேய்த்தபடியே நின்றார். இந்த சுப்பையா 'சுருள்' (வரதட்சணை) பாக்கி ஐயாயிரம் ரூபாய் கொடுக்கணும். அதுக்குள்ளே இந்த இழவும், எட்டும் வந்துட்டு. மெட்ராஸ்லே போய் அந்தப் பயலை பார்த்துட்டு வர முந்நூறு ரூபாய் வேற செலவாகும். அவனே வந்தால் செலவு மிச்சம்...

''எம்மா... கலைவாணி... இதையாவது சொல்லு... அந்தப் பயல்... அதுதான் ஒன் புருஷன்... இங்கே எப்போ வருவானாம்... நீ அவனையும் கூட்டிக்கிட்டு வந்து இருக்கலாம் இல்லே''

கட்டிலில் செத்த சவம் போல் கிடந்த சுப்பையாவால், தாள முடியவில்லை. சம்பந்தியிடம் நெருங்கி வந்து கோபம் கோபமாய்ப் பேசினார். அந்த சமயம் பார்த்து, தவசிமுத்து மடியில் துருத்திய வெற்றிலை பாக்கை எடுத்தார்.

''வே,... ஒமக்கு சமய சந்தர்ப்பம் தெரிய வேண்டாமா... ஒம்ம மகன் வரக் கூடாத நோயை வாங்கி... என் மகளுக்கும் கொடுத்துட்டான். நாங்க மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாம தவிக்கோம். நீரு என்னடான்னா''

''அப்போ என் மவனை பொம்புளக் கள்ளன்னா சொல்றீரு?''

''அதைத்தான் பேப்பர்லேயே போட்டுட்டானே.. மொதல்ல, நீரு போம் வே. கோபம்... பழி பாவம், வேண்டாம். வெத்திலை பாக்கு போடுற நேரமா இது''

தவசிமுத்து, வன்மமாகத் தலையாட்டிவிட்டு, அவசர அவசரமாக வெளியேறினார். இதற்குள் சீனியம்மா மகளின் வயிற்றை தடவியபடியே, மருமகளிடம் பேசினாள்.

''ஒன் நாத்தனாருக்கு வயிறு கொலுக்கா இருக்கும்மா... மொதல்ல மோரு கொண்டு வாம்மா. அதாவது வயித்துக்குள்ளே இறங்குதான்னு பார்ப்போம்''

குழல்வாய் மொழி, சமையலறைக்குள் போய், ஒரு பெரிய பித்தளை டம்ளர் நிறைய மோர் கொண்டு வந்தாள். அந்த டம்ளர் விளிம்பை, கலைவாணியின் வாய் விளிம்பில் வைத்தாள். அப்போது வீட்டுக்கு வெளியே பலத்த கூச்சல். மனோகரின் அம்மா சீதாலட்சுமியின் ஓங்காரக் கூச்சல். கலைவாணியை விட்டு விட்டு, எல்லோரும் வெளியே வந்தார்கள்.

மனோகரைப் பெற்ற சீதாலட்சுமி, கணவன் தவசிமுத்தோடும், மச்சான்

கொழுந்தன் பெண்டாட்டிகளோடும், அந்த வீட்டைப் படையெடுக்கப் போவதுபோல் பார்த்துப் போர்க் குரலிட்டாள்.

''என் மகன்.... நான்... உள்ளங்கையிலே சோறு பொங்கிப்போட்ட என் செல்ல மகன், எவள்கிட்ட எல்லாமோ போய்... எந்த நோயையோ வாங்கிட்டு வந்ததான்னு, எவளோ, எவனோ சொன்னாளாமே... வாங்கடா வெளில... வாங்கடி.. வெளியில... பெத்தவளுக்குத் தெரியாத பிள்ள அருமை... இவளுவளுக்குத் தெரியுமா... என்ன நெனைச்சாளுவ! இன்னிக்கி என் பிள்ளையப்பற்றி சொன்னதை ருசிப்பிக்கணும்''

சீனியம்மாவுக்கு, தெருச்சண்டை பழக்கமில்லை. இதில் பேரும் புகழும் பெற்ற தவசிமுத்து வீட்டில், இதற்காகவே கலைவாணியைக் கொடுக்கக் கூடாது என்று வாதிட்டவள்... இப்போது என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள். இது, சீதாலட்சுமிக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. யாராவது பிடிக்கப் பிடிக்கத்தான், அவளுக்கு ஆவேசம் வரும். அவள் மகள் மீரா, அம்மாவைப் பிடித்தாள். விவேகானந்தர் மாதிரி கையைக் கட்டிக் கொண்டு நின்ற பலராமனிடம், தான் ஒரு குடும்பப் பாங்கான பெண் என்பதைக் காட்டிக் கொள்வது போல், 'எம்மா... எம்மா' என்று சொல்லி, முகத்தை சுழித்தபடியே பிடித்தாள். ஆனால், அந்த அம்மாவோ, சுற்றி நின்ற கூட்டத்திடம் முறையிடுவது போல் கத்தினாள்.

''குனிஞ்ச தல.. நிமிராமல் நடக்கிறவன் என் மகன். வாய் அதிர்ந்து கூட பேசாத பிள்ளை என் பிள்ளை. அப்படிப்பட்ட என் ராசாதி ராசா, இப்போ சீரழிஞ்சு சின்னாபின்னமாகி.. லோலுபட்டு கிடக்கான். நானும் ரெண்டு நாளாய் உண்ணாமத் தின்னாமக் கிடக்கேன். இந்த வீட்ல என்னடான்னா... என் மகன், எவள்கிட்ட எல்லாமோ போனதா பேசுறாங்களாம்... இவங்க என் னமோ லைட்டு பிடிச்சது மாதிரி... கட்டுன புருஷன அனாதரவா விட்டுட்டு வந்திருக்கிற ஒடுகாலிய சத்தம் போட்டுதிருப்பி அனுப்புறதுக்கு வக்கில்ல... வகையில்... துப்பில்ல... தொகை இல்ல... பேசுறாவளாம் பேச்சு''

சீனியம்மாவால், பொறுக்க முடியவில்லை... வாசல் தாண்டாமலே கேட்டாள்.

''ஏன் பேசமாட்டோம்... உடம்பிலே ஆயிரத்தெட்டு நோய வாங்கிட்டு, என் பொண்ணக்கெடுத்த கல் நெஞ்சுக்காரனை ஏன் பேசமாட்டோம்?... என் மகளை சீரழிக்கணுமுன்னே பிறந்திருக்கான் பாரு...''

''ஒன் மகள்தான் என் மகனக் கெடுக்கன்னே பிறந்திருக்காள். எந்த நேரத்தில நான் தவம் பெத்த மகன் கையப் புடிச்சாளோ, நான் பெத்த பிள்ளை நடுத்தெருவிலே நிக்கான்''

'ஆமா... பெரிய அரிச்சந்திரன்.. பொம்புள நோய வாங்கிறவன் ஒரு மனுஷனா... அவன் சீரழிஞ்சா அது அவன்புத்தி. ஆனால் என் மகளை எதுக்கு சீரழிக்கணும்...''

''ஒன் மகளோட புத்தி ஊருக்கு நல்லாவே தெரியும்... அவளாலதான் என் பிள்ளை சீரழியுறான்''

பலராமன், இப்போது போர்க்குரல் கொடுத்தான்...

''எத்தே... இதுக்கு மேல பேசினே... அப்புறம் பேசுறதுக்கு வாய் இருக்காது. ஒன் மகன் யோக்கியததான் பேப்பர் பேப்பரா கிழியுதே... பேச வந்துட்டாள் பெரிசா''

தம்பிக்கு கோபம் வந்தால், அது விஷ்ணு சக்கரம் மாதிரி இலக்கைத் தாக்காமல் திரும்பாது என்பதைப் புரிந்து கொண்ட கலைவாணி, வெளியே வந்தாள். அம்மாவின் முதுகுக்குப் பக்கமாய் நின்று கொண்டாள். அவளைப் பார்த்தவுடனேயே, சீதாலட்சுமிக்கு பற்றிக் கொண்டு வந்தது. பிரும்மாஸ்திரத்தை விட்டாள்.

''இவள் மட்டும் யோக்கியமோ... சொல்லச் சொல்லு... பொம்பளை நோயின்னு சொல்றியளே... அந்த பொம்பள, ஒன் மகளா ஏன் இருக்கப் படாது? அந்தச் சங்கம் இந்தச் சங்கமுன்னு எத்தனை பேர் கிட்ட பல்லைக்காட்டி இருக்காள். எத்தனை ராத்திரி நாடகம் கூத்துன்னு வீட்டுக்கு வராமல் வெளியிலே தங்கி இருக்காள்... என் அப்பாவிமகனுக்கு அந்த நோயக்கொடுத்தது இவள்தான். இந்த முண்டக் கண்ணிதான்...''

பலராமன், சீதாலட்சுமியின் முடியைப் பிடிக்கப் பாய்ந்தான். அப்படிப் பாய்ந்தவனை, தவசிமுத்து, காலைப் பிடித்து இழுத்தார். அந்த தவசிமுத்துவை, கமலநாதன் கழுத்தைப் பிடித்து இறுக்கினான். மீராவும், குழல்வாய் மொழியும் கைகளைப் பிசைந்தார்கள். சுப்பையா, கலைவாணியைக் கட்டிப் பிடித்து, குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டார். உள்ளூர் விவேகிகள், ஆளுக்குள் ஆள் சத்தம் போட்டு அதட்டினார்கள்.

கலைவாணி காதுகளைப் பொத்திக் கொண்டு, மனதைத் திறந்து கேட்டாள்.

'இந்தப் பழியையும், இந்த நோயையும் சுமந்துக்கிட்டு, இன்னும் உயிரோட வாழணுமா...? ஊர் பக்கம் கிணறு இருக்கு, வீட்ல கயிறு இருக்கு, எனக்கும் மானம் இருக்கு'...

17

மனோகர் வெளியுலகைப் பார்க்க விரும்பாதவன் போல், உள் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

முட்டிக்கால்களை வயிற்றுக்குள் முட்டிக் கொண்டு, போர்வைக்குள் முடங்கிக் கிடந்தான். அந்த வெயிலிலும், உடல் முழுவதையும் கம்பளிப் போர்வை மறைத்து இருந்தது. கட்டிலில் மூட்டை முடிச்சு கிடப்பது போலவே கிடந்தான். எல்லாம் செத்து, தான் மட்டுமே குற்றுயிரும் குலையுயிருமாய் கிடப்பது போன்ற விரக்தி... முந்தா நாள்வரை, தன்னுள் புகுந்த கிருமிகள், உடனடியாய் தன்னை எய்ட்ஸ் நோயாளியாக்கி, பூமிக்கு கீழேயோ அல்லது நெருப்பு மூலமாகவோ கணக்கு தீர்க்க வேண்டும் என்று துடியாய், துடித்தவன், இப்போது தவியாய்த் தவித்தான். அந்தக் கிருமிகள், இந்த நேரம் எய்ட்ஸ் அவதாரம் எடுத்திருக்கலாம் என்ற பீதி. அதற்கு ஏற்றாற்போல், கையில் ஒரு சின்னக் கட்டி.... உடலெங்கும் அரிப்பு... எழ முடியாத உடல்வலி. உமிழ் நீரே விக்கிக் கொள்வது மாதிரியான வாயடைப்பு... தொண்டையில் கதவடைப்பு...

வீட்டைக் கூட்டிப் பெருக்கிவிட்டு, தரையை ஈரத்துணியால் துடைத்து விட்டு, வேலைக்காரச் சிறுமி மீனாட்சி, கீழே சுவர் மூலையில் உட்கார்ந்தபடி, அந்தக் கட்டிலையே ஏறிட்டுப் பார்த்தாள். நேற்றிரவு, அவனுக்காக வாங்கி வந்த இட்லி பொட்டலம், காகிதச் சணல் கட்டில் இருந்து விடுதலையாகாமல் கிடந்தது. நான்கைந்து நாட்களாக, அவள் வாங்கி வந்து கொடுப்பதை, அவன் அரைகுறையாய் தின்பதும், பின்னர் அப்படியே முடங்கிக் கொள்வதுமாய் கிடக்கிறான். வாழ்க்கையில் ஒரு பகுதியான தூக்கத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டவனை, சாப்பிடும்படி ஒரு

அதட்டல் போடலாமா என்று மீனாட்சி யோசித்தபோது, ஒரு காலடிச் சத்தம்...

தவசிமுத்து, ஒரு தூக்குப் பையோடு உள்ளே வந்தார். கட்டிலில், போர்வைக்குள் காணாமல் போனவனை, பாம்பை, கீரி பார்ப்பது போல் முகத்தை நீட்டி நீட்டிப் பார்த்தார். பிறகு 'எப்பா... எப்பா' என்றார். போர்வைக்குள் ஒரு சின்ன சலனம் கூட இல்லை. 'ஒப்பா வந்திருக்கேண்டா; ஒப்பாடா' என்றார். அதற்குள் அசைவு இல்லை... இதனால், அந்த வேலைக்காரச் சிறுமிக்கு ஆணையிட்டார்.

''அவனை எழுப்பும்மா... ஒன்னத்தான்... ஏன் பித்து பிடிச்சுகிடக்கே. போர்வையை எடு... அவனை எழுப்பு''

மீனாட்சி, வெறுமனே கைகளைப் பிசைந்தபோது, மனோகர் போர்வையை ஆவேசமாக வீசிக்கடாசிவிட்டு, எழுந்து உட்கார்ந்தான். எரிச்சலோடு கேட்டான்.

''என்ன விஷயம்?''

''அறு நூறு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து மெனக்கெட்டு வீடு தேடி வந்திருக்கிற பெத்த அப்பனப் பார்த்து கேட்கிற கேள்வியாடா இது..?''

மனோகர், தந்தையின் பார்வையை தவிர்த்து, தனக்குள்ளேயே, பொருமினான். அப்பா வருவார் என்று ஆவலோடு காத்திருந்தவன்தான். அம்மாவைக்கூட்டி வந்தால் செலவாகும் என்பதாலும், அதோடு அவள் ஊரைக் கூட்டி ஒப்பாரி வைப்பாள் என்பதாலும், அப்பா, அவளைக் கூட்டி வரமாட்டார் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால், எதிர் பார்த்ததுபோல் வந்த அப்பா, எதிர்பாராதது போல் நடந்ததுதான் அவனுக்கு புரியவில்லை; இந்தப்பா, தன்னைக் கட்டிபிடித்துக் கலங்கவில்லை. அய்யோ என் மகனே என்று அலறவில்லை. எப்படிடா இருக்கே என்று கட்டிலில் வந்து அமரவில்லை. மீனாட்சியை விட்டு எழுப்பச் சொல்கிறார். அந்தக் குரலில் கூட ஒரு நெகிழ்ச்சி இல்லை. கடன்காரனிடம் வட்டி கேட்கும் போது, எந்தக் குரல் மேலோங்குமோ அந்தக் குரல்... எந்தக் கைகள், தன்னைத் தொட்டுத் தூக்கி தோளில் வைத்திருக்குமோ, அந்தக் கைகள், அவனைத் தொடக் கூட வேண்டாம்... அவன் போர்வையைக் கூடத் தொடமறுக்கின்றன.

தவசிமுத்துதான் வலியப் பேசினார்.

''எப்படிடா... இருக்கே? எல்லாம் தலையெழுத்து.. வீட்டுல எல்லோருமே கதிகலங்கிட்டோம்''

மனோகர், நெகிழ்ந்து போனான். ஆயிரம் இருந்தாலும், அவர் அவனுடைய அப்பா. தான் ஆடவில்லையானாலும், சதையாடிப் போகும் அப்பா... இப்படி கடுமையாய் பேசியிருக்கப்படாது.

''உக்காருங்க அப்பா... மீனாட்சி... தாத்தாவுக்கு வெந்நீர் போடும்மா''

மீனாட்சி எழுந்தாள். தகப்பனையும், மகனையும் அதிசயமாய் பார்த்தபடி. அதே சமயம் கலைவாணியையும் நினைத்துப் பார்த்தபடி எழுந்தாள். அந்தக் கிழவன், முன்னால், ஒரு தடவை வந்திருக்கும் போது, அக்கா, இதோட கையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். 'இனிமேல் நீங்க வருவதை முன் கூட்டியே லட்டர்லே தெரிவியுங்க... நானும், இவரும் ஸ்டேஷனுக்கு வந்திடுவோம். ஆட்டோவிலே வர வேண்டியதுதானே மாமா... இப்படியா கஷ்டப்பட்டு பஸ்ல வர்ரது...' என்று சொன்ன அக்கா, கஷ்டப்பட்டுப் போய்விட்டாள். அப்போக்கூட இந்த பெரிய மனுஷன், 'வேணுமுன்னா... அதுக்குள்ள பணத்தைக் கொடுத்துடேனு டமாஷ் செய்தது. டமாஷா இல்ல.. கொடுத்தால் வாங்கி, ஜேப்பில போட்டுக்கும். பொல்லாதது'.

மீனாட்சி, சிந்தனையை உதறியபடி, சமையலறைக்குள் போகப் போன போது, தவசிமுத்து அவளைக் கையமர்த்தி தடுத்துவிட்டு, ஆறுதல் தேடிப் பார்த்த மகனிடம் சால்ஜாப்பாய் பேசினார்.

''ஊர்ல இருந்து ராம சுப்போட வந்தேன். அவன் மகன் வண்ணாரப் பேட்டையில சீயக்காய் வியாபாரம் பார்க்கான் பாரு. அவனப் பார்க்க சுப்பு என்னோட வந்தான். அப்பன ஸ்டேஷன்லே பார்க்க வந்த மகன், இன்னிக்கி ஒரு நாளாவது அவன் வீட்டுல நான் இருக்கணுமுன்னு வம்பு பண்ணிட் டான். நான் கையோட கொண்டு வந்த டிரங்க் பெட்டியையும் பலவந்தமாய் பிடுங்கிக்கிட்டான். நான்தான் ஒன்னை ஒரு எட்டு பார்த்துட்டு வாறேன்னு கெஞ்சுனேன்...''

மனோகருக்கு, ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அது தட்டுப்பட தட்டுப்பட, தவசிமுத்து ஒரு சூரிய நாராயணனாக, ஒரு நாராயணசாமியாக உருமாறிக் கொண்டு இருந்தார். அவர்களைப் போல், இவருக்கும் மரண பயம்; அது வந்துவிட்டால், மனிதன் குழந்தையாவான், அல்லது மிருகமாவான். மரணத்திற்குப் பயப்படலாம்... ஆனால், மரண விளிம்பில் நிற்கும் ஒரு மனிதனிடமா பயப்பட வேண்டும்? அதுவும் அந்த மனிதன் மகனாக இருந்தாலும்... இவரிடம் பேசிப்பயனில்லைதான்.

தவசிமுத்து, மௌனம் கலைத்தார்.

''அந்த மூதேவி... வெறுங்கையோட போனாளா... இல்ல நகை நட்டுக்களை தூக்கிட்டுப் போனாளா...''

''எந்த மூதேவி...?''

''அதான் ஒனக்குன்னு வந்தாளே அவள்...''

''சீதேவியாய் இருந்த அவளை, மூதேவியாக்குனது நான்தான்''

''விதி யாரை விட்டுது... ஒன்னை, இப்படிதவிக்க விட்டுட்டு, ஊருக்கு வந்திருக்காள்... அவள் வீட்டுக்கும், நம்ம வீட்டுக்கும் ஒரே சண்டை.... அடிதடி.... ஒனக்கும் ஒரே ஏச்சு... பயமகள், அப்பனையோ அம்மாவையோ ஒரு வார்த்தை தட்டிக் கேட்கல... போகட்டும் விடு... அவரவர் புத்தி அவ ரோர்க்கு; நகை நட்டு என்னடா ஆச்சு? பிடுங்கிட்டு துரத்த வேண்டியது தானே'

''தாலியக் கழட்டி வச்சிட்டுப் போயிட்டாள்''

''சரி என்கிட்ட கொடு... நல்லதாப் போச்சு''

''தாலியையும், நகை இருக்கிற பேங்க் லாக்கரிலே வச்சிட்டேன்''

''லாக்கர் எதுக்குடா லாக்கரு... அவளோட நகை நட்டு இங்கே இருந்தால், அவள் அண்ணன் தம்பிமாரு... இங்க வந்து ஒன்னை மிரட்டி நகைய வாங்கிட்டுப் போயிடுவாங்க. அதனால் எல்லா நகையையும் என்கிட்ட கொடுத்துடு. பத்திரமாய் வச்சிக்குவேன். ஏன்னா அவள் பிடி நம்ம கிட்ட இருக்கணும் பாரு''

மனோகர், கோபமாக குறுக்கிட்டான்.

''இன்னொரு... விஷயத்தையும் சொல்றேன் கேளுங்க. கம்பெனியில இருந்து வேலை போயிட்டு. ஆனாலும் இரண்டு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தாங்க. நானும் வாழணும் பாருங்க. ரூபாய் இங்க தான் இருக்கு... அவள் பேர்லயும், என் பேர்லயும், பேங்க்லே டிபாசிட் போடப் போறேன்.''

''என்னடா இது...? வம்பன் சொத்து, வீணன்கிட்டே போனது மாதிரி..''

''நான் வம்பன்தான்; இந்தப்பணத்தை ஒங்ககிட்ட கொடுத்தால் நீங்க சொன்னபழமொழி முழுசாயிடும்... கலைவாணி என்னை விட்டுப் போனாலும், அவள் கால் தூசிக்கு நீங்க பெறமாட்டிங்க. என்னை அடமான மாய் வச்சி, வேலை வாங்கித் தருவதா ஆயிரம் ஆயிரமாய் கமிஷன் அடிச்சிங்க... அந்தப் பாவம்தான் என்னை பிடிச்சிட்டு.... இப்படி முடக்கிப் போட்டுட்டு..''

''நல்லா இருக்கே நியாயம்... நீ கண்டபடி ஊர் மேயணும், அதுக்கு நான் பொறுப்பேற்கணுமா...''

''யோவ்... பெரிய மனுஷனாச்சேன்னு பார்க்கேன். இல்லாட்டி நடக்கிற கதையே வேற... மரியாதையா வெளியிலே போய்யா... எங்கண்ணாவ, எனக்கு பார்த்துக்கத் தெரியும்''.

தவசிமுத்து, மீனாட்சியை நோக்கி நடந்தார். அவர் பார்த்த பார்வையில் சுவரோடு ஒடுங்கி நின்றவளின் காதைத் திருக, கையைக் கொண்டு போனார். கையை கூன் போட வைத்தபடியே நின்றார். பிறகு அவள் திருப்பி அடிக்கமாட்டாள் என்கிற அனுமானத்தில், அவளது வலது காதைப் பிடித்து திருகியபடியே கத்தினார்.

''அப்பனுக்கும், மகனுக்கும் இடையிலே நீ யாருடி? அவனை கவனிக்கிற சாக்குல, அவன்கிட்ட இருக்கறதைப் பறிக்கிறதுக்கு... ஒன்னை, ஒப்பன் அனுப்பி வச்சானா, ஒம்மாவா...?'

தவசிமுத்து, இப்போது மீனாட்சியின் காதை விட்டுவிட்டு, அவளது வலது கையைப் பிடித்து முறுக்கினார். அவள் வலி பொறுக்க முடியாமல் கலைவாணியைப் போல் அவர் கையைக் கடிக்கக் குறி வைத்தாள். இதற்குள், மனோகர், கட்டிலில் இருந்து குதித்தான். அதற்குள் ஒரு எச்சரிக்கைக் குரல் கேட்டது.

''ஏய்... கெய்வா... விடுய்யா அவளை... விடுறியா, இல்ல நாலு சாத்து சாத்தணுமா...? கம்னாட்டி... புறம்போக்கு, கஸ்மாலம்... சின்னப் பொண்ணுக்கிட்டயா ஒன் வீரத்தைக் காட்டுறே... என் ஆம்புடையான கூட்டிவாறேன். அதுக்கிட்ட காட்டு''

தவசிமுத்து, மீனாட்சியை விட்டுவிட்டு, அவள் அம்மா குப்பம்மாவை பயந்து பார்த்தார். ஆனாலும் வீறாப்பு குறையாமலே பேசினார்.

''இப்பத்தான் புரியுது... தாயும் மகளுமாய் நல்லாத்தான் பிளான் போட்டு இருக்கிங்க. இவனுக்கு வந்திருக்கிற தீராத நோயை சாக்கா வச்சி, எல்லாத்தையும் உரியறதுக்கு திட்டம் போட்டே.. ஒன் மகள பழக விட்டிருக்கே.. நான் விடுவனா.. இல்லாட்டால் ஒட்டுவாரொட்டி நோயாளியோட, ஒன் மகளை பழக விடுவியா?''

முப்பத்தைந்து வயது, இருபத்தெட்டைக்காட்டும்படி, வயிறு பெருக்காமல், இடைச்சதை தெரியாமல், காக்கா பொன் நிறத்தில் சுடர்விட்ட குப்பம்மா, மகள் மீனாட்சியையும், மனோகரையும், வெறித்துப் பார்த்தாள். நண்டும் சிண்டுமான பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக, தாயோடு மகளாய், இந்த மீனாட்சியைப் பத்துப்பாத்திரம் தேய்க்க வைத்தவள் இவள்தான். இதனால் தான் பெற்ற பெண்ணுக்கு பள்ளிக் கூடத்தில் மத்தியானச் சாப்பாடு கூட கிடைக்காமல் போய்விட்டது. ஆனாலும், இந்தப்

பிள்ளையாண்டானும், கலைவாணியும் இவளைக் கிட்டத்தட்ட வீட்டோடு வைத்துக் கொண்டார்கள். ஐந்தாறு வீட்டுக்காரர்கள் பார்ட் டைமாய் கொடுக்கும் பணத்தை, இவர்கள், ஒட்டுமொத்தமாகக் கொடுத்தார்கள். இதே மனோகர், டில்லிக்கோ, பம்பாய்க்கோ போனபோது, மீனாட்சிக்கு சல்வார் கமிஸ் வாங்கிட்டு வந்தது. அப்படிப்பட்ட பிள்ளையாண்டான்கிட்ட அடுக்குமாடி அம்மாக்கள், மீனாட்சியை அனுப்பக் கூடாது என்றார்கள். இப்போது கூட லேசாய் தயங்கியவளை, எட்வர்ட் சாமுவேல் அம்மாவும், மோனியோ கூனியோ, அந்த பொம்மனாட்டியும், முதுகைப் பிடித்து இந்தப் பக்கமாய்த் தள்ளிவிட்டார்கள். ஆளுக்கு ஆள் 'மனோகர்கிட்டே இருக்கிறது மீனாட்சிக் கும், அவள்கிட்ட இருக்கிறது உனக்கும், அப்புறம் எங்களுக்கும் வரும். அதுக்குள்ளே நீயா நின்னுடு... இல்லன்னா நாங்களே நிறுத்திரு வோம்' என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார்கள் இவளும், நேற்றே மீனாட்சியிடம், இந்த பக்கம் தலைகாட்டக் கூடாது என்று ஆணையிட்டாள்.

குப்பம்மா, மனோகரை கோபமாகப் பார்த்தாள். 'என் பொண்ண ஏய்யா அனுப்பி வைக்கல' என்று கேட்கப் போனாள். ஆனால், அந்த முகத்தைப் பார்த்ததும், வார்த்தைகள் வாய்க்குள்ளேயே சத்தியாக்கிரகம் செய்தன. இதனால், அவள் கோபம் முழுவதும், மகள் மீனாட்சி மீது திரும்பியது; தவசிமுத்து வேறு உசுப்பி விட்டார்.

'ஏன் பேசமாட்டக்கே... திருடனுக்கு தேள் கொட்டுனது மாதிரி இருக்குதோ.'

குப்பம்மா பார்த்த பார்வையில், மீனாட்சி புரிந்து கொண்டாள். எவர் தனது காதைப் பிடித்து, கையை முறுக்கி இம்சித்தாரோ, அந்த தவசிமுத்து வின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள். ஆனாலும், குப்பம்மா கைகளை வளைத்து வைத்துக் கொண்டு, மீனாட்சியை கௌவப் போன போது, தவசிமுத்துவே 'இந்தா ஒன் மகள்' என்று மீனாட்சியை, தாய்க்காரி பக்கமாய்த் தள்ளிவிட்டார்.

குப்பம்மா, மகளின் இரண்டு காதுகளையும் பிடித்து, மேலே தூக்கி கீழே போட்டாள். அவள் தலைமுடியை சுருட்டிப் பிடித்து, தரையில் இருந்து அலாக்காய் தூக்கி பிடித்து, மகளின், கால்களில், தன் கால்களால் ஒரு இடறு இடறிக் கேட்டாள்.

''இனிமேல்... வர்வியா... சொல்லு வர்வியா?''

''வர்வேன்... வர்வேன்''

''அவ்வளவு திமிரா... ஒனக்கு... வரமாட்டேன்னு சொல்லு... இல்லாட்டி ஒரு கையாவது முறியாமப் போகாது... சொல்லுமே... வர்வியா...'''

''வர்வேன்... அண்ணாவுக்கு யாருமில்லை... வர்வேன்''

''மவளே... இன்னிக்கி... ஒனக்கு சாவடி கொடுக்கேன் பாரு...''

தாயும் மகளும், அடையாளம் தெரியாமல் ஒன்றானார்கள். கீழே விழுந்த மகளை மேலே மேலே தூக்குவதும், மேலே எழும் மகளை, கீழே தள்ளுவதுமா, குப்பம்மா இயங்கினாள். மீனாட்சியைக் கீழே கிடத்தி,அ வள் முடியை காலால் அழுத்திக்கேட்டாள்.

''இங்கே வர்வியா?''

சிறிது மௌனம்... பேச முடியாத வலி.. பிறகு,' வர்வேன், வர்வேன்...' என்ற சப்தம்.

குப்பம்மாவுக்கு, இப்போது, தான் பெரிசா அல்லது மகள் பெரிசா என்று நிரூபிக்க வேண்டும் போலிருந்தது. அதோட, பெத்த நாய்னாவே மகனுக்கு வந்திருப்பது ஒட்டுவோர் ஒட்டி நோயின்னு சொல்லிட்டார். இதற்கு மேலேயும், மீனாட்சியை இங்கே விட்டுவைப்பது யாருக்குமே நல்லதுல்ல...

மகளின் தலைமுடியில் வைத்த கால் பிடியை தளரவிட்ட குப்பம்மா, மீண்டும் குனிந்து, அந்த முடிக்கற்றையை கைப்பிடியால் இறுக்கிப் பிடித்தாள். மீண்டும் மீனாட்சியை சுழல் ராட்டினமாய் ஆக்கப் போனாள். இதற்குள் மனோகர், இருவருக்கும் இடையே வந்தான்... கேவிக் கேவி அழுதான். தனது தலையிலேயே அடித்துக் கொண்டான். 'என்னை அடி' என்பதுபோல், குப்பம்மாவின் கையைத் தூக்கி, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். ஆடிப் போன குப்பம்மா, மகளை விட்டுட்டு, அவனையே பச்சாதாபமாகப் பார்த்தாள். ஆனால், மனோகரோ, மீனாட்சியை தன் பக்கமாகத் திருப்பி விட்டுக் கொண்டு மன்றாடினான்...

''அம்மா.. சொல்றதைக் கேளும்மா... மீனுக்குட்டி, இந்த அண்ணன் யாருக்குமே பிரயோசனமில்லாமல், போனவம்மா... நீ நல்லா இருக்கணும்... அடம் பிடிக்காமல், அம்மா பின்னால போம்மா... இந்த அண்ணன் சாகிறது வரைக்கும், ஒன்னை நெனைச்சிட்டுக்கிட்டுத்தான் சாவேம்மா...''

மனோகர், மீனாட்சியின் கையைப் பிடித்து, குப்பம்மாவிடம் ஒப்படைத்தான். முரண்டு பிடித்த மீனாட்சியை, குப்பம்மா பக்கமாக செல்லமாய்த் தள்ளிவிட்டான். பிறகு, அப்பனைப்பார்த்தபடியே சூட்கேஸை திறந்தான். நம்பர் பூட்டு கொண்ட சூட்கேஸ் பெட்டியைத் திறந்து, நூறு ரூபாய் கட்டு ஒன்றை எடுத்துக் குப்பம்மாவிடம் நீட்டினான்;

''மீனாட்சி பேருக்கு, இந்த ஐயாயிரம் ரூபாயையும் பேங்கில் டிபாசிட்டாய் போடுங்கம்மா... அவள் கல்யாணத்துக்கு ரொம்ப உதவியாய் இருக்கும்''

குப்பம்மா, எதேச்சையாக நீண்ட கரங்களை மடக்கிக் கொண்டாள். இந்தப் பணத்தை வாங்குவது, இந்த 'பெரிசு' சொன்னதை நிரூபிப்பதாகி விடும். அவளும்,மனதைப் பொருத்தளவில் பணக்காரிதான்; குப்பம்மா அந்த பணக்கட்டை மனோகரிடம் திணித்தபடியே விடை பெற்றாள்.

''ஒன் மனசே போதும் தம்பி... நீ நல்லா இருக்கணும்''

''மீனாட்சிய அடிக்காதம்மா''

''அடிக்க மாட்டேம்பா.. அடிக்கவே மாட்டேன்''

''எப்போதாவது... அவள தொலைவுல நின்னு காட்டும்மா...''

''ஆகட்டும்பா... ஆகட்டும்பா...''

''மீனுக் குட்டி...நானும் கலைவாணியும், சித்ரவதை படாம சீக்கிரமா போக வேண்டிய இடத்திற்கு போகணுமுன்னு சாமி கும்புடம்மா... நீ... கும்பிட்டா பலிக்கும்மா...''

''கும்புடுவாப்பா... கும்புடுவாள்...''

குப்பம்மா, முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அங்கே நின்றால், அழுகை, கூட்டத்தைக் கூட்டிவிடும் என்று நினைத்தவள் போல், மான்குட்டியாய் மருண்ட மீனாட்சியை உடலோடு ஒட்ட வைத்துக் கொண்டு, வாசலைத் தாண்டி ஒரே ஓட்டமாய் ஓடினாள். அவனுக்கு கையாட்டியபடியே திரும்பித் திரும்பிப் பார்த்த மீனாட்சிக்கு, பதிலுக்கு கையாட்டியபடியே, மனோகர் உடலாட நின்றான். கண்ணின் வேர்வை உடம்பின் ஒவ்வொரு அணுவும் சிந்திய கண்ணீரில் கலந்தது. உதவிக்கு இருந்த ஒரே ஜீவனும் போய்விட்டது. இனிமேல் சொந்த ஜீவன் போக வேண்டியதுதான் பாக்கி. ஒவ்வொருவரிடமும் மரணம் தனித்தனியாய் வரலாம்... அதற்காக அந்த ஒருத்தரை, தனிப்படுத்தலாமா...

மனோகர், எதுவுமே நடக்காததுபோல் நாற்காலியில், மோவாயில் கை வைத்து உட்கார்ந்த தகப்பனிடம் சீறிப் பேசினான்.

''எனக்கு வேண்டியவங்களே போன பிறகு... இந்த வீட்ல யாரும் இருக்க வேண்டியதில்லை''

தவசிமுத்து, பதில் பேசவில்லை. கால்களைத், தரையில் தேய்த்தார். மடியில் இருந்த வெற்றிலை பாக்கை எடுத்துப் போட்டார். கைகளைக் கோர்த்தார். கண்களைச் சிமிட்டினார். இதற்கு மேல் நின்றால், கழுத்தைப் பிடித்து தள்ளினாலும் தள்ளலாம்... தள்ளினாலும் போக முடியாதே... லாக்கர் நகையை வாங்கணும். கம்பெனி கொடுத்த பணத்தையும் கறக்கணும்.. மீராவையும் கரையேற்றிவிடலாம்... பக்கத்து வயலையும் வாங்கிடலாம்.

அந்த பெட்டிக்கு என்ன நம்பர் பூட்டு... புத்தியை கடன் கொடுத்துட்டேனே...

மனோகர் கத்தினான். ''யாரும் இங்கே நிற்கப் படாது''.

''இதுக்குப் பேர்தான் பெத்த மனம் பித்து... பிள்ளை மனம் கல்லு என்கிறது... சரி சரி... நான்...வண்ணாரப்பேட்டைக்குப் போயிட்டு...சாயங் காலமாய் வாறேன்... எங்கேயும் போயிடாதே...''

தவசிமுத்து போய்விட்டார். பொறுத்தவர் பூமியாள்வார் என்று, தனக்குத்தானே எப்போதோ கேட்டதை, அப்போதும் நினைத்துக் கொண்டு போய்விட்டார். மனோகரும், கல்லுக்குள் தேரைபோல் போர்வைக்குள் முடங்கிக் கொண்டான். சென்னை மீனாட்சி, மீண்டும் மதுரைக்குப் போய்விட்டாள். இந்தக் கிருமிகள், வெள்ளை அணுக்களை மட்டுமா அழிக்கின்றன... பாசம், பந்தம், பணம், உறவு, எல்லாவற்றையுமே அழிக் கின்றன... உள்ளே அணு அணுவாய் அழிக்கின்றன என்றால், வெளியே ஒரேயடியாய் அழிக்கின்றன.

மனோகர் அழவில்லை... சிரிப்பாய் சிரித்தான். வெடிச்சிரிப்பாய்... வெறுஞ் சிரிப்பாய்... வெறுமை சிரிப்பாய்... சிரித்தான். சிரிக்கச் சிரிக்க அழுகை... அழ அழ சிரிப்பு. கண்ணதாசா, ஒன் வாயில் சர்க்கரை போடணும் சாமி...

மனோகர், கட்டிலோடு கட்டிலாய் ஒடுங்கினான். போர்வையை இழுத்து, உச்சி முதல் பாதம் வரை போர்த்திக் கொண்டான். ஒரே இருட்டு... அவனுக்குப் பிடித்தமான இருள்...

மனோகர், தான் எடுக்காமலே கீழே விழுந்த போர்வையைப் பார்க்க கண்ணைத் திறந்தான். அவனுக்கு முன்னால், நான்கைந்து பேர்கள்... அவர்களில் ஒருத்தி பெண். இருபது வயதிருக்கலாம். நீல நிறப் பேண்ட்..., முழங்கைவரை மடிக்கப்பட்ட ஊதா நிற முழுக்கைச்சட்டை... ஆச்சர்யமாய் பார்த்த மனோகர், எழுந்து உட்கார்ந்தான். அதற்குள், அவன் பக்கத்தில் உட்கார்ந்த உயரமான இளைஞன், எடுத்த எடுப்பிலேயே இப்படி பேசினான்.

''கவலைப்படாதடா... மனோகர்... நாங்க அந்நியர்கள் இல்ல. அன்னியோன்யமானவர்கள். ஒன்னை மாதிரியே எய்ட்ஸ் கிராக்கிகள்; ஒன்னொட நண்பர்கள். அதனாலதான் ஒன்னை 'டா' போட்டு கூப்பிட் டேன்டா... நீ எதுவும் சொல்ல வேண்டாம்... எங்களுக்குத் தெரியும்... இனிமேல் நீ பிள்ளைப்பூச்சி இல்லே... தேள்... விஷம் பிடிச்சி கொட்டுற தேள்... வாழ்வது வரைக்கும் சந்தோஷமா வாழப் போற சராசரிக்கும் மேலான மனிதன்... கவலைய விடுடா மச்சி... இனிமேல் நீதான் நாங்க, நாங்கதான் நீ...

மனோகர், அவர்களை அறுதலோடு பார்த்தான்.

18

இயற்கை அன்னை, ஒரு மார்பில் பால் குடிக்கும் தன் குழந்தையை, இன்னொரு மார்புக்கு எடுத்துச் செல்லும் போது, இந்த இரண்டு மார்பகத்திற்கும் இடைப்பட்ட பகுதிதான் மரணம் என்றார் தாகூர். நமது எல்லாப் பிரச்சினைகளுக்கும், மரணம் முற்றுப் புள்ளி வைக்கும் என்பதை நினைக்கும் போது, அந்த மரணமே இனிமையாகத் தெரிகிறது என்றார் நேரு... ஆனால், பயத்திலேயே பெரிய பயம் மரண பயம். மரணத்தின் மறுபக்கம் என்ன இருக்கும் என்பதை, அந்த மரணம் வழியாகக் கண்டறிய விரும்புகிறவர்கள் கூட, மரணத்தைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். ஆனால் மீதம் என்று வைக்காமலும், மீதி இன்றி எடுக்காமலும், தன்னை நினைப்போர்க்குத் தன்னை நினைப்பூட்டும் பிறப்பின் அணுக்களில் ஒன்றியிருக்கும் இறப்பை எதிர்நோக்கி, தற்கொலை செய்து கொள்வது, ஒரு கோழைச் செயலாகாது என்று பலர் குறிப்பிடுவதையும், உதாசீனம் செய்ய முடியாது. உறுப்புக்களை இழந்த தொழு நோயாளிகளும், இரண்டு கால்களை இழந்த முடவர்களும், பக்கவாதத்தில் படிந்தவர்களும் இந்த நிகழ்கால வாழ்க்கையை விடாப்பிடியாய்ப் பிடிக்கிறார்கள். இதற்கு கலைவாணியே ஒரு உதாரணம். மாமியார் சீதாலட்சுமி, சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொன்னாலும், இவள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைத்தாலும், மரணபயம், இவளையும் வாழ வைக்கிறது. எப்படியாவது, டாக்டர் சந்திரா மூலமோ, அல்லது அந்த பழிகாரன் மனோகர் மூலமோ, இந்த விஷக்கிருமிகள் கல்யாணத்திற்கு முன்பே அவனிடம் இருந்ததை தெரியப்படுத்திய பிறகே, மரணிப்பது என்று இவளே, தனக்குத்தானாய் சமாதானம் செய்து கொண்டாள். அதே சமயம், மரணத்தின் மீது தனக்கு உரிமை இருக்கிறது. அது தன்னுடைய ஏவல் நிகழ்ச்சி என்று நினைத்துக் கொண்டதில், ஒரு தெம்பும்

ஏற்பட்டது. ஆனாலும், அந்த மரணம் எஜமானாகுமுன்பு, ஏவலாளாய் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய இக்கட்டான சந்தர்ப்பங்களுக்கே அவள் தள்ளப்பட்டு வருகிறாள்...

அன்றும் அப்படித்தான்...

ஒரு வார காலமாக, கட்டிலோடு கட்டிலாய் முடங்கிக் கிடந்தவளிடம், அண்ணி குழல்வாய்மொழி வந்தாள். வந்ததும், வராததுமாய் விபரம் சொன்னாள்.

''நேரு யுவகேந்திரா அதிகாரி குமாரவேல், ஒன்னைப் பார்க்க வந்து இருக்கார். அஞ்சு நிமிஷத்தில நிக்க வச்சே பேசி அனுப்பிடு... நான் சொல்லலம்மா... ஒங்க அண்ணாதான் சொல்லச் சொன்னாரு...''

கலைவாணி, அண்ணியை சங்கடமாய் பார்த்தாள். திருமணத்திற்கு முன்பு போடாத பூட்டு, திருமணத்திற்குப் பிறகும் போடாத விலங்கு, இப்போது தனக்குப் போடப்பட்டிருப்பதை உணர்ந்ததும், கால்கள் வலித்தன. நோவெடுத்தன. நேரு இளைஞர் மைய ஒருங்கிணைப்பாளரான இந்த குமாரவேல், இளைஞர் என்றாலும், முதியவரின் பக்குவம் கொண்டவர். அவரது ஒவ்வொரு வார்த்தையும் பார்வையும், 'சகோதரியே! என் சகோதரியே!' என்று சொல்லாமல் சொல்லும். முன்பெல்லாம் எந்த ஒரு நிகழ்ச்சிக்காவது, அவர் ஊருக்கு வந்தால், இந்த வீட்டில்தான் சாப்பாடு... எடுத்த எடுப்பிலேயே வராமல், பெண் என்பதால், சிறிது முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, இந்த வீட்டில் இந்த அறைக்கே வருகிறவர். இந்த குழல்வாய்மொழி அண்ணிகூட, 'என் நாத்தனாருக்கு ஒரு நல்ல பையனா பார்க்கப்படாதா' என்று கேட்பாள். உடனே அவர், 'என் மைத்துனனை, தேடிட்டுத்தான் இருக்கேன்' என்பார். அப்பேர்ப்பட்டவரை, எல்லாரும் வெளியிலேயே நிற்கவைத்துவிட்டார்கள்.

கலைவாணி, அவசர அவசரமாக வெளியே வந்தாள். குமாரவேல், முற்றத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். வேறு சந்தர்ப்பமாக இருந்தால், அவர் கையில் ஒரு காபி டம்ளராவது இருக்கும். போதாக் குறைக்கு, தம்பிக்காரன் பலராமன், அவரிடம் முகம் கொடுத்துப் பேச வில்லை... அண்ணன் கமலநாதன், கண்களைக் கவிழ்த்திப் பார்க்கிறான். கலைவாணிக்கு, குமாரவேலைப் பார்த்ததும், அழுகை வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டாள். அந்த அழுகை, அவள் கற்பிற்கு மாசாகக் கருதப்பட லாம். அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, அவர் கேட்க வேண்டியதை இவளே கேட்டாள்.

''சுகமா... இருக்கீங்களா ஸார்''

''சுகமாவே இருக்கேம்மா... நீ... சாரி... நீங்க முன்னால நின்று அடிக்கல் நாட்டுனீங்களே... மருத்துவமனை. இன்றைக்கு அதே இடத்தில் ஒரு கொட்டகையில் தற்காலிக மருத்துவமனை துவங்குது... அதுக்காகத்தான் நான் வந்தேன். போகிற வழிதானே... ஒன்னையும் பார்த்துட்டு போகலாமென்னு வந்தேன். திறப்புவிழா முடிஞ்சதும், பீல்ட் பப்ளிசிட்டி ஆபீசரும் ஒங்களைப் பார்க்க வரணமுன்னார். அவர் ஜீப்லதான் நான் போகணும், ஆனால் அவரை வரவிடாமல் தடுக்கப் போறதுக்கு மன்னிக்கணும் 'நான் வாறேம்மா ... திக்கற்றோருக்கு தெய்வந்தான் துணை''

குமாரவேல், எவரையும் பார்க்காமல், சொந்த மகன்போல் உரிமை கொண்டாடிய சீனியம்மாவையும் பார்க்காமல், திரும்பிப் பாராமலே போனார். கலைவாணியால், வெறுமனே தலையாட்டத்தான் முடிந்தது... அந்த தலையைக் கூட மெல்ல ஆட்டினாள். இல்லையானால், கண்ணீர்தான் உதிரும்... அதுவே, கடந்த கால காதலின் அத்தாட்சிகளாகக் கருதப்படலாம்... எல்லோருமே சீதா லட்சுமிகளாய் ஆகிவிட்டார்கள்.

கலைவாணி, குமாரவேல் போனதும், ஒரு நிமிடம் கூட திண்ணையில் நிற்காமல், அறைக்குள் வந்தாள். கட்டிலில் முடங்கிக் கொண்டாள். முந்தானையே முக்காடானது... அந்த அறையே சமாதியானது.. அவளும் இரண்டு நாட்களாகப் பார்த்துக் கொண்டுதான் வருகிறாள். ஒரே தட்டில் சாப்பிடும் பலராமன், சிறிது எட்டி நின்றே சாப்பிடுகிறான். தோளில் கை போட்டுப் பேசும் அண்ணிகூட, சிறிது விலகி நின்றே பேசுகிறாள். ஆளுக்கு ஆள், தினம் தினம் இடம் மாறும் சாப்பாட்டுத் தட்டுக்களில் கூட, அவளுக்கு இப்போது ஒரே தட்டுதான் வருகிறது. பல்லாங்குழிகள் மாதிரி மூன்று மேடுகளைக் கொண்ட தட்டு. அண்ணிகூட, இவள் சாப்பிட்ட தட்டைக் கழுவுவதில்லை. இவளிடமே செம்பு நிறைய வெந்நீர் கொடுத்து கழுவச் சொல்கிறாள். விஞ்ஞான ரீதியில் பார்த்தால், இதில் தப்பில்லைதான். ஆனால், இதிலெல்லாம் ஒரு அந்நியத்தன்மை இருப்பது போல் பட்டது. உறவாடுவது ஒரு உரிமை என்பது போய்... அதுவே ஒரு கடமை என்பது போலாகி விட்டது. இந்தக் கடமை சுமையாக, அந்த சுமையும் தலையிலிருந்து கீழே விழ, எவ்வளவு நாளாகுமோ...!

கலைவாணி குமைந்தாள். இதற்குள், அம்மா உள்ளே வந்தாள். கருவாய் சுமந்தவளுக்கு, அந்தக் கருவின் உருவத்தில் புரையோடிய உணர்வுகள் புரிந்து விட்டன. வலது கையை வளையல் மாதிரி நீட்டி, அதில் மூன்று முழ மல்லிகைப் பூவை தொங்கப்போட்டு வந்தாள். ஆறுதலாய் பேசினாள்.

''ஒரேயடியாய் வீட்டுக்குள்ளயே அடஞ்சி கிடந்தால், பைத்தியம் தான்

பிடிக்கும். பேசாமல், முருகன் கோவிலுக்குப் போயிட்டு வா... பூவை தலையிலே வச்சிக்கம்மா... ஏன் கட்டுலுல வைக்கே''

''இந்தப் பூ... முருகனுக்கு. அவனுக்குத்தான், இது தகும். நான் தலையில் பூ வச்சிட்டுப் போனால், அந்த மனோகரை இன்னும் நான் புருஷனாய் நினைக்கிறதாய் அர்த்தமாயிடும்''

சீனியம்மாவால், கைகளைத் தான் நெரிக்க முடிகிறது... உதடுகளைப் பிதுக்க மட்டுமே இயன்றது. மகளின் துக்கத்தை உள்வாங்க முடியாமல், அந்த அறையை விட்டு வெளியேறத் தான் முடிந்தது.

கலைவாணி, புடவையை மாற்றிக் கொண்டு; கூடை பின்னியதுபோல் சிக்கல் போட்ட தலை முடியை வாரிக் கொண்டு புறப்படப் போனபோது, வாடாப்பூவும் தேனம்மாவும் வந்து விட்டார்கள். கலைவாணி, வாடாப் பூவை செல்லமாக அதட்டினாள்.

''புருஷனுக்குத் தெரியாம இப்படியா திருட்டுத்தனமா வாரது அக்கா? தேனம்மா! ஒனக்கும் சேர்த்துதான் சொல்றேன். அவன்கிட்ட இருந்து எனக்கு வந்தது, ஒங்களையும் ஒட்டுமுன்னு ஒங்க வீட்டு ஆம்பளைங்க குதிக்கப் போறாங்க.''

''குதிச்சால் குதிக்கட்டும். ஒனக்கு வாரதுக்கு முன்னயே, எனக்கு வந்திருக்கும். உடம்பும் அப்படித்தான் ஆகிட்டு இருக்குது...''

''தத்து பித்துன்னு உளறாதே... வாடாப்பூக்கா''

''உளறல... கலை. உண்மையைத்தான் சொல்றேன். என் வீட்டுக்காரன் என்கிட்டயே பெருமை அடிப்பான்... இந்தியா முழுவதும் நாற்பத்தஞ்சி நாளு லாரில போகும்போது, முப்பது நாளைக்கு அவனுக்கு அது இல்லாம முடியாதாம். அப்போ கணக்குப் போட்டு பாரு... ஆயிரம் பேர் கிட்ட போனாலும் ஒன்கிட்ட வார சுகம் எவள்கிட்டயும் இல்லன்னு வேற ஜம்பமாய் பேசுவான். பண்ணிப்பயல்... எப்பாடி... பேசு முன்னாலே மூச்சி இரைக்குது''

இருவரையும், கண்கலங்கப் பார்த்த தேனம்மா, பேச்சின் வெம்மை தாங்க முடியாமல், அதை மாற்றினாள்.

'கலை... நீ போன பிறகு, மகளிர் மன்றக் கூட்டுக் குழுவோட போக்கே மாறிட்டு... இப்போது எல்லாமே ஆனந்திதான்... நாம் நட்டுன அடிக்கல்லை, ஒரு ஓரமா எடுத்து நட்டுட்டு, இந்த ஓலைக்கட்டிடத் திறப்புக்கு பெரிய பளிங்குக்கல்லாய் பதிச்சிருக்காள். அதில ஏகப்பட்டவனுவ பேர், இவள்

பெயரு... ரொம்ப பெரிசு... மருத்துவமனை என்கிறது ரொம்ப சிறிசா போட்டிருக்கு... மகளிர் மன்ற கூட்டுச் செயற்குழு என்கிற பெயரையே காணோம்''

கலைவாணிக்கு, ரத்தம் கொதித்தது. கல்யாணத்திற்கு முன்பிருந்த பழைய கலைவாணியாய் மாறிவிட்டாள். அதைப் பேச்சிலும் காட்டினாள்.

''எந்த நிறுவனமும், தனி ஒருத்தரைவிட பெரியது. நீங்க அவளை இந்த அளவுக்கு விட்டிருக்கப்படாது''

''நாங்க எங்கே விட்டோம்... அவளே எடுத்துக்கிட்டாள். இன்னிக்கி நடக்கப் போற திறப்பு விழா சம்பந்தமாய் கூட்டுக்குழு கூட்டத்தை நடத்தல.. கேட்டால், வந்தால் வாங்கடி, வராட்டால் போங்கடி என்கிறாள்!''

''இது அநியாயம்... நீங்களாவது குழுக் கூட்டத்தை கூட்டியிருக்கணும்''

''நானும் சொன்னேன்... ஆனால் நீ போன பிறகு, எல்லாரும் பயப்படுறாளுக... கட்சிக்காரன் பொன்னய்யாவை கைக்குள்ளே போட்டிருக்காள். இவளே அந்த கட்சியின் மகளிர் அணி செயலாளராய் ஆகப் போறாளாம்... எஸ்.பி.யை விழாவுக்கு கூப்பிடப் போனதால, போலீஸ்காரன், அவளுக்கு சப்-இன்ஸ்பெக்டருக்கு அடிக்காத... சலூட்டா அடிக்கான். கலெக்டரை கூப்பிட்டதால... தாசில்தார் பயப்படுகிறார். மாவட்ட கல்வி அதிகாரியைக் கூப்பிட்டதால... பள்ளிக்கூட மானேஜர் பயப்படுகிறார். எம்.எல்.ஏ.வைக் கூப்பிட்டதால, எல்லாருமே அவள்கிட்ட பயப்படுறாங்க. இந்த ஆறு மாசத்தில மகளிர் மன்றம் பெயர்லே எல்லாரையும் கைக்குள்ளேயே போட்டுக்கிட்டாள். இனிமேல் சாராயம் காய்ச்ச வேண்டியதுதான் பாக்கி''

''எப்படியோ ஒழியட்டும்... ஒனக்கு ஒரு அழைப்பிதழையாவது கொடுத்து இருக்கலாம்...''

''அது பிரசவ மருத்துவமனை... எய்ட்ஸ் மருத்துவமனையாய் இருந்தால் எனக்குக் கொடுத்திருப்பாள்... சரி... நீங்க விழாவுக்குப் போகலியா!''

''நீ இல்லாத இடத்தில எங்களுக்கு என்ன வேலை''

''அப்படிச் சொல்லப்படாது. இப்படி போராட வேண்டியவங்க ஒதுங்குவதாலதான், ஒரு பொது நிறுவனத்தை, தனிப்பட்ட ஒருத்தியோ இல்ல ஒருத்தனோ ஆட்டிப் படைப்பாங்க. இது... அவங்க திறமையைக் காட்டல. நம்மோட கோழைத்தனத்தை தான் காட்டுது''

''நீ என்ன சொல்லுதே கலை''

''விழாவிலே கலந்துக்கங்க... முன் வரிசையிலே உக்காருங்க. குழு உறுப்பினர்களுல யாரையாவது ஒருத்தியை கூட்டத்தில பேச வையுங்க. மைக்குக்கு முன்னால போய் நின்னுட்டால், யாரும் தடுக்க முடியாது. இந்த மருத்துவமனை கொண்டு வர, நாம பட்ட பாட்டை சொல்லச் சொல்லுங்க''

''இப்போ... சொல்லிட்டல்லா... இனிமே பாரு''

வாடாப்பூவும் தேனம்மாவும் போர்க்குணத்தோடு புறப்பட்டார்கள். லாரி டிரைவர் மாரியப்பன் டூர் போய்விட்டதால், வாடாப்பூவிற்கு அசுர பலம்... அதைப் பார்த்த தேனம்மாவுக்கு, புலிப்பலம். இவர்களை பலப்படுத்திய தோழி கலைவாணியோ, அவர்கள் போனதும் பலவீனப் பட்டாள். இடைக்காலமாய் மனதில் இருந்து மறைந்த மனோகரும், எய்ட்ஸும், மாமியாரின் ஏச்சும், குமாரவேலுக்கு வீட்டில் கிடைத்த அவமரியாதையும் அவளை குத்திக் குடைந்தன... அம்மா சொன்னது நிசந்தான். இப்போது மட்டும் வெளியே போகவில்லையானால், பைத்தியம் பிடிக்கும். சந்திரா, மனோகர் ஆகியோரிடம் எப்படி நடந்து கொண்டாளோ அப்படி நடக்க வேண்டியது ஏற்படலாம்.

கலைவாணி, வீட்டில் இருந்து வெளியேறி, கடைத் தெருப் பக்கம் வந்து விட்டாள். இடையிடையே தேநீர் கடைகளைக் கொண்ட இடைவெளி இல்லாததெரு. அந்தக் காலத்திலேயே துவக்கப்பட்டதால், இந்தக் காலத்திலும். 'பெரிய கடை' என்று பேசப்படும், ஒரு சின்ன மளிகைக் கடை; சாக்கு சாக்காக அடுக்கி வைக்கப்பட்ட அரிசிக் கடை; ஒரு பள்ளத்தில் கிடந்த கசாப்புக்கடை; சிறிது தள்ளி ஒரு வெறுங்கடை; அதில் வீடியோ ஆடியோ கேசட்டுக்களை விற்கலாமா அல்லது பேன்சிக்கடையை வைக்கலாமா என்று இன்னும் முடிவெடுக்காமல், முண்டமாய் கிடக்கும் கடை... இவற்றைத் தாண்டினால், அந்த விவசாயக் கிராமத்திலும் விற்பனைக்கு தரையில் வைக்கப்பட்ட காய்கறி மொந்தை. கூறு கூறாய் வைக்கப்பட்ட கருவாட்டு அடுக்குகள். இவற்றிற்கு முன்னாலும், பின்னாலும், இடை இடையேயும் நின்ற ஆண், பெண், குழந்தைகள். இத்தனை பேரையும், அத்தனைக் கடைகளையும் தாண்டி கலைவாணி நடந்து கொண்டே இருந்தாள். முன்பு போல், அவளை யாரும் மொய்க்கவில்லை. பக்கத்திலேயே வளையல் கடை 'எந்த வளையல் நல்லா இருக்கும் கலை' என்ற வழக்கமான கேள்வி இல்லை. ஆனாலும், அவர்கள் நல்லவர்கள்... வேறு ஒருத்தியாக இருந்தால், இந்நேரம் ஓடியிருப்பார்கள்... இல்லையானால் அவளை ஒட்டி இருப்பார்கள். கண்ணுக்கும் கருத்துக்கும் பிடித்த கலைவாணி என்பதால், அவளைப் பார்த்தபடி நிற்பதே, ஒரு சலுகை என்பதுபோல் நின்றார்கள். ஆனாலும் ஒரு சிலர் 'எப்படிதாயி இருக்கே' என்று அருகே வந்து கேட்கத்தான் செய்தார்கள்.

கலைவாணி, ஒரு நோயாளிப் புன்னகையோடு, சாலைப்பக்கம் வந்தாள். நடந்து நடந்து, பழைய புறம்போக்கு இடத்தில் எல்லையான கப்பிச்சாலைக்கு வந்தாள். பக்கத்திலேயே தோரணவாயில்... அதன் முன்னாலும், பின்னாலும் வரவேற்பு பேனர்கள். தொலைவாய் உள்ள அலங்காரமான மேடையில் அறிவொளி பாட்டுக்கள். தோரணவாயிலில் ஒரு பக்கம், பன்னீர் செம்போடு ஆனந்தி; அவளுக்குப் பின்பக்கத்தில் நான்கைந்து பெண்கள்... மறு பக்கம் அதே ராமசுப்பு; அவரைச் சுற்றி உள்ளூர் விவேகிகள். இரு பக்கத்திற்கும் இடையே மேளக்காரர்கள். கலெக்டர் வந்ததும், வெளுத்துக்கட்ட வேண்டும் என்பது கட்டளை...

கலைவாணி, அந்த விழா மேடையை, சுதந்திரப் போராட்ட தியாகிகள் மாதிரி பார்த்தாள், பெருமிதமாய், தாய்மைப் பெருக்கோடு பார்த்தாள். அந்த தியாகிகளைப் போலவே, இவளையும், யாரும் கண்டுக்கவில்லை. ராமசுப்பு மட்டும், அவளை கண்களால் வழி மறித்துப் பார்த்தார். ஆனந்தி, அக்கம் பக்கம் நின்ற சொந்தக்காரப் பெண்களிடம் கிசுகிசுத்துவிட்டு, அப்போதுதான் அவசரமான வேலை இருப்பதுபோல், மேடைப்பக்கம் ஓடினாள். அந்த மேடையில் வாடாப்பூவுக்கும், தேனம்மாவுக்கும், கனகம்மாவுக்கும் என்ன வேலை...? அவர்களை இறக்கியாக வேண்டும்.

கலைவாணி, பழக்க தோஷத்தில் லேசாய் நின்று பார்த்தாள். எவராவது ஒப்புக்கு கையாட்டி இருந்தால்கூட போயிருப்பாள். மேடையில் உலாவந்த வாடாப்பூவோ, கனகம்மாவோ, இவளைக் கவனிக்கவில்லை; ஆனந்தியிடம், ஆவேசமாக வாயடித்துக் கொண்டிருந்தார்கள்.

கலைவாணி நடையைத் தொடர்ந்தாள். எல்லாம் நல்லபடியாக நடந்து இருந்தால், ஒரு வேளை டவுனுக்குப் போகாமல், இவளே இங்கே பிள்ளை பெற்று இருக்கலாம். பிள்ளை என்று மனம் நினைத்ததும், அவள் அடிவயிறு எரிந்தது. தலை சுற்றியது. மசக்கையா அல்லது தாங்கொண்ணா தாபமா என்பது அவளுக்கே புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. வயிற்றில் வளரும் குழந்தை வாழப் போவதில்லை. எய்ட்ஸ் முத்திரையோடு பிறந்து, ஓரிரு வருடங்களில் அடங்கப் போகிற ஜீவன். அதையும் உலகில் உலாவவிட்டு, அவஸ்தைப்பட வைக்கலாகாது. முழு உருவம்பெறும் முன்பே, அதை முடித்தாக வேண்டும்... எங்கே எப்படி?

கலைவாணி சிந்தித்தபடியே, முருகன் கோவில் வளாகத்திற்குள் வந்து விட்டாள். இந்த மருத்துவமனை பிரசவிக்கும் இடத்திற்கும், சிறிது தொலை வாய் உள்ள சவுக்குத் தோப்பிற்கும் இடையே உள்ள இடம்... கோவில் முன்னாலேயே, பழைய காலத்து மண்டபம் கற் சிதைவுகளாய் நின்றது. ஆனால் உள்ளே அருமையான கோவில்... பெரிய கொடிக்கம்பம்... பிரகாரச்

சுற்றுக்கள்.

கருவறையில் வேல்முருகன், வள்ளி தெய்வானை இல்லாத பாலமுருகன்... பால் வடியும் முகம். வேல்கொண்ட ஒரு வீரக்கரம்... அபயமளிக்கும் மறுகரம். 'யாமிருக்க பயமேன்' என்ற வாசகமில்லாத பார்வை.

அந்த முருகச்சிலையோடு ஒன்றிப் போனதால், கலைவாணி தன்னைப் பார்த்ததும், அளிப்பாய்த்த கம்பிகளுக்கு இருபுறமும் நின்ற பெண்கள், ஒரு பக்கமாய் ஓடிப் போய் நின்றதைக் கவனிக்கவில்லை. முன்பெல்லாம் இதே இந்தக் கோவிலுக்கு 'விளையாட்டாக' வந்திருக்கிறாள். அக்கம் பக்கம் பேசியபடியே, அவ்வப்போது முருகனையும் பார்த்திருக்கிறாள். அந்த முருகனை வியந்ததும் இல்லை, பழித்ததும் இல்லை... ஒரு தடவை, ஒரு உபன்யாசி, முருகன் பிரும்மாவை சிறையிலடைத்தது பற்றி சொற்பொழி வாற்றியபோது, பள்ளியில் படித்துக் கொண்டிருந்த இதே கலைவாணி, 'அப்போ முருகன்... சஞ்சய் காந்தியா' என்று கூட கிண்டலடித்திருக்கிறாள். ஆனால், இப்போதோ அந்த கற்சிலைக்குள் ஒரு ஆன்ம ஒளி வேரூன்றி, பிரபஞ்சம் முழுக்க வியாபித்திருப்பது போன்ற சிந்தனை... அந்த ஒற்றை முருகன், தனக்காக காத்திருப்பது போன்ற அனுமானம்; அவன் கழுத்தில், தான் ஒரு உருத்திராட்ச மாலையாய் மாறிப் போனது போன்ற பிரமை... அவனை பிறப்பறுக்கும் பெருமானாய், முதன் முதலாய் உணர்ந்தது போன்ற ஆரம்ப ஞானம்... பிறப்பறுக்க வேண்டுமானால், இறப்பை எதிர் பார்க்க வேண்டும் என்ற தெளிவு... இந்த தெய்வச்சிலை, இவள் பூமியில் விழுவதற்கு முன்பே எழுந்து, பூமிக்குள் போன பிறகும் தொடர்ந்து நிற்க போவதை அறிந்த ஆன்ம விழிப்பு... 'வேல் வேல்... வெற்றிவேல்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். லௌகீக கணக்குகளுக்கு, எக்ஸ் ஒய் என்று வைப்பது போல். ஞானக் கணக்குக்கு இந்த வேலும் மயிலும் எக்சானவை... ஒய்யானவை என்று பறைசாற்றும் பகுத்தறிவு... இவற்றைப் பிடித்தே இவற்றைத் தாண்டி, உள்ளொளி பிடித்து மனதை துறக்க வேண்டும் என்று எப்போதோ அலட்சியமாகப் படித்தது, இப்போது காதுக்குள், எவர் குரலிலேயோ, அசரீரி போல் ஒலித்தது... அந்த முருகச் சிலையைப் பார்த்த அவள் கண்களில் குருக்களும் தென்பட்டார். அவர் பார்த்த பார்வை சரியில்லை... கற்பூரத் தட்டோடு வெளியே வரப் போனவர், உள்ளேயே நின்று கொண்டார். அந்தச்சிலையை அவர் கழுவுவதால், அவருக்கு அது ஒரு கல்... பக்தர்கள் தொழுவதால் அந்தச்சிலை... அவர்களுக்கு எல்லாமே...

எங்கேயோ படித்ததை நினைத்து, கலைவாணி சிரித்துக் கொண்டாள். சுவரில் எழுதப்பட்ட பாம்பன் சுவாமிகளின் முருக நாமாவளியையும்,

தேவராய சுவாமிகளின் கந்தர் சஷ்டிக் கவசத்தையும் அன்று தான் படித்தாள். அதுவரை வெறும் எழுத்துக்களாய் நின்றவை, இப்போது, அவளிடம் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தன. படித்தவற்றில் ஒரு வாசகத்தை சிக்கெனப் பிடித்துக் கொண்டு அதையே திரும்பித் திரும்பிச் சொன்னாள்... 'எல்லாம் பிணியும் என்றனைக் கண்டால், நில்லாது ஓட... நீ எனக்கு அருள்வாய்'

கலைவாணி, பிரகாரம் சுற்றினாள். கல்லாய் நின்ற அருணகிரியும், பாம்பன் சுவாமிகளும், அவளுள் ஒளி எழுப்பும் சொல்லாய் மாறினார்கள். சிலையாய் நிற்கும் துர்க்கையின் நெற்றியில் ஓராயிரம் கோடி சூரியன்... உச்சித் திலகமாய்த் தெரிகிறது. அபிராமி பட்டர் அந்தாதியை பள்ளியில் படித்தது... பாய்ந்து, மனதுக்குள் பிரவாகமாய்ப் பெருக்கெடுத்தது. ஆறாய்ப் பாய்ந்தது.

கலைவாணி, தன்னை மறந்து, தான் கெட்டு, மனம் செத்து, ஒரு வினாடி நின்றிருப்பாள். அதற்குள் யாரோ காறித்துப்பும் சத்தம். திருப்பிப் பார்த்தாள். மாஜி மாமியார் சீதாலட்சுமி, அவளை... விழுங்கப் போகும் பூதகியாய் வாய் விரித்தாள். மீண்டும் துப்பினாள். மீண்டும்... மீண்டும் துப்பினாள்... அதுவும் கோவில் பிரகாரத்திற்குள்ளேயே அவள் துப்பியது, அவள் கை பிடித்த தேங்காய்த் தட்டிலும் தெறித்தது.

கலைவாணி, அவளை எச்சிலாய் பார்த்தபடியே, ஒதுங்கிக் கொண்டாள். நேருக்கு நேராய் கேட்பவள், 'முருகு நீ கேட்டுக்கோ' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். தண்டனையாய்க் கேட்கவில்லை. தர்மமாய்க் கேட்கவில்லை. நியாயமாகக் கூட கேட்கவில்லை... இப்படித்தான் என்று கேட்கவில்லை. கேள்... கேள்... எப்படியோ கேள் என்பது போல் கேட்டாள்.

கலைவாணி, கொடிக்கம்பத்திற்கு அருகே உள்ள புல்தரையில் உட்கார்ந்தாள். அங்கேயும் சீதாலட்சுமி அவளை விடவில்லை. இப்போது சாடைமாடையாகத் திட்டினாள். காறிக் காறித் துப்பினாள். ஆனாலும் கலைவாணிக்கு ஒரு சிரிப்பு. தற்குறி கிடக்கிறாள் என்பது மாதிரியான சிரிப்பு... முருகன், தன் பொறுமையை அளந்து பார்க்கிறான் என்ற அனுமானம்... எல்லாம் அவன் என்றால்... இவளும், அவளும், அவன்தானே...?

கலைவாணி எழுந்தாள்; இன்னும் மஞ்சள் வெயில் அடிக்கத்தான் செய்கிறது. ஆனால், பலராமன் வந்துவிட்டான். சீதாலட்சுமி எச்சிலை விட்டாள்; இல்லையானால் இவன் அவளை வாயில் நுரை கக்கும்படியாய்ச் செய்துவிடுவான்.

கலைவாணி, தம்பியோடு அவசரமாய்ப் புறப்பட்டாள். ஒருத்தருக்கு

ஒருத்தர் பேசவில்லை... எதிரே, அதே குமாரவேல் வந்தார். பெயருக்குரிய வளைக் கும்பிட வந்திருப்பார். இவளைப் பார்த்ததும் லேசாய் நின்றார். இவளும் நிற்கத்தான் போனாள். ஆனால், தம்பியோ இவள் முதுகை ரகசியமாய் தள்ளிவிட்டான். குமாரவேல் போனதும், தம்பிக்காரன் அண்ணாவானான்.

''இவனுவ கிட்டே இனிமேல் பேச்சு வச்சிக்காதே''

கலைவாணி, தம்பி வருகிறானா என்று பார்க்காமல், தன்பாட்டுக்கு நடந்தாள். சமயம் பார்த்து காத்திருந்த பழைய எண்ணங்கள், மறதிப்புற்றில் இருந்து அவள் மனதை அரித்தன. சீதாலட்சுமியோடு, புதிய பலராமனும் சேர்ந்து கொண்டான். முருகன், கல்லானான். அந்தக் கோவில் ஒரு கட்டிடமானது...

''எய்ட்ஸ் கிருமிகள், உணர்வுகளாகவும், ஓலங்களாகவும் கூட வேடம் போடுமோ?''

கலைவாணியின் மனம், சாக்கடைக்குள் முக்கப்பட்ட வெறுங்குடம் போலானது.

19

"வாங்க மாமா!''

அந்த அறையில் இருந்து தப்பித்தவறி வெளியே வந்த கலைவாணி, திண்ணையில் நின்றபடியே, அண்ணனின் மாமனார் ஆறுமுக நயினாரை வரவேற்றாள். பிறகு, துக்கம் விசாரிக்க அவர் வந்திருப்பதாக அனுமானித்து, தூணைப் பிடித்தபடி தலை கவிழ்ந்து நின்றாள். அவரது ஆறுதல் வார்த்தை களைக் கேட்க ஆயத்தமாய் நிற்பதுபோல் நின்றாள். ஆனால், ஆறுமுக நயினார் அவளைப் பார்க்காமலே 'உம்' என்று முற்றத்திலேயே நின்றார். இதற்குள், கட்டிலில் சாய்ந்திருந்த சுப்பையா, பக்கத்தில் கிடந்த நாற்காலியை தள்ளிவிட்டு 'உட்காரும்வே' என்றதும், ஆறுமுக நயினார் திண்ணை ஏறினார். அதற்குள், மண்வெட்டிக் கணையை சக்கை வைத்து சுத்தியலால் சரிப்படுத் திக் கொண்டிருந்த கமலநாதன், அந்த மண்வெட்டியைத் தூக்கிப் போட்டு விட்டு, மாமாவை பொருட்படப் பார்த்தான். வட்டக் கண்ணாடியை முகத் துக்கு முன்னால் நிறுத்தி, பிளாஸ்டிக் பொட்டை நகர்த்திய குழல்வாய் மொழி, கையோடு ஒட்டிய பொட்டுப் பிளாஸ்டிக்கைக் கவனிக்காமலே, வெளியூரில் இருந்து வேர்க்க விறுவிறுக்க வந்த தந்தையை செல்லமாகக் கோபித்தாள்.

''ஒண்ணு காலையிலே வரணும்... இல்லன்னா சாயங்காலமாய் வரணும்... இப்படியா உச்சி வெயிலுல வாரதுப்பா... அம்மா எப்படி இருக்காங்க''

ஆறுமுக நயினார் எதுவும் பேசாமல், மகளை ஒரு முறைப்பு - பெரு முறைப்பாய் முறைத்தார். பனையைக் குடைந்தது மாதிரி நரைத்த தலை... உள்

வளைந்த மனிதர்; தகரம் போலான உடம்பு... இவருக்கு இப்படி ஒரு அழகான பெண் எப்படிப் பிறந்தாளோ என்று ஊர் பேசும் மனிதர்; வீராப்பாகவே இருந்தார். இதற்குள் சமையலறையில் இருந்து அடுப்புக் கரித்தலையோடு உள்ளே வந்த சீனியம்மா, அவரிடம் முறையிட்டாள்.

''எங்களுக்கு... வந்திருக்கிற கொடுமையைப் பாத்திங்களா அண்ணாச்சி! ஒங்கள மாமான்னு வாய் நிறையக் கூப்பிடுற ஒங்க மருமகளைத் தேடி வந்த அக்கிரமத்தைப் பாத்தீங்களா அண்ணாச்சி''

ஆறுமுக நயினார், அப்படியும் அசையவில்லை. அப்போது பார்த்து கலைவாணி, ஒரு தட்டில் மோர் ததும்பும் டம்ளரைக் கொண்டு வந்தாள். அந்த டம்ளரைக் கையால் தூக்கி, மாமாவிடம் நீட்டினாள். உடனே அந்த மாமாவான ஆறுமுக நயினார், சற்று தொலைவாய் உள்ள இன்னொரு நாற்காலியில் போய் உட்கார்ந்தபடியே, முதல் முறையாக வாயைத் திறந்தார்.

''நீயெல்லாம், காபி... மோர்ன்னு கொண்டு வரப்படாதும்மா... சாதம் கூடப் பரிமாறப்படாது... ஏன்னா... நோய் அப்படிப்பட்ட நோய்''

மாமா, தான் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை, அப்படிச் சொல்வதாக நினைத்த கலைவாணி, அவரை நன்றியோடு பார்த்துக் கொண்டு, அவரை நோக்கி நடந்தாள். அவர், இப்போது சிறிது கோபப்பட்டே பேசினார்.

''ஒட்டுவார் ஒட்டி நோய்க்காரி, இப்படி எதையும் கொடுக்கப் படாதும்மா. படிச்ச பொண்ணுக்கு இதுகூடவா தெரியல?''

கலைவாணி, காதுகளை உள்முகமாய் அடைத்துக் கொள்வதுபோல், மூச்சை நிறுத்தினாள். பிறகு, தட்டையும் மோரையும் முற்றத்தில் வைத்துவிட்டு, தனது அறைக்குள் ஓடிப் போனாள். 'எங்க ஊரையும் வந்து திருத்தும்மா... எல்லாப் பயல்களும், பயமகன்களும், கழுத களவாணிப்பய பிள்ளைகளாயிட்டு' என்று முன்பு பல தடவை சொல்லி இருக்கும் இந்த மாமா... இப்போது ஒரு கழுதையைவிடக் கேவலமாய் தன்னை கருதுவதைக் கண்டு, அவள் அந்த அறையில் மூலையில் சாய்ந்தாள். அம்மாக்காரியும் சம்பந்தியைச் சுட்டெரிப்பது போல் பார்த்துவிட்டு, மகள் மருவும் அறைக்குள் பரிதவித்துப் போனாள்... இன்னமும் எதுவுமே நடக்காததுபோல் முகம் காட்டிய சுப்பையா, ஆறுமுக நயினாரை, ஆழம் பார்த்தார்.

''என்னவே திடுதிப்புன்னு இப்படி''

''என் மகளையும், மருமகனையும் பேரப்பிள்ளையோடு கூட்டிட்டுப் போகலாமுன்னு வந்தேன்...''

''அம்மன் கொடைக்கு வரிப் போட்டாச்சா? நான் வரப்படாதா?''

''நல்லாவே வாரும், ஆனால் ஒம்மால... மகள விட்டுட்டு வர முடியுமா?''

''என்னவே ஆடு புலி ஆட்டம் ஆடுறீரு...?''

''ஆடுகள... புலி அடிக்கு முன்னால, அதைப் பத்திகிட்டு போறதுதானே நியாயம்?''

''புரியும்படியாத்தான் பேசுமே...''

''இதுக்கு மேலே எப்படி புரிய வைக்கிறது...? என் மகளையும், மருமகனையும் என் வீட்டுக்குக் கூட்டிப் போறேன். குழல்! புறப்படும்மா. மாப்பிள்ளை ஒம்மையுந்தான்...''

சுப்பையா, ஆடிப்போனார். ஆறுமுக நயினார், ஏதோ ஒரு குண்டோடு வந்திருப்பதை அவர் புரிந்து கொண்டாலும், இது இப்படிப்பட்ட அணு குண்டாக இருக்கும் என்று அவர் எதிர் பார்க்கவில்லை...

''வே... மச்சான்... புத்தி சுவாதீனத்தோடுதான் பேசுறீரா?''

''புத்தி இருக்கிறதாலதான்... இப்படிப் பேசுறேன்... கலைவாணிக்கு வந்திருக்கிற இந்த நோய், மரம் விட்டு மரம் தாவுற குரங்குமாதிரி... நாலையும் யோசித்து விட்டுத்தான் இங்க வந்தேன். கலைவாணியை ஒதுக்குப்புறமாய் வையுங்கன்னு சொல்றதுக்கு எனக்கு உரிமை கிடையாது. ஆனால் நான் கண்ணுக்கு கண்ணாய் வளர்த்த என் மகளையும், அவளை பிடித்து அக்கினி வலம் வந்த மாப்பிள்ளையையும், ஆண் வாரிசு இல்லாத எனக்குக் கொள்ளி போடப் போகிற பேராண்டியையும் கூட்டிக்கிட்டுப் போறதுக்கு எனக்கு உரிமை உண்டு''

''இப்படிப் பேச... ஒமக்கு எப்படிவே மனசு வருது?''

''நானா... வேணுமுன்னு பேசறேன்?... அந்த நோய் அப்படிப்பட்ட நோய்... எங்க ஊர் எம்.பி.பி.எஸ். டாக்டர் கிட்டயும் கேட்டேன். இந்த மாதிரி நோயாளியோட எச்சில் பட்டாலே போதுமாம்... அவங்க ஒதுங்கிற இடத்தில நாம் ஒதுங்கினால், அதுவே எமனாம். குணப்படுத்தக் கூடிய காலரா, மலேரியாவே, பிறத்தியாரைத் தொத்திக்குமுன்னால், உயிரையே குடிக்கிற இந்த நோய் சும்மா விடுமா...?''

''சரிவே... வாதத்துக்காகவே பேசுவோம்... கலைவாணியோட ஒம்ம மருமகளும் ஒம்ம மருமகனும், ஒரு வாரமா பழகுறாங்க... இந்நேரம் அந்த

நோய் அவங்களையும் பிடிச்சிருக்காது... என்கிறது என்ன நிச்சயம்? இது ஒங்க கணக்குப்படி, என் கணக்குப்படி இல்ல... இவங்களுக்கு அது வந்திருந் தாலும் கூட்டிக்கிட்டுப் போறீரா''

ஆறுமுக நயினார், என்ன பேசுவது என்று புரியாமல் தடுமாறினார். கமலநாதன், கலைவாணி இருந்த அறையைக் கோபங் கோபமாய் முறைத்தான். குழல்வாய் மொழி, இனிமேல் அந்த வீட்டில் இருப்பதில்லை என்று தீர்மானித்தவள் போல், தந்தையின் பக்கம் போய் நின்றாள். அதிரடியில் இறங்கும் பலராமன் கூட, தனக்கு சம்பந்தமில்லாதவர்கள் சண்டை போடுவது போல் அனுமானித்து, கையைக் கட்டி, கண்மூடி நின்றான். அதற்குள்ளாகவே...

சீனியம்மா, அந்த அறையில் இருந்து கலைவாணியின் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்து வந்தாள். யந்திரம் போல், தான் இழுத்த இழுப்புக்கு வந்த மகளை, ஆறுமுக நயினார் முன்னால் கொண்டு போய் நிறுத்தினாள்; பின்னர் அலறியடிக்காமல், ஆணித்தரமாய்ப் பேசினாள்.

''இந்தாங்க... அண்ணாச்சி... கேட்கக் கூடாததை எல்லாம் கேட்ட பிறகு இவள் இருக்கப்படாது. உயிரோட லாந்தப்படாது. இவளை உங்கக் கையாலயே கொன்னுடுங்க. இல்லன்னா, ஒங்க கையாலயே அவளைக் கழுத்தைப் பிடிச்சி வெளிய தள்ளுங்க... நாங்க ஏன்னு கேட்கல''

சீனியம்மா, சதைப் பொம்மையாய் நின்ற மகளைக் கட்டிபிடித்துக் கேவினாள். 'வாம்மா... நாம ரெண்டு பேருமாய் ஆற்றுலே குளத்தில விழுந்து சாகலாம்' என்று மகளைப் பிடித்து இழுத்தாள். இதனால், ஆறுமுக நயினாரின், மனம் இளகுவதற்கு பதிலாய் இறுகியது. இந்த இறுக்கம் பேச்சிலும் ஒலித்தது.

''வாதத்துக்கு மருந்துண்டு, பிடிவாதத்துக்கு மருந்தில்லை. குழல் புறப்படு... மாப்பிள்ளை நடங்க... ஒப்பாவோட சொத்தும் வேண்டாம், சுகமும் வேண்டாம். கையும், காலும் கதியாய் இருந்தால் போதும்''

குழல்வாய் மொழியும், கமலநாதனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆறுமுக நயினாரை எதிர்த்துக் கூட பார்க்கவில்லை, சுப்பையாதான், மனம் பொறுக்க முடியாமல், மன்றாடினார்.

''கலைவாணி... ஒமக்கும் மகள் மாதிரிதான் மச்சான். இப்படி அரக்கத்தனமாய், பேச... உமக்கு எப்படித்தான் மனம் வருதோ... ஒம்ம மகளா இருந்தால்...''

''என் மகளாய் இருந்தால்... இநநேரம் ஊருக்கு புறமாய் ஒரு குடிசை போட்டு வைப்பேன்... இவளுக்கு வந்தது எல்லாருக்கும் வரணுமுன்னு அறிவு கெட்டதனமாப் பேசமாட்டேன்... வஞ்சகமாய் நினைக்கமாட்டேன்''

பலராமனால், இப்போது பொறுக்க முடியவில்லை... ஆறுமுக நயினாரின் அருகே வந்து, மிரட்டும் குரலில் பேசினான்.

''மாமா... வார்த்தைய அளந்து பேசுங்க... எங்கப்பாவை கேவலமா பேசுற எவனும் உயிரோட போகமாட்டான்''

கமலநாதனுக்கு கோபம் வந்தது. தம்பியின் அருகே போய், அவனை அடிப்பதற்காக கையை ஓங்கியபடி, ''பெரியவங்க, சின்னவங்க என்கிற மட்டு மரியாதை இல்லாமலா'' பேசுறே எங்க மாமனார் பேசுறதில என்ன தப்பு'' என்றான். ஓங்கிய கையை கீழே போடாமலே, தம்பியை அதட்டினான்.

''இதுக்கு மேல பேசுனே பிச்சுப்பிடுவேன் பிச்சு...''

''எங்கே அடி பாக்கலாம்?''

''மாமா... புறப்படுங்க... ஏன்டி ஒன்னத்தான்... ஏன் அசையாமல் நிக்கே... ஒன்னை எனக்குத்தான் கட்டிக் கொடுத்திருக்கு... இந்தக் குடும்பத்துக்கு இல்ல; புறப்படு. இவன் நம்ம அடிக்கும் முன்னாலயே போயிடலாம்''

குழல்வாய்மொழி, புருஷனோடு புறப்பட்டாள். அப்போதுதான், அவளுக்கு குழந்தை ஞாபகம் வந்தது. மாட்டு தொழுவத்திற்கு அருகே உள்ள அறையில், தொட்டியில் தூங்கும் மகனை எடுப்பதற்காக நடந்தாள். இதைப் புரிந்து கொண்ட சீனியம்மா, மருமகளுக்கு முன்னால் ஓடி, குழந்தையைத் தூக்கி தோளில் போட்டாள். அதுவும் விழிப்பு தட்டி, அழுவதற்குப் பதிலாக, பாட்டியின் தலையில் விரல் விடப் போனது. இதனால், குழல்வாய்மொழி தயக்கம் காட்டியபோது, கமலநாதன் தாயின் பக்கமாய் போய் குழந்தையைப் பற்றினான். உடனே சீனியம்மா, முரண்டு பிடித்துக் கத்தினாள்.

''வேணுமுன்னா, என்னை அடிச்சுக் கொன்னுட்டு, என் பேரனைத் தூக்கிட்டுப் போடா''

கமலநாதன், அம்மாவை அடிக்கவும் முடியாமல், குழந்தையைப் பிடிக்கவும் முடியாமல் அல்லாடியபோது, பலராமன் அம்மா பக்கம் போய், கையிரண்டையும் நீட்டினான். அந்தக் குழந்தையும், சித்தப்பா பக்கமாய்த் தாவியது. இளைய மகனிடம், பேரப் பிள்ளை பத்திரமாக இருப்பான் என்ற நம்பிக்கையில், சீனியம்மா குழந்தையை சரித்தாள். தோளுக்குள் வந்த குழந்தையின் முதுகை சிறிது நேரம் தட்டிக் கொடுத்த பலராமன், பின்னர்

அந்தப் பிள்ளையை, அண்ணனிடம் ஒப்படைத்தான். இப்போது குழல்வாய் மொழிக்கே கோபம் வந்தது.

''வாங்கப்பா... இவன் கழுத்தப் பிடிச்சி தள்ளு முன்னாலயே, நாம போயிடலாம்''

சுப்பையா, கீழே குதித்தார். பலராமன் கன்னத்திலும் கழுத்திலும் மாறி மாறி அடித்தார். ''சண்டாளப் பயலே... அவங்க போறதுக்கு சாக்கு கொடுத் திட்டியேடா... சாக்காய் ஆயிட்டியேடா' என்று அரற்றினார். இதையே ஒரு துக்கப் பின்னணியாக அனுமானித்து, ஆறுமுக நயினார் நடக்க நடக்க, கமலநாதனும், குழல்வாய்மொழியும் நகர்ந்தார்கள். என்னமோ நடக்குது என்பது மாதிரி திண்ணைத் தூணில் உடல் சாய்த்து நின்ற கலைவாணி, முற்றத்திற்கு தாவினாள். ஆறுமுக நயினார் முன்னால் வழி மறிப்பது போல் நின்றாள். பிறகு, தரையில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து, அண்ணனின் மாமனாரை சுமக்கும் கால்களை கட்டிப் பிடித்தபடியே புலம்பினாள்.

''இன்னைக்கி ஒரு ராத்திரி மட்டும் டயம் கொடுங்க மாமா... நான் நாளைக்கு காலையிலேயே போயிடுறேன் மாமா... நானும் மனுஷிதான் மாமா... ரத்தம் தவிர வேறு எந்த வழியிலும் இந்த நோய் பரவாது மாமா... அதனாலதான் இங்கே இருந்தேன் மாமா... இப்போ புத்தி வந்துட்டு மாமா... ஒரே ஒரு ராத்திரி மட்டும், என் அண்ணன் தம்பி வீட்ல இருக்க அனுமதி கொடுங்க மாமா...''

கமலநாதனாலயே தாள முடியவில்லை. தங்கையைத் தூக்கி விட்டான். அவனுக்கு, அவள் போய்விடுவாள் என்பதில் பாதி சந்தோஷம்; அப்படிப் போகிறாளே என்பதில், மீதி வருத்தம்... ஒரு ஆட்டை அறுக்கும் போது வருந்தினாலும், அதை மஞ்சள் மசாலாவோடு தின்னும் போது சந்தோஷப் படுகிறோமே, அப்படிப்பட்ட துக்கம்... மகிழ்ச்சி அவனுக்கு...

ஆறுமுக நயினாரே, இப்போது கலைவாணிக்குப் போகும் இடத்தை சொல்லிக் கொடுத்தார்.

''வேற எங்கேயும் போக வேண்டாம்மா... ஒன்னை இந்தக் கதிக்கு கொண்டு வந்தவன், வீட்டுக்குப் போ... அங்கே இருக்கவங்க தடுத்தால், ஊர்ப்பஞ்சாயத்த கூட்டுவோம்... என்ன மச்சான்... நான் சொல்றது''

சுப்பையா, எதுவும் பேசவில்லை... அறையை நோக்கி நடந்த கலை வாணியைக் கட்டியணைத்து, விம்மினார்... ''பாவிப்பய மகளே இந்த வீட்ல பிறக்கறதுக்குப் பதிலாய், வேறு எந்த வீட்லயாவது பிறக்கப்படாதா?' என்று

சரஞ்சரமாய்க் கண்ணீர் விட்டார். தந்தையை மெள்ள விலக்கியபடியே, கலைவாணி. தனது அறைக்குள் வந்தாள். கட்டிலில் முகம் புதைத்தாள். கால்களைப் பரப்பிக் கொண்டாள். கரங்களை விரித்துக் கொண்டாள். எங்கே போவது... யாரிடம் போவது.. பெரியம்மா மகன் மோகன்ராம் வீட்டுக்குப் போகலாமா? அவன் மனைவி அசல் பிடாரியாச்சே... என் தம்பி கசக்குது... நான் மட்டும் இனிக்குதோ என்று கேட்டாலும் கேட்பாளே...? அவளும் அந்த துரோகி மனோகரின் அக்காதானே!

கலைவாணி, விடை கிடைக்காமல், குழம்பினாள். நோக்கும் திசையெல் லாம் அடைப்பு... பார்க்கும் இடமெல்லாம் பழிப்பு... படுக்கக் கூட இடம் வேண்டாம். இருக்கக் கூட இடமில்லாமல் போய்விட்டதே!

இதற்குள், வெளியே பேச்சுக்குரல் கேட்டது... உள்ளூர் விவேகிகளில் மூன்று பேரும், புதுப்பணக்காரரான ஆனந்தியின் தந்தை பெரியசாமியும் வந்திருப்பது, கலைவாணிக்கு தெரிந்து விட்டது. சுற்றி வளைத்தபேச்சு... இடையிடையே சுருக்கென்று குத்தும் சமாத்காரம்...

''சுப்பையா... மாப்பிள்ளை தப்பாய் நினைக்கப்படாது.. கலைவாணி... எங்களுக்கும் மகள்தான்... ஆனாலும் ஊர் வாழணும்... நாளைக்கே ஒம்ம மகனுக்கு ஒரு கட்டி வருதுன்னு ஒரு பேச்சுக்கு வச்சுக்குவோம்... அது வேனல் கட்டியாக் கூட இருக்கலாம். ஆனாலும் ஒம்ம மகன், அந்தப் பாழாப்போன நோயா இருக்குமோன்னு பயப்படுவான். கூடப்பிறந்த தங்கச்சி உடன் பிறந்தே கொல்லும் நோயாளி ஆயிட்டாளேன்னு ஆத்திரப்படுவான்''

''அப்போ... அவளை ராத்திரியோட ராத்திரியா கொன்னு போடட்டுமா?''

''இப்படி எடக்கு மடக்காப் பேசினால் எப்படி, சுப்பையா? நிலைமையை யோசித்துப் பாரும்... யோகம் பட்டில... இப்படி ஒரு நோய் பிடிச்சவன ஊர் ஜனங்க விரட்டி அடிச்சாங்களாம்... நாங்க அப்படியா சொல்லுறோம்... ஊருக்கு புறம்பா இருக்கிற சௌக்குத் தோப்பு பக்கமாய் ஒங்க தோட்டம் இருக்குதே... அதில் ஒரு குடிசபோட்டு கொடும்... சாப்பாடு சௌகரியமுல்லாம் செய்து கொடும்... வேண்டான்னா சொல்றோம்''

''அழுவுறதுல... அர்த்தமில்ல... சுப்பையா... தலையிலே அன்றைக்கு எழுதுனதை அடிச்சி எழுத முடியாது''

''நான் பெத்த பெண்ணாச்சே... ஒங்க பொண்ணுன்னா இப்படி பேசுவீங்களா...?''

''சாபம் போடாதே... சீனியம்மா... நம்ம ஊருல யாருடைய மகனோ மகளோ, செத்திட்டான்னு வச்சிக்கோ... அகால மரணமா ஆயிட்டுன்னு வைச்சுக்குவோம்; அழுவோம்... புரளுவோம்... ஆனாலும், செத்தவன் கூட நாம சாவோமா? மாட்டோம்; செத்துப் போனவங்களுக்கு துணி எடுத்து கும்பிடறோம். திவசம் வைக்கோம். அவங்க சமாதியிலே வெள்ளை அடிக்கோம்... பூமாலை போடுறோம்... அதே சமயத்தில், செத்துப் போனவள் வீட்டுக்குப் பேயாய் வந்தால், என்ன செய்யுறோம்? அந்தப் பேயை விரட்டுறதுக்கு, மந்திரவாதியைப் பார்க்கலியா... யந்திர மந்திரம் செய்ய லியா? எவள் செத்ததுக்காக அழுது புலம்புறோமோ... அவள் பேயாய் வந்து குடும்பத்தை பிடிச்சால், அந்தப் பேய்க்கு கையிலே விலங்கு... கால் விலங்கு போடலியா?'

இன்னொருத்தர்,அந்த யதார்த்தத்தை உபதேசமாக்கினார்... ''கலைவாணி யோட கோளாற இப்படித்தான் எடுத்துக்கணும்... நாங்க ஒங்க மகளைத் தள்ளி வைக்கல. அவளோட நோயைத்தான் தள்ளி வைக்கோம். பாலைப் பார்க்கிறதா.. பால் காய்த்த பானையைப் பார்க்கிறதா என்கிறது பழமொழி... இதே மாதிரி, விஷத்தைப் பார்க்கிறதா... விஷம் இருக்கிற தங்கக் கிண்ணத்த பார்க்கிறதா? தங்க ஊசி என்கிறதுக்காக கண்ணிலே குத்திக்க முடியுமா... என்ன சொல்றே சுப்பையா''

கலைவாணியின் காதுகளில் மேற்கொண்டு எந்தப் பேச்சும் விழ வில்லை. அப்பா... பதில் சொன்னாரோ... சொல்லவில்லையோ, கேட்க வில்லை.... காதுகள் மரத்துப் போன காரணமா... இந்த மனிதர்கள் வேறு வகையான எய்ட்ஸ் கிருமிகளாகிவிட்ட விரக்தியா... எந்த ஊருக்காக உழைத்தாளோ... அந்த ஊர்ப் பேச்சை இன்னும் கேட்கணுமா... எந்த ஊர் மண்ணை மஞ்சள் குங்குமமாக நினைத்தாளோ, அந்த ஊர் இப்படி தனக்கு இழவெடுப்பதை பார்த்துக் கொண்டு இருக்கணுமா... பலராமன் கூட ஊமையாகிவிட்டானே... இந்த ஊரில் இருந்தாலும், இந்த வீட்டில் இருக்கக் கூடாது. இந்த வீட்டில் இருந்தாலும், இந்த ஊரில் இருக்கப்படாது... ஊரும் வேண்டாம்... உறவும் வேண்டாம்... எங்கேயாவது போய்த் தொலயணும்... எங்கே... எங்கே?

கலைவாணி அல்லாடினாள்; உயிருக்கு உடலே சிறையானது. இந்த உயிரைப் போகவும் விடாமல், இருக்கவும் விடாமல் அதற்கு விலங்கு போட்டுவிட்டது. இயலாமை உணர்வுக்கும், எதிர்பாராத அதிர்ச்சியின் அலைகளுக்கும் மனமே புற்றானது... அவளுள் ஒரு வேகம்... உள்ளே இருக்கும் இந்த எய்ட்ஸ் கிருமிகள், மற்ற கிருமிகளைப் போல் தாக்கப்பட்டவர் செத்த பிறகும் வர்ழக் கூடியவை அல்ல... நோயாளி சாகும்

போது, அந்த நோயாளியுடன் உடன் கட்டை ஏறுகிறவை... இப்போதே ஏன் உடம்பை கொளுத்தி அந்தக் கிருமிகளையும் எரிக்கப்படாது? அய்யோ முடியலியே... முடியலியே...

சீனியம்மா, உள்ளே வந்தாள். மகளைக் கட்டிப் பிடிக்காமல், ஒரு மூலையில் மரத்துப் போய்கிடந்தாள். அவ்வப்போது, அய்யோ அய்யய்யோ என்ற சத்தம்...

கலைவாணி, கட்டிலில் இருந்து எழுந்தாள்... அம்மாவின் காலை எடுத்து நீட்டினாள்... அவள் மடியில் படுத்தாள். கைகளைப் பின்பக்கமாய்க் கொண்டு போய், அம்மாவின் முதுகை வளைத்துப் பிடித்தாள். ஐந்து வயதுச் சிறுமியாக, அம்மாவை எப்படி பிடிப்பாளோ அப்படி பிடித்தாள். அதே குழந்தைக் குரலோடு பேசினாள்.

''எம்மா, இந்த வீட்டைவிட்டு... போறது கூட எனக்கு பெரிசில்லம்மா. ஆனால் கடைசியாய் ஒன் மடியிலே படுத்து உயிர் விடணும் என்கிற ஆசை யிலே மண் விழுந்ததை நினைச்சால்தான், மனசு கேக்கமாட்டேங்கும்மா...''

''என் கண்ணே... என் ராசாத்தி... ஒன்னை வீட்டை விட்டு அனுப்ப மாட்டேண்டி... தனியாய் அனுப்ப மாட்டேண்டி... நீ எங்கல்லாம் போறியோ அங்கெல்லாம் வருவேண்டி...''

கலைவாணியின் உடல் பஞ்சானது, உண்மை நெருப்பானது. அம்மா வால் கூட, போக வேண்டாம், போகப்படாதுன்னு சொல்ல முடியல. இதுக் கல்லாம் காரணம் தொலைவாய் இருக்கிற மனோகர், பக்கத்திலயே இருக்கிற டாக்டர் சந்திரா... நாளைக்கே சந்திராவைப் பார்க்கணும்... ஒரே வெட்டாய் வெட்டணும்... அப்புறம் ஜெயில்... இருக்கவும் படுக்கவும் ஏற்ற இடம்... மணி அடித்தால் சோறு , முடி முளைத்தால் மொட்டை...

கலைவாணி. இப்போது அழவில்லை. அம்மாவின் முதுகைத் தட்டிக் கொடுத்து, அவளை தன் மடியிலே போட்டுக் கொண்டாள். மகள், அம்மாவானாள். அம்மா, மகளானாள்...

20

டாக்டர் சந்திராவால், ஒய்வு நாளிலும் ஒய்ந்திருக்க முடியவில்லை... இரண்டு நாளாக 'பிரெஞ்ச்' விடுமுறையில் போன டாக்டர் முஸ்தபா, அன்றைக்கும் வரவில்லை. நோயாளிகளில் விபரம் தெரிந்த ஒரு சிலர், உரிமையோடு வீட்டுக்கே வந்துவிட்டார்கள்... அவளுக்கு, வீட்டில் இருக்க முடியவில்லை.. 'கண்ணை மூடிட்டு இருந்துக்கோ' என்று அம்மா சொன்னாள்... அப்படியே கண்ணை மூடினாலும், இந்த சுகாதார நிலையமும், நோயாளிகளும் விழிகளைத் திறந்தார்கள். மூடும் போதெல்லாம், கண்ணுக்கும், இமைகளுக்கும் இடையே நின்றார்கள்.

சந்திரா சுறுசுறுப்பாய் இயங்கினாள். முஸ்தபா வருகிறாரா என்று அடிக்கடி வெளியே எட்டிப் பார்த்தாள். டாக்டர் அசோகனை, மத்தியானச் சாப்பாட்டிற்குக் கூப்பிட்டு இருக்கிறாள். அவனும் இவள் நிலைமையை தெரிந்து வைத்திருப்பவன் போல், 'கேரியர்ல... சாப்பாடு எடுத்துட்டு ஒங்க வீட்டுக்கு வாறேன்' என்று அவர் புத்தியைக் காட்டிட்டார். அந்த புத்தியிலும் ஒரு புத்திசாலித்தனம் இருப்பது இப்போது புரிகிறது...

சந்திரா, நோயாளிக் கூட்டத்தை வெறுப்போடு பார்க்கவில்லை என்றாலும், சலிப்போடு பார்த்தாள். நல்லவேளையாக கூட்டம் அதிகமாக இல்லை; ஆயாக்களும் முஸ்தபாவும் விரட்டுற விரட்டலில், பாதிப்பேர் வருவதில்லை. இந்தப் பகுதியில், ஆரோக்கியம் அதிகரித்து விட்டதாக மேலதிகாரிகள் எடுத்துக் கொள்வார்கள்... பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவுமோ... இல்லையோ... புள்ளிக் கணக்கு, பப்ளிக்குக்கு உதவாது...

சந்திரா, ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு கைநாடி பார்த்தபோது, ஒருத்தர்

அல்லோகலோல்லமாய் ஓடிவந்தார். நாற்பது வயதிருக்கலாம்... வெளிப்படை யாக ஆரோக்கியமானவராய் தான் தெரிந்தார். பல ரத்ததான முகாம்களில் இவரைப் பார்த்திருக்கிறாள். பரோபகாரி என்று நினைத் திருந்தாள். அப்புறந்தான் குட்டு வெளிப்பட்டது.

''என்ன... குணசீலன், வேள கெட்ட வேளையில வந்து...''

''நான்... வாரது எப்பவுமே நல்ல வேளைதாம்மா... என்னோட ரத்தம் 'ஓ' குரூப் ரத்தம்மா... அதுவும் நெகட்டிவ்ம்மா... அபூர்வமான வகைம்மா... ஒரு பாட்டில் ரத்தத்தை எடுத்துட்டு... முந்நூறு ரூபாய் இருந்தால் கொடுங் கம்மா... 'ஓ' குருப் நெகட்டிவ்...''

''புளிச்சுப் போன பேச்சையே பேசாதீங்க மிஸ்டர்... ஒங்க ரத்தம் யாருக்கும் பயன்படாது... மொதல்ல வெளில போங்க... பேஷண்ட் பார்க்கிற நேரம்...''

''இந்தா பாரும்மா... போகச் சொல்லுங்க போறேன்... அதுக்காக என் ரத்தம் பிரயோசனப் படாதுன்னு மட்டும் சொல்லாதீங்க... டாக்டர் சுமதியே என் கிட்டத்தான் வாங்குவாங்க... அடுத்தவாரம் வரச்சொல்லி இருக்காங்க... போகட்டும்... ஒரு ஐம்பது ரூபாயாவது கொடுங்க... அடுத்தவாரம் சுமதி அம்மா கிட்டே ரத்தம் விற்று...''

''ஒரு பைசா தரமாட்டேன்... போகப் போறியா... இல்லையா...''

இப்போது,நோயாளிப் பெண்களில் ஒரு சிலர் எழுந்தார்கள். குணசீலனை நாயே பேயே என்று திட்டினார்கள். சத்தம் கேட்டு உள்ளே வந்த கம்பவுண்டர், குணசீலனை அதட்டுவதுபோல் பாவலா செய்து கொண்டே, அந்த ஆசாமியை இழுத்துப் பிடித்து, நடத்திக் கொண்டே, அவர் காதுகளில் கிசுகிசுத்தபடியே நகர்ந்தார். சந்திரா துணுக்குற்றாள்... அதோ போகிற குணசீலன், ஒரு எதிர்கால எய்ட்ஸ் நோயாளி... மாவட்ட மருத்துவமனை யில், ரத்தம் எடுத்தபோது கண்டுபிடிக்கப்பட்டது.... இது டாக்டர் சுமதிக்கும் தெரியும்... அப்படியும் இந்த ஆசாமியை வரச் சொல்லி இருக்காள்... ஒருவேளை சாக்குப் போக்காக, இருக்கலாமோ... இருக்காது. அந்த பட்டுச்சேலை டாக்டருக்கு இதுதான் வேலையே... இந்த சுமதி கண்ணுக்கு தெரிந்த விஸ்வரூபம் எடுத்த எய்ட்ஸ் கிருமி... ஆனால் இப்போது இவள் காட்டில்தான் மழை... இதுல விழுகிற ஐஸ்கட்டியை பொறுக்கி எடுத்து... ஆனானப்பட்ட டாக்டர்... அசோகன் தலையிலேயே வைக்கிறவள். சொன்னால், பெண்ணுக்குப் பெண் பொறாமை... டாக்டருக்கு டாக்டர் சண்டை என்பார்கள். இந்த குணசீலனால், எத்தனை அப்பாவிகளுக்கு

எய்ட்ஸ் வந்ததோ... வரப்போகுதோ... என்னால்... செய்யுறதுக்கு எதுவுமே இல்லை.'

இந்த மனித சஞ்சாரத்தில், தான், அவ்வளவாய் முக்கியமில்லை என்பதை சந்திரா கசப்பு மாத்திரையாய் விழுங்கினாள். எப்படியோ எல்லா நோயாளிகளையும் ஒரு வழியாய் அனுப்பிவிட்டு, அசோகனை வீட்டில் வரவேற்பதற்காக, அவள் புறப்பட்டபோது...

கலைவாணி உள்ளே வந்தாள்; விரிந்த குழல்; கலைந்த உடை... சிவப்பேறிய கண்கள்... வெறுமையான பார்வை...

டாக்டர் சந்திரா, பயந்துவிட்டாள். இவள், சென்னையில் போட்ட போட்டுக்கே, இன்னமும் பிராக்ஸுவான் மாத்திரைகளை விழுங்கி வருகிறாள். இப்போ என்ன செய்யப் போறாளோ...

''உட்காரும்மா...''

''நான் உட்கார வர்ல... படுக்க வந்தேன்''

''மொதல்ல உட்காரும்மா...''

''எனக்கு மூணு மாசம், அபார்சன் செய்யணும்''

''கண்டிப்பாய் செய்யுறேன்... கலைவாணி... இது... மேன்படுத்தப்பட்ட சுகாதார நிலையந்தானே... அதுக்கு இங்கேயே வசதி இருக்குது... உட்காரும்மா...''

ஒருவாரம் இருக்கவும் படுக்கவும் இடம் கிடைத்த ஆறுதலில், கலைவாணி, சந்திராவைப் பார்த்தாள். லேசான புன்னகை... அவஸ்தைப்படும் நோயாளியிடம் சீக்கிரமாய் செத்துடுவே என்றால் எப்படி ஒரு புன்னகை வருமோ, அப்படி...

டாக்டர் சந்திரா, கலைவாணியின் தோளைத் தொட்டு, ஒரு நாற்காலியில் உட்கார வைத்தாள். இன்னும் பயம் போகவில்லை. கலைவாணியின் பார்வை அப்படி. மன உறுத்தலும் குறையவில்லை.

''இந்தா பாரும்மா... நான் வேணுமுன்னு அப்படி மறைக்கல. ஒன் புருஷனோட மச்சானாமே... மோகன்ராம்... அவன் மனோகரோட வந்து மிரட்டுன மிரட்டலுல பயந்திட்டேன். ராத்திரியோட ராத்திரியாய் தூக்கிட்டுப் போகப் போறதாய் வேற எச்சரித்தார். தனக்குப் போகத்தான் தானமோ... இல்லியோ, தன் உயிருக்குப் பிறகுதானம்மா, பிறத்தியார் உயிரு... சரி... ஒரு வாரம் ஒன்றாவே இருக்கப் போறோம்... விபரமா சொல்றேன்... அதுக்குப்

பிறகு என்னைக் குத்துவியோ... வெட்டுவியோ... ஒன் இஷ்டம்''

கலைவாணி, நாற்காலிமேல் உட்கார்ந்த சடமானாள். மூச்சு விடுவது கூட மறந்தவள் போல், அந்த நாற்காலியில் புதுமையான மெத்தை போல் கிடந்தாள். சந்திரா, அவள் தோளைப் பிடித்து உலுக்கியபிறகே, அவள் கண் விழித்தாள். மோகன்ராமே! என் அம்மா கூடப் பிறந்த பெரியம்மா மகனே! நீயுமா அண்ணா? நீயுமாடா...?'

இரண்டு நிமிட இடைவெளிக்குப் பிறகு, சந்திரா கேட்டாள்.

''அபார்ஷன் செய்ய நான் தயார். அது தேவையா என்கிறது தான் கேள்வி. ஏன்னா... ஒன் குழந்தைக்கு ஹெச்.ஐ.வி. இருக்கணும் என்கிற அவசியம் இல்ல... ஒரு சில எய்ட்ஸ் நோயாளியோட குழந்தைகளுக்கு இந்தக் கிருமிகளே இல்லை''

''கேட்கிறதுக்கு... சந்தோஷமாத்தான் இருக்கு... அந்த துரோகிப்பயல் கொடுத்த பிள்ளைன்னு நான் அபார்ஷனுக்கு வர்ல... என் பிள்ளை என் பிள்ளைதான். அதுவும் முதலும் கடைசியுமான பிள்ளை!''

''இப்படித்தான் பாசிட்டிவா... எடுக்கணும்...!''

''அதுதான்... எல்லாருமா சேர்ந்து என்னை பாசிட்டிவ்வாய் ஆக்கிட்டீங்களே... ஒழியட்டும்... என் குழந்தைக்கு அது இருக்குதா...? இல்லியான்னு இப்பவே கண்டுபிடிக்க முடியுமா?''

''முடியாதும்மா... குழந்தை பிறந்த பிறகுதான் டெஸ்ட் செய்ய முடியும்... அப்படியே இருக்கிறதாய் தெரிஞ்சாலும், அது எய்ட்ஸ் கிருமின்னும் நிச்சயமாய் சொல்ல முடியாது... ஏன்னா ஹெச்.ஐ.வி. கிருமிகளை முறியடிக்க நம் ரத்தத்திலேயே ஆன்டி பாடி என்கிற எதிரணுக்கள் உற்பத்தி ஆகுது. இந்த எதிரணுக்கள் தாயிடமிருந்து... குழந்தைக்கும் கூடவே வருது... இது பதினைந்து மாதம் வரை, குழந்தை உடம்பிலே இருந்துட்டு, அப்புறம் மறைஞ்சிடும்... எதிரணுக்கள் இருக்கிறதாலயே அது எய்ட்ஸா ஆகிடாது. பதினைந்து மாதத்துக்கு பிறகும் குழந்தை உடம்பிலே எதிரணுக்கள் இருந்தால், அது ஹெச்.ஐ.வி. - நான் சொல்றது புரியுதாம்மா!''

''புரிய வேண்டாத அளவுக்கே புரியுது டாக்டர். ஒண்ணேகால், வருஷத்துக்குப் பிறகுதான்... என் குழந்தை இருக்குமா... போகுமான்னு தெரியும். அதுவரைக்கும், நான் உயிரை கையில பிடிச்சிட்டு இருக்கணும்... அப்படியே அதுக்கு இல்லன்னு தெரிந்தாலும், யாரும் நம்பமாட்டாங்க. அப்படியே நம்பினாலும், அந்தக் குழந்தை பத்து வருஷத்தில அநாதையாயிடும்... அதனால...''

''சரிம்மா... அபார்ஷன் செய்திடலாம்... மாலதி... மாலதி...''

கொண்டைக்கு உறைபோல, வெள்ளைத் துணி கட்டிய ஒரு இளம் பெண் நிதானமாக நடந்தாள். என்னம்மா என்று கேட்டுக் கொண்டே வந்தாள். இந்த சந்திரா, இப்போதே சொல்லிவிட்டால் அவள் பக்கத்தில் போக வேண்டிய நடைமிச்சமாச்சே...!

மாலதி வருவது வரைக்கும் வாயைத் திறக்காத சந்திரா, வந்ததும் சொன்னாள்.

''இவங்க பேரு... கலைவாணி... மூன்று மாசம்... அபார்ஷன் செய்யணும்... ஒரு பெட்ட ரெடி பண்ணுங்க...''

''அனஸ்தட்டிஸ்ட் இல்லியே டாக்டர்''

''அதை நான்... பார்த்துக்கிறேன்... மாவட்ட மருத்துவமனையில் இருந்து வரைவழைக்கலாம்... இது குடும்ப நலத் திட்டத்தோட புள்ளிக் கணக்கிலே ஒண்ணு கூடுமுன்னு, அனஸ்தடிஸ்டை அனுப்பி வைப்பாங்க... இன்னிக்கும், நாளைக்கும் இவங்க ரெஸ்ட் எடுத்துக்கட்டும்.புதன் கிழமை அபார்ஷன்''

நர்ஸம்மாவான மாலதி, கலைவாணியை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். தலையை ஆட்டி ஆட்டிப் பார்த்தாள். சந்தேகப்படும்படியாய் பார்த்துவிட்டு, சந்தேகத்தைக் கேட்டாள்.

''இவங்க... வெள்ளையன் பட்டிதானே டாக்டர்''

''வெள்ளையன் பட்டியோ, கறுப்பன் பட்டியோ, எந்தப் பட்டியாய் இருந்தா என்ன சிஸ்டர்?... சீக்கிரமா பெட்ட ரெடி பண்ணுங்க... எனக்கு வீட்டுல தலைக்கு மேல வேலை...''

மாலதி, பிட்டம் குலுங்க நடந்தாள். யாரிடமாவது சொல்லா விட்டால், தலை வெடித்துவிடும் போல் இருந்ததால், ஓட்டமும் நடையுமாக போனாள்.

இதற்குள், டாக்டர் சந்திரா, கலைவாணியிடம் நடந்த சங்கதிகளை ஒன்று விடாமல் ஒப்பித்துக் கொண்டிருந்தாள். இருபது நிமிடத்திற்கு மேல் ஆகியிருக்கும். அப்படியும் மாலதி வந்து ரெடிபடுத்தியதைச் சொல்ல வில்லை. தானே போய், ஒரு பெட்டை ஆயத்தப்படுத்துவதற்காக சந்திரா நினைத்த போது...

டாக்டர் முஸ்தபா எதிர்பட்டார். 'ஒப்புக்காவது, ஐயாம் ஸாரி' என்று கையாட்டிக் கொண்டே வருகிறவர், பல்லைக் கடித்தபடியே வந்தார். பக்கத்து

நாற்காலியில் உட்கார்ந்த கலைவாணியைப் பாராததுபோல் பார்த்தபடியே, மேஜையைச்சுற்றி வந்து தனது நாற்காலியில் உட்கார்ந்தார். ரேக்கில் பேப்பர் வெயிட்டுக்குக் கீழே இருந்த இரண்டு நாள் விடுப்பு விடுமுறை விண்ணப்பத்தை சுக்கு நூறாக்கினார். அவர் எடுத்த வேகத்தில், பேப்பர் வெயிட் கீழே விழுந்து உருண்டு ஓடியது. சந்திராவும் அவரைக் கண்டுகொள்ளவில்லை... மாலதியையும் காணவில்லை. படுக்கையை ரெடி செய்வதற்காக, அவள் எழுந்த போது, டாக்டர் முஸ்தபா, அவளைப் பார்க்காமல், கடுகடுப்பாய்ச் சொன்னார். கலைவாணியைப் பார்த்து திடுக்கிட்டபடியே டாக்டர் சந்திராவிடம், எரிச்சலோடு சொன்னார்...

''நீங்க போகலாம் டாக்டர்...''

''போகத்தான் போறேன்... அதுக்கு முன்னால ஒரு வேலை இருக்குது''

''என்ன வேலை''

''மாலதி சொல்லி இருப்பாளே''

''ஆமா... கேள்விப்பட்டேன்... ஒரு எய்ட்ஸ் நோயாளிக்கு எப்படி இங்கே அபார்ஷன் செய்யலாம்?''

''ஒரு சின்ன கரெக்ஷன்... இவங்க எய்ட்ஸ் நோயாளியாய் இன்னும் ஆகல... ஒங்களாலயும், என்னாலயும் ஹெச்.ஐ.வி. நோயாளியா ஆக்கப்பட்டவங்க''

''அதிகப் பிரசங்கித்தனம் வேண்டாம். ஒரு எய்ட்ஸ் நோயாளிக்கு ஆபரேஷன் செய்ய முடியாது.''

''ஆபரேஷன் இல்ல... அபார்ஷன்... ஒரு பெண், தனக்கு குழந்தை வேண்டாமுன்னு சொல்லும் போது, அதை நிறைவேற்றாமல் இருப்பது சட்டப்படியான குற்றம்''

டாக்டர் முஸ்தபா எழுந்துவிட்டார். வீறாப்பாய் அவர் பேச, வீம்பாய் இவள் பதிலளிக்க, ஊழியர்களில் அன்று வந்திருந்த கால்வாசிப்பேர் அங்கே கூடிவிட்டார்கள்.

''இங்கே அபார்ஷன் செய்து, இவங்களுக்கு ஏற்படுற ரத்தப் போக்குல, ஒங்களுக்கும், எனக்கும் இங்கே இருக்கிற எல்லாருக்கும் எய்ட்ஸ் பரவணுமா?''

''நீங்கள்லாம்... ஒரு டாக்டரா மிஸ்டர் முஸ்தபா... ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே வேலை பார்க்கிற டாக்டருங்களுக்கு, மூளை

போயிடுமுன்னு ஆஸ்பத்திரி டாக்டருங்க சொல்றது சரியாத்தான் இருக்கு''

''எனக்கு மூள இல்லங்கறியா?''

''நீ நான்னு எனக்கும் பேசத் தெரியும் டாக்டர்... அபார்ஷன் செய்யும் போது... இரண்டு கையிலயும், உறைகளை போடுறோம்; முகத்தையும் மூடிக்கிறோம். இதையும் மீறி ஆண்டி செப்டிக்ல கையைக் கழுவுறோம். வெளியில கால்மணிநேரம் கூட வாழ முடியாத கிருமி. ஹெச்.ஐ.வி. கிருமி; அதுங்க உடனே செத்துடும். இந்த ஆரம்ப பாடம் ஒரு டாக்டருக்கு நிச்சயம் தெரிந்திருக்கணும்...''

''என்ன ஆனாலும் சரி... நான் இதை அனுமதிக்க முடியாது''

''ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்தால்...''

டாக்டர் சந்திரா, அப்படிச் சொல்லிவிட்டு, நாக்கைக் கடித்தாள். இதற்குள் குத்த வேண்டிய இடத்தில் குத்துப்பட்டதால், முஸ்தபா வலி பொறுக்க முடியாமல் கத்தினார். வார்த்தைகள் வராமலே பிடிபட்ட பன்றி மாதிரி கத்தினார். கம்பவுண்டர் அவரைப் பிடித்துக் கொண்டே, சந்திராவை பயமுறுத்துவது போல் பார்த்தார். உடனே அவள் பார்த்த 'இரண்டில் ஒன்று' மாதிரியான பார்வையில், பயந்து போனார்... பக்குவமாய்க் கேட்டார்.

''டாக்டர்... அய்யா சொல்றதிலயும், ஒரு அர்த்தம் இருக்குங்கம்மா. இவங்களை கடிக்கிற கொசுவோ... மூட்டைப் பூச்சியோ, எல்லாரையும் கடிக்கும்... அப்போ இவங்க உடம்பு ரத்தம்... நம்ம உடம்புக்கு வருமே... இதுக்கு என்ன சொல்றீங்க?''

''அரைகுறை அறிவு ஆபத்து சார்... அரைக்கிணறு தாண்டுறது மாதிரி... கொசுவுக்கோ மூட்டைப் பூச்சிக்கோ... ஒருத்தரோட ரத்தத்தை எடுக்க தெரியுமே தவிர, கொடுக்கத் தெரியாது... ரத்தத்தை இதுங்க உள்வாங்குமே தவிர, வெளிப்படுத்தாது...''

''அப்போ... மலேரியா எப்படி வருதாம்? கொசுதானே அதற்கு காரணம்!''

''நல்லா கேட்டிங்க... மலேரியா நோய்க்கு காரணமான ஒரு வகை கொசுக்களோட உமிழ்நீரில் பிளாஸ்மோடியம் என்கிற மலேரிய ஒட்டுண்ணி இருக்குது. கொசு ஒருத்தரை கடிக்கு முன்னால, அவர் உடம்பிலே துப்பிட்டு அப்புறந்தான் கடிக்குது. அந்த ஒட்டை வழியா இந்த எச்சியில் இருக்கிற ஒட்டுண்ணிங்க... கடிப்பட்டவர் உடம்புக்கு உள்ளே போயிடுது. சரி... கொசு கடிச்சு அதோட ரத்தம் நம்ம உடம்புக்குள்ளே போகாதுதான்... அதே சமயம், எய்ட்ஸ் நோயாளியை கடித்த அந்தக் கொசுவோ மூட்டைப் பூச்சோ

இன்னொருத்தரை கடிக்கும் போது, அவரு அதை நசுக்கி இதனால அவரோட உடம்புக்குள், ரத்தத்தில் இந்த கொசு ரத்தம் கலந்து, எய்ட்ஸ் கிருமி போகலாமேன்னு ஒரு சந்தேகம் வந்து, இதையும் ஆராய்ச்சி செய்தாங்க. அப்படி ஏதும் இல்ல... காரணம் எய்ட்ஸ் கிருமி மனித உடம்பு ரத்தத்தில மட்டுமே உயிர் வாழும். கொசு வயித்துக்குள்ளே போன உடனேயே செத்துடும். ஒரு கம்ப்யூட்டர் எஞ்சினியர், அந்தத் துறையில் நடக்கிறதை ஆறுமாதம் கவனிக்காவிட்டால், அவர் அவுட்டு... தொடர்ந்து படிக்காட்டால், தொலைஞ்சிடுவாங்க. ஆனால் நாங்க டாக்டருங்க... அப்படி இல்ல.. எங்க துறையில் என்ன நடக்குதுன்னு தெரியாமலே பிழைப்பை நடத்தலாம். ஊசி போட்டு போட்டே, ஊசிப் போயிட்டோம். தொடர் கல்வி என்கிறது டாக்டர்கள்கிட்ட கிடையாது... எய்ட்சுன்னா... உதவின்னு அர்த்தப்படுத்து வாங்க...''

கம்பவுண்டர் ஆசாமி, முழு டாக்டரானது போல் தலையை ஆட்டிய போது, முஸ்தபா, பேண்ட் நழுவும்படிக் கத்தினார்.

''என்ன ஆனாலும் சரி... இங்க அட்மிட் பண்ண அனுமதிக்க மாட்டேன். நான், இன்சார்ஜ் டாக்டர். பத்தாண்டு சர்வீஸ்... இங்கே இருக்கிற ஊழியர்களையும், நோயாளிகளையும், காப்பாற்ற வேண்டியது என்னோட கடமை... டூட்டி... ஆப்ளிகேஷன். ஒங்களை மாதிரி கத்துக்குட்டி டாக்டர் இல்ல... நான்''

''ஒங்க லட்சணம்... நல்லாவே தெரியும் டாக்டர்... மெட்ராசுக்கு போகிற அவசரத்தில் சண்முக வடிவுக்கு 'டுபெக்டமி' செய்யும் போது காப்பர்-டியை உள்ளே தள்ளிட்டிங்க... அவள் வயிறு வீங்கிச் செத்துப் போனது... இங்கே இருக்கிற எல்லாருக்குமே தெரியும்''

''யானைக்கும், அடி சறுக்கும்... ஆனால், ஒங்களை மாதிரி, டாக்டர்... அசோகனோட கூத்தடிக்கல...''

''கூத்தடிக்கேனா... கூத்தடிக்காரோ... கீழே வேலை செய்யும் பெண்களை, உருட்டி மிரட்டி, அசோகன் ஒண்ணும் அவங்களை கூத்தியாரா ஆக்கல...''

கற்பழிக்கும் போதே, கையும் களவுமாய் அகப்பட்டதுபோல், முஸ்தபா முண்டியடித்தார். கம்பவுண்டர், அவருக்கும் சந்திராவுக்கும் இடையே போய் நின்று கொண்டார். இன்சார்ஜ் டாக்டர் ஆவேசமாய் பேசினார்.

''நீ... ஒரு இன்சார்ஜ் டாக்டர் கிட்டே பேசிட்டு இருக்கே... என் அனுமதி இல்லாமல், எதுவும் நடக்காது. இவளை... அட்மிட் செய்ய முடியாதுன்னா முடியாதுதான்''

''அதையும்... பார்த்துடலாம்... நீங்க இன்சார்ஜ் என்கிறதாலயே, சர்வாதி காரியா ஆக முடியாது. நானும் ஒரு டாக்டர்... லீவ் லட்டரை கிழித்துப் போடாத டாக்டர்... மருத்துவ நிலைய மருந்தை பிரைவேட் பிராக்டிஸ்க்கு எடுத்துட்டுப் போகாதவள்.. ஏய்... மாலதி... பெட் ஏன் இன்னும் ரெடியாகலே...''

தொலைவில் நின்ற மாலதி, சண்டை நடக்கும் இடத்தை நோக்கி கோபக் கோழியாய் நடந்து வந்தாள். ஏழெட்டு நோயாளிகளைக் கூட்டி வந்தாள். இந்த மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தில், அவர்கள் உள் நோயாளிகள்... அவர்களைப் பார்த்ததும், பயந்து போன முஸ்தபா... மாலதி கண்ணடித்ததும், மதர்ப்பாய் நின்றார். சந்திரா, மாலதியின் போர் வியூகம் புரியாமலே நின்றாள். கலைவாணியோ, நாற்காலியில் பின்புறமாய் வளைந்து, கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

ஒரு பிரசவப் பெண், ஒரு மலேரியா மனிதர், ஒரு எஸ்.டி.டி. ஆசாமி உள்ளிட்ட பல நோயாளிகள், டாக்டர் சந்திராவையும், கலைவாணியையும் மாறி மாறிப் பார்த்துக் கூக்குரலிட்டார்கள்.

''என்னம்மா... நெனைச்சிக்கிட்டே? நாங்களும் இவளை மாதிரி ஆகணுமா? இது ஆஸ்பத்திரியா... இல்ல சுடுகாடா...? மொதல்ல எங்களை விரட்டிட்டு, அப்புறமாய் இவளை சேர்த்துக்கோ... ஒனக்கு எவ்வளவு கமிஷன் கொடுத்தாடி... வாங்க... பெரிய டாக்டர்... கிட்டே போவோம். அய்யோ இவள சேர்க்கணுமுன்னு சொல்றவள், நமக்கு மருந்துக்குப் பதிலாய் விஷத்தைக் கூட கொடுப்பாளே... நான் வீட்டுக்கு ஓடிப் போகப் போறேன்... சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போகாத போகாதே... அது ஆஸ்பத்திரி இல்ல.... அசல் கசாப்புக்கடைன்னு என் வீட்டுக்காரர் சொன்னது சரியாப் போச்சே''

பிரசவப் பெண், அங்கேயே பிள்ளை பெறப் போவதுபோல், கால்களை விரித்து வைத்துக் கொண்டு, தன் வாயிலும் வயிற்றிலும் அடித்தாள். மலேரியா மனிதரும், ஒரு பொம்பளை நோய்க்காரனும், இன்னொரு சிறுவனும், சந்திராவை, 'கேரோ' என்பதைக் கேள்விப்படாமலே சுற்றி வளைத்தார்கள். ஒரு நடுத்தர வயது மனிதர், அவளை அடிப்பதற்காக கையைக் கூட ஓங்கினார். சந்திரா கொடுத்த வைட்டமின் மாத்திரை, அப்படி அவரைத் துள்ள வைத்தது. இதற்குள் அப்போதுதான் வார்டில் இருந்து வந்த இரண்டு பெண்கள், கலைவாணியின் தலையைத் தூக்கி நிறுத்தி, 'இவளுக்குத்தான் புத்தியில்ல... உனக்கு எங்கேடி போயிட்டு? எங்களை கொல்றதுக் கின்னே வந்தியா... போடி... போய்த் தொலையடி?' என்றார்கள். இந்த அமளியிலும், அபார் ஷனுக்காக வந்திருக்கிற ஒரு இளம் பெண்ணும், காலில் கட்டுப்போட்ட ஒரு பெரியவரும் அமைதி காத்தார்கள். கலைவாணியைக் கருணையோடு

பார்த்தார்கள். பெரியவர் கேட்டார்.

''நன்றி கெட்டு... பேசாதீக... சனங்களா... சந்திராம்மா... நம்மை எப்படில்லாம் கவனிக்கிறாங்க... நாளைக்கு நமக்கு எதாவது ஆகுமுன்னா... இந்த பெண்ணை சேர்ப்பாங்களா'

''ஒனக்கென்ன... ஒனக்கு கட்டையில போற வயசு...''

அந்த நோயாளிக் கூட்டம், அந்தப் பெரியவரை அடிக்கப் போனது. இத்தனைக்கும் இடையே, சந்திராவுக்கு சிரிப்பு கூட வந்தது. ஏசுபிரான் சொன்னது போல், இவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே செய்கிறார்கள். இவர்களுக்கு ரட்சிப்பு உண்டு... இதோ இவர்களை ரசித்துப் பார்க்கும் இந்த முஸ்தபா பேடிக்கு... எதுவுமே இல்லை... நிர்வாணமா அலையக் கூட யோக்யதை இல்லாதவன்.

டாக்டர் சந்திரா, அந்த நோயாளி கூட்டத்திடம் போனாள்... 'சொல்வதைக் கேளுங்க...' என்று கத்தினாள். நோயாளிக் கூட்டம், லேசாய் அமைதிப்பட்டது. அவள் பேசுவதற்கு காது கொடுக்கப் போனது. அதற்குள், அந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மைய ஊழியர்கள் ஒன்று திரண்டார்கள். கம்பவுண்டர்..., கிளார்க்..., நர்சுகள்.., ஆயாக்கள், சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார பார்வையாளர்கள், இவர்களுக்கு தலைமை வகித்த மாலதி, இன்சார்ஜ் முஸ்தபாவிடம், தானைத் தலைவியாய் பேசினாள்.

''நாங்க குடும்பத்தோட இருக்கிறவங்க... டாக்டர். இந்த அம்மாவைப் போல தனிக்கட்டை இல்ல டாக்டர்... எங்களுக்கு குழந்தைங்க இருக்கு. புருஷன் பெண்டாட்டின்னு இருக்கு... நாங்க இங்கே சம்பளம் வாங்கதான் வேலை பார்க்கோமே.. தவிர எய்ட்ஸ் வாங்க இல்லே''

டாக்டர் முஸ்தபா, எல்லோரையும் கையமர்த்தினார். 'பொறுங்க' பொறுங்க... என்னை மீறி எதுவம் நடக்காது' என்றார். பிறகு சந்திராவைப் பார்த்து, இளக்காரமாகக் கேட்டார்.

''இப்போ, என்ன சொல்றீங்க... டாக்டர்... இதுக்குப் பிறகும், இந்தப் பெண்ணை சேர்க்கணுமுன்னு சொல்லப் போறீங்களா?''

டாக்டர் சந்திரா, கைகளைப் பிசைந்தாள். அதற்குள் கலைவாணி, முந்திவிட்டாள். அவள் வாய் கோணியது. பார்வை, சாய்வாகி கூர்மைப்பட்டது. கிழே கிடந்த பேப்பர் வெயிட்டை எடுத்துக் கொண்டு, பல்லைக் கடிக்க, கால் காலை உதைக்க, டாக்டர் முஸ்தபாவின் தலைக்குக் குறி வைத்தாள்.

21

டாக்டர் அசோகனைப் போலவே, அவன் மருத்துவமனையும் தனித்தும், தனித்தன்மையோடும் இருந்தது. மாடி இல்லாத ஒற்றைக் கட்டிடம். ஆனாலும், மேலே அவன் தங்குவதற்கான ஒரே ஒரு அறை. கீழே சத்திரம் சாவடி மாதிரி, அறை அறையாய்ச் செல்லும் பரந்து விரிந்த கட்டிடம். அதை இரண்டாகப் பிரிக்கும் அகலப் பாதை... முன்புறத்தில் இருந்து பின் புறத்தைப் பார்க்கலாம். ஆனாலும் அறைகளைப் பார்க்க முடியாது... சீருடை இல்லாத செவிலித்தாய்களான நர்ஸுகள்... காக்கிச்சட்டை போடாத பையன்கள்... 'டாக்டர்' என்பதற்குப் பதிலாக 'அண்ணா... அண்ணா... என்று கூப்பிடுகிறவர்கள்...

வரவேற்பு அறைக்கு எதிர்த்தார் போல் உள்ள முன் பக்க அறையில், 'எஸ்' வடிவ நாற்காலியில் உட்கார்ந்திருந்த டாக்டர் அசோகன், ஏங்கி ஏங்கி அழுத மோகன்ராமைப் பார்த்து எழுந்தே விட்டான். இப்படி, பல இளைஞர்கள் அவனிடம் 'விஷயம்' கேள்விப்பட்டு, அழுதிருக்கிறார்கள். ஆரம்பத்தில், அவர்களோடு சேர்ந்து அழுதவன்தான் இவன். ஆனால், மனம் மரத்துப் போனதோ... அல்லது பக்குவப்பட்டதோ, இப்போதெல்லாம் அழுவ தில்லை. ஆனால், அடியும் தலையும் ஆணித்தரமாய் உள்ள இந்த மோகன்ராம் அழுவதைப் பார்த்ததும்,அவன் கண்கள் நீர் சிந்தவில்லையானாலும், நீருக்குள் நின்றன.

நாற்காலியில் இருந்து எழுந்து போய், முக்காலியில் உட்கார்ந்தவரை அசோகன் தட்டிக் கொடுத்தான். மருந்து கொடுத்தால் ஏழு நாட்களிலும், மருந்தில்லாமல் ஒரு வாரத்திலும் மறையும் அற்ப ஜலதோஷம், இவரை விட்டு ஒரு மாதமாகப் போகவில்லை; எல்லோரையும் மூன்றுநாள் ஆட்டு

வித்த 'டிங்குஜுரம்' இவரை மூன்று மாதமாய் விடவில்லை. சிகிச்சையளித்த டாக்டர் சுமதியை, இந்த மோகன்ராம் அதட்டிக் கேட்க, அவள் சந்தேகப் பட்டு இவரை இங்கே அனுப்பிவிட்டாள். ரத்தத்தை டெஸ்ட் செய்தால், ஹெச்.ஐ.வி... சொல்லித்தான் ஆகவேண்டும்... சொல்ல வேண்டிய முறையில் சொல்லியாயிற்று... எவரையும் அழ வைக்கும் மோகன்ராம், முதலில் முரடனாகி, பிறகு சிறுவனாகி, இப்போது குழந்தையாகி விட்டார்.

''டாக்டர்... நீங்க நம்ப மாட்டிங்க... ஆனாலும் சத்தியமாய்ச் சொல்லுறேன். என் பொண்டாட்டியைத் தவிர, எவளையும் தொட்டதில்லை. கெட்டதில்லை... நான் குணத்தில் வீமன்னாலும், குடும்ப வாழ்க்கையில ஸ்ரீராமன். ஆனாலும் நீங்க நம்பமாட்டிங்க.. ஏன்னா, என் பெண்டாட்டியே என்னை நம்புறது இல்ல...''

''நான் நம்புறேன் ஸார்''

''அப்போ... இது எனக்கு எப்படி வரும்...''

''எப்படி வருமுன்னு கேட்காதீங்க... எப்படி வந்ததுன்னு கேளுங்க... தகாத நடத்தையால மட்டுந்தான் இது வரணுமுன்னு இல்லை; எய்ட்ஸ் நோயாளிக்கு முகச்சவரம் செய்த ரத்தக் கத்தி. ஒங்க மேல பட்டிருக்குதா... பொம்பளைய ஏறெடுத்துப் பார்க்காத, நீங்க ஆம்புளகிட்ட போனது உண்டா...''

''என்ன டாக்டர் இது... இதைவிட ஒரு விஷ ஊசி போட்டுக் கொல்லுங்க..''

''தப்பா நினைக்கப்படாது ஸார்... ஒரு டாக்டருக்கு, உடம்பை மட்டும் இல்லாமல், மனசையும் நிர்வாணப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் வருவது சகஜம்... ஒங்கள அசிங்கப்படுத்துறதுக்காக கேட்கல... அந்த அசிங்கமான உறவும் எய்ட்சுக்கு ஒரு காரணம்... அதனாலே கேட்டேன்''.

'மிச்சம் மீதி... கேள்வியை ஏன் வைக்கீங்க... ஒன் பெண்டாட்டி எத்தன பேர்கிட்டே படுத்திருப்பான்னு, அதையும் கேளுங்க டாக்டர்.''

மோகன்ராம், மூடிய கண்களை கைகளாலும் மறைத்து, மறைந்த முகத்தை மேஜையிலும் கவிழ்த்தினார், முகமற்ற மனிதர் போல் குலுங்கினார். டாக்டர் அசோகனால் சமாளிக்க முடிந்தது...

''அந்தம்மாவுக்கு''...

''அவள் என்னை நம்பல... ஆனால் அவளை நம்புறேன் டாக்டர்... சீதாதேவியோ, சத்தியவான் சாவித்திரியோ, கெட்டுப் போயிருந்தால், அவளும் கெட்டு போனவள்தான்''

''நான் அந்த அர்த்தத்துல கேட்கலியே... ஒரு வேளை தம்பி மனோகருக்கு வந்தது... அந்தம்மாவுக்கும்...''

''இருக்காது... அக்காவும்... தம்பியும் கீரியும் பாம்பும் மாதிரி... மனோகர் மாப்பிள்ளை அக்காவையும் மீறி என்னை உயிருக்கு மேலாய் நினைச்சான்''

''சரி... எங்கேயாவது ஆஸ்பத்திரியில் கடந்த ஏழு வருடத்தில நீங்க எதுக்காவது சிகிச்சைக்குப் போய்... உடம்பிலே ரத்தம் கொடுத்தாங்களா...''

''ஆமா... அஞ்சு வருஷத்துக்கு முன்னால, ஒரு வரப்புச் சண்டை; எதிராளி, என் வெட்டரிவாளால தலை வேற முண்டம் வேறயா போனான்... ஆனால் அப்படி விழுறதுக்கு முன்னால, இந்தாப்பாருங்க... தலையில தழும்பு. ஊனிக் கம்பால என் மண்டையப் பிளந்துட்டான். எனக்கு மயக்கமாயிட்டு. பிளஷர் கார்ல தூக்கிட்டுப் போயிருக்காங்க. ரத்தமும் கொடுத்திருக்காங்க. டிஸ்சார்ஜ் ஆனபோது, ரத்தம் கொடுத்தவனே என்கிட்ட நூறு ரூபாய் இனாமாய் கேட்டான். நான் முந்நூறு ரூபாயா கொடுத்தேன். உயிரை எடுக்காமல் விட்ட போலீஸுக்கு பத்தாயிரம் கொடுத்தபோது, உயிர் காத்த இவனுக்கு, முந்நூறு ரூபா கொடுக்கிறதா பெரிசு?''

இதற்குள், திறந்திருந்த அந்த வாசல் வழியாக, சந்திராவிடம் மன்றாடிய அதே மனிதர் வந்தார். சாராய வாசனையுடன் பேசினார்.

''டாக்டரய்யா... டாக்டரய்யா... நாம் செத்த பிறகும் நம்மோட உடம்பு பிறத்தியாருக்கு உதவணுமுன்னு கூட்டம் போட்டு பேசுற ஒங்களுக்கு இந்த குணசீலனைப் பற்றி தெரியுமா? செத்த பிறகு என்ன... செத்த பிறகு.. உயிரோட இருக்கும் போதே, உடம்பால உதவுறவன் இந்த குணசீலன்... என் ரத்தம் ஓ குரூப். அதுவும், நெகட்டிவ். எத்தனை பாட்டில் வேணும்...?'

''குணாளா... மரியாதையாய் போங்க. இல்லாட்டால், போலீஸ்ல ஒங்களை ஒப்படைக்க வேண்டியதிருக்கும்?''

அசோகன், டெலிபோனில் ஏழுக்கும் அதிகமான எண்களைச் சுழலவிட்டு 'இன்ஸ்பெக்டர் இருக்காங்களா' என்று கேட்காத குரலிடம் கேள்வி கேட்டபோது, குணசீலனுக்கு பாதி போதை போய்விட்டது. அசோகனை, கையெடுத்துக் கும்பிட்டு விட்டு ஓடப்போனார். இட நெருக்கடியில் அது முடியாது என்பதால், வேகமாக தலையைத் திரும்பியவர், மோகன்ராமை உற்றுப் பார்த்தார். சுவையோடு பார்த்தார். இனிமையோடு கேட்டார்.

''அண்ணா... தர்மப்பிரபுவே! நீ கொடுத்தே பாரு... முந்நூறு ரூபாய்...

இன்னும் வாயில வாசனையா நிற்குதுண்ணா... அதை ஒரு ரவுண்ட் பண்ணி 500 ஆய் ஆக்கப்படாதாண்ணா''

டாக்டர் அசோகன், இதற்குள் இன்ஸ்பெக்டரிடம் ''பேசி,'' முடித்து விட்டு 'ஒகே... சார்! ஆசாமியை விடல சார்' என்று சொல்லி முடித்த உடனேயே, குணாளன் காணாமல் போய்விட்டார். தலையை சொறிந்து கொண்டிருந்த மோகன்ராம், கொதித்துப் போய் பேசினார்...

''இந்த செறுக்கி மவன்தான்... எனக்கு ரத்தம் கொடுத்தவன். இந்த தேவடியா மகன்தான்...''

''இவனா... அப்போ நிச்சயமா இவன் மூலந்தான் வந்திருக்கணும். இவன் ஒரு ரத்த வியாபாரி... இவனுக்கு எல்லா ஆஸ்பத்திரியும் எல்லா டாக்டரும் அத்துபடி... எய்ட்ஸ் உள்ளவன், அப்படி இருக்குன்னும் தெரிஞ்சவன்... எத்தன பேருக்கு எய்ட்ஸ் கொடுத்தானோ''

''என்ன டாக்டர்... இது அநியாயமாய் இருக்குது...? ஒரு கேள்வி முறை இல்லியா... ரத்த தானம் செய்தாலும்... அந்த ரத்தத்தை டெஸ்ட் செய்யுறதாய் வேற பீத்திக்கிறாங்க...''

''டெஸ்ட்... செய்யணும்... அதுதான் முறை! நாட்டுல முறையில்லாமப் போறதே ஒரு முறையாயிட்டு... எனக்குக் கொஞ்சம் சந்தோஷம்... இந்த பத்து நாளையில எவ்வளவோ மாறிட்டிங்க... எய்ட்ஸ் கிருமிகளோட வாழ்கிற அளவுக்கு பழகிட்டிங்க.''

மோகன்ராம், பதிலுக்கு பேசப்போன வாயை அகலமாக்கி, அப்படியே எழுந்தார். டாக்டர் சந்திராவுடன் உள்ளே வந்த கலைவாணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு விம்மினார்.

''நான் துரோகிம்மா... துரோகி... நீ இந்த நிலைமைக்கு வர்றதுக்கு நானும் காரணம்மா... ஆனால், நான் வேணுமுன்னு செய்யலம்மா... அதுக்கான பலனும் கை மேலயே கிடச்சிட்டும்மா''

''டாக்டரம்மா... நாம் போகலாமா? அப்புறமா வருவோம்''

கலைவாணி, பெரியம்மா மகன் பிடித்த கைகளை உதறிவிட்டாள். வெளியே போவதற்காக முகம் திருப்பினாள். அவளைப் பிடித்துக் கொண்டே, சந்திரா, மோகன்ராமிடம் எரிந்து விழுந்தாள்.

''இப்போதான்... இவங்களைக் கெஞ்சிக் கூத்தாடி சரி செய்து கொண்டு வந்து இருக்கேன்... நீங்க அதைக்கெடுத்திடாதீங்க...!''

''டாக்டரம்மா... ஒங்களையும்...''

''இந்த சினிமா வசனமெல்லாம் வேண்டாம்... ஒண்ணு நீங்கஇங்கே

இருங்க.இல்லாட்டால்... எங்கள இருக்க விடுங்க... தப்பு எங்க பேர்லேதான்... நாங்க, இவரு போன பிறகு, வாரோம் டாக்டர். வெளியிலே போய் நிற்கோம்''

மோகன்ராம், தலைகவிழ்ந்தபடியே வெளியேறினார். தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டு, அதைக் கைகளில் போட்டுக் கொண்டார். அவர் போன நத்தை வேகத்தில் அறைக்கதவுகள் கூட ஆடவில்லை. டாக்டர் அசோகன் சந்திராவைப் பார்த்து புன்னகைக்காம லேயே கேட்டான்.

''நீங்க இவ்வளவு கடுமையாய் பேசி இருக்கப்படாது''

''அதுக்கும் காரணம் இருக்கு டாக்டர்... ஒரு சின்ன அதிர்வுல கூட கலைவாணி, தன்னை... அறியாமலே ஏதாவது செய்திடலாம்... அந்த அளவுக்கு இவங்களை முஸ்தபா நோக வச்சிட்டான்''

டாக்டர் அசோகன், எதிர் நாற்காலியில் விக்கித்துப் போய் கிடந்த கலைவாணியையே உற்றுப் பார்த்தான். மான்குட்டிக்கு, சிங்கக்குட்டியின் கண்களை, 'டிரான்ஸ்பிளான்ட்' செய்தது மாதிரியான உடல்வாகு... பார்வை... வெள்ளையன்பட்டி மருத்துவ முகாமில் அவள் துள்ளித் திரிந்த லாகவம், இன்னும் கண் முன்னாலயே விரிகிறது. எய்ட்ஸ் பற்றிப் பேசி முடித்த தன்னிடம், அவள் கேட்ட விளக்கங்களை, டாக்டர்களேகூட கேட்கமாட்டார்கள். கேட்க... தோணாது.. என்பதல்ல... கேட்கத் தெரியாது. இதனால்தான், ஐந்தாறு மாதத்திற்கு முன்பு, டாக்டர் சந்திரா ஆதியோடு அந்தமாக இவளைப் பற்றி விவரித்தபோது, ஒரு நாள் முழுவதும் சாப்பிட முடியவில்லை. சோற்றுக்கு பஞ்சமில்லை என்றாலும் சொல்லக் கொதித்த நெஞ்சம். பத்து பதினைந்து நாட்களுக்கு முன்பு இந்த கலைவாணி சென்னையில், சந்திராவை கீழே தள்ளிப் போட்டாலும், அவள் மீது இவனுக்கு கோபம் வரவில்லை...

சந்திரா, அசோகனிடம் நடந்ததை விளக்கினாள். பிறகு இப்படிச் சொன்னாள். ''கலைவாணியை, நான் பிடிக்காவிட்டால், முஸ்தபா மண்டை உடைந்திருக்கும். அவன் மண்டை உடையுறதப்பற்றிக் கவலை இல்ல டாக்டர். கலைவாணி இந்நேரம் போலீஸ் லாக்கப்ல இருந்திருக்கணுமே''

''ஆனாலும், நீங்க அவசரக் குடுக்கை டாக்டர்''

''எதுக்கெடுத்தாலும், என்னையே குறை சொல்லுங்க... இதுக்குத்தான் நான் இங்கே வருவதே இல்ல''

''இப்போ... கூட நான் ஏன் சொன்னேன்னு நினைத்துப் பார்க்காமல், எப்படிச் சொல்லாமுன்னுதான் நினைக்கிறீங்க! முஸ்தபாவா இருந்தால்,

வாரதும் வராததும் ஒங்க இஷ்டமுன்னு சொல்லி இருப்பான். நான் சொல்லமாட்டேன்.பிகாஸ் ஒங்களை எனக்குத் தெரியும்... இருபத்து நாலு காரெட்... அப்படியே நகை செய்ய முடியாது''

''ஐயாம் ஸாரி.. டாக்டர்''

''ஆனாலும்... கடைசியாய் ஒங்களைப் பற்றி... ஒரு ரவுண்ட் அப் செய்ய வேண்டியது என்னோட கடமை... நாம், நம்மை, நம்மோட நோக்கங்களை வைத்து எடை போடுறோம். ஆனால், வெளி உலகம், நம்மை, நம்மோட செயல்கள், அதன் விளைவுகள் இவற்றை வச்சே எடை போடுறாங்க... உதாரணமாய், நீங்க மனோகர் கிட்டே சொன்னது நல்ல நோக்கந்தான். ஆனால் அதோட விளைவு ஒங்களுக்கே தெரியும்... அப்போ சொல்வதைத் தான் இப்போ சொல்றேன். நீங்க மட்டும் மனோகரோட நிலைமையை கலைவாணியோட காதுலே போட்டிருந்தால், கதையே வேற... அப்புறம் கூட... உங்களுக்கு புத்தி வரல்ல. அந்த ஓட்டவாயன் சங்கரன்கிட்ட நடந்ததைச் சொன்னதால... அவன் நடக்கக் கூடாததை நடத்திக் காட்டிட் டான். இப்போக் கூட பாருங்க.. எய்ட்ஸுன்னா.. துண்டக் காணோம்... துணியக்காணோமுன்னு.. டாக்டர்களே ஓடுறாங்க.. முஸ்தபாவோ முழு மூடன்... பேசாமல், கலைவாணியை இங்கே முதல்லயே கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமே... இது ஒங்க மருத்துவமனைதானே''

கடைசியாய் சொன்ன வார்த்தைகளால், சந்திரா ஓரளவுக்கு சமாதானப்பட்டாள். ஆனாலும் ஒரு எரிச்சல். ஒருத்தர் கீழே விழுந்து கிடக்கும் போது, இப்படி அடிக்கப்படாது...

டாக்டர் அசோகன், இன்னமும் ஏறிட்டுப் பார்க்காத கலைவாணியைப் பார்த்துட்டு, சந்திராவிடம் கேட்டான்.

''டிரான்குலைஸர்... ஏதாவது கொடுத்தீங்களா!''

''இல்ல டாக்டர்''

''கலைவாணி.. ஏன் இப்படி கவிழ்ந்து கிடக்கே...நிமிர்ந்து நில்லும்மா... உலக பாவங்களை சுமக்கிறதுக்காக, ஆண்டவர் வலுவான நல்லவங்களை தேர்ந்தெடுத்து, அவங்ககிட்ட சிலுவை சுமக்கக் கொடுப்பாராம். நான் கிறிஸ்தவன் இல்ல... ஆனாலும் இதை நம்புறேன். நீ வலுவானவள்.. பாவங்களுக்கு பரிகாரம் தேடுகிறவள்... இதனால்.. கடவுளால் தேர்ந்தெடுக் கப்பட்ட நீ... தைரியாமாவே சிலுவை சுமக்கணும்... கமான்... பீ சியர்புல்...''

கலைவாணி, மெள்ள மெள்ள தலை நிமிர்ந்தாள். டாக்டர் அசோகன் முகத்தில் படர்ந்த புன்னகை, அவளை கால்வாசி பற்றி கொண்டது. அதுவே சோகத்தை பின்னுக்குத் தள்ளிக் கொண்டிருந்தது. அசோகன் தொடர்ந்தான்.

''கரெக்ட்... இப்படித்தான் இருக்கணும்... ஆனாலும் ஒண்ணும்மா... இனிமேல், இந்த சந்திராவை விரோதியாய் நினைக்காதே. ஒருத்தனுக்கு அல்லது ஒருத்திக்கு எய்ட்ஸ் இருக்குதா... இல்லியா என்கிறதை சம்பந்தப்பட்டவங்க கிட்டதான் டாக்டர் சொல்லணும்என்கிறது இப் போதைய மெடிக்கல் தர்மம். அவனோ அவளோ கல்யாணம் செய்வாங்களா செய்யணுமா... இதெல்லாம் இப்போதைக்கு டாக்டரோட டூட்டி இல்ல... இன்னும் சொல்லப் போனால், ஒருத்தருக்கு இருக்கிற எய்ட்ஸை காரணமாய் காட்டி... கோர்ட்ல விவாகரத்து கூட வாங்க முடியாது. காரணம், எந்த டாக்டரும் எய்ட்ஸ் சர்டிபிகேட்கொடுக்க முடியாது. கொடுக்கக் கூடாது... இப்படிப்பட்ட சமூக விரோத சூழலுல கூட, டாக்டர் சந்திரா ஒங்களுக்காக தன் சக்திக்கு ஏற்ற அளவு போராடி இருக்காங்க. ஒரு வேளை சினிமா பாணில அவங்க ஒங்க கல்யாணத்தை நிறுத்தி இருந்தால்... மோகன்ராம், இந்த அம்மா தலையை மட்டும் தூக்கிட்டு தைரியமா போலீஸ் நிலையத்திற்கு போயிருப்பார். அப்போக் கூட போலீஸ்ல கேஸ் ரிஜிஸ்டர் செய்திருக்கமாட்டாங்க. போலீஸ் போலீஸா இல்லாதவரை, நியாயம் நியாயமா இல்லாத வரை, டாக்டரும் டாக்டரா இருக்க முடியாது. இதை நீங்க புரிஞ்சிக்கணும்... கல்யாணத்திற்கு ஆயத்தமாகிற மணமகனுக்கும், மணமகளுக்கும் மெடிக்கல் டெஸ்ட் கட்டாயமாக்கப்படாதவரை, இந்த மாதிரி கோரங்கள் நடக்கும்.. அப்போக் கூட நம்மாளு காசு வாங்கிட்டு... கள்ள சர்டிபிகேட் கொடுப்பான். வேற பேஷண்டா இருந்தால் இப்படிப் பேசமாட்டம்மா... ஒன்னையும் இந்த சந்திராவை எப்படி நேசிக்கேனோ, அப்படி நேசிக்கேன்... அதனாலதான் இப்படி பேசுறேன்...''

டாக்டர் சந்திரா, அசோகனைப் பொருள்பட பார்த்தாள். வட்டியும் முதலுமாய் வாஞ்சையோடு பார்த்தாள். அவளுக்கு, அவன் ஏன் தன்னை எடுத்த எடுப்பிலேயே அப்படி விமர்சித்தான் என்பது இப்பொழுதுதான் புரிந்தது. உண்மையைத்தான் சொன்னார். ஆனால் அதை தலைகீழாகச் சொல்லி, கலைவாணியை சரிப்படுத்தப் பார்க்கிறார்.

டாக்டர் அசோகன் பேசி முடித்தபோது, கலைவாணி இயல்பு நிலைக்கு வந்துவிட்டாள். அசோகனை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். சந்திராவின் கையோடு கைகோர்த்தாள். சந்திராதான் கேட்டாள்.

''அப்போ அபார்ஷன் எப்போ வச்சிக்கலாம்?''

''இன்றைக்கே அட்மிட் பண்ணிடுறேன்''

கலைவாணி பேசினாள்... ஒவ்வொரு வார்த்தையிலும் ஒரு சோகச் சுமை. துக்கமான ஒலி வாகனத்தில், அந்த வார்த்தைகள் விட்டுவிட்டு வெளிப்பட்டன. கோர்வை அற்று தெறித்தன.

''நான்... அப்பாவி டாக்டர்... யாரையுமே மனசிலகூட நினைக்காதவள் டாக்டர். அப்போக் கூட என்னோட மாமியாரு நான்தான், தகாத...''

''அழாதம்மா... முற்றும் நனைந்தாருக்கு ஈரம் இல்லை...''

''என்னோட தகாத உறவாலதான், மனோகருக்கு வந்ததாய் மாமியார் சொல்றாள். ஊரும் உறவும் இதை நம்புது. எய்ட்ஸைகூட என்னால தாங்கிக்க முடியும்... ஆனால்... இதை...''

''விட்டுத்தள்ளும்மா... நாம் எந்த குற்றமும் செய்யாமல், இருக்கும் போது, அந்தக் குற்றம்... நம்ம மேல சுமத்தப்படும் போது, நமக்குள்ளயே ஒரு சிரிப்பு வருமே... லேசாவாவது வருமே... அந்தச் சிரிப்பை பலப்படுத்து... இப்போ என்னையே எடுத்துக்கோ... சந்திராவுக்குத் தெரியும்... எய்ட்ஸ் நோயாளிகளுக்குன்னு உள்ளே தனி வார்டே வச்சிருக்கேன். அவ்வளவு பேசுற டாக்டர் சுமதி கூட, என்கிட்டதான் அனுப்புவாங்க... இதனால எனக்கு வருகிற சராசரி நோயாளிங்க எண்ணிக்கைக் கூட குறைஞ்சிட்டு; அப்பாதான் திட்டி திட்டி பணம் அனுப்புறார். அவரும் பெரிய பணக்காரர் இல்ல... ஆனாலும் வெளியிலே என்ன பேசிக்கிறாங்க தெரியுமா? நான் அரை கிறுக்கனாம்... எனக்கும் எய்ட்ஸ் இருக்குதாம்... அதனாலதான், எய்ட்ஸ் நோயாளிய அட்மிட் செய்றேனாம்... பாவிப்பயல்க, குறிப்பா... இந்த டாக்டருங்க... ஒன்கிட்ட மட்டும் சொல்றேன்னு எல்லார் கிட்டயும் இப்படிச் சொல்லிச் சொல்லி, இப்போ ஒருத்தன் கூட எனக்கு பெண் கொடுக்க வரமாட்டாக்கான். சத்தியமான வார்த்தையம்மா... என் மேலே உயிரையே வைத்திருக்கிறதாய் சொன்ன எங்க ஊரு வாத்திச்சி... என்னைப் பார்த்தாலே ஓடுறாள்...''

''வெக்கமா இருக்கும் டாக்டர்''

''வெக்கமில்ல. வெக்கப்பட வேண்டிய விஷயம்... என் தாலிக்காகவே கழுத்தை வளைத்து வச்சிருந்தவள், இப்போ மஞ்சள் சரட்டோட ஓடுறாள்... ஒரு வேளை இதையும் துக்கத்தில ஓடுறதாய் சொல்வீங்க. காதல் துக்கத்தை பகிர்ந்து கொள்ளத்தான் ஒரு என்சீனியரைக் கட்டிக்கிட்டாளாம்''

டாக்டர் அசோகன் சிரித்தபடியே, அந்தப் பெண்களை அழ வைக்கப் போனான்; பிறகு சுதாரித்துக் கொண்டான். ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. சொல்லலாமா... வேண்டாமா என்பது போல், வலது கை ஆள்காட்டி விரலால் தலையைத் தட்டினான். பிறகு கலைவாணிக்கு, அவ்வப்போது தலைகாட்டும் இஸ்டிரியாவை கருத்தில் கொண்டு தெரிவித்தான்.

''இன்னொரு முக்கியமான விஷயம்மா... உடலுறவால, உடனேயே ஒருத்திக்கோ, ஒருத்தனுக்கோ ஹெச்.ஐ.வி. வரணுமுன்னு அவசியம் இல்ல. பல ஹெச்.ஐ.வி. நோயாளிகளோட மனைவிகளை டெஸ்ட் செய்திருக்காங்க.

பலருக்கு இல்லவே இல்ல. இதனால... ஒனக்கு ஹெச்.ஐ.வி. இல்லாமல் இருக்கவும் சான்ஸ் இருக்குது. ஆமாம்மா... நீ முட்டுறதும், மோதுறதும் நிழல் யுத்தமாய் கூட இருக்கலாம். இருட்டு வீட்ல இல்லாத கருப்புப் பூனையை தேடுறதாய் கூட இருக்கலாம்''...

கலைவாணியின் மொட்டு முகம், பூச்சரமாய் விரிந்தது. உடல், ஆகாயமும் பூமியுமாய் விஸ்வரூபம் எடுத்தது. காதுகளை நம்ப முடியாதவள் போல, கைகளால் பிடித்தாள். இந்த டாக்டர் சொல்வது நிசம்தானா என்று சந்திராவை, கண்களால் கேட்டாள். ''எனக்கு எய்ட்ஸ் இல்லே! இல்லே அப்பா.. இல்லப்பா. அம்மா இல்லம்மா... ஏய் ஆறுமுக நயினாரு... எனக் இல்லய்யா..மனோகரா... ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கிறாண்டா...''

கலைவாணி எழுந்தாள், உட்கார்ந்தாள். அந்த அறையை அப்போதுதான் பார்ப்பதுபோல் ரசனையோடு பார்த்தாள். ஒரு குதி போட்டு, மீண்டும் உட்கார்ந்தாள். பிறகு தான் கேட்டதை, மீண்டும் உறுதிப்படுத்த நினைத்தாள். மனோகர் மீது கூட சிறிது இரக்கம் ஏற்பட்டது. வாயெல்லாம் பல்லாகக் கேட்டாள்.

''நீங்கள் சொல்றது நிசமாவா டாக்டர்''

''ஆமாம்மா... ஒனக்கு ஹெச்.ஐ.வி. இருக்கணுமுன்னு அவசியமில்ல. உண்டு இல்ல என்கிறது ஐம்பதுக்கு ஐம்பது...''

''அய்யோ... எனக்கு இப்போ எப்படி இருக்குது தெரியுமா... சந்தோசம் தாங்க முடியல''

கலைவாணி, சந்திராவைக் கட்டிப்பிடித்தாள். அவளோ, இந்த விபரம் தனக்கு தட்டுப்படாமல், போய்விட்டதே என்பது போல், தன் தலையில் குட்டிவிட்டு, கலைவாணியை கட்டிப்பிடித்தாள். கலைவாணி துடித்துக் கேட்டாள்.

'இப்பவே... எனக்கு டெஸ்ட் செய்யுங்க டாக்டர்... டாக்டரம்மா டாக்டர்கிட்ட சொல்லுங்கம்மா.'

டாக்டர் அசோகன்... தடுமாறினான். இவளுக்கு இவ்வளவு பெரிய எதிர் பாப்பு கொடுக்கலாகாது... எச்சரிக்கவும் வேண்டும்.

''நான் இருக்கணுமுன்னு.. அவசியமில்லன்னு சொன்னால், இருக்கலான் னும் அர்த்தப்படுத்திக்கணும்... முதல் டெஸ்டில் இல்லாதது மாதிரி தெரியலாம். ஆனால் இரண்டாவது டெஸ்ட்டுலே இருக்கலாம். நீ கடைசியா எப்போ செக்ஸ் வச்சிக்கிட்டே? இதுல... வெக்கப்படுறதுக்கு ஒண்ணும் இல் லம்மா... இரண்டாவது டெஸ்டுக்கு இது முக்கியம்... சும்மா சொல்லும்மா...''

''மனோகர்... நியூயார்க்கு புறப்படுறதுக்கு முந்திய ராத்திரி''

''இன்னையோட எத்தனை நாள் இருக்கும்?''

''இருபது நாள்...''

'ஒருவேளை... அந்தக் கடைசி உறவுல அந்தக் கிருமிகள் ஒன்கிட்ட தாவியிருக்குமா என்பதை தெரிஞ்சிக்க... இன்னும் ஒரு மாதம் கழித்து ஒரு டெஸ்ட் செய்யணும். அதுலயும் இல்லன்னா... நானே மூன்றடி குதிப்பேன்...'

''என்ன டாக்டர்... என்னை பயமுறுத்துறீங்க.. தொட்டிலையும் ஆட்டிவிட்டு குழந்தையையும்...''

''கிள்ளலம்மா... தாலாட்டுத்தான் பாடுறேன்... அது சந்தோஷமானதா துக்கமானதான்னு இப்போ சொல்ல முடியாது. ஹோப் பார் தி பெஸ்ட் அன்ட் பிரிப்பர்ட் பார் தி ஒர்ஸ்ட். நல்லதே நடக்குமுன்னு நம்பு... அதே சமயம் கெட்டதை எதிர் கொள்ளவும் தயாராய் இரு''...

''கலைக்கு மட்டும் அது இல்லன்னா... அய்யோ நினைக்கவே எவ்வளவு சந்தோஷமா இருக்குது... இவங்களுக்கு இல்லாட்டி, நான் திருப்பதில அங்கப் பிரதட்சணம் செய்வேன்''

டாக்டர் அசோகன், எதையோ நினைவுபடுத்திக் கேட்டான். அது பேச்சை மாற்றுவது போலவும் இருந்தது.

''ஆமா... இன்றைக்கு நான் உங்க வீட்ல சாப்பிட்டிருக்கணுமே''...

''நோ நோ... நாளைக்குத்தான் டாக்டர்''

''அப்போ இன்னிக்கும் புதன்கிழமை... நாளைக்கும் புதன் கிழமையா நாளை... நாளை என்னாதே... நண்பகல் உணவைப் பறிக்காதே''

கலைவாணி, எழுந்தே கேட்டாள்.

''இதையே நான் சொன்னதா நினையுங்க டாக்டர்... இப்பவே என் ரத்தத்தை எடுங்க டாக்டர்''

அசோகனும் சந்திராவும், கலைவாணியை ஒரேசேரப் பார்த்தார்கள். அவளோ எங்கேயோ இருப்பது போல், அங்கே இருந்தாள். வாய், ஒரு பாட்டை முணுமுணுத்தது. வாடாப்பூ, அவளைக் கட்டியணைக்கிறாள். கனகம்மா, பாம்படத்தை ஆட்டிக்காட்டுகிறாள். அம்மா உச்சி மோர்கிறாள்... அப்பா, குனிந்த தலையை நிமிர்த்திக் கொள்கிறார்.

கலைவாணி... ஐம்பதுக்கு ஐம்பது என்று அசோகன் சொன்னதை எய்ட்ஸ் பரிட்சையில் பாஸ் மார்க் வாங்கிவிட்டதாகவே நினைத்தாள். முப்பத்தைந்தைவிட பதினைந்து மதிப்பெண்கள் அதிகம்...

22

கலைவாணி கண் விழித்தாள் என்பதைவிட, கண் திறந்தாள் என்று சொல்லலாம். மயக்கம் படிப்படியாய் தெளிந்தது போல், இமைகள் மெள்ள மெள்ள மேலேறின. கனவில்லாத தூக்கம். கல்லறைக்குள் முடங்கியது போன்ற மோனம். இடம், பொருள், எய்ட்ஸ் பரிணாமங்களைக் கடந்து, காலவெள்ளத்தில், கண்ணுக்குத் தெரியாத துளியாகவும், பிரபஞ்ச ஒளிச்சங்கமத்தூளியில் தூங்கிப் போன அனுபவம். மரணத்தின் வெள்ளோட்டமோ, மறு பிறப்பின் பின்னணியோ...

கலைவாணி சுற்றுமுற்றும் பார்த்தாள். தனித்ததோர் சிறிய அறை... பச்சைக் கட்டிலில் போட்ட வெள்ளைப்படுக்கை... பக்கத்திலேயே ஒரு நாற்காலி. எதிர் திசையில் கட்டிலில் இரும்பு விளிம்பில், தொங்கப் போட்ட ஒரு அட்டை... நான் என்பதைத் துறந்து, மனம் செத்து, ஆன்மா உயிர்த்தெழுந்தது போன்ற பூரணத்துவம், பொடிப் பொடியாகி, யதார்த்தத்தில் வெந்து, மனதுக்குள், எரிகொள்ளி நினைவுகள் மீண்டும் படையெடுத்தன. ஆனாலும், அந்த கொள்ளிகளிலும் ஒரு ஒளி. பேரொளி... அவளுக்கு, எய்ட்ஸ் கிருமிகள் உள் சாவகாசம் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை... அவள் சராசரியானவள்.

கலைவாணி, நினைத்துப் பார்த்தாள்.

சுத்திகரிக்கப்பட்ட ஒரு பெரிய அறைக்குள், ஆப்பரேஷன் மேஜைக்குள் தான் படுக்க வைக்கப்பட்டிருந்ததும், பக்கத்தில் உள்ள ஒரு தூக்கலான இடத்தில் பல்வேறு வடிவுடைய குத்துக் கம்பிகளைப் பார்த்து பயந்து போனதும் நினைவுக்கு வந்தது. கைகளில் உறைகளோடும், முகங்களில்

மூடிகளோடும் வந்த மூவரில் ஒருத்தர், தன் மூக்கில் எதையோ ஒன்றை வைக்க அவள் கண்களுக்கு எல்லாமே மாலை நேர மஞ்சள் வெளியிலாகி, கண்ணுக் குத் தெரிந்த கருக்கலாகி, பிறகு காரிருளாய் மறைந்து போனது நினைவுக்கு வந்தது... என்ன நடந்தது என்பதைப் பார்க்க முடியவில்லை... ஆனால் யூகிக்க முடிந்தது. அதை நினைக்க நினைக்க, இடுப்புக்குக் கீழே வலி எடுத்தது. பெற வேண்டிய வயிறு துடித்தது. கருத்தரித்ததும், வயிற்றைத் தொட்டு தொட்டுப் பார்த்துக் கொண்டதும், அந்த 'துரோகியை' அப்படி தொட விட்டதும் நினைவுக்கு வந்தன. அந்த சின்ன உயிருக்காக, அவள் மருவினாள். தாய்மையின் சின்னம், சின்னாபின்னமானதில் துடித்துப் போனாள். ஆயிரம் இருந்தாலும், அது அவள் பிள்ளை. ஆனால், அது கர்ணனைப் போல் கவச குண்டலங்களோடு தற்காப்பாய் பிறக்காமல், எய்ட்சின் தாக்குதலோடு பிறந்திருக்கக் கூடிய பிள்ளை... உலகில் சித்திரவதைக்கும், நரக வேதனைக் கும் உட்பட வேண்டிய ஜீவன்களில் ஒன்று குறைந்து விட்டது. தாயாக வருத்தப்பட்டாலும், சமூகத்திற்காக சந்தோஷப்பட வேண்டும்... ஆனாலும், இவளுக்கு அது இல்லையானால், அதுக்கு - அந்தக் குழந்தைக்கு எப்படி இருக்கும்? அவசரப்பட்டுட்டாளோ! அசோகன் டாக்டரிடம் அப்படி பிடி வாதம் பிடித்திருக்கப்படாதோ... எப்படி முடியும்... எய்ட்ஸ் அல்லவென்று முழுமையாய் தெரிய இன்னும் இரண்டு மாசம்... அப்போது இவளுக்கு ஆறு மாதமாகும். ஒரு வேளை எய்ட்ஸ் இருந்தால்... ஆறு மாத பிள்ளையைக் கொல்வது அரைக் கொலைவாயிற்றே...

அரைமணி நேர உளைச்சலில், கலைவாணி குழந்தையை மறந்தாள்... படிப்படியாய் மறந்து, அசோகன் சொன்னதை ஆழமாக நினைத்தாள். அவளுக்கு அந்தக் கிருமிகள் இருக்கணுமுன்னு அவசியமில்லை... அசோகன் சொன்ன அந்த ஐம்பதுக்கு ஐம்பது, நூறாகியது... பாதிப் பாதி என்று சொன் னது, அவளுக்கு உடனடியாய் மனதில் தோன்றி, ஐம்பதையும் ஐம்பதையும் பெருக்கிக் காட்டியது... எய்ட்ஸ் மட்டும் இல்லை என்றால்... எதற்கு ஆனால்... இருக்காது... அந்த மனோகரும் முற்றிப் போன நோயாளி இல் லையே... எவ்வளவு வலுவானவன்... அந்த துரோகிக்கு... அது ஆரம்பக் கட்டம்... அவன் ரத்தத்திலேயே சரியாய் காலூன்றாத கிருமிகள், இவளிடம் எப்படி வரமுடியும்... இப்போ தெரியா விட்டாலும், பிறகு... இரண்டு மாதம் கழித்து தெரியலாம் என்றாரே... கடைசி உறவு கூட ஹெச்.ஐ.வி. கிருமிகளாய் கருத்தரிக்கலாம் என்றாரே... அந்தக் கடைசி உறவு, சரியாய் இருந்ததுபோல் தெரியலியே...பிரிவுத் துயரில் 'லவ் பிளே' கூட சோக விளையாட்டாய்தானே இருந்தது'

''கன்கிராஜுலேசன்ஸ்... கலைம்மா... சமாய்ச்சுட்டே....''

எண்ணங்களில் மிதந்து, உடலறக் கிடந்த கலைவாணி, அசோகனையும்,

சந்திராவையும் ஏறிட்டுப் பார்த்து, ஈரப் புன்னகையை வீசினாள். அவர்களை எதிர்பார்ப்போடு பார்த்தாள். ஆனாலும் கேட்கப் பயம். அவர்கள் நெகட்டிவ்வாய் பேசி, பாசிட்டிவ்வாய் ஆக்கிவிடப்படாதே என்ற பயம்... ஆனாலும் திடீரென்று மனம் துள்ளியது... அது இருந்தால், டாக்டரய்யா தன்னை பாராட்டி இருக்க மாட்டாரே...சமாய்ச்சுட்டேன்னு சொல்ல மாட்டாரே...

அசோகன், டாக்டராய் பேசினான்.

''ஒனக்கு அபார்ஷன்... வெற்றிகரமாய் முடிஞ்சுட்டு... எந்த சதையோ, துண்டு துக்கடாவோ.. உள்ளே மாட்டிக்கல... நல்லாவே செக்கப் செய்திட்டோம்''

டாக்டர் சந்திரா பெருமிதமாய்ப் பேசினாள்..

''எதையும் பிடிப்போடும், துல்லியமாகவும், துட்டுமேல் கண் வைக்காமலும் செய்யுறதுதான், இவரோட டிரேட்மார்க்... நாம் இருவரும்... இவருக்கு நன்றிக் கடன் பட்டிருக்கோம்..''

''அய்யய்யோ... கொக்குத் தலையில கட்டவுட்டா... வாணாம்மா உலகத்திலேயே பெரிய பளு... இந்த நன்றிப் பளுன்னு ஆஸ்கார் ஒய்ட் சொல்லி இருக்கார்...''

கலைவாணிக்கு, அசோகன் சொல்வது எதுவுமே காதில் விழவில்லை. இன்னும் ஏன் அவர் சேதி சொல்லவில்லை? ஒரு வேளை இன்னும் டெஸ்ட் முடிவு தெரியலியா... தெரிந்து... அந்த இன்ப அதிர்ச்சியை தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று நினைக்காரா... அல்லது ஒரு வேளை...

கட்டில் விளிம்பில் தொங்கிய அட்டைக் காகிதத்தை தூக்கிப் பிடித்துப் பார்த்துவிட்டு திரும்பிய அசோகனிடம், கலைவாணி தற்செயலாய் கேட்க வேண்டும் என்று நினைத்து, அவசர அவசரமாகக் கேட்டாள்.

''அப்புறம்... டாக்டர்... அந்த அய்ம்பதுக்கு அய்ம்பது...''

கலைவாணி கேட்ட வாயை மூடிக் கொள்ளாமலே, அசோகனை அண்ணாந்து பார்த்தாள். இதயவேகமும், மூச்சு வேகமும் அதிகரித்தன. உச்சி சுட்டது. பாதம் குளிர்ந்தது.

அசோகன், அவள் கேட்டதை கேட்காதது போல் பேசினான்.

''நல்லவங்களுக்குத் தான்... கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் வருது.. இந்த டாக்டரம்மாவை என்ன பாடுபடுத்துறாங்க என்கிறே... ஒனக்காக அங்கே சண்டை போட்டதற்காக இந்த சந்திராவுக்கு மெமோ கொடுத்திருக்காங்க...

இதைவிட, மோசமான தண்ணி இல்லாக் காட்டுக்கு மாற்றுவாங்களாம்... நான் சொன்னேன் பாரு சிலுவை - அந்த ஆண்டவன் கட்டளை இல்லாட்டால் ஒனக்கோ... இவங்களுக்கோ... எதுக்கு தண்டனை வரணும்...?'

கலைவாணியின் அவசரம்... அடங்கிப் போனது... நிதானத்திற்கு வழிவிட்டது. பாதி புரிந்து விட்டது ஒரு காரணம். இந்த ச்சூழலில் தன்னை முன்னிலைப்படுத்திக் கேட்பது அநாகரீகம். இல்லையென்றால் சொல்லி இருப்பார்கள். கலைவாணி, டாக்டர் சந்திராவையே பார்த்தாள். அந்த சலனமற்ற முகத்தில் ஊடகமாக பல சங்கடங்கள் ஒளிந்திருப்பதைக் கண்டாள். ஆறுதலாகப் பேசினாள்.

''எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்குது டாக்டரய்யா... இந்த கவர்மெண்ட்ல, டிஸ்மிஸ் ஆக வேண்டியவங்களே... மெமோ கொடுக்காங்க... இந்த ஊரவிட்டு இவங்கள மாற்றுவாங்க என்கிறதை நெனைத்துக் கூட பார்க்க முடியல. நானும் அனாதையா போயிடுவேன்''

''கவலைப்படாதே கலை... இந்தம்மாவ மாற்றினாலும்... ஆர்டரை அமல் செய்ய முடியாது... ஏன்னா... இவங்களுக்கு பதிலாய் போடுற எந்த டாக்டரும் இங்கே வந்து இவங்களை ரீலீவ் செய்யமாட்டாங்க. அப்பேர்ப்பட்ட ஊரு அசல் சாக்கடை''

''அப்போ டாக்டர் முஸ்தபா..''

''பன்றி எங்கே இருக்கணுமோ... அங்கே இருக்குது''

''அப்போ நான்...''

''நீங்க சாக்கடையில் முளைத்த செந்தாமரை''

அசோகனும், சந்திராவும் சிரித்து விட்டார்கள். அப்பாடா இனிமேல் அந்த ஐம்பதுக்கு ஐம்பதைக் கேட்டிடலாம்;

''அப்புறம்... என்னோட பிளட் டெஸ்ட் முடிவு எப்படி? எதுக்கும் என்னை தயார் படுத்திக்கிட்டேன். சும்மாச் சொல்லுங்க''

டாக்டர் சந்திரா, தலை குனிந்தபடியே நின்றாள். பிறகு, வேகவேகமாக அந்த அறையை விட்டு வெளியேறினாள். வாசலுக்கு வெளியே சிறிது நேரம் நின்று கலைவாணியை குறுக்கும் நெடுக்குமாய் பார்த்துவிட்டு, பதறியடித்து வெளியே போனாள்.

டாக்டர் அசோகன், கரங்களை முதுகிற்குப் பின்னால் வளைத்து வைத்துக் கொண்டு, அங்குமிங்குமாய் சுற்றினான். பிறகு, அறையை விட்டு அவனும் வெளியேறப் போனான். கலைவாணிதான், அவனைப் பேச்சால் இழுத்துப்

பிடித்து நிறுத்தினாள்.

''சும்மா சொல்லுங்க டாக்டர்... நான் எல்லாவற்றையும் பாசிட்டிவா எடுத்துக்குவேன்''

''என் வாயால... சொல்லணுமாம்மா... ஒனக்கு இல்லன்னா... நீ மயக்கத்தில கிடந்தாலும் தட்டி எழுப்பி சொல்லி இருக்க மாட்டேனா...''

கலைவாணி, மெள்ளத் தலையாட்டினாள்... அருகே நின்ற அசோக னின் கையை ஆறுதலாகப் பிடித்துக் கொண்டாள். கம்பராமாயணத்தில், 'ராமனைத் தருவாய்' என்று விசுவாமித்திரர் கேட்ட போது, தசரதன் துடித்தானாமே 'கண்ணிழந்தான், பெற்றிழந்தான்' என்பது போல். அந்தப் பாடல்தான் அவளுக்கு நினைவுக்கு வந்தது. அசோகன், அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

''மரணம் எல்லாருக்கும் பொதுவானது. சிலர் முன்னால போறாங்க... பலர் பின்னால போறாங்க... அவ்வளவுதான் வித்தியாசம்...''

''சரிதான் டாக்டர்... எதிர்காலம் புதிராய் இருக்கிறதாலதானே நிகழ்காலம் பிடிப்பாய் தோணுது... புரியாத எதிர்காலத்தை நம்பித்தானே நம்பிக்கை கொடுக்காத நிகழ் காலத்தை, கடந்த காலமாக்கப் பார்க்கோம். இந்த மருத்துவமனை ஒரு காலத்தில் மாவட்ட மருத்துவமனையை விட, பெரிசா வரலாம் என்று நம்பித்தானே, அந்த நம்பிக்கை ஒங்களை இயக்க வைக்குது. இது இடிந்து போயிடுமுன்னு... ஐயாம் ஸாரி...' ஒரு நோயாளிக்கு உதாரணம் கூட கிருமித்தனமா வருது பாருங்க...''

''கத்தரிக்காய் என்று சொல்றதாலயே, பத்தியம் முறிஞ்சிடாதம்மா.. சொல்றது சராசரி மனுஷனுக்கு சரி. ஆனால், முக்காலத்தையும் உணர்ந்த முனிவர்கள் எப்படிப் பக்குவப்பட்டு இருந்ததாய் நம் புராணங்கள் சொல்லுது. அப்படி ஒன்னாலும் ஆக முடியும்... என்னாலயும் ஆக முடியும்...''

''ஆனால்... பாழும் மனசு... கேட்க மாட்டக்கே டாக்டர்''

''இதனாலதான்... சொல்றேன். மனம் வேறு... நாம் வேறுன்னு எண்ண னும்... அந்த எண்ணத்தையே பலப்படுத்து... உடல்வேறு நாம் வேறன்னு நினைத்துப் பாரு. நமக்கு... நல்லதோ, கெட்டதோ நடக்கும் போது அது வேறு யாருக்கோ... நடக்குறதாய் நினை. நம் கஷ்டங்களையும்... நஷ்டங் களையும் நாமே வேடிக்கை பார்க்கணும். எய்ட்சால் பாதிக்கப்படுகிறவர்களில் நீ லட்சங்களில் ஒருத்தி... நீயாவது பரவாயில்ல... ஒனக்கு நானிருக்கேன். சந்திரா இருக்காங்க... ஆனால் எத்தனை ஆயிரமாயிரம் ஏழைகள், எய்ட்சுன்னு தெரியாமலே... துள்ளத் துடிக்க இறக்கிறாங்க தெரியுமா...?

ஆப்பிரிக்காவுலே தாத்தா - பாட்டி, பேரன்- பேத்தி இந்த இரண்டு வகைதான் இப்போ இருக்குது... இந்த இரண்டுக்கும் பாலமான அப்பா- அம்மாக்களை எய்ட்ஸ் விழுங்கிட்டு... அதனால... எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்கிறது முக்கியமில்லை... உலகம் முழுசும் சீரழிஞ்சு வரும் இந்த சமுதாயத்தில் எத்தனை பேருக்கு பயன்பட்டோம் என்கிறதுதான் முக்கியம்''

இதற்குள், அசோகனுக்கு டெலிபோன் வந்திருப்பதாய், பச்சை சேலை கட்டிய ஒரு மூதாட்டி, உள்ளே வந்து சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அப்படியும் அசோகன், அவளுக்கு ஒரு நிமிடம் கண் கலங்க ஆறுதல் சொல்லிவிட்டுப் போனான்.

அசோகன் அங்கே நின்றது வரைக்கும் பாதுகாப்பு உணர்வோடு நிமிர்ந்த கலைவாணியின் மனம், இப்போது அவள் உடலைப் போலவே படுத்தது. தனிமைத் துயர்... தனித்துப் போன துயர்.. எதிர் பாராமல் பெற்றோர் உற்றாரிடம் இருந்து அற்றுப் போன துயர். அம்மாவிடம் இருந்து பிரிக்கப்பட்ட குழந்தை பயம். குழந்தையாவது காலப் போக்கில் அம்மாவை மறந்து போகும். ஆனால் குழந்தைப் பருவத்தில் இருந்து குழந்தை சுமக்கும் பருவம் வந்தவர்களால் மறக்க முடியுமா...? சுமக்கிறவ ளால், சுமந்தவளை நினைக்காமல் இருக்க முடியுமா?

என்றாலும், கலைவாணி அசோகன் சொன்னதை அசை போட்டுப் பார்த்தாள். கவலை மூடியைக் கிழித்துப் போட்டு மனப் பாண்டத்தை குயவர்போல், வளைத்துப் பிடித்தாள். பார்த்தவைகளையும், படித்தவை களையும் தனக்கு உறுதுணையாக்கிக் கொண்டாள்.

குற்றாலத்தில் உள்ள ஆதிபராசக்தி கல்லூரியில் இறுதியாண்டு படித்தபோது, கல்லூரி முதல்வரின் வற்புறுத்தலில், அவள் கல்லூரித் தோழிகளோடு தென்காசிக்கு அருகே உள்ள ஆயக்குடிக்குப் போனாள். ஆறு பாயும் கிராமம். முப்போக வயல்கள், சோலைகளான தோட்டங்கள். இதற்கு சிறிது தள்ளி, ஒரு காம்பவுண்டுக்கு உள்ளே சின்னச் சின்னக் கட்டிடங்கள்... ஒரு பெரிய கூடத்தில் ஊனமுற்ற குழந்தைகள்... கண் கெட்டவை... காது அற்றவை... கால்கள் கூம்பியவை... கை குவித்துப் பாடுகின்றன. இந்த ஊனக் குழந்தைகளுக்கு முன்னால் ஒரு ஞான சொரூபம்... கடமையை வழி பாடாகக் கொண்ட ஒரு உருவம்... சாய்வு நாற்காலியில் சாய்ந்து கிடக்கிறது. இடுப்புக்குக் கீழே கால்கள் செத்துத் தொங்கின. கைகளும் அப்படியே... இருபத்திரண்டு வயது தோற்றமிக்க உடம்பில் முப்பது வயது முகம்... முகத்தில் இருந்து வயிறு வரை மட்டுமே இயங்குகிறது. அவ்வப்போது பணியாட்களோ தொண்டர்களோ... அவரைத் தூக்கி, லேசாய், மேலும் கீழுமாய் ஆட்டுகிறார்கள். அப்போதுதான் இதயம் இயங்குமாம். அதன் துடிப்பே இந்த ஆட்டத்தில் அடங்கி இருக்கிறது. இவளும், இவள்

தோழிகளும் அழுது விட்டார்கள். ஆனால், அந்த உருவம் சிரிக்கிறது. ''இன்று செய்யாவிட்டால் எப்போது... உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால்...?'' என்று தலைக்கு மேல் சுவரில் எழுதப்பட்ட மஞ்சள் எழுத்து வாசகத்தைப் படிக்கும்படி முகத்தை நிமிர்த்துகிறது... 'ஏன் அழுகிறாய்? எதைக் கொண்டு வந்தாய்...? எதைக் கொண்டு போகப் போகிறாய்? என்று எதிர்ப் பக்கம் எழுதப்பட்ட பகவத் கீதை வாசகத்தை படிக்கச் சொல்கிறது... இந்தஉருவத் தின் பெயர் ராமகிருஷ்ணன்.. கோவையில் விமானப்படைத் தேர்வுக்கு போயிருக்கிறான். ஏதோ ஒரு சோதனைப் பயிற்சியில், மேலே இருந்து கீழே விழுந்து விட்டான். கால்களும் கைகளும் செத்த நிலையோட தொங்க, அவனை இந்த ஊரில் போட்டு விட்டுப் போய் விட்டார்கள். ஆனாலும் அவன் அசரவில்லை... கை, கால்கள் செத்துச் செத்து, அவன் மனதிற்கு உரமூட்டின... நல்லவர்களை ஒன்று திரட்டி, ஒருமுகப்படுத்தி உடல் ஊனமுற்றோர் விடுதி கட்டினான். ஊர் குழந்தைகளுக்காக பள்ளிக்கூடம் கட்டினான். முதியோர் இல்லம் அமைத்தான். தச்சுப்பட்டறை வைத்தான், ஆனால், எந்த இடத்திலும் தன் புகைப்படத்தை மட்டும் வைக்கவில்லை. இன்று இந்த உருவம் உள்ள இடம் சித்தர் பூமிபோல் ஆகிவிட்டது.திக்கற் றோருக்கு தெய்வத் திருத்தலமாகி விட்டது. இந்த கிராமத்திற்குப் போகும் பாதை, இன்னும் கல்லும் முள்ளுமாய் ஆனதுதான். ஆனால் அந்த உருவத்தை நினைத்து நடந்தால், அவையே, கனியும் மலருமாகும். முக்தியுமல்ல... மூடப் பக்தியுமல்ல... அசல் மனோபலம்...

'பிஞ்சில் பழுத்த' தெளிவோ என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட கலைவாணியின் கண் முன்னால் கோவை. கிருஷ்ணமூர்த்தி... தென்காசி யில் ஒரு இசைமேடை.... பக்கவாத்தியங்கள் ஆயத்தத்தைக் காட்டுவது போல், இழுத்து இழுத்து மூச்சு விடுகின்றன. பெருமூச்சாய் அல்ல... இசை மூச்சாய். ஆயிரக் கணக்கான மக்கள்... இரண்டு பேர் தஞ்சாவூர் பொம்மை மாதிரி ஒன்றைத் தூக்கி வருகிறார்கள். அந்த உருவத்திற்கு, இடுப்புக்கு கீழே எதுவும் இல்லை. தொடை மாதிரி சின்ன முடிச்சு உள்ளே இருக்கிறதாம். கால் சட்டை வெறுமையாய் தொங்குகிறது... தோள்... என்றோ... கைகள் என்றோ எதுவும் கிடையாது. ஒரு சதைப் பிண்டம்... இவளது மூணு மாதக் குழந்தை எப்படி இருந்திருக்குமோ... அப்படி... அந்த உருவத்தை ஒரு மெத்தையில் தூக்கி வைக்கிறார்கள். நந்தனாருக்கு கொடிக்கம்பம் மாதிரி, இவருக்கு மைக் வளைத்து கொடுக்கிறது... அந்த உருவம் வாயைத் திறக்கிறது. தாளலயமாய் தட்டுவதற்கு கரங்களோ... தட்டப்படுவதற்கு தொடையோ இல்லாத அந்த உருவத்தின் வாயில், ஒரு கோடி ஒளி அதிர்வுகள்... ஊனை உருக்கும் குரல்... உள்ளத்தை நெகிழ வைக்கும் பாடல்கள்... விதவிதமான குரல் வளைவு...் வேக வேகமான, மெதுமெதுவான ஏற்ற இறக்கங்கள்... அத்தனையும்

ஆத்மார்த்தம்... அத்தனையும் குற்றால அருவி... உள்ளத்தைக் கழுவி விடும் இசை மழை... பயமுறுத்தாமல், மேகத்தைப் பார்க்க வைக்கும் மின்னொளி... கூட்டம் ஒட்டு மொத்த மனித உருவமாகிறது. அதே கூட்டம் ஒரு மனிதர் போல் கைத்தட்டியும், உருகிப் போயும் கிடந்தது.

அவ்வளவு ஏன்... சென்னைத் தொலைக்காட்சியில் செய்தி படிக்கும் இன்னொரு ராமகிருஷ்ணனின் இரண்டு கால்களும் நாணலானது. ஆளுதவி இல்லாமல்; நடக்க முடியாதவராம். ஆனால் ஆங்கில பேச்சுப் போட்டியிலும், தமிழ் பேச்சுப் போட்டியிலும் நம்பர் ஒன்னாம். பேப்பர்ல படத்தோட போட்டிருந்தாங்க. அட்டகாசமான சிரிப்பு... எனக்கு எந்தக் கோளாறும் இல்லை என்பது மாதிரியான தோரணை.

இதேபோல், உலகளாவிய அளவில் ஒரு ஹெலன் ஹெல்லர்; 1968 வரை நம்மோடு வாழ்ந்த அமெரிக்க மாது... காதிழந்து, கண்ணிழந்து போனாலும் மனமிழக்காத வீராங்கனை; விதியை மதியால் வென்றவள்; ஊனமுற்றோரின் உறுதுணைவி.

கலைவாணி, தனக்குத் தானே வெட்கப்பட்டுக் கொண்டாள். உள்ளத்தில் ஊனமில்லாத அந்தச் சாதனையாளர்களை நினைக்க நினைக்க, தானும் ஒரு சாதனை செய்ய வேண்டும் என்று மனதில் ஒரு வைராக்கியம்...

இதற்குள், சந்திராவும் அசோகனும், உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்து, கலைவாணி கையாட்டிச் சிரிப்பதைப் பார்த்து, அவர்கள் அசந்து போனார்கள். ஒரு வேளை, அவளுக்கு ஹிஸ்டிரியா மீண்டும் வந்து விட்டதோ என்று கூடப் பயந்து போனார்கள். அதற்குள் கலைவாணி, தெளிவாகவே கேட்டாள்.

''நம்ம ரத்தத்தில... ஹெச்.ஐ.வி. கிருமிகள் இருக்கிறதை எப்படிக் கண்டுபிடிக்கீங்க? எலிசா என்கிறீங்க... வெஸ்டர்ன் பிளாட் என்கிறீங்க... யாருக்குப் புரியுது... கொஞ்சம் விளக்கமாய் சொல்றீங்களா?''

''புரிஞ்சுதான் என்ன ஆகப் போகுது.. ஆனாலும்புரிய வைக்கேன். பொதுவாய் எய்ட்ஸ் கிருமிகளை, ரத்தத்தில் இருந்து தனிப்படுத்திப் பார்க்க முடியாது... ஆனால் அந்த கிருமிகளை எதிர்த்து, நம் உடம்பு உற்பத்தி செய்கிற எதிரணுக்களை கண்டுபிடிக்க... ஒரு கருவி இருக்குது. இதுல நூறு துளைகள் பல்லாங்குழிகள் மாதிரி. இவற்றில், ஹெச்.ஐ.வி.யோடு ஒட்டிக் கொள்கிற ஆன்டிஜென் என்கிற ஒருவித திரவத்தை தடவுறோம். இந்த ஆன்டிஜென் முஸ்தபா மாதிரின்னு வச்சுக்கோ... ஒருவருடைய ரத்தத்தை பாட்டிலில் வைக்கோமா... அதில் மேலே நிற்கிற சீரத்தை - அதாவது ரத்த நீரில் ஒரு துளியைத் துளையில கொட்டுறோம்... அப்புறம் சம்பந்தப்பட்ட ஒரு திரவ என்ஸைமை ஊத்துறோம். ஹெச்.ஐ.வி. கிருமி உள்ள ரத்தத் திரவம்

கலர் மாறும். மஞ்சளாகவோ ஊதாவாகவோ நிறம் மாறும்... நிறத்தை டை மூலம் நாமே நிச்சயித்துக் கொள்ளலாம்''

டாக்டர் அசோகன் மூச்சு விட்டபோது, டாக்டர் சந்திரா மூச்சைப் பிடித்துப் பேசப் போனாள்.

''வெஸ்டர்ன் பிளாட் என்பது...''

கலைவாணி, கையெடுத்துக் கும்பிட்டாள்... 'அய்யோ இதுக்கு மேல அறுக்காதீங்க' என்றாள் சிரிப்பாகவும் சிணுங்கலாகவும். அசோகன் 'ஜோக்' அடித்தான்.

''என்னம்மா... இது...? எனக்கு போரடிக்க சான்ஸ் கொடுத்துட்டு... இவங்களை இப்படி அம்போன்னு விட்டால் எப்படி? ஏற்கெனவே கட்டிக்கப் போற மாமா மகன்கிட்ட எய்ட்ஸ் பற்றி இவங்க சொல்லி அவனுக்கு பாதிப் பைத்தியம் பிடிச்சிட்டாம்...''

சந்திரா, முதலில் முகத்தை 'உம்' என்று வைத்தாள். அசோகனை பொய்க் கோபமாய் முறைத்தாள். இறுதியில் சந்திராவும் அவர்களின் சிரிப்பில், தன் சிரிப்பைக் கலக்க விட்டாள்.

சிரித்த முகங்கள் சீரியஸாயின..

பலராமனும், சீனியம்மாவும் உள்ளே வந்தார்கள். அம்மா மகளின் கரம் பிடித்து, அதைக் கண்ணீரால் நனைத்தாள். அந்த இரண்டு டாக்டர்களையும் பார்த்து 'நீங்க நல்லா இருப்பீங்கன்னு', கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, மகளைப் பார்த்துப் பேசினாள்.

'அக்கா மகன் மோகன்ராம்... முட்டி மோதுறாம்மா... அப்பா படுத்த படுக்கையாய் கிடக்கார். அதனால்... அதனால் அவரால் அந்த ஏழை மனசால...'

அம்மாவால் பேச முடியவில்லை. அழத்தான் முடிந்தது. இதனால் பலராமன், அம்மா விட்ட இடத்தை பூர்த்தி செய்தான்.

''அப்பாவலே முடியல. அதனால பார்த்துட்டுப் போகலாமுன்னு அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்தேன்.''

கலைவாணி, பலராமனை ஏறெடுத்துப் பார்த்தாள். அவன் முன்னாள் 'தம்பி' யாய் போனான்... அது என்ன பார்த்துட்டு போகலாமுன்னு ...

கலைவாணி, எந்தக் காக்கைக் குஞ்சுக்காக, கல்லோடு காவல் காத்தாளோ... அந்தக் குஞ்சுபோல துடித்தாள். சிறிது நேரத்திற்கு முன்பு, மனம் உற்பத்தி செய்த வைராக்கியம், மயான வைராக்கியமாய் விட்டது. நினைத்துப் பார்த்த சாதனையாளர்கள், நெஞ்சுக்குள்ளே புதையுண்டார்கள்.

23

மனோகர், ஒரே இழுப்பில் வாயில் வைக்கப்பட்ட பாதிச்சிகரெட்டுக்கு கொள்ளி வைத்துவிட்டான். நெருப்புயிர் போய், பிணமான அதன் சாம்பல், மீதிச்சிகரெட்டின் முனையில் இருந்து கீழ் நோக்கிச் சென்று, மேல் நோக்கிச் சென்று, வளைந்து வளைந்து, தேள்போல் தோன்றியது. சாதாரண சிகரெட்டை விட ஒல்லியான சிகரட்; தொள தொளப்பானது. ஆனால் ஐம்பது ரூபாய்க்கும் அதிகமானது.

மனோகர், மீதிச்சிகரெட்டை அவ்வளவு சீக்கிரம் குடித்துவிடப் படாது என்பது போல், அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மூச்சுவிடச் செய்தான். அப்படி செய்தபடியே, அந்த அறையில், பல்வேறு கோணங்களில் வியாபித்துக் கிடந்த தோழர்களையும், தோழியையும் பார்க்கப் பார்க்க பரவசம்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கண் எட்ட முடியாத புறநகர் பகுதி. ஆனாலும், அண்ணா நகரையும், அடையாரையும் புறந்தள்ளும் புதிய வார்ப்பு. பெரிய அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஒன்று சேர்ந்து வாங்கிப் போட்ட அத்தனை கிரவுண்ட்களிலும், ஒப்புக்கு அரசுக் கடனும், ஒப்பில்லாத 'மற்றும் பலவும்' மாட மாளிகையாய், கூட கோபுரமாய் எழுந்த பகுதி. குடிக்கக் கூட தண்ணீர் கிடைக்காத சமயத்திலும், சென்னைப் பெருநகர்- அதுதான் மெட்ராஸ் மெட்ரோ வாட்டர் லாரிகள், ஓசைப்படாமல் குடிப்பதற்கு மட்டும் இல்லாமல், குளிப்பதற்கும், குளம் போல் தோன்றும், 'சங்குகளில்' நீச்சல் அடிக்கும் அளவிற்கு நீரைக் கொட்டும்... ஓசைப்படாமல் ஊற்றும்... மின்சார வெட்டு என்பதே இல்லாத பகுதி. ஆங்காங்கே சுழல் விளக்குக் கார்கள்; துப்புரவுத் தொழில் செய்யும் போலீஸ் ஆர்டர்லிகள், சில

வீடுகளில் துப்பாக்கிக்குப் பதிலாக, துடைப்பங்களையும் பிடித்தபடி நிற்பார்கள். இப்படிப்பட்டப் பகுதியில், ஒரு உச்சி அறையை, மனோகர் தெரிந்து எடுத்தானா... தெரியாமலா என்பது தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால், அவனை அன்று உரிமையோடு 'டா' போட்டுப் பேசிய அன்புமணிதான், இந்த அறைக்குக் கூட்டி வந்தான். வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்று அதட்டிய நாராயணசாமி, போலீஸ்க்குப் போவதாய் மிரட்டிய போது 'போய்ப்பார்' எய்ட்ஸ் இருக்கிறவனைப் பிடிக்க எந்த சட்டத்திலும் இடமில்லை' என்றான். 'இவன் இங்கேதான் இருப்பான். வேண்டுமானால் நீங்க காலி பண்ணுங்கோ' என்று அவர்களை அசத்திவிட்டான். ஆனாலும்,நாராயணசாமி வகையறாக்களுடன் ஒரு சமாதானம் ஏற்பட்டது. வாடகையையும் கொடுக்காமல், பத்தாயிரம் ரூபாயும் வாங்கப்பட்டு, கலைவாணி குடியிருந்த அந்த வீடு, காலி செய்யப்பட்டது.

மனோகருக்கு, அறைத்தோழர்கள் குத்திக்கொள்வதை மீண்டும் தானும் குத்திக் கொள்ள வேண்டும் போல் மனம் துடித்தது. துள்ளியது. ஆள் மாற்றிகளாக, முழங்கையும் பின் கையும் சங்கமிக்கும் இடத்தில் குத்திக் கொள்கிறார்களே, அப்படிக் குத்திக் கொள்ள வேண்டும்... அதுதான் மனோவலியை, மாபெரும் சொர்க்கமாக மாற்றும்... மாற்றிக் காட்டும்...

மனோகர், அவர்கள் குத்தி முடியட்டும் என்பதுபோல், இன்னொரு தொளதொளப்பான சிகரெட்டை பற்ற வைத்தான். பாதியை, ஒரே இழுப்பாய் இழுத்து விட்டு, மீதியை ரோம வாடையோடு மார்பில் வைத்துப் பொசுக்கினான். அதன் வலியைப் பொருட்படுத்தாமலே, அவர்களைத் தவிப்பாய் தவித்துப் பார்த்தான். குத்தி முடித்துவிட்டு, நாற்காலியில் இருந்து நழுவிக் கொண்டிருக்கும் சதாசிவன் படு ஒல்லி... உடம்பெங்கும் படைபடையான கருந்திட்டுக்கள்... கீழே விழுந்து விழுந்து.. மேலே போய்க் கொண்டிருந்தான்... இன்னொருத்தன்... சுவர் மூலையில் சாத்தி வைத்த துடைப்பமாய் கிடந்தான்.... நாக்கு முழுவதும் காளான் முளைத்தது மாதிரியான வெள்ளை மயம் கொண்ட சசிகுமார்... தோளிலும் பிடறியிலும் சிவப்புக் கோடுகளைக் கொண்ட நித்திய குமார்... கருகிப் போன சிவப்பன்... கால் கைகள் வீங்கிப் போன சேகர்... கண்களைத் துருத்திய தடிப்பயல் ராமு... இன்னும் இரண்டு மூன்று பேர்... வெளிப்படையாய்ப் பார்த்தால் ஆரோக்கியமாய்த் தெரியும் அன்புமணி... அளவான உயரம்... அளவுக்கு மீறிய வசீகரம். எல்லாவற்றிற்கும் மேலாக, எஸ்தர்... பேண்டும் அசல் ஆம்பிளைச் சட்டையும் போட்டவள்... உள்பாடி போடாத டோன்ட் கேர்காரி; மார்பகம் போல், உடல் முழுவதும் ஒரு மதர்ப்பு... தடிப்பு...

அன்புமணி, எஸ்தர் கையில் ஊசியைக் குத்திக் கொண்டிருந்தான். உள்ளே எதுவுமே இல்லை என்று போக்குக் காட்டும் நிறமற்ற திரவம்... ஊசி

வெள்ளையோடு வெள்ளையாய், தன்னை மறைத்துக் கொண்டிருந்தது.. நித்தியகுமார் எழுந்து, அன்புமணி குத்திய ஊசியை வலுக்கட்டாயமாக பறிக்கப் போனான். உடனே எஸ்தர், அவனைத் தள்ளிப் போட்டாள்... கோபத்தில் இவன், அவளை அடிக்கப் போவதுபோல் கையை ஓங்கினான். பின்னர் எஸ்தர் பார்த்த கிறக்கப் பார்வையாலோ அல்லது அன்புமணியின் பேட்டைப் பார்வையிலோ, நித்தியகுமார், தலைக்குமேல் போன தன் கையை, நாட்டியமாடவிட்டு சிரிப்பாய்ச் சிரித்தான்.

மனோகர், எஸ்தருக்கு ஊசிபோட்டு முடித்த அன்புமணியின் பக்கமாய், உடம்பை நகர்த்தினான். அவனை ஊசியும், கையுமாய் பிடித்துக் கொண்டு கெஞ்சினான்.

''கொட்ரா! கொட்ரா!''

அன்புமணி கொடுக்கவில்லை... கையிலேயே ஊசிக் குழலைப்பிடித்த படி, மனோகருக்கு ஊசிப்போடப் போவது போல் ஊசியை அவன் கைப் பக்கமாய் கொண்டு போவதும், பிறகு பின் பக்கமாய் இழுத்தும் விளையாட்டுக் காட்டினான். மனோகர், பொறுமை இழந்து அங்குமிங்குமாய் ஆடிய அவன் கையைப் பிடிக்கப் போனான். ஆனால், அன்புமணியோ, தனது ஊசியை பம்பரமாய்ச்சுற்றவிட்டான்... மனோகரன் தலைக்கு மேலேயும், கீழேயுமாய் கொண்டு போனான். இதற்குள், சதாசிவன், சசி, நித்தியகுமார்களும், அங்கே தவழ்ந்து தவழ்ந்து நெருக்கியடித்தார்கள். ''எனக்கு, எனக்கு...'' என்றார்கள். உடனே அன்புமணி, அந்த ஊசிக் குழலை, நித்தியகுமாரிடம் நீட்ட, சதாசிவம் அதை அமைதியாப் பார்க்க, மனோகர் கூச்சலிட்டான். வழக்கமான நிதானம், அந்த புகையாலோ என்னவோ புகைந்து போனது.

''ஏண்டா... இந்த ரூம் என்னுது... இந்த மருந்து என்னுது... அப்படி இருந்தும் எனக்கு ஒரு ரவுண்ட் தராட்டால் எப்படிடா?''

''எங்கே இன்னொரு வாட்டிச் சொல்லு!''

அன்புமணியின் கேள்விக்கு, மனோகர் பதிலளிக்காமல், நித்தியகுமார் தனக்குத்தானே போட்டுக் கொண்ட ஊசியைப் பார்த்தான். அன்புமணி, சாட்டையடியாய்ப் பேசினான்.

''ஏண்டா... அல்பம்... ஒன் புத்தியக் காட்டிட்டே பாரு... எப்போ, இந்த எய்ட்ஸ் குரூப்புல... சேர்ந்தியோ... அப்பவே நான் போய், நாம் வரணுமே. ஏண்டா வர்ல.. ஏன்னா நீ அல்பம்''

''தப்புதாண்டா மன்னிச்சுடு...''

''மன்னிச்சிட்டேன்... ஆனாலும் ஒரு பாயிண்டைக் கிளியராக்கணும்.

இந்த ரூம் என்னோடது. சேலத்தில இருக்கிற எங்க டாடிக்கு தெரிந்தவரோட வீடு இது... நான் 'லா' காலேஜ்ல படிக்கிறதாய் நினைத்து.. இந்த ரூமை தந்தாங்க.... அதனாலதான் பத்தாயிரம் ரூபாய் வாடகைக்கு பாக்கி வருவதுவரைக்கும், பொறுமையாய் இருந்தாங்க. ஒன்னோட அல்பம் பத்தாயிரம் ரூபாய், எங்க டாடியோட ஒரு நாள் ஸ்டார் ஹோட்டல் தங்கலுக்கு பத்தாது. பாத்துப்பேசுடா மச்சி. நீ என்னோட டெனன்ட். ஒரு டெனன்ட்ட நான் சரிக்குச் சமமாய் நடத்துறேன் பாரு. அதுக்கு நீ பெருமைப்படணும்... இன்னொன்னுடா... நீ வந்த பிறகுதான், இங்கே கூடுறோம். இந்த அறையை புனிதமா வச்சிருந்தேன்.. ஒனக்காகத்தான், நீ சரியா டிரெயினிங் எடுக்கணுமுன்னுதான், எல்லாரும் இங்கே கூடுறோம்...''

''தப்புதாம்பா! மன்னிச்சுடுப்பா''

''சரி... சரி... யாரோ கதவைத் தட்டுறாங்க. ரெண்டு விரட்டு விரட்டிட்டு வா''

மனோகர், கதவைத் திறந்தான். எதிரே நின்ற பெரியவர் உள்ளே பார்க்க கூடாது என்பதுபோல, திறந்த கதவை மூடினான். பெரியவர், பக்கத்தில் இன்னொருவர்... பழைய முகமாய் தெரிந்தது. எதிர் வீட்டில் பார்த்த ஞாபகம்... முக்கால் கிழடு.. கீழே இருப்பவர், முழுக்கிழடு.

மனோகர், அன்புமணியிடம் வாங்கிக் கட்டியதை, அவர்களுக்குக் கொடுக்கப் போனான்.

''என்ன வேணும்?''

''நானும்... நீ வந்ததுலே இருந்து பார்க்கேன். கதவையும் ஜன்னலையும் மூடிக்கிட்டு என்னப்பா செய்யுறீங்க?''

''என்னமும்... செய்துட்டுப் போறோம்... உங்களுக்கு என்ன?''

''சரி... ஒன்கிட்ட பேசி பிரயோசனம் இல்லே. அன்புமணியைக் கூப்பிடு''...

''அன்புமணி... என்னோட டெனன்ட்... நான்தான் ஒங்களோட டெனன்ட். எது பேசணுமுன்னாலும் என்கிட்ட பேசுங்க. என்ன அநியாயம் இது... ஆளுக்கு ஆளு எகிறிக்கிட்டே போறீங்க... குட்டக் குட்ட குனியுறீங்க... ஸாரி குனிய குனியக் குட்டுறீங்க!''

''நாங்க எப்போ குட்டுனோம்... நீ எப்போ குனிஞ்சே..?''

கோபப்பட்ட எதிர் வீட்டுக் கிழத்தை, உள்வீட்டுக்கிழம் தள்ளிக் கொண்டு போனது. 'காலையிலே பேசிக்கலாம்...' என்று சொன்னபடியே, இவர் அவரைத் தள்ளியபடியே பின் தொடர்ந்தார். அந்த எதிர் வீட்டுப்

பெரியவரோ, ரிஷிக் கர்ப்பம், இரவு தங்காது' என்பது போல், மனோகரை திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே, எகிறி எகிறிய படி இறங்கினார்.

மனோகர், வெற்றிப் பெருமிதத்துடன் அறைக்குள் வந்தான். கதவை மூடிக் கொண்டான். அன்புமணி, அவனைக் கண்டுகொள்ளவில்லை... என்ன நடந்தது என்றும் கேட்கவில்லை... இப்போது, எஸ்தர், மனோகரை கையாட்டிக் கூப்பிட்டாள். அவன், அவளருகே உட்கார்ந்த போது, அவனை தன் மார்பில் சாய்த்துக் கொண்டாள். சேகர் குத்தி முடித்த ஊசியை வாங்கி, மனோகரை எதிர்'பக்கமாய்த் திருப்பி அந்த ஊசிக் குழலால் நரம்பு ஊசி போட்டாள். அவள் ஊசியை எடுக்கப் போனபோது, மனோகர் 'இன்னும்... இன்னும்' என்றான். அவள் எதுவும் பேசாமல் ஊசியை எடுத்தபோது, 'சும்மா சொல்லப்படாது... எஸ்தர்...ஜப்பான் ஊசி மாதிரி ஊசி குத்தும் போது வலியே தெரியல' என்றான்.

சிறிது நேரத்தில், அந்த அறைவாசிகள் அனைவரையும் போலவே, மனோகரும் தனது உள் உலகில் சஞ்சரித்தான். காலற்ற மிதப்புணர்வு; கைகளே சிறகுகளான ஆகாயப் பறப்பு... உடல், பஞ்சுமிட்டாயானது.. கண் முன்னால், எடுத்த எடுப்பிலேயே தொலைக்காட்சிப் பெட்டியில் வருவது மாதிரி ஏழு வண்ணங்கள். இவை தோன்றி மறைந்து, ஏழேழு நாற்பத்தேழு வண்ணக் கலவைகள்... இவை ஒன்றோடொன்று கலந்து ஓராயிரம் வண்ணங்களைக் காட்டுகின்றன. பூமி, அவனைவிட்டு நழுவிப் போனாலும், ஆகாயம் அவனை அணைக்கிறது. அற்புதம்... அற்புதமான வண்ணக் கனவுகள். பிளாக் அன்ட் ஒயிட்டாய் தோன்றிய கலைவாணி, வானத்து தேவதையாகிறாள். அவன் தலையை வருடிக் கொடுக்கிறாள். 'ஏழேழு ஜென்மங்களிலும், ஒனக்கு நான்... எனக்கு நீ, என்கிறாள். ஒவ்வொரு வண்ண விரிப்பிலும் ஒரு ஜென்மம் எடுக்கிறாள். அமெரிக்காவில் இருந்து வெற்றிகரமாய் திரும்பும் அவனை, விமான நிலையத்தில் எதிர் கொள்கிறாள். கம்பெனி சகாக்கள் அவனுக்கு மாலை சூடும் போது, அவள் தானே ஒரு மாலையானது போல, அவன் மார்பில் சாய்ந்து, கழுத்தை பூங்கரங்களால், சுற்றிக் கொள்கிறாள். எல்லாவற்றிற்கும் மேலாய், கணிப்பொறித் துறையில் மகத்தான சாதனைகள் நிகழ்த்தியதற்காக, குடியரசுத் தலைவர், அவனுக்கு விருது வழங்குகிறார். பத்திரிகைக்களும் தொலைக்காட்சிகளும், அவனைப் படம் படமாய் போட்டு, 'சப்ளிமெண்ட்' வெளியிடுகின்றன. கூடவே டாக்டர் சந்திரா, அவனுக்கு எய்ட்ஸ் இல்லவே இல்லை என்கிறாள்.

மனோகர், ஊசி முனையில் தவம் இருக்கும் முனிவர்கள் போல், சொர்க்க லோகத்திற்குள் போய்விட்டான். அங்கிருந்து எட்டிப் பார்க்கிறான். நாராயணசாமியும், சங்கரனும் நரகத்தில் தவிக்கிறார்கள். தவசிமுத்தும்

அங்கே தவளை மாதிரி கத்துகிறார். அருகே நிற்கும் கலைவாணி, அவர்களை கைதூக்கி விடச் சொல்கிறாள். அவனும், அப்பனைத் தவிர, அந்த இருவரையும் தூக்குவதற்குக் கையை நீட்டுகிறான். நீட்டிக் கொண்டே போகிறான். ஒரு அரக்கன் வருகிறான். இவன் அவனது பெயர் கேட்கிறான். உடனே அவன் 'எய்ட்ஸா சூரன்', என்கிறான். அடுத்து இவன் நெற்றிக் கண்ணைத் திறக்கிறான். சூரன் கருகிப் போகிறான். பூலோகத்தார், அவனைக் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்.

மனோகர், போதை மருந்துலகில் புத்தம் புதுக் கனவுகளை கொடுத்துக் கொண்டிருந்தான். விருப்பங்களை வீடியோ காட்சிகளாய்க் கண்டு களித்துக் கொண்டிருந்தான். எஸ்தர், திடீரென்று அவன் மீது சாய்கிறாள். இவன், அவள் மார்பில் தலைபோட்டு, மடியில் உடல் போட்டுக் கொள்கிறான். இருவரும் வெளிப்படையாய் அசையாப் பொருளாய்க் கிடக்கிறார்கள். பிறப்பறுத்த ஒளி உடம்பு... மனம் செத்த மயக்கலோகம்.

அந்த அறைவாசிகள் அனைவருமே, கால, நேர, வர்த்தமானங்களைக் கடந்து, ஒரு அதிசய உலகிற்குள் குதூகலிக்கிறார்கள். சாவில்லா பிறப்பு.. பிறப்பில்லா உயிர்ப்பு.. நோயற்ற பெருவாழ்வு... பூலோகம் நிழலாகிறது... போதை உலகம் நிசமாகிறது... ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ, அந்த அளவுக்கு ஆயுளைக் கொண்ட சொர்க்கம்.

திடீரென்று, அன்புமணியும் நித்தியகுமாரும் இந்த அதிசய உலகில் இருந்து கீழே விழுகிறார்கள். வலி பொறுக்க முடியாமல், கத்துகிறார்கள். இருவருக்கும் கையாடுகிறது. காலாடுகிறது. உடம்பு மொத்தமும் ஒட்டு மொத்தமாய் ஆடுகிறது. பற்கள் கூட ஆடுவது மாதிரியான வாயாட்டம்... அன்புமணி, தனது காலை யாரோ முறுக்குவது போல் காலை வளைக்கிறான். நித்தியகுமார், கழுத்தை யாரோ நெரிப்பது போல் கோழிக் கத்தலாய்க் கத்துகிறான். அவர்களுக்கு வழக்கம் போல் புரிகிறது. இந்த ஆட்டமும் வாட்டமும், இன்னொரு தடவை குத்தினால்தான் போகும்... அப்போதுதான், இந்த நரகத்தின் மதிலில் இருந்து, திரிசங்கு சொர்க்கம் போய், அங்கிருந்து தேவலோகத்திற்குத் தாவ முடியும்.

அன்புமணி, ஒருடலும் ஈருயிருமாய்ப் பின்னிக் கிடந்த எஸ்தரையும், மனோகரையும் இரண்டாகப் பிரித்தான். ஆணாகவும், பெண்ணாகவும் அல்ல. 'தலைகளாகவும்', 'கால்களாகவும்'; பின்னர், கண்ணதிர, காததிரக் கத்தினான்.

''மனோ... மனோ! பணம் தாடா... மருந்து வாங்கிட்டு வாறேன்.... ஜல்திடா... அப்புறம் அவன் போய்டுவாண்டா...''

மனோகர் கேட்கப் போனான். 'இருபதாயிரம் ரூபாய்லே, பத்தாயிரத்தை

என்னடா செய்தேன்னு' கேட்கப் போனான். நாக்கு, உள்ளே தான் போனது... 'கலைவாணிக்காக வைத்திருக்கிற பணன்டா'... என்று சொல்லப் போனான். வாய் திறப்பதற்குப் பதிலாய் பூட்டிக் கொண்டது. அதோடு அவன் சஞ்சாரம் செய்த உலகில், எங்கு பார்த்தாலும் கட்டுக்கட்டாய் நோட்டுக்கள்... தங்கம்... தங்கமாய் நாணயங்கள்... எடுத்துக் கட்டுமே...!

''எடுத்துக்கடா... என் அன்பே எடுத்துக்கோ''

''எதுலடா வச்சிருக்கே?''

''சூட்கேஸ்லே?''

''சொல்லாத நம்பரை எப்படிடா பொருத்துறது''

''மூன்று தடவை ஏழு... எடுத்துக்கோ...''

அன்புமணியும் நித்தியகுமாரும், எஸ்தரையும், மனோகரையும் மீண்டும் ஒன்றாக்கி விட்டு, மாடத்தில் உள்ள சூட்கேசை கீழே இழுத்துப் போட்டார்கள். மூன்று தடவை ஏழு... முழுசும் நோட்டுக்கள். மார்பின் 'மருந்து' வேண்டாம்... 'பெத்தடின்' இருக்கையில் அது எதுக்கு? அந்த பெத்தடின் கூட வேண்டாம். 'மாரிஜுவானா' இல்லாட்டி... ஹஸீஸ்... சேரிப் பையங்க பத்து ரூபாய்க் குத்திக்கிற மில்லி மருந்தைக்கு குப்பையில் போடு' மாரிஜுலானாவை ஊசியிலே ஏற்று!

அன்புமணியும் நித்தியகுமாரும் சூட்கேசை பூட்டாமலே ஓடினார்கள். அந்த சூட்கேஸ் இப்போது வாய் பிளந்து, தனது உரிமைக்காரனை ஏளனமாய்ப் பார்ப்பது போல் தோன்றியது.

நேரம் போகப் போக... எஸ்தருக்கும், மனோகருக்கும் போதை போய்க் கொண்டிருந்தது. ஏறிய வேகத்தில் இறங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அது முழுசாய் இறங்காமலும் பழசாய் போகாமலும் அவர்களை திரிசங்கு சொர்க்கத்தில் நிறுத்தியபோது-

எஸ்தரிடம் மனோகர் கேட்டான்.

''ஒனக்கு எப்படி... ஹெச்.ஐ.வி. உள்ளே போச்சுது?''

''விட்டுத்தள்டா... பையா... நீயும் பொம்மை, நானும் பொம்மை. நோ நோ நீயும் பாசிட்டிவ்... நானும் பாசிட்டிவ்... நினைத்துப் பார்த்தால் எல்லாமே பாசிட்டிவ்... அழாதடா!''

''எனக்காக அழலடி... ஒனக்காக அழுகிறேன்''

''பல்ல உடப்பேண்டா... எனக்காக யாராவது அழுதால், அவங்களை அழவைப்பேன்.. டோண்ட் பீல் பிட்டி பார் மீ''

''சரிடி... ஒன்னோட எய்ட்ஸ் ராமாயணத்தைச் சொல்லுடி''

''மொதல்ல... நீ ஒன்னோட எய்ட்ஸ் பாரதத்தை இன்னிக்காவது சொல்டாபையா!''

''அது பெரிய கதை... அனுமான் வால் மாதிரி நீளும்... மொதல்ல ஒன்னதைச் சொல்லு. அப்புறம் நான் சொல்றேன்''

''பிராமிஸ்...''

''பிராமிஸ்ட்''

''சுருங்கச் சொல்லி விளங்க வைக்கேண்டா...தலைப்புச் செய்தியாவே சொல்றேன்டா... நடுத்தரக் குடும்பம். அம்மாவுக்கு... கண்ணுக்குத் தெரியாத பெரிய வீடு.. அப்பனுக்கு கண்ணுக்கு தெரிந்த சின்ன வீடு... பெரியவங்களோட குடுமி பிடிச்சண்டை.... அண்ணன் தங்கை குஸ்தி... காலேஜ் படிப்பு... எவளோ ஒருத்தியோட பீடா நன்கொடை. ஆரம்பத்தில் ஓசி, அப்புறம் துட்டு. அதுக்காக வீட்டுத்திருட்டு.. அப்புறம் தெருத்திருட்டு... அந்த பீடா இல்லாமல், செத்துப் போகணும் என்கிற தவிப்பு... அவளிடம் சரணாகதி. அப்புறம் வேலூரில் அவள் வீட்டில் வாசம்... பல பயல்களோட படுக்கை... ஒரு அயோக்கிய சமூகத் தொண்டு கும்பல், எனக்கு எய்ட்ஸ் இருக்கறதாய் பீடாக்காரிக்கிட்டே சொன்ன கோள்... அதனால வீட்டுக்கு வெளியே தூக்கிப் போடல்... அன்புமணி பொறுக்கி எடுத்தல்... இதுதாண்டா என்வாழ்க்கை...வாடா செத்துப் போயிடலாம்... அதுக்கு முன்னாடி ஒன் கதையைச் சொல்டா...''

''சொல்றேன்...பாப்பா... சொல்றேன்... மேடம்... ஊமை ஊரைக் கெடுக்கும்... பெருச்சாளி வீட்டைக் கெடுக்குமுன்னு கேள்விப்பட்டு இருக்கியா...?''

''ஆமா கண்ணு...''

''அந்த ஊரு... வெள்ளையன்பட்டி. அங்கே வீட்டைக் கெடுத்த பெருச்சாளி எங்கப்பன்... ஊரைக் கெடுத்த ஊமை யாரு...? நான்... நானே தான்...''

''நேரா விஷயத்துக்கு வாடா''

''வாரேன். வாரேண்டி.. வாடாப்பூ முதல் ஆனந்திவரை நடந்த உடல் விளையாட்டை ஒப்பிக்கேண்டி'

மனோகர், எஸ்தரின் மடியில் தலையைப் புரட்டிப் போட்டான். அவள் கால் மேல் கால் போட்டான். கையைப் பின்புறமாய் வளைத்து, அவள் கழுத்தை வளைத்துப் பிடித்தான். அவனுக்கு, எஸ்தரின் மடி வாடாப் பூவானது... அவள் கழுத்து தேனம்மாவானது... வயிறு ஆனந்தியானது... மருந்துபோதை போனாலும், அதற்கு இணையான காதல் போதை... அவன் கண்களை கிறங்க வைத்தது. வாயைப் பேச வைத்தது.

24

மனோகர், நீலநிறப் பின்னணித் துணியில் சிவப்புக்கோடுகள் போட்ட சட்டையைக் கழட்டி, உடம்பு முழுவதையும் துடைத்தான். தொள தொளப்பான லுங்கியை, ஒரு கையால் தூக்கித் தூக்கி, ஆட்டி ஆட்டி வியர்த்துப் போன கால்களுக்கு விசிறியாக்கினான். கண்களை இறுக்கிக் கொண்டு, நினைவுபாதையில் பின்னோக்கி நடந்தான். ஓடினான், தள்ளாடினான், விழுந்தான். மனத்தில் பதிந்த வண்ணக்காட்சிகளுக்கு ஏற்ப வர்ணனை கொடுத்தான்.

''எங்க ஊர், ஆறு பாய்கிற கிராமம் இல்ல.. கரிசலான பொட்டல் காடுமில்ல... குளமுள்ள ஊரு.. குளம்னா சாதாரண குளமல்ல.. ஏரிக்கும் குளத்திற்கும் இடைப்பட்ட தேக்கம். எங்கேயோ பாயும் ஆறில் இருந்து வெட்டப் பட்டகால்வாய் வழியாய் நீர் வழங்கும் குளப்பாசனம்... இதன் வயல்காட்டில் இருந்து ஒரு ஓடை பிரிக்கிற தோட்டக்காடு. குளம், நிறை மாத கர்ப்பிணியாய் இருக்கும் போது, நஞ்சைக் கிணறுகள் பொங்கி பிரசவிக்கும்.... புஞ்சைக் கிணறுக்கு எட்டு மாதமாகும்''

''அறுக்காதடா... சலிப்பூட்டுறது நல்ல வர்ணனை... இல்லடா...''

''இப்படிப்பட்ட சமயத்தில, நான் எஞ்ஜினியரிங் காலேஜை முடிச்சிட்டு, என்னைத் துரத்தின கம்பெனியில் வேலைக்கு சேர்ந்த நேரம்... கேம்பஸ் இன்டர்வியூவில் நான்தான் இரண்டாவது... மாணவப் பருவத்தில் இருந்த தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கையாய் மாறுன நேரம்... மாதச் சம்பளம் பத்தாயிரத்துக்கு மேல. நட்சத்திர ஹோட்டல் சகவாசம். ஆகாயத்தில் பறக்கிற ஆனந்தம்''

''வாடாப்பூவை பார்க்கறதுக்கு நான் எவ்வளவு நேரண்டா காத்துக்கிடக்கிறது?''

''சொந்தக்காலுல நிற்கிற பெருமிதத்தோடு, ஊருக்கு போனேன். சின்ன வயசிலேயே, அந்தர் அடித்த எங்க கிணத்தில் ஒரு பல்டி அடிக்க ஆசை. கிணற்றுக் குத்துக்காலில் ஏறி நின்னு... கிணத்துக்குள்ளே தலை கீழாய் பாய்வேன்... தலைகீழாய் தாவி, மல்லாந்தும் விழுவேன். ஒரு நாள் உச்சி வெயில்... ஒரே எரிச்சல்... சூரியன் சுட்டது... சோளத் தட்டைகளும், கிணற்று மேடும் மறைக்கும் எங்க கிணற்றுக்குள் நிலை நீச்சலாய் நின்றேன்... அதாவது கவிழ்ந்து படுக்காமல், காலையும் கையையும் லேசு லேசாய் ஆட்டி, செங்குத்தாய் நிற்பது... நின்றேனா...''

''வெளியே ஒரு அழுகைச் சத்தம்... இடையிடையே விசும்பல்... விக்கல். நான், அவசர அவசரமாய் மூலைப்படிக்கு வந்து, மேலே உள்ள ஒவ்வொரு படியாய் ஏறி, ஏறி வெளியே வந்தேன். வாடாப்பூ அழுது கொண்டு நின்றாள். அங்கேயும் இங்கேயுமாய் அல்லாடினாள்... என் வயதுக்காரி. தொட்டால் ஷாக் அடிக்கும் உடல்; கண்ணை சுகமாக்கும் நிறம்... அவள் கன்னத்தில் ஒரு கையின் அடையாளம்; கன்னமேடு, ஏற்ற இறக்கமாய் இருந்தது. அவள் நெற்றிப் பொட்டில் ரத்தத் தலைமுடி, யாரோ பிடித்துவிட்ட சிலிர்ப்போடு கூம்பிக் கிடந்தது... என்னைப் பார்த்ததும், அவள் மலங்க மலங்க விழித்தாள். ஜட்டியோடு நின்ற என்னை சங்கோஜமாய் பார்க்காமலே, படபடப்பாய், பின்னால் திரும்பித் திரும்பி, பயந்துபயந்து சொன்னாள். 'என் புருஷன்... ஒரு கையிலே சாட்டைக் கம்போடவும், இடுப்லே சூரிக்கத்தியோடும், என்னை விரட்டுறான். என்னைக் காப்பாத்து.. காப்பாத்துன்னு' கதறினாள். நான், உடனே பம்பு செட்டுக் கதவைத் திறந்து, அவளை உள்ளே போகச் சொன்னேன்... சந்தேகம் வராமல் இருக்க, கதவையும் இழுத்து மூடி பூட்டிட்டேன். ஐந்தே ஐந்து நிமிடத்திற்குள்ளே, வாடாப்பூ வீட்டுக்காரன் மரியப்பன் வந்தான். அவனை எல்லோருமே லாரிக்கார மாரியப்பன்னே சொல்லுவாங்க... வெட்டரிவாள் மீசைக்காரன்... பயமுறுத்தும் கண்கள்; சிலர் குடிக்காவிட்டால், ஆடு; குடித்தாலோ ஓநாய்... ஆனால் இவன் எப்பவுமே ஒரு போக்கிரி... அசல் கழுதைப் புலி... என்னை பார்த்து, 'என் வீட்டுக்காரி மூதேவி இங்கே வந்தாளா?' என்றான். அவள் கிடைக்கவில்லையானால், என்னை வெட்டப் போகிற மாதிரி; நான் 'இல்லியண்ணே' என்று சொல்லிவிட்டு, ஒப்புக்கு, அவனோடு சேர்ந்து அங்குமிங்குமாய் தேடினேன். அப்புறம் 'ஒரு பெண்ணை... ஒன்னை மாதிரி, ஒரு வீரன் அடிக்கலாமா அண்ணே' என்று கேட்டேன். 'நான் அவளை அடித்தேன்னு ஒனக்கு எப்படித் தெரியுமுன்னு?' சந்தேகமாய் கேட்டான். உடனே 'புத்திசாலியா' நான் 'இன்னைக்கி கன்னத்தில கை பதியும்படியா

அடித்ததைச் சொல்லல... முன்னால அடித்ததை சொன்னேன்'னு சொன்னேன். நல்ல வேளையாய், அப்போப் பார்த்து பனையேறி மாமா மேகலிங்கம், கலையங்கள், முறுக்கு தடியில் தொங்க வந்தார். கள்ளு வேணுமாடா... கள்ளு' என்று மாரியப்பனைப் பார்த்துக் கேட்டார்... அவன் சப்புக் கொட்டினான். பனையேறி மாமா, அவனை ஒரு கள்ளு கலசத்தை தூக்க வைத்துக் கொண்டு, அவன் முதுகைத் தள்ளினார்... பிறகு, என் பக்கமாய் ஓடிவந்து, 'பனைமரத்துல பாளை சீவும் போது பார்த்துட்டேன்... வாடாப்பூவை... பாவம்... பக்குவமாய்... அனுப்புன்னு' சொல்லிட்டு போயிட்டார். நான் சிறிது நேரம் சிலையானேன். அப்புறம் கிணற்றுக்குள் போட்ட கல்லானேன். அரைமணி நேரத்திற்குப் பிறகு, பம்பு செட்டுக்கதவு தட்டப்பட்டது. நான் பயந்தபடியே திறந்தேன்... மாரியப்பன் வந்திடுவானோ என்ற பயம்.. கள்ளு மாமா கவனித்துக் கொள்வார் என்ற ஆறுதல். கதவைத் திறந்தேன்; வாடாப்பூ, பேய் பிடித்தவள் போல் கண்களை அகலமாக்கி, தலைமுடியை விரித்துப் போட்டு, தன்னை மறந்து நிற்பதுபோல் நின்றாள். அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று எனக்குப்பயம்... அதற்கு ஏற்ப, தலையில் ஒரு குடம் இருப்பது போலவும், அதைப் பிடித்துக் கொண்டு இருப்பது போலவும், கைகளை தலைக்கு மேல் கொண்டு போய், அப்படியே வைத்திருந்தாள். உடனே நான், பம்ப் செட் தரையில் கசிந்த நீரை உள்ளங்கையில் ஏந்தி, அவள் முகத்தில் அடித்தேன். நெற்றிப் பொட்டில் உறைந்த ரத்தத்தை, எனது லுங்கி முனையில் துடைத்துவிட்டேன். எந்த விகற்பமும் இல்லாமல், அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தேன். இத்தகைய ஆண் ஆதரவு, இதுவரை கிடைக்காததாலோ என்னவோ, வாடாப்பூ முட்டி மோதினாள். கதவில் தலையை மோதவிட்டாள். உடனே நான், அப்போதும் எந்த விகற்பமும் இல்லாமல், 'இனிமேல் நீ... இவனோட வாழப்படாது... ஆனால், கொஞ்ச நாளைக்கு பல்லைக் கடிச்சிக்கோ... மெட்ராஸ்லே என் கம்பெனியிலே உனக்கு நல்ல வேலையா வாங்கித் தாறேன்' என்றேன். இதைக் கேட்டதும் அவள் 'நீ சொன்னதே போதும்' என்று அரற்றியபடியே, என் கழுத்தை ஒரு கதவாக நினைத்து, அதில் முகம் போட்டு, முட்டி மோதினாள். நான் அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் தலையைக் கோதிவிட்டபோது, அந்தப் பஞ்சும் இந்த நெருப்பும் பற்றிக் கொண்டன. எல்லாம் முடிந்ததும், அவள் ஓலமிட்டாள். மாரியப்பன் கொடுக்காத அழுகையை, நான் கொடுத்துவிட்டேன். நானும் கைகளை நெறித்தேன். கால்களை தரையில் உதைத்தேன்''...

மறுநாளே, மாரியப்பன் லாரியில் போய்விட்டான். திரும்பி வர மாதமாகும். நான், உச்சி வெயில் வராத காலையிலும், மஞ்சள் வெயில் அடிக்கும் மாலையிலும் தோட்டத்துக்குப் போனேன். வாடாப்பூவும் புருஷன்

விரட்டாமலே வந்தாள். நெற்றியில் குங்குமம் வைத்து, தலைமறைய பூ வைத்து, காலையில் ஆட்டுக்கும் மாலையில் மாட்டுக்கும் புல் வெட்டுவதாய் போக்குக்காட்டி வந்தாள். மத்தியானம் தலை மறைவாய் வந்தாள். நான் வாக்குக் கொடுத்ததுபோல், கலைவாணியோட சம்மதத்தில், அவளுக்கு கம்பெனியில... ஒரு வேலை வாங்கிக் கொடுக்க நினைத்தேன். அதுக்குள்ளே எல்லாமே எய்ட்ஸாயிட்டு. சும்மா சொல்லபடாது... கலைவாணியோடு என் திருமணம் நிச்சயமானதும், வாடாப்பூ என்னைத் திரும்பிக் கூட பார்ப்பதில்லை... பாவம் என்னைப் போல், அவளுக்கும் எய்ட்ஸ் நிச்சயம்... அவள் மூலம் ... எனக்கும், மாரியப்பன் மூலம் அவளுக்கும்... எவ்வளவு பெரிய ரத்த பந்தம் பாரு...''

''ஓகே... நெக்ஸ்ட்...''

''அப்புறம் தேனம்மா...''

''ஒன் மினிட்.... தேனம்மா எப்படி இருப்பாள்? கொஞ்சம் பொறு... காமிராக் கண்களை அட்ஜெஸ்ட் செய்யறேன்... கலர் வந்துட்டு.. சொல்லு.. எப்படி இருப்பாள்...?''

''என் வயதுக்காரி... வாழைப்பூ நிறம்... என் காதளவு உயரம்... பாக்குமர நளினம். ஆமணக்கு செடியின் சாயல், முத்தம் கொடுக்க போவது போல் குவியும் உதடுகள்''

''நீ கவிஞன்டா... அதனாலயே பொம்பளைக் கள்ளன்டா... லேடி கில்லர்டா... சரி சொல்லுடா''

''இந்த தேனம்மா... வாடாப்பூவோட உயிருக்கு உயிரான தோழி. என்னை, எங்கே பார்த்தாலும், அங்கேயே நிதானமாய்... பொதுப் படையாய் பேசுறவள். வாடாப்பூ உறவுக்குப் பிறகு என்னைப் பார்த்தால், குறுஞ்சிரிப்பாய் சிரிக்கிறதும்... நிற்காமலே ஓடுறதுமாய் ஆகிட்டாள். ஒரு துணி வியாபாரியோட பெண்டாட்டி.... அந்த ஆசாமி ஊர்ல இருக்கிறதே அதிசயம்... பம்பாய் ஹைதராபாத் என்று சேலை மூட்டைகளைத் தூக்கிட்டு நகரம் நகரமாய் அலையுறவன்... ஒரு நாள், தோட்டத்துப் பக்கமாய் எதற்கோ வந்த இந்த தேனம்மா கிட்டே கேட்டுட்டேன்... 'எதுக்காக என்னைப் பார்த்துட்டு ஓடுறே'ன்னு கேட்டேன். 'பார்க்கிறவங்க தப்பா நினைக்க மாட்டாங்களான்னு' கேட்டேன். உடனே அவள் சிரித்தாள். பிறகு 'எனக்கு எல்லாம் தெரியும்... வாடாப்பூ சொன்னாள்'ன்னு வெட்கத்தோடு சொன்னாள். நான் பயந்துட்டேன். விவகாரம், மாரியப்பன் காதுக்குப் போனால், அவன் பேசமாட்டான். அவனோட சூரிக்கத்திதான் பேசும்... அந்தக் காட்சியை நினைத்து கண்ணை மூடினேன்.. அப்புறம் திறந்தால்,

தேனம்மா, பக்கத்தில் வந்து நின்னாள்... நான், யதேச்சையாய்...''

''நிறுத்துடா... ஒனக்கு எல்லாமே யதேச்சை... அந்தப் பொண்ணுக மட்டும் நினைச்சே வருவாளுங்க... இது ஆணதிக்கம்டா''

''உச்சக்கட்டத்தில உச்சியை பிடிக்காதே! நான் தேனம்மாவை யதேச்சையாய்''

''இந்த வார்த்தைய சென்சார் பண்ணிட்டேன். சரி மேற்கொண்டு போ''

''நான், என்னை அறியாமலே... தேனம்மாவின் மோவாயைப் பிடித்துகெஞ்சினேன். வேறு யார்கிட்டயும் சொல்லிடாதேன்னு அழுங்குரலில் சொன்னேன். உடனே, அவள் அழுதாள். நான் பயந்து போய் விலகி நின்னேன்... தலைவலி, போய் திருகுவலி வந்திட்டேன்னு வெல வெலத்தேன். அவள் மெள்ளப் பேசினாள். அப்புறம் ஆவேசமாய்ப் பேசினாள். அவள் புருஷனும் இன்னொரு மாரியப்பனாம்... மூன்று மாதத்திற்கு ஒரு தடவை வந்து, முரட்டுத்தனமா பாய்வானாம்... மறுதடவை வரும் போது, 'உண்டாயிட்டியான்னு' கேட்பானாம். இல்லன்னு இவள் தலையாட்டினால், போட்டு போட்டு அடிப்பானாம். மலடி... மலடின்னு திட்டுவானாம்... 'மொதல்ல ஒன்னை சோதித்துப்பாருன்'னு ஒரு நாள் கேட்டபோது, எனக்கு பிறந்திருக்கிற பிள்ளைகளுக்கு... ஒரு பஞ்சாயத்து பள்ளிக்கூடமே நடத்தலாமுன்னு, சொல்லிச்சிரிச்சானாம். 'அடுத்த தடவை வரும் போது, நீ மட்டும் முழுகாட்டால், ஒரேடியாய் 'தலைமுழு கிடுவேன்னு' விரட்டிட்டு போயிட்டானாம். தேனம்மா அழுதாள். அவன் கண் முன்னாலயே, ஒரு குழந்தை பெற்றுக் காட்டணுமுன்னாள். அவனுக்காக இல்லாட்டாலும் தனக்காகவாவது ஒரு பிள்ளை வேண்டும் என்று வெளிப்படையாவே சொன்னாள். அப்புறம் என்ன! அடுத்த தடவை நான் ஊருக்குப் போகும் போது, அவளுக்கு ஒரு குழந்தை...நான்கு மாதக் குழந்தை... நோயாளிக் குழந்தை; பிறந்த ஏழாவது மாசமே இறந்துட்டு... இப்போதான் இறந்ததுக்குக் காரணம் புரியுது''

மனோகர், பேச்சை நிறுத்திவிட்டு, அண்ணாந்து பார்த்தான். உள்ளே மனதில் ஊடுருவிய சினிமாஸ்கோப்பில், முரட்டுக் கணவனால் அடிபடும் வாடாப்பூ. பெற்ற பிள்ளையைப் பறிகொடுத்துட்டு, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளும் தேனம்மா...

எஸ்தர், அவனை, தலையைப் பிடித்து உலுக்கினாள். தோளைத் தொட்டு குலுக்கினாள்... உடனே, மனோகர் மனத்திரையில் ஆனந்தி... அதே பம்ப் செட் அறை... அதை, காதல் செட் என்றே பெயரிட்டாம்.

''ஆனந்தி இருக்காளே.. அவள் அழகுக்கு, கலைவாணி ஈடாக மாட்டாள். நான், பள்ளிக் கூடத்தில் எட்டு படிக்கும் போது, இவளும் கலைவாணியும் ஐந்து படித்தார்கள். காலையில் பிரேயர் கூட்டம்... 'கன்' டயம்லே நடக்கும்; தலைமை ஆசிரியர், தேசிய கொடி ஏற்றுவார். அந்தக் கொடியையே அடிக்கப் போவதுபோல், டிரில் மாஸ்டர் கையில் பிரம்போடு நிற்பார். லேட்டாய் வருகிறவர்கள், ஒரு ஓரமாய் நிற்கணும்... பிரேயர் முடிந்ததும், தலைமை ஆசிரியர், டிரில் மாஸ்டரோட ஓரம் கட்டப்பட்ட மாணவ, மாணவிகளிடம் வருவார். ஒவ்வொருவர் கிட்டயும் காரணம் கேட்பார். நான் தாமதத்திற்கு சொன்ன காரணம், தலைமை ஆசிரியருக்கு பிடிக்கவில்லை... உடனே, டிரில் மாஸ்டரைப் பார்த்து கண்ணசைத்தார். உடேன அந்த டிரில், என்னையே டிரில் போடப் போவது போல் உற்றுப் பார்த்தது... ஆசாமிக்கு குதிரை முகம். ஓநாய் பார்வை.. அன்றைக்குப் பார்த்து பிரம்பு கொண்டு வரவில்லை. உடனே, ஐந்தாவது வகுப்பறைக்குள் வரிசையாய் போன ஒரு மாணவனைப் பார்த்து, தன்னோட, அறையில் இருக்கிற பிரம்பை எடுத்து வரச் சொன்னார். அதுக்குள்ளயே இந்த ஆனந்தி, பக்கத்தில் கிடந்த ஒரு வாத மடக்கிக் கம்பை எடுத்து, டிரில் மாஸ்டரிடம் நீட்டினாள். கலைவாணி அவளைத் தடுத்தாள். கட்டிப் பிடித்தாள். ஆனாலும், ஆனந்தி அவள் தலைக்குமேலே கம்பைக் கொண்டு போய், டிரில் மாஸ்டரிடம் ஒப்படைத்தாள். அவர், என்னை புறங்கையை காட்டச் சொல்லி, வாங்கு வாங்குன்னு வாங்கிட்டார். அதுக்கு முந்தின நாள், அவர் நடந்து போன போது சைக்கிளில் போன நான் இறங்கவில்லை... அந்தக் கோபம் அவருக்கு... ஆனந்தியைத் தடுத்த கலைவாணிக்கும்... உள்ளங்கையில் பிரம்படி... கை சிவக்கும்படி ......''

''எல்லாருக்கும் ஸ்கூலுல அடி கிடைக்கும்... இதா பெரிசு... அந்தச் சின்னஞ்சிறிசு கிட்டே வாடா...''

''ஆனந்தியைப் பார்த்தாலே எனக்கு பற்றி வரும். இதனாலயே ஊருக்கு நான் போகும் போது, அவளைப்பார்த்தால் ஒதுங்கிக் கொள்வேன். அவளும், அலட்டிக்க மாட்டாள். ஒரு தடவை, என்னைக் காப்பியடித்தாள்; அதாவது பார்த்துவிட்டு திரும்பிப் போனாள். காலயில் கரெக்டா எட்டு மணிக்கி, எங்க தோட்டத்துக்கு பக்கத்தில் உள்ள அவள் தோட்டத்துக்கு பிளாஸ்டிக் கூடையில் மாற்றுப்புடவை வகையறாக்களை வைத்துக் கொண்டு போவாள். ஒரு வண்ணத்துண்டு மட்டும் தோளுல தொங்கும். அவள் தோட்டம் ஒரு பனந்தோப்பு.. இடையிடையே தென்னைமரங்கள், கோணி நிற்கும். ஒவ்வொரு பனையும் ஒரு ராட்சதனின் முகம் போலவும், தென்னை ஓலைகள், அவன் மீசை போலவும், கீழே நிற்கும் விடலிகள், அவன் காலணிகள் போலவும்...''

''அறுக்காதே... அறுக்காதேடா... அதுக்குன்னே நித்தியகுமார் இருக்கான்''

''சரி... அன்றைக்கும் ஆனந்தி... தோட்டத்துக்கு, தோளுல துண்டு துலங்க போனாள். போயிட்டு சிறிது நேரத்தில் எங்க கிணற்றுப் பக்கமாய் வந்தாள். அவள் போகும் போது பல்லைக் கடித்தபடி போனாள். இப்பவோ, பல் தெரிய வந்தாள். 'எங்க பம்ப் செட்டுல மோட்டார் ரிப்பேர்... எனக்கு காலேஜ்ல ஷவர்ல குளித்துப்பழக்கமா... அதனால பம்ப் தண்ணீர்லே தலையைக் கொடுக்கிறது ஒரு சந்தோஷமா... ஸோ... மோட்டாரை ஆன் செய்துட்டுப் போங்க...நான் குளிச்சிட்டு செட்டை பூட்டிட்டு..சாவியை என் தம்பி மூலம் கொடுத்தனுப்புறேன்' என்றாள். நான் தலையாட்டிவிட்டு, போகப் போனேன். பிறகுதான், எனக்கு ஞாபகம் வந்தது. நானோ, தங்கை மீராவோ வேலையாட்களோ, பம்ப் செட் தண்ணீரில் குளித்து கரெண்டையும் தண்ணீரையும் வேஸ்டாக்கிடபடாதுன்னு... எங்கப்பன்... மோட்டார் ஸ்விட்சை உல்டாவாய் வைத்திருந்தார். நான் இதைச் சொல்வதற்காக பம்பு செட்டுக்கு பக்கமாய், வேகவேகமாய் போய் விளக்கமளித்தேன்... உடனே அவள்... 'கிண்டலா' என்ற போது, உள்ளே போய் ஸ்விட்சை 'ஆன்' செய்தேன்... அவளும் உள்ளே வந்தாள். எப்படியோ நான் 'ஆன்' ஆனேன். அவள் 'ஆப்' ஆனாள்.''

''அடேய் பாவி.. அந்த ஆனந்தியையே கட்டியிருக்கலாமேடா...?''

''இருக்கலாம்.. ஆனாலும் அது ஒரு செக்ஸ் விபத்து... அவ்வளவுதான்... அதோட ஒரு நாள் தேனம்மாவையும், என்னையும் அதே பம்ப் செட்டுல பக்கத்தில் பக்கமாய் பார்த்துட்டாள். வேறு யாராக இருந்தாலும், வெளில டமாரம் அடித்திருப்பாள். தேனம்மாவோட குட்டை உடைச்சால், தன் குட்டும் தானாய் உடையுமுன்னு நினைத்தாளோ என்னமோ ஒதுங்கிட்டாள்...''

''நீ ஒரு உமனைசர்டா''

''ஆமாம்... எந்தப் பெண்ணையும் போனாப் போகிறதுன்னு நான்தான் விட்டுவைக்கிறது... அப்புறம் எங்க அக்காவோட நாத்தனார்... இப்போக்கூட எதிர்வீட்டு பொண்ணு வலிய வலிய வந்து சைட் அடிக்காள். அதனாலதான் அவளோட தாத்தா.. இந்த வீட்டுக் கிழத்தோட வந்து கத்திட்டுப் போறார்...''

''அடேய்... பாவி... வேணாண்டா... ஒன்னோட எய்ட்ஸ் அவளுக்கு வந்துடப் படாதுடா. அக்கிரமக்காரிங்ககிட்டே... அடங்காப் பிடாரிங்ககிட்டே வேணுமுன்னா... போ... ஆனால் அப்பாவிப் பெண்களை... விட்டுடா.. பிராமிஸ் பண்ணுடா.. ஒனக்கு வேணும்னா...

நான் இருக்கேன்டா...'

'நானும் மனுஷன்தான் எஸ்தர்'

"அப்புறம்... கலைவாணியை மட்டும் ஏண்டா... கல்யாணத்துக்கு முன்னால விட்டு வச்சே..."

"கலைவாணியைப் பார்க்கும் போது... குறைந்தபட்சம் எனக்கு, அவளைக் கையெடுத்துக் கும்பிடணும்போல தோணியது. அவள் பேசுறதை கேட்கத் தோணும்... பேசுற வாய்க்கு முத்தம் கொடுக்க தோணாது... ஒண்டர்புல் கேர்ல்... அதோடு அவளையே கட்டிக்கலாமுன்னும் ஒரு விருப்பம்... கல்யாணத்துக்கு முன்னால் கட்டிக்கப் போற என்னால் கூட.... அவள் கன்னி கழியப்படாதுன்னு ஒரு விருப்பம்..."

"நீ... ஒரு செல்பீஷ் பெல்லோ... ஆனாலும், கலைவாணியை நினைத்தாலே எனக்கு குமட்டுது.. மனுஷியா அவள்? ஒன்னை மட்டும்... அவள் அப்படி அம்போன்னு விட்டுட்டுப் போகாட்டால்... நீ பம்பாயிலோ... இல்லாட்டி டில்லியிலோ.. வேற கம்பெனில சேர்ந்து... வேலை பார்த்திருக்கலாம்... அதுவும் இல்லாட்டி... ஒனக்கு கிடைத்த இரண்டு லட்சம் ரூபாய்ல... ஒரு சின்ன யூனிட்டை ஆரம்பித்திருக்கலாம்... நீங்க ரெண்டு பேருமே காரும், வீடுமாய் இருக்கலாம். இப்படி அன்புமணி பாஸ்டர்ட்கிட்ட சிக்கி இருக்க வேண்டாம். இவன் கிட்டே ஜாக்ரதையா இருடா... பொல்லாத போக்கிரிடா..."

எஸ்தர் துள்ளிக் குதித்து நின்றாள்... அன்புமணியின் கழுத்தை அப்போதே நெரிக்கப் போவதுபோல், இரண்டு கரங்களையும் குவித்தாள். மனோகரும் எழுந்தான். அவளை தோள் தொட்டு, அழுத்தி அழுத்தி, தரையில் மீண்டும் உட்கார வைத்தான். சிறிது நேரத்தில், எஸ்தருக்கு போதை முழுவதுமாக தெளிந்துவிட்டது. தெளியத் தெளிய வேதனை... உடலெல்லாம் நடுக்கம்... முகம், பின் பக்கமாய் திரும்பப் போவதுபோல் சுழன்றது. மனோகர், அவள் தலையைப் பிடித்துக் கொண்டான். குலுங்கிய கால் கைகளைப் பிடித்து விட்டான். ஆனால், எஸ்தரோ கதவைத் திறந்து வெளியே வந்து நின்றாள். மாடிச் சுவர்களில் சரிந்து கீழே தொங்கினாள். இப்போது, அன்புமணி அவளுக்கு ஒரு அதிசயமாய்த் தெரிந்தான். அவள் ஆட்டத்தையும், வாதையையும் கழித்து கட்டிவிட்டு, அவளை இழந்த சொர்க்கத்திற்குள் கூட்டிப் போகும் 'போதை மருந்து புருஷோத்தமனா'ய் தென்பட்டான்.

எஸ்தர் பொறுமை இழந்தாள்... மனோகரை, கைகளால் பிராண்டினாள். பல தடவை நச்சரித்தாள்.

''பணம் தாடா... பணம் தாடா...நானே வாங்கிட்டு வாரேன். ஒனக்கும் எனக்கும் வாங்கிட்டு வாறேன்...''

மனோகரும் வெளியே போய், மாடிச் சுவர் வழியாய் எட்டிப் பார்த்துவிட்டு, உள்ளே வந்தான். வாய் பிளந்து கிடந்த சூட்கேஸின் மேல் பகுதியின் அடிவாரத்தில் உள்ள ஜிப்பை திறந்தான். ஒரு நோட்டுக் கட்டை எடுத்து எஸ்தரிடம் நீட்டினான். அதற்குள் அன்புமணியும் நித்தியகுமாரும் உள்ளே வந்தார்கள். இன்னும் கண் விழிக்காமல், தூங்காமல் தூங்கி சுகம் பெறும் சசிகுமார், சேகர் வகையறாக்களை உசுப்பி விடப் போனார்கள். இதற்குள் எஸ்தர் படபடத்தாள். அன்புமணியின் காலில் விழுந்து, அவன் முட்டிக்கால்களைகட்டிக் கொண்டு, முகத்தைத் தூக்கி பாம்பு மாதிரி பற்றிக் கொண்டு, பிச்சைக்காரியாய் கெஞ்சினாள்...

''போட்றா... போட்றா... ஊசி போட்றா''

அன்புமணி செயல்படும் முன்பே, ஒரு அழைப்பு மணிச் சத்தம்... முதலில் மென்மையாய், அப்புறம் முரடாய்... பிறகு கதவு தட்டப்பட்டது. உருமி மேளமானது... உடையப்போனது.

அன்புமணி கண்ணசைப்பில், நித்தியகுமார் கதவைத் திறந்தான். உள்ளே ஒரு கும்பல் தாவி வந்தது. இடுப்பில் ரிவால்வரோடு ஒரு நட்சத்திர காக்கிச் சட்டைக்காரர்... தோள் பக்கம் கோடுகள் போட்ட நான்கைந்து லத்திக்கம்புக் காரர்கள்.

அந்த போலீஸ் அதிகாரி, வாய் மூடாத சூட்கேஸ் பக்கம் போன போது, மனோகர், சும்மா இருந்திருக்கலாம்... காட்டுக் கத்தலாய் கத்தினான்.

''அய்யோ... என் ரூபாய், அய்யோ.. .என் ஒரு லட்சம்...''

அந்த சூட்கேஸை காலால் இடறப் போன இன்ஸ்பெக்டர், அதைக் கையால் பற்றினார்...

25

கலைவாணி மூன்று அறைகளையும் பெருக்கி முடித்துவிட்டு, கையில் துடைப்பத்தோடு வராண்டாவிற்கு வந்தாள். குண்டும் குழியுமாய், தூசியும் தும்புமாய் உள்ள தரையைக் கவனிப்பதற்கு முன்பு, மேல் கூரையையும், நான்கு சுவர்களின் 'முக்கடிகளையும்' துப்புரவு செய்ய வேண்டும் போல் தோன்றியது. அவற்றில் சிலந்தி வலைகளும், தூசி துப்பட்டைகளும் இன்னொரு மருத்துவமனைபோல் தோன்றியது. அண்ணாந்து பார்த்தவள், ஒட்டடைக் கம்பைக் கொண்டு வந்து, பாதங்களின் பின்பகுதியைத் தூக்கி, கால் விரல்களில் நின்றபடி, அவற்றைச் சாடினாள். அப்படியும் எட்டாத வலைகளை, இளக்காரம் செய்த கருந்திட்டுக்களை, இரண்டு கையாலும் ஒட்டடைக் கம்பைப் பிடித்தபடியே, குதித்துக் குதித்து சாய்த்தாள். இன்னும் எட்டாத இடத்தைத் தொட்டுத் துலக்குவதற்காக, ஒரு முக்காலியைக் கொண்டு வந்து, அதில் ஏறி, வெண் சாமரம் போலான அந்த ஒட்டடைக் கம்பைத் தூக்கியபோது, அவளையும் அந்தக் கம்பின் அடிவாரத்தையும் சேர்த்து, ஒரு கரம் பிடித்தது. அப்படி பிடித்த கையோடு கீழே குனிந்து பார்த்த கலைவாணியிடம், சந்திரா சாடினாள்.

''நான் ஒன்னைத் தோழியாய்த்தான் கூட்டி வந்தேனே தவிர.. வேலைக்காரின்னு இல்ல... என் பாவத்துக்கு கங்கையில் மூழ்கிறதுக்குப் பதிலாய்... அந்தக் கங்கையையே இங்கே கொண்டு வந்தது மாதிரி... கொண்டு வந்திருக்கேன்...''

'அப்போ... கங்கை, வீட்டைக் கழுவி விடுறதுல தப்பில்லயே... என்னைவிடுங்க.. இன்னைக்கு... தரையைக் கழுவி விடணும்... கழுவாமல் துடைக்கிறது, டாக்டர் முஸ்தபா காப்பர்-டியை எடுக்காமல், ஆபரேஷன்

செய்தது மாதிரி...'

''ஒன்கிட்ட பேசிப் பிரயோசனம் இல்ல... எம்மா இங்கே வாங்கம்மா...?''

சமையலறையில், தட்டுமுட்டுச் சத்தங்களை உண்டாக்கிக் கொண்டிருந்த அம்மாக்காரி ராசலட்சுமி, ஈரக் கரங்களை முந்தானைக்குள் விட்டுத் துடைத்தபடியே வந்தாள். அன்று, முதல் தடவையாகப் பார்ப்பவர்களுக்கு அவள் மொக்கையான கையை மறைத்து வைத்திருப்பதுபோல் தோன்றலாம்...

''ஏம்மா... இந்தப் பொண்ணவேலை செய்ய விடுறீங்க..''

''நல்லா இருக்கே கூத்து... நான் எதுக்கு வேல வாங்குறேன்''

''வாங்குறீங்கன்னு சொல்லல... இப்படி அரக்கப் பரக்க வேலை செய்யும் போது... நீங்க தடுக்கலாமே...''

ராசலட்சுமி, மகளையும், முக்காலியில் வளைந்து நின்ற கலைவாணியையும் ஏற்ற இறக்கமாய் பார்த்தாள். மகளை எரிச்சலாகவும், மற்றவளை எரிப்பது போலவும் மாறி மாறிப் பார்த்தாள். கலைவாணி, சந்திராவின் மோவாயைப் பிடித்தபடி, ஏதோ சொல்லப் போனாள். அதற்குள் ராசலட்சுமியம்மா, எக்காளமாகக் கேட்டாள்.. மகளைத்தான்.

''இப்பல்லாம்... ஒன் கண்ணுக்கு நான் ஆகாமப் போயிட்டேன்... நானும் பார்த்துட்டுத்தான் இருக்கேன்...பத்து நாளாவே ஒன் பேச்சு, ஒரு மாதிரி தான் இருக்குது''

ராசலட்சுமி, மீண்டும் சமையலறைக்குள் போய்விட்டாள். தட்டுக்களும், தம்ளர்களும், ஒன்றோடொன்றாய் சண்டை போடும் சத்தம். கரண்டியும் செம்புகளும் கராத்தே போடும் ஓசை... பேயோசை... பெருவோசை...

சமையலறைக்குள் கோபமாய்ப் போகப் போன சந்திராவை, கலைவாணி கீழே குதித்துப் பிடித்துக் கொண்டாள். ஒருத்திக்கு ஒருத்தி அனுதாபம் தெரிவிப்பது போல், சிறிதுநேரம் தலை குனிந்து நின்றார்கள். டாக்டரம்மாவின் தாய், கடந்த எட்டு நாட்களாகவே, கலைவாணியை சாடைமாடையாகத் திட்டுகிறாள்... மகள் வந்ததும் பெட்டிப் பாம்பாகிறாள்... அவள் போனதும், வட்டியும் முதலுமாய் வாய்க்கு வந்தபடி, இவளுக்காக, தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் பேசுகிறாள். 'இது என்ன சத்திரமா சாவடியா...' 'கரையான் புத்தெடுக்க கருநாகம் குடியேறிச்சாம்...'

கலைவாணி, சந்திராவை நினைத்து, அவள் அம்மாவைக் கழித்தாள். பிறகு மீண்டும் முக்காலியில் ஏறப் போனாள். சந்திரா, அந்த முக்காலியை தூக்கிப் பிடித்தபடியே கேட்டாள்.

''நீ என் தங்கை மாதிரியம்மா... வேலைக்காரி இல்ல''

''தங்கை தான் இந்த மாதிரி வேலைகளை செய்வாள்.. வேலைக்காரி எங்கே செய்வாள்?''

''எங்கம்மா... பேசுறதை பெரிசா எடுத்துக்காதம்மா... இது மென்டல்...''

''நம்ம அம்மான்னு சொல்லுங்க''

''அப்படின்னா... அக்காவும், தங்கையோட வீட்டு வேலையை கூடமாட செய்யலாம் பாரு''

கலைவாணி தடுக்கும் முன்பே, சந்திரா கைபிடித்த முக்காலியை கீழே வைத்துவிட்டு, அதில் ஏறி நின்றாள். கீழே நின்றவளிடம் இருந்து, ஒட்டடைக் கம்பை வலுக்கட்டாயமாக வாங்கப் போனாள். இடையிடையே, சமையலறை வாசல் வழியாக எட்டிப் பார்த்த ராசலட்சுமி, இனிப் பொறுத்தது போதும் என்பது போல கூடத்திற்கு வந்து கத்தினாள்.

''ஏய்... சந்திரா கீழே இறங்கு.. ஒனக்கு ஏன் இந்த தலையெழுத்து... கலைவாணி, ஒனக்காவது புத்தி வேண்டாம்... ஆஸ்பத்திரி, நோயாளியின்னு அல்லாடுறாள். வீட்ல தண்டச்சோறா சாப்பிட்டுட்டு இருக்காள்?''

கீழே குனிந்து துடைப்பத்தை எடுக்கப் போன கலைவாணி, துடைப்பத்தையும் எடுக்காமல், மேலேயும் நிமிராமல், இடைப்பட்டு நின்றாள். அம்மாவின் பேச்சில் உள்ள 'உட்பூச்சை' புரிந்து கொண்ட சந்திரா, ஏறி நின்ற முக்காலி அங்கும் இங்குமாய் ஆடும்படிக் கத்தினாள்.

''எம்மா... ஒங்களுக்கு கொஞ்சமாவது மேனேர்ஸ் இருக்குதா...? மொதல்ல, பிறத்தியார் மனசை நோகடிக்காம பேசுறதுக்கு தெரிஞ்சிக்கணும்''.

டாக்டரம்மாவின் தாய்க்காரி, முணுமுணுத்தபடியே, மீண்டும் சமையல் வாசம் செய்யப் போய்விட்டாள். சந்திரா, கலைவாணியை நோட்டம் போட்டுப் பார்த்தாள். அவளோ, தான் இயல்பாக இருப்பதாய் காட்டிக் கொள்ளவோ என்னவோ, ஒரு சிலந்தி வலையை நான்கைந்து பூச்சிப் பிணங்களோடு, துடைப்பத்தால் கீழே தட்டிப் போட்டாள். ஆணி கழன்ற சுவர்ப் பொந்துகளில் அப்பிக் கிடந்த பூச்சிகளை, கீழே தட்டிவிட்டாள். ஆனாலும் அவற்றை, துடைப்பத்தில் பின் முனையில் அடித்துக் கொல்ல யோசித்தாள்...

இரண்டு பெண்களும் பம்பரமாய் இயங்கினார்கள். சந்திரா பெருக்கிய தரையை, கலைவாணி ஈரத்துணியால் துடைத்துவிட்டு, அந்தத் துணியை கசக்கிப் பிழிவதற்காக, வீட்டுக்குப் பின்பக்கமாய் உள்ள கிணற்றடிக்குப் போய்விட்டாள். சமையலறையில் உள்ள வாஷ் பேசினில் கை கழுவிக் கொண்டிருந்த சந்திரா, அழைப்பு மணி சத்தம் கேட்டு அம்மாவைப் பார்த்தாள். அவளோ, பதிலுக்கு ஒரு தகர டப்பாவை தலைகீழாய் கவிழ்த்து, தட்டினாள்... சந்திராதான், அந்த அறையில் இருந்து விடுபட்டு, இடுப்பில் செருகிய புடவை முனையை இழுத்துவிட்டு, அதைக் கால்வரைக்கும் பரப்பிவிட்டு கதவைத் திறந்தாள்.

''ஹாய் சங்கர்''

சந்திரா, சமையலறைப் பக்கமாய் திருட்டுத்தனமாய் ஒரு தினுசான பார்வையை வீசிவிட்டு, சங்கரன் தலையில் ஒரு குட்டு போட்டாள். பிறகு, அவன் கையில் இருந்த சூட்கேசை வாங்கி வைத்துக் கொண்டு, அந்த தாய் மாமா மகனும் தன்னை அப்படிக் குட்ட வேண்டும் என்பதுபோல் தலையைக் குனிந்தாள். ஆனால், அவனோ எந்தக் கையால் குட்ட வேண்டுமோ, அந்தக் கையின் பெருவிரலை ஆட்டினான். இப்போது அதில் பிளாஸ்டருக்குப் பதிலாய் ஒரு சின்னக் கட்டுப் போட்டிருந்தது. சந்திரா, பழைய கதையை மறந்து கேட்டாள்.

''கையில் என்னத்தான்?''

''என்ன இது.. தெரியாதது மாதிரி கேட்கறியே...? அதுதான் அதான் கலையோ கொலையோ...''

''என்னத்தான் நீங்க.. துருபைப் போய் தூணாய் ஆக்கிறிங்களே...''

''துரும்பாய் இருந்தால்... இந்நேரம் ஆறி இருக்கணுமே''

''நீரிழிவாய் இருந்தாலும் ஆறாது.. இப்படிக் கட்டுப்போட்டு... காற்று போகாட்டாலும் ஆறாது... அப்படியே வந்திருந்தாலும், நிச்சயம் இது அவளாலயோ அதாலயோ ஆறாமல் இருக்காது''

''பார்த்தியா... பார்த்தியா... நீயே... அப்படியே வந்தாலும் முன்னு இக்கன்னா போட்டு பேசுற பாரு...''

''அய்யோ... ஒங்க கிட்டே ஒரு பேச்சுக்கு சொன்னேன். இப்பவும் டாக்டர் என்கிற முறையில் சொல்றேன். ஒங்களுக்கு அது வராது... வராது... வரவே வராது.. போதுமா?''

''டாக்டருக்கு டாக்டரே... குழப்புறீங்க... மெட்ராஸ் நர்சிங் ஹோம் டாக்டர் நிச்சயமாய் வந்திருக்குமுன்னு சொல்றார்''

''சரி... அசோகன் ஆஸ்பத்திரியிலே டெஸ்ட் செய்வோம்''

''அய்யோ... அவனா... இதுதான் சமயமுன்னு, இருக்குன்னு சொல்வான். சரியான வில்லன்...''

''இதுக்கே ஒங்களை நான் அடிக்கணும்... சரி பரவாயில்ல... பேசாம மாவட்ட மருத்துவமனையில டெஸ்ட் செய்திடுவோமா...?''

''வேண்டாம்... எனக்குப் பயமா இருக்குது. நீ சொல்றதைப் பார்த்தால், ஒனக்கே சந்தேகம் வந்துட்டு.. எனக்கும், இருந்தாலும் இருக்கலாமுன்னு சந்தேகம் வந்துட்டு...''

'அய்யோ... கடவுளே... ஒங்களை நான் எப்படித்தான் காதலிச்சேனோ... சரி... எந்தப் பொண்ணும், அவள் உயிருக்கு உயிரான காதலியாய் இருந்தாலும், எந்த எய்ட்ஸ் நோயாளியையும் கட்டிக்கமாட்டாள். காரணம், கல்யாணம் என்கிறது சந்தோஷத்திற்காகவும், சந்தோஷப்படுத்தவும் செய்கிற ஏற்பாடு... ஆனாலும், நான் இப்போ ஒங்களுக்கு 'ஹெச்.ஐ.வி.' இல்லை என்கிறதை நிரூபிப்பதற்காவது, உடனடியாய் ஒங்களை கல்யாணம் செய்யத் தயார்... இங்கேயே ரிஜிஸ்டர் மேரேஜ் செய்யலாமா... இல்லாட்டி... இன்னம் பதினைந்து நாளையிலே மெட்ராஸ்ல ஜாம் ஜாமுன்னு வச்சுக்கலாமா? எதுக்கும் நான் ரெடி... நீங்க ரெடியா...?''

சங்கரன், பேசாமல் நின்றபோது, அதுவரை சமையல் அறையில் அவர்கள் பேசுவதை முகம் சுழித்துக் கேட்டுக் கொண்டிருந்த ராசலட்சுமிக்கு மகிழ்ச்சி; வேகமாக நடந்துவந்தாள். அண்ணன் மகன் வழக்கம் போல் தன்னை சமையலறையில் வந்து, கைகளைப் பற்றிக் குசலம் விசாரிக்க வேண்டும் என்று நினைத்து அங்கே நின்ற அந்தம்மா, அப்புறம் வாசலுக்கு வந்து, இப்போது அவர்கள் பக்கமாய்ப் போய்விட்டாள். போனதும் போகாததுமாய், அண்ணன் மகனைப்பார்த்துக் கேட்டாள்.

''சந்திரா சொல்றதுதான் சரி... ஆனால் திருட்டுத்தாலி கட்டுறது மாதிரி.. ரிஜிஸ்டர் தாலி வேண்டாம். எங்கண்ணாவுக்கு, இப்பவே லட்டர் போடுறேன். அடுத்த மாதம் வச்சிக்கலாம். மெட்ராஸ்லே எல்லாரும் சுகந்தானே...''

''சுகத்துக்கு என்ன... நல்ல சுகம்...''

''கையில என்னது...''

''நகச் சுத்தியாம்மா... கட்டே தேவையில்ல... எந்த டாக்டரோ, நர்சிங் ஹோம்ல நல்லா... இவரை ஏமாத்திட்டான்...''

''சரி... ரூமுக்குள்ளே போய் பேசுங்களேன்...''

அந்த மூவரும், கூடத்தில் இருந்து சமையல் கட்டுக்கு அப்பால் உள்ள அறைக்குள் போகப் போனபோது, கலைவாணி பின் பக்கத்துக் கதவை மூடிவிட்டு, அவர்கள் கண்ணில் பட்டாள். சங்கரனைப் பார்த்து, தன்னையறியாமலே பின் வாங்கினாள். பிறகு, நின்ற இடத்திலேயே நின்றாள்... சங்கரனும், அவளைத் திடுக்கிட்டுப் பார்த்தான். தீவிரமாகப் பார்த்தான். பிறகு சந்திராவைப் பார்த்து, கலைவாணியை மோவாயால் சுட்டிக் காட்டி 'இவள்... இவள்' என்று இழுத்தான்... ஆள்காட்டிப் பெருவிரலையும் பார்த்துக் கொண்டான்... சந்திரா...திட்டவட்டமாகவே பேசினாள்...

''அதே கலைவாணிதான். என்னால சீரழிஞ்சு போனவள்...''

சங்கர், அத்தையைப் பார்த்தான். 'பார்த்தீங்களா அத்தே ஒங்க மகளை' என்று சொல்லாமல் சொல்வது போல் பார்த்தான். கலைவாணியை முறைத்தான். பெருவிரலை, இன்னொரு கையால் பிடித்தான். கோபங் கோபமாய்க் கேட்டான்.

''ஒரு எய்ட்ஸ் நோயாளியை எப்படி நீ வீட்டுக்குள்ளே சேர்க்கலாம்?''

''ஏன் சேர்க்கப்படாது...?''

''முதல்ல...ஒனக்கு ஆபத்து... அப்புறம் ஒங்கம்மாவுக்கு ஆபத்து... அதோட எனக்கும் ஆபத்து...''

''ஒரு டாக்டருக்கே நீங்க சொல்லிக் கொடுக்கீங்களா...''

''எவளால நான் பாதிக்கப்பட்டனோ, அவளை நீ வீட்டுக்குள்ளே சேர்த்திருப்பது, என்னை இன்சல்ட் செய்யுறது மாதிரி''

''சரி... அப்படியே வச்சிக்கங்க.. அப்புறம்?''

''எய்ட்ஸ்.. நோயாளி கலைவாணியா... இல்ல நானா... ரெண்டு பேர்லே ஒருத்தரை நீதான் தீர்மானிக்கணும்''

''மனதுல இருக்கிற எய்ட்சை விட ஒடம்பிலே இருக்கிற எய்ட்ஸ் எவ்வளவோ தேவல''

''அப்போ''

''அப்போதான்''

சந்திராவும் சங்கரனும், ஒருவரை ஒருவர் புதிதாய்ப் பார்ப்பது போல், பார்த்தார்கள். ஒவ்வொருவர்க்குள் இருக்கிற இன்னொருத்தரை, புதிதாய்க் கண்டுபிடித்ததுபோல், பகைப் பார்வையாய்ப் பார்த்துக் கொண்டார்கள். கலைவாணி நின்ற இடத்திலே நின்று, குன்றி போய் நின்றாள். அத்துவானக் காட்டில் கார் வெளிச்சத்தாலோ அல்லது பேட்டரி லைட்டாலோ கண் கூசி

நின்ற இடத்திலேயே நிற்கும் முயல் குட்டிபோல் நின்றாள். உடல் முழுவதும் உறைந்து போனது. காதுகள், கண்ணுக்கத் தெரியாமல் மூடிக் கொண்டன. ஏதோ ஒன்று, வாளிலும் வலிமையாய், மனதை அறுத்து அறுத்து, ரணமாக்கிக் கொண்டிருந்தது.

இதற்குள், ராசலட்சுமி விழித்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டாள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இந்த ஹெச்.ஐ.வி. பற்றி தெரியப்படுத்த வேண்டும் என்று புதுடில்லி பயிற்சி முகாமில் கூறப்பட்டதற்கு ஏற்ப, சந்திரா அம்மாவிடம் எய்ட்ஸ் பற்றி முழுமையாக எடுத்துச் சொல்லி இருந்தாள். எய்ட்ஸ் வேறு... ஹெச்.ஐ.வி. வேறு.. என்று எடுத்துரைத்திருக்கிறாள்... ரத்தம் தவிர்த்து, தொட்டாலோ, பட்டாலோ, பழகினாலோ அது தொற்றாது என்றும் சொல்லி இருக்கிறாள். அப்போது தலையாட்டியவள்தான் இந்த அம்மா! ஆனாலும், இப்போ பாதிக் கிணறுதான் தாண்டினாள்... அதுவும் முன் பாதி...'

ராசலட்சுமி, கலைவாணியை கண் கொத்திப் பாம்பாய் பார்த்தாள். பீடை ஒழியுது என்பது மாதிரி சந்தோஷமாகக் கூடப் பார்த்தாள். அவள் குன்றிப் போய் நிற்பதை, தனக்கு விடப்பட்ட சவாலாக நினைத்தாள். இந்த பத்து நாளைக்குள், தனக்கும் ஏதாவது ஆகி இருக்குமோ என்று சந்தேகமாகக் கூட தன்னைப் பார்த்தாள், பிறகு கலைவாணியின் பக்கமாய் நடந்து, எச்சரிக்கையான இடைவெளியில் நின்றபடியே கேட்டாள்.

''எவ்வளவு நாளாடி... எங்க குடியைக் கெடுக்க திட்டம் போட்டிருக்கே... ஒனக்கு வந்தது எங்களுக்கு எதுக்கடி வரணும்? வெளியே போடி... போயும் போயும் என் மகள்தானாடி... ஒனக்கு கிடச்சாள்... போடி வெளியே...''

கலைவாணி, சந்திராவை மருண்டு பார்த்தாள். அதற்குள், சந்திரா கலைவாணியின் முன்னால் போய் நின்று கொண்டு, சபதமிடுவது போல் பேசினாள்.

''கலைவாணி இங்கதான் இருப்பாள்... என்னோடதான் இருப்பாள்''

ராசலட்சுமி, சிறிது விக்கித்து நின்றாள். சந்திராவை, வெறித்துப் பார்த்தாள். அண்ணன் மகனை மௌனமாக நோக்கினாள். கீழே வைத்த சூட்கேசைத் தூக்கிக் கொண்டு நின்றவனைப் பார்த்து, தீர்மானமாகச் சொன்னாள்.

''அஞ்சு நிமிஷம்... பொறுப்பா.. கட்டுறதுக்கு மாற்று சேலை எடுத்துட்டு, நானும் ஒன்னோடயே வாறேன். அப்பவே காப்பாத்துன அண்ணன், கடைசிக் காலத்துலயுமா காப்பாற்றமாட்டார்?''

''அண்ணன் எதுக்கு அத்தே.. நான் இருக்கேன்''

ராசலட்சுமி, அண்ணன் மகன், அடிக்கடி தங்கும் அறைக்குள் போனாள். டிரங்க் பெட்டியை உருட்டும் சத்தம் கேட்டது... மகளால் பொறுக்க முடியவில்லை. அம்மாவைப் பற்றித் தெரியும். முன் காலை வைக்கும் போதே, பின் காலைப் பிடித்துக் கொள்ள வேண்டும்... இல்லையானால், போய் விடுவாள். நான்கடி நடக்க விட்டால், நானூறு கிலோ மீட்டர் பாய்ந்து போவாள்.

சந்திரா, அந்த அறைக்குள் ஓடியபோது, சங்கரன், கலைவாணியிடம் கையெடுத்துக் கும்பிட்டே கேட்டான்.

''நாங்க கௌரவமான குடும்பம்... எங்கள வாழ விடும்மா... வாழவிடு''

கலைவாணி, சங்கரனையே உதடுகள் துடிக்கப் பார்த்தாள். பிறகு, அவனுக்கு முதுகைக் காட்டியபடியே நடந்தாள். கொல்லைப் புறக்கதவை மெள்ளத் திறந்து, அந்த வீட்டை ஒரு சுற்றுச் சுற்றி, அருகே அவளை அழைக்க வந்ததுபோல் முடிந்துபோய்க் கிடந்த பாதை வழியாக நடந்தாள்... சந்திராவிடம் பிடிபடக் கூடாது என்ற வைராக்கியத்துடன், கண், மண் தெரியாமல் முதலில் ஓடினாள். மூச்சிரைத்த போது மட்டும் நின்றாள். பிறகு, அது முடிவது வரைக்கும், நடக்கப் போவது போல் நடந்தாள்.

26

கலைவாணி, இலக்கு இல்லாமல் நடந்து, மக்கள் திரளில் இருந்து விடுபட்டு, கோணச்சத்திரத்தை மறைக்கும் ஒரு காட்டுப் பகுதிக்கு வந்தாள். இரு பக்கமும் கருவேலக் காடுகள். இடையில் தார்சாலை... அந்தச் சாலை துண்டிக்கப்பட்ட பாலத்துக்கு வந்தாள். பாழடைந்த பங்களாவின் அடிவாரம் போல் உள்வாய்; சிறிது தொலைவில், மாற்று மண் பாதையில் லாரிகளும் பேருந்துகளும் விட்டுவிட்டு ஓடிக் கொண்டிருந்தன. மானுடக் கண் படா இடம்... அப்படியே சுருண்டு கிடந்தாள். எப்படி பாம்பு சுருண்டு கிடக்குமோ... அப்படி... தலையும் கால்களும் சங்கமமாகும்படி, வட்டமாய்க் கிடந்தாள்... தூக்கமோ, துக்கமோ...இவை இரண்டும் கலந்த ஏதோ ஒரு நிலை.

கலைவாணி, கால நேரக் கணக்கற்று, கண்களை மூடாமல், எங்கோ தூரத்துப் பார்வையாய் பார்த்துக் கிடந்தாள். பிறகு எழுந்து, ஈரக் கசிவான தரையில் உடல் போட்டு ஒரு வட்டக் கல்லில் தலை சாய்த்துப் படுத்தாள்; ராசலட்சுமி சொல்லால் குத்தியது அவளை உலுக்கியது... அவளுக்கு பதிலளிப்பது போல் சத்தம் போட்டே பேசினாள் 'ராசலட்சுமியம்மா, என் மகள்தானா ஒனக்குக் கிடச்சாள்னு கேட்டியே... அது தப்பு... போயும் போயும்... நான்தான் ஒன் மகளுக்கு கிடச்சிருக்கேன்... எந்த பாவமும் செய்யாத நான்தான் நானேதான்... அடேய் மனோகரா, என் நிலைமைய பாருடா.. இப்போக் கூட என்னை விரட்டாமல், விரட்டுறியடா.. விரட்டுறியடா.. எங்கே போவேன்? யார்கிட்ட தஞ்சமாவேன்...? மோகன்ராம்... துரோகியாகிட்டான். அசோகன் கிட்டே போகவும் மனசில்ல... அடைக்கலம் கொடுக்கிறவராய் இருந்தால் டிஸ்சார்ஜ் செய்திருக்க மாட்டார். ஒப்புக்குக் கூட, தங்கிக்கோன்னு ஒரு வார்த்தை

கேட்கல... எப்படிப்போவேன்... எப்படிடா போவேன். எம்மா... என்னப் பெத்த அம்மா, நீ அழுதழுது கூப்பிட்டபோதே நான் வந்திருக்கலாமோ... எப்படிம்மா முடியும்? பலராமன் பார்வை சரியில்லியே... அம்மா! நீங்க என்னை பிறக்கும் போதே கொன்னுருக்கலாமே... அம்மா... உசிலம்பட்டியிலே பிறக்காமப் போயிட்டனே... அப்பா... என்ன பெத்த அப்பா...'

கலைவாணிக்கு, இயற்கை கனிந்தது... தற்செயலாய் கனிந்தது... துக்கச் சுமையே மாத்திரையானது; எறும்புகள் கடித்தன... கொசுக்கள் அரித்தன... பூச்சிகள் அவள்மேல் புரண்டன. ஆனாலும் தூங்கிப் போனாள்... அப்படியே தூங்கிப் போனாள்...

ஓரிரு மணி நேரத்திற்கு பிறகு, கலைவாணிக்கு, இயற்கை இப்போது காய்விட்டது... மூளை உசுப்பிவிட்டது. விழித்த கண்களில் கற்கள், கல்லறை கட்டுவதற்கு உள்ளது போன்ற கற்கள்; எவரையோ, ரத்தமும் கூழுமாய் வெட்டிப் போட்டது... போன்ற மண் கட்டிகள்; நீரோடு குழைந்த மண் சதைகள்; மனக்குகை போல், மருண்டு பார்த்த அடிவாரம்... அவளுக்கு பயமெடுத்தது... தனிமைப்பயம்... மனித முகங்களைப் பார்க்காவிட்டால், மரித்துப் போகலாம் என்ற பயம்...

கலைவாணி, ஈரப் புடவையோடு மேலே வந்தாள். முதுகிலும் தோளிலும் அப்பிய சேறோடு வெளியேறினாள். மனம் போன போக்கில் நினைத்து, கால்போன போக்கில் நடந்து, சாலையோரமாய் உள்ள ஒரு ஆலமரத்தின் அடிவாரத்துக்கு வந்தாள். அதன் விழுதுகளில் இரண்டை பிடித்தபடி நின்றாள். அப்படியே, அந்த மரத்தின் தூரில் சாய்ந்தாள். உடல் மரத்துப் போனது... மனம் அற்றுப் போனது.. நினைவற்ற சூனியம். ஏகாந்தத்தின் எதிர் நிலை...

அந்த உச்சி வெயிலில் புலிப்பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருந்த லாரிகள், அவளைப் பார்த்து பம்மி பம்மி, தத்தித் தத்திப் போயின... இரு சக்கர வாகனங்கள் ஆங்காங்கே 'ரிப்பேராய்' நின்றன. ஆனால், இவள் சட்டை செய்யாததால், கால விரயத்தை ஈடுகட்டும் வகையில் மீண்டும் ஓடின.. முன் பக்கமும், பின் பக்கமும் நரிகள் வாழும் கருவேலமரக் காடுகள், எதிரே தெரிந்த எருக்கலைச் செடிகள் காற்றிலாடி அவளைக் கூப்பிட்டன. கருவேல மரங்கள், அவளைப் பார்த்து முட்கரங்களை ஆட்டின. இடிபட்ட பனை ஒன்று, அவளைப் போல் மொட்டையாய் நின்று மொக்கை வாயால் புலம்பியது. காக்காவால் கடிபட்ட அணில் ஒன்று, மூக்கில் ரத்தம் சொட்ட அரற்றி அரற்றி, அவள் காலடிப் பக்கமாய்த் தாவியது.

வேக வேகமாய் போய்க் கொண்டிருந்த லாரிகளில் ஒரு தேசிய லாரி, அவள் பக்கத்தில் நின்றது. வாட்டசாட்டமான லாரி டிரைவர், அவளை உற்றுப் பார்த்தார். பைத்தியமோ என்பது போல் பகுத்தும் பார்த்தார். பிறகு, அப்படி இருந்தாலும் பரவாயில்லை.. என்பது போல் தலையாட்டினார். லாரி தர்மப்படி, இருக்கைக்கு பக்கத்தில் வைத்திருந்த மல்லிகைப் பூச்சரத்தை எடுத்து, வண்டிக்கு வெளியே பக்கவாட்டில் உள்ள வட்டக் கண்ணாடியில் வைத்தார். இதைப் பார்த்தால், விஷயம் தெரிந்த பெண்கள் உடலுக்கு விலை பேசவந்து விடுவார்கள்...

கலைவாணி, அந்த லாரியைப் பார்க்கவில்லை. அது, ரோட்டையும் அவளையும் அடைத்து நின்றதும் தெரியவில்லை. ஆனாலும் டிரைவர் ஹாரன் அடித்தபோது நிமிர்ந்தாள். அந்த இருக்கையில் இருப்பவர் ஆணாகவோ, பெண்ணாகவோ அவளுக்கு படவில்லை. ஏதோ ஒரு மனிதஉருவம் 'ஏன் இப்படி கையை நீட்டுகிறது? ஏன் இப்படி தலையை ஆட்டுகிறது? அந்த லாரியில் உட்கார்ந்து கொண்டே ஓடலாமோ... ஓடணும்... கண் தெரியாத இடத்துக்கு ஓடணும்... ஓடியே ஆகணும்...

கலைவாணி, கண்களைக் கசக்கியபடியே எழுந்தாள். லாரிக்காரன் நீட்டிய கரத்தை நோக்கி நடந்தாள்.

27

எதிரில் உட்கார்ந்திருந்த டாக்டர் சுமதியிடம், அசோகன் மீண்டும் வற்புறுத்தினான்...

''என்னோட எய்ட்ஸ் வார்ட்... எப்படி இருக்குதுன்னுதான் பார்த்துட்டுப் போங்களேன்''

''இன்னொரு தடவை வாறேன்... அசோக்.. .நான் ரொம்ப பிஸி... ஜப்பான் போறதுக்கு இன்னும் விஸா கிடைக்கல... இதுக்குள்ள ஆப்பிரிக்க மக்களை எப்படி கரையேற்றுவதுன்னு, பாரீஸ்ல ஒரு மாநாட்டுக்கு அழைப்பு வந்திருக்கு. அப்புறம் 'லாஸ் ஏஞ்சல்ஸ்ல' ஒரு ஒர்க்ஷாப்... எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எப்படி மறுவாழ்வு கொடுப்பது என்பது சப்ஜெக்ட். இந்நேரம் ஆபீசிற்கு போனால், இன்னொரு அழைப்பு வந்திருக்கும்... எதை கொள்ளுறது.. எதை தள்ளுறதுன்னே புரியல.. அப்புறம்... மூணு பசங்களை அனுப்பி வைத்தேனே.. ரிசல்ட் வந்துட்டா?..''

''எஸ்... ஒன்று நெகட்டிவ்... இரண்டு பாஸிட்டிவ்''

''யங்கர் ஜெனரஷன்... எப்படிக் கெட்டுப் போகுது பாருங்க...மனசே கேட்க மாட்டக்குது.. ரிப்போர்ட் கிடைக்குமா...''

''நாளைக்கு... நீங்க ஆகாயத்தில் பறக்காமல் இருந்தால்''

''நான் ஆகாயத்தில் பறக்கும்போதுகூட.., என்கால்கள் என்னமோ பூமியில்தான் நிற்கும்.''

''கவித்துவமாய் பேசுறிங்க டாக்டர்''

''தேங்க்யூ... டோன்ட் ஒர்ரி அசோக்... இப்போ பாரீஸ் டூர் போகும்போது... ஒங்களுக்கும், நான்கைந்து ஒர்க்ஷாப்புக்கு ஏற்பாடு செய்திட்டு வாறேன். நீங்க எனக்கு செய்கிற உதவியை நான் மறக்கல... அப்புறம் நீங்களும் ஆகாயத்தில் பறப்பீங்க... கால் தரையில பதியாமல் இருப்பீங்க.''

''நீங்க... நினைக்கிற அனுமானங்கள் மூன்றும் தப்பு மேடம்... முதலாவதாய், நீங்களோ அல்லது வேறு யாருமோ... எனக்கு அசைண்மென்ட் வாங்கிக் கொடுத்து, நான் வெளிநாட்டுக்கு போகவிரும்பல... இரண்டாவது, நீங்க எனக்கு எதாவது செய்வீங்கன்னு எதிர்பார்த்து, நீங்க அனுப்புற இளைஞர்களுக்கு நான் ஹெச்.ஐ.வி. டெஸ்ட் செய்யல... இவங்களுக்கு சேவை செய்ய, நீங்க ஒரு மீடியம். அவ்வளவுதான். மூன்றாவதாய், நான் தப்பித் தவறி ஆகாயத்துல பறந்தாலும், என் சிந்தனை எல்லாம் என் எய்ட்ஸ் வார்ட் பக்கமே இருக்கும். ஏன்னா, இங்கே இருக்கிற டெர்மினல் ஸ்டேஜ் நோயாளிகள் கிட்டே.... நான் தெரிஞ்சிக்கிட்டது ஏராளம்.. வெளிநாடு போவதாய் இருந்தாலும்... அங்கே ஒரு ஆசிரியராய்த்தான் போவேனே தவிர... மாணவனாய் இல்ல''

''என்ன அசோக்... இப்படியா... கட் அண்ட் ரைட்டாய் பேசுறது...''

''நம்ம நட்பு நீடிக்கிறதுக்காவது... சில விஷயங்களை தெளிவாக்கிடுறது நல்லது பாருங்க... இது வரைக்கும் இறக்கப் போகிற நிலையில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகளை நீங்க பார்த்திருக்கீங்களா...''

''ஜி.எச்.சுல... இலை மறைவு காய் மறைவாய் பார்த்திருக்கேன்.''

''சரி... இப்போ என்னோட வாங்க...''

''வேண்டாம்... அசோக்... எனக்கு அழுகை வந்திடும்''

''அழுகை வந்தால்... அழுதுட்டுப் போறது... அதனால என்ன''

''நேரமாயிட்டேன்னு பார்க்கேன்''

''வேற எதுக்கு செலவிடுற நேரத்தையும் விட... இதுக்கு செலவிடுகிற நேரம் புனிதமானது டாக்டர்... எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கம் நடத்துறீங்க... இது பற்றி ஊர் ஊராய் போறது மாதிரி... நாடு நாடாய் போறீங்க... ஒரு சாகப் போற நோயாளியையாவது... நேரிடையாய் பார்க்காமலா போகிறது? கமான்... லெட் அஸ் ஸீ'

டாக்டர் சுமதி, அசோகனைப் பார்த்து எரிச்சலோடு சிரித்தாள். ஆனாலும், இவனைப் பகைக்கக் கூடாது... சந்தேகத்திற்குரிய எல்லா எய்ட்ஸ்

கேஸ்களையும், இவன்தான் டெஸ்ட் செய்கிறான்... இவள்,என்.ஆர்.ஐ. தமிழர்களைக் கூட இங்கே அனுப்பி இருக்கிறாள். அந்தத் தமிழர்கள்தான், இந்த சுமதிக்கு வெளிநாட்டு ஒர்க்ஷாப்புகளையும், பயிற்சி முகாம்களையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவளுக்கு, ஹெச்.ஐ.வி. ரத்தத்தைப் பார்க்கவே பயம்... இந்த கிராதகனை சகித்துத் தான் ஆகணும்... சொந்தத்தில் லேப் வைத்தால், அதுவே முழு நேர வேலையாகி விடும்... தென்காசிக்கு லேப்புக்கு அனுப்பினால், அப்புறம் அந்த லேப்காரன்தான் வெளிநாடு போவான்...

நாலையும் யோசித்த டாக்டர் சுமதி, ஒரு ரெடிமேட் புன்னகையை வீசியபடியே, 'நான்... ரெடி' என்றாள்.

அசோகனும் சுமதியும், அந்த மருத்துவமனைக்கு சற்றுத் தள்ளி உள்ள அவுட் ஹவுஸில் உள்ள எய்ட்ஸ் வார்டுக்குள் நுழைந்தார்கள். அங்கே கட்டில் கட்டிலாய் நெளிந்து கொண்டிருந்தவர்களின் கண்களை, அசோகன் பிரகாசப் படுத்தினான். டாக்டர் சுமதி ஆச்சரியப்படுத்தினாள். அந்த மரணக் கட்டத்திலும், ஒரு சில நோயாளிகள், அவளை அதிர்ந்து பார்த்தார்கள். அசோகனைவிட உயரமானவள்... ஐந்தாறு வயது அதிகமானவள்... அவளிடம் சிவப்பும் செஞ்சிவப்பும் பிச்சைஎடுக்க வேண்டும்... சுண்டினால் ரத்தம் வருவது போன்ற நிறம்.. ஆனாலும் இழவு வீட்டுக்கு, இப்படி கல்யாண வீட்டுக்கு வருவதுபோல் வரக் கூடாது... கைநிறைய தங்க வளையல்கள்... கழுத்தில் தங்கச் செயினில் தொங்கிய மூக்குக் கண்ணாடி... கண்ணைப் பறிக்கும் பட்டுச் சேலை... ஒரு முழ அகல ஜரிகை...

அசோகன், அந்தக் கட்டில்களில் கிடந்த நோயாளிகள் ஒவ்வொருவர் பக்கத்திலும் போய், பெயர் சொல்லிப் பேசினான். ஒருத்தி குப்புறக் கிடந்தாள்... தலைமட்டும் இல்லையானால் அவளை விறகாகக் கொள்ளலாம். ஈனமுனங்கலாய் இதயத்தைப் பிழிய வைக்கும் பார்வை... முப்பது வயதுக்குள்ளேயே முக்காலத்தையும் முடித்துக் கொள்ள போகிறவள்... இன்னொருவருக்கு உடலை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்; அந்த அளவுக்கு கட்டுக்கள். குணப்படும் தொழுநோய், இப்போது கோபப்பட்ட உடம்பாய் மல்லாக்க கிடந்தவர்கள். மரித்ததுபோல் உயிர்த்தவர்கள். கழுத்துக்கும் மூக்கிற்கும் இடையே மட்டுமே உயிர் வைத்திருந்தவர்கள்... இடைவிடா இருமல்காரர்கள்! மூளை பாதிக்கப்பட்டு, கால் செத்தும் கை செத்தும், உயிர் சாகக் காத்துக் கிடப்பவர்கள்... கழுத்து வீங்கிப் போனவர்கள்... ஒரு கையின் அகலத்துக்குப் போன ஆறடி உடம்புக்காரர்... நெருப்பாய் சிவந்த கால்களில், கறுப்புக் கறுப்பான அக்கிக் கட்டிகளை கொண்டவர்கள்... உடல் முழுக்க கொப்பளங்களைக் கொண்ட

ஒரு மூன்று வயதுக்குழந்தை.. அசோகனை பார்த்து 'மா.... மா...சாக்லேட் மாமா' என்றது. ஒரு பழுத்த நோயாளி, வாயை அங்குமிங்குமாய் ஆட்டினார். பேச முடியாமல் சைகை செய்யவும் திராணியுற்று, அசோகனைப் பார்த்து உதடுகளை அபிநயமாய் ஆக்கிக் காட்டினார்... என்ன சொல்ல நினைத்தாரோ... ஏது சொல்ல எண்ணினாரோ... ஒரு நாற்பது வயதுக்காரர், மல்லாக்கக் கிடந்தார். அசோகனைப் பார்த்துவிட்டு, நாக்கை நீட்டி, கீழ் உதட்டுக்குப் பின்னால் தொங்கப்போட்டுக் காட்டினார். உள்ளே ஒரே காளான் மயம்... உமிழ்நீர் இறங்காத அடைப்பு. அசோகன் பக்கத்தில் நின்று வார்ட் பையனிடம், 'குளுகோஸ் ஏத்துப்பா! தினமும் ஏத்து... இப்படியா பட்டினி போடுறது' என்ற போது, அந்த நோயாளி விக்கினார்... ஒலி கிடைக்காமல் திக்கினார்...

அங்கே கிடந்த அத்தனை பேருமே, பெரிய பெரிய மருத்துவமனைகளில் இருந்து தூக்கி எறியப்பட்டவர்கள். இரவோடு இரவாக, குப்பைத் தொட்டிகள் பக்கமும், கழிவறைகள் பக்கமும் கழிக்கப்பட்டவர்கள். வீடிருந்தும் முகவரி அற்ற முகங்கள்; உயிருள்ள பிண்டங்கள்'

இதற்குள், அசோகன் விழி பிதுங்கி மல்லாக்கக் கிடந்தவனின் கட்டில் அடிவாரத்தைப் பார்த்தான். மீன் செதிள்கள் மாதிரியான சதைப் பிய்ப்புகள்... ரத்தக் கலவைகள்... உடனே அசோகன் ஒரு வார்ட் பையனின் உதவியோடு அந்த உருவத்தைக் கவிழ்த்துப் போட்டான். முதுகில் ஒரே ரணக்காடு. மாதக்கணக்கில் படுக்கையில் மல்லாந்து படுத்ததால், அந்த படுக்கை கூட அந்த உருவத்தை அரித்துவிட்டது. அசோகன், அந்த வார்ட் பையனை கோபமாய்ப் பார்த்தான். வயதான ஆயாவை ஆத்திரமாய் பார்த்தான். ஆனால், திட்டவில்லை. ஓடிப் போவதற்கு சாக்கு தேடிக் கொண்டிருப்பவர்கள்... வார்ட் பையன், முன்பு கழிவறை கழுவியவன். ஆயா, அவன் அம்மா... இதனால்தான் இங்கே இருக்கிறார்கள்...

டாக்டர் சுமதி, அந்த நோயாளிகளைப் பட்டு படாமலும் பார்த்தாள். அவளையும் மீறி அசோகன் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன. ஆனாலும் ஒரு ஆசை... இந்த எய்ட்ஸ் நோயாளிகளை தான் கவனிப்பது போல் ஒரு வீடியோ படம் எடுத்தால், வெளிநாட்டில் போட்டுக் காட்டலாம். மேலும் ஏழெட்டு ஒர்க்ஷாப்புக்கள் கிடைக்கும். ஒரு வேளை, உலக சுகாதார நிறுவனம் அவளையே ஒரு பயிற்சிப் பட்டறையை நடத்தச் சொல்லலாம்... இதனால், இந்தியாவிற்கு வெளிச்செலாவணி கிடைக்கும்... நமது பேலன்ஸ் ஆப் பேமென்டில் ஒரு ஆக்கப் பூர்வமான தாக்கம் ஏற்படும்... இந்த விஷயத்தைச் சொன்னால், இந்த கிராக்கு ஏடாகூடமாய்க் கேட்டு.. எய்ட்ஸ் நோயாளிகளை... வியாபாரப் பொருளாக்கலாமா என்று கூட முகத்தில் அடித்தாற் போல் கேட்கக் கூடியவன்... ஆனாலும் இந்த நோயாளிகளும், இந்த

வார்டும் நல்ல சந்தர்ப்பம். காத்திருக்க முடியாது... அதற்குள் இவர்கள் இறந்து போவார்கள்... எப்படி பேச்சைத் துவக்குவது... ஆமாம்... இப்படித்தான்!

''என்ன அசோகன்... நீங்களும்... இந்த அப்பாவிகளை... இப்படி தனிப்படுத்தி வச்சால் எப்படி... மெயின் பில்டிங்ல வைக்காமல், இப்படி ஒதுக்குப்புறமாப் போட்டால் எப்படி...? ஐ ஃபீல் பேட்...''

''நான் இவங்களை ஒதுக்கல டாக்டர்... இவங்க கிட்டே இருந்து சராசரி மனிதர்களை ஒதுக்கி வைக்கேன். அவங்களோட தீ நாக்குகள் சுடாமல் இருக்கிற இடமாய் பார்த்து வைத்திருக்கேன். இவங்களை மெயின் பில்டிங்ல வைத்தால்... அங்கே இருக்கிற சராசரி நோயாளிகள்... இவங்களாலதான்... தங்களுக்கு நோய் குணமாகலன்னு நினைப்பாங்க... பார்வையாளர்களும், எங்கேயோ வாங்குகிற எய்ட்சுக்கு இவங்களே காரணமுன்னு நினைக்கலாம்... அதோட இந்த நோயாளிகள் எல்லோரையும் ஒரு நாள்விட்டு, ஒரு நாள் குளிப்பாட்டுறோம்... இங்கேதான் அதுக்கு வசதி இருக்குது''

''நீங்க... ரொம்ப கிரேட் அசோக்...''

''இப்போ இல்ல... என்றைக்கு அந்த நோயாளிகளோட ஆயுளை அவஸ்தப்படாமல் நீட்டிக்க முடியுமோ... அப்போ நான் கிரேட்தான்... வெளிநாடுகளில் பணக்கார எய்ட்ஸ் நோயாளிகளோட ஆயுளை மூன்று வருடம் நீட்டிக்க வைப்பதற்கு 'அசிடோதைமிடின்' என்ற மருந்து இருக்குது. இங்கே இதை ஒரு நோயாளிக்கும் கொடுக்க வருடத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் செலவாகும்... எப்படி முடியும்...'

''ஏன் அசோகன்... இப்படி செய்தால் என்ன...''

''எப்படி?''

''இவங்களை பற்றி குளிப்பாட்டுறதில இருந்து சிகிச்சை அளிப்பது வரைக்கும், ஒரு வீடியோ டாகுமெண்டரி எடுத்து... கூடவே, ஒங்க பேட்டியையும் சேர்த்து படமாக்கி, நான் போகிற வெளிநாட்டுக் கான்பரன்ஸ்ல காட்டினால், தமிழ்நாட்டின் பெருமையும் உயரும். கூடவே இந்த மருந்து கூட கிடைக்கலாம்... இரண்டு பேருக்கு கிடைத்தால் கூட நல்லதுதானே... டாலரா வாங்கப்படாது.. நீங்க சொன்னீங்களே... மருந்து என்ன பேரு அது...? எனக்கும் தெரியும்... ஆனால் சட்டுன்னு ஞாபகத்துக்கு வர்லே...'

''அஸிடோ... தைமிடின்...''

''கரெக்ட்... அதுதான்... அப்போ நாளைக்கே வீடியோ காமிராவை

அனுப்பி வைக்கட்டுமா...? இந்த நோயாளிகளில் ஒருத்தரோ... ரெண்டு பேரோ பேசட்டும்''

''எனக்கு இந்த வீடியோ... ஆடியோ எல்லாம் பிடிக்காது டாக்டர்... நான் மண்ணுக்குள்ளே மறைந்த வேராவே இருக்க விரும்புகிறேன். நம்மோட பிரச்சாரமும், விழிப்புணர்வும் இதுவரைக்கும் எய்ட்ஸோட வெற்றியாய் இருக்குதே... தவிர, எய்ட்ஸ் நோயாளியோட வெற்றியாய் ஆகல... விழிப்புணர்வு இயக்கம்... அதை நடத்துகிறவர்களோட வெற்றியாய் ஆகிறதே தவிர... அதன் நோக்கத்தோட வெற்றியாய் ஆகல.. இன்னும் சொல்லப் போனால் தோல்வியாவே முடியுது...''

''இது இந்தியாவுல மட்டுந்தான் அசோக்... மேற்கு நாடுகளில் இது மாதிரி இல்லை அப்போ... வீடியோ காமிராவை... நீங்க பேட்டி கொடுக்காமல் எப்படி அசோக்? வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்''

''நான் பேட்டி கொடுத்தால்... அது கோட்டியாய் முடிஞ்சுடும்... நீங்களே பேட்டி கொடுங்க... பேட்டி எடுங்க... மானேஜர் கிட்டே சொல்லிடுறேன்''

''இவங்க கிட்டே நீங்களே''

''எனக்கு... கூச்சமா இருக்குது... வீடு பற்றி எரியும் போது, இவங்ககிட்ட கேட்கிறது... பீடிக்கு நெருப்பு கேட்கிறது மாதிரி... மானேஜர் பார்த்துக்கு வார்... அந்த அஸிடோதைமிடின் மருந்துக்காகத்தான் டாக்டர்... நான் சம்மதிக்கேன், ஆனாலும் இதுவே பஸ்ட் அன்ட் லாஸ்ட்...''

''ஓகே... ஓகே... ஒன்லி ஒன்ஸ்... ஆனால் எஃபக்ட் பிரமாதமாய் இருக்கும். சரி போவோமா? மாவட்ட கலெக்டரோட ஒரு அப்பாயின்மென்ட் இருக்குது''

''அவருக்கும் எய்ட்ஸா...''

''நாட்டிபாய்... குறும்புக்கார டாக்டரப்பா''

அசோகனும் சுமதியும், அந்த வார்டில் இருந்து வெளிப்பட்டார்கள். அங்கிருந்த நோயாளிகள், அவனை ரட்சகன்போல் பார்த்து, கண்களால் விடை கொடுத்தார்கள். டாக்டர் சுமதி, அப்படியே தனது மாருதி காரில் ஏறி இருப்பாள். ஆனால், டம்பப் பையை அசோகன் மேஜையில் வைத்திருந்தாள். அதை எடுப்பதற்காக அசோகனது அறைக்குள் வந்தால், உள்ளே இந்த உதவாக்கரை டாக்டர் சந்திரா... இவள் யார்... 'சிடுமூஞ்சி...'

அசோகன், அவர்களைப் பார்த்து திகைத்தான். பிறகு சந்திராவைப் பார்த்து, 'என்ன இப்படி திடுதிப்புன்னு' என்றான். சந்திரா படபடப்பாகப் பதிலளித்தாள். டாக்டர் சுமதியை அங்கீகரிக்காமலே கேட்டாள்.

''ஓங்ககிட்ட நாங்க தனியா பேசணும் அசோக்''

டாக்டர் அசோகனுக்கு, எதுவும் புரியவில்லை... பெயர் சுருக்கம் பற்றி சந்தோஷப்பட்டதாகவோ, அல்லது கவலைப்பட்டதாகவோ தோன்ற வில்லை. ஆனால், டாக்டர் சுமதிக்கு சுருக்கென்றது. அதெப்படி 'அசோக்' என்று, தான் உச்சரிப்பதை இந்த 'ஆரோகன்ட்' சந்திரா உச்சரிக்கலாம்... நான் இல்லாமல் இவளுக்கு அசோக்கிட்டே என்ன ரகசியம்... கூட இருக்கிற இந்த உம்மணாம் மூஞ்சி யாரு..?''

டாக்டர் சுமதி பதிலடியாய்ப் பேசினாள்..

''சரி... அசோக்... நான் வாரேன்... எனக்கு ஒரு மணி நேரத்துக்கு அதிகமாய் கம்பெனி கொடுத்ததுக்கு நன்றி..''

''இப்போக் கூட நீங்களாத்தான் போறீங்க''

''இருப்பேன்.. ஆனால் இந்தம்மா... துடிக்காங்களே''

''ஆமா... டாக்டர்... நான் இவர்கிட்டே தனியா பேசணும்.. ஒருத்தர் கொடுக்கிற ரூபாயை எண்ணிப் பார்க்கிறோமுன்னா, அவரை நம்பாம இல்ல... இது மாதிரி, இவர்கிட்டே தனியா பேசணும் என்கிறது ஒங்களைஇன்சல்ட் செய்யறதாய் இல்லை!''

''யாரும்... என்னை இன்சல்ட் செய்ய முடியாது... சரி... சரி... வெட்டிப் பேச்சு எதுக்கு? நான் வாறேன்... அசோக்''

''சுமதி... பை தி பை... இவங்கதான்...நான் முன்னால சொன்னேன் பாருங்க. கலைவாணி அந்தப் பொண்ணு...''

''ஓ... மைகாட்! நீதான் அந்தக் கலைவாணியா? அசோக், ஒன்னைப் பற்றி சொன்ன ஒரு நாள் முழுக்க நான் சாப்பிடல்லம்மா... கடவுள் ஒன்னைக் காப்பாற்றுவார். கவலைப்படாதம்மா... நானும் ஒனக்கு என்னாலான வகையில் உதவுவேன்... அப்போ அசோக் போய் வரட்டுமா? கலைவாணி.. வாறேம்மா... எந்தப் பிரச்சினைன்னாலும் என்கிட்ட வா.. வேணுமுன்னா, ஒரு வேலை போட்டுக் கொடுக்கேன்.''

டாக்டர் சுமதி ஒய்யாரமாய் நடந்து, சந்திராவை அலட்சியப்படுத்திய சந்தோஷத்தோடு போய்விட்டாள். சந்திரா, அசோகனை கடித்துத் தின்னப் போவது போல் பார்த்தாள். அவனோ, சுமதி பேச்சைக் கூட காதில் வாங்காமலும், அவளைக் கண்ணால் பார்க்காமலும், குன்றிக் கிடந்த கலைவாணியையே பார்த்தான். சந்திரா ஆத்திரமாய்க் கேட்டாள்.

''ஏன் வந்தீங்கன்னு கேட்க.. மாட்டிங்களா?''

''அப்படிக் கேட்பது.. அவசரக் குடுக்கைத்தனம். ஒங்க இரண்டு பேரையும் எப்போதுமே ஏன் வரலன்னுதான் கேட்பேன்... ஏதோ விபரீதம் நடந்திருக்குது...''

''ஆமா... அசோக்!''

சந்திரா, கலைவாணியின் தோளில் கை போட்டபடியே, நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் ஒப்பித்தாள். அம்மாவையும்,மாமா மகளையும் எக்கேடும் கெடும்படி வீட்டுலேயே விட்டுவிட்டு, கலைவாணியைத் தேடி காடு மேடாய் அலைந்ததை விவரித்தாள். கலைவாணியை மீட்டியச் சூழலை அவள் சொன்னபோது, அசோகன் அதிர்ச்சியோடு எழுந்து விட்டான். கலைவாணியின் தலையில் கை போட்டபடியே, கேட்டான்.

''என்ன கலையம்மா...ஒன்னை மாதிரி புத்திசாலிப் பெண்கள் செய்கிற காரியமா இது? பேசாமல், இங்கே வர வேண்டியது தானே! ஓ... மை காட்! அந்த லாரில மட்டும் நீ ஏறி இருந்தால், அப்புறம் ராத்திரிதோறும் ரோட்டுலே புளிய மரப் பக்கத்திலயும், புதருக்கு உள்ளயும், இரவு மோகினியாய் நிற்க வேண்டியது வந்திருக்குமே... லாரி லாரியா ஏறி... புதர் புதராய்.. இறங்க வேண்டியது இருக்குமே! என்ன கலையம்மா...! இப்படி முட்டாத் தனமாய்...''

கலைவாணிக்கு, அப்போதுதான் அந்த லாரியின் தாத்பரியமே புரிந்தது... புரியப் புரிய, அசோகனை மேல் நோக்கிப் பார்த்துவிட்டு, கீழ் நோக்கித் தலைபோட்டாள். சந்திரா அவசரப்பட்டாள்.

''அந்தம்மா ரயிலேறிடப்படாது''

''எந்தம்மா...?''

''எங்கம்மாதான்... நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு மூன்று மணிக்கும் மேலாகுது.. ரயிலுக்கு இன்னும் நேரம் இருக்குது. நல்லவேளையா''

''அந்த மென்டல் சங்கர், அத்தைக்காரியை பஸ்ல கூட்டிட்டுப் போயிருந்தால்...''

''பயமுறுத்தாதீங்க... அசோக்... சங்கரன் எக்கேடும் கெடட்டும்... ஆனால் அம்மா போயிடப்படாது. கலைவாணியை இந்தப்பாடுபடுத்தின பிறகு, அவர்களை அம்மான்னு நான் நினைக்கறதே அசிங்கம். ஆனாலும் மனசு கேட்கமாட்டேங்குது. அவங்களுக்கும், போக்கிடம் கிடையாது. திருச்சியில் பெரியண்ணன் வீட்ல இருந்தாங்க. பேரப்பிள்ளைகளே

துரத்திட்டு... கோவையிலே சின்னண்ணன் வீட்டுக்குப் போனாங்க. அப்பாவியான அக்கா புருஷன் இங்கே வந்து... 'ஒங்க அம்மாவை நீயே வச்சிக்கோ'ன்னு கொண்டு வந்து விட்டுட்டுப் போயிட்டார். அந்த அளவுக்கு எங்கம்மா பிரசித்தம்... முன்னால இப்படிக் கோவித்து... என் கிட்டே இருந்து போனபோது ஏற்பட்ட அனுபவத்தை எங்கம்மா மறந்துட்டாங்க... ஆனால் என்னால மறக்க முடியல''

''ஒங்களோட நிலைமை எனக்குப் புரியுது... முன் கூட்டியே சொல்லியிருந்தால், கலையை கூட்டிட்டுப் போக வேண்டாமுன்னு நானே சொல்லி இருப்பேன். பரவாயில்ல... கலை இனிமேல் இங்கேயே இருக்கட்டும்''

கலைவாணி குனிந்த தலை நிமிராமல், கனத்த குரலில் உரத்துச் சொன்னாள்.

''ஒங்களுக்கும்...நான் பாரமாய் இருக்கவிரும்பல, டாக்டரய்யா... அப்போ போனாங்களே... அவங்க ஏதோ வேலை போட்டு கொடுக்கிறதாய் சொன்னாங்களே''

''அதுவும் சரிதான்... இந்த இடத்தைவிட, அந்த இடம் பெட்டர்... அந்தம்மா.. எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கம் நடத்துறாங்க... அடிக்கடி வெளிநாடு போறாங்க... செய்தியாளர் கூட்டத்தை நடத்துறவங்க... ஒன்னால அவங்களுக்கும் உதவியாய் இருக்க முடியும். இனிமேல், நீதான் அந்தம்மாவுக்கு பி.ஆர்.ஓ... பொதுமக்கள் தொடர்பு அதிகாரி...''

டெலிபோன் எண்ணகளை சுற்றப் போன அசோகனை, சந்திரா கண்களால் மறிக்கப் பார்த்தாள்... அந்த பட்டுச்சேலை டாக்டர் சுமதியா... அவள் அந்த லாரிக்காரனைவிட மோசமானவள்... என்று சுடசுடச் சொல்லப் போனாள். பிறகு, சுழலப் போன நாக்கை சுருட்டி வைத்துக் கொண்டாள்.

'இவளை வைத்துக் காப்பாற்ற முடியாத எனக்கு, அப்படி சொல்ல என்ன யோக்கியதை இருக்குது...'?

28

எங்குமே இருள் மயம்...

அந்தக் கடலையும், கடல் முனையான கடற்கரைத் திட்டையும் இருள் ஆக்கிரமித்திருந்தது. கடலும் வானமும் ஒன்றானது போன்ற தோற்ற மாயை. கடல் மேலே ஏறுவது போலவும், ஆகாயம் கீழே இறங்கிப் போனது போலவுமான அர்த்த ராத்திரி. தொலைவில் உள்ள சாலையில், மாநகராட்சி விளக்குகள் கண்களை மூடிக் கொண்டன. கடலுக்குள்ளும், படகின் விளக்கோ அல்லது கப்பலின் ஒளியோ இல்லாத சூன்ய நேரம்... கடல் சாட்சியோடு, இருளின் பேயாட்சி... மௌனத்தின் கொடுங்கோல்...

அந்தக் கடல் நுனியில், ஈர மண்ணில் மனோகரும், அன்புமணி, எஸ்தர் உள்ளிட்ட அவன் தோஸ்துக்களும், மாட்டின் பிடறி போன்ற மண் சரிவில், சாய்ந்து கிடந்தார்கள். சிறிது நேரத்தில்... எஸ்தர் மட்டும் எழுந்து, மனோகரின் முன்னால் வந்து, அவன் கால் மேல், தனது கால்களைப் போட்டுக் கொண்டு, அவன் கழுத்தைத் தடவி விட்டாள். காவல்துறையினர், அந்தக் கழுத்துப் பக்கத்தில்தான் பூட்ஸ் கால்களால் அழுத்தினார்கள். அதுவரை முதுகில் லத்திக் கம்புகளையும், முகத்தைக் குத்திய கம்பு முனைகளையும் பல்லைக் கடித்துத் தாங்கிக் கொண்ட மனோகர், அப்போது கதறப் போனான். சத்தம் போட்டு அழ முடியாமல், கண்களில் இருந்து உப்பு நீரும், வாயில் இருந்து எச்சில் நீரும் தரையில் ஒன்றாய்க் கலவையாயின. கடைசியில், இந்த எஸ்தர்தான், அந்த சப்இன்ஸ்பெக்டரையும், கான்ஸ்டபிளையும் கையெடுத்துக் கும்பிட்டாள். 'யானைக்கிட்ட போன கரும்பும், போலீஸ் கிட்டே போன பொருளும், திரும்பாது என்கிறது.. தெரியாதவன், சார்... இனிமேல்... என் பணம் என்னாச்சின்னு

கேட்கமாட்டான் சார்' என்று மன்றாடினாள். அப்படியும், லத்திக் கம்புகள் மீண்டும் ஓங்கப்பட்டபோது, எஸ்தர், ஒருத்தரின் கையைப் பற்றிக் கொண்டு, பெருவிரலை அழுத்தியபடியே சிரித்தாள். சிரிப்பைக் கவசமாக்கி, கண்களில் கிறக்கம் ஏற்றிப் பார்த்தாள். அந்த போலீசாரை கண்களால் கைது செய்து, லத்திக் கம்புகளை கீழே போட வைத்தாள்... அவர்களோ, அப்போதே இரவு வரக் கூடாதா என்று ஏங்கி ஏங்கி, மனோகர் மேல் போட்ட பிடியை விட்டார்கள். அந்தப் பிடியை, எஸ்தர்மேல், அழுத்தம் குறைத்து, கோபம் தணித்துப் போட்டார்கள். பிறகு பகலாய் இருந்தாலும் பரவாயில்லை என்பதுபோல் அவளை இழுத்துக் கொண்டு பின்பக்கமாய்ப் போனார்கள்.

கடற்கரையில், புண்ணை ஊதிக் கொண்டிருந்த மனோகர், இதை நினைப்பதற்கே பயந்தான்.

காவலாளர் கொடுத்த கைப்புண்ணையும், கால் புண்ணையும், மனோகர் ஊதியபோது, எஸ்தர் ஈரக் கடல் மண்ணைப் பிசைந்தபடியே அவனைத் தேற்றினாள்.

''தானாய் ஆறிடுண்டா... உப்புக் காற்றுலே சரியாயிடும்... வாய்க்கு ஏன் வேலை கொடுக்கிற...''

''பாவிப்பயங்க.. சாவடியாய் அடிச்சதும் இல்லாமல், சூட்கேசையும் அதுக்குள்ள இருந்த ஆயிரக்கணக்கான ரூபாயையும் அமுக்கிட்டாங்களே... வெட்ட வெளியே, வீடாய் போயிட்டே...''

''புலம்பாதேடா... மனோ... ஒன்னை இந்தப் பாடு படுத்தின அவனுக ரெண்டு பேருக்கும் எய்ட்ஸ் கொடுத்திட்டேன் பாரு... வேணுமுன்னே திட்டம் போட்டுத்தான்... அவங்க இழுத்த இழுப்புக்கு சாய்ந்து... ஒரேடியாய் இழுத்துச்சாய்ச்சுட்டேன்...''

''இப்போ அதனால... நமக்கு என்ன லாபம்?''

''இப்படி லாப நட்டம் கணக்கு போடாதே அன்புமணி.. ஒனக்கென்ன? என்ன சாலக்கு செய்தியோ... மறுநாளே, போலீஸ் ஒன்னை விட்டுட்டு. ஆனால் இந்த மனோகரைப் படுத்தின பாடு இருக்கே...''

''ஏய்... எஸ்தரு.. ஒனக்கு.. அவன் அடிப்பட்டதுதான் பெரிசா தெரியுதோ... அப்போ... நான் ...இந்த சசி... சேகர்... என்ன பாடு பட்டோம் தெரியுமா... எங்களை என்ன அந்த நாயிங்க.. சந்தனம் பூசித்தடவு னாங்களா...''

''கோவிச்சிக்காதடா... மச்சி... மனோவுக்கு அடிபட்டு பழக்கமில்ல... பாரு.. அதனால சொன்னேன்... பாவம்... ஒங்களையும் ரொம்பத்தான்

அடிச்சிட்டான்''

எஸ்தர், நகர்ந்து நகர்ந்து,.... நித்தியகுமார், முன்னால் போய், கால்களை மடித்துப் போட்டு உட்கார்ந்தாள். அவன் விரல்களுக்கு சொடக்கு விட்டாள். அன்புமணி சட்டையில் அப்பிய மண் துகள்களை தட்டியபடியே கேட்டான்.

'மனோ... ஏதாவது காசு இருக்காடா... ஊசி போடாட்டா... உயிரே போயிடும் போலுக்கு... சாதாரண ஊசியாவே போட்டுக்கலாம்... மில்லி பத்து ரூபாய்தான்...''

எஸ்தர், நித்தியகுமாரிடம் இருந்து விடுபட்டு எழுந்தாள். கால்களையும் கைகளையும் உதறிவிட்டுக் கொண்டாள். அங்குமிங்குமாய்ச் சுற்றினாள். பின்னர் அந்தச் சாக்கில், மனோகரின் அருகே உட்கார்ந்தாள். அவன் காதில் மெல்லக் கிசுகிசுத்தாள். ''மனோ... என்கிட்டே இருக்கிற ஒன்னோட ஆயிரம் பற்றி சொல்லிடாதடா... இந்த துஷ்டப்பய இன்னிக்கே காலி செய்திடுவான்.. நீயும், நானும் இருக்கிறதுக்காக... ஒரு குடிசை பார்த்திருக்கேன்... அதுக்கு தேவைடா...'' என்றாள். மனோகர் மனம் ஆடியது.. அவனுக்கும் பட்டையும், கஞ்சாவும் அலுத்துவிட்டன. அந்த சொர்க்க லோகத்திற்கு, ஊசி வழியாய்ப் போக வேண்டும். அங்கேதான் அவனுக்கு எய்ட்ஸ் கிடையாது. கலைவாணியோடு கைகோர்த்து அங்கேதான் வாழ முடியும்... அங்கேதான் குடியரசுத் தலைவர், அவனுக்கு விருது வழங்குவார்.

மனோகர், எஸ்தர் சொன்னதையும் மீறி, அவளிடம் கேட்கப் போனான். அவளும், போதைப் பைத்தியத்தையும் முறியடித்துதான் அப்படிச் சொன்னாள் என்பது இவனுக்குத் தெரியும். ஆனாலும் மனம் பொறுத்தால், உடல் பொறுக்கவில்லை. உடல் பொறுத்தால், மனம் கேட்கவில்லை... 'எஸ்தர்' என்று சொல்வதற்காக, அவன் நாக்கு முனை மேல் பல்லின் அடிவாரத்தை தொட்டபோது, அன்புமணி இவனை சுதாரிக்க வைத்து விட்டான். மனோகரிடம் பணம் இல்லை என்று அனுமானித்து, இன்னொன்றைக் கிளப்பப் போனான்.

''அப்புறண்டா... நீ பேங்க் லாக்கர்லே தங்க நகைகளை வைத்திருக்கியாம். போலீஸ்காரங்க... பேங்க்புக்கை... ஒன்கிட்ட தெரியாத்தனமாய் கொடுத்திட்டாங்களாம்''

''ஆமா... அதுக்கென்ன இப்போ...?''

''இன்னும் அப்பாவியாவே இருக்கியேடா... மனோ... அந்த நகைகளை எடுத்து, போலீஸ்ல கொடுத்திடணுமாம். இல்லாட்டி, கஞ்சா கேஸ்லே புக் பண்ணி, ஒரு வருஷம் உள்ளே போட்டுடுவாங்களாம். தேவைப்பட்டால், தடாவோ கிடாவோ அதை விட்டு... அடிப்பாங்களாம்... சப் இன்ஸ்பெக்டர்

கண்டிப்பாய் சொல்லிட்டார்.''

'அன்புமணி, நீ எப்போ சப்-இன்ஸ்பெக்டர் ஆனே?''

அன்புமணி, வெடுக்கென்று கேட்ட எஸ்தரை அடித்திருப்பான். ஆனாலும் அவள் திருப்பிக் கொடுக்கிறவள்... இந்த எஸ்தர் இல்லாத சமயமாய் பார்த்து, மனோகர் கிடைத்துவிட்டால், அவனை லாக்கரில் மாட்டி விடலாம்...

அன்புமணி சமாளித்தான்.

''என்ன எஸ்தரு... நாம் நேற்றோ... இன்னிக்கோவா பழகுறோம்? ஒன்னை எப்போ வேலூர் பெங்களூர் ரோட்டுல பைக்கில் பிக்கப் செய்தேனோ... அதுல இருந்தே, நாம் ஒண்ணாப் பழகுறோம்... ஒண்ணா... படுக்கிறோம்... ஒண்ணா சாப்பிடுறோம்... நீ என்னை புரிஞ்சிருப்பேன்னு நினைத்தேன்...''

எஸ்தர் பதில் பேசாத போது, மனோகர் திட்டவட்டமாக தீர்க்கமான குரலில் பேசினான்.

''அன்பு! நீ கேட்டாலும் சரி, அந்த சப்-இன்ஸ்பெக்டர் கேட்டாலும் சரி...லாக்கர்ல இருக்கிற நகை, என் ஒய்ப் கலைவாணியோட நகைங்க. எனக்கு சொந்தமில்லாத பொருளுங்க... கழுத்த நெரிச்சாலும் சரி, சுவரோட சேர்த்து... விலங்குல போட்டாலும் சரி... ஐஸ் கட்டில படுக்க வச்சாலும் சரி, என் கலைவாணி நகையிலே ஒரு கிராம் கூட கொடுக்கமாட்டேன்...''

''எவன்டா... இவன்... ஒன்னை...நான் கொடுன்னா... சொன்னேன்? நீ கொடுக்கப் போனாலும், தடுக்கிறவன்டா... இந்த அன்பு, தர்மத்துக்காக தலையைக் கொடுக்கிறவன்டா...''

''அதான்... போலீஸ்லே எங்களை விட்டுட்டு, மறுநாளே நீ பிச்சிட்டுப் போனியோ...''

''மூள இருக்காடா... சேகர்!... நான் வெளில போய், பிடிக்க வேண்டிய ஆட்களை பிடிக்காட்டால், இந்நேரம் ஜெயிலுல இருப்பீங்க. போலீஸ்லே எப்.ஐ.ஆர். போடாமல் பார்த்துக்கிட்டவன் நான். நான் மட்டும் எனக்கு தெரிஞ்ச 'பெரிசுகளோட' கையை காலை பிடிக்கலன்னா... மனோகருக்கு.. செமத்தையா கொடுத்து அவனே லாக்கர் நகையை எடுத்து... போலீஸ்க்கு கொடுக்க வேண்டியது வந்து இருக்கும். நன்றியோட இருங்கடா... இல்லாட்டி... போய்கிட்டே இருப்பேன்...''

''எங்களை விட்டு ஓடிப் போக முடியுமா...''

''பேசுறதையும் பேசிட்டு... பாடுறான் பாரு பாட்டு, ...அடித்த இடத்தில

அடித்தவனே ஒத்தடம் கொடுத்தது மாதிரி...!''

இதற்குள், இருட்டோடு இருட்டாய், வடதிசையிலும் தென்திசையிலும் சுற்றிக் கொண்டிருந்த சசிகுமாரும், இன்னொருவனும் அங்கே வந்துவிட்டார்கள். அன்புமணி, கைகால் உதறக் கேட்டான்.

''எவ்வளவுடா தேறிச்சு...''

''கஞ்சப் பயல்கடா... முன்கூட்டியே காசு கேட்டால்... முடியட்டும் என்கிறான். முடிந்த பிறகு கேட்டால், நீதான் தரணுமுன்னு அடிக்கிறான். இந்தக் கடற்கரையே ரெளடி மயமாயிட்டு...''

''டேய்... அதோ பாருடா நாயிங்கமாதிரி''

அங்கிருந்த ஒவ்வொருத்தரும், எதிரே சன்னஞ் சன்னமாய் பெருத்துக் கொண்டிருந்த நிழல் உருவங்களை, கீழே கிடந்தபடி பார்த்தார்கள். ஓடித் தப்பலாமா என்பது போல் எழுந்தார்கள். அன்புமணி, அம்போவாய்க் கிடந்த மனோகரை, ஆற்றொண்ணா அன்புப் பெருக்கோடு தூக்கி விட்டான். அதற்குள், இவர்கள் ஓடிவிடக் கூடாது என்பது போல் எதிர் திசைக்காரர்கள், அங்குமிங்குமாய் சிதறி, வட்ட வியூகம் போட்டபடி நடந்து, இவர்கள் அருகே வந்ததும் ஒன்றானார்கள்... சிறிது குள்ளமானவன், பெண்ணாகச் சந்தேகிக்கப்பட்ட எஸ்தரை தனிப்படுத்திக் கேட்டான்.

''இந்தப் பசங்ககிட்டே என்னமே வேல ஒனக்கு?''

''வேலை.. இல்லாமப் போனதாலதான்... பேசிட்டு இருக்கேன்... ஏதாவது வேலை இருந்தா தாயேன்...''

''சரி வா...''

''ஆனால் ஒண்ணு... காண்டோம் போடப்படாது... எனக்கு பிடிக்காது...''

''எங்களுக்கும் பிடிக்காது... யாராவது கிடைத்தால், முழுசாத்தான் பிடிப்போம்''

''அப்படியான்னா நான் எவ்வளவு ரூபாய்க்கு பெறுவேன்!''

''நல்லாத்தான் பேசுறே... வாமே... அதான் ஐம்பதுன்னு ஒரு ரேட்டு இருக்குதே... விலைவாசி கூடிட்டுன்னு யோசிக்கிறியா?''

எஸ்தர், சகாக்களைப் பார்த்தாள். அவர்கள் திருப்தியுடன் கீழே உட்கார்ந்த போது, மனோகர் மட்டும் உட்காரமலே நின்றான். உடனே எஸ்தரும், ''துணைக்கு வா மனோ...'' என்று இவனைப் பிடித்து இழுத்தாள்.

கூப்பிட்ட மூவரும் முன்னால் போனபோது, அவர்கள் பின்னால் நடந்த எஸ்தர், மனோகரின் காதில் கிசுகிசுத்தாள்...

"இவங்க... பேட்டை ரௌடிங்க மாதிரி... கடற்கரை ரௌடிங்க... பொல்லாத போக்கிரிங்க... கற்பழிக்கறதுக்கின்னு சுத்துறவங்க... போராட முடியாது. அதோட... இவங்க, நமக்கு... பாதுகாப்பா கூட இருப்பாங்க..."

"இந்த அசிங்கத்தைப் பார்க்கவா என்னை வரச் சொல்றே...?"

"இல்லடா கண்ணு... நீ அங்கே இருந்தால் அன்புமணி... ஒன்னை மயக்கிடுவான்... நான் வரும் முன்னாலயே ஒன்னைக் கூட்டிக்கிட்டு போயிடுவான். ஒன்னோட லாக்கர் நகையை கைப்பற்றுவது வரைக்கும் அவன் தூங்கமாட்டான். தயவு செய்து கொடுத்திடாதடா..."

"அதைவிட உயிரைக் கொடுப்பேன்"

முன்னால் போனவர்கள், எஸ்தர் தங்கள் பின்னால் வந்துதான் ஆகவேண்டும் என்பது போல் திரும்பிப் பார்க்காமலேயே நடந்தார்கள். ஆனாலும், ஒரு படகு பக்கம் வந்ததும் அப்படியே நின்றார்கள். அவர்களுக்கும், வெட்கம் இருந்தது. ஒருத்தன் மட்டுமே, அவளைப் படகிற்கு மறுபக்கம் இழுத்துக் கொண்டு போனான்.

இருளின் இருளான இருள்காடு... அலைகள் அழுகின்றன... சொறி நாய்கள் ஓலமிடுகின்றன.. மண் பொந்துகளில் இருந்து வெளிப்பட்ட நண்டுகள் துடிக்கின்றன. நாய்களின் வியூகத்தில் சிக்கிக் கொண்ட பூனை, ஒரு குழந்தையைப் போல் அழுகிறது.

எஸ்தர் தட்டுத்தடுமாறி எழுந்து, தள்ளாடித் தள்ளாடி நடந்து, தொலைவாய் நின்ற மனோகரின் தோள் மேல் சாய்கிறாள். அதற்குள், அந்த மூவரில் முதல்வன் "இந்தாமே... நூறு ரூபாய்..." என்று அவளிடம் நீட்டிவிட்டு நடையைக் கட்டுகிறான். அவளுக்கு, சந்தோஷம் தாங்க முடியவில்லை... எல்லா பசங்களையும் சேர்த்து ஊசிப் போட்டுக்கலாம்... பத்து மில்லி மருந்துக்கு தேறும்... சொர்க்க லோகத்தை, பேரின்ப பெரு உலகை சிருஷ்டித்துக் கொள்ளலாம்...

அந்த நூறு ரூபாய் நோட்டை இடது கைக்கு மாற்றி, வலது கையை பேன்டுக்குள் நீட்டியவள் திடுக்கிடுகிறாள். "அய்யோ ஆயிரம் ரூபாய் பர்ஸ். பர்ஸக் காணோன்டா... காணோன்டா..."

எஸ்தர், குத்து காலிட்டு உட்கார்ந்தாள். தலையில் கை வைத்தாள். வெடிக்கப் போனது போல் சிதறப் போன தலையைப் பிடித்துக் கொண்டாள். அந்தத் தலையை, பம்பரமாய் ஆடவிட்டாள். வாயை 'மோசம்

போயிட்டனே... போயிட்டனே...' என்று புலம்பவிட்டாள். கரங்களை, மண் தரையில் போட்டு போட்டு அடிக்கவிட்டாள்.

மனோகர், கீழே குனிந்து, அவளை தூக்கி நிறுத்தினான். மண் பட்ட அவள் உடம்பைத் தட்டிவிட்டான்.

''மனோ..என்னை நம்புறியாடா... ஆயிரம் ரூபாய்... அந்த ரௌடிப் பசங்கதாண்டான அபேஸ் பண்ணிட்டாங்க... மனோ... மனோ... என்னை நம்புறியாடா...?''

''ஒன்னை... நம்புறேன்னு சொல்லமாட்டேன் எஸ்தர்... சந்தேகப்பட்டால் தானே... நம்புறதுக்கு? கலைவாணியை எப்படி மதிக்கேனோ.. அப்படித்தான் ஒன்னையும் மதிக்கேன் எஸ்தர்...''

எஸ்தர், எந்தவித உடல் தாகமும் இல்லாமல், அவனை அப்படியே இறுகப் பிடித்துக் கொள்கிறாள். இருவரும் தொலைவில் கிடக்கும் தோஸ்துக்களையும் மறந்து, இருட்டின் நிழல்களாக இணைந்து நிற்கிறார்கள். கனைப்புச் சத்தம் கேட்டு நிமிர்கிறார்கள். அன்புமணி, சகாக்களோடு நிற்கிறான்...

''என்ன எஸ்தர்... எவ்வளவு தேறிச்சு...''

''அதை ஏன் கேட்கிற...? மனோகர் கொடுத்துவச்ச ஆயிரம் ரூபாய பொறுக்கிப் பசங்க... பிடுங்கிட்டுப் போயிட்டாங்க...''

''இதுக்குத்தான் நம்ம கிட்டே ஒளிவு மறைவு கூடாது என்கிறது. இந்த சசிகுமார், ஒனக்கும் எனக்கும் எவ்வளவு பணம் போட்டிருப்பான். இந்த சேகர் பயல் பணத்தில... எவ்வளவு ரூபாய தின்னுருப்போம்... எங்களைவிட, ஒனக்கு ஆயிரம் ரூபாய் பெரிசா போயிட்டு பாரு...''

''தப்புத்தாண்டா.. தப்புத்தான்.. கைமேல் பலன் கிடச்சிட்டு... ஆனாலும் நூறு ரூபாய் எறிஞ்சிட்டு போனாங்கடா... வாடா... ஊசி போடலாம்''

மனோகர், பித்துப் பிடித்து நின்றான். எஸ்தரின் மனம், இப்போது மாறிவிட்டது போல் தோன்றியது. போகிற போக்கைப்பார்த்தால், இவளே அந்த லாக்கர் நகைகளை கேட்பாள் போல் தோணுதே... இவங்க சாவகாசத்தை அறுத்தால், நான்தானே அறுந்து போவேன்... கள்ளி மரத்தில இருந்து ஒடிஞ்சி விழுந்த கிளையாக போவேனே...

அன்புமணி, மனோகர் பக்கமாய் வந்தான். அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அவன் கையோடு, தன் கையைக் கோர்த்து 'லாக்' செய்தான்.

பின்னர் அவனை, இதமாக நடத்திக் கொண்டு போனான். இவர்களை, இடைமறிப்பது போல் ஒரு பேட்டரி வெளிச்சம்... நிலவு பூமிக்கு வந்து, மூன்றடி உயரத்தில் நின்று, அவர்களைப் பார்ப்பது மாதிரியான வட்ட வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் ஒரு கருப்பனும், இன்னொரு சிவப்பனும் முகம் காட்டினார்கள். அன்புமணிக்கு அடையாளம் தெரிந்தது....

''அடடே.... சலீம்... அண்ணனா... இவரு..?''

''இவருக்கும், என் வேலதான்... பெயரு.. தர்மராஜா''

''நல்லா இருங்க... என்ன விஷயமாய்...?''

''அதை ஏன் கேக்குறே...? குவாய்த்துல இருந்து ஒரு கொழுத்த பணக்காரன் வந்திருக்கான். அவனுக்கு அழகான ஒரு பையன் வேணுமாம். அறிவு கெட்டவன்.. இப்பவே வேணுங்குறான். பகலாய் இருந்தால் செட்டப் பண்ணிடலாம். நட்சத்திரப்பசங்க... எத்தனையோ பேர் இருக்காங்க''

சலீம் பேசிக் கொண்டிருந்த போது, தர்மராஜா, ஒவ்வொருவர் முகமாய் பேட்டரி வெளிச்சத்தில் பார்த்தான். எவனும் சரிப்பட்டதாய் தெரியல. ஆனால், இவன், கிராமப்புற சாயல்...

''ஒன் பேரு என்னப்பா...?''

''மனோகர்...''

''இந்தாப்பாரு.. மனோகர்! நாளைக்கு எப்படியோ... இன்னிக்கி, நீ மகாராஜா... நட்சத்திர ஹோட்டலுல தங்க. விஸ்கி, பிராண்டி, பிரியாணி, காலையில் கைலயே ஆயிரம் ரூபாய். அதுல எனக்கு இரு நூறு... சலீம் அண்ணாத்தைக்கு முந்நூறு.. அப்படியும் சொளையா ஐநூறு ரூபாய் கிடைக்கும்... ஆனால் அந்த ஷேக் என்ன செய்தாலும்... என்ன செய்யச் சொன்னாலும், நீ சம்மதிக்கணும்...''

மனோகர், இலை மறைவாய், காய் மறைவாய் கேள்விப்பட்டிருக்கிறான். இங்கே கிடப்பவர்கள், தங்களது அனுபவத்தை இவனிடம் சொல்ல முயற்சி செய்து இருக்கிறார்கள். அப்போதெல்லாம், இவன் காதுகளை மூடிக் கொள்வான். நினைத்தாலே வாந்தி வரும்... ஆனால் இப்போதோ வாழ்க்கையே வாந்தியாகிவிட்டது. இனிமேலும், இந்த கடற்கரையிலும். அந்த போலீஸ் நிலையத்திலும் சீரழிய முடியாது. எவளைப் பிடிப்பாக நினைத்தானோ... அந்த பிடிப்பே, ஒரு பிடியாகிவிட்டது. எஸ்தர்... எதை நினைத்துச் சொன்னாளோ, இனிமேல் இந்த சகவாசம் கூடாது... இது சகவாசம் அல்ல... சாகப்பயப்படுவதால் ஏற்பட்ட வாசம். இருந்த பணமும்

போயிற்று. ஒரு லட்சம் ரூபாயும்... கலைவாணி பெயரில் போடாமலே போயிட்டு. பேங்கில் இருந்ததை சிறுகச்சிறுக எடுத்துச்சிறுத்துப் போயிற்று. இனி இருப்பது, அந்த லாக்கர் நகைதான்! எஸ்தர் சொன்னது போல, இந்த அன்பு மணி லாக்கர் கதவுதான், 'சொர்க்கத்திற்கு வாசல்' என்று அடம் பிடிப்பான்... இந்த இரண்டு லட்சம் ரூபாயை, எப்படி போக்கினானோ.. அப்படிப் போக்கிவிடுவான்...

மனோகருக்குள், ஒரு வெறி ஏற்பட்டது. உடம்பை எவ்வளவு தூரம் கெடுக்க வேண்டுமோ... அவ்வளவு தூரம் கெடுக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரமா சாக வேண்டுமா, அவ்வளவு சீக்கிரமாய் சாக வேண்டும்...

''என்னப்பா... பேசாமல் நிற்கே...? ஒன்னைவிட்டால்... வேற ஆள் இல்லன்னு நெனைச்சியா?''

''அப்படி இல்ல சார்... வாங்க போகலாம்''

சலீம், அன்பு மணியின் பைக்குள் பத்தோ, நூறோ, ஒரு நோட்டைத் திணித்தான். தர்மராஜா, மனோகரின் தோளைப் பிடித்து, கழுத்தைத் தொட்டான். மனோகர், இருவர் கரங்களையும் பிடித்துக் கொண்டு, திரும்பிப் பாராமலே நடந்தான்...

மனோகர், இப்படி தானாய் ஒரு முடிவெடுத்து, தானே போனதில், அன்புமணி அசந்துவிட்டான். ஆனாலும் மறுநாள், தன்னந்தனியாய் அவனை மடக்கிவிடலாம் அல்லது மயக்கிவிடலாம் என்ற நம்பிக்கை. ஆனால், எஸ்தரால் தாள முடியவில்லை. எந்த விஷயத்திலும் தன்னிடம் யோசனை கேட்கும் மனோகர், இப்போது ஏறெடுத்துப் பார்க்காமலே போவது அவளுக்கு அதிர்ச்சியானது...

எஸ்தர், சிறிது விலகிப் போய் நின்றாள். அவள் ஒதுங்குவதாக சகாக்கள் அனுமானித்த போது, அவள் மாங்கு மாங்கென்று அழுது கொண்டிருந்தாள். வேலூரிலேயே கண்களை நீரில் கரையவிட்டவள், இப்போது கரையாத கண்களை மீண்டும் குளிப்பாட்டினாள். அழுகையையே அழ வைக்கும் நிலைக்கு வந்து விட்டவள், இப்போது குமுறிக் குமுறி அழுதாள். தனக்காக அழாமல், தானாக அழுதாள். எந்த நட்சத்திர ஹோட்டலில் மனோகர் தங்குவானோ... எங்கே தங்கி, பல்வேறு கம்பெனிகளிடம் பேச்சு நடத்தினானோ... அந்த மாதிரியான நட்சத்திர ஹோட்டலுக்கு, அந்த மனோகர் போகிறான். எந்த மாதிரி...!

எஸ்தருக்கு, கண்கள் கடலானது... கண்ணீர் அலையானது... நெஞ்சுக்குள் வெடித்த விம்மல், அந்தக் கடலுக்குக் குரலானது.

29

இப்போதைக்கு, அது இரண்டு மாடிக் கட்டிடம். மூன்றாவது மாடி முளைவிடப் போவது போல், இரண்டாவது மாடியில் மூன்றடி உயரச் சுவர்களில், சதுரம் சதுரமாய் கட்டப்பட்ட செவ்வகக் கம்பிகள் செங்குத்தாக நீண்டு கொண்டிருந்தன. இந்தக் கட்டிடத்தில், அடிவாரத்திலும் ஒரு தளம் இருக்கிறது. ஆனால், அங்கே என்ன இருக்கிறது என்பது 'பட்டுச்சேலை டாக்டர்' என்று பரவலாகப் பேசப்படும் டாக்டர் சுமதிக்கே வெளிச்சம். இந்தக் கட்டிடத்திற்கு முன்னால் போய் நின்று, அண்ணாந்து பார்த்தால், 'மக்கள் விழிப்புணர்வு இயக்கம்' என்று, நவீன ஓவியப் பின்னணியில் எழுதப்பட்ட தேக்குப்பலகை. ஆங்கிலத்தில் 'மாஸ் அவார்னஸ் டைரக்டரேட்' என்று பெயர். இதனாலோ அல்லது இது அல்லாத காரணங்களாலோ, படித்தவர்கள் இந்த வாசகத்தைச் சுருக்கி 'மேட்' என்பார்கள். தெரியாத்தனமாய், இப்படி ஒரு பெயரை வைத்து, அதன் சுருக்கம் இப்படி ஆகிவிட்டதே என்று டாக்டர் சுமதி, ஆரம்பத்தில் வருத்தப்பட்டாலும், இப்போது சந்தோஷப்படுகிறாள்... ஆமாம்... இந்த அப்பாவி மக்களை கரையேற்றுவதில், 'எங்கள் இயக்கத்திற்கு ஒரு பைத்தியம்' என்கிறாள். பைத்தியக்கார பொது மக்களை, எய்ட்ஸ் சம்பந்தமாக பக்குவப்படுத்துவதில் நாங்கள் மேட்... பைத்தியம்தான் என்று அழுத்திப் பேசுகிறாள்.

என்றாலும், இந்த இயக்கத்தின் பெயரைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. முழுக்க முழுக்க எய்ட்ஸ் விழிப்புணர்வு காரியங்களைச் செய்யும் இந்த அமைப்பு, ஏன் எய்ட்ஸ் என்ற வார்த்தையை சேர்க்கவில்லை என்று கேட்கும் இதே மாதிரியான ஒரு சில அமைப்புகள், அப்படிக் கேட்டுவிட்டு குறுஞ்சிரிப்பாகவும் சிரிக்கின்றன. எய்ட்ஸ் என்று

போட்டுவிட்டால், பெண்ணியம், ஊரக வளர்ச்சி, பெண்சிசுக் கொலை போன்ற பிரச்சினைகளில் 'விழிப்புணர்வு' இயக்கங்களை நடத்துவதற்கு, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளிடமும், வெளிநாட்டு நிறுவனங்களிடமும், காசு கறக்க முடியாதே என்கின்றன... ஒரு வேளை எதிர்காலத்தில் எய்ட்ஸ் நோய் குணப்படுத்தப்படலாம் என்று டாக்டர் சுமதி பயந்து, இந்த எய்ட்ஸ்க்குப் பிறகும் தனது அமைப்பு இருக்க வேண்டும் என்பதற்காக, இப்படி பொதுப்படையான பெயரைச் சூட்டியிருப்பதாக, இந்த அமைப்பு போல் வளராத இதர அமைப்புகள் இயம்புகின்றன. ஒரு தடவை, 'இப்படிப்பட்ட' கருத்து பற்றி டாக்டர் சுமதியிடமே செய்தியாளர் கூட்டத்தில், ஒருத்தர் கேட்ட போது, 'காய்த்த மரத்தில்தானே... கல்லடி விழும்' என்று அவள் பதிலளித்தாள். உடனே இன்னொரு நிருபர் 'முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது என்றும் வைத்துக் கொள்ளலாமே' என்ற கேட்ட போது, டாக்டர் சுமதி செய்தியாளர்களுக்காக திட்டமிடப்பட்ட 'காக்டெய்ல் பார்ட்டியை' ரத்து செய்து விட்டாளாம். எப்படியோ போகட்டும்...

கலைவாணி, கீழே இருந்து படியேறி, முதலாவது தளத்திற்குள் நுழைந்தாள். ஒரே கிளு கிளுப்பு... உடலெங்கும் பொங்கிய வியர்வை, உடனடியாய் பன்னீராய் மாறிய பரவசம்... உச்சிச் சூரியனை உள்ளே விடாமல், ஆகாயத்தில் கட்டிப் போட்டது மாதிரியான நேர்த்தி; தெர்மகோல் போட்ட மேற்பரப்பு... இவற்றிற்கு இடையிடையே நிலா விளக்குகள்... பரந்து விரிந்திருந்த தளத்தில், ஆங்காங்கே அலுமினிய உருளைக் கம்பிகளில் பொருத்தப்பட்ட நோவா பலகைகள்... அதோடு தளத்தை சின்னச் சின்ன தடுப்புக்களாய் காட்டும் செக்ஷன்கள்... ஒவ்வொரு தடுப்பறையிலும் அழகழகான சொக்காப் பெண்கள். பனியன் சட்டை போட்ட இளைஞர்கள்... இவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை கூறுகிறவர்களாம்...

கலைவாணி, இந்த நோவா தடுப்புகளில் இருந்து தனித்திருந்த அறைக்குள் போனாள். நீண்ட பெரிய கூடம்... இடது பக்கம் சோபா செட்... வலது பக்கம் ஒரு மேஜை... அதன் மேல் ஒரு எலக்ட்ரானிக் டைப்ரைட்டர்... நீளவாக்கில் பல்வேறு பைல்களை கொண்ட ரேக்... இந்த ஜடப் பொருட்களைப் பார்த்த கலைவாணி, எதிர் பக்கம் ஜடமாய்க் கிடந்த ஒரு பிள்ளையாண்டானைப் பார்த்தாள். கழுத்தில் ஒரு கலர்டை கட்டியிருந்தான். அந்த ஏஸியிலும் அவன் முகம் வேர்த்திருந்தது. இவனது இருபக்கமும் நடுத்தர வயதைத் தாண்டிய இருவர்... பெற்றோராய் இருக்கலாம்... சூட்டுகோட்டு போட்ட அந்த மனிதர் கையில் ஒரு கவர்... டாக்டர் அசோகன் மேசையில் அடுக்கி வைக்கப்பட்ட கவர்கள் மாதிரி அதே நிறம். அம்மாக்காரியின் கண்கள் சிவந்திருந்தன... அந்த மனிதர், மகனின் முதுகு

வழியாக தங்கச்சங்கிலி போட்ட கடிகார கையை நீட்டி, அவன் முதுகைத்தட்டிக் கொடுக்கிறார். அந்த இளைஞன், ஏதோ பேசப் போகிறான்; பிறகு பேச்சற்று, மூச்சற்றவன் போல் மேற்கூரையை நோககுகிறான். பார்வையில் கூட ஒரு கோர்வை இல்லாதது போல், குமைந்து போய்க் கிடக்கின்றான்.

கலைவாணி, அவர்களை ஊனுருகிப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு, உள்ளே பச்சைக் கண்ணாடி ஜன்னல்களைக் கொண்ட அறைக்கு பக்கவாட்டில், ஒரு முக்காலியில் உட்கார்ந்திருக்கும் மீசைக்காரனிடம் ஏதோ பேசினாள். அவனோ அவள் வருவது தெரியும் என்பது போல் தலையாட்டி விட்டு, அதே சமயம் அவளைக் கையமர்த்தினான்... கலைவாணியை, பக்கத்தில் உட்காரச் சொல்லுகிறான். அவள் உட்காரமலேயே, கடிகாரத்தைப் பார்க்கிறாள். பத்து நிமிடத்திற்குள் டாக்டர் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று எவளோ ஒருத்தி சொல்லிவிட்டுப் போனாள். இவள் நிதானமாக புறப்படப் போனபோது, 'டெஸ்பாட்ச்' செக்ஷன் எடுபிடிப் பெண்கள் இவளை அவசரப்படுத்தினார்கள். சொன்ன நேரத்திற்கு சுமதியம்மாவைப் பார்க்காவிட்டால், அப்புறம் பார்க்க வேண்டிய அவசியமே இராது என்று வேறு பயமுறுத்தி விட்டார்கள். இவளுக்கும் வேலை போய்விடக் கூடாதே என்ற பயம். மாதம் அறுநூறு ரூபாய் சம்பளமும், இருப்பதற்கு கிடைத்துள்ள ஒரு அறையும் இழுபறியாகி விடக் கூடாதே என்ற அச்சம். இந்த அமைப்பில் சேர்ந்த இந்த ஆறுமாத காலத்தில், டாக்டர் சுமதியை இதே அறையில் ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கிறாள். அதுவும், அசோகனின் வேண்டுகோள் படி; அவனது மருத்துவ மனையில் இருந்து இவளைக் காரில் ஏற்றிக் கொண்டு போன சுமதி, வழியிலேயே இவளை இறக்கிவிட்டு, ''நான் இப்படியே கலெக்டர பார்க்கப் போறேன்... நீ ஆபீஸ்ல போய் வெயிட் பண்ணு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். மணிக்கணக்கில் காத்திருந்த கலைவாணி, அறைக்குள் நுழையப் போன சுமதிக்கு ஒரு வணக்கம் போட்டாள். உடனே டாக்டர் சுமதியும், இவள் உள்ளே வரப்படாது என்பது போல் வாசல் கதவை மறைத்த படியே 'பி.ஏ.' விடம், இவள் சம்பந்தமாக ஏதோ பேசிவிட்டு உள்ளே போய்விட்டாள். இந்த பி.ஏ. சரியான மேனாமினுக்கி... எங்கெல்லாமோ போய், யார் யாரிடமோ பேசி, கும்மாளம் அடித்துவிட்டு, ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, இவளுக்குரிய வேலைகளை விளக்கினாள். கிரவுண்ட் புளோரை விட்டு, எந்த புளோருக்கும் போகப்படாது. என்னென்ன கடிதங்கள், யார் யாருக்கு போகின்றன என்பதைக் குறிப்பெடுக்க வேண்டும். கவர்களை ஒட்ட வேண்டும். சைக்கிள் பையன் போட்டுவிட்டுப் போகும் செய்திப் பத்திரிகைகள், வாரப்பத்திரிக்கைகள் ஆகியவற்றில், இந்த

அமைப்பைப் பற்றியோ, டாக்டர் சுமதியைப் பற்றியோ எதாவது செய்தியோ அல்லது 'ரைட்டப்போ' வந்திருந்தால், அதைச்சுட்டிக் காட்டி, உடனடியாய் மேலே அனுப்பி வைக்க வேண்டும். இதுதான் அவளோட வேலை... ஆனால், இதுவே அவளுக்குச்சரியாக இருந்தது.

முக்காலியில் இருந்த மீசைக்காரன், கிட்டத்தட்ட தூங்கிப் போனான். கலைவாணிக்கு சங்கடமாய் இருந்தது. ஒரு வேளை, டாக்டரம்மா தான் இன்னும் வரவில்லை என்று நினைத்துவிடப் படாதே என்ற முன்னெச் சரிக்கை. அந்தம்மாவை முழுமையாய்ப் பார்த்து, நேருக்கு நேராய் பேசப் போவது இதுவே முதல் தடவை. டாக்டர் அசோகன் மருத்துவமனையிலும், அதற்குப் பிறகு இங்கேயும் அவ்வளவு சரியாகப் பார்க்கவில்லை. இந்தம்மா காரில் இறங்கும் போதும், ஏறும் போதும் மட்டுமே சில சமயம் பார்த் திருக்கிறாள். எவனும் எவளும் இந்தம்மா கூப்பிடாமல், முண்டியடித்து முன்னால் போய் நிற்கக் கூடாது என்பது பி.ஏ.ம்மா ஆணை. அதோடு இந்த சுமதியம்மா, அந்த அலுவலகத்தில் இருந்ததை விட, வெளிநாடுகளில் இருப்பதே அதிகம்... ஆகையால் இந்தப் பெண் விக்கிரமாதித்தை கூப்பிட்டு அனுப்பிய காரணத்தைக் கண்டறிய, கலைவாணிக்கும் ஒரு ஆவல். எவ்வளவு நாளைக்குத்தான் கவர்களையே ஒட்டிக் கொண்டிருப்பது...

கலைவாணி, பொறுமை இழந்தாள். வழுவழுப்பான ரப்பர் மெத்தை யால் போர்த்தப்பட்ட கதவைத் திறந்தபடியே, உள்ளே போனாள். அப்போது அந்தக் கதவுச்சத்தமும், மீசைக்காரனின் குறட்டை சத்தமும் ஒன்றாய்க் கலந்து ஒரு விநோத சத்தத்தை ஏற்படுத்தியது.

அந்த அறைக்குள், டாக்டர் சுமதி ஒரு சுழல் மெத்தை நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அது முன்னாலும், பின்னாலும் வளைந்து அவளை மலக்க வைத்தும், கவிழ்க்க வைத்தும் கண்ணாமூச்சி ஆடியது.. எதிரே உள்ள வட்ட வளைவு பளிங்கு மேஜையில், விதவிதமான வண்ணங்களில் அடுக்கடுக்கான பைல்கள்... கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்கு... ஒரு டெலிபோன்... ஒரு இண்டர்காம்... ஒரு கம்ப்யூட்டர். ஒரு வீடியோ திரை... அந்த மேஜைக்கு அப்பால் உள்ள மெத்தை நாற்காலிகளில், இரண்டு வெள்ளைக்காரிகள்... ஒரு காரன்... அந்தப் பெண்கள், வயதுகாணா வனப்பு... சுழல் நாற்காலிக்காரியின் சிவப்பு முகமும், வெள்ளக்காரர்களின் வெளுப்பும், வெள்ளை ஆகாயத் திட்டுக்களுக்கு இடையே, காலைச்சூரியன் தலையாட்டி பேசுவது போல இருந்தது. சும்மா சொல்லக் கூடாது... அந்த சூழலுக்கு ஏற்ப, டாக்டர்சுமதி இடுப்புக்குக் கீழே பட்டுச்சேலை கட்டியிருந் தாலும், அதற்கு மேல் கட்சோளிதான் போட்டிருந்தாள். முந்தானை பட்டும் படாமலும், மார்பகத்திற்கு இடையே ஒல்லியாய் போய், கழுத்தை வளைத்து ஒரு பக்கத்து தோளில் தொங்கியது. தலைமுடி, வழக்கத்திற்கு

விரோதமாய் மேல் நோக்கி சுருட்டப்பட்டிருந்தது.

அந்த நால்வரையும் நோக்கிப் போகப் போன கலைவாணி, அடபடியே நின்றாள். அவர்கள் பார்த்த வீடியோ படத்தை இவளும் பார்த்தாள். என்ன இது...? டாக்டர். அசோகனின் எய்ட்ஸ் வார்ட். சந்தேகம் இல்லாமல் அதே நோயாளிகள். அதே ஆயா. அதே வார்ட் பையன்.. ஆயா, ஒரு நோயாளியை கிணற்றுக் கல்லில் உட்கார வைக்கிறாள். சுமதியம்மா... பக்கத்தில் உள்ள வாளியில் இருந்து, தண்ணீரை ஒரு குவளையில் மொண்டு மொண்டு, அந்த நோயாளியின் தலையில் ஊற்றுகிறாள். அந்த உடம்பை, வார்ட் பாய் ஒரு பிரஷ்ஷால் தேய்க்கத் தேய்க்க, இவள் சோப்பை நீட்டுகிறாள். தண்ணீரைக் கொட்டுகிறாள்... அப்புறம் அடுத்த காட்சி. சுமதியம்மா எய்ட்ஸ் நோயாளிகள் தலைகளைக் கோதி விடுகிறாள். தண்ணீரை, பயத்தாலோ அல்லது பாசத்தாலோ நடுங்கும் கரங்களால் துடைத்து விடுகிறாள். மூன்றாவது காட்சியில், அவர்கள் வாயில் உணவூட்டுகிறாள். நான்காவது காட்சியில் சுமதியம்மாவின் தனிப்பேட்டி... ஐந்தாவது காட்சியிலாவது அசோகன் வருவாரா... இல்லை... அதோடு சரி...

கலைவாணிக்கு, டாக்டர் அசோகனை நினைக்க நினைக்கப் பாவமாய் இருந்தது. இதை, அவனிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று நிறுவன விசுவாசத்திற்கும், உண்மைக்கும் இடையே இழுபட்டுக் கொண்டிருந்தாள்.

டாக்டர் சுமதியை, அந்த மூன்று வெள்ளைக்காரர்களும் அதிசயித்துப் பார்த்தார்கள். வெள்ளைக்கார மனிதர், அவள் கையை பலம் கொண்ட மட்டும் குலுக்கினார். பெண்களில் இளையவள், மேஜையில் உடல் சாய்த்து, தலையை பாம்பு போலாக்கி, சுமதியில் கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள். வயதானவள், 'ஒண்டர்புல், ஒண்டர்புல்...' என்று தன் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்...

குட முழுக்கு செய்யப்பட்ட கோபுர உச்சிபோல் கொண்டை போட்டிருந்த சுமதி, அந்த வெள்ளைக்கார பெண்களுக்குக் கை கொடுத்தாள். அந்த வெள்ளைக்காரர் பிடித்த கரத்தை லபக்கென்று எடுத்துக் கொண்டு, அவருக்குக் கை கூப்பினாள்... தமிழ்ப் பண்பாட்டை விட்டுக் கொடுக்க முடியுமா?...

இந்த அமர்க்களத்திற்குப் பிறகு, இதுதான் சமயமென்றோ அல்லது ஏற்கெனவே திட்டமிட்டபடியோ, டாக்டர் சுமதி ஒரு வரை படத்தை எடுத்தாள். மேஜையில் ஒரு முனையில் இருந்த ஸ்லைட் புரஜெக்டரில் சொருகினாள். மறுமுனையில் உள்ள சின்னத் திரையில் ஒரு வரைபடம் தோன்றியது. உடனே சுமதி, கலை வேலைப்பாடு கொண்ட ஒரு ரூல்தடியால், ஒவ்வொரு இடத்தையும் சுட்டிக்காட்டி, இசையமைப்பது போல் குரலை

ஏற்ற இறக்கமாக வைத்துக் கொண்டு விளக்கினாள்.

''இது தொலைவான இடங்களில் இருந்து இங்கே கவுன்சலிங் வருவோர்க்கு குடில்கள் கட்டும் இடம்... இது... கண்டதையும் கேட்டதையும் தீர விசாரித்து காட்சியாக்கும் வீடியோ தியேட்டர்... அது எய்ட்ஸ் நோயாளிகளோடு, நான் உட்பட எல்லோரும் உணவருந்துவதற்கான பொது உணவுக்கூடம்... இது ஹெச்.ஐ.வி. நோயாளிகளை சொந்தக்காலில் நிற்க வைப்பதற்கான பல்வேறு பயிற்சிப்பட்டறைகள்... ஒயர் கூடை பின்னுதல், மின்சார காயல் செய்தல்... ஜெம் கட்டிங்... பேட்டரி ஸெல் செய்தல்... டெய்லரிங்... இது கம்ப்யூட்டர் டிரெயினிங் சென்டர்... இது பிரிண்டிங் பிரஸ்...''

அந்த வெள்ளைக்காரர்கள் மூவரும், இப்போது இருக்கைகளிலே குதித்தார்கள். உடனே டாக்டர் சுமதி, ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் தான் வெளியிட்ட விளம்பரத்தைக் காட்டினாள். அது, இந்துவிலோ, இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸிலோ வரவில்லை... ஏதோ ஒரு போணியாகாத ஆங்கிலப் பத்திரிகை... பணியாற்ற ஆட்கள் தேவையாம்... எய்ட்ஸ் கிருமி பிடித்த இளைஞர்கள், யுவதிகள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டுமாம்...

அந்த வெள்ளைக்காரர்களுக்கு, ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சர்யம்... இப்படி ஒரு பரோபகாரியா... இப்படி ஒரு தன்னலமறுப்பு தியாகியா... புத்தரும் சித்தரும் மகாத்மாவும் அவதரித்த, இன்டியா இன்டியாதான்.

அந்தப் பெண்களில் வயதானவள், இருபக்கமும் இருந்த சகாக்களின் காதுகளைக் கடித்தாள். உடனே நாசூக்கு தெரிந்த சுமதி எழுந்து, அந்த அறையின் முன்பக்கமாக வந்தாள். கலைவாணி அங்கே நிற்பதை, அப்போதுதான் பார்த்திருக்க வேண்டும். அவளை வெளியே போகும்படி கையசைக்கப் போனாள்... அதற்குள், அந்த வெள்ளைக்காரர்கள் அங்கே வந்து, அருகே உள்ள சோபா செட்டில் உட்கார்ந்தார்கள்... டாக்டர் சுமதி கலைவாணியை கண்டுகொள்ளவில்லை... எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிற மாதிரி ஆகிவிடப் படாதே...

வயதான மாது பேசப் போனாள். இவர்கள் கனடா நாட்டுக்காரர்கள்... அங்கு ஒரு கோடான கோடீஸ்வரர், எய்ட்ஸ் நோயால் இறந்து போனாராம்... ஆனால் இறக்கும் முன்பு, சொத்துக்களை ஒரு டிரஸ்டாக்கி விட்டார். இந்த டிரஸ்ட், இந்தியாவில் எய்ட்ஸ் நோயாளிகளின் உதவிக்கு ஒட வேண்டும் என்றும் உயில் எழுதிவிட்டார். இந்த உயில் ஆணையை நிறைவேற்றவே, இவர்கள் அந்த டிரஸ்டின் சார்பில் இந்தியா வந்திருக்கிறார்கள்... அந்த வெள்ளைக்காரம்மா கேட்டாள்.

''டாக்டர் சுமதி... இந்த புராஜெக்டுக்கு எவ்வளவு செலவாகும்...''

''மினிமம்... ஒன் குரோர்... ஒரு கோடி டாலர்... இல்ல ரூபா...''

''நாங்க எவ்வளவு கொடுக்கணும்?''

''எனக்கென்னமோ... இந்த புராஜெக்ட் முழுவதையும், நீங்களே நடத்தணுமுன்னு தோணுது... எத்தனையோ பேர் புராஜெக்டுக்கு பைனான்ஸ் செய்யத் தயாராய் இருக்காங்க... ஆனால் இந்த திட்டம்... எய்ட்ஸ்சால் மரணமான ஒரு உத்தமரோட பணத்திலயே நிறைவேற்றப்பட்டால்... அதுவே, அந்த மாமனிதனுக்கு செய்யப்படுகிற மகத்தான அஞ்சலி ஆயிற்றே... இல்லையா மேடம்...?''

''ஓ... கே... குட். நீங்களே... இந்த பிராஜெக்ட்டுக்கு இன்சார்ஜ்... நீங்களே, எங்கள் லோகல் ஏஜெண்ட்... அப்புறம் இதே ஏரியாவில டாக்டர் அசோகன்னு ஒருத்தர்... எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சேவை செய்கிறாராமே... ஏன் சிரிக்கிறீங்க...''

''டாக்டர் அசோகன் என்னோட சபார்டினேட்... அது என்னோட மருத்துவமனை... போய்ப் பார்ப்பாமோ...''

''இப்போ... நேரமில்ல... டாக்டர் சுமதி... நீங்க நெசமாவே கிரேட்... இந்த உலகம் இன்னும் உயிரோட இருக்குதுன்னா... அதுக்கு ஒங்களை மாதிரி தொண்டர்களே காரணம்... யூ ஆர் லைக் மதர் தெரோஸா... மேடம் கியூரி... டாக்டர் முத்துலட்சுமி''

''நோ... நோ... ஓங்க டிரஸ்ட்டோட நிறுவனர் ஜான் பெட்டிக்கோவிற்கு நீங்க பெருங்கருவி... நான் உங்களுக்கு ஒரு சிறு கருவி... எல்லாவற்றுக்கும் மேல... காட் இஸ் கிரேட்...''

''ஓகே... கனடாவுக்கு திரும்பினதும் முறைப்படி லட்டர் போடுறோம்''

''ஒரு சின்ன விண்ணப்பம்...''

''வாட்...?''

அப்படியே இந்த புராஜெக்ட் சாங்க்ஷன் ஆகாட்டி கூட பரவாயில்ல... ஆனால், நீங்க அடிக்கடி இங்கே வரணும்... ஒங்க தரிசனம், எனக்கு கிடைக்கணும்... ஏன்னா... ஒங்கள் மூலம்தான் சேவை, தியாகம், அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்கு அர்த்தம் ஆழமாகுது''

''எங்களால வர முடியாட்டாலும்... ஒங்களை கனடாவுக்கே வரவழைப்போம் டாக்டர் சுமதி''

வயதான வெள்ளைக்காரி அம்மா, மனம் நெகிழ்ந்து, டாக்டர் சுமதியின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தாள். இளவயதுக்காரி, அவளைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள். சிறிது நேரம், ஒருவரை ஒருவர் பார்த்தபடியே நின்றார்கள். அதற்குப் பிறகு, டாக்டர் சுமதி அந்த மூவரையும் வழி நடத்தி வாசலுக்கு கொண்டு வந்தாள். ''ஒங்களை ஹோட்டலுல சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, கதவைத் திறந்து வைத்து வாசலாக்கினாள்...

வணக்கம், போட்டபடியே, அந்தக் கதவைப் பிடிக்கப் போன கலைவாணியை, மோவாயை ஆட்டி நின்ற இடத்திலயே நிற்க வைத்தாள்...

அந்த மூவரையும் வெளியே அனுப்பிவிட்டு, கையை விட்டதும் தானாக பூட்டிக் கொண்ட கதவுப் பக்கம் நின்றபடியே, கலைவாணியைப் பார்த்துச் சீறினாள்.

''ஒன்னை யார் இங்கே நிற்கச் சொன்னது?''

''நீங்க தான் வரச் சொன்னீங்க மேடம்...''

''வரச் சொன்னால், இப்படி உள்ளே வந்து தான் நிற்கணுமா...? வெளில நிற்கப்படாதா...!''

''வெளிலதான்... நின்னேன் மேடம் நான்... வரவே இல்லன்னு நீங்க நெனச்சுடக் கூடாதுன்னுதான்... உள்ளே வந்து நின்னேன் மேடம்...''

''நல்ல வேளை... சோபா செட்டுல உட்கார்ந்து, கால்மேல கால் போட்டு உட்காராமல் நின்னியே... அதுவரைக்கும் நன்றி... நீ கிராஜுவேட் தானே... அடிப்படை மேனர்ஸ் கூடவா தெரியாது...!''

''நான்... யார் மேலயும் என்னைத் திணிக்க மாட்டேன் மேடம்... ஒரு வேளை... அந்த வெள்ளைக்காரங்களோட நீங்க பேசும் போது... என் உதவி உங்களுக்கு தேவைப்படுமோன்னு தான் நின்னேன் மேடம்...''

''ஒன்னப்பற்றி... ரொம்பத்தான் உயர்வாய் நினைக்கே...''

''எதுக்கு... கூப்பிட்டிங்கன்னு சொல்லுங்க மேடம்! எனக்கும் தலைக்கு மேல் வேலை இருக்குது... கவர் செய்யுறதுக்கு காக்கிப் பேப்பர் வாங்கணும்... டெஸ்பாட்ச் ரிஜிஸ்டரை... அப்படியே போட்டுட்டு வந்திட்டேன்...''

டாக்டர் சுமதி, மஞ்சள் சேலையில் மதர்ப்பாக நின்ற கலைவாணியை, சிறிது பொறாமையோடு பார்த்தாள். இந்த மாதிரி உடம்பு தனக்கு இருந்திருந்தால், இன்னும் எத்தனையோ உள்நாட்டு புராஜெக்டுகளை வாங்கியிருக்கலாம்.

டாக்டர் சுமதி, கலைவாணியை ஆழமாய் பார்த்தாள். அந்த ஆழத்திற்கு அளவு பார்ப்பது போலவும் பேசினாள்.

''ஒனக்கு... எவ்வளவு இன்டலிஜென்ஸ்... கிராஸ்பிங் பவர் இருக்குன்னு தெரிஞ்சுக்கறதுக்காக கேட்கேன். நாங்க என்ன பேசுனோம், சொல்லு பார்க்கலாம்''

''ஒட்டு கேட்கிற பழக்கம் எனக்கு கிடையாது மேடம்... அதோடு ஒங்க கான்வென்ட் இங்கிலீசும்... அவங்களோட தொண்டைக்குழி பேசுறதுமான இங்கிலீசும் எனக்குப் புரியல மேடம்...''

டாக்டர் சுமதி, இப்போது சிரித்து விட்டாள். அப்பாடாவாக சிரித்தாள். அசோகனை, தனது சபார்டினேட் என்று சொன்னது, அவளுக்குக் கேட்கவில்லை... இவளை அதிகமாக ஒதுக்கவும் கூடாது. அந்தரங்கமாய் பழகவும் விடப்படாது. ஆனாலும் அந்த 'பி.ஏ.' எப்போ வாராளோ... எத்தனை தடவைதான் காதலன மாத்துவாள். எத்தனை தடவதான் ராத்திரி பிக்னிக் போவாள்.

''ஒனக்கு டிக்டேஷன் எடுக்கத் தெரியுமா...''

''தெரியும் மேடம்... காலேஜ்ல படிக்கும் போதே கத்துக்கிட்டேன்''

''நான் கோபப்பட்டதை தப்பா நினைக்காதே... அவங்க வெளிநாட்டுக்காரங்க... நான் என்னமோ... ஒன்னை வேலைக்காரியாய் ஒரத்தில் நிற்க வச்சாதாய் அவங்களுக்கு ஒரு தப்பு அபிப்ராயம் வரப்படாது பாரு... அதனாலதான் சொன்னேன்''

''நான் இப்போ... ஒங்களுக்கு என்ன செய்யணும் மேடம்''

''வெளியிலே பி.ஏ. சீட்ல போய் உட்காரு... விசிட்டர்ஸ் வந்தால்... விசாரி.. என்கிட்டே கேட்டுட்டு அனுப்பு... வேலைக்குன்னு யாராவது வந்தால், நீயே திருப்பி அனுப்பி விடு... டெலிபோன்ல யார் பேசினாலும்... ஒன் மினிட்டுன்னு சொல்லிட்டு... என்கிட்ட இன்டர்காமில் பேசிட்டு அப்புறம் பதில் சொல்லு...! ஒனக்கு லைட் ஒர்க்காதான் கொடுக்கேன். இரண்டே இரண்டு நாளைக்குத்தான்... அப்புறம் பி.ஏ. வந்து விடுவாள். இன்றைக்கு இரண்டரை மணிக்கு யூனிசெப் போகணும்... ஐந்தரைக்கு ஒரு யூனிவர்சிட்டி புரோக்கிராம்... மறக்காம ஞாபகப்படுத்து...''

''எஸ் மேடம்...''

''உடம்பு எப்படி இருக்குது?''

''இன்னும் அந்த எபெக்ட் தெரியல மேடம்''

''ஓகே... நீ போகலாம்... இனிமேல் நான் கூப்பிட்டால் மட்டும், உள்ளே வந்தால் போதும்''

மாம்பழ டிசைன் பட்டுச் சேலையில் பழமைக்குப் பழமையாகவும், கட்சோளி லிப்டிக்ஸ்... கண்மை, மூக்கை முறிக்கும் சென்ட் வகையறாக் களோடு புதுமைக்குப் புதுமையாகவும் நின்ற சுமதியை, கலைவாணி ஒரங்கட்டிப் பார்த்துவிட்டு, வெளியே வந்தாள்.

இன்னமும், அதே இளைஞனும், அவனோடு வந்த பெரியவர்களும் அதே கோணத்தில், அதே முகவாட்டத்தில் இருந்தார்கள். அவர்களை ஆதரவாக பார்த்தபடியே, எதிர்ப்பக்கம் உள்ள மேஜைக்குப் பின்னால்

போடப்பட்டிருக்கும் பி.ஏ. நாற்காலியில் கலைவாணி உட்கார்ந்தாள். இதற்குள் எதிர் பக்கத்தில் இருந்து, அந்த மனிதர் அங்கிருந்தபடியே பேசினார்.

''இப்போவாவது, நாங்க டாக்டரைப் பார்க்கலாமா... எவ்வளவோ சொல்லியும், இந்த மீசைக்காரன் கேட்கல. எனக்கும் வேணும்... எத்தனையோ பேரை நான் காக்க வைத்திருக்கேன்...''

கலைவாணி வினயமாய்க் கேட்டாள்.

''அய்யா கொஞ்சம் விபரமாய்''

''அப்போ... அவரு... இப்போ நீங்களா... சொல்லித் தொலைக்கேன்... என் பேரு... தேவையில்லை.. சேலம் இன்டஸ்டிரியலிஸ்ட்ன்னு சொல்லுங்க... அவங்களுக்கே தெரியும். இவன் என் மகன் ரகோத்தமன்... ஹெச்.ஐ.வி. கேஸ்... போதுமா...? இப்போவாவது விடுவீங்களா..?''

''ஒரு நிமிடம்... ஒரே நிமிடம்..?''

கலைவாணி, இன்டர்காமில் விபரம் சொன்னாள்; அதை வைப்பதற்கு முன்பே, டாக்டர் சுமதி வெளியே வந்து கத்தினாள்.

'வாங்கோ.. வாங்கோ... நேராய் உள்ளே வரவேண்டியது தானே...? ஏம்மா... ஒனக்கு அறிவிருக்குதா... தராதரம் தெரிய வேண்டாம்... ஐயாம் சாரி... சாரி... வாங்க சார்...''

அந்த தொழிலதிபர்... 'பரவாயில்ல... பரவாயில்ல'' என்றார். பிறகு அந்த மூவரும் சுமதியோடு உள்ளே போனார்கள். கலைவாணி முகம் சுழித்தாள்... மீசைக்காரன் ஆறுதல் சொன்னான்.

''வருத்தப்படாதீங்க... வேணுமுன்னே ஆட்களை காக்க வச்சுட்டு... இப்படி பேசுறது, நம்ம அம்மாவோடு டெக்னிக்...''

கலைவாணி, வேண்டா வெறுப்பாய், அங்கும் இங்குமாய்ப் பார்த்தாள். ஹெச்.ஐ.வி. பிடித்த அந்த இளைஞன் மனதில் நிழலாடினான். கொடுத்து வைத்து பிறந்தாலும் அதைக் கெடுத்து விட்டவன்... நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்... என்பதை மறந்து போன செல்வச்சீமான்...

கலைவாணி, தன் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக, மேஜைக்கு அடிவாரத்தில் உள்ள டிராயரை பார்த்தாள். அது அவசரத்தோலோ என்னவோ திறந்திருந்தது. அதில் ஒரு பெரிய நோட்டுப் புத்தகம். டாக்டர் சுமதி நிறுவனத்தின் ஆண்டறிக்கை.எதேச்சையாய் எடுத்து தற்செயலாய் புரட்டினாள். முதல் பக்கத்தை பார்த்துவிட்டுப் புன்னகைத்தாள். இரண்டாவது பக்கத்தில் புளகாங்கிதம்..அப்புறம் 'என்ன இது. இந்த டாக்டர் அசோகனும் ஒரு பிராடா..?'

30

ஒரு வார காலமாக, டாக்டர் சுமதியின் பி.ஏ.வான நேர்முக உதவிப்பெண்ணைக் காணவில்லை. விசாரித்துப் பார்த்ததில், அவளே இப்போது குருவுக்கு மிஞ்சிய சிஷ்யையாகி, தனியாட்சி செய்யப் போவதாகக் கேள்வி...போட்டி விழிப்புணர்வு இயக்கம் ஒன்றை அமைக்கப் போவதாக வதந்திகள்...இதனால் சுமதியம்மா, படபடப்பாய், பரபரப்பாய் இருப்பதாகச் செய்தி...ஆனாலும், கலைவாணியை, அங்கேயே உட்கார வைக்கவில்லை. அவ்வப்போது கூப்பிட்டு, பொதுப்படையான விவகாரங்களை ஒப்படைத்தாள். இன்று அப்படித் தான்...காலையலேயே வரச்சொல்லி விட்டாள். முன்னெச்சரிக்கையாக, ஆண்டறிக்கை நோட்டை போனவாரமே எடுத்து, தனது அறைக்குள் எங்கேயோ வைத்துவிட்டாள். முந்தாநாள், வேறு எவனோ ஒருத்தன், இந்த உள்ளறைக்குள் அதை டைப் செய்து கொண்டிருந்தான். ஆனாலும், கலைவாணி, அந்த ஆண்டறிக்கையைப் பொறுத்த அளவில் ஒரு கணிப்பொறியாகிவிட்டாள். டாக்டர் அசோகன், கிட்டத்தட்ட ஒரு பினாமி..அங்குள்ள எய்ட்ஸ் நோயாளிகளைப் பராமரிக்க, சுமதிக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவாகிறதாம். இது அல்லாமல், அசோகனுக்கு மாதாமாதம் எட்டாயிரம் ரூபாய் சம்பளமாம். செத்துப் போகும் எய்ட்ஸ் நோயாளிகளை கௌரவமாக அடக்கம் செய்வதற்கு முப்பதாயிரம் ரூபாய் ஆண்டுச் செலவாம்.. இதே போல் எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கங்கள், எய்ட்ஸ் பெண்களுக்கு மறுவாழ்வு வழங்குதல், அவர்களின் குடும்பங்களுக்கு நிதியளித்தல் போன்ற பல்வேறு செலவினங்கள்.. அத்தனைக்கும் ரசீதுகள்..

இன்னும் உள்ளே இருக்கும் சுமதி, அவளுக்கு வேலை கொடுக்காததால், கலைவாணியின் சிந்தனை, டாக்டர் அசோகனையே சுற்றி வந்தது. அவனை

நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை... இல்லையானால், இந்த பிராடோடு அவனுக்கு இவ்வளவு தொடர்பு தேவையில்லை..எய்ட்ஸ் நோயாளிகளுக்கு எல்லாமே டாக்டர் சுமதி தான் என்பதுபோல் வீடியோ படம் எடுக்க அனுமதித்திருக்க மாட்டான். அதே சமயம், அவன், தன்னிடம் காட்டிய கரிசனத்தை மறக்க முடியவில்லை..அந்த அசோகனைப் பார்த்தால், அப்படித் தெரியவில்லை. எந்த வரம்பு மீறிய செலவையும், அவன் செய்ததாகத் தெரியவில்லை. உடம்பில் உடையைப் பற்றிக் கூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை..அவன் தங்கி இருக்கும் அறையும் சின்னது...பஞ்சு மெத்தை கட்டிலுக்குப் பதிலாய், ஒருபோர்வை போர்த்தப்பட்ட டேப் கட்டில்... ஆனாலும் எந்த புற்றில் எந்த பாம்போ...! எத்தனை சினிமாக்களை பார்த்தாச்சு...! எத்தனைக் கதைகளை படிச்சாச்சு...! இந்த மாதிரி எளிமையாய் காட்டிக்கொள்ளும் ஆட்கள் தான் இந்திர சித்துகளாக இருப்பார்கள்.

''எக்ஸ்யூஸ் மீ...சிஸ்டர்...''

கலைவாணி, நிமிர்ந்து பார்த்தாள். அதே சேலத்துப்பையன் ரகோத்தமன்...பெயர் தெரியாத தொழிலபதிரின் மகன். கண்ணைப் பறிக்கும் பொம்மைச் சொக்கா போட்டிருக்கிறான். அதற்குள்ளே நீளமான தங்கச்செயின்...பால்வடியும் முகம்....சோகம் சுமந்த பார்வை..வாட்ட சாட்டமான உடம்பு...இருபது வயதிருக்கலாம்.

கலைவாணி, அவனைக் கண்துடிக்கப் பார்த்தாள். எய்ட்ஸ் கிருமிகளை எப்படியோ வாங்கிக் கட்டிக் கொண்டான். வெளியே நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை நிர்வகிக்க வேண்டியவன், இப்போது உள்ளே லட்சக்கணக்கான கிருமிகளால் நிர்வகிக்கப்படுகிறான். கலைவாணி, கரிசனத்தோடு கேட்டாள்...

''என்ன வேணும் தம்பி...?''

''டாக்டரம்மாவைப் பார்க்கணும். இந்த அழைப்பிதழைக் கொடுக்கணும்...''

''என்ன அழைப்பிதழ்..?''

''இந்தாங்க''

கலைவாணி, அதை வாங்கிப் பார்த்தாள். கவரைப் பார்த்தவுடனேயே கவலையுற்று, உள்ளே இருந்ததை எடுத்துப் பிரிக்கிறாள். தங்க பிரேம் போட்ட அட்டை ஒரு அட்டையே ஐம்பது ரூபாய் பெறும். பளபளப்பான அச்சுக்கோர்ப்பு; ஆமாம்... இந்த ரகோத்தமனுக்கும், கோவையில் உள்ள

இன்னொரு தொழில் அதிபரின் மகள் சாந்திக்கும் திருமணம்... சான்றோரால் நிச்சயிக்கப்பட்டது...மேளதாளம், பிரபலமான பெயர்கள், மூன்று நாள் மூன்று விதமான இசைக்கச்சேரிகள்.. அத்தனையும் பத்திரிகைகளில் அடிபடும் பெயர்கள்.. எல்லாவற்றிற்கும் மேல், பல்வேறு தலைவர்களின் வாழ்த்தரங்கம்...

கலைவாணி, அந்த அழைப்பிதழைப் படிப்பதும், படிக்கப் படிக்க, அவனை நிமிர்ந்து பார்ப்பதுமாக இருந்தாள். படித்து முடித்ததும், அவனிடம் ஏதோ சொல்லப் போனாள். பிறகு, தன் சொல் எடுபடுமா என்று யோசித்துப் பார்த்தாள். இந்தத் திருமணத்தை தடுத்தே ஆகவேண்டும் என்று உறுதி...இன்னும் நான்கே நான்கு நாட்கள்தான் உள்ளன. அசோகனிடம் சொல்லலாமா...? அந்தக் கூட்டுக் களவாணியிடமா... வேண்டாம்... சந்திராவிடம் சொன்னால், அவள் பட்டதே போதும் என்பாள்.. பத்திரிகையாளர்களிடம் சொன்னாலும், அவர்கள் பெரிய இடத்து சமாச்சாரங்களை எழுத மாட்டார்கள். விளம்பரம் போய் விடுமாம்..அப்போ யாரிடம் சொல்வது... எப்படி தடுப்பது...?

எதுவும் பதில் பேசாமல் இருப்பவளை, ஒரு முறைப்பு முறைத்துக் கொண்டே, ரகோத்தமன், கதவைத் திறந்து உள்ளே போனான். அதைக்கூட கலைவாணி பார்க்க வில்லை. இதற்குள் இன்டர்காம் இரைந்தது.

''நான்...சேலத்துக்கு...ரகோத்தமனோட கல்யாணத்தில கலந்துக்கிறேன். டேட்டையும், டைமையும் நோட் செய்துக்கோ...ஒரு நாளைக்கு முன்னால ஞாபகப்படுத்து''

கலைவாணி, வழக்கம்போல் எஸ் மேடம் போடவில்லை. அயோக்கிய ராட்சஸி...தொட்டிலையும் ஆட்டி, குழந்தையையும் கிள்ளிவிடும் அரக்கி..எப்படி இப்படிப்பட்ட மனம் வரும்? ஒரு எதிர்கால எய்ட்ஸ் நோயாளியின் திருமணத்தை தடுக்க வேண்டியவள், இவனை வாழ்த்தப் போகிறாள். இவன் கல்யாணத்தில் வாழ்த்தி, ஒரு அப்பாவிப் பெண்ணின் எதிர்கால ஈமச்சடங்கிற்கு இப்போதே கொள்ளி வைக்கப் போகிறாள். இப்படியும் ஒருத்தி இருப்பாளா... இருக்காளே..காரோடும், பேரோடும் இருக்காளே...!

கலைவாணி, கைகள் இரண்டையும் மேசையில் ஏவிவிட்டாள்; குத்தினாள்; நொந்த உதடுகளுக்கு எதிராய் சொந்தப் பற்களையே ஏவிவிட்டாள். உள்ளே கதவை உடைத்துக்கொண்டு போய், அந்த பம்மாத்துக்காரியிடம் மன்றாடலாமா..அல்லது அவளைத் துண்டாடலாமா...என்பது போல், அந்தக் கதவுப் பக்கம் போனாள். உடனே, யதார்த்தம்

அவளை அந்த 'பி.ஏ' நாற்காலிக்கு இழுத்து வந்தது...பின் விளைவுகளை யோசிக்க வைத்தது. விடற்றுப் போனவள்... இவளைப் பகைத்தால், இவளின் பினாமியாக இருக்கக் கூடிய அந்த அசோகன் கூட இடம் கொடுக்கமாட்டான். எவளும், எவனும் எக்கேடும் கெடட்டும்.. எனக்கென்ன... நான் ஒரு சின்னஞ்சிறு குருவி..பனங்காயை சுமக்க முடியாது...

கலைவாணி, லேசாய் நிதானப்பட்டு உட்கார்ந்தபோது, டாக்டர் சுமதியே ரகோத்தமனுடன் வெளியே வந்தாள். அவனுடன் சிரித்துப் பேசிய முகத்தை சிறிது கடுமையாக்கியபடியே, கலைவாணியிடம் கேட்டாள்.

''இன்றைக்கு...நடக்கப் போகுதே..எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கம்... ஆடியன்ஸ், பேச்சாளர்கள் வந்துட்டாங்களான்னு செக்கப் செய்துட்டியா...?''

''இன்னும் இல்ல...''

''ஒனக்கு கொஞ்சமாவது அறிவிருக்குதா..உள்ளூர்ல நடக்கிற பங்ஷன்களை, முன் கூட்டியே செக்கப் செய்யணும்...என்கிறது தெரியாதா..? இதில வேற நான் துவக்கி வைக்கறேன்... நாளைக்கு நான் கூப்பிட்டாலும், நீ வரப்படாது.அப்புறம், மிஸ்டர் ரகோத்தமன்...முடியுமானால், காண்டோம் யூஸ் பண்ணுங்க. ஒங்க ஒய்ப்பையும்ஆறு மாசத்துக்கு ஒரு தடவை... இங்கே கூட்டிவந்து செக்கப் செய்துக்கணும்..இந்தா! ஒன்னைத்தான்... நான் கீழே நிற்கேன்..அந்த பிளாஸ்டிக் பையைத் தூக்கிட்டு வா..எய்ட்ஸ் கேம்புக்கு போகணும்...ஏன் சரின்னு கூட பதில் சொல்லமாட்டங்கறே?''

இதற்கும், கலைவாணி பதில் பேசவில்லை.. அதை, பய பக்தியாக எடுத்துக் கொண்டு, சுமதி நடந்தபோது, ரகோத்தமன் ஒரு கவரில் டாக்டர் சுமதியின் உதவியாளர் என்று எழுதி அவளுக்கும் ஒரு அழைப்பிதழை மேசையில் போட்டுவிட்டு, முன்னால் போன சுமதியை நோக்கி ஓடினான்.

கலைவாணி,..மேஜையில் உள்ள டெலிபோனை திரிசூலம் போல் எடுத்தாள். அழைப்பிதழைப் புரட்டினாள். மணப் பெண்ணின் தந்தையின் பெயரும், முகவரியும் தெளிவாகவே போடப்பட்டிருந்தன. அவள் எண்களை சுழற்றினாள். 'போனோ கிராம்' என்று கேட்டாள். பிறகு இவளே ஆங்கிலத்தில் படுவேகமாய்ச் சொன்னாள். அப்படியும் திருப்தியுறாமல் கோவைக்கு, 'எஸ்.டி.டி.' போட்டாள். ''மிஸ்டர் பத்மநாபன் இருக்காரா..? நீங்க தானா..ஒங்களோட எதிர்கால மருமகன் ரகோத்தமன்...எய்ட்ஸ் கிருமிகள் உள்ளவர் சார். கல்யாணம், கருமாந்திரத்தில முடியும் சார்...நான் சொல்வதில் சந்தேகம் வந்தால், நம்பிக்கையான டாக்டர்கிட்டே அந்தப் பையனை டெஸ்ட் செய்து பாருங்க..என் பேரா...கோணச்சத்திரத்தில்

இருக்கிற கலைவாணி...டாக்டர்சுமதியோட தாற்காலிக உதவியாளர்.''

கலைவாணிக்கு, ஒரு அசுர திருப்தி...அழகான இளைஞனாய் அவதாரம் எடுத்த ஒரு மகிஷாசுரனை வதைக்காமலே முடக்கிப்போட்ட நிறைவு. அவளுக்கே இப்போது தன்னை நினைக்க ஒரு ஆச்சர்யம்... ஒரு ஆனந்தம்...எனக்கும் இவ்வளவு தைரியமா? என்னாலும் இப்படி முடியுமா...?''

அப்போதுதான் அலுவலகம் வந்த மீசைக்கார இளைஞன், கலைவாணியிடம் அடித்துப் பிடித்து ஓடிவந்தான். ''அம்மா...கத்துறாங்க... பிளாஸ்டிக் கூடையை தூக்கிட்டு உடனே போகணுமாம்...''

கலைவாணி சிரித்தாள்...அலட்சியமாய் சிரித்தாள்..ஆனாலும் உள்ளே போய்,அந்த பிளாஸ்டிக் கூடையைத் தூக்கினாள்...அதற்குள் மினரல் வாட்டர் பாட்டில் மருந்து மாத்திரைகள், ஒரு சின்னத் துண்டு...பொன்னாடையோ சந்தன மாலையோ போடப்படுவதை உள் வாங்கும் அளவுக்கான பெரிய கூடை தான்...

கலைவாணி, அதைத் தூக்கிக்கொண்டு, கீழே போனாள், சுமதியை. கீழ் நோக்கிப் பார்த்தபடியே போனாள்.. உள்ளே இருப்பவர்களை அடையாளம் காட்டாத தங்கமுலாம் விளிம்பு கொண்டு பெரிய கார்... பக்கத்தில் நின்ற ரகோத்தமனோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்ட நின்ற டாக்டர் சுமதி, கலைவாணியை பல்லைக் கடித்துப்பார்த்தாள்..என்ன வழக்கம். கார்க் கதவைத் திறந்துவிடாத பழக்கம்...

''நான் வேணுமுன்னால், ஒனக்கு காரைத் திறந்து விடட்டுமா.. கலைவாணி?''

கலைவாணி, அப்படியே நின்றபோது, டிரைவர் ஓடிவந்து கதவைத் திறந்தார். சுமதி, ரகோத்தமன் போட்ட கும்பிடை அங்கீகரித்தபடியே, பின்னிருக்கையில், ஏறினாள். கலைவாணி, முன்னிருக்கையில், ஏறினாள். நேற்றுப் பின்னால் ஏறப்போனபோது, முதலாளியம்மாள் முன்பக்கத்து இருக்கையைக் காட்டினாள்.

அந்தக்கார், சாலை முழுவதையும் அடைத்துக்கொண்டு ஓடியது. கலைவாணி அவளைப் போலவே காற்றில் துடித்த எய்ட்ஸ் விழிப்புணர்வு அழைப்பிதழை தூக்கிப் பிடித்துப் பார்த்தாள்; அரைநாள் கூத்து..நேற்று எய்ட்ஸ் விழிப்புணர்வு பட்டறை, இன்றைக்கு பயிற்சி முகாம்...அதே ஆரம்ப சுகாதார நிலையம். அதே பேச்சாளர்கள்..அநேகமாய் அதே கூட்டம்.. அழைப்பிதழில் தான் வித்தியாசம்... நேற்று நடந்தது தமிழக அரசின் மக்கள் தொடர்பு துறையின் ஏற்பாடு...இன்றுநடப்பது இந்திய அரசின் களவிளம்பரத் துறையின் கூப்பாடு... அதே சாமியானா பந்தல்...பேனர்

மட்டும் வித்தியாசம்... நேற்று மூன்று வேளை சாப்பாடு... இன்றைக்கு ஒரு வேளை சாப்பாடு... தலைமை வகிப்பவர் பெயரில் மட்டும் மாற்றம்.. டாக்டர் அசோகன், நேற்றுவரவில்லை...நேற்றைய பட்டறையை துவக்கி வைத்த டாக்டர் முஸ்தபா, இன்று முக்கிய உரை ஆற்றுகிறார். நேற்று முக்கிய உரை ஆற்றிய டாக்டர் சுமதி, இன்று துவக்கி வைக்கிறார்...''

அந்தக்கார், அதே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்னால் வந்தது. இந்திய அரசின் கள விளம்பரத் துறை மாவட்ட அதிகாரி சந்தானக்குமார், டாக்டர் சுமதியை கை கூப்பி வரவேற்றதுடன், சென்னையில் இருந்து வந்திருக்கும் தனது மேல் அதிகாரியான இணை இயக்குநரிடம் அவளை அறிமுகம் செய்தார். உடனே அவள் 'ஒங்க ஆபீசர் பிரமாதமாய் வேலைபார்த்தார்,என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னாள். உடனே அந்த இணை'ஐ நோ....' என்றது. அவள், தனது ஜூனியர் சகாவுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

எல்லோரும், மேடையில் ஏறினார்கள். டாக்டர் அசோகன், தன்னந்தனியாக கூட்டத்தை நடத்தப் போவது போல கால் மேல்கால் போட்டு, முன் கூட்டியே உட்கார்ந்து இருந்தான். டாக்டர் சந்திரா, முன் வரிசையில். நர்சம்மா மாலதியும் அதே வரிசையில்...நாற்காலிகளிலும், பெஞ்சுகளிலும், உட்கார்ந்திருந்த அதே நேற்றையக் கூட்டம் 'என்ன வேணுமுன்னாலும் பேசுங்கடா... எங்க காது ஒங்களுக்கு இல்லை' என்பது மாதிரி, தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தது.

மேடையில் இருந்தபடியே டாக்டர் அசோகன், சந்திராவின் பக்கத்தில் இருந்த கலைவாணியைக் கூப்பிட்டான். அவள் முகத்தை வேறு பக்கமாக திருப்பினாள். இதனால், அசோகனே மேடையில் இருந்து இறங்கி, அவள் பக்கமாகப் போனான். பட்டும் படாமலும் பார்த்தவளிடம் பரவசத்தோடு கேட்டான்.

''என்ன கலைம்மா... வழக்கம் போல்...இந்த ஞாயிற்றுக்கிழமை வர்ல''

''சொல்லுங்க டாக்டர்...''

''ரொம்ப கட் அன்ட் ரைட்டா இருக்குது...? அப்புறம், இன்னிக்கி நீ பேசினால்...நல்லது; மெட்ராஸ்லே... சேகர் என்கிற இளைஞர் தனக்கு எப்படி ஹெச்.ஐ.வி.வந்ததுன்னு கூட்டம் கூட்டமாய் பேசுறார். இந்த வகையில் நீ ஒரு பாவமும் செய்யாதவள்... நீ ஏன் ஒனக்கு எப்படி...இந்த நோய் வந்ததுன்னு பேசப்படாது. ஏன் பதில் பேசமாட்டக்கே...? மௌனம் சம்மதம்; சரிதானே...கலைம்மா...?''

கலைவாணி, அசோகனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். அவன் பாம்பா.. இல்லை பழுதா...பேசலாமா...என்பது போல் டாக்டர்சந்தி ராவைப்

பார்த்தாள், அவளே சங்கடமாக நெளிந்தாள்...

அந்தப் பயிற்சிப் பட்டறை, 'நீராடும் கடலுடுத்து'டன் துவங்கியது. டாக்டர் சுமதி, காற்றோடு போராடிப் போராடி குத்து விளக்கை ஏற்றும்போது, வீடியோ கேமிரா வெளிச்சம் போட்டது... பத்திரிகை காமிராக்கள் ஒன்ஸ்மோர் கேட்டன. பட்டறைத் தலைவரான டாக்டர் அசோகன், முன்னுரையை முடிவுரையாய் பேசப்போவதாய்க் கூறிவிட்டான். வரவேற்புரை நல்கிய இணை இயக்குநர், நெல்லையில் இருந்து வேனில் கூட்டி வந்த செய்தியாளர்களையும், அந்த ரெடிமேட் கூட்டத்தையும் பார்த்தபடியே, இறுதியாக ஒன்று...என்ற பல இறுதி ஒன்றுகளை சேர்த்து.. அவற்றின் எண்ணிக்கையை பத்துக்கு மேல் கொண்டு போய்விட்டார். அப்புறம் டாக்டர் சுமதியின் துவக்க உரை..இடை இடையே...'செட்டப்' செய்த ஜோக்குகள்.. சின்னச் சின்னக்கதைகள்...ஆனாலும் கூட்டம் சிரிக்க வில்லை... கைதட்ட வில்லை..அத்தனையும் அரைத்த மாவு. அதுவும் புரிந்த மாவு, புளித்தமாவு; என்றாலும், இந்த நோயால் பெண்கள் எப்படி பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சுமதி சொன்ன போதும்...அப்பாவிக் குழந்தைகள் எப்படி பலியாகிறார்கள் என்று நேற்று சொன்னதையே இன்று விளக்கிய போதும், கூட்டம் அமைதிப்பட்டுக் கேட்டது.. ஆனாலும், அவள் எல்லைதாண்டி என்னவெல்லாமோ பேசினாள்.

அடிக்கடி டாக்டர் சுமதியையும், கைக்கடிகாரத்தையம் மாறி மாறிப் பார்த்த அசோகன், அவள் பேசி முடிந்ததும், 'முக்கிய உரை' ஆற்றுவதற்காய் எழுந்த டாக்டர் முஸ்தாபாவைக் கையமர்த்திவிட்டு, 'எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட அப்பாவிப்பெண் கலைவாணி, இப்போது பேசுவார்' என்றான்...

கூட்டம் அரை நிமிடம் வரை, கசா முசாவாய் பேசியது..பிறகு பேரமைதி. எல்லோர் கண்களிலும் ஒரு பரபரப்பு; குனிந்து, ரகசியம் போல் பேசிக் கொண்டிருந்தவர்களின் தலைகள் நிமிர்ந்தன. பின் வரிசைக் காரர்களில், சிலர், எழுந்தே விட்டார்கள். டாக்டர் சுமதி, பேச வேண்டாம் என்று கலைவாணியிடம் சமிக்ஞை செய்யப் போனாள். அவள் பார்த்தால் தானே...

கலைவாணி, இருக்கையை விட்டு எழுந்தாள். மேடைப் படிக்கட்டை இரண்டு படிகளாகத் தாவினாள். போடியத்தில் பொருத்தப்பட்ட மைக் முன் னால் நின்றாள். பெரும்பான்மையாய் பெண்களைக் கொண்ட அந்தக் கூட் டத்தை நேருக்கு நேராய்ப் பார்த்து, கைகூப்பி வணங்கினாள்... தலை வரையோ, பிரமுகர்களையோ 'அவர்களே' போட்டு விளிக்காமல் பேசினாள்.

''ஆமாம்...நண்பர்களே! டாக்டர். அசோகன் சொன்னது போல், நான்

ஒரு எதிர்கால எய்ட்ஸ் நோய்க்காரி... ஒரு வருடத்திற்கு முன்பு, என் கணவர் என்று சொல்லப்பட்டவரால், இந்த நோயை சீதனமாக வாங்கிக்கொண்டவள். சர்வதேச பத்திரிகைளில் இடம் பெற்றவரின் அப்போதைய மனைவி. ஹெச்.ஐ.வி.இருப்பது தெரிந்தும் திருமணம் செய்த ஒரு பேடியின் துணைவி..இந்த ஆரம்ப - அதுவும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து, எய்ட்சின் பெயரால் தூக்கி எறியப்பட்டவள். குற்றம் செய்யாமலே தண்டிக்கப்பட்டவள்....''

''இங்கே இருக்கிற டாக்டர்களில், ஒரு வேளை ஒரு சிலர் தவிர்த்து அனைவருமே மோசடிக்காரர்கள். இவர்கள் தோளில் தொங்கப்போட்டிருக்கும் ஸ்டெதாஸ்கோப்புகள், நம்மைப் போன்ற அப்பாவிப் பெண்களுக்கு தூக்கு கயிறுகள்! இவர்கள் போட்டிருக்கும் வெள்ளைக் கோட்டுகள், பிணங்கள் மேல் போர்த்தப்படும் வெள்ளைத் துணிகள்! இப்போது ஒரு முக்கியமான கேள்வி.. ஒரு இளைஞனுக்கு, எய்ட்ஸ் கிருமிகள் இருப்பதாக ஒரு டாக்டருக்கு தெரியவருகிறது. ஆனால், அந்த டாக்டரோ, அந்த இளைஞருடைய திருமணத்தில், சந்தோஷமாகக் கலந்துக்கொள்கிறார். ஒரு அப்பாவிப் பெண், சிறுகச் சிறுக சித்திரவதைக் குள்ளாகி, சின்னா பின்னமாவாள் என்று தெரிந்தும், அப்படிப்பட்ட திருமணத்தில் கலந்து கொள்கிறவர் டாக்டரா?...இல்லை...கொலைகாரியா?... இது, கைத்தட்டுவதற்குரிய விஷயமில்லை...எச்.ஐ.வி. கல்யாண மாப்பிள்ளைகளையும், அவர்களது உற்றார் பெற்றோர்களையும், ஸ்டெதாஸ்கோப்பை பாசக் கயிறாகப் பிடித்திருக்கும் டாக்டர்கள் எனப்படும் கொலையாளிகளையும் என்ன செய்தால் தகும் என்று தீர்மானிக்க வேண்டிய விவகாரம்...''

டாக்டர் சந்திரா, இருக்கையில் குன்றிப்போய் கிடந்தாள். மேடையில் டாக்டர் முஸ்தபா, தலையை அங்கும் இங்குமாய் ஆட்டினார். டாக்டர் சுமதியால் பொறுக்க முடியவில்லை...எழுந்தாள்...கத்தினாள்...

''தில் இஸ்..டூ மச்...இது அதிகப் பிரசங்கித்தனம்...''

''பேசி முடித்த பிறகு சொல்லுங்க''

''நோ நோ....''

கலைவாணியும் சுமதியும் மேடையில் காரசாரமாய் பேசிக்கொண்டு நின்றபோது, டாக்டர் அசோகன் எழுந்து ''கலைம்மா...கலைம்மா'' என்றான். அவளை நிதானப்படுத்துவது போல் கையமர்த்தினான். கலைவாணி, உடனே அவனையும் சாடினாள். மைக் வழியாய், கூட்டம் முழுவதற்கும் கேட்கும்படியாய்க் கத்தினாள்...

''என்னை பேசவிடாமல்..தடுப்பதற்கு, ஒங்களுக்கும் யோக்கியதை

இல்லை அசோகன் சார்...ஏனென்றால், நீங்களும் இந்த மோசடியில் ஒரு பங்காளி. பசுத்தோல் போர்த்தியப் புலி...''

கூட்டத்தில் ஒரே பரபரப்பு...ஒப்புக்கு வந்த போலீசார் கூட, கண்களைத் துப்பாக்கியாய் ஆக்கினார்கள்...

கூட்டம் கிட்டத்தட்ட எழுந்துவிட்டது. வெளியே போகாமல், முன் பக்கமாக முண்டி அடித்தது. தலைமை வகித்த அசோகன். தன்னைப் பற்றி கலைவாணி அப்படி ஒரு அபிப்ராயத்தை சொல்லாமல் இருந்தால், ஒரு வேளை, ஜனகணமண பாடியிருப்பான். இப்போது கூட்டத்தை முடித்தால், அது கோழைத்தனம்... அதோடு, கலைவாணி தொடுகிற பிரச்சினையும் முக்கியமானது. இதற்குள் கூட்டத்தினர் 'பேசுங்கள்...பேசுங்கள்' என்று கோஷம் போல் குரலிட்டார்கள். அதை தனக்கு விடுத்த அழைப்பாகக் கருதி, மேடையில் நின்ற கலைவாணியை இன்னமும் ஒரு உதவியாள் என்ற இளக்காரத்தோடு, டாக்டர் சுமதி, மைக்கை தன் பக்கமாய் வளைத்துப் பேசினாள்...

''கலைவாணி பேசுவது அப்சர்ட்...அபத்தம்..திருமணம் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விவகாரம்...ஒரு ஹெச்.ஐ.வி. ஆண் அல்லது பெண், திருமணம் செய்து கொள்ள நினைத்தால், அதில், இதைக் கண்டுபிடித்த டாக்டர் தலையிட முடியாது... வேண்டுமானால், திருமணம் ஆனபின்பு, அவன் மனைவியையும் டெஸ்ட் செய்து, உரிய ஆலோசனை வழங்கலாம்..இதைத்தான் டாக்டர்களாகிய நாங்கள் செய்கிறோம்....''

கலைவாணியால், தாள முடியவில்லை...சுமதியின் கையோடு சேர்த்து அந்த மைக்கைத் தன் பக்கமாய் இழுத்தாள். அவள், அங்கேயே அப்படியே நிற்கிறாள்.ஏதோ ஒன்று, அவள் வாய் வழியாய்ப் பேசுகிறது...சுமதியிடம் நேரடியாய்க் கேட்கிறது.

''ஒங்களுக்கும் இன்னொரு நோயாளி கிடைத்த சந்தோஷம்... இல்லியா சுமதியம்மா?''

கூட்டம் ஆர்ப்பரித்தது. 'ஷேம்..ஷேம்...'என்றது.. பேசுவதற்காக மைக் அருகே வந்த டாக்டர் சுமதியைப் பார்த்து 'ஏய்...ஏய்' என்றது.. பேசுவதற்காக மைக் அருகே வந்து டாக்டர் முஸ்தாபாவைப் பார்த்து போ, போ... என்றது. டாக்டர் சுமதி இதனால் ஒய்ந்து போனாள். கலைவாணி... தொடர்ந்தாள்...

''ஆமாம்...சகோதரிகளே..உங்கள் ஒருத்தரை திருமணம் செய்யப் போகிறவன், இதே டாக்டர் சுமதியிடம் ஆலோசனை பெறும் ஒரு ஹெச்.ஐ.வி. நோயாளியாக இருக்கலாம்.. இந்தத் திருமணத்தில் இந்த அம்மாவும் கலந்து கொள்வார்கள். ஆலோசனை வழங்குவதற்கு, புதிதாய் ஒரு எய்ட்ஸ் நோயாளி கிடைக்கப் போகிற மகிழ்ச்சியில் கலந்து கொள்வார்.

இந்த நாட்டில், கொலையாளிக்கு தண்டனை உண்டு. கொலைக்கு உடந்தையாய் இருப்பவர்களுக்கும் தண்டனை உண்டு. ஆனால் சுமதியம்மா போன்ற புதிய கொலையாளிகளுக்கு தண்டனை கிடையாது. மாறாக, கார் கிடைக்கும். பங்களா...கிடைக்கும்..பாரீன் டூர் கிடைக்கும்..இதோ இந்த டாக்டர் சுமதி, கோவையில் ஒரு ஹெச்.வி.ஐ. நோயாளியின் திருமணத்தில் கலந்து கொள்கிறார். ஒரு புதிய பெண் நோயாளியை உருவாக்கப் போகிறார். இந்த லட்சணத்தில் இவரும் ஒரு பெண்ணாம்...''

கூட்டத்தினர் அலைமோதினார்கள்...

''வெட்கம்...வெட்கம்...ஷேம்...ஷேம்..ஏய் சுமதி...நீயெல்லாம் ஒரு பெண்ணாடி... நீயெல்லாம் ஒரு டாக்டராடி...''

கலைவாணி, அங்குமிங்குமாய் எழுந்த கூட்டத்தைக் கையமர்த்தினாள். ஒரு போலீஸ்காரர், மேடையில் ஏறி நின்றுகொண்டார். ஆங்காங்கே, 'தன்னார்வத் தொண்டர்கள்' கூட்டத்தை அமைதிப்படுத்தினர்.அதே கூட்டம் அமைதிப்பட்டாலும், ஆங்காங்கே, கலைவாணியைப் பார்த்து 'பேசுங்க'.. 'பேசுங்க'..என்றதும், அவளும் தொடர்ந்தாள்.

''ஆனாலும் பெரியோர்களே! கோவையில் நடைபெற இருந்த அந்தக் கல்யாணக் கொலையை, அநேகமாக நான் தடுத்துவிட்டேன்; மாப் பிள்ளைக்கு ஹெச்.ஐ.வி. இருப்பதை, மணமகளின் தந்தைக்கு டெலிபோன் மூலமாகவும், தந்தி மூலமாகவும் தெரிவித்து விட்டேன்''

பலத்த கைதட்டல்... பின்வரிசைக்காரர்கள் எழுந்து நின்றே கைதட்டினார்கள். அழைத்து வரப்பட்ட கூட்டம் இப்போது ஆர்ப்பரித்து, சுமதியைப் பார்த்து 'கொலையாளி...கொலையாளி' என்றது.சில பெண்கள், ஆவேசப்பட்டு மேடைப் பக்கமாகக் கூட ஓடிவரப் போனார்கள். ஆனாலும், கலைவாணி கயைமர்த்தியதும், அப்படியே உட்காரவில்லையானாலும், நின்ற இடத்திலேயே நின்றார்கள். இப்போது அந்தக் கூட்டம், கலைவாணியின் பக்கம் வசப்பட்டு விட்டதால், டாக்டர் சுமதியின் முகம் இருண்டு போனது. அவள், மானசீகமாய் கோவைக்கும், இந்த மேடைக்கு மாய் போக்குவரத்து செய்து கொண்டிருந்தாள்... கலைவாணி தொடர்ந்தாள்.

''இன்னொரு கொடுமை...கணவனுக்கு எய்ட்ஸ் கிருமிகள் இருப்பதாக ஒரு மனைவிக்கு தெரிந்தாலும், அவளால் சட்டப்படியான விவாகரத்து வாங்க முடியாது. இளங் காதலர் திருமணத்தைத் தடுக்கும் காவல் துறையினரால், ஒரு ஹெச்.ஐ.வி. திருமணத்தைத் தடுக்க முடியாது...இதனால் அப்பாவிப் பெண்களும், அவர்களின் தலைமுறையும் பூண்டற்றுப் போகிறார்கள். இதைத் தடுக்க நாட்டில் நாதி இல்லை...இந்த லட்சணத்தில் விழிப்புணர்வு இயக்கங்கள்..விழிப்புணர்வு அமைப்புகள்...எய்ட்ஸைக்

குணப்படுத்தி விடலாம்..ஆனால் இந்த எய்ட்ஸ் ஒட்டுண்ணிகளை குணப்படுத்தவே முடியாது..''

கூட்டம், மீண்டும் அலைமோதியது.. செய்தியாளர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்... காமிரா வெளிச்சங்கள், கலைவாணியை, 'குளோஸப்பில்' காட்டின. ஆனால், அவளோ, உணர்ச்சிப்பெருக்கில் பேசமுடியாமல் நின்றாள். இதற்குள், அதுதான் சாக்கு என்று டாக்டர் முஸ்தபா மேடையை விட்டுக் கீழே இறங்கினார். உடனே, அவரை, டாக்டர் சுமதியும் பின் தொடர்ந்தாள். அசோகன் மட்டும், பெண் அகலிகை மாதிரி குத்துக்கல்லாய் இருந்தான்.

கூட்டம், அங்குமிங்குமாய் அல்லோகல்லோலப்பட்டது.. ஆளுக்கு ஆள் பேச்சு...கும்பல் கும்பலாய் விவாதம்...காரில் ஏறிய சுமதியை மறிக்கப் போவதுபோல் ஒரு ஓட்டம். கலைவாணியை வியப்பாய் பார்த்தபடியே பேச்சற்று நின்ற ஒரு கூட்டம். இவர்களை முந்தி, செய்தியாளர்கள் அவளை மேடையிலேயே சூழ்ந்தார்கள்.. கோவை எய்ட்ஸ் திருமணம் பற்றி அடுக்கடுக்காய்க் கேள்வி கேட்டார்கள். பரப்பரப்பான செய்தி கிடைத்த திருப்தி...எடிட்டோரியல் வில்லன்கள், வில்லங்கம் செய்ய முடியாத செய்தி...

கலைவாணி மேடையை விட்டு இறங்கினாள்.. இன்னும் ஆவேசம் அடங்கவில்லை..ஆத்திரம் தீரவில்லை...அவளுக்கும் தான் யார் என்று, ராமனுக்கு ஏற்பட்டது போன்ற சுய மயக்கம். சுற்றிச் சூழ்ந்து ஏதேதோ கேட்ட பெண்களிடம், கோர்வையாகப் பேசமுடியவில்லை. கடின உழைப்பிற்கு பின்னர் ஏற்படுவது மாதிரியான களைப்பு...கலைவாணி, அந்தப் பந்தலை விட்டு வெளியே வந்தாள்.

களவிளம்பரத் துறையின் மாவட்ட அதிகாரியை, இணை இயக்குனர் தாளித்துக் கொண்டிருந்தார். இந்த விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தி, இதன் மூலம் வெளியாகும் பத்திரிகை செய்திகளை டெல்லி மேலிடத்திற்கு அனுப்ப நினைத்த இணை இயக்குனர், பதறிப்போனார். இதற்காகவே வேனில் கொண்டு வரப்பட்ட செய்தியாளர்கள், இப்போது வேறு மாதிரி செய்தி எழுதுகிறார்கள்.

கலைவாணி, அந்தப் பக்கமாக வந்தபோது, இணை இயக்குனர் தாங்க முடியாமல் கேட்டார்.

''டாக்டர்சுமதியை 'அட்டாக்' செய்யுறதுக்கு எங்க மேடை தானாம்மா...ஒனக்கு கிடச்சுது...?''

''நீங்க ஏன்...அப்படிப் பேசமாட்டீங்க...அந்தம்மா சார்பில் நீங்க நடத்துற ஒவ்வொருபிலிம்சோவுக்கும்..ஆயிரம் ரூபாய் வீதம் வாங்கி இருக்கீங்களே...அந்தமாவுக்கு வக்காலத்து வாங்கத்தான் செய்வீங்க''...

ஆடிப்போன இணை இயக்குனர், தனது சபார்டினேட்டான மாவட்ட அதிகாரியை, மிரட்டலோடு பார்த்தார். அந்த ஜூனியரோ, கிட்டத்தட்ட வாயிலும் வயிற்றிலும் அடித்தார். அவர்கள் உரையாடலில் சிபிஐ என்கொய்ரி, சஸ்பென்ஷன் போன்ற வார்த்தைகள், இணை இயக்குனரின் வாயில் இருந்து விழுந்து, மாவட்ட அதிகாரி சந்தானக்குமாரின் காதுகளில் ஏறின.

கலைவாணியின் கண் முன்னாலயே, கூட்டம் கலைந்தது. செய்தியாளர்கள் வேனில் போய் விட்டார்கள். அங்குமிங்குமாய் வட்டமடித்துப் பேசிக்கொண்டு இருந்தவர்களும் போய்விட்டார்கள். கொண்டு வரப்பட்ட பெண்கள் என்பதால், அவர்கள் கூட்டத்தில் கைதட்டியதோடு சரி...கலைவாணியை ஆறுதலாய்ப் பார்த்ததே ஒரு சலுகை...ஆதரவாய் நிற்பது தனிப்படுத்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் அதிகப் படியான காரியம்.

கலைவாணிக்கு, அப்போது தான் யதார்த்தம் புரிந்தது.

கூட்டம், நிறுவனப்படுத்தப்படாதவரை, அது வெறும் ஒற்றை ஆட்களே...இன்று கேட்டு, நாளை மறக்கும் வகையினர். சினிமாக் கூட்டம் மாதிரி, தியேட்டருக்கு உள்ளே தான் ஒரு முகப்பட்ட கை தட்டல்.

டாக்டர் சந்திரா கிடைப்பாளா என்பதுபோல் அங்குமிங்குமாய் கலைவாணி பார்த்தாள். காணவில்லை. ஒருவேளை, அவளும் தப்பாக எடுத்துக் கொண்டாளோ...என்னமோ..இனிமேல் எங்கே போவது...திருடனுக்குக் கூட கன்னக்கோல் சாத்த ஒரு இடம் உண்டு..ஆனால்... திருத்தப்போனவளுக்கு எந்த இடம்...? சுமதியை சொல்லால் தொலைத்தாகிவிட்டது... அசோகனையும் பகைத்தாகிவிட்டது. எங்கே போவது? நிற்பதற்கு நிழல் கூட வேண்டாம்...வெயில் கூட கிடைக்காமல் போய்விட்டதே...

கலைவாணிக்கு, மேடைப்பேச்சின் வெறுமை இப்போது நன்றாகவே உறைத்தது...கைதட்டியவர்கள் போய்விட்டார்கள். அவளுக்கு தோள் கொடுப்பது போல் மேடை நோக்கி வந்தவர்கள் கூட, வீடு நோக்கிப் போய்விட்டார்ள். இனிமேல், அவர்கள் யாரோ, இவள் யாரோ. முக மறியா மனிதர்களிடம் பேசி...முகம் போகவில்லையானாலும், முகமூடி போய் விட்டது! பழையபடியும் அனாதரவான நிலை...அனாதையாய்ப் போன தனிமை...தனிப்படுத்தப்பட்ட தனிமை..தனதுநிழலை வெட்டுவதற்காக, தன்னையே வெட்டிக்கொண்ட துயரம்...ரத்தம் வராத ரணம்...

கலைவாணி, அந்த ஆரம்ப சுகாதர வளாகத்தில் இருந்து, வெளியே வந்தாள். சந்திரா வீட்டுக்குப் போகலாம், என்றால் அங்கே அவள் அம்மா.. மோகன்ராம் வீட்டுக்கு என்றால், அங்கே மனோகரின் அக்கா...சொந்த வீட்டிலோ...சொந்தமில்லாமல் போன உடன் பிறப்புக்கள்....

31

கலைவாணி கால் இருப்பது வரைக்கும் நடப்பதுபோல் நடந்தாள். மனோகரை மனதுக்குள் திட்டிக்கொண்டே நடந்தாள். உடம்புக்குள் இருக்கும் எய்ட்ஸ் கிருமிகள் அத்தனையும், மனித அவதாரங்களாகி, அந்தப்பகுதியில் நடமாடுவதைப் பார்த்துவிட்ட கோரம். இதோ எத்தனையோ மனிதர்கள் அருகருகே போகிறார்கள். ஆனால், ஒருவரிடமும் ஒட்டிக்கொள்ள முடியாது. இதோ எத்தனையோ வீடுகள், பெயர் என்னமோ அன்பு இல்லமாம்... முருக சரணாலயமாம்..ஆனால் ஒன்றில் கூட இருக்க முடியாது. யதார்த்தவாதி, வெகுஜன விரோதி என்பது எவ்வளவு உண்மை...

கண்களை அரை குறையாய் மூடி நடந்த, கலைவாணியை உரசுவதுபோல் ஒரு மாருதி கார் நின்றது.

'''கலையம்மா...கார்ல ஏறிக்கோ''

கலைவாணி, அசோகனை பிரமித்துப் பார்த்தாள். அசையாமல் நின்றாள். அவன் சர்வ சாதாரணமாய் சொன்னான்.

''பயப்படாதே... இந்த வில்லன் ஒன்னை கடத்திட்டுப் போக வர்ல. அப்படி ஒனக்கு சந்தேகம் வந்தால், இதோ ரோட்டுலே போகிறவர்களில் ஒருத்தரை கை காட்டு...அவரையும் ஏற்றிட்டு போகலாம்...சரி ஏறிக்கோ கலையம்மா....பிரமாதமாய் வெளுத்து வாங்கிட்டே...ஏன் அப்படி பார்க்கே...நிசமாத்தான்...டாக்டர் சுமதியோட சுயரூபமே...இன்னிக்குத்தான் எனக்கே தெரியுது... ஹெச்.ஐ.வி.க்காரன். கல்யாணத்துக்கா போறாள்...?''

''ஆமாம்...நீங்க போகலியா...?''

''ஒன்கிட்ட எனக்குப் பிடிச்சது இதுதான் கலையம்மா...நீ...உண்மையை அடக்க நினைச்சாலும், அது ஒன்னால முடியாது...நீ என்னை சுமாரான நல்லவன்னு நினைத்தால், நீ இப்போ கார்லே ஏறணும்... பச்சையாய் சொல்லப் போனால் ஒனக்கு ஒரு இடம் கொடுக்கணும் என்கிறதவிட, என்னைப் பற்றி நான் தெரிஞ்சுக்கணும் என்கிறது தான் என்னோட நோக்கம். சத்தியமாய் சொல்றேன். சுமதிக்கும் எனக்கும், அவள் அனுப்புற ஹெச்.ஐ.வி. கேஸ்களை, டெஸ்ட் செய்து ரிசல்ட் கொடுக்கிறதோட சரி...ஒரு டெஸ்டுக்கு நூற்று ஐம்பது ரூபாய் ஆகும், அதைக்கூட நான் வாங்கியது இல்லை... நீ எனக்கு 'பெனிபிட் ஆப்டவுட்' கொடுத்தால், கார்ல ஏறு''

கலைவாணி, காரில்...ஏறிக்கொண்டாள்...அசோகன் அருகே முன்னிருக்கையில் ஏறிக்கொண்டாள்.. சிறிது நேர மௌன ஓட்டம். பின்னர், கலைவாணி குனிந்த தலையை நிமிர்த்தாமலே..ஆண்டறிக்கையில் தான் படித்ததை, ஒன்றுவிடாமல் ஒப்பித்தாள். பேசி முடித்துவிட்டு, அவனை நிமிர்ந்து பார்த்தாள்; அவனோ முகம் இறுகிப்போனான். காரை தாறுமாறாக ஓட்டினான்.

அசோகன், அந்த மருத்துவ மனையின் முன் பக்கம் காரை நிறுத்தினான். கலைவாணிக்குக்கூட காத்திராமல், அலுவலக அறைக்குள் ஓடினான். நாற்காலியை கீழே விழத் தட்டுவதுபோல் உட்கார்ந்தான். டெலிபோனை சுழற்றினான்.

'ஹலோ..சுமதியா...ஆமா..கலைவாணி விஷயமாத்தான் பேசுறேன். ஒங்க ஆண்டறிக்கையில்..எனக்கு மாதா மாதம் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாய் கணக்கு இருக்குதாம்..என்னோட மருத்துவமனை கூட ஒங்களுக்கு சொந்தமாம். நோ...நோ..கலைவாணி பொய் பேசமாட்டாள். இப்பவே நீங்க...போன வருடத்து ஆண்டறிக்கை...இந்த வருடத்து ஆண்டறிக்கையோட வரணும்..என்கிட்டே காட்டணும்... என்ன...என் கிட்ட காட்ட வேண்டிய அசிவயம் இல்லியா...? ஒகே...? அப்போ... போலீஸ்லே கம்ப்ளைன்ட் கொடுப்பேன்...நோ சால்சாப்பு...''

டாக்டர் அசோகன், எதிரே நின்ற கலைவாணியை அங்கீகாரமாய்ப் பார்த்தான். ஏற்கனவே அங்கே உட்கார்ந்திருந்த சந்திராவை , அப்போதுதான் பார்ப்பது போல் பார்த்தான். ஏதோ பேசப்போனான். அதற்குள் ஒரு டெலிபோன்.

''ஹலோ..சொல்லுங்க... இந்தா பாரும்மா... நீ எவனை வேண்டு மானாலும் ஏமாற்று...ஆனால் என்னை ஏமாத்திடலாம்னு நினைக்காதே! ஒன்கிட்டே ஒரு பைசாவாவது வாங்கியிருப்பேனா...?என்னை எதுக்குடி

விற்கிற? ஒன்னைத்தான்..ஏடின்னு சொல்லிட்டு..அதுக்கு மேல் பேசாமல் போனதுக்குகாரணம்...இங்கே ரெண்டு பெண்கள் இருக்காங்க..பால் கொடுத்த மாட்டையா...பல்லைப்பிடிச்சுப் பார்க்கிறே...இன்னும் ஒரு மணி நேரத்தில் ஆண்டறிக்கையோட நீ வரலன்னா..அப்புறம் நீ இருக்க போற இடம் ஜெயிலு... நான் உணர்ச்சிவசப்படல...இப்போ தான்...கலைவாணி என் கண்ணைத் திறந்திருக்காள். சரிதான் போன வச்சிட்டு...இங்கே வாடி...."

கலைவாணியும் சந்திராவும், வாயாடாமல் போனார்கள். அசோகனை அதிர்ந்து பார்த்தார்கள்..இந்தத் தாக்கத்தில், ஒருவரை ஒருவர் அனுதாபமாகவும் பார்த்துக்கொண்டார்கள். இப்போது தான், அசோகன் பற்களைக் கடிப்பதை முதல் தடவையாக் பார்க்கிறார்கள்..இந்த மாதிரி, அவன் கோபபட்டு பேசியதை, முதல் தடவையாகக் கேட்கிறார்கள். அவனை, ஆமோதிப்பாய் பார்த்தார்கள். சந்திரா, தான் வந்ததன் நோக்கத்தை சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்த போது, இன்னொரு டெலிபோன். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில், டெலிபோனை எடுத்து விபரங்கள் கேட்டு, அதை அசோகனிடம் நீட்டும் சந்திரா, சும்மாவே இருந்தாள். அசோகனே, சிறிது நேரம் கடந்து டெலிபோனை எடுத்தான்.

"இந்தாபாரும்மா சுமதி...ஸாரி..எம்.எல்.ஏ.வா..நானே தான் பேசறேன் சார். சுமதி விஷயமா..வெளிநாட்டு நிறுவனங்களுக்கு என்னை விற்று இருக்காள் சார்.அவள் ஒரு கிரிமினல்....என்ன சார்..நீங்க நான் என்ன சொல்லப்போறேன் என்கிறதைக்கூட கேட்ட மறுக்கிறீங்களே... ஒருமோசடிப் பேர்வழியோட எப்படி சார் ஒத்துப்போக முடியும்...? நோ நோ, ஐ யாம் ஸாரி... நீங்க பேசுறது ஒரு எம்.எல்.ஏ. பேசறதுமாதிரி தோணல..ஒகே நீங்க வைக்கும் முன்னாலயே, நானே டெலிபோனை வச்சிட்றேன்..."

அசோகன், டெலிபோனை வைத்துவிட்டு, சிறிது நேரம் அப்படியே குமைந்து கிடந்தான். பிறகு, அந்தப் பெண்களை பொதுப்படையாய்ப் பார்த்தபடி பேசினான்...

"இந்த எம்.எல்.ஏ.வைப்பாருங்க! இங்க வந்து ஒசியிலே மெடிக்கல்...செக்கப் செய்த மனுஷன். இப்போ அசல் கொம்பன் மாதிரி பேசுறான். சுமதி மேல நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், அது எனக்கே விபரீதமாய் போய்விடுமாம்...எம்.எல்.ஏ.. மக்கள் பிரதிநிதின்னுதானே அர்த்தம். ஒரு வேளை மாக்கள் பிரதிநிதின்னு ஒரு அர்த்தம் இருக்கா...?"

"என்னைக் கூட அந்த சுமதி..போகிற போக்கில் மிரட்டிவிட்டுப் போறாள்..அசோக். கலைவாணியை அப்படிப் பேசும்படி நான்தான் தூண்டிவிட்டேனாம். இன்னும் மூன்று நாளையில் எனக்கு சஸ்பென்ஷன்

வாங்கிக் கொடுக்காவிட்டால், அவள் பேரை மாற்றிக் கூப்பிடலாமாம். முஸ்தாபா...என்னடான்னா, ரெண்டு நாள் போதும் என்கிறான். .''

கலைவாணி,...இருவரையும் மாறிப் மாறிப் பார்த்தாள். டாக்டர் சுமதியின் சுய ரூபத்தைத் தொட்டுக்காட்டிவிட்டால், ஆளுக்கு ஆள் பிடித்துக் கொள்வார்கள் என்று நினைத்தது, எவ்வளவு தப்பாய் போயிற்று... நியாயத்தை வெளிப்படுத்தினால், அநியாயந்தான் அதிகமாகுமோ... இல்லன்னா...இந்த எம்.எல்.ஏ...''

''டாக்டரய்யா.... ஒங்களுக்கோ, டாக்டரம்மாவுக்கோ ஏதாவது நடக்கிறதாய் இருந்தால், நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். இல்லாட்டி தீக்குளித்து சாவேன். இது சத்தியமான வார்த்தை''

சந்திரா, கலைவாணியின் கைகளைப்பிடித்து, தன் கைக்குள் வைத்துக்கொண்டாள். அசோகன், அங்குமிங்குமாய் தலையை ஆட்டிவிட்டு, ஒரு சிரிப்பு சிரித்தான். பிறகு கலைவாணி எதையோ ஒன்றைக் கண்டுபிடித்த குதூகலத்தோடு பேசினாள்.

''நெசமாவே சுமதி ஒரு டாக்டரா?''

''ஆமா...நீ சொல்றதை நினைத்தால், அப்படிக்கூட ஒரு சந்தேகம் வருது. ஆனாலும் அந்த சுமதியை, தனிப்பட்ட முறையில் எதிர்க்கிறது கொஞ்சம் சிரமந்தான். அவள்கிட்ட ஆள்பலம் இருக்குது...பணபலம் இருக்குது..அழகு பலம் இருக்குது... அதனால் அவளை நிறுவன ரீதியாய் எதிர்க்கணும்.. நாமே ஒரு விழிப்புணர்வு அமைப்பை ஏற்படுத்தினால் என்ன...? எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு... இதையே ஏமாற்றுப் பேர்வழிகள் மேல் ஒரு பழிப்புணர்வாய் ஆக்குவோம்''

''நடக்குற காரியமா அசோக்...?''

'ஏன் நடக்கப்படாது...? கலைவாணி கிட்ட பேச்சுத்திறன் இருக்குது.. ஒன்கிட்ட வைத்தியத்திறன் இருக்குது..என்கிட்ட மருத்துவமனை இருக்குது.. எல்லாவற்றுக்கும் மேலே...நம்மகிட்ட நியாயம் இருக்குது.. விசுவாசம் இருக்குது; இன்றைக்கு பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பல வெளிநாட்டு அமைப்புகளிடமும், அரசாங்கத் துறைகளிடமும் தங்களுக்கே தெரியாத திட்டங்களோட பெயர்களைச் சொல்லி,பணம் கறக்குறாங்க... இந்த நிறுவனங்களுக்கு எங்கிருந்து பணம் வருது...? எதற்காக வருது என்பது பற்றி கணக்கு வழக்கே கிடையாது. ஆனால் நாம் அமைக்கப்போகிற அமைப்பு...தனியார் அமைப்பு இல்ல.. இதுல உறுப்பினர்களைச்சேர்ப்போம்... சந்தா வசூலிப்பேம்... ஆண்டு தோறும், நம்

கணக்கு விபரத்தை...ஜெனரல்பாடிக் கூட்டத்தில் ஒப்பிப்போம்...நோட்டீஸ் போர்ட்ல ஒட்டுவோம்...இந்தமுறையைக் கொண்டு வந்தால், இந்த அமைப்புக்களை வைத்திருக்கிற பாதிப்பேர் ஜெயிலுக்கு போகவேண்டி யவங்க என்கிறதாவது தெரிய வரும்''

''டாக்டரய்யா... நிச்சயமாய் இப்படி ஒரு அமைப்பு தேவைதான். ஆனால், இதனோட நோக்கம் ஹெச்.ஐ.வி. திருமணங்களை தடுப்பதாய் இருக்கணும்... சரியா?''

''சரியே தான்...''

''அய்யோ.. எனக்கு எப்படி சந்தோஷமாய் இருக்குது தெரியுமா?''

கலைவாணி எழுந்து நின்று, கைகளை ஆட்டி ஆட்டி தோள்களைக் குலுக்கினாள். இப்போது, அந்த மூவருக்கும், சுமதி ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. சிந்தனை முழுவதும், எதிர்பாராமல் கருவான விழிப்புணர்வு அமைப்பின் மீது ஒருமுகப்பட்டது. அப்போது பார்த்து அடுத்த டெலிபான்...

''ஹலோ,...நான் டாக்டர் அசோகன்தான் பேசறேன்... சொல்லுங்க... இன்ஸ்பெக்டர் சார். டாக்டர் சுமதி தானே...அசல் பொம்பளைக்கேடி.. சார்...நானா..? நான் எதுக்கு ஸ்டேஷனுக்கு வரணும்...? சுமதியை சத்தம் போட்டது உண்மை. ஆனால் கொலை செய்யப் போறாதாய் மிரட்டலியே... இந்தாப் பாருங்க இன்ஸ்பெக்டர்..ஒங்களோட லத்திக்கம்பைவிட, என்னோட ஸ்டெதாஸ்கோப் உயர்வானது. புனிதமானது. இந்த மிரட்டுகிற வேலை... என்கிட்ட வேண்டாம். சட்டம் கத்துக்கிறது முக்கியம்தான்.அதைவிட முக்கியம் மரியாதை...கத்துக்கிறது''

டெலிபோனை வைத்த அசோகன், முகமெங்கும் வியர்வைத்துளிகள். எதிர்பாராத எதிரியைச் சந்தித்த பிரமிப்பு. அசையாது கிடந்தான். சந்திரா அவன் தோளைப் பிடித்த உலுக்கியபோதுதான், அவன் மீண்டும் அசோகனானான்.

''இந்த சுமதி...என்னால் அவள் உயிருக்கு ஆபத்துன்னு புகார் கொடுத்திருக்காளாம். அதனால, நான் போலீஸ் நிலையத்திற்கு போகணுமாம்... போகாட்டால், கையிலே விலங்கு போட்டு தெருவுல என்னை நாய் மாதிரி இழுத்துட்டுப் போவானாம்...இன்ஸ்பெக்டர், காட்டு மிராண்டியாய் ஆகிட்டான்...''

32

ஒரு காலத்தில், பொன் விளையும் பூமியாக விளங்கி, இப்போது, மலட்டு வீட்டு மனைகளான பகுதி... ஆனாலும், ஆங்காங்கே கட்டிடங்கள் முளைவிட்டுக் கொண்டுதான் இருந்தன. இந்தப் பகுதியில், அசோகன் எப்போதோ மூன்று கிரவுண்ட் வாங்கிப் போட்டிருந்தான். வாங்கிப் போட்டான் என்பதைவிட, அவன் தந்தை ஊரில் இருந்த நிலபுலன்களை, பாகப்பிரிவினை செய்து, ஐந்தாண்டு கால குத்தகைக்கு பணமாய் அவன் பெயரில் வாங்கிப் போட்டார். இப்போது, அந்த இடத்தில் ஒரு கீற்றுக் கொட்டகை... முன் பக்கத்தில் வாசலைத் தவிர்த்த, இரண்டு பக்கங்களிலும், வெறும் மண்சுவர்கள்... அவற்றிற்கு மேல் மூங்கில் தட்டிகள். பின் பகுதியில் வாசல் ஒதுக்கப்பட கதவில்லாத அடைப்பு... காயப் போட்ட கோரைப் புற்களே, சுவர்களான அலுவலக அடைப்பு... அங்கே ஒரு நீண்ட மேசைக்குப் பின்னால் இரண்டு நாற்காலிகள்... முன் பக்கம் இரண்டு பெஞ்சுகள்... அத்தனையும், சந்திரா, அசோகன் வீடுகளில் உள்ளவை...

முன் பக்கம் பனைத் தூண்கள் தாங்கிப் பிடிக்கும் கொட்டகைத்தரை, சாணத்தால் மெழுகப்பட்டு பச்சை பசேல் என்று காட்சி காட்டியது. ஒரு மேஜையில், பல்வேறு பத்திரிகைகள் பாதியாய் மடித்தும்,விரித்தும் வைக்கப்பட்டிருந்தன. 'எய்ட்ஸ் பெண்ணின் குமுறல்', 'எனக்கு எய்ட்ஸ் வந்தது... இளம் பெண்ணின் பகிரங்க அறிவிப்பு', 'கோவையில் எய்ட்ஸ் நோயாளிக்குத் திருமணம். டாக்டர் உடந்தை! அவளுக்கு வந்தது ஆவேசம்! அத்தனையும் சொல்லிவிட்டாள்' 'ஹெச்.ஐ.வி. இன்பெக்ட்டட் உமன்ஸ் பிளைட்'

இந்த மாதிரியான பத்திரிகை தலைப்புக்களால், கலைவாணியும் சந்திராவும் முகம் சுழித்தாலும், அந்த சுழிப்பிலும் ஒரு புன்னகை...

கலைவாணியின் புகைப்படத்தோடு வெளியான செய்திகள். அரசின் கண்களைத் திறக்கவில்லையானாலும், அதற்கு வரி கொடுக்கும் மக்களின் கண்ணைத் திறக்கும் என்ற நம்பிக்கை டாக்டர் சுமதி போன்றவர்களின் 'விழிப்புணர்வுகளை' தடுக்க முடியாமல் போனாலும், அவர்களின் பிடியைத் தளர்த்த முடியும் என்கிற எதிர் பார்ப்பு

டாக்டர் சந்திராவின் சேமிப்பாலும், அசோகனின் நன்கொடையாலும், கலைவாணியின் உழைப்பாலும் உருவான இந்த அமைப்பிற்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதில், அந்த மூவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பெண்கள் மீட்பு இயக்கம் என்று பெர்த்தாம் பொதுவாய்வைக்கலாம் என்பது சந்திராவின் கட்சி. அமைப்பின் பெயர் எய்ட்ஸ் நோயாளிகளுக்கும் ஆறுதல் காட்டுவது போல் இருக்க வேண்டுமே தவிர, ஒரு குறிப்பிட்ட நோயாளித் தரப்பை ஊனப்படுத்துவதாய் இருக்கக் கூடாது என்பது அசோகனின் வாதம்... ஆனாலும் கலைவாணியின் பிடிவாதத்தாலும், சுமதியிடம் இருந்து பிரிந்து அவளோடு சேர்ந்து கொண்ட பெண்களின் ஆதரவாலும், 'எய்ட்ஸ் திருமண தடுப்பு இயக்கம்' என்று பெயரிடப்பட்டது. 'ஹெச்.ஐ.வி.' என்கிற வார்த்தையை எய்ட்ஸ்ஸுக்குப் பதிலாய் போடலாமே என்று சந்திரா கேட்டாள். ஆனால் அது பொது மக்களுக்கு புரியாது என்பதால், அவளும் இறுதியில் உடன்பட்டாள்.

இதர தொண்ட நிறுவனங்களைப் போல், ஒப்புக்கு ஒரு டிரஸ்டை வைக்காமல், சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உறுப்பினர்களாக்க சந்தா ரசீதுகள் அச்சாகிவிட்டன. உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகி களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அதுவரை சந்திராவும் கலை வாணியும் அமைப்பாளர்களாக செயல்படுவது என்றும் தீர்மானமாயிற்று. அசோகன், எந்த பதவிப் பொறுப்பையும் ஏற்க மறுத்துவிட்டான். ஆனாலும் பாதி நேரம் இந்தக் கொட்டகைதான், அவன் குடியிருப்பு.

கொட்டகைக்கு கீழே, ஆங்காங்கே போடப்பட்ட பெஞ்சுகளில் பத்துப் பதினைந்து இளம் பெண்கள் இயங்கிக் கொண்டிருந்தார்கள். சந்தாப் புத்தகங்களில் உள்ள பெயர்களை ஒரு ரிஜிஸ்டருக்கு மாற்றிக் கொண்டிருந்தவர்கள்; பேனர் தயாரித்துக் கொண்டிருந்தவர்கள்... செவ்வக அட்டைகளில், எய்ட்ஸ் பற்றிய உண்மைகளை திருக்குறள் போல் தீட்டிக் கொண்டிருந்தவர்கள். இப்படி ஒரே இயக்க மயம்.. வெளியே, ஆண்களும் பெண்களுமாய் வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்த ஒரு கூட்டம்.

அசோகன், அந்தக் கொட்டகைக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு, இயங்கிக் கொண்டிருந்த பெண்களையும், கலைப்பாடு கொண்ட அவர்களின் செயல்பாடுகளையும் பார்த்தபடியே, பின் பக்கத்து அடைப்பை நோக்கி நடந்தான். அவனைப் பார்த்து எழுந்து நின்ற சந்திரா - கலைவாணி...

ஜோடியைப் பார்த்துவிட்டு 'ஏதேது மரியாதை பலமாய் இருக்குது' என்றான். அவன் உட்கார்ந்ததும், சந்திரா கவலை தெரிவித்தாள்.

''எனக்கு என்னவோ பயமா இருக்குது அசோகன். ஆழம் தெரியாமல் காலைவிட்டது மாதிரி...''

''நீச்சல் தெரிந்தவங்களுக்கு ஆழம் தெரிய வேண்டியது இல்லை... நேர்மையான தொண்டர்களுக்கு பின் விளைவுகள் தெரிய வேண்டியதில்லை. ஆனாலும் ஒன்றை நான் சொல்லியாகணும்... நீங்க ரெண்டு பேரும், முக்கியமான பொறுப்புக்கு வந்திருக்கீங்க. பத்திரிகைகள் செய்திகள் போட்டாலும் போட்டது, இப்போது கலைம்மாவுக்கு ஏகப்பட்ட அழைப்புகள் குவியுது. ஆனாலும் இவை திடீர் மழையில் காளான் முளைச்சது மாதிரி. நிரந்தரமான உழைப்புதான் இதை நிலைப்படுத்தும்...''

''ஒரு ௱மைக் கொண்டு வரட்டுமா அசோக்?...''

''இந்ர மாதிரி... அவசரக் குடுக்கைத்தனம் ஒனக்கு ஆகப்படாது டாக்டரம்மா... கலைவாணி ஒனக்குந்தான்... இனிமேல் நீ ஒன்னையே நினைத்து பொருமப்படாது... டால்ஸ்டாய் சொன்னாப் போல, 'அனுபவம் ஒரு ஜன்னல்' அதன் மூலம் தெருவைப் பார்க்கணும்... ஜன்னலே தெருவாகிடப்படாது...''

தட்டுமுட்டுச் சத்தம் கேட்டு, அந்த மூவரும் வெளியே வந்தார்கள். ஆங்காங்கே இயங்கிக் கொண்டிருந்த பெண்களும் ஒன்றுபடப் போனார்கள். ஒவ்வொருவர் கண்களிலும் ஒரு ஆச்சர்யம். ஒவ்வொரு முகத்திலும் ஒரு சுழிப்பு...

அந்தக் கொட்டகை வாசலுக்கு வெளியே, ஒயர் பொருத்தப்பட்ட ஜீப்பில் இருந்து துள்ளிய இன்ஸ்பெக்டர் சிங்காரம், அந்த கொட்டகைத் தூண் ஒன்றில் சாத்தி வைக்கப்பட்ட சைக்கிளை பூட்ஸ் காலால் கீழே தள்ளினார். சிறிது நடந்து இன்னொரு பக்கம் கிடந்த நாற்காலியை எட்டி உதைத்தார். இன்னும் நடந்து, ஒரு முக்காலியைத் தூக்கி விசிறியடித்தார். பேனராய் மாறிய ஒரு மூங்கில் தட்டியை இரண்டாக உடைத்துப் போட்டார். பக்கத்தில் புடை சூழ்ந்த கான்ஸ்டபிள்களைக் கம்பீரமாய் பார்த்துக் கொண்டார். பிறகு வலது கை பிடித்த லத்திக் கம்பு, இடது உள்ளங்கையை செல்லமாய் தட்டிக் கொடுக்க, அந்த மூவரை நோக்கி நடந்தபடியே கத்தினார்.

''யோவ்... டாக்டர்... ஒன் மனசிலே என்னய்யா நெனைப்பு...? வரச் சொன்னால், வர மாட்டியா? ஒன்னை இப்போ நாய்மாதிரி இழுத்துட்டுப் போகப் போறேன். இழுங்கடா... ராஸ்கலை,... போலீசா... மாமன் மச்சானா...?''

வலது பக்க இடுப்பில் துருத்திய உறையோடு நின்ற இன்ஸ்பெக்டரின்

ஆணையை நிறைவேற்ற கான்ஸ்டபிள்கள் தயங்கினார்கள். அந்தனை பேருமே அசோகனின் ஓசி நோயாளிகள்... அதோடு, இவர் ஒரு கௌரவமான டாக்டர் ...எம்.எல்.ஏ. இன்றைக்கு சொன்னதை, நாளைக்கே மறுப்பான்... சட்டசபையில் அடிபடக் கூடிய விவகாரமாகலாம்...

கான்ஸ்டபிள்களின் தயக்கத்தைப் புரியும் நிலையில் இன்ஸ்பெக்டரும் இல்லை. கூடவே அந்த இரண்டு பெண்களைப் பார்த்ததும், அந்த நாற்பது வயது நட்சத்திரச் சட்டைக்கு, தான் ஒரு சினிமா நட்சத்திரம் என்ற நினைப்போ... என்னவோ... அசோகன் சட்டைக் காலரைப் பிடிக்கும் அளவிற்கு கையைத் தூக்கிவிட்டார்... அதற்குள்...

கலைவாணி, அசோகனின் முன்னால் போய் நின்றாள். முகம் வெளுக்க நின்ற சந்திராவை, கையைப் பிடித்து தன் பக்கமாய்ச் சேர்த்துக் கொண்டாள். இப்போது அவளே 'எஸ்.பி.' ஆனது போல், இன்ஸ்பெக்டருக்கு ஆணையிட்டாள்.

'மொதல்ல... அந்த சைக்கிளை தூக்கி நிறுத்துங்க... கீழே கிடக்குற நாற்காலிய உட்காரும்படியாய் போடுங்க. அப்புறமாய் இங்கே வாங்க... இன்ஸ்பெக்டர், ஒங்களைத் தான்...''

இதற்குள், அங்குமிங்குமாய் சிதறி அப்புறம் ஒன்றுபட்ட பெண்கள், அந்தப் பக்கம் தடதடவென்று ஓடிவந்து, கலைவாணியையும், சந்திராவையும், இவர்களுக்கு இடையே நின்ற அசோகனையும் பின்னால் தள்ளிவிட்டு, முன்னால் வந்து நின்றார்கள். முந்தானையை இறுக்கிக் கட்டி, கரங்களை முஷ்டிகளாய் ஆக்கிக் காட்டி, சூளுரைத்தார்கள்.

''மொதல்ல எங்களை சுட்டுட்டுத்தான், டாக்டரை நெருங்க முடியும்...''

இன்ஸ்பெக்டருக்கு லேசான பயம்... கான்ஸ்டபிள்கள் சிரிப்பார்களே என்ற தாழ்வு மனப்பான்மை... ஆனாலும், எம்.எல்.ஏ.விடம் ஒரு புறநானூற்று வீரனாய்க் காட்டிக் கொள்ள இன்னமும் ஆசை. இந்தச் சமயம் பார்த்து, புரமோஷன் பேனர்ல பேர் வேற இருக்குது...

''இந்தாப் பாருங்கம்மா, நான் என் டூட்டியைத் தான் செய்ய வந்திருக்கேன். இவரு... ஒரு லேடியை அவமரியாதையாய்ப் பேசியவரு. கொலை செய்யப் போறதாய் மிரட்டியவரு... விசாரணைக்கு கூப்பிட்டால் வரமாட்டாரு... நான் சும்மா இருக்கணுமா...''

அசோகன், அழுத்தம் திருத்தமாய் பேசினான்...

''ஒங்க காக்கிச்சட்டைக்கு, நான் மதிப்பு அளிக்கணுமுன்னால், இப்பவும் சொல்றேன். அந்த இண்டர்நேஷனல் ஃபிராட் சுமதியையும் கூப்பிடுங்க. நேருக்கு நேராய் விசாரியுங்க. நான், நிச்சயமாய் வருவேன். அப்படி

இல்லாட்டி இப்பவும் சொல்றேன்... ஒங்களால என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்க. அரெஸ்ட்வாரண்ட் இருக்குதான்னுக் கூட நான கேட்கப் போவதாய் இல்ல... ஏன்னா, நாட்டு நிலைமை எனக்கு நல்லாவே தெரியும்...''

''அரஸ்ட் வாரண்டே இருந்தாலும்... எங்களை, கைது செய்யாமல், நீங்க இவர்கிட்ட நெருங்க முடியாது...''

''கையிலே லத்திக் கம்பையும், இடுப்பிலே துப்பாக்கியையும் விளையாட்டுக்காக கொடுக்கலம்மா...''

''உங்க திருவிளையாடல்தான்...''

''ஷட்டப்... மிஸ்டர் அசோகன் பெண்களுக்கு பின்னால பேடியா ஒளியாதிங்க. மரியாதையா சரண்டர் ஆயிடுங்க...''

''என்ன அநியாயம்...? இவர் என்ன வீரப்பானா... இன்ஸ்பெக்டர்...''

இன்ஸ்பெக்டர் சிங்காரம், அப்படிக் கேட்டவளை உற்றுப் பார்த்தார். அடையாளம் வைத்துக் கொள்ளும்படிப் பார்த்தார். அதே சமயம், அசோகனை, முன்பு நினைத்ததுபோல், இழுத்துப் போகவும் பயம்... அரெஸ்ட்வாரண்ட் கூட இல்லை. இப்படி தெரிந்திருந்தால், ராத்திரியோடு ராத்திரியாய் இழுத்துட்டுப் போயிருக்கலாம்...

இன்ஸ்பெக்டர், பின் வைத்த காலை முன் வைக்க முடியாமலும், முன் வைத்த காலை பின் வைக்க முடியாமலும் திண்டாடினார். இந்த கான்ஸ்டபிள்களாவது என்னை சமாதானப்படுத்தலாம். எதாவது சாக்கு சொல்லி, என்னை இழுத்துட்டுப் போகலாம். எப்படிச்சிரிக்காங்க... எனக்கு திண்டாட்டமுன்னா... இவங்களுக்கு கொண்டாட்டம்.

அசோகன், தன் பாட்டுக்கு கூரைமேட்டைப் பார்த்துக் கொண்டு நின்றான். சந்திரா... தன்னை அறியாமலே, அசோகன் கையைப் பிடித்துக் கொண்டாள். இந்த பெண்களோ, இன்ஸ்பெக்டரையே கைது செய்ய போவதுபோல் பார்த்தார்கள். இன்ஸ்பெக்டர் சிங்காரம் யோசித்தார். எம்.எல்.ஏ. அவர்களை வெறுங்கையோடு பார்த்தால், அவர் எந்த முகத்தோடு சுமதியம்மாவைப் பார்ப்பார்.

இப்படியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றபோது, எதிரே ஒரு படகுக்கார் வந்தது தெரியாமல் வந்து நின்றது. பின்னிருக்கையில் இருந்து மூன்று பேர் இறங்கினார்கள். ஒருத்தர் நீலச் சபாரிக்காரர். அறுபது வயது இருக்கலாம்.உருண்டு திரண்ட கண்கள்...ஆடையைப் போல், முகத்திலும் ஒரு வாளிப்பு. அவரது ஒரு பக்கம் ஒரு சல்வார் கமிஷ் பெண். மறுபக்கம், கழுத்துக்குக் கீழே ஒரு அங்குலம் கூட உடம்பைக் காட்டாத ஒரு ஐம்பது

வயதுக்காரி...

அந்த மூவரும், கும்பலாய் நின்றவர்கள் பக்கமாய் வந்தார்கள். உடனே இன்ஸ்பெக்டர் சிங்காரம் தன்னை அங்கீகரிப்பது போல் பார்த்த அந்தம்மாவுக்கு ஒரு கும்பிடு போட்டார். பிறகு, சபாரிக்காரரைப் பார்த்து விறைப்பாய் ஒரு சல்யூட் அடித்தார். எஸ்.பி.க்கு கூட இப்படி அடிக்காத சல்யூட்... அவரைப் பார்த்த அந்த படகுக்கார் மனிதர் 'எப்படிய்யா இருக்கே?'' என்று அவரை கீழ்நோக்கிப் பார்த்துவிட்டு, அந்தக் கும்பலில் முகமறியா ஒருத்தியை தேடினார். இன்ஸ்பெக்டர் குழைந்து நின்றதை அலட்சியப் படுத்தியபடியே, கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார்.

''கலைவாணி... என்கிறது யாரு...?''

எல்லோரும் கலைவாணியையே உற்றுப் பார்ப்பதைப் பார்த்ததும், அவருக்குப் புரிந்து விட்டது. கலைவாணியின் கைகளைப் பிடித்து, கண்களில் ஒற்றிக் கொண்டார். இதற்குள், சல்வார் கமிஷ்காரி துள்ளிக் குதித்து ஓடிப்போய், கலைவாணியின் பக்கமாய்ப போய் நின்று, அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவள் அம்மா வந்து, கலைவாணி யின் தோளில் கை போட்டாள். பிறகு, உணர்ச்சிப் பெருக்கில் அவளையும், அவளைக் கட்டிப் பிடித்த தன் மகளையும் இறுகத் தழுவியபடியே விம்மினாள்... சபாரிக்காரர், மனைவியின் முதுகைத் தட்டிக் கொடுத்தார். பாதி புரிந்தும், புரியாமலும் நின்ற கலைவாணியிடம் பேசினார்.

''நீ செய்திருக்கிற உதவிக்கு ஜென்மம் ஜென்மமாய் கடன் பட்டிருக்கோம்மா. இல்லாட்டி, என் ஒரே மகளான இந்த சாந்தி ஒரேடியாய்ப் போயிருப்பாள். நான்கூட, நீ டெலிபோன்லே பேசும் போதும், டெலிகிராம் கொடுத்த போதும் முழுசா நம்பல... பத்திரிகைகளுலே பார்த்த பிறகுதான், முழு நம்பிக்கை ஏற்பட்டது. எனக்கு சம்பந்தியாய் உறவாட இருந்தவனையும், இந்த சுமதியையும் நான் விடப் போறதாய் இல்ல... இந்தாப்பா சிங்காரம்...''

''எஸ்... சார்''

''இந்த சுமதி மேல ஒரு புகார் கொடுக்கணும். ஒரு இளம் பெண்ணை தெரிந்தே திட்டமிட்டே... சிறுகச் சிறுக கொலை செய்யப் போனவளை, நீ உடனே கைது செய்யணும்''

இன்ஸ்பெக்டர் சிங்காரமாய் தலையாட்டியபோது, கலைவாணி குறுக்கிட்டாள்.

''இந்த மாதிரி கடுமையான குற்றங்களைத் தண்டிக்க, சட்டத்தில இடமில்லன்னு சொல்றாங்க...''

''என்ன சட்டம்...? பொல்லாத சட்டம்... இன்ஸ்பெக்டர் வைக்கிறதுதான் சட்டம். என்னப்பா சொல்றே...? நீ இங்கே எதுக்காக வந்தே...?''

''ஒரு சின்ன விசாரணையாய்...''

''சின்ன விசாரணை இல்ல சார். இவரு டாக்டர் அசோகனை... சுமதியோட தூண்டுதலுல...''

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல சார். எங்க தொழிலப்பற்றி ஒங்களுக்கு தெரியாதா... என் விசாரணையோட இன்னொரு நோக்கம், இந்த சுமதியைப் பற்றி தெரிஞ்சிக்க நினைச்சதுதான்... நான் கடுமையா பேசுறது ஒரு நடிப்புத்தானே...''

''இனிமேல் இந்தப் பக்கம் தலைகாட்டப்படாது. அப்புறம் குற்றாலத்தில் கவர்ன்மென்ட் கெஸ்ட் ஹவுஸ்லதான் இருக்கேன். எப்போ வாறே?''

''இப்பவே... வாறேன் சார்...''

''வேண்டாம்... என் மகள் கலைவாணிக்கிட்டே கொஞ்சம் பேசணும். பேச முடியாட்டியும், அவளைப் பார்த்துட்டே நிற்கணும்... ஸ்டேஷன் பக்கமாய் நில்லு... ஒன் விஷயம் முடிஞ்சது மாதிரிதான்''

''தேங்க்யூ சார்... அப்போ நான்... ஸ்டேஷன் பக்கமா நிற்கிறேன்... சார்''

இன்ஸ்பெக்டர் சிங்காரம், கால்களைத் தேய்த்தபடியே நடந்தார். அவருக்கு, தனது காட்பாதரிடம், இங்கே நிற்பவர்கள் தன்னைப் பற்றி ஏடாகூடமாய் பேசிவிடப்படாதே... என்ற பயம்... என்றாலும், அசோகன் மீது ஏற்பட்ட கோபத்தை, சுமதி மீது திருப்பிக் கொண்டே, இன்ஸ்பெக்டர் புறப்பட்டார். கான்ஸ்டபிள்களோ, தங்களுக்கு சம்பந்தம் இல்லை என்று அசோகனிடம் சொல்வதற்காக, ஒரு மண்பானையில் வைத்திருக்கும் தண்ணீரைக் குடிக்கும் சாக்கில் நின்றார்கள். ஆனாலும், இன்ஸ்பெக்டர் அந்த குடம் தீர்ந்து போவது வரைக்கும், அவர்களுக்காக வெளியே காத்து நின்றார்.

காவல்துறையினர் போனதும், அசோகன் சபாரிக்காரரிடம் கேட்டே விட்டான்.

''சார்... தப்பாய் நினைக்கப்படாது; பெரியவங்க... காலுல தொங்கிக்கிட்டே சின்னவங்க தலையில் மிதிக்கிறவங்களைப் பற்றி என்ன நினைக்கறீங்க...?''

''சிபாரிசுலே வேலைக்கு வருகிறவன் எல்லோருமே இப்படித்தான் இருப்பாங்க. இந்த சிங்காரம் எங்க ஊர்ப்பயல்... எங்க சாதிச் காரன்... சப்

இன்ஸ்பெக்டர் செலக்ஷன்லே பிஸிக்கல் டெஸ்ட்டுலே இவன் வாங்கின சைபருக்கு முன்னால... ஒரு ஏழு என்கிறதை போட வைத்தவ'ன் நான்... இப்போ கோவைக்கு டிரான்ஸ்பர் கேட்கான். கிட்டத்தட்ட முடிச்சிட்டேன். எங்களை மாதிரி தொழிலதிபர்களுக்கும், குலைக்கிறதுக்கு யூனிபார்ம் போட்டவனும் தேவையாய் இருக்குதே...''

அசோகன் லேசாய் முகம் சுழித்தான். அவன் ஏதோ, ஏடாகூடமாய் கேட்கப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்ட சந்திரா, வெளிப்படையாகப் பேச வழியில்லாததால், அவன் உள்ளங்கையைக் கிள்ளினாள். பிறகு, அசோகனை முந்திக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு வேண்டுகோள் விடுத்தாள்.

''உள்ளே வந்து உட்கார்ந்துட்டுப் போகலாமே சார்! வாங்கம்மா... வாட் இஸ் யுவர் நேம்...''

''சாந்தி... கலைவாணி ஸிஸ்டரால பெயருக்கு உள்ளது நிலைச்சுட்டுது...''

''நல்லா பேசுறியே... பேசுறீங்களே''

''என் மகள்... பேசணுமுன்னு பேசலம்மா... உணர்ச்சிப்பெருக்கில்... அதுவும் நன்றிப் பெருக்கில் எல்லோருக்கும் உண்மைதான்... வரும்... அந்த உண்மையும் எதுகை மோனையோட வரும்...''

அசோகன்கூட, அவரை இப்போது வியந்து பார்த்தான். அவர் மகளுக்கு, ஆலோசனையும் வழங்கினான்...

''இனிமேல், எவனையும் ஹெச்.ஐ.வி. டெஸ்ட் செய்துக்காமல் கல்யாணம் செய்துக்காதே பாப்பா... ஏன்னா, உங்க வர்க்கத்தில் இது சகஜம்... எங்க டாக்டர் வர்க்கமும் இதுக்கு உடந்தையாய் நிற்கும்...''

''நோ.. அங்கிள், இனிமேல் நான் கல்யாணமே செய்துக்கிறதாய் இல்லே. டாடி டாடி... இங்கயே இருந்துடுறேன்... டாடி ஒங்க சர்க்கிள் எனக்கு வேண்டாம் டாடி''

சாந்தி, அப்படிச் சொல்லிவிட்டு, கலைவாணிக்கு முத்தமிட்டாள். அவள் கையை எடுத்து, தன்கையோடு கோர்த்துக் கொண்டாள்.

சபாரிக்காரர், குடும்பச் சகிதமாய் உட்கார்ந்தார். அசோகனும் வெளியே இருந்த ஒரு நாற்காலியைத் தூக்கிக் கொண்டு வந்து, உட்கார்ந்தான். சந்திராவும் கலைவாணியும் நின்றார்கள். அந்தம்மா, முதல் தடவையாய்ப் பேசினாள்.

''யாரு... அவள்... சுமதியா... என்னங்க நீங்க அவளை ஏதாவது செய்யணும்...''

''இந்த இடத்தில பேசுற பேச்சில்லைம்மா... எனக்குத் தெரியாதா?''

''எனக்கு, என்னமோ சார்... நீங்க அவளைப் பழிவாங்குறதுக்குப் பதிலாய் கோர்ட்டுக்கு போகலாமுன்னு தோணுது... ஏன்னா ஹெச்.ஐ.வி., ஒருத்தருக்கு வந்தால், அதை அவர்கிட்ட மட்டுமே சொல்லணுமுன்னு ஒரு அரசு விதி வந்திருக்கு... ஆனால் சுமதி போன்ற எய்ட்ஸ் வியாபாரிகள், இதைப் பயன்படுத்தி தப்பிக்கலாம். அதனால கோர்ட்டுலே இந்த முறையை கேள்வி கேட்கிறதே நல்லது... அமெரிக்காவிலே கூட, ஒரு ஓரினச்சேர்க்கை ஆசாமி... தன் கூட்டாளிக்கு இருந்த ஹெச்.ஐ.வி. பற்றி தெரிந்த டாக்டர், தன்கிட்ட சொல்லாததால், தனக்கும் எய்ட்ஸ் வந்துட்டதாய், அந்த டாக்டர் மேலே கோர்ட்டுலே வழக்குப் போட்டிருக்கான். இன்னும் வழக்கு நடக்கு...''

சபாரிக்காரர் குறுக்கிட்டார்...

''இந்த இடத்தில, நல்லவங்களைப் பற்றி மட்டுமே பேசுவோம். நல்ல காரியங்களை மட்டுமே செய்வோம்... அப்புறம்... தப்பாய் எடுக்கப்படாது. கலைவாணி விழிப்புணர்வோ ஏதோ ஒரு நல்ல காரியத்துக்கு ஏற்பாடு செய்கிறதாய் கேள்விப்பட்டேன். என் சார்பில் ஒரு ஐந்து லட்சம் ரூபாய் வாங்கிக்கணும். எல்லோருக்கும் பிச்சை போடுற மாதிரிதான் பணம் கொடுத்திருக்கிறேன். ஆனால் இந்தப் பணத்தை என் இன்னொரு மகளுக்கு...''

சபாரிக்காரரால், பேச முடியவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு எழுந்து நின்றார். மூன்று நிமிடம் கழித்து உட்கார்ந்து, செக்கை நீட்டினார். கலைவாணி அதை வாங்கிக் கொள்ளாமல், அசோகனைப் பார்த்தாள். அவன் யோசனை தேவை இல்லை என்பது போல் சொன்னான்.

''வீர வசனம் பேசாமல், வாங்கிக்கோ கலைம்மா''

அந்தம்மா, கலைவாணியைக் கண்களால் கெஞ்சினாள். சாந்தி, கலைவாணியின் கையைப் பிடித்து, விரல்களை ஒவ்வொன்றாய் நீட்டிவிட்டு, அதை உள்ளங்கையாக்கி செக்கை எடுத்து அதில் வைத்தாள். பிறகு அவளைக் கட்டிப் பிடித்து இன்னொரு முத்தம்.

அரைமணி நேரம் வரை, பல்வேறு விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்து விட்டு, வந்தவர்கள் புறப்பட்டார்கள். முரண்டு பிடித்த சாந்தியை, கலைவாணிதான் அமைதிப்படுத்தி அனுப்பி வைத்தாள். அடிக்கடி கடிதம் போட வேண்டும், டெலிபோனில் பேச வேண்டும் என்ற நிபந்தனையோடு சாந்தியும், காருக்குள் ஏறினாள்.

அவர்கள் போனதும், கலைவாணியும் சந்திராவும் அசோகனுடன்

உள்ளே வந்தார்கள். கலைவாணி கேட்டாள்.

"இந்தப் பணத்தை வச்சி என்ன செய்யலாம்...?"

"இது ஒன்னோட பணம்மா....பேங்க்லே டிபாசிட் செய்..."

"என்ன டாக்டரய்யா... ஏன் என்னைப் பிரிச்சிப் பேசறீங்க...? நம்ம பணமுன்னு சொல்லப்படாதோ... இந்த அமைப்புக்கு எப்படிச் செல வழிக்கிறதுன்னுதான் கேட்டேன்"

சந்திரா, குறுக்கிட்டாள்.

"அப்படில்லம்மா... உனக்கும் ஒன்னை நம்பி பணம் இருக்கணும். எனக்குன்னு ஒரு கிளினிக் இருக்குது. சஸ்பெண்டானது நல்லதாப் போயிற்று... கிளினிக், பணத்தைக் கொட்டுது... அது என்னோட சொத்து... அசோக்கிற்கு, மருத்துவமனை இருக்குது. அது அவரோட சொத்து... இது மாதிரி, இது ஒன்னோட சொத்து... தாய் பிள்ளையாய் இருந்தாலும், வாய் வயிறு வேறம்மா..."

"அதுவே எய்ட்ஸ் பிள்ளையாய் இருந்தாலுமா... நல்லாக் கேளுங்க. இந்தப் பணம் இந்த அமைப்புக்குத்தான். இதுல நான் மாறமாட்டேன்..."

"சொன்னாக் கேளும்மா..."

"அவளை, அவள் வழியிலே விட்டுடு சந்திரா... எனக்கும் ஒனக்கும் பணம் தேவை. ஏன்னா, நீயும் நானும் கல்யாணம் செய்துக்குவோம். சாரி... வெரி வெரிசாரி... நீயும் நானும் தனித்தனியாய் திருமணம் செய்துக்கலாம். அப்போது நமக்கு குழந்தை குட்டின்னு"

"தத்துப் பித்துன்னு உளறாதீங்க... அசோக்..."

"சாரி... நமக்கு, தனித்தனியா குழந்தை பிறக்கலாம்"

கலைவாணி, கலகலப்பாய்ச் சிரித்தாள். எதையேக் கண்டுபிடித்தவள் போல் கை தட்டிச் சொன்னாள்.

"டாக்டரம்மா, ஒங்க அசோக்கோட ஐடியா நல்ல ஐடியா..."

"அது என்ன ஒங்க அசோக்"

"ஆமாம்... அசோக் ஒங்களுக்கு... டாக்டர் அசோகன் எனக்கு... புரியுதா...?"

சந்திராவிற்குப் புரிந்தது. ஆனாலும் நாணப்பட முடியவில்லை. கலைவாணி தலையில் செல்லமாகக் குட்ட முடியவில்லை. அவள் மனதுக்குள், தாய்மாமா மகன் சங்கரன் விஸ்வரூபம் எடுத்தான்...

33

விதவிதமான, வித்தியாசமான, மானுட விதி விலக்குகளின் புகலிடம். மனித மூலப் பொருளை திரிபுகளாக்கும் உலைக்களம்; மலராகவும், வண்டாகவும் ஒரே சமயத்தில் ஒன்றிப்போன சோக வனம்; மானுடத்தில் இருந்து, பிய்ந்தோ அல்லது பிய்க்கப்பட்டோ விழுந்த பச்சோலைகள்... காயாகாமலே பழுத்துப் போன பிஞ்சுகள், பழுத்துப் போனதாய் நினைத்துப் புழுத்துப் போனவர்கள்; அத்தனைபேரும் இருபத்தைந்துக்கு உட்பட்டவர்கள். ஒவ்வொரு முகத்திலும் ஒரு பெண் சாயல்; இயற்கையிலேயே அலிகளாய் பிறக்காமல் அப்படி ஆகிப் போனவர்கள் அல்லது ஆக்கப்பட்டவர்கள்; பீடா, பிரியாணி போன்றவற்றைத் தின்றுதின்று, 'பெரிசுகளால்' தின்னப் பட்டவர்கள். துவக்கத்தில் தன்னை நினைத்து நினைத்து, இப்போது அந்த தன்னையே தொலைத்து விட்டவர்கள்.

ஆனாலும், அவர்கள் ஆனந்தமாகவே பாடினார்கள், அடிபெருத்து நுனி சிறுத்த ஒரு பொம்மைச் சொக்காக்காரன், ஏழு கோணலாய் உடல் மடித்துக் கிடந்த ஒருத்தனின் இடுப்பில் தலைபோட்டு, ஒரு இந்திப் பாட்டைப் பாடினான். இன்னொரு கள்ளிப் பால் வடியும் முகக்காரன், உட்கார்ந்தபடியே, இடுப்பு மேல்பகுதியை அங்குமிங்குமாய் அபிநயமாய் ஆட்டிக் காட்டினான். இன்னொருத்தன், இன்னுமொரு இன்னொருத்தனின் வாயில் முத்தமிட்டு, அந்த வாயைச் சொல்லத் தகாத வார்த்தைகளால் விமர்சித்தான். ஒவ்வொருவர் வாயிலும் ஒவ்வொரு பாட்டு.. சிலர் வாய்களில் இந்தியும், தமிழும் கலந்த கலவைப்பாட்டு; பாட்டுக்களுக்கு, முகங்கள் அபிநயமாயின. தொடைகள் மிருதங்கமாயின, கரங்கள் கம்புகளாயின. இரைச்சலே இசையானது. வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு, அவர்கள் வேடிக்கையான கல்லூரி

மாணவர்களாய்த் தெரியும். உள்ளே போய் உற்றுப் பார்த்தால், அவர்கள் புற்றாய்ப் போனவர்கள் என்று தெரியலாம்.

நான்கு பக்கமும் சாலைகள் சூழ்ந்த நடுப்பகுதியில் உள்ள இந்த சென்னைப் பெருநகரின் பூங்காவில் வட்ட வட்டமாய் வெட்டிவிடப்பட்ட செடிகளுக்கு மத்தியில், தேய்த்து தேய்த்து தேய்ந்து போன புல்தரையில், அசோக மரக்குவியல்களின் வேர்களில், அவர்கள் வேரற்றுக் கிடந்தார்கள். அந்தக் கூட்டத்தில், மனோகரும் பாடினான். தனியாகவும் பாடினான். கூட்டாகவும் பாடினான்.

பட்டபாட்டை மறப்பதற்காகவோ என்னவோ, பல்வேறு விதமாய்ப் பாடியவர்கள், இப்போது மனோகர் பாட்டுக்கு காது கொடுத்தார்கள். உடனே, அவன் பாட்டையே மாற்றினான்.

''நான் பாடும் பாடு நாய் படும்பாடு... ஏன்

பட வைத்தாயோ இறைவா...! என்னை ஏன் பட வைத்தாயோ...''

மனோகரின் ஆனந்தப்பாட்டு, அளப்பரிய துயரப்பாட்டாய் மாறியபோது, திடீர் என்று மூன்று பேர் முன்னால் வந்து முளைத்தார்கள். ஒருத்தன், அவர்களின் முன்னாள் கூட்டாளி. அப்போது வாடிப் போன உடம்பில், இப்போது ஒரு சில இடங்கள் துளிர்த்திருந்தன. வெளிப்பூச்சு மாதிரியான மினுக்கம். இன்னொருத்தர் நடுத்தர வயதுக்காரர். அருமையான முகவெட்டு. அதற்கேற்ற கோணாத உடல்வாகு... இன்னொருத்திக்கு முப்பது வயதிருக்க லாம். வெள்ளை மாவில் அள்ளிப்பிடித்தது போன்ற உருவம். பப்பாளி விதை மாதிரி சிறிய கண்காரி. அவள் மட்டும் வராது இருந்தால், 'யார் வரணும்... எங்கே வரணும்...?' என்று கோரசாக கேட்டிருப்பார்கள். அப்படியும் மனோகர் கேட்டான்...

''யாரு சார்... வேணும்...? டபுள் டக்கரா.. தங்காவா... பந்தியா...?''

அந்த ஆணும் பெண்ணும் புரியாது விழித்தபோது, கூட வந்தவன் இந்த டெக்னிக்கல் சொற்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

'டபுள் டக்கர்... என்றால், மலராகவும் இருப்பான், வண்டாகவும் இருப்பான். தங்கா என்றால் வெறும் மலர்... பந்தி என்கிறவன் வண்டு... எங்களோட தொழில் புரியுதா...? விளக்கணுமா...''

அந்த மனிதர், 'புரியுது' என்று சொன்னபோது, அந்த பெண் 'போதும்' என்று முகம் சுழித்து, காதுகளை கையோடு சேர்த்துப் பொத்திக் கொண்டாள்.

தொழில் ரகசியத்தை உடைத்துப் போட்ட அந்த அப்ரூவர் கண்ணனை, கீழே கிடந்த விட்டம் பெருத்த ஒருவன் விரட்டினான்...

''ஏண்டா... துரோகி... எட்டப்பா... எச்சிக்கல... எதுக்குடா... இவங்கள கூட்டி வந்தே... ஸ்டார் ஹோட்டலுக்கு போகிற திமிராடி... உனக்கும் எங்கள மாதிரி இந்தப் பார்க்குல பொத்துன்னு விழுறதுக்கு எத்தன நாளாகும்.... போடா... கூட்டிட்டுப் போடா''

கண்ணன், ஏதோ பேசப் போனபோது, எல்லோரும் கோரஸாக, ''ஏய், ஏய்'' என்றார்கள். அவனைப் பேசவிடாமல், கை தட்டினார்கள். மனோகர்தான், ஒவ்வொருவரையும் இழுத்து, அவர்களது வாய்களை கைகளால் மூடினான். பிரிந்த உதடுகளை ஒட்ட வைத்தான். இதற்குள் நடுத்தர வயதுக்காரர் அவர்கள் பக்கத்தில் போய் உட்கார்ந்தார்.

''நான்... 'அந்த' மாதிரி இல்ல தம்பிகளா...

''அப்போ... எதுக்கு வந்தீங்க...''

''இங்கே ஒங்களுக்கு என்ன வேலை''

அவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''வேலை இருக்கிறதாலதான் வந்தோம்... நீங்க ஹோமா செக்ஸுவல் அதாவது ஓரினச் சேர்க்கைகாரங்கதானே?''

''நாங்க ஹோமா செக்ஸ்... ஓரினமோ... ஈரினமோ தெரியாது; அதுக்கு என்ன இப்போ?''

''பெரிசா... ஒண்ணுமில்ல... நீங்க செய்யுறதை தப்புன்னோ, சரின்னோ நான் சொல்ல வர்ல... ஆனால் முன்னெச்சரிக்கை இல்லாத ஒங்க செய்கையால.. எத்தனபேரு எய்ட்ஸால் பாதிக்கப்படுறாங்க என்கிறதை நெனைச்சுப் பார்த்தீங்களா தம்பிகளா...''

''நீ சும்மா இருடா.. நான் பேசுறேன்... நாங்க எதுக்கு நெனைத்துப் பார்க்கணும்? நானு.. பள்ளிக்கூடத்தில் படிக்கப் போ... அதுவும் பத்தாப்பு படிக்கப்போ... இதே இந்த பார்க்குலதான் பரீட்சைக்குப் படிக்க வந்தேன். ஒரு தடிப்பயல்... என்ன புத்தகம் தம்பின்னு கேட்டான். வாங்கிப் பார்த்தான்... ஐஸா பேசி நைஸா... ஹோட்டலுக்கு கூட்டிப் போனானான். காய்ஞ்ச மாடு கம்பம்புல்லுல விழுந்தது மாதிரி நானும் பிரியாணி புரோட்டாவுல விழுந்தேன். அப்பால, சினிமாவுக்கு கூட்டிப் போனான்... அப்புறம்... போகட்டும்... என்னை... அந்தப் பாவி இந்த நிலைமைக்கு கொண்டு வந்தப்போ... நீ எங்கே போனே மச்சி...''

''இவன விடுங்க.. நான் சொல்றேன்... இப்பவும் ஒரு ஆபீஸ்ல

வேலைபார்க்கேன்... டெய்லி தாம்பரத்துலஇருந்து வாறேன்... கை நிறையச் சம்பளந்தான்... வீட்ல... கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நச்சரிக்காங்க... நான் தட்டிக் கழிக்கேன்... ஏன்னா, நான் காலேஜுல படிக்கும் போது... எங்க பக்கத்து வீட்டுப் பொண்ண சைட் அடிக்கப் போனால்... அவள் அண்ணன் கிட்டே மாட்டிக்கிட்டேன். தங்கைக்காக, அண்ணனுக்கு தியாகியானேன். கடைசியில... அந்தப் பொண்ணு பேய் மாதிரி தெரிந்தாள்... அந்த அண்ணன் எனக்கு கதாநாயகனாப் போயிட்டான்... இது எப்படி இருக்கு...?''

அந்தப் பெண்ணால், பேசாது இருக்க முடியவில்லை.

''ஸார். இவங்களுக்கு சிகிச்சை கொடுக்க முடியாதா?''

''அது அடுத்த கட்டம்... இப்போ நம்ம பர்ப்பஸே வேற.. தம்பிகளா... நான்தான் சொன்னேனே.... ஒங்களைத் தப்பு கண்டுபிடிக்க வர்லன்னு...''

''ஓஹோ... அது வேற செய்வியா...''

''டேய்... சும்மா இருடா... ஒனக்கு என்ன சார் வேணும்''

''நாங்க... வடபழனில... ஒரு அமைப்பு நடத்துறோம். ஒங்கள மாதிரி தம்பிகளுக்கு காண்டோம் கொடுக்கோம்... இதனால் ஒங்களுக்கோ... ஒங்க கஸ்டமருக்கோ எய்ட்ஸோ... இல்ல எந்த நோயோ வராது பாருங்க''

''போய்யா... எங்க பிழைப்புல மண்ணள்ளிப் போடாதே... எங்க கஸ்டமர் லாம் ஹைகிளாஸ்... வக்கீலுங்க... என்ஜினியருங்க... டாக்டருங்க... கான்டோமக் கொடுத்தால், கன்னத்துல அறைவான்க''

''கூட்டி வந்த 'டபுள் டக்கர்' கண்ணன், பக்குவமாய் பேசினான்.

''ஒங்கள... மாதிரிதாண்டா... நானும் இவங்கள விரட்டுனேன். ஆனாலும், இவங்க நல்லவங்கடா... வர்றீங்களா... இவங்க ஆபீசுக்குப் போகலாம்... இவங்க டைரக்டர் நல்ல மனுஷன்''

''டேய் மரியாதியாய் போய்கினே இரு... ஒன்னை மாதிரி பகல் முழுசும் கக்கூஸ் கழுவிட்டு... நைட்ல... இந்த வேலய நாங்க திமிர்ல செய்யல. திரும்பிப் பாராமல் போய்க்கினே இரு''

அந்த நடுத்தர வயதுக்காரர், பைக்குள் இருந்த ஒரு பிளாஸ்டிக் உறையை எடுத்தார். அதன் உள்ளே, கண்ணைப் பறிக்கும் நிறத்தில்... ஒரு வட்ட உருவம் பாம்பு மாதிரி சுருண்டு கிடந்தது... எல்லோரும் ஆச்சரிய மாய் அதைப் பார்த்தபோது, அவர், அதுதான் சமயம் என்று விளக்கினார்...

''நம்ம நாட்ல... சின்னப் பசங்க... பலுன் மாதிரி... ஊதுற காண்டோம்

இல்லப்பா இது. பாரீன் நிரோத்... எதுக்கும் வச்சுக்கங்களேன்''

மனோகர், அதை கைநீட்டி வாங்கினான். உடனே அந்தப் பெண், தொங்கு பைக்குள் வைத்திருந்த ஒரு பார்ஸலை வெளியே எடுத்து, அதைப் பிரிக்கப் போனாள். அதற்குள், மனோகர், அந்த பிளாஸ்டிக் உறையை மூன்று தடவை தலையைச் சுற்றிவிட்டு, பிறகு 'தூ' என்று துப்பியபடியே தூக்கி எறிந்தான்... கருணை ததும்ப தோன்றிய, அந்தப் பெண், அந்தப் பார்ஸலை மீண்டும் பைக்குள் போட்டுக் கொண்டாள். இதற்குள், அர்த்தநாரி போல் ஆண்பாதி பெண்பாதியாய் ஆகிப் போன ஒருத்தன், தன்னம்பிக்கையோடு சொன்னான்.

''எங்களுக்கு இப்போ.. பம்பாய்ல ஒரு சங்கம் இருக்குது.. அங்கே இருந்து ஒரு பத்திரிகையும் வருது... அமெரிக்காவுல அங்கீகாரமும் கிடச்சிருக்குது... அவங்க, எங்களைப் பார்த்துக்குவாங்க... நீங்க போயிக்கினே இருங்க''

சமூக இயலில் பட்டமேற்படிப்பும், சமூகத் தொண்டில் டிப்ளமாவும் படித்துவிட்டு, இன்னும் சரியான வேலை கிடைக்காமல் திண்டாடும் அந்தப் பெண், தன்னை மறந்து, தன் படிப்பை மறந்து கத்தினாள்.

''உடல் ஊனம் மாதிரி... இது... ஒங்களுக்கு ஒரு மன ஊனம். இது தெரியாமல், ஏதோ பத்மஸ்ரீ பட்டம் வாங்குன மாதிரி நினைக்காதீங்க... நீங்களும் கெட்டு.. மற்றவங்களையும் கெடுக்கிறதை நினைத்துப் பாருங்க''

எல்லோரும், அவள் மீது ஆத்திரப்பட்டதுபோல், ''ஏய், ஏய்'' என்று கத்தியபடியே துள்ளிய போது, இதுவரை பேசாத ஒருத்தன், எல்லோரையும் கையாட்டி அடக்கினான். பிறகு, முகம் நட்டுவாங்கமாக, மரத்துப் போன குரலோடு உரத்துப் பேசினான்.

''இவங்க பேச்சுக்கும், மனசுக்கும் சம்பந்தம் கிடையாது சிஸ்டர். ஆனாலும், உங்களை பார்த்தால் படித்தவங்க மாதிரி தெரியுது; இதனால ஒங்களுக்கு ஒரு விஷயம் தெரிந்திருக்கணும். நினைத்துப் பார்க்க முடியாத ஸ்டேஜுக்கு போயிட்டவங்க நாங்க. எங்களில் சிலர் தங்களை மறைச்சுட்டு... சமுதாயத்துல கெளரவமாய் நடமாடத்தான் செய்யுறாங்க... ஆனாலும், நாங்க.. பத்துப் பதினைந்து வயசுலேயே... பந்திகளுக்கு வளைந்து கொடுத்து நிமிராமல் போன தங்காங்க... நீங்க எங்களைப் பற்றி கவலைப்படாமல்... நான் சொல்ல போறதைப் பற்றி கவலைப்படுங்க. பார்க்கிலேயோ, பீச்சிலயோ, இல்ல சினிமாத் தியேட்டர்லயோ.. எங்கெல்லாம் ஒரு சின்னப் பையனோ, இல்லாட்டி விடலை பயலோ, ஏதாவது ஒரு பெரிசுகிட்டே ஒட்டிக்கிட்டுக் கிடந்தால், அவனைக்

கவனியுங்க... நிச்சயமாய் அந்தப் பெரிசு...அந்தப் பையனோட அப்பாவா இருக்கமாட்டான்; அந்த அப்பாவிப் பையனை பெண்டாள வந்த சண்டாளனாய் இருப்பான்... மொதல்ல... நான் சொன்னதைப் போய் பாருங்க. நமஸ்காரம்... போயிட்டு வாங்க''

வந்தவர்கள், யோசித்தார்கள்; ஓரினச் சேர்க்கையை தடுப்பதல்ல அவர்கள் நோக்கம். அப்படி சேர்கிறவர்களின் கையில், பட்டு போன்ற காண்டோமை திணிப்பதே அவர்கள் பணி. ஆகையால், என்ன செய்யலாம் என்று அந்த சராசரி ஆணும், சராசரிப் பெண்ணும் காதைக் கடித்தார்கள். அந்தப் பெண், அவர்கள் சொல்வதில் உள்ள யதார்த்தத்தைப் புரிந்தது போல், மேலும் கீழுமாக தலையாட்டியபோது, அவர், இன்னொரு யதார்த்தத்தை எடுத்துக் காட்டி பக்கவாட்டில் தலையாட்டினார். ஆக மொத்தத்தில், காண்டோம் விநியோக எண்ணிக்கையைக் கூட்ட முடியவில்லையே என்ற ஆதங்கம்... அதோடு போய் விட்டார்கள்.

அவர்கள் போனதும், மனோகர் உதடுகளால் சப்புக் கொட்டினான். ஆயிரம் இருந்தாலும், அவளை அப்படி இன்ஸல்ட் செய்திருக்கக் கூடாதுதான். அவனிடம் அந்த நிரோத்தை நீட்டிய போது, அதை வெந்த புண்ணில் பாய்ந்த வேலாக எடுத்துக் கொண்டதில் தப்பில்லைதான்; அதற்காக அவள் மீதே காறி உமிழ்வது போல், அந்த நிரோத்தை, தலையைச் சுற்றி, தூக்கிப் போட்டிருக்கக் கூடாதுதான்.

மனோகர், தன் குற்ற உணர்வை மறப்பதற்காக, ஒரு பாட்டைப் பாடினான். பக்கத்தில் கிடந்தவனின் முதுகை மேளமாக்கினான். திடீரென்று, அவன் வாய் அடைபட்டது. கண்கள், சடன் பிரேக் போட்ட சக்கரங்கள் மாதிரி உருண்டு நின்றன. அவனுக்கு எதிரே, அன்புமணி நிற்கிறான். இரு பக்கமும் விகாரமான பார்வை கொண்டவன் ஒருத்தன்... கருடமூக்குள்ள காக்கிச் சட்டைக்காரன் இன்னொருத்தன்.

அன்புமணி, விறைப்பாய் பேசினான்.

''இவன்தான் ஸார் மனோகர்... இவன்கிட்டேதான் ஸார் கடையில திருடுன... செயினைக் கொடுத்தேன்... நான் சொன்னது மாதிரி.. ரெண்டு பேருமா சேர்ந்துதான் ஸார் திருடுனோம். என்னை மட்டும்... உதச்சால் என்ன சார் நியாயம்..?''

அன்புமணியின் வலது பக்கத்தில் நின்ற கருட மூக்குக்காரனைப் பார்த்து, மனோகர் ஒரு வணக்கம் போட்டான். சந்தேகமில்லை. அப்போ... போலீஸ் நிலையத்தில், தனக்கு செமத்தையா கொடுத்தானே, அதே போலீஸ்தான்... இந்த அன்புமணி என்னத்தைக் கொடுத்தான்... நான் என்னத்தை

வாங்கினேன்...

எவனுக்கு வணக்கம் போட்டானோ, அதே கருட மூக்கன், **மனோகரை** காலால் இடறினான். தொப்பென்று விழுந்தவனின் சட்டைக்காலரைப் பிடித்து, தூக்கி நிறுத்தியபடியே கத்தினான்.

''நாங்க... போலீஸ் நிற்கோம். நீ கிரிமினல்... மகராசா மாதிரி... கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கியா...? சொல்லுடா... அந்தச் செயினை, எங்கடா வச்சிருக்கே...? சொல்லுடா...''

மனோகரின் தலைக்கு குறி வைத்து, லத்திக் கம்பை நீட்டிய காவலரை அன்புமணி பிடித்துக் கொண்டான்.

''சொல்லிடுவான்... சார்... சொல்லிடுவான்... ஆயிரம் இருந்தாலும் அவன் என் தோஸ்து... சார்... டேய் மனோ.... அந்தச் செயினை எங்கே வச்சிருக்கேன்னு சொல்லித் தொலையேண்டா... சோமாறி ஒன்னால நான் உதை தின்னுறேன்.''

மனோகர், அன்புமணியை மருண்டு பார்த்தபோது, அவன் பக்கத்தில் நின்ற விகாரப் பார்வைக்காரன் கருத்துரைத்தான்.

''இவனை மாதிரி...கேடிகளை ஸ்டேஷன்லே விசாரிக்கிற விதமாய் விசாரிக்கணும். ஏண்டா... அன்புமணி...நீயும் அவன் கூடச் சேர்ந்து நடிக்கிறியா...முட்டிக்கு முட்டி பிஞ்சிடும்.''

மனோகருக்கு, ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அது புரியப் புரிய, சகாக்களிடம் முறையிடப் போனான். ஆனால் அவர்களோ, அவனை முகம் சுழித்துப் பார்த்தார்கள். இதுவரை, அவர்களில் எவனுமே திருடாதவன்... தில்லு முல்லு செய்யாதவன்; நட்சத்திர அறைக்குள் இருக்கும் போது, மேசையில் சிதறிக் கிடக்கும் நூறு ரூபாய் நோட்டுக்களை ஒப்புக்கு கூட பார்க்க மறுப்பவர்கள். இப்படிப்பட்ட சர்க்கிளில், இவனா? எப்படிக் கண்டுபிடிக்காமல் போனாம்...

ஒருத்தன் யோசனை சொன்னான்...

''இழுத்துப் போய்...நல்லா உதைங்க சார்...குலத்தைக கெடுக்க வந்த கோடாரிப்பயல்...டேய்...இனிமேல் காட்டி, எங்கப்பக்கம் வந்தே... அப்பால நடக்கிறதே வேற...''

தாம்பரத்துக்காரன் மட்டும், மனம் கேட்காமல் பேசினான்.

'உதைங்க சார்... திருடனை உதைக்கிறதில தப்பில்ல சார். ஆனால், எங்க முன்னால வேண்டாம் சார். ஆறுமாச சகவாச தோஷம் மனசு கேட்க மாட்டங்கிது..''

மனோகர் முண்டியடித்து, அவர்களிடம் ஏதேதோ சொல்லப் போனான். இதற்குள், காக்கிச் சட்டைக்காரர், அன்புமணியையும், மனோகரையும் இணைத்து வைப்பது போல் ஒருவனின் வலது கையையும், இன்னொருத்தனின் இடது கையையும் இணைத்து விலங்கிட்டார். விலங்கைப் பூட்டிவிட்டு, சாவியை பக்கத்தில் நின்றவனிடம் கொடுத்து விட்டு, அந்த விலங்கின் மூக்கணாங்கயிரான இரும்புச் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு 'நடங்கடா' என்றார்.

மனோகர், ஒதுங்கி நின்ற சகாக்களிடம் மீண்டும் பேசப் போனான். ஆனால், அவர்களோ அந்த இடத்தில் இருந்து எழுந்து, சிறிது விலகிப் போய் உட்கார்ந்தார்கள். விலங்கோடு சேர்த்து, அன்புமணி கையோடு, தன் கையையும் ஆட்டி, அவர்களை கிட்டே வரச் சொன்னான். இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. விலங்கிடப்பட்டவர்களை, கூட்டம் வேடிக்கை பார்க்காமல், காரசாரமாய், கடுமையாய் நோக்கியது. ஒரு சிலர் காக்கிச் சட்டைக்காரரைப் பார்த்து 'இப்படித்தான் செய்யணும்' என்று அங்கீகாரம் செய்தார்கள்.

மனோகர், நின்றபடியே செத்துப் போனான். தானும் செத்து, தன் நினைவும் செத்துப் பிணமாகிப் போனான். உயிர் இருக்க, ஆன்மா செத்து, அன்புமணி மீதே சாய்ந்தான். ஒரு காலில் பட்ட ஒரு லத்திக்கம்பு வீச்சுத்தான் அவனை மீண்டும் உயிர்ப்பித்து நடக்க வைத்தது. எவருக்கும் முகம் காட்டவும் மனமில்லை. அந்த முகத்தை, இடது கையால் மறைத்துக் கொண்டான். ஆடுமாடு போல நடந்தான். பார்வையற்றோர் நடப்பது போல், ஒரு அனுமானத்துடன் நடந்தான். நடத்தப்பட்டான்.

மனோகர், இழுத்துச் செல்லப்பட்ட ஐந்து நிமிடத்தில், விலகி நின்றவர்கள் மீண்டும் கூடினார்கள். ஒரு சிலர், மனோகரைப் பார்த்தால் அப்படிப் பட்டவனாகத் தெரியவில்லை என்று வாதிட்டார்கள். ஆனால், பெரும்பாலோர், தங்கள் பைகளுக்குள் இருந்த பர்ஸ்களைத் தட்டிப் பார்த்துக் கொண்டார்கள். இனிமேல், முன்பின் தெரியாதவர்களை, தக்க ஆதாரங்கள் இல்லாமல் தங்களது கிளப்பில் சேர்ப்பதில்லை என்றும் தீர்மானித்தார்கள். மனோகரைக் கூட்டி வந்து சேர்த்த தாம்பரத்துக்காரன் மேல் எரிந்து விழுந்தார்கள்.

சிறிது நேரத்தில், எஸ்தர் வந்தாள். பழைய பேண்ட் சட்டையாகத்தான் இருக்க வேண்டும். இல்லையானால், இப்படி நைந்திருக்காது. பேண்டின் முட்டிக்கால் பகுதி நூல் பிரிந்து குட்டி ஜன்னலாய்த் தோன்றியது. சட்டைக்காலர் சொந்த நிறத்திற்குப் பதில் வெள்ளை நிறத்தைக் காட்டியது. நைந்து நைந்து நரைத்துப் போனது... இவர்களுக்கு தெரிந்தவள்தான் இவள்.

இந்த மனோகருடன், ஒரு குடிசையில் குடும்பம் நடத்துவதையும் தெரிந்து வைத்தவர்கள்தான்... இவளைப் பார்த்தபடியே 'வாடா வா' என்று கோரஸா கேட்பவர்கள், இப்போது வாய் மூடிக் கிடந்தார்கள்.

இரண்டு நாட்களாக வீட்டுக்கு வராத மனோகரைப் பார்ப்பதற்காக அங்கே வந்த எஸ்தர், அந்தக் கூட்டத்தில் அவனை அங்கேயும் இங்கேயுமாய் தேடினாள். அவனுக்கு பத்து பதினைந்து நாளாக பலமான இருமல். கூடவே வயித்துப் பிழைப்பிற்காக வேலைப்பளு; எப்படி இருக்கானோ என்று பதைபதைத்து வந்தவள், அந்த கூட்டத்திடம் கேட்டாள்.

''எங்கே மனோகர் வர்லியா...? ஏன் பேசமாட்டக்கீங்கே.. மனோ இங்கே வர்லியா?''

அவர்கள், எஸ்தரை கோபமாகவும், குமுறலாகவும் பார்த்தார்கள். அவன் திருட்டில், இவளுக்கும் பங்கு இல்லாமலா இருக்கும்?

''மனோ என்ன ஆனான்? ஒருத்தராவது சொல்லுங்களேன்''

''அவனோ, நீயோ, இனிமே இங்கே வரப்படாது''

''சரி வர்ல... மனோ எங்கே? கோடிப் புண்ணியம்... சொல்லுங்க''

''பலநாள் திருடன்.. ஒரு நாள் பிடிபடுவான். எவனோ அன்புமணியாம்... அவனோட சேர்ந்து, இவன் ஒரு கடையிலே தங்கச் செயினை திருடி இருக்கான். அதனால் போலீஸ்க்காரங்க... ரெண்டு பேருக்கும் இரும்பு காப்பு போட்டு இழுத்திட்டு போறாங்க... அன்புமணி, அப்ரூவராகி அந்த போலீஸ்காரங்களை இங்கே கூட்டிட்டு வந்திட்டானா கடைசியிலே ௭.ங்களுக்குத்தான் அவமானமாப் போச்சு.''

எஸ்தருக்கு, முக்கால்வாசி புரிந்து விட்டது. அன்புமணி ஆறுமாதம் அவகாசம் கொடுத்ததே பெரிசு... அவனுக்குத் தெரியாமல் தலைமறைவு வாழ்க்கை நடத்தியும், அவன் கண்டு பிடித்து விட்டான். அந்த லாக்கர் நகை கைமாறுவது வரைக்கும் மனோகர் லாக்கப்பிலேயே இருப்பான்... இவன் கொடுக்க மறுத்து... அவர்கள் இவனை விடுவிக்க மறுத்து... ஏதாவது ஏடாகூடமாய் மனோகர் தற்கொலை செய்து கொண்டதாய் ஒரு ஜோடனை செய்து... கடவுளே... கடவுளே... ஒனக்கு கண் இருக்குதா... கடவுளே''

எஸ்தர், பக்கத்தில் நின்ற அசோக மரத்தில், முட்டி மோதினாள்... அந்த மரத்தோடு மரமாய்ச் சாய்ந்தாள். அதிலிருந்து அப்படியே வழுக்கி, மல்லாக்க விழுந்து, அப்புறம் குப்புறப் புரண்டு, பூமியின் வயிற்றுக்குள் போகப் போகிறவள் போல உடல் முழுவதையும் அங்குமிங்குமாய்ப் புரளவிட்டாள். தனக்குத்தானே குழிபறிப்பது போல் அல்லாடினாள்...

34

அந்த விழிப்புணர்வு கொட்டகையும், சிறிது விழித்துப் பார்ப்பது போல் தோற்றம் காட்டியது. சாணித்தரை, சிமெண்ட் தளமானது. மண்ணும் கல்லுமாய் உள்ள சுவர்கள், ஆடைகளைப் போட்டுக் கொண்டன. கொட்டகைத் தளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இடையே ஒரு வாசல் வந்தது. முன் பாதி அறையில், பேனர்கள், சுவரொட்டிகள் போன்ற தட்டுமுட்டுச் சாமான்கள்... பின்பாதி அறையில், பக்கவாட்டில் ஒன்றின் மேல் ஒன்றாய் வைக்கப்பட்ட பிளாஸ்டிக் நாற்காலிகள். இந்த அறையே, தேவைப்படும் போது, ஒரு ஆலோனைக் கூடமாகும்.

டாக்டர் அசோகன், எதிரே பிளாஸ்டிக் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த சுமார் ஐம்பது பேருக்கு உபதேசம் செய்ய போனான். இதில் நாற்பது பேர் பெண்கள்; இந்த நாற்பதில் பதினைந்து பேர், சுமதியிடம் இருந்து கலைவாணியிடம் சேர்ந்த மனச்சாட்சிக்காரிகள்; பத்துப் பெண்கள், மத்திய அரசின் நேரு இளைஞர் மன்றத்தில் பகுதி நேர ஒருங்கிணைப்பாளர்களாய் பணியாற்றிவர்கள்; மாதம் எழுநூறு ரூபாய் சம்பளம் வாங்கியவர்கள்; இப்போது, சட்டப்படியான இரண்டாண்டு கால பதவிக்குப் பிறகு, மீண்டும் வேலையில்லாமல் போனவர்கள்; இவர்களை, கலைவாணிதான், இங்கே பிடித்துப் போட்டிருக்கிறாள்; மற்றும் பலர், சந்திராவின் தூண்டுதலில் சந்தா செலுத்தியவர்கள். ஆண்கள்... அசோகனின் வார்ப்புகள்.

அசோகன், பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்தபடி, மேசையில் கையூன்றி, அதில் முகம் போட்டுக் கிடந்த கலைவாணியைப் பெருமிதமாய்ப் பார்த்துவிட்டு, பேச்சைத் துவக்கினான். அநாவசியமான.. 'அவர்களே' சொல்லாமல், நேரடியாய் வந்தான்.

''நல்லது நினைப்பவர்களுக்கு நல்லதே நடக்கும்... அதே சமயம், நல்லது, கெட்டது மூலம் வரலாம்... கெட்டது நல்லது மூலமும் வரலாம்.. டாக்டர் சந்திரா, நல்லது நினைத்தார். ஆனால் நடந்தது என்னமோ கெட்டது. சுமதி, கெட்டது நினைத்தாள். ஆனால், நல்லதே நடந்தது. இது போர் அடிக்கும் பேச்சுத்தான். ஆனாலும் உண்மை... நேர்மைக்கும், நெஞ்சில் உரத்திற்கும் வெற்றி கிட்டும் என்பதற்கு, கலைவாணியே எடுத்துக்காட்டு. கோவை தொழிலதிபர், தனிப்பட்ட முறையில் கொடுத்த ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடையை, இந்த அமைப்பிற்கு, நன்கொடையாய் கொடுத்துவிட்டார். வழக்கமாய் எல்லோரும் செய்வது போல் செய்யாமல், இந்தப் பணத்தை நமது அமைப்பிற்கு சொத்தாக்கி, நமக்கும் உரிமை கொடுத்துவிட்டார். தயவு செய்து, கை தட்ட வேண்டாம். கைதட்டித் தட்டியே, பேச்சாளர்களை வெறும் கைத்தட்டலுக்காக பேச வச்சிட்டோம். அவர்களும் ஜோக் அடித்து அடித்தே, கூட்டத்தை ஜோக்கிற்காகவே வர வைத்துவிட்டார்கள்... சரி விஷயத்துக்கு வாறேன்...''

''இந்த விழிப்புணர்வு, அமைப்பு ஒரு வித்தியாசமான அமைப்பு. எய்ட்ஸ் திருமணத்தை தடுப்பதே, இதன் பிரதான நோக்கம். இதனாலேயே, இதற்கு பல திசைகளில் இருந்தும் எதிரிகள் முளைப்பார்கள். நாம் அடிபட வேண்டியது வரும். பிடிபட வேண்டியதும் வரும். ஆனாலும் நமது நோக்கம் நல்லதாக இருப்பதால், நல்லதாகவே நடக்கும்... என்றாலும், நாம் குதிக்கிறதுக்கு முன்னால குனிந்து பார்க்கணும்.''

'டாக்டர்... அசோகன்! நீங்க இப்படியே பேசிட்டுப் போனால், நான் குனிந்து பார்க்காமலே, குதிக்க வேண்டியது வரும். என்ன இது? சப்ஜக்டுக்கு வராமல்...''

கலைவாணி மட்டும், கூட்டத்தின் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. களங்கமில்லாமல் சிரித்தவனைப் பார்த்தபடியே, சந்திராவைப் பார்த்தாள். இந்த டாக்டரம்மாவுக்கு, அசோக், எப்போ டாக்டர் அசோகன் ஆனார்...?

அசோகன் தொடர்ந்தான்...

''நீங்கள்லாம் எய்ட்ஸ் நோயாளிகளோட பழகப் போறீங்க. அவர்களை எப்படி அணுகணும், எப்படிப் பழகணும் என்பதை என் அனுபவம் மூலம் சொல்கிறேன். முதலாவதாய், ஹெச்.ஐ.வி. வந்ததாய் தெரிஞ்சவங்க, அதை நம்ப மறுப்பாங்க. அப்புறம் அதிர்ச்சி அடைவாங்க... கோபப்படுவாங்க.. நம் மேல் எரிஞ்சி விழுவாங்க. கோவில், குளங்களோட பேரம் பேசுவாங்க... இதைப் புரிந்து, அவர்களை அணுகணும். எடுத்த எடுப்பிலேயே, அவர்கள் கருத்தை தவறானது என்று நிரூபிக்க முயற்சி செய்யப்படாது. இரண்டாவது கட்டமாய், இவங்க பயப்படுவாங்க... தனிமைப்படுவாங்க. தங்களை

உதவாக்கரைன்னு தானாய் திட்டிக்குவாங்க. ஒரு சிலர், தனக்கு வநதது எல்லோருக்கும் வரட்டுமுன்னு நினைப்பாங்க; கலைவாணி மாதிரி, சென்னை சேகர் மாதிரி, ஒரு சிலர்தான் 'எனக்கு வந்தது யாருக்கும் வரப்படாதுன்னு' நினைப்பாங்க. இந்த விதி விலக்குகளை விட்டுவிட்டு, பொதுப்டையா பார்த்தால் ஹெச்.ஐ.வி. நோயாளிகள், தனிமைத் துயரில் தவிப்பார்கள். இவர்களை அன்பாய் அரவணைத்து ''நீங்க மட்டும் தனியா இந்த நோயை வாங்கல.. உங்களை மாதிரி லட்சக் கணக்கானவங்க, உலகம் முழுவதும் ஊர் ஊராவும் இருக்காங்கன்னு சொல்லணும்...

''இளம் வயது நோயாளிகளை, வித்தியாசமாய் அணுகணும்... மொதல்ல அவர்களை முழுமையாய் பேசவிடுங்க. அவங்க பேசுறதை நீங்க உன்னிப்பாய் கவனிக்கிறதாய், அவர்கிட்ட ஒரு அபிப்ராயத்தை ஏற்படுத்துங்க. இதுக்கு பாவலா பலிக்காது. முழுமையான ஈடுபாடும், விசுவாசமுமே முக்கியம். இவங்களோட வார்த்தைகளை மட்டும் கேட்காமல், இவங்களோட வார்த்தைகளில் இழையோடும் உணர்வுகளை மதியுங்கள். உங்களை அவங்க கிட்ட புரிய வைக்கிறதுக்கு முன்னால், அவங்களப் புரிந்து கொள்ளுங்க. ஒரு ஹெச்.ஐ.வி. இளைஞன் திருமணம் செய்ய போவதாய் சொன்னால், முதலில் அவனது எதிர்கால மனைவிக்கு ஏற்படுகிற கஷ்ட நஷ்டங்களை அடக்கி வாசித்து, அவனுக்கும் அவன் சந்ததிக்கும் ஏற்படப் போகிற அபாயத்தை எடுத்துச் சொல்லுங்க. பிள்ளை, பிறந்த உடனே இறக்கணுமா...? மனைவி ஓடிப் போகணுமான்னு கேளுங்க. இதையும் அவன் கேட்காவிட்டால், அவனை எச்சரியுங்க. இந்த எச்சரிக்கையை செயல்படுத்த, இருக்கவே இருக்குது... நம் அமைப்பு...''

''கடைசியாய்... ஹெச்.ஐ.வி. முற்றின எய்ட்ஸ் நோயாளியை மரணத்திற்கு தயாராக்குங்க. மரணத்தை எதிர் நோக்கி, சொத்து, பத்து, குழந்தை, குடும்பம் போன்றவற்றை செட்டில் செய்யச் சொல்லுங்க. ஒரு எய்ட்ஸ் நோயாளியோட அவஸ்தைக்கு, மரணம் முற்றுப்புள்ளி வைக்கும் என்று சொல்லுங்க. கடைசிக் கட்டத்தில, கைகால் விழுந்தோ, ரத்தமாய் வாந்தியெடுத்தோ, குணப்படுத்த முடியாத சயரோகத்தில் தவித்தோ, கொப்புளம் கொப்புளமாய் வெடித்தோ... துள்ளத் துடிக்கக் கிடக்கிற எய்ட்ஸ் நோயாளிகளை, என்னோட மன்னிக்கவும், நம்மோட மருத்துவ மனைக்கு கொண்டு வாங்க...''

அசோகன், பேசிக் கொண்டே போனான். பேசி முடித்துவிட்டுப் பார்த்தால், கலைவாணியை காணவில்லை. அது, அவனுக்குப் பெரிதாகவும் தெரியவில்லை. பேச்சுக்கு பிறகு, கேட்கப்பட்ட சில சந்தேகங்களுக்கு சந்திராவையே விளக்கமளிக்கச் சொன்னான்...

ஆலோசனைக் கூட்டம் முடிந்ததும், சந்திரா அந்தப் பெண்களோடு பேசிக் கொண்டிருந்தாள். அசோகன், அலுவலக அறைக்குள் போனான். அங்கே-

கலைவாணி, நாற்காலியில் உட்கார்ந்தபடி மேசையில் குப்புறக் கிடந்தாள். இரண்டு கரங்களும் மேசையில் வியாபித்துக் கிடந்தன. அந்த மேசையில், அவள் முகம் பதிந்த இருபக்கமும் ஈரம்... அவள் முதுகு குலுங்கியது... தோள்கள் ஆடின..

அசோகன், அவள் தலையைத் தொட்டு, 'கலைம்மா' என்றான். அப்படியும் நிமிராதவளை, முகம் பிடித்துத் தூக்கினான். கண்கள், ரத்தக் கட்டிகளைக் காட்டின. முகம் கழுவப்பட்டு, துவட்டப்படாத ஈரக் கசிவோடு இருந்தது. உதடுகள் பிதுங்கின.

''கலைம்மா...''

கலைவாணி, அசோகனை, நிமிர்ந்து பார்த்தாள். அவன் கையைப் பிடித்துக் கொண்டு விம்மினாள்.

''முப்பது வயதுக்குள்ளே... முடியப் போகிற நான்... கடைசி நேரத்தில என்ன பாடுபடப் போறனோ... என்னை இப்பவே மரணத்துக்கு ஆயத்தப்படுத்துங்க டாக்டரய்யா..! கடைசி நேரம் வரைக்கும் என்னை விட்டுப் பிரியாமல், நீங்களும் சந்திராக்காவும் என்னை வழியனுப்பி வைக்கணும் டாக்டரய்யா...''

வாசல் பக்கம் நின்ற சந்திரா ஓடிவந்து, கலைவாணி மேல் சரிந்தாள்; அசோகனைச் சாடினாள்.

''இதுக்குத்தான் கலைவாணி... கிட்டே எய்ட்ஸ் வார்டை காட்டாதீங்கன்னு கரடியாய் கத்தினேன்...''

அசோகன், சந்திரா பேச்சைக் காதில் வாங்காதது போல், கலைவாணிக்கு ஆறுதல் சொன்னான்....

''என்ன கலைம்மா... குழந்தை மாதிரி நீ அழப்படாது.. வழிகாட்டிகள் அழுதால், அப்புறம் வழியே அடைபட்டுடுமே.. அழாதம்மா.... நீ வாழப் பிறக்கல்லன்னாலும், மற்றவங்களை வாழ வைக்கப் பிறந்தவம்மா! ராமலிங்க சுவாமியும் ஆதிசங்கரரும் விவேகானந்தரும் முத்துக்குட்டி சுவாமியும் சின்ன வயதிலேதான் இறந்தாங்க. இந்த மகான்கள் எவ்வளவு பெரிய பாரம்பரியத்தை, விட்டுட்டுப் போயிருக்காங்க... மரணம், எப்போது வருமுன்னு முன் கூட்டியே தெரிந்து வைத்த, இந்த மகான்கள் மரணத்தைப்

பற்றி கவலைப்பட்டிருந்தால், நம் பாரம்பரியம் என்ன ஆகியிருக்கும்''

''ஆமாம்... கலை... டாக்டர் அசோகன் சொன்னது மாதிரி... நீ மரணத்தைப் பார்த்து, அதுக்கு அடைக்கலம் கொடுக்கிற பெருமிதத்தில் சிரிக்கணும். பொதுவாய், எல்லோரும், ஒவ்வொரு நாளாய் சாகும் போது, நீ ஒவ்வொரு வினாடியாய் வாழ்ந்து காட்டணும்... அதோட, பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வருவதைப் பற்றி இப்போ ஏன் நினைக்கே?... அதுக்குள்ளே எய்ட்ஸ்க்கு மருந்து மாத்திரை கண்டு பிடித்துவிடலாம். இப்பவே ஆராய்ச்சி பலமாய் நடக்குது''

''சந்திரா, கலைக்கு பிகாசில் கொடுத்தியா...?''

அந்த அலுவலக பீரோவைத் திறந்து, ஒரு காகிதக் கவரில் இருந்த மாத்திரையை எடுத்து, சந்திராவே, கலைவாணிக்கு ஊட்டுவது போல் அவள் வாயில் போட்டாள். பிறகு, மேசையில் நீரோடு நின்ற டம்ளரை, அவள் வாய் ஓரம் வைத்தாள்.

கலைவாணி, அவர்களைப் பார்த்து சங்கடமாய் சிரித்தாள். பிறகு 'ரொம்பத்தான் லூட்டி அடிச்சிட்டேன்' என்றாள் தலைகவிழ்ந்து. உடனே சந்திரா, அவள் கவிழ்ந்த தலையை நிமிர்த்தி ''செயலாளரம்மா... இனிமேல் நீங்க அழப்படாது'' என்றாள் படபடப்பான புன்னகையோடு.

35

அந்த விழிப்புணர்வு வளாகத்திற்குள், அங்கு சங்கர் வருவதைப் பார்த்த அசோகன் ''வாங்க. சங்கர்... என் ஆஸ்பத்திரிக்கு போயிட்டு தானே வறீங்க? நான் இங்கே இருப்பதாய் சொல்ல சொன்னேன். சொன்னாங்களா?''

சங்கரன், மேலும் கீழுமாய்த் தலையாட்டினான். சந்திராவையும், கலைவாணியையும் செத்த பாம்பாய் பார்த்தான். கலைவாணியைப் பார்த்த போது, கட்டுப் போடாமல் வீங்கிப் போயிருந்த பெருவிரலை, தன்னையமறியாமலே தூக்கிப் பார்த்தான்.

சங்கரனின் தோற்றத்தைப் பார்த்துவிட்டு, சந்திரா ஆடிப் போனாள். கீழே விழுந்து விடலாம் என்று பயந்தவள் போல் நாற்காலிச் சட்டங்களைப் பிடித்துக் கொண்டாள். அவனைப் பார்த்து திகைத்துப் போன கலைவாணி, நாசூக்காக வெளியேறப் போனாள். சந்திரா தான், அவள் கையைப் பிடித்து இழுத்து, உட்கார வைத்தாள். அசோகன் உபசரித்தான்.

''உட்காருங்க மிஸ்டர் சங்கர்''

சங்கரன் உட்கார்ந்தான். அதே சமயம், தவியாய்த் தவித்தான். 'அது' இல்லாமல் இருந்தால், இந்த அசோகன் இந்நேரம் சொல்லி இருக்கலாம்... இருப்பதால்தான் சொல்லவில்லை என்று பாசிட்டிவ் பயத்தோடு அசோகனைப் பார்த்தான். பிறகு சோர்வாய் நாற்காலியில் சாய்ந்தான். முகம் வெளிறிப் போயிருந்தது. கன்னங்கள் சிறுத்துப் போயிருந்தன. முகத்தை மறைத்த தாடி... பழைய பேண்ட்... சட்டை தொள தொளப்பாய்க் கிடந்தன. அடிக்கடி வேறு இருமினான். உடலுக்குள் இருக்கும் அத்தனை உறுப்புக்களையும், வெளியே இழுத்துப் போடப் போவது மாதிரியான இருமல்...

சந்திராவால், சும்மா இருக்க முடியவில்லை. அவனே பேசட்டும் என்று இருந்தவள், இப்போது, தானாகவே பேசினாள்.

''எப்படித்தான் இருக்கீங்க... என்ன கோலம் இது... ஒரு லட்டராவது போடப்படாதா?''

சந்திராவுக்கு கண்ணீர் பொங்கியது... சங்கரனும் அவளிடம் பேசப் போனான். அதற்குள் இருமல்... ஈர இருமல்...

அசோகன், சங்கரனை கண்ணைச் சிமிட்டி பார்த்தான், பிறகு, அவன் கையைக் குலுக்கியபடியே, பேசினான்.

''சமாச்சுட்டிங்க சங்கரன்... ஒங்க ரத்தத்தை ஹெச்.ஐ.வி.க்கு மட்டுமில்லாமல்... எல்லாவற்றுக்கும் சேர்த்து டெஸ்ட் செய்துட்டேன். கொஞ்சம் ஈஸ்னோ போலியா... அதுதான் இருக்குது... சாதாரண நோய்... நோயின்னு கூட சொல்ல முடியாது... மற்றபடி யுவர் பாடி இஸ் கிரேட்''

சங்கரனுக்கு ஒரு சந்தேகம். உடம்பு பிரமாதம் என்கிறானே... அப்போ மூளை இல்லை என்கிறானோ...? தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

''அப்போ எய்ட்ஸ்?''

'ரெண்டு தடவை டெஸ்ட் செய்தாச்சு. அது உங்களுக்கு கிடையவே கிடையாது. வீணாய் மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க...''

''அப்போ இந்த இருமல்''

''இது ஈஸ்னோபோலியாவோட எபக்ட். மருந்து தாரேன். சரியாயிடும்...''

''அப்போ இந்த ஜுரம் ஒரு மாதமாய் போகலியே''

'லுக் மிஸ்டர் சங்கர்...! இதுக்குமேல் ஒங்களை நீங்கதான் காப்பாற்றிக்கணும். நாம்... என்ன நினைக்கமோ, அப்படி ஆகுறோம். சில பெண்கள், கர்ப்பம் தரிக்காமலே அப்படி ஆகி இருக்குமோ என்கிற பயத்திலேயே போலிக் கர்ப்பிணியாய் ஆகி இருக்காங்க. எங்கே எய்ட்ஸ் வந்திடுமோன்னு நினைச்சீங்கன்னா, ஹெச்.ஐ.வி. கிருமி இல்லாமலே, அதனோட விளைவுகள் உங்களுக்கு வரலாம்...''

சங்கரனுக்கு, லேசான தெளிவு... கூடவே பயம்... ஒரு வேளை இதுவரைக்கும் எய்ட்ஸ் இருப்பதாய் நினைத்ததால், அதன் விளைவுகள்

வந்திருக்குமோ இதனாலதான்.. இந்தப் பெருவிரல்...? கேட்டே விட்டான்...

''அப்போ, ஏன் இந்த பெருவிரலோட வீக்கம் குறையல?''

''காரணம் இருக்கு. கலைவாணிய, ஒரு ராட்சசியாய் நினைக்கிறீங்க... அதனால், அந்தக் கடிகாயமும் அரக்கத்தனமாய் தோணுது. இது ஒங்க மனம் சம்பந்தப்பட்டது. உடல் சம்பந்தப்பட்டது இல்ல... கலைவாணியை, நல்ல பெண்ணா மனசிலே நினைத்துப் பாருங்க. பெருவிரல் தானாய் ஆறிடும்... நிசமாவே, இது, பத்தரை மாற்று தங்கம்...''

சங்கரன், அசோகனை, மீண்டும் தடுமாற்றமாய்ப் பார்த்தான். ஒரு மாதமாய் இருக்கிற வயிற்றுப் போக்கு பற்றி கேட்கப் போனான். கேட்டால்... 'என்னைப் பற்றியும் நல்லதா நினைன்னும்' சொல்வான் ஆக, எய்ட்ஸைப் பற்றி நினைக்காட்டால்தான்... இந்த வயிற்றுப் போக்கு, முதுகிலே இருக்கிற ஒற்றைக் கொப்பளம் சுகமாகும். எப்படித்தான் நினைக்காமல் இருக்கப் போறேனோ...? மருந்தைக் குடிக்கும் போது குரங்கை நினைக்காதே என்கிற கதைதான்.

இதற்குள், சந்திராவும் அவனை உரிமைக் குரலில் சாடினாள்.

''இத்தோட ஹெச்.ஐ.வி. சிந்தனையை விட்டுடுங்க... மெட்ராஸ்ல மாமா, அத்தை எப்படி இருக்காங்க? அவங்களாவது, ஒரு லட்டர் போட்டிருக்கலாம். சரி... சாப்பிட்டிங்களா? நம்ம வீட்டுக்குப் போனீங்களா... அம்மா ஏதும் தந்தாங்களா? இல்லாட்டால், இங்கேயே வாங்கிவரச் சொல்லலாம்''

சங்கரன், அவளைப் பார்த்து முதல் தடவையாகச் சிரித்தான். அவளே போதும் என்பதுபோல், சந்திராவை திருப்தியோடு பார்த்தான். அந்தச் சிரிப்பை, கலைவாணியின் பக்கமும் தாவவிட்டான். அந்தக் கிருமிகள் இல்லை என்பதில் ஒரு திருப்தி. ஆனாலும் அதை நினைத்தால், ரிசல்ட் ஒன்றுதானே என்பதில் இன்னொரு அதிருப்தி...

அசோகன் , சந்திராவைப் பார்த்து விளக்கினான்;

''எப்படி ஒங்க சங்கருக்கு... ஒங்களுக்குத் தெரியாமலே டெஸ்ட் செய்தேன்னு கேட்க மாட்டிங்களா டாக்டர்? போன வாரம் வந்திருந்தார். என்கிட்டயே வந்தார். எய்ட்ஸ் வார்ட்ல சேர்க்கச் சொன்னார். புனிதக் காதலனாய் ஒங்களைப் பார்த்துக்கிட்டே சாகணும் என்கிற ஆசை... நான்தான் அதை நிராசையாக்கி விட்டேன். இன்றைக்கு வாரதாய் நேற்றே லட்டர் வந்தது. நான்தான், ஒங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி கொடுக்கிறதுக்காக

சொல்லலே... போகட்டும்... எனக்கும் கலைவாணிக்கும் இந்த அமைப்புக்காரர்களுக்கும் எப்போ கல்யாணச் சாப்பாடு போடப் போறீங்க...?''

சந்திரா, கலைவாணியைப் பார்த்தாள். அவளோ முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். அசோகன் கல்யாணப் பள்ளுபாடினான்.

'கல்யாணத்தை மெட்ராஸ்லே நடத்துனாலும், இந்தக் கோணச் சத்திரத்திலும் ரிசப்ஷன் வைக்கணும்... நம் சந்திரா ரொம்ப பாப்புலர்... கூட்டம் பயங்கரமாய் இருக்கும். டாக்டர் சந்திராவை இந்த அமைப்பிலே இருந்து பிரிக்கிறீங்க... அதுதான் என் சங்கடம்... ஆனால் வாழ்க்கை பிரிவுகளையும் பிணைப்புக்களையும் கொண்டது. காதலும் ஒரு வகையான ஹெச்.ஐ.வி. கேஸ்தான். அது நிறைவேறலன்னா... உள்ளத்தை கரையான் அரிக்கிற மாதிரி அரிச்சிடுமுன்னு... சொல்றாங்க. அப்போ நான் உத்திரவு வாங்கிக்கவா. டாக்டர் சந்திரா! இங்கயே இருந்தால் எப்படி...? மாப்பிள்ளையை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க.''

அசோகன்... எழுந்தபடியே பேசினான்;

''அப்புறம், மிஸ்டர் சங்கர்! இந்த அமைப்போட ஒரு தூண் ஒங்க சந்திரா. அதனால, இங்கே மாதத்துக்கு ஒரு தடவையாவது, அவங்களை அனுப்பி வைக்கணும். கொஞ்ச நாளைக்குத்தான். அப்புறம், இந்த அமைப்பு தானாகவே எழுந்து நிற்கும். சரி வாறேன்.''

அசோகன் போய்விட்டான்.

சந்திராவுக்கு, கோபங் கோபமாய் வந்தது. எப்படிக் கழித்துக் கட்டப் பார்க்கார். பழகுன தோசம் கூட இல்லையே... பழகுவதையே ஒரு தோசமாய் நினைக்கிறாரா? இந்த சங்கரை கல்யாணம் செய்யச் சொன்னதில் தப்பில்லைதான். ஆனால், எப்படியோ... நான் போனால் சரி என்பது மாதிரியா பேசறது? நான் எதுக்குப் போகணும்... இந்த அசோகன் யார்... எனக்கு உத்தரவு போட..? நீ, நான்னு பேசறவரு, இப்போ நீங்க, நாங்கன்னு பேசுராறே.. எப்படி பேசலாம்...

சந்திரா, தனக்குத்தானே பயந்தாள். தன்னைத் தானே புதிதாய் கண்டு பிடித்தது போல் மலைத்தாள். அசோகன் போன இந்த இரண்டு நிமிடமும், இந்த சங்கரன் பிரிந்திருந்த ஓராண்டுக்கும் மேலான பிரிவுத்துயராய்த் தோன்றுகிறது. இந்தக் கலைவாணி தன்னைத் திரும்பிப் பாராத நான்கு நிமிடம், நான்கு யுகங்களாகத் தோன்றுகிறது.

சங்கரன் அவசரப்படுத்தினான்...

"வீட்டுக்குப் போகலாமா சந்திரா... அப்புறம் நீ சஸ்பெண்டாமே.. கவலைப்படாதே.. மெட்ராஸ்லே மேலிடத்துல பேசிட்டேன். நீ.. ஒரு மன்னிப்பு லெட்டர் எழுதிக் கொடுத்தால் போதுமாம். வேலையில் சேர்த்துக்குவாங்க. அப்புறம், மெட்ராஸ்க்கும் டிரான்ஸ்பர் செய்வாங்க. எல்லாம் பொலிடிக்கல் பிரஷ்ஷர்தான்.. கொஞ்சம் பணமும்தான்..."

சங்கரன் நெஞ்சை நிமிர்த்திக் காட்டிப் பேசியபோது, அதுவரைக்கும், எதையோ எழுதுவது போல் கீழே குனிந்து பாசாங்கு செய்த கலைவாணி, சந்திராவை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். அவளோ, விழிகளைக் கூட உருட்டாமல் சலனமற்றுக் கிடந்தாள். கடந்தகாலத்திற்கும், நிகழ் காலத்திற்கும் இடையே போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருந்தவள், இந்த காலக் கட்டங்களையும் உதறிவிட்டு, இன்னது என்று சொல்ல முடியாத எதிர்காலத்திற்குள் போய்விட்டாள்...

36

டாக்டர் சந்திரா, நோயாளியாய் தவித்தாள்... தனக்குத்தானே, மானசீகமாக மனோதளத்தில், மருந்துகளை எழுதினாள். ஆனாலும், அதைப் படிக்க முடியாமல், அல்லாடினாள். அந்தச் சூழலிலும், அசோகனிடம் யோசனை கேட்கலாமா என்று ஒரு அனிச்சையான சிந்தனை... அந்த சிந்தனை அவளுக்கு லேசாய் சிரிப்பைக் கூட கொடுத்தது... ஆனாலும் கோழியா அல்லது முட்டையா என்ற குழப்பம் நின்றபாடில்லை... இருதலைக் கொள்ளி எறும்பு என்பார்களே, அது எப்படி இருக்கும், எப்படி தவிக்கும் என்பது அவளுக்குத் தெரியாது... ஆனாலும் அந்த எறும்பு, தன்னைப் போல், தவித்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

விழிப்புணர்வு மையத்திலிருந்து, வீட்டுக்கு வந்த சந்திராவையும் சங்கரனையும், அம்மா வீட்டுக்குள் விடாமலேயே, விரட்டினாள்; 'அப்படியே நில்லுங்க... கோயிலுக்கு போயிட்டு வரலாம்...' என்று சொல்லிவிட்டு, உள்பக்கமாக திரும்பி, தட்டு பழத்தோடு வெளிப்பட்டாள்... ''வராமல் வந்த என் அண்ணன் மகன் வந்திருக்கான். சிவன் கோவிலுல ஒரு அர்ச்சனை செய்யணும்... அப்படியே கல்யாணத்திற்கு அய்யர்கிட்ட நாள் குறிச்சுட்டு வரலாம்' என்றாள். அவள் வாயில் நீரூற்றாய் தோன்றிய சிரிப்பு முகமெங்கும் பிரவாகமானது... அம்மாவை ஏறிட்டுப் பார்த்த சந்திரா, அப்படியே பார்த்தபடி நின்றாள்.. அந்த வாஞ்சை, அவளை நெகிழ வைத்தது... கல் பிளந்து காட்டும் வாஞ்சை... அதைப் பார்த்தவுடனேயே அவள் மனம் சங்கரன் பக்கம் தாவியது... அந்தச் சமயம் பார்த்து, ''அத்தே.. நான் டில்லியிலிருந்து வாங்கிட்டு வந்தேன் பாருங்க, ராஜஸ்தான் பட்டு, அத சந்திராவைக் கட்டிக்கிட்டு வரச் சொல்லுங்க'' என்று, அந்தக் காலத்து மணமகன் போல் நாணிப் பேசினான். அந்த நாணத்தோடு, அவன்

நின்றிருக்கலாம்... நிற்கவில்லை... ''பட்டுன்னு வச்சது சரியாத்தான் தோணுது.. கையில இருக்கிற பணத்தை பட்டுப் போகச்செய்யுதே'' என்றான். சந்திரா, அவனை எரிச்சலோடு பார்த்தாள்.

அந்தச் சமயம் பார்த்து ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஒரு ஆயா சேதி கொண்டு வந்தாள்... சஸ்பெண்டாகி இருக்கும் சந்திராவை விசாரிக்க, விசாரணை அதிகாரி, நெல்லையில் இருந்து வந்திருக்காராம்... இஷ்டப்பட்டால் விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ளலாம் என்று டாக்டர் முஸ்தபா சொன்னாராம்... சந்திராவுக்கு, பத்து நாட்களுக்கு முன்பு வந்த குற்றப்பட்டியலும், விசாரணைக்கு வரும்படி வந்த தாக்கீதும் நினைவுக்க வந்தன... அப்போது புறக்கணிக்க நினைத்தவள், இப்போது முசுடன் முஸ்தபாவின் மோசடிகளை, விசாரணை அதிகாரியிடம், ஒப்பிக்க வேண்டும் என்று' தீர்மானித்தாள்... சங்கரன் அவளுக்கு உபதேசித்தான்... குற்றங்களை ஒப்புக் கொள்ளும்படி வாதித்தான். துர்போதனையால் அப்படி நடந்து கொண்டதாக மன்னிப்பு கேட்கச் சொன்னான்... இதனால், சென்னைக்கு அவளை முழு டாக்டராக கொண்டு போகும் தன் பணியில் சிக்கல் இருக்காது என்றான். உடனே சந்திரா வெகுண்டாள்... 'நற்போதனையால்தான் அப்படி நடந்து கொண்டேன்...எப்படி வாதாடணுமுன்னு எனக்குத் தெரியும்'' என்றாள்... அம்மா ''கட்டிக்கப் போறவனை இப்படியா எடுத்தெறிந்து பேசு வறது'' என்ற போது, சந்திராவின் பார்வை சூடானது... அதே சமயம் 'விடுங் கத்தே... இப்படிப் பல தடவை எடுத்தெறிந்து பேசியிருக்காள்; ஆனாலும், இந்த ராட்சசியை' என்னாலே மறக்க முடியலியே, என்று சொல்லிச் சிரித்தான். சங்கரன்; எரிந்து நின்ற சந்திரா மெழுகாய் குழைந்தாள்... தனக்கு வேண்டியவன் சங்கரனே என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு, எங்கேயோ தூக்கி எறிந்த வெள்ளைக் கோட்டை தேடுவதற்காக வீட்டிற்குள் போனாள்...

அந்த சுகாதார நிலையத்திற்கு, டாக்டர் சந்திரா வந்த போது, இரவுக் காவலாளி மட்டுமே இருந்தார். ஏதோ ஒரு அரசாங்க கடனுக்காக, இன்சார்ஜ் டாக்டர் முஸ்தாபாவின் மோவாயை தாங்குவதற்காக முன் கூட்டியே வந்து விட்டார்... சந்திராவைப் பார்த்ததும், ஒப்புக்கு கை தூக்காமல், ஒப்புதலாய் கும்பிட்டுவிட்டு விவரம் சொன்னார்... டாக்டர் முஸ்தாபா, அரைமணி நேரத்திற்கு முன்பே விசாரணை அதிகாரியை கூட்டிக் கொண்டு போய்விட்டாராம்... இவள் வரமாட்டாள் என்று அடித்துச் சொல்லி ஏதோ ஒரு விடுதிக்கு அழைத்துப் போயிருக்கிறாராம்.

''எக்பார்ட்டே என்னமோ ஒரு இழவாமே. அப்படி ஒங்கலாள டிஸ்மிஸ் செய்யப் போறாங்களாம்'', என்று சொல்லிவிட்டு, காவலாளி கண்ணீர் சாட்சியாய் விம்மினார்... அவர் கைகளை எடுத்து, கண்களில் ஒற்றிக்

கொண்ட சந்திரா, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக, தனது பழைய இருக்கையில் உட்காரப் போனாள்... பிறகு, அதன் எதிரே உள்ளே நோயாளிப் பெஞ்சில் உட்கார்ந்தாள்... ஐந்து மணிக்கு வர வேண்டியவள்தான்... சங்கரனின் உபதேசத்தாலும், வெள்ளைக் கோட்டை தேடியதாலும், கால்மணி நேரம் தாமதமாகிவிட்டது. ஆனாலும், விசாரணை அதிகாரி சட்டப்படி ஆறுமணி வரை காத்திருக்க வேண்டும்... அதுதான் சாக்கு என்று போய் விட்டார்... இதோ, இந்த காவலாளிப் பெரியவரை சாட்சியாக வைத்து, மேலதிகாரிக்கு மனுப் போடலாம்... ஆனாலும், பயன் இல்லை... ஒரு முகமூடியை, முகமே அற்றுப் போன இன்னொரு மூடி விசாரிக்கும்... தீர்ப்பளித்துவிட்டு, விசாரிக்கும்... இப்போது இதுவல்ல பிரச்சினை...

டாக்டர் சந்திராவிற்கு, மீண்டும் கோழியா முட்டையா என்ற குழப்பம் வந்தது... அந்தக் குழப்பத்தில் சுயமரியாதை குறைந்தது போல், தன்னை மேலும் கீழுமாகப் பார்த்துக் கொண்டாள்... ஒருத்தி, ஒருவனை நினைத்து விட்டால், அவனை, ஆயுள் வரைக்கும் மறக்கமாட்டாளாம்... இதுதான் தமிழ் பண்பாடாம்... ஆனால் 'சங்கரனிடம் நிலைத்த என் மனம் அசோகனிடம் ஏன் தாவுகிறது... நான் சஞ்சலக்காரியோ... சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நடப்பவளோ... சீ... சீ... நினைக்கவே வெட்கமாக இருக்குதே...''

''இதில் வெட்கப்பட ஏதுமில்லை... சங்கரன் மீது கொண்ட நேயம் உறவின் அடிப்படையிலானது... அவனுக்கு இவள்... இவனுக்கு அவள் என்று சின்ன வயதிலேயே பெரியவர்கள், அவள் அடிமனதில் பதித்த முடிச்சு... இதை வெளிமனம் அவிழ்க்கப் பார்க்கிறது... இதுதான் பிரச்சினை... ஆனால் அசோகனிடம் ஏற்பட்டபிடிப்பு, காலம் கனித்த தத்துவார்த்த நேயம்... காதலிப்பது தெரியாமலேயே காதலித்து நேயம்...

''இருக்கலாம்தான்... ஆனாலும், இந்த சங்கரனை உதறுவது எந்த வகையில் நியாயம்? ஏற்கெனவே, பெருவிரலைப் பிடித்துக் கொண்டு, பாதி மனோ நோயாளியாய் ஆகிப் போனவர்... ஆயிரம் நடந்தாலும், தன்னை மனதார நேசிப்பவர்... அவருக்கு மனைவியாய் இருந்து, ஒரு மருத்துவச்சியாய், அவரது பெருவிரலைப் பிடித்த பிரச்சினையை படிப்படியாய் தீர்க்க வேண்டும்... அதோடு, திருமணம் என்பது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் மட்டும் நடக்கும் உறவல்ல... ஒவ்வொரு திருமணமும், இரு குடும்பங்களுக்கான இணைப்புப் பாலம்... ஆயிரம்தான் இருந்தாலும், அசோகன் அந்நியன்,... அவன் மீது இவள்தான் ஒரு தலைராகம் பாடுகிறாள். அதோடு அம்மா முக்கியம்... தாய்மாமா மகன் சங்கரன்தான், அம்மாவை மாமியாராக வெறுத்தாலும், அப்பாக் கூடப் பிறந்த அத்தையாக அரவணைப்பார்...

''சரிதாண்டி.... சங்கரனை நல்லவனாக்குவதற்காக, உனக்கு தோன்றாத் துணையாய் நிற்கும் அசோகனை அந்நியமாக்குவதா... அவர் மீது நம்பிக்கை இழப்பதா... திருமணம், இரு குடும்பத்தின் இணைப்பு என்றால், அசோகனோடு நடக்கும் திருமணம், பல குடும்பங்களை இணைக்கும் சமூகப் பாலம்... கோழியான அசோகனா... முட்டையான சங்கரனா...

பேசாமல் திருமணமே செய்து கொள்ளாமல் இருக்கலாம்... எப்படி முடியும்... ஆரம்பத்தில் வீறாப்பாய் திருமணம் செய்யாமல், கடைசி காலத்தில் அவஸ்தைப்படும் எத்தனை பெண்களைப் பார்த்தாச்சு... கழுதை வயசாகிறது... இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்... கலைவாணியோடு கடைசி வரைக்கும் இருந்து கழுவாய் தேட வேண்டியது அவசியம்... ஆனாலும் அம்மா,... அவளை வளர்த்து - வார்த்தெடுத்த தாய் மாமா, அவர்களது நம்பிக்கையை பொய்ப்பிக்கலாமா... அதே சமயம் தாட்சண்யம் கருதி, திருமணம் செய்வது வெறுமணம் அல்லவோ... என்ன செய்யலாம்...

எத்தனையோ பேர், தன் தலையை உருட்டிய போதும், அதை தாங்கிக் கொண்ட சந்திரா, இப்போது தன் தலையைத் தானே, உருட்டிக் கொண்டாள்... அனுதாபத்தை காதலாக அனுமானிக்க கூடாது... அதே போல், மரியாதை உணர்வை, காதலாக மதிப்பிடக் கூடாது... காதலை, கண்களில் தேடாமல், இதயத்தில் தேட வேண்டும்... ஒருவருக்கு, ஒரு இதயம்தான் உண்டு... காதலைப் பொறுத்த அளவில், அதில் பைபாஸ் சர்ஜரி கூடாது....

டாக்டர். சந்திரா, வெறும் சந்திராவாய் சிந்தித்து சிந்தித்து, சிந்தனை அற்றபோது, மருத்துவமனை தொலைபேசி அலறியது... நமக்கேன் வம்பு என்பது போல் சந்திரா சும்மாவே இருந்தாள்... ஆனாலும், விசாரணை அதிகாரி, மனச்சாட்சி போதையில், தொலைபேசியில், தான் வந்திருப்பதை உறுதி செய்ய நினைத்திருக்கலாம்...

சந்திரா, டெலிபோனை எடுத்தாள்...

'சங்கரன் இருக்காரா'...

'இல்லை நான் அவரோட அத்தைப்பொண்ணு''

''சந்திரா பேசுறேன்... நீங்க யாரு...''

''என்ன வேணும்?''

'நான் சென்னையிலிருந்து பேசுறேன்... சங்கரோட, கம்பெனி சகா;

பெயர் கார்மேகம்... அவனோட, நான், இப்போ பேசியாகணும்; அவசரத்துக்காக இந்த நம்பரைக் கொடுத்தான்... பாவிப்பயல் எங்கே போயிட்டான்...''

'எங்கேயும் போகல கோயிலுக்குத் தான் போயிருக்கார்... திரும்புறதுக்கு ஒரு மணி நேரம் ஆகும்... ஒங்க டெலிபோன் நம்பரைக் கொடுங்க... அவரைப் பேசச் சொல்றேன்... இஷ்டப்பட்டால், என்கிட்ட சேதி சொல்லலாம்...''

''முக்கியமான சமாச்சாரம்... அவன்கிட்ட மட்டுமே பேச வேண்டிய விவகாரம்...''

''ஒங்கள விட, அவர் மேல, எனக்கு அதிக அக்கரை உண்டு... ஆபத்துக்கு தோசமில்ல. சொல்லுங்க...''

''சொல்றேன் மேடம்... மனோகருக்கு எய்ட்ஸ் வந்துருக்கிறதாய், அமெரிக்க ஏர்போர்ட்டுக்கு, சங்கரன்தான், தகவல் கொடுத்ததானாம். கம்பெனி விசாரணையில் தெரிய வந்திருக்குதாம்... இதனால, கம்பெனி, சங்கரனை சஸ்பெண்ட் செய்திருக்கு... ஆர்டர் கையெழுத்து ஆகிட்டு... அது டெஸ்பாட்ச் ஆகுமுன்னால, அவனை ஏதாவது செய்யச் சொல்லுங்க''

டாக்டர் சந்திராவுக்கு மனம் லேசானது; ஆனால் தலை கனத்தது...

37

திருச்சி வானொலி நிலையத்தின் பகல் இரண்டு பத்து மணி செய்திகள். புதுடில்லியில் கூடியிருக்கும் என்.டி.திவாரி, அர்ஜுன்சிங் ஆகியோரின் போட்டிக் காங்கிரஸ் கூட்டம் பற்றி தெரிந்து கொள்ள, ஆங்காங்கே சின்னச் சின்னக் கூட்டங்கள். ஆனாலும், அதைப் பற்றி ஒரு வார்த்தை இல்லை. மாநிலச் செய்திகள் என்பதால், சௌகரியமாய்ப் போயிற்று- வானொலிக்கு.

எஸ்தர், இரண்டு கைகளிலும் மனோகரை ஏந்திக் கொண்டு, கோணச்சத்திரம் ரயில் நிலையத்திற்கு வெளியே வந்தாள். அவளுக்கு, அவன் பெரிய சுமையாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில், எழுபது கிலோவாக இருந்தவன், இப்போது இருபத்தைந்தாக சுருங்கிக் கிடந்தான். ஆனாலும் அவன் கண்களில் மட்டும் ஒரு பிரகாசம். அந்த இடத்தை அடையாளம் கண்டது போன்ற தலையாட்டல்.

எஸ்தர், சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் தோள் வழியாய் தொங்கிய ஜோல்னாப் பை, அவளின் முட்டிக்கால்களின் முன்னால் முட்டுக்கட்டை யானது. உடனே அவள், முதுகில் உட்காரும் காகங்களை விரட்ட, மாடு ஒரு வளைவு வளையுமே, அப்படி லாவகமாய் வளைந்தாள். ஜோல்னாப்பை, பக்கவாட்டில் போனது...

அந்த நிலையிலும், மனோகரின் கண்கள் அங்குமிங்குமாய் பிடிப்போடு பார்த்தன. அந்த இடத்தில் ஏற்பட்ட மாற்றங்களைள, அதிசயித்துப் பார்த்தன. அசல் பொட்டல் மேடாய் இருந்த இதே இடம், இப்போது முடிசூடிக் கொண்டிருந்தது. அதுவும் சுருட்டை முடியாய்... இதே ரயில் நிலையத்திற்கு முன்னால் நின்ற பதினைந்துக்கும் குறையாத வில்வண்டிகள் இரண்டாய்க் குறைந்தன. ஆனாலும், அவை விசாலமாய் நின்ற இடத்தில், நான்கைந்து

வெள்ளை நிறக்கார்கள்... அத்தனையும் நாசூக்கான வாடகைக்கார்கள்... நாசூக்கு இல்லாத மீட்டர்களை காட்டிய கறுப்புக்கார்கள்... நான்கைந்து ஆட்டோக்கள்... பக்கத்திலேயே இரண்டு பெரிய வேன்கள்... விதவிதமான ஆட்கள் ஏறுவதைப் பார்த்தால், அந்த வேன் அநேகமாய் ஏழைகளின் வாடகை வாகனமாக இருக்க வேண்டும். தலைக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து, ஏறுகிறவர்களை ஊர் ஊராய் இறக்கிவிடும் சாதனமாக இயங்க வேண்டும். இதன் அருகேயே லவகுசா மாதிரி ஒரு ஜெராக்ஸ், ஒரு பி.சி.ஓ. நிலையம். ஜெராக்ஸ் கட்டிடம் வெள்ளை கண்ணாடியாலும், பொது தொலைபேசி மையம் உள்ளே எதையும் காட்டாத பச்சைக் கண்ணாடி யாலும் பளபளத்தன. இவற்றின் அருகேயே, ராமலட்சுமணர் போல் ஆடியோ வீடியோ அலங்காரக் கூடம்... அங்கே ஒரு 'கானாப்' பாட்டு. தொலைவில் ஒலைகட்டியிருந்த பள்ளிக்கூட இடத்தில், இப்போது இரண்டடுக்கு மாடிக் கட்டிடம்... நாற்றம் பிடித்த ஒரு குட்டை நிரப்பப்பட்டு, அதில் கம்ப்யூட்டர் பயிற்சிப் பள்ளியாம். அதன் சுவரில் எய்ட்ஸ் விழிப்புணர்வு ஒட்டம்... துவக்கி வைப்பவர் மாவட்ட சுகாதார அதிகாரி.

மனோகர், தனக்குள்ளயே பேசிக் கொண்டான்.

'நாடு முன்னேறிவிட்டது. ஆனால், நாட்டு மக்கள்தான் முன்னேறல. கிராமத்துக்கு விஞ்ஞானம் வந்து விட்டது. கூடவே எய்ட்ஸ்ஸும் வந்துவிட்டது. ஆனாலும் உற்றார் உறவினரைப் போல் அல்லாமல், இந்த எய்ட்ஸ் கிருமிகள் நல்லவை. இந்த வகை நோயாளி இறக்கும் போது, அவனோடு கூடவே இறந்து போகிறவை... உடன் பிறப்புக்களைவிட, ஒரு படி உயர்ந்து போன உடன் இறப்புக்கள்''

மனோகர், வெறுமையாகத் தலையாட்டியபோது, அவனைச் சுமந்து நின்ற எஸ்தர் வாகனங்களை நோட்டமிட்டாள். இதற்குள், அவர்கள் இருவரையும் கும்பல் கும்பலாய்ப் பார்த்தார்கள். சிலர், அவள் கையில் கிடப்பவனை அடையாளம் கண்டது போல், ஒரு காலாட்சபமே, நடத்தினார்கள். மற்றவர்கள், அந்த எலும்பு பிரேமை - படம் சுருங்கிய சட்டத்தை அறுவெறுப்பாகவும், அனுதாபத்தோடும் பார்த்தார்கள். கழுத்துப் புண்ணில் நீர்க்கசிவு.. காதோரம் செம்படை... ரத்தத் திட்டுக்களால்ய்த் தெரிந்த பைஜாமா... லேசாய் ஊதிப் போன வயிறு.. எம்மாடி... மனுஷன் இப்படில்லாம் ஆக முடியுமா?

எஸ்தர் நடந்த போது, மனிதாபிமானிகள் கண்களை மூடிக் கொண்டார்கள். மற்றவர்கள் விலகிக் கொண்டார்கள்... அவள், ஒரு ஆட்டோவைப் பார்த்து நகர்ந்தபொழுது, அது பயந்து போய், ஓடி வேறு இடத்தில் நின்றது. உடனே அவள், ஒரு வெள்ளைக்காரைப் பார்த்தபோது வெளியே நின்ற டிரைவர் சிறிது விலகிப் போய் நின்று, அவளை முறைத்தார்.

வேன் பக்கம் போனாலோ, அதில் ஏறியவர்களில் ஒரு சிலர் தவிர, எஞ்சியவர்கள் இறங்கப் போனார்கள். நடத்துனர் பையன் கத்தினான். 'இறங்காதிய... இறங்காதிய... அந்த ஆளை ஏத்த மாட்டோம்' என்றான். இறங்கப் போனவர்கள், இருக்கையில் உட்கார்ந்தார்கள். அதுவும், 'அய்யோ பாவம்' போட்டபடி...

எஸ்தர், மனோகரை... ஒரு குலுக்கி, குலுக்கி மார்போடு நெருக்கமாய் சாத்தியபடியே, திடுக்கிட்டாள். நல்லவேளையாக, இவர்களைப் போல், ரயில் பயணிகள் புறக்கணிக்கவில்லை. அது ரிசர்வ் செய்யப்படாத பெட்டி என்பது ஒரு காரணம். இவனுக்கு எய்ட்ஸ் இருப்பது தெரியாதது இன்னொரு காரணம். ஒரு வேளை தெரிந்திருந்தால், நடுக்காட்டில் சங்கிலியை இழுத்துக் கூட, ரயிலை நிறுத்தி இருக்கலாம்

எஸ்தர், என்ன செய்வது என்று புரியாமல் நின்றாள். இப்போது கைகூட வலித்தது. மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருப்பதாக மனோகர் கூறிய அவன் கிராமத்திற்கு நடந்தே போகலாமா என்ற வேகம். அந்த வாகனங்களையும், வாகனக்காரர்களையும் விட்டு விலகி நின்றாள். பிறகு, அருகே உள்ள ஒரு கப்பிச்சாலை பக்கமாய்ப் போனாள். அந்தப் பக்கமாய், ஒரு வண்டி வந்து கொண்டிருந்தது. 'பைதா' எனப்படும் மரச்சக்கரங்களைக் கொண்ட கட்டை வண்டி. கமிஷன் மண்டியில், பல்லாரி மூட்டைகளையும், மல்லிக்குழைகளையும், தக்காளி கூடைகளையும் இறக்கிவிட்டு வரும் வண்டியாக இருக்கலாம்...

எஸ்தர், கெஞ்சினாள்...

''பெரியவரே...! எவ்வளவு பணமுன்னாலும் தாரேன். இவரை வெள்ளையன்பட்டி வரைக்கும் கொண்டு போகணும்...''

''சரி வண்டில ஏத்து.. அதான் சொல்லிட்டேனே... பிறகு ஏன் அழுகிறே?''

''அழுது அழுது கண்ணீர்லே கண்ணே கரைஞ்சிப் போச்சு... எதுக்காக அழுவுறேன்னு எனக்கேத் தெரியல. ஒங்களை கையெடுத்துக் கும்பிடணும் போல இருக்குது.''

''இதுல என்னதாயி இருக்குது... இப்படி எனக்கே ஆயிட்டால், என்னைத் தூக்கிப் போடவும், ஆண்டவன் ரெண்டு பேரை அனுப்பணும்பாரு... இவர் யாரு...?''

''வெள்ளையன்பட்டி மனோகர்....''

''சுப்பையா முதலாளியோட மருமகனா..? அடக்கடவுளே...''

வண்டிக்காரர், எஸ்தர் ஏந்திய மனோகரை, தன் வண்டியில் கிடத்தினார். தக்காளிக் கூடைகளை வைப்பதற்காக வைக்கோல் பரப்பப்பட்டு, அதற்குமேல் ஓலைப்பாய்கள் விரிக்கப்பட்டிருந்த மெத்தை போன்ற மேல் பரப்பு.

வண்டிச்சக்கரம், காலச்சக்கரம் போல் சுழன்றது.

வண்டிக்காரர், இடுப்புக்குமேல் எதுவும் இல்லாமல் இருந்தார். அறுபது வயது இருக்கலாம். இன்னும் துருப்பிடிக்காத இரும்பு. நொந்து போய் நடந்த கிழட்டுமாடுகளை, 'இம்மா இம்மா' என்று செல்லமாய் அதட்டினார். மனோகரைப் பின்னால் திரும்பப் பார்த்தார். மனமும் கேட்கவில்லை.. கண்களும் கேட்கவில்லை. பல வருஷங்களுக்கு முன்னால... எப்போன்னு சட்டுன்னு வரமாட்டக்கு... எல்லா 'ஊர்பயலுவளுக்கும்' செய்யுறது மாதிரி, இவனைப் பார்த்ததும், தோளில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டினார். ஆனால் இந்தப் பையன், 'ஊர்லே மனுஷன் இருக்கானோ... இல்லியோ... நீங்க மனுஷன்' என்று சொல்லி,. இடுப்பில் கிட ந்த துண்டை எடுத்து தோளில் போட்டான். அதற்கு பிறகு இவர் துண்டு போடுவதே இல்லை... போட்டால்தானே ஊரானுக்கு தோள்துண்டு, இடுப்பு பெல்டாகும்... இது மட்டுமா? எப்போ பார்த்தாலும் 'மூக்கையா.. மூக்கையா...! உங்க கடைக்குட்டிப்பையன் நல்ல பையன்... நல்லா படிக்க வையுங்க. அவன் வேலைக்கு நானாச்சு'ன்னு சொன்ன பையன். ஏதோ ரகசியமான நோயின்னு பேசிக்கிட்டாங்க. பாவம், அப்பன் தவசிமுத்து வோட பாவ காரியங்கள், மகனை முடக்கி போட்டுட்டு... பிள்ளையோட புண்ணியத்தையும் மீறி, அப்பனோட பாவம் அவ்வளவு பெரிசா இருக்குது.''

வெயிலில் மனோகர் தவித்தான். கூடாரம் இல்லாத கட்டை வண்டி... இருபக்கமும், பூவரசு கம்புகளால்தான் பொருத்தி வைக்கப்பட் டிருந்தன. ஒரு சேலையை மட்டும் மேலே போட்டால், அதுவே பாடை...

உள்பாடி போட்டிருந்த எஸ்தர், அவன் மேல் போர்த்துவதற்காக மானத்தைப் பற்றிக் கவலைப்படாமல், சட்டையைக் கூட கழட்டப் போனாள். அதற்குள், மூக்கையா பார்த்து விட்டார். அவரும் கோவணம் கட்டுவதில் இருந்து, டவுசர் அளவிற்கு முன்னேறியவர். வேட்டியை உருவி எஸ்தரிடம் கொடுத்தார்... 'நல்லா பரப்பி போடு தாயி' என்றார்.

மூக்கையா, 'முடியலியே' என்பது மாதிரி திரும்பிப் பார்த்த மாடுகளை, நோட்டமிட்டார். அதற்குள், அந்த மாடுகள் மூக்கணாங் கயிற்றைப் பிடித்து இழுக்க வேண்டிய அவசியம் இல்லாமலே நின்றன. அவர் யோசித்தார். ஒரு வேளை, செடி செத்தை பாம்பு இருப்பதால் இப்படி பம்மி நிற்குதா என்று

பார்த்தார். அப்படியும் தெரியவில்லை. சாட்டைக்கம்பால், ஒரு சின்ன விளாசல். ஓடிய மாடுகள் ஒரு இடத்தில் போய், மீண்டும் சத்தியாக்கிரகம் செய்தன. அவர், மனோகர் பக்கமாய் திரும்பினார். லேசான வாடை... மாடு மூக்கு, அவர் மனித மூக்கைப் போல் மரத்துப் போகவில்லை.

மூக்கையா, செல்லப்பிள்ளைகளான அந்த மாடுகளை, முதல் தடவையாக, அவைகளுக்கு வலி கொடுக்கும் அளவிற்கு அடித்தார். அவர் கையில் பிடித்த சாட்டைக் கம்பு, பாம்பு போல் சுருண்டும் நீண்டும் சீறிப் பாய்ந்தது. மாடுகளுக்கும் ரோஷம். 'நீயே மூக்கணாங் கயிற்றை சுண்டி இழுக்கப் போகிறே பார்' என்பது மாதிரி ஓடின...

அந்தக் கட்டைவண்டி, இப்போது ஓங்கிப் பெருத்த அந்த பிரசவ மருத்துவமனை சாலை வழியாக, வெள்ளையன் பட்டியின் விலாப்புறத் திற்கு வந்தது. மருத்துவமனை வந்ததாலோ என்னமோ, சில நஞ்சைப் பகுதிகள் கூட பிளாட்டுக்களாக, வெள்ளைக் கற்களைக் காட்டின. சில, குட்டிப் பங்களாக்களாய் வடிவெடுத்திருந்தன; எஸ்தர் யோசித்தாள். மனோ சொன்னானே... கலைவாணி கருத்தரித்த மருத்துவமனை என்று. அது இதுதானோ? இங்கேயே, இவனை சேர்க்கலாமா? மொதல்ல இவன் வீட்டுக்குப் போகலாம்...

இந்த வண்டி, பள்ளிக்கூட மைதானம் வழியாய்ப் போகவில்லை. சுற்றிலும் மதில் மாதிரியான காம்பவுண்ட். போனால் போகிறது என்பது போல், போட்டுவைத்திருந்த, அதன் பக்கத்து வண்டித்தடம் வழியாகப் போனது. நார்க் கட்டிலில், கம்பளிப் போர்வைக்கு மேல் கிடந்த 'லாரிக்கார' மாரியப்பனால் ஏறிட்டுக் கூட பார்க்க முடியவில்லை. கண்கள் இருந்த இடத்தில் குழிகள்... கைகால்கள் இருந்த இடத்தில் வெறும் குச்சிகள். அவன் பக்கமாய் நின்ற வாடாப்பூதான், அந்த வண்டியைப் பார்த்தாள். உடனே 'என் ராசாவே ராசாதி ராசாவே' என்று புலம்பிப்புலம்பி, தலையில் அடித்தபடியே அந்த வண்டியைப் பார்த்து ஓடினாள். அவளை, மாரியப்பன் திட்டப் போனான். உதடுகளை அசைக்கவே முடியவில்லை.. பின்னால் துரத்தப் போனான்.... கால்கள் நகரவில்லை... ஆனாலும் அசைந்தான்.. அப்படி அசைய அசைய முதுகுக் கொப்புளங்கள் வலி கொடுத்தன. முகப்புண்கள், நச்சரித்தன... பிடறிப் படைகள் பிய்த்தெடுத்தன...

அந்த வண்டிக்குப் பின்னால், வாடாப்பூ ஓடிக் கொண்டே இருந்தாள்... எஸ்தரால் யூகிக்க முடிந்தது. இவள் வாடாப்பூவாக இருப்பாள் அல்லது தேனம்மாவாக இருப்பாள்.

அந்த வண்டியை, ஊராரில் பலர் முகம் சுழித்துப் பார்த்தார்கள். சிலர் இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடப் போவதுபோல், அதன் பின்னால் ஓடிக்

கொண்டிருந்தார்கள். காசு போட்டு சீட்டாடிக் கொண்டிருந்த சுப்பிரமணியன், சீட்டுக்கட்டை போட்டுவிட்டு, விளையாட்டு சகாக்களை அந்த வண்டியைக் காட்டி உசுப்பிக் கொண்டிருந்தான். அந்த வண்டி அங்குமிங்குமாய் புரண்டு, ஒரு 'மூன்று பத்தி' வீட்டின் முன்னால் போன போது, ஜன்னல் வழியாய் வெளியே பார்த்த ஆனந்தி, கதவைத் திறந்து கொண்டு, மேடை போல் இருந்த திண்ணைக்கு வந்தாள். இரண்டு பிள்ளைகளை இரண்டிரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே பறி கொடுத்தவள்.

இப்போதும் உண்டாகி இருக்கிறாள்; ஆனாலும் கர்ப்ப கால வாளிப்பிற்கு பதிலாக முகம் கூம்பி இருந்தது. தோள் எலும்புகள் துருத்தி நின்றன. அவளால், கணவனை ஏமாற்ற முடிந்தது. ஆனால், தன்னை ஏமாற்ற முடியவில்லை... எப்போதோ தெரிந்து போன விஷயம். ஒரு தடவையில் வராது என்று பல தடவை நினைத்தவள்தான். இப்போது உள்ளுறுப்புக்கள் தடுமாறுவதையும், தடம் மாறுவதையும் பார்த்துப் புரிந்து கொண்டாள். ஆகையால், மனோகரைப் பார்த்ததும், அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது. திண்ணையில் நின்று, அவளைப் போலவே நின்ற பெண்களைப் பார்த்து ஓலமிட்டாள்...

''இந்தப் பாவியால.. இந்த ஊர் என்ன பாடுபடப் போகுதோ...? இவன், இன்னும் எத்தனை பேரை சாகடிக்கப் போறானோ...? இந்த ஊர் முழுசையும் சாகடிக்காமல், இவன் சாகமாட்டான்...''

அக்கம் பக்கத்துப் பெண்கள், பயந்து போனார்கள். வெளியூருக்குப் போய்விட்டாலும், இன்னும் ஊர் அபிமானத்தை விடாத ஆனந்தியைப் பார்த்து வியந்து போனார்கள். வீடுகளுக்குள் மொச்சைக் கொட்டை சீனிக்கிழங்கு வகையறாக்களை நொறுக்கிக் கொண்டிருந்த ஆம்பளைங்களின் கொம்புசீவ, உள்ளே ஓடிப் போனார்கள்.

அந்த வண்டி, கலைவாணியின் வீட்டுக்கு முன்னால் போன போது, தற்செயலாய் வெளியே வந்த சுப்பையா, அவனைக் கோபங் கோபமாகத் தான் பார்த்தார். ஆனால், பார்க்க பார்க்க, கண்கள் பனித்தன. எவனும் தன்னை வேண்டுமுன்னு அழிப்பானா.. என்ன சந்தர்ப்பமோ? என்ன இழவோ? மனோகர், அவரைப் பார்த்து வாயாட்டினான். கலைவாணி, எப்படி இருக்காள் என்று கேட்பது போல்...

மூக்கையா, அந்த வண்டி, தவசிமுத்துவின் வீட்டுக்கு முன்னால் போனபோது, மூக்கணாங் கயிற்றைப் பிடித்தார். எஸ்தரை பொருள்படப் பார்த்த போது, அவள் கீழே குதித்தாள். மனோகரை மெள்ள இழுத்து இழுத்து, மீண்டும் கைகளில் ஏந்திக் கொண்டு, அந்த வீட்டு வாசல் பக்கம் நடந்தாள்.

அந்த வண்டியை அங்குமிங்குமாய்ச் சூழ்ந்த கூட்டம் சிறிது சிதறியது. தாய்மார்களோ, தத்தம் பிள்ளைகளை பின் பக்கமாய் இழுத்தார்கள், ஆண்களும் பெண்களுமாய் நின்ற கூட்டத்தைப் பார்த்துவிட்டு, மாடுகள் மிரண்டன. மூக்கையாவிற்கு அந்த நிலையில் அங்கிருந்து போக மனமில்லை.

அதற்குள், தவசிமுத்து வாசலில் வந்து கதவாய் நின்றார். மனோகரைப் பார்த்ததும், அவர் சிறிது ஆடிப் போனது உண்மைதான். ஆனாலும், அந்த இரண்டு லட்சம் ரூபாய் கிடைக்காமல் போனதையும், கலைவாணியின் நகைகளைக் கைப்பற்ற முடியாமல் போனதையும் மனதில் வலிந்து வரவழைத்தார். ஆடிப் போன மனம், இறுகிப் போனது... கல்லாகி, இரும்பானது...

''இவனை எதுக்குடி... இங்கே கொண்டு வந்தே? ஒன்னத்தாண்டி''

தாய்க்காரியான சீதாலட்சுமி, கணவன் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள். மகனை பார்த்துவிட்டு, வாசல் தாண்டி அங்கிருந்தே பாயப் போனாள். 'நான் பெத்த மவனே ஏன் பெத்தோமுன்னு சொல்லும்படியா ஆயிட்டியேடா..? என் சீமைத்துரையே, செவ்வரளிப்பூவே' என்று ஓலமிட்டாள். உடனே தவசிமுத்து, அவளைப்பிடித்து வீட்டுக்குள் தள்ளிக் கதவை சாத்தினார். வெளித் தாழ்ப்பாளான இரும்புக் கம்பியை குறுக்காய்ப் போட்டார். அப்படியும் சீதாலட்சுமி, ஜன்னல் பக்கமாய் வந்தாள்... பெற்ற வயிற்றை மாறி மாறி அடித்தாள். பாலூட்டிய மார்பகத்தை கைகளால் குத்தினாள். ஜன்னல் கம்பிகளில் தலையை மோதினாள். எஸ்தரின் கைகளில் முடங்கிக்கிடந்த மனோகர், அம்மாவைப் பார்த்து லேசாய் கையைத் தூக்கினான். தூக்கிய வேகத்திலேயே கீழே போட்டான். துக்கச்சுமையைவிட, பெரிய சுமை.. இதைப் பார்த்த சீதாலட்சுமியின் வாய் பேசாமல், அப்படியே அகலப்பட்டு நின்றது. மாரடித்த கரங்கள் வளைவாகவே நின்றன. அம்மாவின் பக்கத்தில் வாயும் வயிறுமாக நின்ற மீரா, ஒப்பாரி போட்டாள். இதனால், கூட்டத்தில் நின்ற ஒரு சிலர், தவசிமுத்துவை கீழே தள்ளிப் போட்டுவிட்டு, கதவைத் திறந்து வீட்டுக்குள் ஓடினார்கள். வெளியே நின்றவர்கள், 'தண்ணிதெளிடா'' ''சுக்கு வச்சு ஊதுங்கடா'' என்று ஆளுக்குள் ஆள் உபதேசம் செய்தார்கள்.

தவசிமுத்து, மனைவியின் நிலைக்கு மகனே காரணம் என்றும், அவனை இங்கே கொண்டு வந்தவளும் ஒரு உடனடிக் காரணம் என்றும் கற்பித்துக் கொண்டு கத்தினார். ''எதுக்குடி இந்தப்பயல, இங்கே கொண்டு வந்தே...? இவனை உறிஞ்சுறது வரைக்கும் உறிஞ்சி, சக்கையாக்கிட்டு... கையிலே இருந்த இரண்டு லட்சமும், பேங்கிலே இருந்த எழுபது பவுன் நகையும் தீர்ந்த

பிறகு, எல்லாத்தையும் விழுங்கிட்டு... எதுவும் இல்லாமப் போன பிறகு... இங்க வாரதுக்கு, இது என்ன சத்திரம் சாவடியா?''

எஸ்தர், கூட்டத்தினரைப் பார்த்தாள். பெரும்பாலோர், அப்பன்காரனை ஆட்சேபிக்காமல், நிற்பதைப் பார்த்தாள். இப்போது அவளே உச்சக்கட்ட சத்தத்தில் பேசினாள்...

''யோவ் பெரிசு... ஆம்புளையாச்சேன்னு பார்க்கேன்... நீயெல்லாம் ஒரு அப்பனாய்யா...? இந்த மனோகர்கிட்டே எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். ஊரு வாணான்டா... வாணான்டான்னு ஒப்பாரி போட்டே சொன்னேன். கேட்டாத்தானே...? அம்மா மடில தலை வைக்க முடியாட்டியும், கால் மாட்லாவது சாகணுமுன்னு பினாத்துனான். ஆத்தாக்காரி, காலடிக்குப் போகும் முன்னாடியே, நீயே சாகடிச்சிடுவே போலுகே''

''செருப்பு பிஞ்சுடுண்டி...''

''பிய்யட்டும்... வாங்கிக்கிறேன். இந்த மனோ நல்லபடியா வாழத்தான் முடியல. இவனை நல்லபடியா சாகவாவது விடுய்யா. அதிக நாள் காத்திருக்க வாணாய்யா... ரெண்டு நாளுல போயிடுவான். திரும்பி வராமப் போயிடுவான்... டாக்டரே சொல்லிட்டார்''

''அதெல்லாம் முடியாது... எந்த வழியாய் வந்தியோ... அந்த வழியாப் போ... இவனோட போ...''

சீதாலட்சுமி, மீண்டும் ஜன்னல் பக்கம் வந்து, சுமந்து பெற்ற பிள்ளையை, இன்னொரு தடவை சுமக்கப் போவது போல் கைகளை வெளியே விட்டு ஆட்டினாள். பக்கவாட்டில் தெரிந்த தவசிமுத்து பக்கமாய், தலையைத் திருப்பி முடியாமல், கண்களைக் கோணலாக்கியபடியே கத்தினாள்.

''இந்தா பாரும்! மரியாதையா என் மவன... என் செல்வத்த... வீட்டுக்குள்ள தூக்கிட்டு வாரும்... நான் பெத்த பிள்ளைக்கு என் சீமைத்துரைக்கு... இல்லாத வீடு, எவனுக்கும் இல்ல... என் மவன், எங்கே பிறந்தானோ, அங்கேயே சாகட்டும்... அய்யோ! நான் தவமிருந்து பெத்த மவனே...! நீ சாகப் போறியா...? செத்துத்தான் போவியா...''

சீதாலட்சுமி புலம்புவதைப் பார்த்து, கூட்டம் கையைப் பிசைந்தது. ஆனாலும், பட்டைதாரியாய் போன பட்டாதாரி சுப்பிரமணியன், பழைய ராமசுப்பு, ஆனந்தியின் தந்தை, இறந்ததுபோக எஞ்சியிருக்கும் உள்ளூர் விவேகிகள் ஆகியோர், ஆங்காங்கே செம்மறியாடாய் நின்றவர்களை சண்டைக்கிடாவாய் மாற்றும் வகையில் காதுகளில் ஓதினார்கள். ''இவன்,

இங்கே இருந்தால், ஊரே ஒழிஞ்சுடும். இந்த நோயி அப்படிப்பட்ட நோய்... அவன் மூச்சுப்பட்டாலே முடிஞ்சுடும்.. அவன் உடம்பிலே படுற காத்து... நம்ம உடம்பிலே பட்டாலே போதும்... ஒரு வழியாயிடுவோம்''

உள்ளூர் பெரிய தலைகள், ஒன்றாய்க் கூடின. பச்சாதாபமாக தலைகளை ஆட்டினாலும், அவற்றின் கண்கள் பயங்கரமாயின. இப்போது லேசாய் தடுமாறி நின்ற தவசிமுத்துவைப் பார்த்து, பழைய கூட்டாளியான ராமசுப்பு தீர்ப்பளித்தார்.

''ஒம்ம பையன்... இந்த ஊர்ல இருக்க முடியாது''

ஜன்னல் கம்பிகள் வழியாய் ஒரு சத்தம்

''எங்க வீட்டுல இருந்தா ஒனக்கென்ன...? என் பிள்ளை என் வீட்டுலதான் இருப்பான்... நீ எதுக்கு சம்மன் இல்லாம ஆசராகரே?''

''ஒன் வீடும், இந்த ஊர்லேதான் இருக்குது. தவசிமுத்து.. ஒன்னைத்தான்... ஊரைப் பகைக்கின் வேரோடு கெடுமுன்னு ஒன் வீட்டுக்காரிக்கிட்டே சொல்லு.''

''சாமிகளா... தர்மபிரபுக்களா... என் பிள்ளையை என்கிட்ட இருந்து பிரிச்சிடாதிய... ஒங்களுக்கு கோடிப்புண்ணியம்... அய்யாமாருங்களா... ரெண்டு நாளுதான்னு... அவள் சொல்லிட்டாள். யாரு பெத்த பெண்ணோ...? அவளே கலங்கும் போது... ஒங்க மனசு கல்லாப் போகலாமா? அய்யாமாரே... அம்மாமாரே... ஒங்களத்தான்...''

சீதாலட்சுமி, ஜன்னல் கம்பிகள் வழியாய் கண்களால் கெஞ்சினாள். கையெடுத்துக் கும்பிட்டாள். கூட்டத்தில் பாதிப்பேர் மனம் கரைந்தது. வாடாப்பூவும், ஒவ்வொருவர் மோவாயாய்ப் பிடித்துக் கெஞ்சினாள்.

இயலாமையில் தவித்த கூட்டத்தில் ஒருத்தன், இன்னும் வண்டியைத் திருப்பாமல் நின்ற மூக்கையா மீது பாய்ந்தான்.

''எல்லாம்... இந்த மூக்கையாவால வந்த வினை. ஒன்னை யாருப்பா வண்டில ஏத்திக்கிட்டு வரச்சொன்னது...? கடைசியிலே ஒன் சாதிப்புத்தியக் காட்டிட்டே... பாரு... காலனி புத்திய காட்டிட்டேபாரு''

மூக்கையா, தன்னை அறியாமலே வேட்டியைத் தார்பாய்த்துக் கட்டினார். பிறகு விஷயம் புரிந்து, அதை இழுத்துப் போட்டுக் கொண்டே பதிலடி கொடுத்தார்.

''இந்தாபாரும்... எதைப் பற்றி பேசினாலும், சாதியப் பத்தி

பேசாதேயும்... அப்புறம் எங்க சின்ன பயல்கள எங்களால கட்டுப்படுத்த முடியாது... அதோட, சாதிகளப் பத்தி பஞ்சாயத்து பேசினால், ஒங்க சாதிக்குத்தான் அசிங்கம்''

''இவனுக்கு திமிரைப்பாரேன்''

''ஏய்.. வெண்டைக்காய் வியாபாரி! சும்மாக்கிட... இப்பத்தான் கூலித்தகராறும், குத்தகை தகராறும் தீர்ந்திருக்கு... உனக்கு நிலமில்ல என்கிறதால நீ பாட்டுக்குப் பேசப்படாது''

''சரிப்பா... மூக்கையாவை விடு... இந்த சீக்காளி மனோகரை என்ன செய்யலாம்?''

''ஊருக்குள்ள வைக்கப்படாது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மீதி விஷயத்தை ஊருதான் தீர்மானிக்கணும்.''

தவசிமுத்தும் மன்றாடினார்...

''இவனை தல முழுகுன தகப்பன்தான் நான். ஆனாலும் மனசு கேட்கமாட்டக்கு. இன்னைக்கு மட்டுமாவது, இவனை பெத்தபாவி மொட்டை, சீதாலட்சுமியோட ஏக்கத்தை போக்குங்கய்யா...!''

''ஊரு முழுசையும் நீரு கொல்லணுமுன்னு நினைச்சா, நாங்க சும்மா இருக்க முடியுமா?''

ஊரார், இப்போது ஒன்றுபட்டு நின்றார்கள். வீட்டுக்குள் அழுகைச் சத்தங்கள்... வெளியே கோபதாபச் சத்தங்கள்...

38

அந்தக் கீற்றுக் கொட்டகை, கிட்டத்தட்ட அதே வடிவத்தில் ஒரு கான்கிரிட் கட்டிடமாக மாற்றம் கண்டது. ஒற்றைக் கட்டிடம். ஆனாலும் ஆலமரம் போல் தன்னோடு இணைந்த சில கிளைக் கட்டிடங்களையும் உள்ளடக்கி உள்ளது. மூன்று கிரவுண்ட் இடம், இப்போது இரண்டு ஏக்கரானது. ஆங்காங்கே தென்னை மரக் குட்டிகள், ஓலைவிரித்து ஆடின. மாமரக் குழந்தைகள், வயதுக்கு வந்து இலைதழைகளை ஆடைகளாய் அணிந்து நின்று ஆர்ப்பரித்தன. நான்கைந்து முந்திரி மரங்கள், அடிவாரத்தைக் காட்டாமல், ராட்டின குடைவிரித்து நின்றன. நெல்லிக்காய் மரங்கள் கம்மல்களையும், தங்கரளி மரங்கள் பாம்படக் காய்களையும் ஆட்டி ஆட்டிக் காட்டின. சுற்றிலும் காம்பவுண்ட் சுவர்... அதன் வாய் போன்ற வாசலில், ஒரு இரும்பு கிராதிகேட்.... மதில் சுவருக்கு பற்கள் மாதிரியான இந்தக் கேட்டை, தேவைப்பட்டால் மறைத்துக் கொள்ள ஒற்றை உதடு போலான இன்னொரு இரும்புத் தகடு கேட் கதவு...

இந்த மதில் சுவரின் வாசலுக்கு மேலே உள்ள பெயர்ப் பலகையும் வித்தியாசமானது. செவ்வகமாய் நீண்ட பலகை, நடுப்பகுதியில் மட்டும் வட்ட வடிவமானது. இந்த வட்டத்திற்குள் பல்வேறு உள்வட்டங்கள். பெரிய வட்டத்திற்கு வெளியே வளையங்கள். ஒவ்வொரு வளையத்திற்கு வெளியேயும், சுருண்டு நெளிந்த இரண்டு கறுப்புக் கோடுகள், பார்ப்பதற்கு கருநாகங்களாய் வளைந்து நின்றன. மூன்று வளைவுகளாய் நெளிந்தன. இரண்டாவது வளைவில் ஒரு சின்ன உருளை வடிவம். இப்படி இந்த நடுப்பகுதி, ஒரு ஹெச்.ஐ.வி. கிருமியின் கோடிக் கணக்கான பூதாகர உருவத்தை நகல் எடுத்த உருளை வடிவம். இதன் இரு பக்கமும் நீண்ட

செவ்வகப் பலகையில், 'எய்ட்ஸ் திருமண தடுப்பு இயக்கம்' என்ற வெள்ளை சிவப்பு வண்ண எழுத்துக்கள் 'வெள்ளை... அமைதிக்கு. சிவப்பு.. உறுதிக்கு'

அந்தப் பெரிய கட்டிடத் தளம் கிளை பிரிந்து, பிரகாரம் போல் சென்றடையும் பின்பக்கம், ஒரு சுமாரான வீடு... இதன் இரண்டாவது அறையில் கலைவாணி கட்டிலில் படுத்து இருந்தாள். பத்து நாளாய் லேசான காய்ச்சல்; உடலுக்குள்ளேயே ஒட்டிக் கொண்டது மாதிரியான தணல். வெளியே தொட்டால் தெரியாத உள் காய்ச்சல்; இவ்வளவு நாளும் மறைத்துப் பார்த்தாள். இன்றைக்கு முடியவில்லை.

காலமாற்றம், கலைவாணியின் உடம்பிலும் மாற்றங்களைக் காட்டியது. கண்களில் படபடப்புக்குப் பதிலாக ஒரு சாந்தம். மாம்பழமாய் இருந்த முகம், நார் நாரான பனம் பழமாய் லேசான சுருக்கங்களைக் காட்டியது. முகத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தெரியும் சின்னச்சின்ன புள்ளிகள்.

அக்கா மகன் மோகன்ராமை வழியனுப்பி விட்டு, உள்ளே வந்த சீனியம்மா, கலைவாணியை மருவி மருவிப் பார்த்தாள். "இப்படியே சாப்பிடாமல் கிடந்தால் எப்படிம்மா? ஹார்லிக்சாவது குடிக்கிறியா?" என்றாள். மகள் கையாட்டி மறுத்துவிட்டாள். பிறகு அம்மாவின் முகம் மேலும் வாடக் கூடாது என்பதற்காகவே, படுக்கையில் இருந்து எழுந்து, கட்டில் சட்டத்தில் ஒரு தலையணையை சுவரோடு சாய்ந்து வைத்து, அதில் தலைசாய்த்து, படுக்காமலும் உட்காராமலும், இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் கிடந்தாள்.

வெளியே உள்ள ஆலோசனை கூடத்தில் காரசாரமான சத்தம். "கமர்சியல் செக்ஸ் ஒர்க்கர்ஸ்" என்று நவீனமாய் அழைக்கப்படும் விலை மகளிருக்கு அல்லது விலைபோன மகளிர்க்கு, காண்டோம்கள் கொடுத்து, அவற்றை அவர்கள் தத்தம் தாற்காலிகக் கூட்டாளிகளிடம் கொடுக்க வேண்டும் என்ற யோசனை கமிட்டிக்கு வந்தது. கலைவாணியும், பழைய சுமதியிடம் பணியாற்றிய காமாட்சியும் கடுமையாக எதிர்த்தார்கள். எய்ட்ஸ் விழிப்புணர்வு பெயரால் நடத்தப்படும் காண்டோம் விழிப்புணர்வு கூத்துக்களை, நாம் ஏன் நடத்த வேண்டும் என்று கேட்டார்கள். ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற குடும்ப அமைப்பின் ஆரோக்கியத்தை ஏன் வற்புறுத்தக் கூடாது... என்று வாதிட்டார்கள். அதோடு, விலைமாதுகளை அங்கீகரிப்பது போல் கூட்டி வருவது, முறையில்லை என்றார்கள். ஆனாலும் அசோகன், "கலைம்மா... பிறக்கும் போதே எவளும் விலைமகளாய் பிறக்கவில்லை... இன்னும் சொல்லப் போனால், ஒரு தாசிக்குத்தான் கற்பின் மகிமை அதிகமாய் தெரியும்" என்ற போது, கலைவாணி, "நோ, நோ" என்றாள். உடனே அவன், "நீ கூடத்தான் லாரிக்காரனைப் பார்த்து ஒன்னை அறியாமலே கையை

நீட்டினே... சந்திரா, பார்க்கவிட்டால், நீ என்ன ஆகியிருப்பே...?'' என்றபோது, கலைவாணி, இந்த விலையாக்கப்பட்ட மகளிர் கூட்டத்திற்கு இணங்கினாள். சிறிது நேரம் வரை, அந்தக் கூட்டத்தில்தான் இருந்தாள். அங்கே ஒரு பாவப்பட்ட பெண், பங்களா தொழிலில் இருந்து தூக்கி எறியப்பட்டு, ஒரு லாரிக்காரனிடம், இவளைப் போலவே கையை நீட்டி, புதருக்கு வந்த அனுபவத்தை துக்கித்துச் சொன்னபோது, கலைவாணி அழுதுவிட்டாள். அசோகனின் தூண்டுதலில், காமாட்சிதான், கலைவாணியை, இங்கே கொண்டு வந்துவிட்டாள். இப்போதும் மனதுக்குள், கரையான் அரிப்பு... கண்ணுக்குள் துடிப்பு...

அசோகனும், சந்திராவும் உள்ளே வந்தார்கள். அசோகனின் கைப்பக்கம் ஒரு அய்ந்து வயதுப்பயல்... சந்திராவின் கழுத்தில், இந்தப் பயலுக்குக் காரணமான ஒரு மஞ்சள் கயிறு... இருவருமே... கொஞ்சம் தடித்திருந்தார்கள். முகங்களும் சிறிது கன்றிப் போயிருந்தன... பப்பாளிக்காய் பழுக்கப் போவதுபோல்... அந்தப்பயல் ''அத்தே'' என்று சொன்னபடி, கலைவாணியின் பக்கத்தில் போனான். உடனே, அவள் அவனைத் தூக்கி அருகே வைத்துக் கொண்டு, அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

சீனியம்மாள், அசோகனைப் பார்த்து கவலை தெரிவித்தாள்.

''எனக்கு பயமாய் இருக்குது. பத்துநாளாய் காய்ச்சலாம். இவள் இன்னைக்குத்தான் வாயைத் திறந்தாள்.''

''கலைம்மா... உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். எது வந்தாலும், உடனே சொல்லணுமுன்னு... சந்திரா ஒனக்கு புத்தி எங்கே போச்சுது...? கலையை, டெய்லி செக்கப் செய்யச் சொன்னேனே...''

''சும்மா கிடங்க அசோக்... டெய்லி செக்கப் செய்கிற அளவுக்கு கலைக்கு எதுவும் இல்ல.. நம் இரண்டு பேரையும் விட, ஆரோக்கியமாத்தான் இருக்காள்.''

''இன்னும் நீ அவசர குடுக்கைதான்.''

''நீங்கதான் அப்படி... என்னால நிருபிக்க முடியும்.

''எங்கே... ஆதாரம் காட்டு.. பாக்கலாம்''

''கலைவாணி... ஒங்க கட்சி... அதனால, இப்போ நிருபிக்க மாட்டேன்.''

கலைவாணி சிரித்தாள்... பக்கத்தில் இருந்த பயலைப் பார்த்து, ''பயப்படாதடா... இது ஊடல்'' என்றாள். உடனே அந்தப் பயல்,

''அப்படின்னா அப்படின்னா'' என்று அத்தையை நச்சரித்தான். சீனியம்மா மீண்டும் கவலை தெரிவித்தாள்.

''எனக்குப் பயமா இருக்குது சந்திரா''

''கவலைப்படாதீங்க... அத்தே... குரோசின் கொடுத்தால் சரியாயிடும்.''

''ஆமாம் சித்தி... நீங்க இப்போ மட்டுமில்ல, எதிர் காலத்திலயும் கூட, கலைக்காக கவலைப்பட வேண்டியது இருக்காது. அமெரிக்காவில், லாஸ் ஏஞ்சல் நகர்ல, ஹெச்.ஐ.வி. கிருமிகள் உள்ள ஒரு குழந்தைக்கு, ஐந்து வயதில் அந்த கிருமிகள் இருந்த அடையாளமே தெரியல... இந்த அதிசயத்தை கலிபோர்னிய பல்கலைக்கழக எய்ட்ஸ் பிரிவு ஆய்வு செய்து வருது. இந்தப் பிரிவின் உறுப்பினர் ஜே.பிரைசன் என்பவர் இதை தெரிவித்திருக்கார். கேரளத்தில சரஹஸம்ஹிதை, அஷ்டாங்க இருதயம், சகஸ்ரயோகம் ஆகிய பழைய நூல்கள் தெரிவிக்கிற இருபத்தைந்து மூலிகைகளைக் கொண்டு, இந்த நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடிச்சிருக்காங்களாம்... இதனால் நோயாளிகளிடம் நல்ல அறிகுறிகள் காணப்படுவதாய் கேள்வி. அமெரிக்காவில் அதே கலிபோர்னியாவில் உள்ள டாக்டர் எஸ்ஸே, இதே மருந்தை, மெக்ஸிகோக்காரர் எட்வர்டோ கார்கியா என்பவருக்கு கொடுத்து குணப்படுத்தியதாய் சொல்றார்.'' அதைக் கண்டேன். இதைக் கண்டு பிடிச்சேன்னு ஆயிரம் பேர் புறப்பட்டாலும், டாக்டர் எஸ்ஸே சொல்வதும் நம்பும்படியாய் இருக்குது. அதோட ரத்தத்தில் ஒரு கோட்டிங் கொடுத்து, எய்ட்ஸ் கிருமிகளை ஒழிக்க முடியுமான்னு எங்க அலோபதி சிஸ்டத்துல.. சர்வதேச ஆராய்ச்சி நடக்குது. நானும் சந்திராவும் கலைக்காக அஸிடோ - தைமிடின் மருந்தை லண்டன்லே, இருந்து வருவிக் கிறதுக்கு முயற்சி எடுக்கோம். வேணுமுன்னால் பாருங்க! கலை... நம்மை எல்லாம் வழியனுப்பி வச்சிட்டுத்தான் வருவாள். நாம்தான், கலைக்காக அங்கே காத்திருக்கணும். ஏன்னா, எனக்குப் பிளட் பிரசர்... சந்திராவுக்கு டயாபெடிக்ஸ்... ஒங்களுக்கு வயசாயிட்டு...''

''டாக்டரய்யா... தத்துப்பித்துன்னு உளறப்படாது. என்னை நல்லபடியாய் வழி அனுப்பி வைக்கிறதாய் வாக்குக் கொடுத்திருக்கீங்க... மறந்திடாதீங்க.''

நெடிய கொடிய அமைதி... சீனியம்மா, தாள முடியாமல், உள்ளே போய் விட்டாள். அசோகன் மீண்டும் தொடர்ந்தான்.

''நீ... நான், சந்திரா, இதோ வந்து நிற்காளே இந்த காமாட்சி... நாம் இப்போக்கூட திருப்தியோட சாகலாம்மா... அந்த அளவுக்கு செய்திருக்கோம். ஐந்தாறு எய்ட்ஸ் கல்யாணத்தை தடுத்திருக்கோம். ஹெச்.ஐ.வி.

பெண்களுக்கு வேலை கொடுத்திருக்கோம். பல நோயாளிகளுக்கு பயனுள்ள தொழில்களை நடத்தப் போறோம். நம்மகிட்ட யோசனை கேட்க எத்தனையோ பேர் காத்திருக்காங்க. நம்ம அமைப்போட பெயர், நாலு பக்கமும் அடிபட்டுது.. அதனால, நாம சாவை சந்தோஷமாய் எதிர் நோக்கலாம்.''

''என்ன அசோக்...? நாம், 'இறப்பு விழிப்புணர் இயக்கமா' நடத்து றோம்...? நீங்க சொன்ன காரணங்களுக்காகவே, நாம் எல்லாரும் நீண்டநாள் உயிர் வாழணும். நமக்கு சொஜ்ஜி, பஜ்ஜி செய்து தருகிற எங்கத்தை- ஒங்க சித்தி அதிகநாள் உயிர் வாழணும். பீ பாசிட்டிவ்...''

''பரவாயில்ல... சந்திரா! இன்னிக்கித்தான் நீ புத்திசாலித்தனமாய் பேசுறே''.

''நான் எப்போதுமே அப்படித்தான். ஒங்களுக்குத்தான், என் புத்திசாலித் தனத்தை புரிஞ்சிக்கிற புத்தி புதுசா வந்திருக்கு''

கலைவாணியும் காமாட்சியும் சேர்ந்து சிரித்தார்கள். ஆனாலும் கலைவாணியின் சிரிப்பு உடனடியாய் அடங்கியது...

''தேனம்மா... எப்படி இருக்காள் டாக்டரய்யா...''

''இன்னும் ஒரு வாரத்தில முடிஞ்சிடும். சொல்லுக்குச் சொல் கலைதான். மூச்சுக்கு மூச்சு நீதான்...''

''என்னை.. அவள் கண்ணிலே காட்ட மறுக்கீங்களே டாக்டரய்யா! எத்தனை தடவை கேட்டுட்டேன்?''

''இப்போ நீ வீக்... நாலு நாளாகட்டும், கூட்டிக்கிட்டுப் போறேன்... அப்புறம் காமாட்சி... அந்தப் பெண்கள் போயிட்டாங்களா?''

''போயிட்டாங்க... எத்தனையோ எய்ட்ஸ் விழிப்புணர்வு ஒட்டம், துண்டு பிரசுரம் நடத்துறவங்க, மக்களுக்கு புரியும்படியா ஏன் ஒரு சினிமா படம் எடுக்கலன்னு கேட்டாங்க. மக்களுக்கு தெரியக் கூடாது என்கிறதுல கவனமா இருக்காங்களோன்னு கிண்டல் பண்ணினாங்க... அப்புறம், கலை! சந்தானக்குமார் வந்திருக்கார்...''

கலைவாணி உடனடியாய், எழுந்தாள். அசோகனும் சந்திராவும் சீனியம்மா போடுகிற காபிக்காக ''காத்திருந்தபோது'' இவள், காமாட்சியுடன் வெளியே வந்தாள். அலுவலக அறைக்குள் வந்தவளைப் பார்த்து களவிளம்பர அதிகாரியான சந்தானக்குமார் எழுந்தார். கலைவாணி உட்காராமலே கேட்டாள்...

''என்ன சார்... நீங்க எனக்கா... எழுந்திருக்கிறது? நான் ஒங்க பழைய கலைவாணிதான். காமாட்சி... அம்மாக்கிட்ட சொல்லி ஒரு கப் காப்பி''

காமாட்சி, புரிந்து கொண்டாள். அசோகன் சந்திரா போல் தானும் புரிந்தது போல் தலையாட்டி விட்டுப் போய்விட்டாள்.

''எப்படி சார் இருக்கீங்க...?''

''நல்லா இல்லம்மா... சி.பி.ஐ.க்காரங்க பழையபடியும் விசாரணைக்கு கூப்பிட்டு இருக்காங்க. மூணு வருஷம் இழுத்தடிச்சிட்டு, மூணு வருஷம் தூங்கிட்டு, இப்போ எனக்கு பிரமோஷன் வார சமயமாய் பார்த்து கூப்புடுறாங்க...''

''என்ன சார்... அநியாயமாய் இருக்குது... நானே சி.பி.ஐ.க்கு எழுதி கொடுத்தேனே. நேரு இளைஞர் மைய பகுதி நேர ஒருங்கிணைப்பாளராய் இருக்கும் போது, நீங்க நடத்துன பிலிம் ஷோக்களுக்கு ஒரு பைசா கூட கொடுக்கலைன்னு எழுதினேனே. சுமதி, ஒரு மோசடிப் பேர்வழி... அவள் கணக்குப் புத்தகம் ஒரு கண்ணாடியாகாதுன்னு ஸ்டேட்மெண்ட் கொடுத்தேனே. சுமதி வீட்டை விட்டு வைத்துவிட்டு... ஒங்க வீட்ல சி.பி.ஐ. ரெய்ட் செய்தது தப்புன்னு வேற சுட்டிக்காட்டி இருந்தனே...''

''இந்தத் தப்புத்தாம்மா... தப்பா போயிட்டு... சிபிஐக்கு புதுசா வந்திருக்கிற டிஐஜி, என் பைல பார்த்துட்டு, ஒங்க ஸ்டேட்மென்டை ஒரு சவாலா எடுத்துட்டாராம். கிணத்துக்குள்ள கல்லாய் கிடந்ததை தூக்கிப்பிடித்து என் தலைக்கு குறி பார்க்கார். ''

''அட கடவுளே''

''இதுதாம்மா... இன்றைய நேர்மையான கவர்ன்மெண்ட் செர்வன்ட் நிலைமை. மத்திய அரசு ஊழியன்... ஒரு தடவை சி.பி.ஐ.யில் மாட்டிக்கிட்டால், அவனுக்கு பத்து வருஷம் நிம்மதி போயிடும்... மாநில அரசுல... இதைவிடக் கேவலம்... ஒருத்தர், சாயங்காலம் ரிட்டயர்ட் ஆகப் போகிறார் என்றால்... அன்றைக்கு மாலையில் மூன்று மணிக்கு, அவரை சஸ்பென்ட் செய்வாங்க.. எனக்கு புரமோஷன் பெரிசில்லம்மா. ஆனால், யார்கிட்டயும் எதையும் எதிர் பார்க்காத என்னைப் போய், சுமதி கிட்ட பணம் வாங்கினதாய் நினைக்கிறதை, தாங்க முடியலம்மா...''

''எல்லாம்... ஒங்க இணை இயக்குனரால் வந்த வினை...''

''அந்த ஆளும்... நல்லவர்தான்... ஆனா பாதி பைத்தியம்... படு சுத்தம். 'சுத்தன் துஷ்டனோட பலன் செய்வான்னு'... மலையாளத்தில ஒரு பழமொழி இருக்குது பாருங்க. அந்த மாதிரி ஆசாமி. எப்பவாவது லஞ்சம்

வாங்கிட்டான்னு யாராவது சொல்லிட்டால், உடனே நம்பிடுவார். இதுதான் இன்றைய நேர்மையாளர்களோட சாபக்கேடு. நானும் எந்த தப்பும் செய்யாததால், அவர் கிட்ட சூடாப் பேசிட்டேன். இதனால அவரும் சிபிஐக்கு எழுதிட்டார். இப்போ, அவரு டில்லியில் இயக்குநராய் இருக்குறார். ரொம்ப வருத்தப்படுகிறார். ஆனால் பாரம் சுமக்கிறது நான், அதுவும் பழிபாவம்...''

''நான் என்ன செய்யணுமுன்னு சொல்லுங்க சார். அதைச் செய்யுறேன் சார். உங்களோட இந்த நிலைமைக்கு நானும் காரணமாயிட்டேன். இதுக்காகவே, எது வேணுமுன்னாலும் செய்யத் தயார்''

''பழையபடியும் ஒரு ஸ்டேட்மெண்ட் வேணும்... இந்தத் தடவை என்னைப் பிடித்துவிட்டு, சுமதி மீது நடவடிக்கை எடுக்காத சிபிஐ மீது வழக்கு போடப் போவதாய் நோட்டீஸ் மாதிரி அனுப்புங்க!''

''நான் தயார்... ஆனால் இது ஒங்களுக்கே.''

''பரவாயில்லம்மா... வருஷக் கணக்கிலே நிம்மதி இல்லாமப் போறதைவிட, ரெண்டுலே ஒண்ணு தெரியட்டும்''

''இப்பத்தான் புரியுது சார்... ஹெச்.ஐ.வி. கிருமிகள், வேறு வேறு ரூபத்தில், வேறு வேறு காரியங்களை செய்கிறது, இப்பத்தான் புரியுது. நான் நோட்டீஸ் ரெடி செய்து வைக்கேன். நாளை மறுநாள் வர்றீங்களா, இல்ல. நான் வரட்டுமா...''

''நானே வாறேம்மா...''

''கண்கலங்காதீங்க... சார்... வேலையில் இருந்து நீங்க விலக்கப் பட்டாலும், இந்த அமைப்பு ஒங்களை தாங்கிக்கும்''

''வாறேம்மா... துக்கமா வந்துட்டு, சந்தோஷமா போறேம்மா...''

''இதோ காபி.. வந்துட்டு சார்''

சந்தானக் குமார், போய்விட்டார். அதுவரை, வெளியே நாசூக்கு கருதி மட்டுமே பேசிக் கொண்டிருந்த சந்திராவும் அசோகனும் உள்ளே வந்தார்கள். அவர்களிடம், அந்த விளம்பர அதிகாரியின் விபரீத நிலைமையை கலைவாணி விளக்கப் போனாள். அதற்குள், இரண்டு பேர் தபதபவென்று உள்ளே வந்தார்கள். எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள். ஒருத்தர், கட்சி மேடைகளில் வட்டமடிப்பவர். இன்னொருத்தர் கல்லெறி சம்பவங்களின் போது முன்னால் நிற்பவர். கலைவாணிக்கு எரிச்சல். அசோகனுக்கு எரிச்சலுக்கு மேல் எரிச்சல். பெரியவர்களாகவே இருந்துட்டுப் போகட்டும்.

அதுக்காக இப்படியா கேள்வி முறை இல்லாமல், முன் அறிவிப்பு கூட கொடுக்காமல், வருவது...?

கலைவாணி கேட்டாள்.

''என்ன வேணும் சார்...?''

எதிர் நாற்காலிக்காரர்களில் வட்டமுகக்காரர், கலைவாணியையும், மற்றவர்களையும் ஏற இறங்கப் பார்த்தார். அந்தப் பகுதியில் தன்னைப் பார்த்த உடனேயே, பலர் பதறியடித்து எழும் போது, இவர்கள் பாராமுகமாய் இருப்பதும், இவள் அதட்டுவதுபோல் கேட்டதும், அவருக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. சூடாகிவிட்டார்...

''இந்த இடம் எத்தனை ஏக்கர்...?''

'' எதுக்கு கேக்குறீங்க...?''

''கேட்கப்படாதா? சும்மாச் சொல்லுங்க...''

''இரண்டு ஏக்கர்...''

''இந்த இடத்து பக்கத்துல ஒரு காலேஜ் கட்டப் போறாங்க தெரியுமா?''

''தெரியுமாவது...? கேட்கிறதுக்கே சந்தோஷமாய் இருந்தது. கிராமத்து இளைஞர்களுக்கு குறிப்பா பெண்களுக்கு இது ஒரு வரப் பிரசாதம்...''

''இப்படித்தான் பேசணும்... அதனால... ஒங்க இரண்டு ஏக்கரையும் வாங்கறதுன்னு தீர்மானித்திருக்கு...''

''அங்கே... மடக்கிப் போட்டிருக்கிற இடத்தில நாலு காலேஜ் கட்டலாமே..?''

''அதெல்லாம்... ஒங்களுக்கு அதிகப் பிரசங்கித்தனம். ஒங்க இடம் எங்களுக்கு வேணும். எவ்வளவு பணம் வேணும்...?''

அசோகனால், பொறுக்க முடியவில்லை.

''என்ன சார்... அடாவடியாய் பேசுறீங்க... நாங்க விற்கத் தீர்மானிச்சிட்டதாய் நீங்களே தீர்மானித்தால் எப்படி...? நீங்க கோடி ரூபாய் கொடுத்தாலும், நாங்க இந்த இடத்தை கொடுக்கிறதாய் இல்லே...''

''யார் கிட்ட பேசுறோமுன்னு தெரியுமா...? டாக்டருங்களுக்கு, நாட்டு நடப்பு தெரியாது என்கிறது சரியாத்தான் இருக்குது''

''இந்த மாதிரி நடப்பு தெரிய வேண்டாம்''

உட்கார்ந்தவர்களில் இப்போது வட்ட முகக்காரருக்குப் பதிலாய், கோணல் முகக்காரர் பேசினார்.

''போனை, இந்தப் பக்கமாய் தள்ளுங்க... போலீஸ் இன்ஸ்பெக்டர் கிட்டே பேசணும். எஸ்.பி., அவர்கிட்ட ஒரு விபரம் சொல்லச் சொன்னார்.''

''மன்னிக்கணும்... டெலிபோனை நாங்க யாருக்கும் கொடுக்கிறது இல்லை; இது தர்மத்துக்காக உள்ள இடம்... தர்ம சத்திரம் இல்ல...''

உட்கார்ந்தவர்கள், நாற்கலிகளை உதறியபடியே எழுந்தார்கள். வட்ட முகமும், கோண முகமும் மாறி மாறிப் பேசின...

''மோகன்ராம்... தங்கை என்கிறதால இத்தோட விடுகிறோம். இல்லாட்டால் இந்த போனை தூக்கிட்டுப் போக அதிக நேரம் ஆகாது.''

''ஆனாலும் ஒண்ணும்மா... இந்த இரண்டு ஏக்கரும், காலேஜ் கட்டுறவங்க இடம். நீங்க முன்னால எவ்வளவுக்கு வாங்கினீங்களோ, அதுல பாதிப்பணத்தை கொடுப்பாங்க. இல்லாட்டால் வம்புதான். கொடுத்தால் உங்களுக்கு நல்லது. நீங்க கொடுத்தாலும், கொடுக்காட்டாலும் எங்களுக்கு எப்பவுமே நல்லது. லாரி மேல சைக்கிள் மோத முடியாது. அடுத்த தடவை பத்திரத்தோட வருவோம்.''

வந்தவர்கள், போனார்களா.. அல்லது மறுபக்கம் நிற்கிறார்களா என்று நினைக்க முடியாத அளவிற்கு, அவர்கள் மரத்துப் போனார்கள். இருந்த இருக்கைகள் மீது இருக்கையானார்கள். இறுதியில் அசோகன் வெகுண்டு சொன்னான்.

''கவலைப்படாதே... கலைம்மா... ஆனானப்பட்ட சுமதியையே துரத்துனவங்க நாம்.. இவங்க எம்மாத்திரம்.''

''சுமதி, இப்போ திண்டுக்கல் பக்கம் கொடிக்கட்டி பறக்கிறாளாம்...''

''நீங்க நினைக்கிறது மாதிரி விஷயம் சிம்பிள் இல்ல அசோக்! இங்கே வந்தவங்க சாதாரணமானவங்கதான்... ஆனால் அசாதாரணமான சக்திகளோட கருவிகள். எந்த சக்திகள், தமிழ்நாடு முழுதும்... பலரை மிரட்டி மிரட்டி.. அவங்க சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிற்றோ, எந்த சக்திகள், பட்டாக்களை அதன் உரிமையாளர்களுக்கே தெரியாமல் மாற்றியதோ, அந்த சக்திகளின் ஏஜெண்டுகள்தான், நம்மை மிரட்டிட்டுப் போறவங்க.''

''அப்போ இந்த இடத்தை தாரை வார்க்க சொல்றியா?''

''இப்படி கேட்க... ஒங்களுக்கு எப்படித்தான் புத்தி போகுதோ... அந்த அர்த்தத்திலயா பேசுனேன்?''

கலைவாணியின் கண்கள், தீயாயின.. கைகள், முறுக்காயின... தீர்மானமாய் பேசினாள்.

''எந்த சக்தியாய் இருந்தாலும் சரி, எந்தக் கொம்பன்... கொம்பியாய் இருந்தாலும் சரி... இங்கே அங்கம் வகிக்கிற நூற்று நாற்பத்திரண்டு உறுப்பினர்களின் பிணத்தில ஏறித்தான், அவங்க இந்த இடத்துக்கு வர முடியும். காமாட்சி! நம் பேரவைக் கூட்டத்தை, நாளை மறுநாளே கூட்டணும்.நாளைக்கே பணிக்குழு கூடணும். சர்க்குலர் போடும்மா. இதைவிடப்படாது. இந்த நிலம் போயிடுமே...என்கிறது மட்டுமல்ல பிரச்சினை. இந்த ஆணவப் பூனைகளுக்கு யாராவது மணி கட்டித்தான் ஆகணும். அது நாமாவே இருப்போம்''

அசோக், கை தட்டினான்.

''எனக்கு ரொம்ப சந்தோஷம் கலைம்மா... இந்தப் பிரச்சினை தீர்வது வரைக்கும், ஒனக்கு குரோசின் தேவையில்லை... வைட்டமின் மாத்திரைகள் கூட அவசியம் இல்லை... நிசமாவேத்தான்...''

கலைவாணியும் காமாட்சியும், டாக்டர் ஜோடியோடு எழுந்தார்கள். எய்ட்ஸ் விழிப்புணர்வு கலைக்கூடமாய் விளங்கும் முன் பக்க அறை வழியாய் நடந்து, வெளியே வந்தார்கள். ஆங்காங்கே முளைவிட்ட பல்வேறு பயிற்சிப்பட்டறைகளையும், அவற்றில் இயங்கியவர்களையும் ஓரளவு கவலையோடு பார்த்தார்கள். அப்போது பார்த்து...

வாடாப்பூவும் எஸ்தரும் ஓடி வந்தார்கள். தொலைவிலேயே, முன்னவள், பின்னவளுக்கு, கலைவாணியை அடையாளம் காட்டிவிட்டாள். கலைவாணி, தன் கையைப் பிடித்த வாடாப்பூவிடம், கேட்டாள்.

''இவங்க, யாருக்கா?''

''நானே சொல்றேன், என் பெயர் எஸ்தர்... ஒன் ஹஸ்பென்ட் மனோகரோட...''

''எனக்கு, எவரும் கணவர் இல்ல... இந்தாப் பாரு கழுத்தை''

''சரி... நான் ஒன் முன்னாள் புருஷனோட கீப்பு. பச்சையா சொல்லப் போனால், நான்... அவனை வச்சிட்டு இருந்தேன்...''

''என்ன நீ... காட்டுமிராண்டி மாதிரி...''

வாடாப்பூ, எஸ்தரை பின்னால் தள்ளிவிட்டு பேசினாள். அவள்

முகத்திலும் பெரிய சூரியக் கொப்பளம். அதைச்சுத்தி, பூமிக் கோளம் மாதிரி, பாதி வெளிச்சமும், மீதி இருளுமான கொப்பளங்கள். கலைவாணி, தன்னிடம் வரச்சொல்லியும், சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டிருப்பவள். ஊன் உருகப் பேசினாள்.

''புருசனோ இல்லியோ? மனோகரை ஊருக்கு வெளியில போட்டு வச்சிருக்கு. அவர் படுற அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்ல. ஒன்னை பார்க்கணுமுன்னு துடிக்காரு. அப்படிப் பார்த்துட்டால், சீக்கிரமா உயிர் போயிடும்...''

''நான் யாரையும் பார்க்கிறதாய் இல்ல...''

டாக்டர் அசோகன், தீர்க்கமாய் பேசினான். ''இவங்க மனோகரோட மாஜி மனைவி கலைவாணியைக் கூப்பிடல... எய்ட்ஸ் நோயாளிகளை கருணையோடு கவனிக்கிற ஒரு நல்ல அமைப்புன்னு, நம்பப்படுகிற அமைப்போட செயலாளர் கலைவாணியை கூப்பிடுறாங்க. கடைசிக் கட்டத்தில அவஸ்தைப்படுற ஒரு எய்ட்ஸ் ஜீவனைப் நல்லபடியாய் அனுப்பி வைக்கிறதுக்கு கூப்பிடுறாங்க.''

கலைவாணி, எல்லாரையும் ஜீவனற்றுப் பார்த்தாள்...

39

ஊருக்குப் புறம்பாய் உள்ள சுடுகாடு. வாழ்கிறவர்களைத் தலையில் சுமந்தும், வாழ்ந்தவர்களை வயிற்றுக்குள் சுமந்தும், பூடகமாய்ப் பேசும் மயானம். எந்த பகுதியையும் போல் அந்தப் பகுதியில் இருப்பவர்களின் எண்ணிக்கையை விட, இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்பதை, எலும்பு சாட்சியாய் நிரூபிக்கும் சமத்துவ பூமி.

இந்த சுடுகாட்டின் எல்லை முடியும் மேட்டில், ஒரு பனந்தோப்பு. நேராய் நிமிர்ந்த பனைகளில், மார்பில் தோல் கவசத்தோடு ஏறும் பனையேறித் தொழிலாளர்கள்... பனைநாரை, கால் நாராய் போட்டு கரடிப் பிழைப்பு நடத்துபவர்கள்... ஆங்காங்கே உள்ள 'விடிலிகளில்' கல் அடுப்புக்களில் பதனீர் காய்ச்சி, காய்ச்சியதை, சிறட்டைகளில் ஊற்றி, அவற்றைக் கருப்பட்டிகளாய் ஆக்கும் பெண்கள்.

இப்படிப்பட்ட, பச்சை ஓலையும், பழுத்த ஓலையும் விழும் இடத்தில் பனைமரக் கம்புகளில், ஓலை மறைப்புக்களைக் கொண்ட 'விடிலி' எனப்படும் சுவரில்லாத குடிசை. அதில் ஒரு சேலை விரித்த பனங்கட்டிலில், மனோகர், ஈரப்பட்ட விறகாய்க் கிடந்தான். கண்கள் மட்டும், மின்மினிப் பூச்சிகளாய் துடித்துத் துடித்து துள்ளின. மற்றபடி, உடலில் எந்த அசைவும் இல்லை.

இந்த விடிலிக்கு வெளியே, ஒரு கருங்கல்லில், சீதாலட்சுமி விறைத்துப் போய்க் கிடந்தாள். அழுதழுது முகம் வீங்கிவிட்டது. கதறிக் கதறி, குரல் கட்டிவிட்டது. அவள் பக்கத்தில், மூத்த மகள் சகுந்தலா; அந்தப் புடலங்காய் உடம்பு. செத்துக் கொண்டு இருக்கும் தம்பிக்காகவும், சாகப் போகிற

கணவனுக்காகவும், ஒரே சமயத்தில் துடித்தது. பிள்ளைத்தாச்சியான மீரா, எங்கேயோ பராக்குப் பார்த்துக் கொண்டு நின்றாள். மோகன்ராம், முகத்தில் ஈயாடாமல், ஒரு பனை ஓலையில் உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்தில், ஒரு பனையேறி வந்தார். அர்ச்சுனன் வைத்திருந்த அம்பராத்துணி மாதிரி ஒரு பாளைக்குடுவை... அதில் ஒரு பாளை அரிவாள். தோளில் தொங்கும் கலசங்கள். மனோகரைப் பார்த்துவிட்டு, மனங்கேளாமல் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார். அப்போது பார்த்து, கட்டாந்தரையில் துண்டைப் போட்டு உட்கார்ந்திருந்த தவசிமுத்து எச்சரித்தார்.

''ஏலே.. மாடக்கண்ணு...முறைப்பயனியை சரியா ஊத்தாட்டா... நான் ஆளமாற்ற வேண்டியதிருக்கும்..''

''தூ...''

''எதுக்குல துப்புறே...?''

''நீரு சொன்ன சொல்லு, காது வழியாய் வாய்க்குள்ளே போய் வெளியிலே விழுது...தூ... இந்தச்சமயத்திலயா... அந்த பேச்சு...?''

தவசிமுத்து, மாடக்கண்ணுவை சாடப் போனார். தகாத வார்த்தைகளால் விமர்சிக்க போனார். அதற்குள், மருமகன் மோகன்ராம் கத்தினார்.

''யார் யாருக்கோ... எய்ட்ஸ் வருது... வரவேண்டிய முடிச்சுமாறிகளுக்கு வரமாட்டக்கு.. பாரு... தூ''

தவசிமுத்து, எச்சில் பட்டதுபோல், வேட்டி முனையால் முகத்தைத் துடைத்த போது, ஆங்காங்கே, சும்மாக் காட்டில் அல்லாடி விட்டு, வீட்டுக்குத் திரும்பிய விவசாயிகள், அந்த பக்கமாய் வந்தார்கள். இதற்குள், 'சாவு விழுந்திருக்கும்' என்ற அனுமானத்தில், ஊரில் இருந்தும் பலர் துஷ்டி கேட்க வந்திருந்தார்கள். என்ன இந்த மனோகர்... சட்டுப்புட்டுன்னு போகாமல்... கூட்டத்தினர் சிறிது விலகியே நின்றனர். காற்றடிக்காத திசையாய் சில புத்திசாலிகள் போனபோது, கூட்டமும் அங்கே போனது.

மனோகரைப் போல், பகலும் செத்துக் கொண்டிருந்தது. சூரியன், மேற்குபக்க சமாதியில் இறங்கிக் கொண்டிருந்தான். ஆகாய அடிவார புதைகுழிக்குள் சுருங்கப் போனான். சுடுகாட்டில் ஒரு பிணப் புகைச்சல்! அதே காட்டில் இன்னொரு பக்கம், இரும்புக் கம்பியோடும், மண் வெட்டியோடும் இரண்டு வெட்டியான்கள்; ஆகாயத்தில் கழுகுகள் வட்டமடித்தன. பிணங் கொத்தி அண்டங்காக்கைகள் கரைந்தன. பக்கத்து சௌக்குத் தோப்பில், நரிகள் ஊளையிட்டன, தூரத்து சோளச் செடிகள் கதிர்

கதிராய் வளைந்து வளைந்து மாரடித்தன. எருக்கலைச் செடிகள், இறுக்கிய கண்கள் போன்ற ஒடுங்கிப் போன பூக்களோடு முட்டி மோதின. மேலே ஒரு பனையில் சட்டிக் கலசத்தில், ஒரு கரிச்சான் குருவி விழுந்து, மாலைப் பதநீருக்குள் சிக்கி, மேலே ஏற முடியாமல் கதறிக் கொண்டிருந்தது.

அந்த விடிலியையும் தள்ளி வைத்ததுபோல் நின்ற கூட்டத்தில், பெரும் பகுதியினர், மனோகருக்காக மனவருத்தப்பட்டார்கள். அதிகமாய் பேசாதவன்.. ஆனால் பல் தெரியச் சிரிப்பவன். கேட்ட கேள்விக்கு, போகிற போக்கில் பேசாமல், நின்று நிதானித்து பதிலளிப்பவன், 'ஒங்க பிள்ளைகளை நல்லா படிக்க வையுங்க... மீதியை நான் பார்த்துக்குவேன்' என்று வலியச் சொல்பவன். 'வண்டிக்கார' மூக்கையா சத்தம் போட்டே கத்தினார். ''என்னய்யா அநியாயம்..? இந்த ஆண்டவனுக்கு யாருய்யா புத்தி சொல்றது?''

அங்கு நின்றவர்கள் நிமிர்ந்தார்கள். இடம் கொடுப்பது போல், சிறிது விலகி நின்றார்கள். ஓடிவந்த ஜீப்பையும், அதன் பின்னால் வந்த ஆம்புலன்ஸ் வேனையும் ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள். அதற்குள் அசோகனும் சந்திராவும், அந்த வேனில் முன் பக்கம் இருந்தும், ஒரு பச்சைச் சேலை நர்சும், எய்ட்ஸ் வார்டு ஆயாவும், அவள் மகனும் பின் பக்கம் இருந்தும் கீழே இறங்கினார்கள். இதே போல ஜீப்பின் பின்பக்கம் இருந்து, வாடாப்பூவும் எஸ்தரும், காமாட்சியோடு இறங்கினார்கள். முன்பக்க இருக்கையில் இருந்த கலைவாணி, மெள்ள இறங்கி, தரை தட்டி நின்றாள்.

இதற்குள், உள்ளே ஓடிப் போய், மனோகரைப் பார்வையிட்ட அசோகன் வெளியே வந்து, ஆணைக்குரலில் பேசினான்.

''சந்திரா, ஏன் கிளவ்ஸ் போடாம நிற்கே... இந்தாப்பா.. பேண்டேஜ் துணிகளை எடு... போதாது.. நிறைய தேவைப்படும்... பார்வதி! ஸ்கிரீனை எடு. பிளீச்சிங் பவுடர் என்னாச்சு...? கமான்.. இருட்டுறதுக்குள்ள எடுத்துப் போயிடணும்... வாஸ்லினை எடுங்க...''

அசோகனோடு, சந்திராவும் உள்ளே ஓடினாள். வார்டு பையன், கண்கண்ணாய் காட்டும் பேண்டேஜ் துணிகளை எடுத்துக் கொண்டு, வேகவேகமாய் உள்ளே போனான். அவன் தாய்க்காரியான ஆயா, ஒரு பெட்டியைத் தூக்கி கொண்டு, உள்ளே ஓடினாள்.

அப்படியே நிலைகுலைந்து நின்ற கலைவாணியை, வாடாப்பூ, பிடித்துக் கொண்டு மருவினாள். எஸ்தர், அவள் கையைப் பிடித்து, முன் பக்கமாய் இழுத்தாள். காமாட்சி, அவள் காதில் ஏதோ பேசினாள். பாம்படக்

கனகம்மா... அவளைச்சுற்றி சுற்றியே வந்தாள்.

கலைவாணி, தன் மீது மொய்க்கும் ஊர்க் கண்களைப் பார்க்காமலே, அப்படி ஒரு கூட்டம் நிற்பதை அறியாமலே, உள்ளே போனாள். முன்னாள் கணவனைப் பார்த்ததுமே, கண்களை மூடிக் கொண்டாள். அய்யோ... இது என்ன கொடுமை.. ? வாயில் இருந்து சளி ஒழுகல், மண்தரையில் ரத்தச் சளிக்கட்டிகள். அங்கங்கே கொப்புளங்களாகவும், செதில் செதிலாகவும் படை படையாகவும் உள்ள உருவத்தில், மனோகர் எங்கே இருக்கிறார்... அவர் தெம்மாங்கு முகம் எங்கே போனது...? அவர் தேக்குமர மேனி எங்கே போனது... இது மனோவா..? என்னுடைய பழைய மனோவா...? இருக்காது... இருக்கவே இருக்காது.''

கலைவாணி, கண் திறந்தாள். மனதைக் கல்லாக்கி, அவனை, வெறும் நோயாளியாகவே பார்க்கப் போனாள். பார்க்கப் பார்க்க... நோயாளியை மீறி, மனோகரே மேலோங்கிப் போனான். முதலில், அவளை ஏமாற்றி தாலி கட்டிய வஞ்சக மனோகரானான். அப்புறம் எஃகின் உறுதியும், வாழையின் நளினமும் கொண்ட, அந்த அந்தரங்க மனோகர் தோன்றினான். தூக்கத்தில் கூட, கால்களைச் சுருட்டி வயிற்றுக்குள் திணிக்காமல், கம்பீரம் கலையாமல் படுப்பவன்; காலையில் தன்னை முத்தச் சத்தத்துடன் எழுப்புகிறவன், எழ வைப்பவன்... என்னை ஏமாற்றியவன்தான். ஆனாலும், இவனுக்கு இது நல்லாவேணும் என்று நினைக்க முடியலியே...? மனம் என்பது மாறக் கூடியதா...? அல்லது மாறாத மரச் சட்டத்திற்குள் அடுக்கடுக்கான ரகசிய அறைகளைக் கொண்டதா...?

மனோகரும், கலைவாணியை பார்த்துவிட்டான். உடனே, கண்கள் உருளைகளாகின்றன. வாய் அகல்கிறது. கை லேசாய் மேலோங்கிறது. கன்னமேடுகள் ஈரப்படுகின்றன. மூச்சே குரலாகிறது. குரலே மூச்சாகிறது. வாய் துடிக்கிறது. பற்கள் விலகுகின்றன. வார்த்தைகள் திக்கித் திக்கி, திணறித் திணறி, அவனைப் போல் குற்றுயிரும் குலையுயிருமாய் துடிக்கின்றன.

'கல்... கலை... நா...நான்...த.. ப்ப...தப்...பு...டேன்... மன்... மன்...''

மனோகர், கலைவாணியை நன்றாகப் பார்க்கட்டும் என்பதுபோல், மருத்துவக் குழு, விலகி நிற்கிறது. அவன் பேசுவதற்கு முயற்சி செய்யச் செய்ய, கவைாணியின் ஐம்பொறிகளும் கலங்குகின்றன. ஆதரவாக, வாடாப்பூவின் மேல் சாய்கிறாள். எஸ்தர், அவள் முதுகைத் தட்டிக் கொடுக்கிறாள். காமாட்சி அவளைப் பிடித்துக் கொள்கிறாள். கனகம்மா கையைப் பிடிக்கிறாள். இப்போது, சீதாலட்சுமி, அங்கே வந்தாள். ஆத்திரமாகவும் அழுதழுதும், கலைவாணியைப் பார்த்து சீறினாள்.

''குனிந்த தலை நிமிராத என் மகனை இப்படி ஆக்கிட்டியேடி... பாவி... எவன் கிட்டல்லாமோ படுத்து... என் பிள்ளைய படுக்க வச்சுட்டியேடி.. சண்டாளி.. கைகேயி... கூனி... இப்போ... ஒனக்கு திருப்திதானாடி... சந்தோஷந் தானாடி...? இங்க எதுக்குடி வந்தே? வெளில போடி.. கல்யாணத்திற்கு முன்னால... எவன்... எவனுக்கு முந்தானை விரிச்சியோ... அவனவன் கிட்ட போடி... உனக்கு என்னடி இங்கவேல?''

எதிர்பாராத இந்தத் தாக்குதலால், உள்ளே நின்ற எல்லோருமே பிரமித்துப் போனார்கள். எஸ்தர் மட்டும், சீதாலட்சுமியின் இடுப்பை நோக்கி காலைத் தூக்கினாள்... காமாட்சி பிடிக்கவில்லையானால், கிழவி இந்நேரம் கீழே விழுந்திருப்பாள். ஆனாலும் கலைவாணி, பழைய மாமியார்க்காரி சொன்னதை காதில் வாங்காதது போல், நின்றாள்... அசைவற்று நின்றாள்.

திடீரென்று, மனோகரிடம் இருந்து இன்னுமொரு சத்தம்... மற்றொரு சமிக்ஞை... கண்கள் அம்மா மீதும், கலைவாணி மீதும் மாறி மாறி நிலை கொள்ள, தாறுமாறாய்ப் பேசினான்.

''அம்... அம்... நான் ..தான் தப்... தப்... கலை... இல்... இல்..''

மனோகர் சொன்ன சொல்லுக்கு படம் வரைவது போல, வலது கையைத் தூக்க முடியாமல் தூக்கி, மறுப்பு தெரிவிப்பது போல் ஆட்டினான். பிறகு அதே கையை, தனது மார்பில் தட்டி 'நான்... நான்... தப்... தப்...'' என்றான். கலைவாணியைப் பார்த்து, அந்த ஒற்றைக் கைவிரல்களைக் கும்பிடுவது போல் ஒன்று திரட்டி ''மன்... மன்...'' என்றான்.

கலைவாணி, அவன் மீது அப்படியே விழப் போனாள். கரங்களை, அவன் பக்கமாய் வீசினாள். அவள் கண்ணீர், மனோகருக்கு பால் வார்த்தது போல், அவன் வாயில் விழுந்தது. கீழே விழப் போனவளை, காமாட்சி தாங்கிக் கொண்டாள். வாடாப்பூ, கண்ணீரும் கம்பலையுமாய் பிடித்துக் கொண்டாள். எஸ்தர்தான், அவளை தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள்.

வெளியே, மனைவி உட்கார்ந்த கருங்கல்லில் இடம் மாறி இருந்து, உள்ளே கண்களை ஊசலாடவிட்ட தவசிமுத்து, கலைவாணியைக் கண்டதும் சாடை மாடையாகப் பேசினார்.

''நல்லாத்தான் ஜாலம் போடுறாளுவ... புருஷன் இறந்தால்... பொண்டாட்டி வாரிசுன்னு சட்டம் இருக்குல்லா... அதை வச்சி சொத்தை அமுக்க வந்திருக்காளுவ.. இது நானாய் உழச்சி சம்பாதிச்ச சொத்து; ஒருத்திக்கும் உரிமை இல்லை...''

எஸ்தர், ஏதோ கோபமாகப் பேசப் போனாள். கையைக் கூட ஓங்கிவிட்டாள். அதற்குள், ஆளுக்கு ஆள் தவசிமுத்துவை உலுக்கினார்கள், தூர நின்றே திட்டினார்கள்.

''உழைச்சி சம்பாரிச்ச சொத்து... தெரியாதாக்கும். ஒம்ம மகன் பேரைச் சொல்லி வாங்கின கமிஷன் சொத்து.. ஏழைப்பாளைகளுக்கு அநியாய வட்டியாய் கடன் கொடுத்து அமுக்கிப் போட்ட சொத்து''

எல்லோரும் திட்டி முடிக்கட்டும் என்பது போல், காத்திருந்த மோகன்ராம் துள்ளி வந்தார்;

''இனிமேல்... என் தங்கச்சியைப் பற்றி எதாவது பேச்சு வந்தால், அப்புறம் நான் கொலைகாரனாயிடுவேன்.. புருஷன் சொத்து பொண்டாட்டிக்குத்தான் வரும். இதில என்ன சந்தேகம்...''

மூத்தமகள் சகுந்தலா, கணவனைக் கடிந்தாள்.

''எங்கப்பாவை... ரொம்பத்தான் திட்டுறீக... புருஷன்கிட்ட வாழாதவளுக்கு சொத்து எப்படிக் கிடைக்கும்...?''

'' எங்க அக்கா சொல்றது தான் சரி''

''எம்மா... நீங்களே சொத்தை அமுக்குங்க... மவராசியா தின்னுங்க. கலைவாணியம்மா கேட்கமாட்டவ...''

''ஒனக்கென்ன வந்துட்டு மூக்கையா...''

''எனக்கா... ஒங்களைப் பார்த்த பிறவும், எதுவும் வரலியேன்னுதான் வருத்தப்படுறேன்.. மீராம்மா... பொம்பளையாமா.. நீங்க... எந்த இடத்தில என்ன பேசறதுன்னு தெரியாண்டாம்...?''

கலைவாணி, காதுகளைப் பொத்திக் கொண்டாள். இந்த மாதிரி நடக்கலாம் என்று எதிர் பார்த்து, பங்காளி பலத்தோடு அப்போது பார்த்து ஓடிவந்த அப்பாசுப்பையாவைப் பார்த்ததும், அவரை, கண்களால் தடுத்தாள். இதற்குள், உள்ளே நின்ற சீதாலட்சுமி வெளியே வந்து, கவைாணியின் பக்கத்திலேயே நின்றாள்... அவளைப் பார்த்துப் பார்த்துக் கைகளைப் பிசைந்தாள். கலைவாணி நகரும் பக்கமெல்லாம் நகர்ந்தாள். அவள் முன்னால் போய் நிற்பதும், ஏறிட்டு ஏறிட்டுப் பார்ப்பதுமாய் நின்றாள். வாய் கெஞ்சுவது போல் அசைபோட்டது. தலை குனிந்தும், நிமிர்ந்தும் இயங்கியது. கால்கள் நிற்கும் போது, தரையில் கோடுகள் போட்டன. ஒரு கட்டத்தில்

கலைவாணி, அவளை நோக்கி நேருக்குநேராய் பார்க்க வேண்டியதாயிற்று. ''நான் பாவி... தராதரம் தெரியாத பாவி'' என்று சீதாலட்சுமி அவளை ஏறிட்டுப் பார்த்து புலம்பினாள். அதைப் புரிந்து கொண்டதுபோல், கலைவாணி, அவள் கையைப் பிடித்தாள். அவ்வளவுதான். சீதாலட்சுமி கலைவாணியை ஆரத்தழுவினாள். இடைவெளி இல்லாத தழுவல்... இனிமேல் விடப் போவதில்லை என்பது போன்று பிடிப்பு... சுடுகாடே கத்துவது போன்ற கதறல்.

டாக்டர் அசோகன் உள்ளே போட்ட சத்தம், சீதாலட்சுமி போட்ட சத்தத்தை அடக்கியது.

''நல்லா துடைம்மா.. கையுறையை டைட்டாப் போட்டுக்கோ சந்திரா... புண் இருக்கிற இடத்தை விட்டுட்டு, இல்லாத இடத்தில ஏன் பேண்டேஜ் போடுறே...? பாலா... ஸ்க்ரீனை எடுத்து வாசல் பக்கம் வை...''

அந்தக் குடிசையின் வாசலில், இரண்டு சட்டங்களாய் மடித்து வைக்கப்பட்ட திரைத்துணி, அகலப்படுத்தப்பட்டு, அங்கேயே வைக்கப்பட்டது. பச்சை சேலைக்காரியும், வார்ட் வாலிபனும், வெளியே வந்து ஆம்புலன்ஸ் வண்டிப் பக்கமாய் ஓடுவதும், அதற்குள் ஏறி, எது எதையோ எடுத்துக் கொண்டு உள்ளே பாய்வதுமாக இருந்தார்கள்.

எல்லோருக்குமே திருப்தி... இப்படி பாடாய் படுகிறவர்களைப் பார்த்ததும் கூட்டம் நெருங்கி வந்தது. சிலர், எதாவது ஒத்தாசை செய்யலாமா என்பது போல் உள்ளே பார்த்தார்கள். தவசிமுத்துதான், தாள முடியாமல் தவித்தார். கலைவாணி, இந்த ஆட்களை கூட்டிக்கிட்டு வந்து, மனோகரை எடுத்துட்டு போறதாய் இருந்தால், அதுல எதாவது சூட்சுமம் இல்லாமலா இருக்கும்...? சொத்துக்கு வில்லங்கம் வந்துடப்படாதே...

தவசிமுத்து எழுந்து, தலையில் துண்டை போட்டுக் கொண்டே அழுதார்...

''என் பிள்ளைய... யாரும் எடுத்துட்டுப் போவப்படாது. அவன் இங்கயே, என் கண் முன்னாலயே கிடக்கட்டும்...''

எஸ்தர் அதட்டினாள்...

''யோவ்.. பெரிசு..மனோவ ஒன் பிள்ளன்னு சொல்ல, உனக்கு என்னய்யா யோக்யதை இருக்குது...? உன் கிட்ட எவ்வளவு கெஞ்சி இருப்பேன். வீட்டுக்குள்ளே சேர்த்தியா...? இப்போ இந்த குடிசையிலே... மனோவ வச்சதுக்கு, வாடகை தருவேன்.. வாங்கிக்கோ... குடிசையாவது,

உன்னிதுதானே...?''

''இந்தப் பய மவள்... என்னென்னமோ பேசுறாள். யாருமே தட்டிக்கேட்க மாட்டக்கியளே...''

''தட்டுறதாய் இருந்தால், ஒம்மத்தான் தட்டணும்...''

இதற்குள், குடிசைத்திரை விலக்கப்பட்டது. மனோகர் என்கிற பேண்டேஜ் உருவம், துணிக்கட்டிலில் தூக்கிவரப்பட்டது. அவன் கண்கள் மட்டுமே வெளியில் தெரிந்தது. அந்தக் கட்டிலை ஆம்புலன்சில் வைத்தபோது, கலைவாணி, ஏங்கினாள்; சீதாலட்சுமி அலை மோதினாள். கீழே விழுந்தாள். மேலே எழுந்தாள்... சகுந்தலா, மீரா ஆகியோர் இரு பக்கமும் பிடித்துக் கொண்டாலும், அவள் குனிந்து குனிந்து எழுந்து காவடி போல் சுழன்றாள்.

''என் செல்வமே... மேல் லோகத்தில போய் இருடா...! அங்கிருந்து எங்கேயும் போயிடதடா... இந்த அம்மா... சீக்கிரமா வந்துடுறேன்டா... அய்யோ... என் எஞ்ஜினியரு மவனே... நான் செத்து, நீ இருக்கப்படாதா...?''

இதற்குள், ஆம்புலன்ஸ் வண்டி புறப்படப் போனது. அசோகனும், சந்திராவும் முன்னிருக்கையில் உட்கார்ந்தார்கள். வாடாப்பூ, அந்த வேனை வழி மறிப்பது போல் நின்று கொண்டு, கெஞ்சினாள்.

''என் வீட்டு மொட்டயனுக்கும் இந்த நோய்தான்... அந்த கரி முடிவானையும் தூக்கிட்டுப் போங்கய்யா... வீட்லதான் கிடக்கான்...''

''சரி... பின்னால ஏறிக்கோ''

ஊரார் திகைத்தார்கள்... லாரிக்கார மாரியப்பனுக்கும் இந்த நோயா...? அடக்கடவுளே... ஊர்ல எவனுக்கு இருக்கு, எவளுக்கு இல்லன்னு சொல்ல முடியாது போலுக்கே...''

ஆம்புலன்ஸ் வேன், ஊரைப்பார்த்து ஓடியது. மயக்கம் போட்டு விழுந்த சீதாலட்சுமியை, நான்குபேர் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். கூட்டம், மாரியப்பன் வீட்டைப் பார்த்து ஓடியது. சுப்பையா மட்டும், கலைவாணிக்காக காத்து நின்றார்.

மாருதி ஜீப்பில் சாய்ந்தபடி நின்ற கலைவாணி, காமாட்சி சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்தாள். அந்த மேட்டிற்குக் கீழே உள்ள ஒரு பள்ளத்தில் நின்ற எஸ்தர், கலைவாணியைக் கையாட்டிக் கூப்பிட்டாள். உடனே இவளும்

அங்கே ஓடிப் போய்க் கேட்டாள்.

''என்னது எஸ்தர்...?''

''நீ... என்பேரை... நினைவிலே வைத்திருக்கிறதுக்கு சந்தோஷம். இந்தா பிடி...பெட்டிய திறந்துபாரு...''

எஸ்தர், ஜோல்னாப் பையில் உள்ள ஒரு மரப்பேழையை எடுத்து, கலைவாணியிடம் கொடுத்தாள். அதைத் திறந்த கலைவாணி, அதிசயித்தாள். அத்தனையும் தங்க நகைகள்... பெற்றோர் போட்ட நகைகள். வைர நெக்லஸ்.. தலைசுத்தி ஆரம்... இரட்டை வடச் செயின்.. ஒரு நகை கூட குறையவில்லை.

புரியாமல் பார்த்தவளுக்கு, எஸ்தர் புரிய வைத்தாள்.

''மனோ... காசுக்கு வழியில்லாம எவ்வளவோ கஷ்டப்பட்டான். இந்த நகையை எப்படியும் வாங்கிடணுமுன்னு, போலீஸ்காரங்க... முட்டிக்கு முட்டி தட்டினாங்க. அந்தப் பாவிகளாலதான், இவன் பாதி செத்துட்டான். ஆனாலும், லாக்கர் இருந்த பேங்கை சொல்லல... அவனுக்கும் எனக்கும் எவ்வளவோ கஷ்டம். கம்பெனிப் பணம் தீர்ந்ததும், சொல்லத் தகாத மனிதர்கள் கிட்டே விரும்பத்தகாத உறவுகளை வச்சி சம்பாதிச்சான். நானும் அப்படித்தான். ஒரு கட்டத்தில், நானும் அவனும், பிச்சை கூட எடுத்தோம். படுக்கையிலே விழுந்தபோது, இதில ஒரு நகையை விற்று.. டாக்டர்கிட்ட காட்டலாமுன்னேன். என்னை அடிக்கவே வந்துட்டான். கலைவாணியைத் தொட்டு, என் நோயை அவளுக்கு கொடுத்திட்டேன். அவள் நகையையாவது தொடாமல் இருக்கேன்'னு, சிரிச்சான்... பிறகு அழுதான்...''

எஸ்தர், வாய்வழியாய் மூச்சுவிட்டாள். கலைவாணி, அவளை கண்களால் தட்டிக் கொடுத்த உற்சாகத்தில், மீண்டும் பேசினாள்.

''நானும் காலேஜ் படித்தவள்தான். ஆனாலும் பட்டம் வாங்கும் முன்னே, பீடா வாங்குனேன்... பீடா, மாத்திரையாச்சு.. அப்புறம் அதுவே ஊசியாச்சு. சரி விடு... நான், நல்லவளாய் இல்லாட்டாலும், கெட்டவளாய் இல்லன்னு நினைக்கேன். மனோ... இந்த நகைப்பெட்டியை ஒன்கிட்ட ஒப்படைக்கச் சொன்னான். ஒன் ஆபீஸ்லேயே இந்தப் பெட்டியை, நான் கொடுத்திருந்தால், அது, ஒன்னோட இந்த வருகையை கொச்சைப்படுத்தி இருக்கும். அதனாலதான் இப்போ தாறேன்

''இறுதியா... ஒன்று.. கடைசிக் காலத்தில இந்த மனோவால எனக்கு எதுவும் ஆக வேண்டியது இல்ல. இவன் மட்டுமே, எனக்கு சீப்பும் இல்ல...

ஆனாலும், நான் அவனை விட்டு விலகல... அவனோட, இங்க வந்த பிறகு கூட, நான்.. நினைத்திருந்தால், இந்த நகைப் பெட்டியோட மெட்ராஸ்க்கு ஓடியிருக்கலாம். மதுரையைப் பார்த்து போயிருக்கலாம். இது, எனக்கு ஒரு வருட ஊசி மருந்து. மூன்று வருட பிராந்தி... ஆனாலும், நான் ஓடல. அதுதான் ஏன்னு எனக்கே புரியல...''

''ஏன்னா... நீ மனுஷி... மனுஷிம்மா...''

இருவரும், ஒருத்தரை ஒருத்தர் அன்பொழுகப் பார்த்தார்கள். ஊனுருகத் துடித்தார்கள்... எஸ்தர் தொடர்ந்தாள்.

''ஆரம்பத்தில... நான் ஒன்னைத் திட்டுனேன்... புருஷன இப்படி விட்டுட்டுப் போயிட்டியேன்னு பொருமினேன்... ஆனால், எப்போ ஒருத்தன், ஒருத்தியை ஏமாற்றி தாலி கட்டுறானோ, அப்பவே அந்த தாலிக்கு மரியாதை இல்ல. இது ஒரு ஐரனி... அதுதான் முரண்பாடான விசித்திரம். மனோகிட்ட இருந்த பணத்தை கரக்குறதுக்குத்தான், நானும், அன்புமணி என்கிற போக்கிரியும் திட்டம் போட்டு பழகுனோம். கடைசியிலே ஏமாற்றப் போன நான், இவன்கிட்ட ஒன்றிட்டேன். ஒன்னை... ஏமாற்றி தாலிகட்டின மனோ, ஒன்கிட்டயே ஒன்றிட்டான். வாழ்க்கை நேர் கோடுலயே போகாதோ... எப்படியோ வாழ்க்கை நம்மை சுமக்கிறதுக்குப் பதிலாய்... அதை நாம சுமக்க வேண்டியதாய் போயிற்று... முடியுமானால், இருநூறு ரூபாய் கொடு.''

''எதுக்கு?''

''மெட்ராஸ் போகத்தான். கள்ள டிக்கட்டுல போய் கண்டுபிடித்தால், ஒன்று என்னை முட்டிக்கு முட்டி வாங்குவான். இல்லாவிட்டால், பிடிக்கிறவனுக்கு எய்ட்ஸ் வரும். நான் சொல்றது புரியுதா...?''

எஸ்தர், கண்ணைச் சிமிட்டினாள். முகமெங்கும் பருத்துப் போன பருக்கள். கண்களுக்கு, கீழே கருமேகத் திட்டுக்கள். காதோரம் செம்படைகள்... உடைக்குமேல் இப்படியென்றால் உடைக்குள்ளே எப்படியோ...?

கலைவாணி, அவளைப் பார்த்து படபடப்பாய் கேட்டாள்.

''எஸ்தர்... நானும் மனுஷியா...?''

''என்ன பேச்சு பேசிட்டே...? நீ மனுஷி இல்ல. மகா மனுஷி. செந்தமிழில் சொல்லப் போனால், சிறியன சிந்தியாதாள்.''

'' ஆனாலும், நான் நிசமாவே மனுஷி என்கிறதை நீதான் நிரூபிச்சுக் காட்டணும்''

''எப்படி...?''

''நீ என் கூடவே இருக்கணும். இனிமேல் ஒனக்கு அந்தத் தொழில் வேண்டாம்...''

''கலை... கலை... நான் மோசமானவள்...''

''இல்ல... நீ மோசமாக்கப்பட்டவள். மோசடிக்குள் சிக்கியவள்...''

''சக்களத்தியா... கூப்புடுறியா...?''

''அடிப்போடி.. நமக்கு வாழ்க்கைத்தான் சக்களத்தி. வம்புக்கு இழுக்கிற எய்ட்ஸ் கிருமிகள் தான் சின்னச் சக்களத்தி''

''வாணாண்டி... என்னோட ஒன்னை சேர்க்காதே...''

''அப்போ ஒன்னோட என்னை சேர்த்துக்கோ''

மேட்டில் நின்ற கலைவாணி, பள்ளத்தில் நின்ற எஸ்தரை நோக்கி வலது கரத்தை சரித்து நீட்டுகிறாள்... எஸ்தர், அதைப் பற்றிக் கொள்ளுகிறாள். கையைப் பற்றியவள், கை கொடுத்தவளை, கீழே இழுத்தடிக்காமலே, மேட்டுக்கு வருகிறாள்...

❑ ❑ ❑

சு.சமுத்திரத்தின் படைப்புகள்

பல பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாக வைக்கப்பட்டவை;
முனைவர், எம்.பில். பட்டங்களுக்காக ஆய்வு செய்யப் ட்டவை;

நாவல்கள்

1. ஒரு கோட்டுக்கு வெளியே

பதினான்கு இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப் படுகிறது. பதினான்கு மொழிகளில் வானொலியில் ஒலி பரப்பானது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கம். 1997; மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.

2. சோற்றுப் பட்டாளம்

சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் முதன் முதலாய் முழு நீள நாடகமாய் ஒளிபரப்பானது. கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1977; மணிவாசகர் பதிப்பகம், 1992.

இந்தப் படைப்பையும் 'உயரத்தின் தாழ்வுகள்', 'காமன் அறிந்த ஈசனையும்' இணைத்து, கங்கை பதிப்பகம், 1997ல் புதிய வெளியிட்டுள்ளது.

3. இல்லந்தோறும் இதயங்கள்	*மணிவாசகர் பதிப்பகம், 1982. இரண்டாம் பதிப்பு, 1997வானதி*
4. நெருப்புத் தடயங்கள்	*மணிவாசகர் பதிப்பகம், 1983. இரண்டாம் பதிப்பு அச்சில் கங்கைப்பதிப்பகம்*
5. வெளிச்சத்தை நோக்கி	*மணிவாசகர் பதிப்பகம், 1989*
6. ஊருக்குள் ஒரு புரட்சி	*தமிழக அரசு முதல் பரிசுபெற்றது மணிவாசகர் பதிப்பகம், 1980 1992 (ஐந்து பதிப்புகள்)*
7. வளர்ப்பு மகள்	*மணிவாசகர் பதிப்பகம், 1980-1987 (ஐந்து பதிப்புகள்)*
8. நிழல் முகங்கள்	*தமிழ்ப் புத்தகாலயம், 1991.*
9. சாமியாடிகள்	*மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1991.*
10. தாழம்பூ	*மணிவாசகர் பதிப்பகம், 1992.*
11. மூட்டம்	*அன்னம் வெளியீடு, 1994; ஏகலைவன், 1996.*
12. அவளுக்காக	*வானதி பதிப்பகம், 1992*
13. வாடாமல்லி	*வானதி பதிப்பகம், 1994*

	இரண்டாவதுபதிப்பு - 1997, அமரர்ஆதித்தனார் பரிசு பெற்றது
14. சத்திய ஆவேசம்	மணிவாசகர் பதிப்பகம், 1987
15. பாலைப்புறா	ஏகலைவன் பதிப்பகம்

குறுநாவல்கள்

1. புதிய திரிபுரங்கள் *(+கேள்வித் தீ)*	மணிவாசகர் பதிப்பகம், 1982 இரண்டாம் பதிப்பு 1997 வானதி பதிப்பகம்.
2. வேரில் பழுத்த பலா *(+ஒரு நாள் போதுமா)*	சாகித்ய அகாதமி விருது பெற்றது. மணிவாசகர் பதிப்பகம், 1989, 1994
3. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டால் *(+பிற்பகல்)*	வானதி பதிப்பகம், 1992

சிறுகதைத் தொகுப்புகள்

1. குற்றம் பார்க்கில்	தமிழகஅரசு முதல் பரிசு பெற்றது கல்வி வெளியீடு, 1977; மணிவாசகர் பதிப்பகம், 1992
2. காகித உறவு	மணிவாசகர் பதிப்பகம், 1979 -82.
3. ஒரு சத்தியத்தின் அழுகை	மணிவாசகர் பதிப்பகம், 1979-85
4. உறவுக்கு அப்பால்	மணிவாசகர் பதிப்பகம், 1979.
5. மானுடத்தின் நாணயங்கள்	நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,1989
6. பிணம் தின்னும் சாத்திரங்கள்	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1987.
7. சமுத்திரம் கதைகள்	மணிவாசகர் பதிப்பகம், 1983.
8. ஏவாத கணைகள்	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1990-1993.
9. மண் சுமை	தமிழக அரசின் முதற் பரிசு மணிவாசகர் பதிப்பகம், 1991
10 யானைப் பூச்சிகள்	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994
11. காலில் விழுந்த கவிதைகள்	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1994
12. மனம் கொத்தி மனிதர்கள்	வானதி பதிப்பகம், 1992
13. இன்னொரு உரிமை	வானதி பதிப்பகம், 1992
14. பூ நாகம்	வானதி பதிப்பகம், 1992
15. ஒரு மாமரமும் மரங்கொத்திப் பறவைகளும்	ஏகலைவன் பதிப்பகம், 1996.
16. பொய்யாய் - புதுக்கனவாய்	கங்கை பதிப்பகம் - 1993.

நாடகம்

1. லியோ டால்ஸ்டாய்	மணிவாசகர் பதிப்பகம், 1987.

கட்டுரைத் தொகுப்பு

1. எனது கதைகளின் கதைகள்	ஏகலைவன் பதிப்பகம், 1996.

சு.சமுத்திரத்தின் பாலைப்புறா எய்ட்ஸ் நோய் பற்றிய உண்மைகளை எடுத்துக்கூறும் முதல் நாவல். வாழ்வின் பல்வகை சிக்கல்களையும், சிக்கித் தவிக்கிற மனிதரின் இயல்புகளையும், இந்த நாவல் உளவியல் நோக்கில் சுவைபட சித்தரிக்கிறது.

சமூகத்தின் மேல் தட்டு மனிதர்களின் சிறுமைப்போக்குகளையும், அடிமட்டத்து அப்பாவி மக்களின் மனித நேயத்தையும் நாவலாசிரியர் வாசகரின் மனதை ஈர்க்கக்கூடிய விதத்தில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, எஸ்தர் குணச்சித்திரம் மறக்க முடியாது. மனித வாழ்க்கையின் அவலங்களை மட்டுமல்லாது, மாண்புள்ள உயர் தன்மைகளையும் படம் பிடித்துக் காட்டும் நல்ல நாவல் பாலைப்புறா.

- வல்லிக்கண்ணன்